T.D.R.C. 601
R.R.No. 252-1-1905

உமறுத்தில் இல்லாத

Q7
N04
120132

பிஸ்மில்லாஹி.

# உம்தத்துல் இஸ்லாம்.

இஃது

மட்டக்களப்பு காத்தான் குடியிருப்பு

பெரியபள்ளிவாசல்

கதீபு அலியார்லெப்பை அவர்களின்

குமாரர்

கதீபு

## முஹம்மதுக் காசீம்லெப்பை

ஆலீம் அவர்களியற்றியது.

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

Registered Copy Right

ஹிஜ்றத்து ௧௩௨௨ ஹு றபியுல்லவ்வல்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
17 JUN 19..
MADRAS
252
2|9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
JUN 1906
MADRAS

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் அனைவருக்கும் தெரிவிப்பது யாதெனில், 1897-ம்வருஷத்து 25-வது ஆக்ட்டின் 20-வது பிரிவிலுள்ள, 6-வது பாராவின்படி, இங்கிலீஷ் இலாக்காவாகிய மதராஸில் இந்த உம்தத்துல் இஸ்லாம் என்னும் புத்தகம் காப்பிரயிட் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கின்றதுமன்றி, பிரெஞ்சு இலாக்காவாகிய புதவையிலும் காரைக்காலிலுங்கூட ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருப்பதால், இந்நூலை இந்தப்படியேயாவது வேறுபாஷையில் மொழிபெயர்த்தாவது இந்நூலாசிரியரின் அநுமதிபெறுமல் ஒருவரும் அச்சிடலாகாது. அவ்வாறச்சிடின், மேற்கூறிய ஆக்ட்டில் சொல்லியிருக்கின்றபடி அதனலுண்டாகும் நஷ்டத்தை அச்சிட்டவர்களிடத்திருந்து கோர்ட்டார் மூலமாய் வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

அ. லெ. முகம்மது காசிம்லெப்பை ஆலிம்

-2-

## சூசிகை.

| பக்கம். | பாபு. | பஸ். | முதலாம் அதிகாரம். |
|---|---|---|---|
| க | க | க | தீனைப்பற்றியது. |
| உ | உ | க | ஈமான் இன்னதென்பதையும், அதின் ருக்குன்களையும் ஷுறுத்துக்களையும், ஹகீகத்துக்களையும், அசல்களையும் பற்றியது. |
| அ | | உ | ஈமானுக்கு முன்னேரால் நியமித்த உவமைகள். |
| கூ | | ங | ஈமானின் ஆபத்துக்களையும் அஃதுமீதாக்கையும் பற்றியது. |
| கக | ங | க | இஸ்லாம் இன்னதென்பதையும், அதின் எடுப்புக்க ளித்தலையென்பதையும், ஷகாதத்துக் கலிமாவின் விவரங்களையும் பற்றியது. |
| கங | | உ | கலிமாவுடைய மஅனுக்கள். |
| கச | | ங | இலாகு முதலகின் விவரத்தையும் கலிமாவின் ஷுறுத்துக்களையும் பற்றியது. |
| கசு | | ச | கலிமாவின் ருகுன்கள். |
| " | | ரு | கலிமாவுடைய ருகுன்களின் விவரங்களையும் அசல்களையும் பிதுஅத்துக்காரரின் கொள்கைகளிற் சிலதையும் பற்றியது. |
| உரு | | சு | அல்லாகுத்த ஆலாவின் ஸிபத்துக்களின் விவரம். |
| உஎ | | எ | றசூல்மார்களின் ஸிபத்துக்களின் விவரம். |
| உகூ | ச | க | தௌஹீதின்னதென்பதையும் அதின் மறுதபாக்களையும் பற்றியது. |
| ங0 | | உ | தௌஹீதின் ஒவ்வோர் மறுதபாவின்படியும் கலிமாவின் மஅனு இன்னதென்பது. |
| ஙஉ | ரு | க | மஃரிபா இன்னதென்பதையும் அதைச்சார்ந்தவைகளையும் பற்றியது. |
| ஙங | | உ | றசூலுடைய மறுதபாக்களின் விவரங்கள். |
| ஙச | | ங | அதின் வேறுநாமங்கள். |
| ஙசு | | ச | பைலுமுகத்தைப் பற்றியது. |
| ஙஎ | | ரு | துர்றத்துல் பைலாவைப்பற்றியது. |
| ஙஅ | | சு | நபுசுகளின் தன்மை. |
| ஙகூ | | எ | மகாம்களும் திக்றுகளும். |

விலை - 200.

| பக்கம். | பாபு. | பஸ். | இரண்டாம் அதிகாரம். |
| --- | --- | --- | --- |
| | | | கிதாபுஸ்ஸலாத்தி. |
| ௪௧ | | ௧ | தொழுகை இன்னதென்பதும், அதின் பொதுவிவரமும். |
| ௪௨ | | ௨ | ஒவ்வோர் பறுலுத்தொழுகையின் றகஅத்துக்களும், அதின் ஒழுகமத்தும். [யும் சில சபயையும் பற்றியது. |
| ௪௪ | | ௩ | பறுலாகிய தொழுகையை முதன்முதல் தொழுதவரை |
| ௪௫ | | ௪ | தொழுகை வாஜிபானவர்களின்னாரென்பது. |
| ௪௬ | | ௫ | கலாத்தொழுகையின் விவரம். [பற்றியது. |
| ௪௭ | | ௬ | தொழுகையைக்கொண்டேவுதலையும், கற்பித்தலையும், |
| ௪௯ | | ௭ | தொழுகையின் ஷறுத்துக்கள். |
| ௫௦ | | ௮ | தொழுகையின் ஷறுத்துக்களும் சில ஹுகுமுகளும். |
| ௫௧ | ௨ | ௧ | தகாறத் தின்னதென்பதும் ஜலத்தின் வகைகளும். |
| ௫௨ | | ௨ | மாஉ [illegible]ின் வகை. |
| ௫௩ | | ௩ | பேதமாகிய ஜலத்தின் விவரம். |
| ௫௫ | | ௪ | குல்லத்தைனின் விவரம். |
| ௫௬ | ௩ | ௧ | வுழுவைப்பற்றிய பொதுவிவரம். |
| ௫௭ | | ௨ | வுழுவுடைய சிற்றுகள். |
| ௫௯ | | ௩ | வுழுவுடைய ஷறுத்துக்கள். |
| ௬௦ | | ௪ | வுழுவுடைய பறுலுக்கள். |
| ௬௧ | | ௫ | வுழுவுடைய சுன்னத்துக்கள். |
| ௬௪ | | ௬ | தயம்முமுடைய ஷறுத்துக்கள். |
| ௬௫ | | ௭ | தயம்முமுடைய பறுலுக்கள். |
| ௬௭ | | ௮ | தயம்முமுடைய சுன்னத்துக்கள். |
| ௬௮ | | ௯ | தயம்மமை முறிப்பவைகளும் சில ஹுகுமுகளும். |
| ௭௦ | | ௧௦ | வுழுவை முறிப்பவைகள். |
| ௭௨ | | ௧௧ | வுழுவில்லாதவர்கள் செய்ய ஹறாமானவைகள். |
| [illegible] | | ௧ | முழுக்கை விதியாக்கிவிப்பவைகள். |
| ௭௬ | | ௨ | [illegible]ஹலைப் பற்றியது. |
| ௭௭ | | ௩ | முழுக்குடைய ஷறுத்துக்களும், பறுலுக்களும். |
| ௭௯ | | ௪ | முழுக்குடைய சுன்னத்துக்களும், முழுக்கினால் மகுறூ [காருபவைகளும். |
| ௮௧ | ௫ | ௧ | நஜீசைப் பற்றியது. |
| ௮௨ | | ௨ | நஜீசைத் துப்புரவு செய்யும்விதம். [யும், பற்றியது. |
| ௮௪ | ௬ | | மலசல மோசனம் செய்தலையும், துப்பரவு செய்தலை |
| ௮௬ | ௭ | | அவுறத்தை மறைப்பதைப் பற்றியது. |
| ௮௮ | ௮ | | கிபுலாவை நோக்குதலைப் பற்றியது. |
| ௯௦ | ௯ | | தொழுகையின் வகுத்துக்களைப் பற்றியது. |
| ௯௨ | ௧௦ | | வாங்கையும், இகாமத்தையும், பற்றியது. |
| ௯௪ | ௧௧ | ௧ | தொழுகையின் பறுலுக்க ளித்தனையென்பதையும் முதலாம் பறுலையும், பற்றியது. |
| ௯௮ | | ௨ | இரண்டாம்பறுலின் விவரம். |
| ௧௦[illegible] | | ௩ | மூன்றாம்பறுலின் விவரம். |
| ௧௦௪ | | ௪ | நான்காம்பறுலின் விவரம். |
| ௧௦௬ | | ௫ | ஐந்தாம், ஆறாம், எழாம், எட்டாம், பறுலுக்களின்விவரம் |





| பக்கம். | பாபு. | பஸ். | இரண்டாம் அதிகாரம். |
| --- | --- | --- | --- |
| ௧௦௭ | | ௬ | ஒன்பதாம், பத்தாம், பதினோராம், பன்னிரண்டாம், பறுலுக்களின் விவரம். [க்களின்விவரம். |
| ௧௦௮ | | ௭ | 13-ம், 14-ம், 15-ம், 16-ம், 17-ம், 18-ம், 19-ம், பறுலு |
| ௧௦௯ | | ௮ | அபுஆலு சுன்னத்துக்களைப் பற்றியது. |
| ௧௧௩ | | ௯ | ஹைஅது சுன்னத்துக்களைப் பற்றியது. |
| ௧௨௨ | ௧௨ | | சஜிதா சஹ்வைப்பற்றியது. |
| ௧௨௫ | ௧௩ | | சஜிதாத்திலாவத்தைப் பற்றியது. |
| ௧௨௭ | ௧௪ | | தொழுகையை பாத்திலாக்குங் கருமங்கள். |
| ௧௩௧ | ௧௫ | | தொழுகையின் மகுறூகுகளைப் பற்றியது. |
| [illegible] | ௧௬ | ௧ | சுன்னத்துத் தொழுகையின் பொதுவிவரம். [கள். |
| ௧௩௫ | | ௨ | ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்படாத நபில் தொழுகை |
| ௧௪௦ | | ௩ | ஜமாஅத்தைசுன்னத்தாக்கப்பட்ட நபில்தொழுகைகள். |
| ௧௪௮ | ௧௭ | ௧ | ஜமாஅத்துத் தொழுகையின் விவரம். |
| ௧௫௨ | | ௨ | தொடர்பின் ஷறுத்துக்கள். |
| ௧௫௭ | | ௩ | இமாமுக்குத் தக்கவர்களையும், ஜமாஅத்துக்கும், ஜும்ஆவுக்கும், போகவொட்டாத உதுறுகளையும்பற்றியது |
| ௧௫௯ | ௧௮ | ௧ | ஜும்ஆத் தொழுகையின் விவரங்களும். [illegible] துக்களும். [விவரம். |
| ௧௬௨ | | ௨ | குதுபாவின் ஷறுத்து பறுலு சுன்னத்தாதியவைகளின் |
| ௧௬௫ | ௧௯ | | உடையைப் பற்றியது. |
| ௧௬௮ | ௨௦ | | பிரையாணியின் தொழுகையின் விவரம். |
| ௧௭௧ | ௨௧ | ௧ | மய்யித்தைக் குளிப்பாட்டிக் கபன்செய்வதின் விவரம். |
| [illegible] | | ௨ | மய்யித்துத் தொழுகையின் பறுலு, ஷறுத்து, சுன்னத்தாதியவைகளின் விவரம். |
| ௧௭௮ | | ௩ | மய்யித்தை அடக்கம்பண்ணும் விதமும் தகுசிய்யத்தும். |
| | | | கிதாபுஸ்ஸகாத்தி. |
| ௧௮௪ | ௧ | ௧ | பொன், வெள்ளி, தானியம், மிருகம், [illegible] சகாத்து விதியாகும் விவரம். |
| ௧௮௭ | | ௨ | சகாத்தின் ஷறுத்துக்களும் அதைப்பெற்றுக்கொள்ளத் தக்கவர்களின் விவரமும். |
| ௧௮௯ | ௨ | | பிதுறாவையும், சதகாவையும் பற்றியது. |
| | | | கிதாபுஸ்ஸியாமி. |
| ௧௯௨ | ௩ | ௧ | நோன்பின் பொதுவிவரம். |
| ௧௯௪ | | ௨ | நோன்பின் பறுலு ஷறுத்து சுன்னத்துக்களும், லைலத்துல் கதுறும் இருதிகாபும் சுன்னத்துநோன்புகளும். |
| | | | கிதாபுல்ஹஜ்ஜிவல்உம்றதி. |
| ௨௦௨ | ௧ | | ஹஜ்ஜையும், உம்றாவையும், பற்றியது. |
| ௨௦௮ | ௨ | | உஹூறிய்யாவும் அகீகாவும். |
| [illegible] | ௩ | | [illegible] |
| ௨௧௫ | ௪ | | போசனம் [illegible] |
| ௨௨௧ | ௫ | | நேர்கடன். |


வின-700

| பக்கம். | பாபு. | பஸ். | மூன்றாம் அதிகாரம். |
|---|---|---|---|
| உஉங | க | | வர்த்தகத்தின் பொதுவிவரமும், வட்டியும், லியாருக |
| உஙO | உ | | முதல் கடன். [ரூம், மரம், வீடு, முதலிய விற்பனவும். |
| உஙக | ங | | கடனும், ஈடும். |
| உஙரு | [illegible] | | ஹஜ்ஜும், தபுலீசும். |
| உஙஎ | ரு | | காட்டுதல். |
| உஙகூ | சு | | பிணை. |
| உசO | எ | | கூட்டுத்தொழில். |
| உசச | அ | | வகாலத்தும் இருலும். |
| உசங | கூ | | அமானத்து. |
| உசரு | கO | | இரவல். |
| உசஎ | கக | | பிறர்பொருள் கவர்தல். |
| உசஅ | கஉ | | கூலி. |
| உருO | கங | | பொறுக்கல். (லுகத்து) |
| உருஉ | கச | | வகுபு. |
| உருச | கரு | | நன்கொடை. |
| உருகூ | கசு | | விண்ணப்பமும், இணக்கமும். |
| உருஅ | கஎ | | வசியத்து. |
| | | | கிதாபுல்பறயிலீ. |
| உகூO | கஅ | | அனந்தரப்பொருளும், பாகம்பெறுவோர் வகையும். |
| உகூஉ | ககூ | | அசபத்து. |
| உகூரு | உO | | ஹஜ்பும் சிலநூதன மசலாகளும். வினு-200 |
| | | | நான்காம் அதிகாரம். |
| உகூஅ | க | க | [illegible] |
| உஎக | | உ | நிகாஹின் வகை. |
| உஎங | | ங | நிகாஹில் உண்டாகுபவைகள். |
| உஎஅ | உ | | நிகாஹுடைய ருகுன்களும் வலிகாரரும், ஷாஹிதின் ஷறுத்துக்களும், நிகாஹுசெய்ய ஹறுமாகிய ஸ்திரிகளும், பால்குடித்தலும். நிகாஹின் சுன்னத்துகளும். |
| உஅங | ங | | குபுஉவும், ஜிமாஉ செய்யும் வகையும், மகரும், முதுஆ |
| உஅஅ | ச | | விருந்து. [வெனும் இறுமும் |
| உகூகூ | ரு | | தலாக்கின் வகை, தஃலீல், றஜஇ, ஈலாஎனும் சத்தியம், |
| | க | | ளிகாறு இத்தாவின் வகை இஸ்திபுறு, நபகா, ஹிஸ் |
| | உ | | து, பஸ்கு, லிஆன், என்பவைகள். வினு-70. |
| | | | ஐந்தாம் அதிகாரம். |
| ஙகரு | க | | உத்தரவாதம், ரித்தத்து, ஹத்தை வருத்துபவைகள், தருசெறுகிதான் ஆகியவைகள். |
| ஙஉரு | உ | | காளியின் விவரம், சாஹிதுகளின் ஷறுத்துக்கள், சாட்சிசொல்லும்விதம். சத்தியம், உரிமை என்பவைகள், |
| ஙஙரு | | | இந்நூலின் புறனடையாகிய தேளபா. |
| | | | இந்நூலின் ஐந்து அதிகாரங்களிலு மமைந்த(சுஆல்) வினுக்கள். கககூO-புறனடையிலமைந்தவினுக்கள்-சO. ஆக வினுக்கள்-கஉOO. |

பிஸ்மில்லாஹி.

# பாயிரம்.

நாகூர் - தர்கா மகாவித்துவானும்

மதுரைத்தமிழ்ச் சங்கப்புலவரு ளொருவருமாகிய

ஸ்ரீலஸ்ரீ-வா-குலாம்காதிறு நாவலர்

இயற்றியது.

## கோச்சகக் கலிப்பா.

இரும்புவியுமகன்விசும்பு மிருதிணையுமெல்லாமும்
அரும்புகழிற்படைக்குமுனை மாநிலாயேதுவுமாய்
ஒருங்கமையும்வித்தாங்கன் றுயர்நா[illegible]த்தினிதுறைந்த
பெருங்கருணை நிறைநபிகள் பெருமானுர்தமக்குரித்தாய். (க)

சொல்வழியுஞ்செயல்வழியு நாகிடத்ததூபாளிக்கும்
பல்வழியுமிழிவினவாய்ப் பயனளிக்குமொருவழியா
நல்வழியென்றுயரிஸ்லா முடையவராகமாறிந்து
செல்வழியவெனுமுறைமைத் திறனெலாமெருங்காய்ந்து. (உ)

முற்காலத்துறவிருந்த பெருந்தகையர்மூழ்த்தோர்ந்து
பிற்காலத்திருப்பார்க்கென் றுக்கியபற்பெருநூல்கள்
சொற்காணுமொழுக்கினவே பொருக்குபுமாத்துகடர
நற்காலப்பயனுங்கொர் கோவையாக்கியநாமு: (ங)

கலங்குபுனர்கொருதேற்றும் வித்தகனைக்கரைத்தாங்கு
மலங்குமனத்தெளிவெய்தி மாசற்றுவிளக்கமுற
இலங்குபுகழும்தத்துல் லிஸ்லாமென்றிடுபெயரிற்
றுலங்குமொருநூலியற்றி யுலகுநிதஞ்சொலக்கொடுத்தான். (ச)

உழவறியாப்பயனுன்கும் பிறபயனுமொருகாலும்
இழவறியாப்பெரும்வளஞ்சா லிலங்கையெனுமிசைத்தீவின்
விழவறியாத்தகைமட்டக் களப்பதனைமிகச்சார்ந்து
குழவறியாதுளகாத்தான் குடியிருப்பென்றுயரூரில். (ரு)

வென்றிபெறுவியனுலக விழைவுமறந்தொருபெரியோன்
நன்றிமறவாக்கல்வி நனிசெல்வம்பிறவாய்த்துத்
தூன்றியசீர்கத்தீபா யவ்வூர்வாழ்சோதரர்கட்
கின்றியமையா அலியாரிலப்பையருளியமகவாய். (சு)

உயரறபினிலக்கிய முமிலக்கணமுமொருங்கோதித்
துயரொழியவருமறையுஞ் சொன்னாயகர்மொழியும்
மயர்வறக்கற்றவைக்கேற்ப வழிபட்டுத்தந்தைதொழில்
அயர்வகலும்பெருஞ்சுமையி னகன்றோட்களூறச்சுமந்தா. (எ)

கண்டவுருங்கேட்குசுருங் கருணையொடுமிக்குவப்பக்
கொண்டவருங்குணமுழுதுங் கொண்டவருமாலிமாய்
அண்டவருமவர்த்தாங்கி யாதரிக்குமருட்கடலை
யுண்டவருமழைமுகிலி னுலகுபுகழியவிருப்போன். (அ)

தற்பாடையோர்வன்றித் தண்டமிழாமிந்நாட்டுச்
சொற்பாடையினுந்தேர்ந்து புலவர்குழாஞ்சொலவந்தோன்
பொற்பாடையெனக்கடலை யுடுத்தியவிப் பூமகட்குக்
கற்பாடைதனையுமுடீஇக் காணியவென்றூறவைத்தோன். (கூ)

ஆன்றகுலனெறிபிறவு மமைந்தவையவாமியல்கள்
சான்றவொருதன்மையுளா னலங்காரந்தனைக்கடிந்து
மூன்றதெனும்பொறியென்னு மொன்றுமிமுறைகாப்ப
என்றமுகம்மதுகாஸிம் லப்பையெனுமியலினனே. (௰)

முற்றிற்று.

---

மதுரஸத்துல் யூசுபிய்யாவெனும்

மதுரஸாவின் முதற்றிசாகிய ஹலுறத்து

## கினம்-ஸ்ரீமத்-மு. முஹம்மதுதமீம்

ஆலிம்சாகிபவர்க ளெழுதிய

## உறுதிவாக்கியம்.

இந்த உம்தத்துல் இஸ்லாமெனும் கிதாபாகிறது அகீதா, இபாதாத்து பைஉகிகாஹு, தஉவா, பையினுத்து, முதலியவைகளைப் பொதிந்தது, இதோ முஸ்லீம்களெல்லோம் கைக்கொண்டு நடக்கவேண்டிய பிரமாணங்களைக் கூறுகின்ற பிகுகு கிதாபுகளிலும் அகீதாக்கி தாபுகளிலு மிருந்தெடுக்கப்பட்டதென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

முஸ்லீம்களாகிய ஒவ்வொருவருக்கும் இக்கிதாபு முக்கிய தேவையானதென்பது மறைந்தகாரியமல்ல இதனாலுண்டாகும் பிரயோஜனம் இனைத்தென்று விரித்துக் கூறுதலைப் பார்க்கிலும் வாசித்தோ உணர்ந்துகொள்ளுதலுசிதமாம். அல்லாகுத்தஆலா இக்கிதாபைக் கோவைசெய்த முஅல்லிபுக்கு இருலோகத்திலும் கைறை ஐசாயாக்குவானாக ஆமீன்.

மதராஸ்.
3—6—04.

இப்படிக்கு,

மு. முக்ம்மது தமீம்.

# சாற்றுகவி.

இஃது,

கோட்டாறு, ம-ா-ா-ஸ்ரீ,

மகாவித்துவான்.

கா. ப. ஷெய்குத்தம்பிப் பாவலரவர்களாற்

செய்யப்பட்டது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பதியும் பொற்பதியுஞ் சிகையதியு மப்பதியுஞ் செவ்வி தாயிப்
பார்பதியும் பலன்பதியும் பலபதியும் பணித்தளித்துப் பகையி லாத
ஏர்பதியு மியல்பதியு மிசைபதியு மிறையொளியி லிருந்தென் னெஞ்சத்
தூர்பதியு முயிர்பதியு முடற்பதியு முகம்மதென வுற்ற வள்ளல். (௧)

பூவிருக்க வைத்தமறைப் பொருளிருக்க வருளிருக்கப் பொருவி லாதென்
நாவிருக்க வந்தமுத நாவலர்க ளலனிருக்க நயந்து தந்த
நூலிருக்கும் பலகிரந்தத் துறையிருக்கப் பொறையிருக்கச் சுக்க மாரு
மாவிருக்க மதியிருக்கக் கதியிருக்கத் துதியிருக்க மகிழ்வி னுய்ந்து. (௨)

கற்றவரு மற்றவருங் கன்மியருந் தன்மியருங் கணிப்பி லாச்சீர்
பெற்றவரு நற்றவரும் பெருநலனு மருநலனும் பெற்றய் வானோர்
சொற்றவரு மிலகீதா இபாதாத்து வர்த்தகங்கள் சுமண நீதி
யுற்றவரும் பதவிகொளும் தத்துவல் இஸ்லாமெனுமோ ருயர்பேர் நாட்டி. (௩)

இப்புவியி லெமக்களித்தா னன்னவனு ரென்னில்வள னெல்லாம் பெற்றிங்
கெப்புவியும் போற்றவரு மிலங்கைநகர் தனிலுயர்ந்த வியல்கொண் டோங்கி
ஒப்புவம மற்றமட்ட களப்பூரி லுறைந்தறையு முருவி னுஞ்
செப்பரிய திருவாலுஞ் சிறந்தவலி யார்லெப்பை செம்ம லென்போர். (௪)

செய்தவப் பேறனைத்து மொருங்குதிரண் டோருருவாய்ச் செகத்தின் மீதே
எய்தலென வந்துதமி ழிலக்கணமு மிலக்கியமு மிசையக் கற்றுப்
பொய்தவறு கோபமவம் பொருமைமுதற் குணமெனியாம் புன்மை சார்ந்த
கைதவங்க ளொன்றுமிலா முகம்மதுகா சிமென்னுங் கலைவல் லோனே. (௫)

பிஸ்மில்லாஹி.

# முகவுரை.

நாகூர்-தர்காமகா வித்துவானும்

மதுரைத்தமிழ் சங்கப்புலவருளொருவருமாகிய

## ஸ்ரீலஸ்ரீ-வா-குலாம்காதிறுநாவலர் எழுதியது.

"உம்தத்துல் இஸ்லாம்" என்பது இஸ்லாத்தின்தேவை என்னும் அர்த்தத்தையுடையது. இஸ்லாமான ஒருவனுக்கு இன்றியமையாத்தேவையான விஷயங்கள் பல இதனுள் அடங்கியிருப்பதால்; இதற்கு இப்பெயர் வைக்கப்பட்டது. இக்கிரந்தம் ஐந்து அதிகாரங்களையும், அநேகபாபுகளையும் உடையது. முதலாம் அதிகாரத்தில் தீன் இன்னதென்பதும், அதன் றுக்குன்களாகிய ஈமான் இஸ்லாம் தௌஹீது மஃரிபாவாகியவைகளும், சுன்னத்து ஜமாஅத்தின் கொள்கைகளாகிய நாற்பது அஸ்லுகளும், பிதுஅத்துக்காரரின் சில கொள்கைகளும் அடங்கியிருக்கின்றன. இரண்டாம் அதிகாரத்தில் தொழுகை, ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, உளுஹிய்யா, வேட்டையாடுதல், அறுப்புவகை, புசிப்பதற்கு ஆகுமானவையும் ஆகாதவையுமான பிராணிகள், நேர்கடன் என்னும் இவைகளின் விவரங்கள் அடங்கியிருக்கின்றன. மூன்றும் அதிகாரத்தில் வர்த்தகஞ் செய்யத்தக்கவர், தகாதவர், அதன் ஷர்த்து, மூன்றுவகையான றிபாறு, வட்டி, முதற்கடன், வேறுகடன், ஈடு, சாட்டுகை, பிணை, கூட்டுவர்த்தகம், வக்காலத்து, இரவல், பிறர்பொருள் கவர்தல், கூலிகொடுத்தல், வாங்குதல், பொறுக்கல், நன்கொடை, விண்ணப்பம், இணக்கம், பாகப்பிரிவு, பாகம்பெறுவோர்வகை என்னும் இவைகள் அடங்கியிருக்கின்றன. நான்காம் அதிகாரத்தில்விவாகத்தின் பொதுவிவரங்கள், அதன்வகை, அதனாலுண்டாகும் பலாபலன், அதன் றுக்குன்கள், அதன் சுன்னத்துகள், விவாகஞ்செய்யக்கூடாத பெண்கள், குபுஉ, புணர்ச்சிவகை, மஹர், விருந்து, ஊண்குடிவகை, குல்உ, தலாக்கு, தஃலீல், றஜஇ, ஈலா, ளிஹாறு, இத்தா, இஸ்திபுறு, நபகா, கிஸ்வத்து, பிள்ளைவளர்ப்பு, மிருகவளர்ப்பு, பஸ்ஹு, லிஆன் என்னும் இவைகள் அடங்கியிருக்கின்றன. ஐந்தாம் அதிகாரத்தில் கிஸாசு என்னும் உத்தரவாதம்; தியத்து, ஹத்தை விதிக்குங்கருமம், வியபிசாரம், மதுபானம், அவதூறுபேசுதல், களவு, தண்டனை, கிதான், கலாவத்து, ஷஹாதத்து, சத்தியம், உரிமை என்னும் இவைகள் அடங்கியிருக்கின்றன.



இவையன்றி, தௌபா, இக்கிரந்தத்தின் புறனடையாக ஈற்றில் விளக்கப்பட்டிருக்கிறது. புஜைறமி, குர்தி, பத்ஹுல்முஈன், இஆனத்துத்தாலிபீன், மஹல்லி, யஹ்யா உலூமுத்தீன், மிக்ஹால் அக்பர், ஸனூசி என்னும் திவ்விய கிரந்தங்களைக்கொண்டே இக்கிரந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

யார்யார் இம்மை மறுமைகளுக்குத் தீங்கு வருவிக்கும் விலக்குகளை ஒழித்து! நன்மை பயக்கும்விதிகளை நம்மனதிற் பதியவைத்து, நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரறிவும் பெருங்குணமும் விளங்கித் தோன்றுகின்றனரோ, அவர்களெல்லாம் ஆலிம்என்றே நாம் அறிதல்வேண்டும். நாம் அறியாதனவாய் விதிவிலக்குகளை நமக்கு அறிவித்து நம்மைச் செவ்வையானவழியில் நடத்தாட்டுதற்கு, நம் வாழ்நாள் என்கின்ற அகன்றயாற்றில் அவலநினைவுகளான கலங்கல் நீர் பெருக்கெடுத்து ஓடிச்செல்லும்போது, இலௌகீக வைதீகம் என்னும் உயர்ந்த மலைச்சிகரங்களில் நின்று அரித்துக்கொணர்ந்த அரும்பெரும் விஷயங்களான இரத்தினக்கற்கள் இடைக்கிடையாழ்ந்து அவ்யாற்றின் அடிநிலத்திற் பரந்து சொலித்துக்கிடப்ப, ஆலிம் என்னும் அரிப்புக்காரன் வருந்தி, முயன்று, அவற்றையெல்லாம் ஒருசேரப் பொறுக்கியெடுத்துத் தன் மதிநுட்ப வாராய்ச்சியால் தரம்பிரித்து முடிப்புக்கட்டித் தருவதுபோல, நமக்கு இன்றியமையாக் கிரந்தங்கள் பலவற்றைச்செய்து பேருதவிபுரிந்த முற்காலத்து ஆலிம்களின் பேருதவியையும், பேரறிவையும் பெற்று விளங்குவோரை வழிபட்டு ஒழுகிநடப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். இக்காலத்து ஆலிம்களும் இவ்வியல்பை நன்கறிந்தே மேற்சொன்னவண்ணம் பலநல்ல கிரந்தங்களைச்செய்து நமக்குப் பேருதவி செய்வாராயினர்.

இத்தகை ஆலிம்களுள் இந்த "உம்தத்துல் இஸ்லாம்" என்னும் கிரந்தத்தைச்செய்த ஆலிமும் ஒருவர். இவர், இலங்கைமட்டக்களப்பைச்சார்ந்த காத்தான்குடியிருப்பு என்னும் வளநகரில், கல்வியினும் செல்வத்தினுஞ் சிறந்து, அறிவொழுக்கங்களில் மேன்பாடடைந்து, அருள் அடக்கமாதி நற்குணம்பெற்று, அந்நகர்ப் பெரியபள்ளி கத்தீபாய் விளங்கிய அலியார் லெப்பையவர்கள் புத்திரராய்ப் பிறந்த கத்திபு முகம்மது காஸிம்லெப்பை ஆலிம் என்பவரே.

இக்கிரந்தத்திற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் பண்டைக்காலத்து அறபுகிரந்தங்களில் அமைந்திருத்தலால், அறபுபாஷை கல்லாதார்க்கு அவை பலன்படாவாகலானும், அவைகளெல்லாம் இஸ்லாமாயினோன் ஒவ்வொருவனும் அறிதற்பாலவாகலானும், அங்ஙனம் அறிதற்கு அனைவருமே அறபுபாஷைகற்றல் அசாத்தியமாகலானும், யாவருங்கற்றிருக்கும் சுதேசபாஷையாகிய தமிழில் அவற்றை மொழிபெயர்த்து, வெகு பிரயாசையோடு தெளிவும் இன்பமுமான வசனநடையில் இக்கிரந்தமொன்றைச் செய்து தம்

## முகவுரை.

சாதியாரான நமக்குப் பேருதவியாகக் கொடுத்த இதன் ஆக்கியோர்க்கு, முஸ்லிம்களாகிய நாங்கள் என்றைக்கும் நன்றியறிதலுள்ளவர்களா யிருத்தற் குக் கடமைப்பட் டிருக்கின்றோம்.

இஸ்லாம் மார்க்கத்து விதிவிலக்குகள் அமைந்த தமிழ்க்கிரந்தங்கள் சில வழங்குவனவாயினும், அவை இந்த "உம்தத்துல் இஸ்லாம்" என்னும் கிரந்தம் போன்றனவல்ல என்பதை இதன் அபிதானமே நன்குணர்த்துதலால், முஸ்லிமான சாதாரண சனங்களுக்கு இது பெரிதும் பிரயோசனந் தருமென்று நான் வலியுறுத்திச் சொல்லுவதுடன், இதனால் இனி ஒவ்வொரு இஸ்லாமானவனும் மார்க்கவிஷயங்களை நன்கறிந்து கொள்வானென்று சந்தோஷமும் அடைகின்றேன்.

"மதரஸா" என்னும் முஸ்லிம் பாடசாலைகளில் இக்கிரந்தத்தைப் பாடப்புத்தகமாக்கிக் கற்பித்துவரின், அப்பாடசாலை மாணாக்கராகும் சிறுவர்க்கு மார்க்கக்கல்வியே பாலபாடமாய் முடிந்து, சிறுபருவத்திலேயே அவர்கள் மார்க்கத்தில் தேர்ந்தவர்களாவர். அங்ஙனம் பாடப்புத்தகமாக வைத்தற்கு வினாவும் விடையுமாயமைந்த இக்கிரந்தம் தக்கதாமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு சிறுபருவத்தே மார்க்கக்கல்வி கல்லாமையாலன்றோ வயது முதிர்ந்தபின் ஒருவர்பாற்சென்று கற்றற்கும் கேட்டற்கும் வெட்கமுற்று, நரைத்தும் பழுத்தும் மார்க்கவிதி யறியாதாரும் பலருளர். ஆதலால், இதனை அவ்வாறு செய்தல் நலமாமென்றும் நினைக்கின்றேன்.

இக்கிரந்தத்தைச் செய்த ஆக்கியோர் அறபு பாஷையை ஐயந்திரிபறக்கற்றுச் சிறந்த ஆலிமாயிருப்பது மன்றி, தமிழ்ப் பாஷையிலும் தேர்ச்சியுடையோரா யிருத்தலை இக்கிரந்தந்தானே நன்கு விளக்குகின்றது. இக்கிரந்தத்தின் அருமை பெருமைகளையும், இதன் ஆக்கியோரின் கல்வி கேள்வி வழிபாடு நல்லொழுக்கம் அருள் அடக்கம் நற்குணம் நற்செயலாதி உத்தம வியல்களையுங் குறித்து விரித்தெழுதப்புகின் மிகவிரிவாமென்று கருதி இம்முகவுரையைச் சுருக்கி, இவ்வாக்கியோர்க்கு நீண்ட ஆயுளும், சிறம்பிய கல்வியும், தனசந்தான விருத்தியும், சுகதேகியா யிருத்தலும், ஈமான் நிலைப்பாடும் உண்டாகுக என்னும் வாழ்த்துதலோடு முடிக்கின்றேன்.

நாகூர். வா. குலாம்காதிறு நாவலன்.

1-6-04.



பிஸ்மில்லாஹி.

# முதலாம் அதிகாரம்.

## அல்பாபுல் அவ்வலு முகத்திமத்துன் பீபயானித்தீன்.

(1.) தீன் என்பதின் அருத்தம் யாது?

மார்க்கம் அல்லது மதம் என்பதாம்.

(2.) தீன் எத்தனை வகைப்படும்?

1. மெய்ம்மார்க்கம் பொய்ம்மார்க்கம் என இருவகைப்படும்.
2. தீனுல் இஸ்லாமெனும். இஸ்லாம் மார்க்கம் ஒன்றுமே. மெய்ம்மார்க்கமாம்.
3. இஸ்லாம் மார்க்கமல்லாதமற்ற எல்லா மார்க்கங்களும் குபிரெனும், பொய்ம்மார்க்கமாம்.
4. ஆலத்தில் பாரியார் எவ்வெக்கொள்கைகளைக் கொண்டனரோ அவ்வக் கொள்கைக ளெல்லாவற்றையும் அதனதன் சிறப்புப்பெயரோடு சேர்த்து தீன்எனும் பதத்தா லழைக்கலாம்.

(3.) தீன் எத்தனை பொருட்களைப் பொதிந்தது?

வழிப்பாடு. வணக்கம், கூலிஎனும். முப்பொருட்களைப் பொதிந்ததாம்.

(4.) முப்பொருள் கொண்ட தீனில் யாதை விளங்கவேண்டும்?

சர்வ வல்லமையுள்ள கர்த்தாவாகிய அல்லாகுத் தஆலாவின் கற்பனைக்கு வழிபடுதலை வழக்கமாக்கிக்கொண்டவர்கள் இம்மையில் சஞ்சலமில்லாத வாழ்வையும் மறுமையில் சுவர்க்கத்தின் மேலான பதவிகளையும் கூலியாகப் பெற்றுக் கொள்ளுவார்களென விளங்கவேண்டும்.

(5.) தீனுடைய றுகுன்களெத்தனை?

ஈமான். இஸ்லாம். தௌஹீது மஃரிபத்து என நான்காம்.

(6.) தீனுடைய றுகுன்களாகிய நான்கும் ஒருவனுக்குக் கைகூடுமா?

ஆம். ஈமான் கொள்ளவேண்டிய பிரமாணப்படி நிர்ணயங்கொண்டு, இஸ்லாத்தின் ஒழுங்கின்படி நடந்து, அல்லாகுத் தஆலா ஒருவனென்று தௌஹீது செய்து, மஃரிபாவின நியமனப்படி அவனையறிந்து நிலைநிற்பவனே முதகையினென் றழைக்கப்படுவான்.

(7.) முததையின் என்பதின்பொருள் யாது?

மார்க்கத்தைக் கைக்கொண்டவனென்பதாம்.

(8.) றுகுன் என்பதின் கருத்தென்ன?

றுகுன் எனும் அறபுச்சொல். தமிழ்பாஷையில் தூண்எனும் அருத்தங் கொண்டதாம்.

(9.) தீனுடைய நான்கு றுகுன்களில் ஒன்றையாவது விடலாமா?

1. ஈமான் இஸ்லாம் தௌஹீது மஃரிபத்து எனும் நான்கில் ஒன்றையாவது விட்டாலும் அல்லாகுத்த ஆலா இடத்தில் கபூல் செய்யப்பட்டவனாகான்.

2. ஈமான், இஸ்லாம் தௌஹீது எனும் மூன்றையும் எடுத்து நடந்து மஃரிபாவை விட்டாலும் மஃரிபாவை எடுத்து முந்திய மூன்றையும் விட்டாலும் ஹாரிஸ்தாகாது அவனே முததையினென் றழைக்கப்படத் தக்கவனல்லன்.

(10.) தீனை இஸ்லாமென்றும் இஸ்லாத்தை தீன் என்றும்சொல்லலாமா?

ஆம் தீனை இஸ்லாமென்றும், இஸ்லாத்தை தீன் என்றும் சொல்லலாம்.

## அல்பாபுல்தானி பீபயானில் ஈமான்.

## (இரண்டாம் பாபு ஈமானைப்பற்றியது.)

## அல்பஸலுல் அவ்வலு பீபாபில் ஈமான்.

## க-ம் பிரிவு.

(11.) ஈமானாவதியாது?

நபிகள் நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் கொண்டுவந்தவைகளை யெல்லாம் கலபினால் நிச்சயித்து நாவினால் விண்ணப்பம் செய்து உறுப்புகளினால் அமல்செய்வதே யீமானாம்.

(12.) ஈமான் எத்தனைவகைப்படும்?

1. தற்குணமான ஈமான், காவற்பாடடைந்த ஈமான், கபூலாக்கப்பட்ட ஈமான், நிலையற்ற ஈமான், தட்டப்பட்ட ஈமான் என ஐந்துவகைப்படும்.
2. தற்குணமான ஈமானாவது மலக்குகளுடைய ஈமான் ஈமானேயவர்களுக்குத் தற்குணமாயிற்று.
3. காவற்பாடடைந்த ஈமானாவது அன்பியாக்களுடைய ஈமான் அவர்களின் ஈமான் ஒருக்காலும் உரியப்படமாட்டாது.



4. கபூலாக்கப்பட்ட ஈமானாவது முஸ்லீம்களின் சாலிகாகிய கலப்பறுதலுடையவர்களின் ஈமான்.
5. நிலையற்ற ஈமானாவது வழிகெட்ட அஞ்ஞானிகளுடைய ஈமான்.
6. தட்டப்பட்ட ஈமானாவது முனாபிகீன்களுடைய ஈமானும்.

(13.) முஸ்லீமானவர்களின் ஈமானிற் பிரிவுகளுமுண்டோ?

ஆம் முஸ்லீமானவர்களுடைய ஈமான் ஈமானுத்தகுலீதிய்யி. ஈமானுல் இகுதியாரிய்யி என இருபிரிவுகளையுடையது.

(14.) தகுலீதிய்யியாகிய ஈமான் யாது?

அல்லாகுத்த ஆலாவின் நாயகத்தன்மையை யாதேனு மத்தாட்சிகளைக்கொண்டாராய்ந்தறியாமல் பெற்றோர் முதலியவர்களின் சொல்லையாவது ஒப்புக்கொண்டு நிர்ணயப்படுத்துவதாம்.

(15.) இகுதிய்யாரிய்யி ஆகிய ஈமான் யாது?

1. அல்லாகுத்த ஆலாவின் நாயகத் தன்மையைப்பற்றித்தானே யோசித்து அத்தாட்சிகளைக்கொண்டு ஆராய்ந்தறிந்து நிர்ணயப்படுத்துவதேயாம்.
2. இகுதிய்யாரிய்யி ஆகிய ஈமானே நம்யாவர்பேரிலும் பறுலு ஐன் ஆக்கப்பட்டது.

(16.) ஈமானுடைய றுகுன்களெத்தனை?

1. ஆமந்துபில்லாகி, வமலாயிகதிகி, வகுதுபிகி, வறுசுலிகி, வல்யவுமில் ஆகிரி. வலகதுரிகைரிகி வஷற்றிகிமினல்லாகித்த ஆலா எனும் ஆறுமே ஈமானுடைய றுகுன்களாம்.
2. அதின் அருத்தமாவது அல்லாகுத்த ஆலாவும் அவனுடைய மலக்குகளும் வேதங்களும் றசூல்மார்களும் கடைசிநாளும் கற்பனையும் அக்கற்பனையில் *கைருனதும் ஷற்றுனதும் அல்லாகுத்த ஆலாவில் நின்றுமேயுள்ளதெனவும் ஈமான்கொண்டேன் என்பதாம்.
3. ஈமானுடைய முதலாம் றுகுனாகிய (ஆமந்துபில்லாகி) அல்லாகுத்த ஆலாவைக்கொண் டீமான்கொள்வதைப்பற்றிய சில பொதுவிபரங்களாவன.

அல்லாகுத்த ஆலா ஒருவன் அவனுடைய தாத்து, சிபாத்து, அஸ்மா, அபு, ஆல்களி லிணை துணையற்றவன், உள்ளமையும் பூர்வமும் அழியாமையும் ஒப்பின்மையும் தன்னிற்றானே யிருத்தலும் ஒருமையும் ஆகின்றி ஷயாத்தும் புத்தியின்றி அறிவும் இதயமின்றி நாட்டம் அவயவமின்றித் தத்துவமும் செவியின்றிக் கேள்வியும் கண்ணின்றிப் பார்

* கைறு நலவு ஷற்று தீங்கு.

வையும் நாவின்றிப் பேச்சமுள்ளவன். இல்லாமை அபூர்வம் அழிவு உவமை யாதேனு மொன்றிலிருத்தல் பன்மைமரணம் மூடம் நாடாமை எலாமை செவிடு குருடு ஊமை முதலியவைக ளற்றவன். மாதா பிதா, மனைவி, மக்கள், ஊண்குடிப்பு, உறக்கம், மறதி, சந்தோஷம், துக்கம், நசல், சுகம், வருணம், குணம், நீளம், அகலம், ஆண், பெண், அலி எனும் மட்டுத்திட்டத்தி லடங்காதவன். காலம், திசை, கோணம், ஐயறிவு, சந்தேகம், ஊசாட்ட மாதியவைகளி லேதாவதவனை எத்திக்கொள்ளாதவன் அவனின் செயலுக்குக் காலம், கருவி, தாமதம், தடை, மிடை, பிரயாசை, சடை, வாதியவைகளற்றவன் அவன் ஆக்காமல் ஆவீதும் வளர்க்காமல் வளர்வதும் அழிக்காமல் அழிவதுமேயில்லை அவனே வணங்கப்படுவதற் குரிமையானவனென்று உண்மையாய் நானறிந் தீமான்கொண்டே னென்பதாம்.

4. ஈமானுடைய இரண்டாம் றுகுனுகிய (வமலாயிகதிஹி) அல்லாகுத்த ஆலாவின் மலக்குகளைப்பற்றிய சில பொது விபரங்களாவன.

அமரர்களாகிய மலக்குள் ஒளியினுற் படைக்கப்பட்டு இனத்திலுயர்ந்து குணத்திற் சிறந்து ஊண், உறக்கம். ஆண், பெண், மாதா பிதா, மனைவி, மக்களாதியவைகளற்று. குபிர், பொய், அவிசுவாசம், துரகம், பெரும்பாவம், சிறப்பாவம் முதலிய எவ்வகைக் குற்றங்களையும் விட்டு நீங்கி மாருத பூரண அறிவைப்பெற்று தஸ்பீகு, தஹமீது, தகிபீறு, தஃலீலாதியவைகளை ஊண், குடிப்பாக்கி, அல்லாகுத்த ஆலாவின் ஏவலுக் கொருக்காலும் மாறுபடாத மஃசூம்களெனும் நாமம்பெற்ற பரிசுத்தவானகள்.

அவர்களிற் சிலர், மேலுலகர்கள் சிலர், கீழுலகர்கள் சிலர், றகுமத்து இரணம் மரணம் கொண்டுவருபவர்கள் சிலர், இன்பம் சுகம் உதவி வெற்றி ஹலாக்கு முதலியவைகள் கொண்டுவருபவர்கள் சிலர், இரவிலும் பகலிலும் முறை முறையாய் வருபவர்கள் சிலர், அறுவைத்ச்சுமந்தும் சூழ்ந்தும் சிலர், பைத்துல மகுமூறில் புகுந்து வெளிக்கிடாமலும் சிலர், சுவர்க்கத்திலும் சிலர், நரகத்திலும் சிலர், அஃரூபிலும் சிலர், பூமியிலும் சிலர் மலையிலும் சிலர், கடலிலும் சிலர், கஃபாவிலும் சிலர், அறபாவிலும் சிலர், சபாவிலும் சிலர், மறுவாவிலும் சிலர், மக்காவிலும் சிலர், மதிறுவிலும் சிலர் இபாதத்துச் செய்யப்படும் ஸ்தலங்களிலும் சிலர், திக்று ஹதீது வஃலு ஓதலாகியவைகணடைபெறுமிடத்திலும் சிலர், மனிதர்களின் நன்மை தீமை எழுதுவதிலும் சாட்டப்பட்டனரெனவும் சிலர், சிலருக்குத் தலைமையானவர்களெனவும் அவர்களிலெல்லாம் வஹியைக்கொண்டு சாட்டப்பட்ட ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமும் ஜலத்தைக்கொண்டு சாட்டப்பட்ட மீக்காயீல் அலைகிஸ்ஸலாமும் றூஹைக் கைப்பற்றும்படி சாட்டப்பட்ட



ட இஸ்றாயீல் அலைகிஸ்ஸலாமும் காற்றைக்கொண்டு சாட்டப்பட்ட இஜ்றாபீல் அலைகிஸ்ஸலாமும் உயர்ந்த பதவியை உடையவர்களெனவும் இந்நால்வரில் ஜிபுரீல் பின்பு மீக்காயீல் பின்பு இஜ்றாயீல் பின்பு இஜ்றாபீல் வரிசையானவர்களெனவும் அவர்கள் இறக்கைகளையுடையவர்களெனவும் றகுமத்தையுடைய மலக்குகள் சித்திரரூபம் இருக்குந் தானம் நாய்நிற்கும் வீடாதியவைகள் ஜுனுபத்து முழுக்கைப் பிற்படுத்துபவர்களிருக்கும் ஸ்தானம் துர்க்கந்தம் வீசுமிடமாதியவைகளில் இறங்கார்களெனவும் உண்மையாக நானறிந் தீமான் கொண்டேன் என்பதாம்.

கபுறில் முதல் முதல் ஹாலிருப்பவர்களுக்குப் பத்தானுன்களென்றும் கேள்வி கேட்பவர்களுக்கு முன்கறுன் வனகீறு என்றும் மனுஷரின் நன்மை தீமைகளை எழுதுபவர்களுக்கு கிறுமுன் காதிபீன்களென்றும் சுவர்க்கத்து அதிகாரிக்கு ரிலுவான் என்றும் நரகத்து அதிகாரிக்கு மாலிகு என்றும் பெயர் சொல்லப்படும்.

ஈமானுடைய மூன்றும் றுகுனுகிய (வகுதுபிகி) அல்லாகுத்தஆலா இறக்கிய வேதங்களையும் சுகுபுகளையும் பற்றிய சில பொது விவரங்க ளாவன?

அல்லாகுத்தஆலாவின் திரு வசனமாகிய நான்குவேதங்களில் தவுறாத்துவேதம், அபறுனிய்யத்துப் பாஷையால் நபி மூசா அலைகிஸ்ஸலாமுக்கும் சபூர்வேதம் யூனனிய்யத்துப்பாஷையால் நபி தாவூது அலைகிஸ்ஸலாமுக்கும் இன்ஜீல்வேதம் சுரியானிய்யத்துப்பாஷையால் நபி ஈசா அலைகிஸ்ஸலாமுக்கும் சிறப்பாகிய புறுகான்வேதம் அறபுப்பாஷையால் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கும் இறக்கினுரெனவும் நூற்றுப்பத்து சுகுபுக்களில் 10 - சுகுபு அபுல்பஷறு ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கும் 50-சுகுபு சீது அலைகிஸ்ஸலாமுக்கும் 30-சுகுபு இதுரீசு அலைகிஸ்ஸலாமுக்கும் 10-சுகுபு இபுறுகீம் அலைகிஸ்ஸலாமுக்கும் 10-சுகுபு தவுறாத்து வேதத்துக்குமுன் மூசா அலைகிஸ்ஸலாமுக்கும் இறக்கினுரெனவும் அவைகளோ அட்சரமுந் தொனியுமின்றி வசனிக்கப்பட்டவை படைக்கப்பட்டவையல்ல புறுகான்வேதப் பிரமாணங்களையன்றி மற்றவேதங்களினும் சுகுபுகளினுமுள்ள பிரமாணங்கள் மாற்றப்பட்டவை புறுகானின் பிரமாணமோ கியாமம்வரைக்கும் மாற்றப்படாதவை எனவும் உண்மையாக நானறிந் தீமான்கொண்டேன் என்பதாம்.

ஈமானுடைய நான்காம் றுகுனுகிய (வறுசுலிகி) அல்லாகுத்த ஆலாவின் தூதர்களைப்பற்றிய சில பொதுவிபரங்களாவன?

அல்லாகுத்த ஆலாவின் திருத்தூதர்களாகிய றசூல்மார்களும் நபிமார்களும் மனிதர்கள் அவர்களோ நுபுவ்வத்துக்கு முன்னும் பெரும்பா

வம்சிறுப்பதுவமாகியஎக்குற்றத்தையும்விட்டுநீங்கிய பரிசுத்தவான்கள் 'ஆண்பிள்ளைகள் நாட்டான்மக்கள் மேனிகளில்' யாதேனுங் குறைவு படாதவர்கள் உண்மை விசுவாசம் நம்பிக்கையாதியவைகளோ பூரணமானவர்கள் அல்லாகுத்த ஆலாவின் கட்டளைகளைக் கொஞ்சமும் மறைக்காது எத்துவித்தும் புத்திவணக்கங்களிற் குறைவற்றும் எல்லாரும் இஸ்லாம் மார்க்கத்தையே கைக்கொண்டும் முஃஜிசாத்துப் பெற்றும் எப்போதும் மாறாததும் மாற்றப்படாததுமான நபிப்பட்டத்தையு முடையவர்கள். எல்லா நபிமார்களிலும் றசூல்மார்களிலும் உலுல் அசுமிகளிலும் காணவேதமிறங்கிய நால்வரும் அந்நால்வரில் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமும் வரிசையானவர்களெனவும் அவர்களுக்குப்பின் கியாமநாள்வரைக்கும் நபியே இல்லை எனவும் உண்மையாக நானறிந்து ஈமான்கொண்டேன் என்பதாம்.

7. ஈமானுடைய ஐந்தாமறுகுனாகிய (வல்யவ்மில்ஆகிரி) கடைசிநாளைப்பற்றிய சில பொதுவிபரங்களாவன?

ஆகிறுஎன்பது கடைசிநாள் அந்நாள் இனிமேலுண்டாகும் அது ஐம்பதினாயிரவருடப் பிரமாணமுள்ளவோர்நாள் அதோ சகலகல்குகளும் மடியும்படி இஸ்றாபீல் அலைகிஸ்ஸலாம் சூறு எனும் குழலையூதியபின் 40 - வருடம் பூமிசெப்புத்தரையாகியாதோர் சீவசெந்துகளுமின்றிப் பாழாகிவிட்டபின் அல்லாகுத்தஆலா இஸ்றாபீல் அலைகிஸ்ஸலாமை ஹயாத்தாக்கிஇரண்டாம்முறை சூறையூதும்படி ஏவ அவர் ஊதியபோது அல்லது. அறுஷுக்குத்தாழாலேநின்று மாஉல்ஹயாத்துஎனும் நுதபானவைநேர்ந்த வேர்மாரியை இறக்கியபோது கல்குகளெல்லாம் முளைத்தெழும்ப அவர்களை மகுஷரில்நிறுத்தி முஉமீனானவர்களுக்கு நன்மைப்பட்டோலையை வலதுகையிலும் தீமைசெய்தவர்களுக்குத் தீமைப்பட்டோலையை இடதுகையிலுங்கொடுத்து கேள்விகணக்குக்கேட்க நாடினவர்களைக் கேட்டு மீசானில் நன்மை தீமைகளை நிறுத்து நன்மைமுறுகினாலும் தீமைமுறுகினாலும் தக்கதக்க கூலி கொடுக்கப்படுமென்றும் சிறாத்துல் முஸ்தகீம் பாலமுண்டு அதில் கல்குகளை நடத்தாட்டப்படுமென்றும் சுவர்க்கம் நாகமுண்டு அவை என்று மழியாதவை நல்லோர் சுவர்க்கத்திலும் தீயோர் நாகத்திலும் புகுதுவார்கள் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் ஷபாஅத்துச்செய்வார்கள் நரகம்புகுந்த முஉமீன்கள் மீட்சிபெற்று சுவர்க்கம் புகுதுவார்கள் முஉமீன்களோ எக்காலமும் சுவர்க்கத்திற் றரிபடுவார்கள் காபிரீன்கள் நரகத்தில் அப்படியே தரிபடுவார்கள் நபிமார் உலமாக்கள் ஷகீது முதலியவர்களுக்கு மன்றாட்டங் கொடுக்கப்படும் ஈமானுள்ளவர்கள் காலாகாலமும் நரகத்திற் றரிபடார்கள் சுவர்க்கவாசிகளுக்கு, அல்லாகுத்தஆலா



வைத் தரிசிக்கும் வினாஉண்டெனவும் உண்மையாக நானறிந்து ஈமான்கொண்டேன் என்பதாம்.

ஈமானுடைய ஆறாமறுகுனாகிய (வல்கத்ரி கைரிகிவஷர்றிகி)அல்லாகுத்த ஆலாவின் கற்பனையைப்பற்றிய சில பொதுவிபரங்களாவன?

உலகத்தில் நடக்கின்ற நன்மை தீமை நயம் நஷ்டம் இன்பம் துன்பம் சந்தோஷம் சஞ்சலிப்பாகியவைகளெல்லாம் அல்லாகுத்தஆலாவின் கற்பனையாகிய கலாகதுறு. இல்லாமல் உண்டாகாதென்றும், அல்லாகுத்தஆலா நன்மையைக்கொண்டு பொருந்துவானேயன்றித் தீமையைக்கொண்டு பொருந்தானென்றும் உண்மையாக நானறிந்து ஈமான்கொண்டேன் என்பதாம்.

(17) ஈமானுடைய ஷறுத்துகளெவை?

அல்லாகுத்த ஆலாவையும் மலக்குகளையும் நபிமார்களையும் உகப்பதும் மார்க்கவிரோதிகளுக்குப் பகைஞனாயிருப்பதும் அல்லாகுத்த ஆலாவின் ஏவலுக்குவழிப்படுவதும் அவன் விலக்கியவைகளை விடுவதும் றகுமத்தளவில் ஆசைவைப்பதும் (அதாபு) வேதனைக்குப் பயப்படுவதுமாகிய எட்டுமே ஈமானுடைய ஷறுத்துக்களாம்.

(18.) ஈமானுக்கு ஹகீக்கத்துமுண்டோ?

1. நிர்ணயமும் விண்ணப்பமும் விடாமுயற்சியாகிய அமலும் அவ்வமலோ எப்போதும் நிய்யத்துடனிருப்பதும் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சுன்னத்துக்கு மாறுபடாமையும் ஆகிய ஐந்துமே ஈமானுடைய ஹகீகத்துக்களாம்.

2. ஹகீகத்தென்பது அகமியமெனப் பொருள்படும்.

(19.) ஈமானுடைய அசுல்களெவை?

1. அல்லாகுத்தலாவை உகப்பதும் அவனொருவனென நிர்ணயங்கொள்வதும் எக்கருமத்தையும் அவன்பேரிலேயே பாஞ்சாட்டுவதும் அவனைப்பயப்படுவதும் றகுமத்து அளவில் ஆசைவைத்து விதிவிலக்காகிய விரோதங்களைச் செய்யும்போது வெட்கிப்பதும் கற்பனைக்குப் பொருந்துவதும் அறிவைச் சகிநேகனாக்கிக் கொள்வதுமே ஈனுடை அசுல்களாம்.

2. அசில் அடிமுடெனும் அருத்தங்கொள்ளும்.

10.) யாதோர் கருமத்தின் பறுலுகளில் ஒன்றேனும் பலவேனுங் குறைவுறலாமா?

1. எக்கருமத்துக்காவது எத்தனை பறுலு நியமிக்கப்பட் டிருந்தாலும் அத்தனை பறுலிலும் ஒன்றேனுங் குறைந்தால் அக்கருமம் பாத்திலாகிவிடும்.
2. சறுத்து நியமிக்கப்பட்ட கருமத்தின் ஒரு ஷறுத்தாவதுகுறைந்தாலும் அப்படியேயாம்.
3. றுகுன் பறுலு எனுமிரண்டும் ஒரு பொருளுடையது.

---

## அல்பஸலுல்தானீ பீபாபில் ஈமான்.

## உ-ம் பிரிவு.

### (21.) ஈமானின் தலையாது?

லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி எனும் தையிபுக் கலிமாவே யீமானின் தலையாம்.

### (22.) ஈமானுக்கு கல்புண்டோ?

ஆம் குறுஆன் ஷரீபை ஓதுவதே யீமானுடையகல்பாம்.

### (23.) ஈமானின் உடல்யாது?

அல்லாகுத்த ஆலாவை திக்றுசெய்வதும் வணங்குவதுமே யீமானின் உடலாம்.

### (24.) ஈமான் றூகுள்ளதா?

இகுலாசெனுங் கற்ப்பறுதலே யீமானின்றூகாம்.

### (25.) ஈமானின் ஒளியியாது?

துப்பரவாயிருத்தலே ஈமானின் ஒளிவாம்.

### (26.) ஈமானுக்கு நண்பன்யார்?

(இலமு) அறிவே ஈமானுக்கு நண்பனும்.

### (27.) ஈமானுடைய சிம்மாசன மெது?

நோன்பே ஈமானின் சிம்மாசனமாம்.

### (28.) ஈமான் எதை நிருபிக்கும்?

அல்லாகுத்த ஆலாவுடைய றகுமத்தளவி லாசைவைப்பதையும் அதாபுக்குப் பயப்படுவதையு நிருபிக்கும்.



### (29.) ஈமானை வளர்ப்பதெது?

1. சகாத்துக் கொடுப்பது ஈமானை வளர்க்குமாம்.
2. சகாத்துக் கொடுக்கத்தக்க நிசாபை எற்று தொகையுள்ளவர்கள் இயன்றமட்டும் சதகாக்கொடுப்பதும் சதகாக்கொடுக்க எலாதவர்கள் வாயுதவி, கையுதவி, செய்வதும் ஈமானை வளர்க்குமாம்.

### (30.) ஈமானுடைய பணர்களெத்தனை?

ஈமானுக்கு சாலிகான அமல்களாகிய எழுபத்திரண்டு பணறுகளுண்டு.

---

## அல்பஸ்லுல்தாலிது பீபாபில்ஈமான்

## ந - ம் பிரிவு.

### (31.) ஈமானைக் கருக்கும் நெருப்பியாது?

பொய், பொறுமை, கோபம் ஆகியவைகளாம்.

### (32.) ஈமானின் பகைஞன்யார்?

உள்ளொன்று புறமொன்றுயிருக்கும் முனபிகுத்தனமாம்.

### (33.) ஈமானின் வேரையறுக்கும் வேர்ப்புழுவெது?

பெருமைத்தனமே ஈமானின் வேரையறுக்கும் வேர்ப்புழுவாம்.

### (34.) ஈமானை யடித்து விழுத்தும் சண்டமாருதமென்ன?

1. முறுதத்தாக்கிவிக்கும் கருமங்களே ஈமானை வேரோடுபிடுங்குஞ் சண்ட மாருதமாம்.
2. சண்டமாருதம், சூறு வழிக்காற்று.

### (35.) முறுதத்து என்பவன்யார்?

தீனுல் இஸ்லாமெனும் மெய்ம்மார்க்கத்தைவிட்டுக் குபிராகிய மார்க்கத்தில் மீண்டவனே முறுதத்தாம்.

### (36.) நீர் முஉமினுவென்று கேள்க்கப்பட்டால் எவ்விதவிடையருளவேண்டும்?

1. அன முஉமினுன் இன்ஷா அல்லா என்று விடை யருளவேண்டும்.
2. அதின் அருத்தமாவது அல்லாகுத்தஆலா நாடினல் நான் முஉமீன்தான் என்பதாம்.

(37.) இன்ஷா அல்லாவென்னும்போது எவ்வாறு நிய்யத்து வைத்தல் வேண்டும்?

அனமுஉமினுன் இன்ஷாஅல்லா என்பதில் வரும் இன்ஷா அல்லாவை பறக்கத்தைநாடிச் சொல்லுகிறேனென்று நிய்யத்து வைக்கவேண்டுமேயன்றி ஈமானின் சந்தேகத்தை நாடலாகாது.

(38.) முஉமீனாகிய வொருவன் எப்போது ஈமான் கொண்டான்?

1. அஃது மீதாக்குடைய நாளில் முஉமினாகியவர்களெல்லாம் ஈமான்கொண்டனர்.
2. அல்லா சுபுகானகு வத்தஆலா ஈமதாபிதாவாகிய நபிஆதம் அலைகிஸ்ஸலாமவர்களின் ஜடத்தை சுத்தமாய்ப் பக்குவப்படுத்திய களிமண்ணினால் ஒசை தரத்தக்கதாய் மனுஷரூபமாய்ப் படைத்துச் சிலகாலம் சென்றபின் றூஹைப்புகுத்தி ஹயாத்தாக்கி அவர்களுக்கு சஜூதுசெய்யும்படி மலக்குகளை வகை இபுலீசைத்தவிர எல்லா மலக்குகளும் சஜூதுசெய்தார்கள்.

அல்லாகுத்தஆலா நபிஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் முதல் கியாமத்துவரைக்கும் பூமியிற்பிறக்கும் மனிதர் எல்லாரையும் அவர்களின் முதுகிலிருந்தே வெளிப்படுத்தினான் அவர்களோ றூஹையும் ஹயாத்தையும் ஜடத்தையும் அகிலேயும் உடையவர்களாயும் பருவமெத்தினவர்களாயும் சிற்றெறும்புப் பிரமாணமாய் ஒரேநேரத்தில் வெளிப்பட்டுகின்றனர்.

அப்போது அல்லாகுத்தஆலா அவர்களைப்பார்த்து நான் உங்கள் றப்புஅல்லவா என்றுகேட்க ஆம் என்று எல்லாரும் பறுமொழி சொல்லியபின் அல்லாகுத்தஆலா அவர்களைப்பார்த்து நான்உங்களுடைய றப்பு என்னைத்தவிர வேறுநாயகனில்லை எனக்குஇணை வைக்காதீர்கள் இணைவைத்தவர்களையும் ஈமான்கொள்ளாதவர்களையும் வேதனைசெய்வேன் இனிமேலுங்களிடம் என் தூதர்களாகிய றசூல்மார்களையும் அனுப்பி வேதங்களையு மிறக்குவேன் என்று திருவுளமானான்.

அப்போது கல்புகளெல்வாரு மொருமித்து நீயே நாயகன் உன்னைத்தவிர வேறுநாயகனில்லை என்று நாங்களறிந்து விண்ணப்பம் செய்கின்றோமென்று சொல்லி ஒப்புக்கொண்டனர்.

அவ்வார்த்தைப்பாட்டிற்கு கல்புகளி லொருவருக் கொருவரைச் சாட்சியாக்கி அவர்களின் சீவியகாலங்களையும் இரணங்களையும் இன்பதுன்பங்கள் முதலிய யாவையும் தீர்மானித்து மறுபடியும் அவர்களெல்லாரையும் ஆதம் அலைகிஸ்ஸலாமின் முதுகில் வந்தவழியே புகுத்தினான்.

இக்கருமம் நடந்தநாளை அஃதுமீதாக்குடைய நாளென்றும் இவ்வார்த்தைப்பாட்டை அஃதுமீதாக்கு என்றும் சொல்லப்படும்.



(39.) முஉமீன்கள் யாருடைய மார்க்கத்திலிருக்கின்றார்கள்?

1. முஉமீன்கள் நபிஇபுறாகீம் அலைகிஸ்ஸலாமுடைய மார்க்கத்தில் நபிகள் சிகாமணி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்தாயிருக்கின்றார்கள்.
2. நீ எந்த மதுஹபிலிருக்கின்றாயென்று கேள்க்கப்பட்டவர்கள் அவரவரின் கொள்கையாகிய மதுஹபின் சிறப்புப்பெயரைக் கூறவேண்டும்.
3. ஹனபி மாலிகி ஷாபிஇ ஹம்பலி எனும் நான்குமே ஹக்காகிய மதுஹபுகளாம்.
4. இந்நான்கையும் தவிர வேறுசில மதுஹபுகளும் உண்டு அந்த மதுஹபுகளைத்தொடர்தல் ஜாயிசன்று.

(40.) ஈமானில் கூடுதலும் குறைதலுமுண்டோ?

ஈமானில் கூடுதலும் குறைதலுமில்லை அதிகமாய் அமல்செய்த முஉமீன் (காமில்) நிரப்பமானவனென்றும் அமலால் குறைந்த முஉமீன் (நாகிசு) குறைந்தவனென்றுமாவான்.

---

## அல்பாபுல்தாலிது பீபயானில் இஸ்லாம்.

(மூன்றும் பாபு இஸ்லாத்தைப்பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலுபீபாபில் இஸ்லாம்.

## ௧-ம் பிரிவு

(41.) தீனுடைய இரண்டாம் றுகுன்யாது?

இஸ்லாமே தீனுடைய இரண்டாம் றுகுனும்.

(42.) இஸ்லாமாவதியாது?

சொல் செயல் பொருள் எனும் மூன்றாலும் வழிபடுவதே இஸ்லாமாம்.

(43.) இஸ்லாம் மார்க்கம் எத்தனை கருமங்களின்பேரில் எடுக்கப்பட்டது.

அல்லாகுத்தஆலா ஒருவனெனவும் நபிகணாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகுத்தஆலாவின் தூதரெனவும் நிச்சயப்படுத்துகின்ற இரண்டு ஷஹாதத்துக் கலிமாச்சொல்வதும் தொழுவதும் சகாத்துக்கொடுப்பதும், நோன்பு பிடிப்பதும் ஹஜ்ஜிச்செய்வதுமாகிய ஐந்து கருமங்களின்பேரில் எடுக்கப்பட்டது.

(44.) ஷஹாதத்து எனும் அறபுச்சொல் தமிழில் என்ன அருத்தங்கொள்ளும்?

1. கண்ணுற்கண்ட கருமத்தை வாயினல் விண்ணப்பம் செய்தல் எனும் அருத்தங்கொள்ளும்.
2. ஷஹாதத்து எனும் அறபுச்சொல்லும் சாட்சிஎனும் தமிழ்ச்சொல்லும் ஒரே அருத்தத்தையுடையது.

(45.) ஷஹாதத்துக் கலிமா யாது?

1. அஷ்ஹது அன்லாயிலாக இல்லல்லாகு வஅஷ்ஹது அன்னமுகம்மதற்றசூலுல்லாகி எலிபதுவாம்.
2. இக்கலிமாவையோ இரண்டு ஷஹாதத்துக்கலிமா என்று சொல்லுவார்கள்.

(46.) இரண்டு ஷஹாதத்துக் கலிமாவுக்கும் அருத்தமியாது?

திட்டமாய் நான் அறிந்து ஷாஹிதுசொல்லுகிறேன் வணக்கத்துக்குப் பாத்திபமாகிய நாயகன் யாருமில்லை அல்லாகுத்தஆலாவைத்தவிர இன்னும் நானறிந்து ஷாஹிதுசொல்லுகிறேன் திட்டமாய் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகுத்தஆலாவின் தூதராயிருக்கும் என்பதாம்.

(47.) இரண்டு ஷஹாதத்து என்பதின் கருத்தியாது?

அல்லாகுத்தஆலாவை வணக்கத்துக்குப் பாத்திபமானவனென்று ஷாஹிது சொல்வதொன்று நபிகளுயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அல்லாகுத்தஆலாவின் தூதரென ஷாஹிதுசொல்வதொன்று ஆகிய இரண்டுமே இரண்டு ஷஹாதத்தாம்.

(48.) அல்லாகுத்த ஆலாவைக் காணுமற் கண்டவர்களைப்போல் ஷாஹிது சொல்லலாமா?

ஆலத்திற் காணப்பட்டவைகளெல்லாம் அல்லாகுத்தஆலாவின் அஸ்மா சிபாத்து வெளியாகுந் தானங்களாயிருப்பதால் காண்கிறதும் காணப்படுகிறதும்அதுவேயல்லாதில்லைஎனத் திட்டமாகிய எகீன் உண்டாகின்றது ஆனதால் காணுதிருந்தும் கண்டவர்களைப்போல் ஷஹாதத்துச் சொல்லலாம்.

(49.) இவ்விதக் கருத்துடன் ஷஹாதத்துக்கும்அனு எவை?

நானறிந்து ஷாஹிதுசொல்லுகிறேன் அல்லாகுத்தஆலாவேயன்றி வேறே நாயகனில்லை முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் அவனுடைய உண்மைத்தூதராயிருக்குமென்பதேயாம்.

(50.) மஅனுவாவதியாது?

நாடப்பட்டது அல்லது பொருள் அல்லது கருத்து என்பதாம்.

---



## அல்பஸ்லுல்தானிபீபாபில் இஸ்லாம்

## உ - ம் பிரிவு.

(51.) கலிமாவுக்கு எத்தனை (மஅனு)க்களுண்டு?

சரீஅத்து தரீக்கத்து ஹகீகத்து மஃரிபத்து எனும் நான்கு பாதைகளிலும் லாயிலாக இல்லல்லாகு எனும் கலிமாவுக்கு நான்கு மஅனுக்களுண்டு.

(52.) சரீ அத்தாவதியாது?

நபிகளுயகம் முகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களுடைய சொல்லே சரீஅத்தாம்.

(53) தரீக்கத்தாவதியாது?

நபிகளுயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுடைய செயலே தரீகத்தாம்.

(54) ஹகீகத்தாவதியாது?

நபிகளுயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுடையநிலே ஹகீகத்தாம்.

(55.) மஃரிபத்தாவதியாது?

1. நபிகளுயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய சித்தே மஃரிபத்தாம்.

(56.) சரீஅத்தின்படி கலிமாவுடைய மஅனுஎவை?

1. லாமஃபூதபி ஹக்கின்பில்வு ஜூதி இல்லல்லா என்பதாம்.
2. இதின் அருத்தமாவது. ஆலத்தில் உண்மைகொண்டு வணங்கப்படுகிற நாயகன் யாருமில்லை அல்லாகுத்த ஆலாவைத் தவிர என்பதாம்.

(57.) தரீகத்தின்படி கலிமாவுடைய மஅனு எவை?

ல்பாஇல இல்லல்லா என்பதாம்.

இதின் அருத்தமாவது. செய்துமுடிப்பவன் யாருமில்லை அல்லாகுத்த ஆலாவைத்தவிர என்பதாம்.

(58.) ஹகீகத்தின்படி கலிமாவுடைய மஅனுஎவை?

1. லாமகுசூத இல்லல்லா என்பதாம்.
2. இதின் அருத்தமாவது நாடப்படுகிறவன் யாருமில்லை அல்லாகுத்த ஆலாவைத்தவிர என்பதாம்.

(59.) மஃரிபத்தின்படி கலிமாவுடைய மஃனாஎவை?

1. லாமவுஜூத இல்லல்லா என்பதாம்.

2. இதின் அருத்தமாவது உள்ளமையுடையவன் யாருமில்லை அல்லாகுத்தஆலாவைத்தவிர என்பதாம்.

(60.) கலிமாவுடைய நான்குபாதைக்கும் உதாரணங்களுண்டோ?

1. ஷரீஅத்தை கடல்என்றும் தரீகத்தைக் குளிகாரன் என்றும் ஹகிகத்தை சிப்பிஎன்றும் மஃரிபத்தை முத்துஎன்றும் உதாரணம் கூறுவாருமுளர்.

2. மனிதரிலுள்ள தோல் ஷரீஅத்து என்றும் தசை தரீக்கத்து என்றும் எலும்பு ஹகிகத்து என்றும் மூளை மஃரிபத்து என்றும் சிலரால் உதாரணம் நியமிக்கப்பட்டன.

3. கடல், குளிகாரன், சிப்பி, முத்து எனும் நான்கில் முத்தும் தோல், தசை, எலும்பு, மூளை எனும் நானகில் மூளையும் அம்சமாயிருப்பதுபோல் சரீஅத்து தரீகத்து ஹகிகத்து மஃரிபத்து எனும் நான்கினும் மஃரிபாவே அல்லாகுத்தஆலா அளவில் நெருங்குதலாக்குவிக்கும் வழியாம்.

---

## அல்பஸ்லுல்தாலிதுபீபாபில் இஸ்லாம்.

## ௩-ம் பிரிவு.

---

(61.) அல்லாகுத்தஆலாவையும் அவனுடைய படைப்புகளையும் இலாகு எனும் பதத்தாலழைக்கலாமா?

1. ஆம் ஹக்காகிய அல்லாகுத் தஆலாவையும் அவனின்படைப்பாகிய கல்குகளையும் இலாகு எனும் பதத்தா லழைக்கலாம்.

2. இலாகு நாயகன் எனும் அருத்தங் கொண்டது.

(62.) இலாகு எத்தனைவகைப்படும்?

(இலாகுன் பாத்திலுன்) அழிந்துபோகிற நாயகன். (இலாகுன் முகையதுன்) தளைபோடப்பட்ட நாயகன் (இலாகுன் ஹக்குன்) கடமைக்கார நாயகன் (இலாகுன் முதலகுன்) மட்டு மதிப்பில்லாநாயகன் என நான்குவகைப்படும்.

(63.) எவ்வெவைகளை இலாகுன்பாத்திலுனெனப்படும்?

உலகத்திற் சிற்சிலரால் ஸ்தோத்திரஞ் செய்யப்படுகின்ற ஜின் ஷைத்தான், தேவு, காற்றுமுதலிய அரூபியாகியவைகளே அழிந்துபோகின்ற இலாகாம்.



(64.) இலாகுன் முகையதுன் என்பதியாது?

1. சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் மண், தண்ணீர், நெருப்பு,விக்கிரகமாதிய ரூபமுள்ளவைகளாம்.

2. இவைகளு மழிந்துபோகிறவைகள் தான்.

(65.) இலாகுன் ஹக்குன் என்பதியாது?

1. இராசன் பெற்றோர். குருமுதலியவர்களே ஹக்காகிய இலாகாம்.

2. இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கடமைதான்.

(66.) முதலகாகிய நாயகன் யார்?

யாதேனும் மட்டுமதிப்பு குறிப்புக்களி லடங்காத கர்த்தாவாகிய அல்லாசுபுகானகுவத் தஆலாவே முதலகாகிய நாயகனும்.

(67.) இந்நான்குவகை இலாகில் கலிமாவில் நிர்ணயங்கொள்ள வேண்டிய (இலாகு) நாயகன்யார்?

முந்திய மூன்றிலாகையும் நபிசெய்து. இலாகுன் முதலகுன் எனும், அல்லா சுபுகானகுவத் தஆலாவையே இதுபாத்து செயல் வேண்டும்.

இலாகுமுதலகை, கலிமாவில், இதுபாத்துச் செய்வது நம் யாவர் பேரிலும் பறலு ஐனும்.

(நபி.) இல்லை யென்பது (இதுபாத்து.) இல்லை என்பதின் மாற்றம் (பறலுஐன்) ஒவ்வொருவர்பேரிலும் பறலானது.

(68.) கலிமாவில் இல்லைஎனும் அருத்தங்கொண்டலாவை முந்திவைத்த காரணமென்ன?

அழுக்குண்டாயிருக்கும் பாத்திரத்தில் அவ்வழுக்கை நீக்காமல் அம்சமானவஸ்தை வைக்கமாட்டோம். அப்படியே அடியார்களின் கல்பிலுறையும் பாவக்கறைகளை நீக்குங்காரணம் பற்றியே கலிமாவில் லா முந்திற்று.

(69.) கல்பிலுறையும் பாவக்கறைகளெவை?

1. அநியயத்து கைரிய்யத்து அனசிய்யத்து எனும் மூன்றுமேகல்பிலுறையும் பாவக்கறைகளில் முதன்மையானதாம்.

2. அநிய்யத்து தான் என்பது கைரிய்யத்து வேறென்பது அனசிய்யத்து நானென்பது.

(70.) கலிமாவின் ஷறுத்துக்கள் எத்தனைவகைப்படும்?

இகுறுறுன்பில்விசான் வதஸ்திகுன்பில்ஜினான் வஇகுலாசுஅமலுல் அத்யான் வஅதாயில் அறுக்கான் என நான்குவகைப்படும்.

2. இகுறாறுன் பில்லிசானுவது நாவினல் கலிமாவிலுள்ள மஅனுவை விண்ணப்பஞ்செய்வது.

3. வதஸ்தீகுன் பில்ஜினனுவது விண்ணப்பம் செய்ததை கல்பினல் உண்மையாக்குவது.

4. வஇகுலாசு அஉமாலில் அத்யானுவது மார்க்கமெனும் அமல்களைக் கலப்பறுதலாக்குவது.

5. வஅதாஉல் அறுக்கானுவது பறுலுக்களை அதாவாகவும் களாவாகவும் இறுத்துக்கொள்வது.

6. அதா வாவது பறுலாகிய அமல்களை அந்தந்தந் நேர்ப்படுத்தப்பட்ட நேரத்தில் செய்வது.

7. களாவாவது அவ்வமல்களைக் குறித்தநேரந் தவறிச்செய்வது.

---

## அல்பஸ்லுல்றுபிஉ பீபாபில் இஸ்லாம்.

## ச - ம் பிரிவு.

(71.) கலிமாவுடைய பறுலுகளெத்தனைவகைப்படும்?

இதுபாத்து தாத்தில்லாகி தஆலா இதுபாத்து சிபாத்தில்லாகி தஆலா இதுபாத்து அபுஆலில்லாகி தஆலா இதுபாத்து சிதுகு றசூலில்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லம் என நான்குவகைப்படும்.

(72.) இதுபாத்துதாத்தில்லாகி என்பதியாது?

1, அல்லாகுத்தஆலாவின் உள்ளமையைத் தரிபடுத்துவதேயாம்.

2. இது கலிமாவுடைய முதலாம் பறுலெனப்படும்.

(73,) இதுபாத்து சிபாத்தில்லாகி என்பதின் கருத்தெவை?

அல்லாகுத்தஆலாவுடைய வன்னிப்புகளைத் தரிப்படுத்துவதென்பதாம்.

இது கலிமாவுடைய இரண்டாம் பறுலெனப்படும்.

(74,) இதுபாத்து அபுஆலில்லாகி என்பதின் அருத்தமியாது?

1. அல்லாகுத்தஆலாவுடைய செயல்களைத்தரிப்படுத்துவதென்பதாம்.

2. இது கலிமாவுடைய மூன்றும் பறுலெனப்படும்.

(75,) இதுபாத்து சிதுகுறசூலில்லாகி என்பதெவை?

அல்லாகுத்தஆலாவின் தூதர்சொல்லியவைகளை உண்மையெனத் தரிபடுத்துவதாம் இதுகலிமாவுடைய நான்காம்பறுலெனப்படும்.



(76.) லாயிலாக இல்லல்லாகுஎனும் கலிமாவின் எழுத்துக்களெத்தனை?

லாயிலாக இல்லல்லாகு எனும் கலிமாவின் எழுத்துக்கள் பன்னிரண்டாம்.

(77.) லாயிலாக இல்லல்லாகு எனும் கலிமாவுக்குப் பன்னிரண்டு பறுலுண்டு மென்பாருமுளரோ?

ஆம் லாயில்லாக இல்லல்லாகு என்பதிலுள்ள பன்னிரண்டெழுத்துக்கும் பன்னிரண்டு பறுலுண்டென்றும் அப்பன்னிரண்டும் அகப்பறுலு. புறப்பறுலென இருபிரிவினையுடையதென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

(78,) கலிமாவின் அகப்பறுலுகளெத்தனை?

எக்கருமத்தையும் அல்லாகுத்தஆலா அளவில் பாஞ்சாட்டுதல், உள்ளதைக் கொண்டே போதுமாக்கிக்கொள்ளுதல். பொறுதி செய்தல் கலாவுக்குப் பொருந்துதல் நிருமத்துக்கு ஷுக்குறுசெய்தல் எவலுக்குத் தலைசாய்த்தல் எனும் ஆறுமே கலிமாவின் அகப்பறுலுகளாம்.

(79.) கலிமாவின் புறப்பறுலுகளெத்தனை?

சரீரந் துப்புரவாயிருத்தல் உடைதுப்பரவாயிருத்தல், தொழுதல் சகாத்துக்கொடுத்தல் நோன்புபிடித்தல் ஹஜ்ஜுச்செய்தல் எனும் ஆறுமே கலிமாவுடைய புறப்பறுலுகளாம்.

(80.) இப்பன்னிருபறுலையும் கலிமாவுடைய பறுலுகளென நிச்சயிக்கலாமா?

அகப்பறுலு புறப்பறுலெனும் இருபிரிவுக்களையுடைய பன்னிரு பறுலும் கலிமா சொன்னவர்பேரில் பறுலானதேயன்றிக் கலிமாவுடைய பறுலல்ல.

---

## அல்பஸ்லுல்காமிசு பீபாபில் இஸ்லாம்.

## ரு - ம் பிரிவு.

(81.) இதுபாத்து தாத்தில்லாகி எனும் கலிமாவுடைய முதலாம் றுகுனின் விபரங்களெவை?

அல்லாகுத்தஆலா உள்ளமையுடையவன் துவர்க்கமற்றவன் புதியவைகளுக் கொப்பில்லாதவன் தானே நிலைப்பட்டவன் ஒருவன்

என்பவைகளே கலிமாவுடைய முதலாம்பறுலாகிய இது பாத்து தாத்தில்லாகியின் விபரங்களாம்.

(82.) கலிமாவுடைய முதலாம்பறுலின் அசுல்களெவ்வாறும்?

கலிமாவுடைய முதலாம்பறுலாகிய இதுபாத்து தாத்தில்லாகி 10-பத்து அசுல்களையுடையது. அவைவருமாறு. அல்லாகுத்த ஆலா (வுஜூது) உள்ளமையுடையவன் பூர்வமானவன் என்றுந் தரிபாடானவன் (ஜௌஹறு) ஆதாரமான அணு பல ஜௌஹறுகள் கூடி உண்டானகண்டிப்பு ஜிஸ்மில்நிலைப்பட்ட (அறலு) ஆதியவைகளற்றவன் யாதோர் திசையைக்கொண்டு தனதாயிருப்பதை விட்டுந் தூய்மையானவன் அறுஷில் அவன் நாடியபடி இஸ்திவாவானவன் ஆகிறத்தில் ரூபாரூபமட்டு மதிப்பின்றிக் கண்பார்வையினாற் காணப்படுபவன் இணை துணையற்றவனென்று அறிவதேயாம்.

(83.) இதுபாத்து சிபாத்தில்லாகி எனும் கலிமாவுடைய இரண்டாம் றுகுனின் விபரங்களெவை?

அல்லாகுத்தஆலா ஹயாத்துக்கொண்டு ஹயாத்துள்ளவன் அறிவுகொண்டறிவுள்ளவன், நாட்டங்கொண்டு நாட்டமுள்ளவன் தத்துவங்கொண்டு தத்துவமுள்ளவன் கேள்விகொண்டு கேள்வி உள்ளவன் பார்வைகொண்டு பார்வையுள்ளவன் பேச்சுக்கொண்டு பேச்சுள்ளவனென நிர்ணயங்கொள்வதே கலிமாவுடைய இரண்டாம் றுகுனாகிய இதுபாத்து சிபாத்தில்லாகியின் விபரங்களாம்.

(84.) கலிமாவுடைய இரண்டாம்பறுலின் அசுல்களெவ்வாறும்.

கலிமாவுடைய இரண்டாம் பறுலாகிய இதுபாத்து சிபாத்தில்லாகி 10-பத்து அசுல்களைக்கொண்டது அவைவருமாறு.

அல்லாகுத்தஆலா ஹயாத்துள்ளவன் அறிவுள்ளவன் நாட்டமுள்ளவன் பார்வை கேள்வியுள்ளவன் அட்சரத்தொனியில்லாத் திருவசனமுடையவன் அவனுடைய திருவசனம் அறிவு நாட்டங்களாதிய சிபாத்துல் தாத்திய்யா அடங்கலும் பூர்வமானவை ஹயாத்துக்கொண்டு ஹயாத்தும் அறிவுகொண்டறிவும் நாட்டங்கொண்டு நாட்டமும் தத்துவங்கொண்டு தத்துவமும் கேள்விகொண்டு கேள்வியும் பார்வைகொண்டு பார்வையும் பேச்சுக்கொண்டு பேச்சும் உள்ளவனென்றறிவதேயாம்.

(85.) இதுபாத்து அபுஆலில்லாகி எனும் கலிமாவுடைய மூன்றும் றுகுனின் விபரங்களெவை?

அல்லாகுத்தஆலா ஆக்கிறவன், அழிக்கிறவன், படைக்கிறவன், இரணங்கொடுக்கிறவன், ஹயாத்தாக்கிறவன், மவுத்தாக்கிறவன்



நேர்வழிகாட்டுகிறவன், வழிகேடாக்குகிறவன், தவாபுகொடுக்கிறவன், அதாபு செய்கிறவனென்றும் சிபத்துக்கள் பிஇல்களில் இதுபோ லுள்ளவையெல்லாம் உடையவனென்றும் நிர்ணயங்கொள்வதே கலிமாவுடைய மூன்றும் றுகுனாகிய இதுபாத்து அபுஆலில்லாகியின் விபரங்களாம்.

(86.) கலிமாவுடைய மூன்றும்பறுலின் அசுல்களெவ்வாறும்?

கலிமாவுடைய மூன்றும்பறுலாகிய இதுபாத்து அபுஆலில்லாகி 10-பத்து அசுல்களைக்கொண்டது அவைவருமாறு.

ஆலத்தில் உண்டாக்கப்பட்டவையெல்லாம் அல்லாகுத்தஆலாவின்செயலும் படைப்பும் அமைப்புமாமென்றும் அடியார்களுடைய உசும்புதல் ஒடுங்குத லெல்லாவற்றையும் அல்லாகுத்தஆலாவே படைத்தான் அவ்வுசும்புதல் ஒடுங்குதல்களோ அடியாரின் தத்துவத்தைவிட்டுப் புறப்படாதென்றும்-அடியாருடையசெயல் அவர்களின் சம்பாதிப்பாயிருப்பினும்அல்லாகுத்தஆலாவின் நாட்டமாயிருக்குமென்பதைவிட்டுப் புறப்படாதென்றும் அடியார்களை நன்மையைக்கொண்டேவுதலும் தீமையைச்செய்யாமல்விலக்குதலும் அல்லாகுத்தஆலாவுக்கு ஜாயிசேதவிர விதியானதல்லவென்றும்-அடியார்கள் சக்திபெறாத ஏவல் விலகல்களை அவர்கள்பேரில் பூட்டுதல் அல்லாகுத்தஆலாவுக்கு ஆமான கருமமாயிருப்பினும் அப்படிப் பூட்டானென்றும் - அல்லாகுத்தஆலா தன்னுடைய படைப்பைக் குற்றமின்றி வேதனைசெய்வது ஆமான கருமந்தானென்றும்-தன்னுடைய அடியார்பேரில் தனக்குவேண்டியதைச் செய்யலாமேயன்றி அவர்களுக்கிணங்கியதைப் பேணிச்செய்வது அல்லாகுத்த ஆலாவுக்கு விதியானதல்லவென்றும்-அல்லாகுத்தஆலாவை அறிவதும் அவனுக்கு வழிப்படுவதும் அவன் விதியாக்கினதால் விதியாயிற்றேயன்றி அகிலினால் விதியாகவில்லையென்றும்-நபிமார்களை அனுப்பியது அல்லாகுத்தஆலாவுக்கு ஆமான கருமமேயன்றி ஆகாததல்லவென்றும்-அல்லாகுத்தஆலா முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை எல்லா நபிமார்களுக்கும் பிந்தினவராகவும் அவர்களுக்குமுன் உண்டானமார்க்கங்களையெல்லாம் மாற்றினவராகவும் அனுப்பினானென்றும் அறிவதேயாம்.

(87.) இதுபாத்து சிந்துகுறகுலில்லாகி என்னும் கலிமாவுடைய நான்காம் றுகுனின் விபரங்களெவை?

றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளறிவித்த ஹபருகிய கபுறில் அதாபும் முன்கறுவனகீறுஎனும் இரண்டு மலக்குகளின் கேள்வியும் கபுறிலிருந்தெழுப்புவதும் (மீசான்) நன்மை தீமைகளை

நிறுக்குந் தராசு (சிறுத்து) பாலம் சுவர்க்கம் நரகம் ஆகியவைகளுண்டெனவும் இவைபோலாகிய எல்லாக்கருமங்களிலும் உண்மைசொன்னார்களெனவும் நிர்ணயங்கொள்வதே கலிமாவுடைய நான்காம் ஆகுணகிய இதுபாத்து சிதுகு றகுலில்லாகியின் விபரங்களாம்.

(88.) கலிமாவுடைய நான்காம்பறுலின் அசல்களெவ்வாறும்?

கலிமாவுடைய நான்காம்பறுலாகிய இதுபாத்து சிதுகுறகு வில்லாகி 10-பத்து அசுல்களைக்கொண்டது அவைவருமாறு.

முன்கறு வனகிறு எனும் இரண்டுமலக்குகளும் கபுறில் கேள்விகணக்குக் கேட்பதும், கபுறில் அதாபுசெய்வதும், மவுத்தானவர்களை எழுப்பி மஃஷறில் கூட்டுவதும், நன்மைதீமைகளை நிறுக்கும் தராசாகிய மீஜானும், சிறுத்துல் முஸ்தகீம்பாலமும், உண்டென்றும் நரகமும் சுவர்க்கமும் படைக்கப்பட்டவையென்றும்-நபிகளுயர்ந்த மவர்களின் உபாத்துக்குப்பின் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களும். பின்பு உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்கு அவர்களும் பின்பு உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும் பின்பு அலிறலியல்லாகு அன்கு அவர்களும் உண்மையான கலீபாக்களென்றும் மேற்சொல்லிய நான்கு அசுகாபிமார்களும் இராசபட்டத்தின்வீதப்படி வரிசையானவர்களென்றும்-இராசதத்துவத்துக்குரிய 8-எட்டு சறத்துக்களையு முட்கொண்டு பெரும்பான்மையோர் சேர்ந்துவைத்த இராசனுக்கு நன்மையில் வழிப்படுவது வாஜிபு வழிப்படாதவர்களோ ஷறஉக்கு வழிப்படாதவர்களென்றும்-ஒரிராஜனுக்கு இல்மு வறஉ ஆகியவைகளில்லாதிருக்கிறதென அவனை நீக்கினால் பிதுனவுக்கு இடமேயானால் அவனையே தரிபடுத்துவது (சஹீஹு) தானென்றும் அறிந்து நிர்ணயங்கொள்வதேயாம்.

(89.) நிர்ணயங் கொள்ளவேண்டியவைகளில் அடிமூடானகருமங்களெவையாம்?

கலிமாவுடைய நான்குபறுலுக்கும் ஒவ்வொன்றுக்கு 10-பத்து வீதம் மேலேசொல்லப்பட்ட 40-நாற்பது அசுல்களுமே அடிமூடானவைகளாம்.

(90.) இந்நாற்பது அசுல்களையும் இஃதிகாதுகொண்டவர்களை எப்பெயரினாலழைத்தல்வேண்டும் ?

1. ஈடேற்றம்பெற்ற அஃலு சுன்னத்துக்காரரென் றழைத்தல் வேண்டும்.



2. இந்தநாற்பது அசுல்களில் ஒன்றையாவது நிர்ணயங்கொள்ளாதவர்களை அஃலுசுன்னத்துக்காரர் என்றழைக்கலாகாது அவர்களோ பிதுஅத்துக்காரர்களாம்.
3. பிதுஅத்துக்காரர்கள் றுபிளிய்யா, காரிஜிய்யா, கதரிய்யா, ஜபரிய்யா, முஅத்தில்லா முஷப்பிகா என ஆறுவகையினராம்.
4. றுபிளிய்யா என்பவர்களின் கொள்கைகளிற் சிலதாவன.

அலிறலியல்லாகு அன்கு அவர்களுக்குத்தான் நுபுவ்வத்தை அனுப்பப்பட்டது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் முகம்மது நபியுடனிருந்த இஷ்டத்தினால் மாறுபாடாக முகம்மது நபிக்குக் கொடுத்துவிட்டார், அலிறலியல்லாகு அன்கு முகம்மது நபியுடைய நுபுவ்வத்தில் கூட்டானவர் ஜமா அத்துத் தொழுகையும் தறுவீஹுத் தொழுகையும் சுன்னத்தல்ல. மோசாவின்மேல் மசகுசெய்தல் ஒரே வார்த்தையில் முத்தலாக்கும் சொல்லுதல் தொழுகையில் வலக்கையை இடக்கையின்மேல் வைத்தல் ஆகியவைகள் ஜாயிசல்ல ஆதம் அலைகிஸ்ஸலாம் தொடுத்து கியாமத்து வரைக்கும் நபியில்லாமலிராது, இமாம் ஹசன் ஹுசைன்றலியல்லாகு அன்குமா அவர்களின் காலந்தொடுத்து கியாமத்து வரைக்கும் அவர்களின் வம்மிசத்தில் இமாமில்லாதகாலமேயில்லை, அந்த இமாம்களோ அல்லாகுத்த ஆலா இடத்திலிருந்து நேர்நேராய். அல்லது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமின். மூலமாய். இல்மை அறிந்து கொள்வார்கள். அவ்விமாம்களை அறியாதவர்களின் (மவுத்து) மரணம். மூடத்துவமானது அலிறலியல்லாகு அன்கு அவர்களும் அவர்களின் பிள்ளைகளும் அவர்களின் கூட்டத்தார்களும், மீண்டு துன்யாவில்வந்து தங்கள் பகைஞரை வேதனை செய்வார்கள் அல்லது அவர்களின் றூஹுகள் வேறுசடங்களிற் பிரவேசித்துத் தங்கள் பகைஞரை வேதனைசெய்யும். சாட்சியின்றி நிகாகு செய்தல் ஜாயிசு மதுபானமும் விவாத்தும். ஹாருமல்ல முகம்மது நபியைக்காண அலிறலியல்லாகு அன்கு வரிசையானவர் அலிறலியல்லாகு அன்குவுடனெதிர்த்த மஆவியா, தல்கா, ஆயிசாயெனும் மூவரையும் லகுனத்துச் செய்யலாம் பாஜிறாகிய இமாமுக்குப்பின் தொழக்கூடாது வசிய்யத்துச் செய்வது வாஜிபு புணர்ச்சிக் காலத்தில் நல்லெண்ணத்துடன் நுத்பாவெளியானால் அப்பிள்ளை மனிதப்பிறவி ஷைத்தானுடைய வஸ்வாசுடன் வெளியானால் அப்பிள்ளை ஷைத்தான் பிறவி மதுஹபுடைய இமாம்களின் அபிப்பிராயம் வேறுபடுவதும் அவர்கள் மதுஹபுவைத்ததும் ஜாயிசல்ல குறுஆன் படைக்கப்பட்டது. அஃது மீதாக்குடைய நாளில் வார்த்தைப்பாடுவாங்க வில்லை. இராகம், தாளம் ஆதியவைகள், ஹலால், இமாம்கள், ஹசன் ஹுசைன் றலியல்லாகு அன்குமா அவர்களின் வம்மிசத்தாராகவும். குறைஷிக் குலத்தினராகவும்

இருக்கவேண்டும், கிதாபு, சுன்னத்து, இஜ்மாஉ, கியாசு, யெனும் நான்கில், இஜ்மாஉ, மார்க்கத்துக் காதாரமானதல்ல. என்பவைகளும் பிறவுமாம்.

ருபிளிய்யாக்களோ. அபூபக்கர் றலியல்லாகு அன்கு, உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்கு உதுமான் றலியல்லாகு அன்கு எனும். மூவரும் கிலாபத்தை ஏர்த்துக்கொண்டது குபிர் என்று அவர்களை லஃனத்துச்செய்து அலிறலியல்லாகு அன்குவை மாத்திரம் ஒப்புக்கொண்டார்கள்.

5. காரிஜிய்யா. என்பவர்களின் கொள்கை களிற் சிலதாவன.

அல்லாகுத்த ஆலாவுக்கு, சிபத்துக்களில்லை அவன் அறுஷின் மீதிலிருக்கிறான். அவனுக்கும் அறுஷுக்குமிடையில் ஆகாயமிருக்கின்றது. அவன் கேள்வி, பார்வை யில்லாதவன் அடியாருக்கு அநுகூலமானவைகளைச் செய்வது அவனின் கடமை அவன் தீமையைப்பற்றிக் கற்பனை செய்யவில்லை. குபிரையும் தீமையையும் தங்கடத்தையும் கற்பிக்கா திருப்பதே நியாயம். நபிமார்கள் நுபுவ்வத்துக்குமுன் நபியுமல்ல மஃசூமுமல்ல, இமாம்கள் மதுஹபு வைக்கவுங்கூடாது அதைநாம் தொடரவுங் கூடாது சகாத்துக் கொடுக்கக்கூடாது. நிகாஹின்றியும் அடிமைப்பாத்தியமின்றியும் பெண்களைப் புணரலாம் இமாம் ஜமாஅத்துத் தொழுகை சரிபாடானதல்ல ஜும்ஆத் தொழுகையும் அதை ஜமாஅத்துடன் தொழுவதும் ஆகாது முஸ்லீமாகிய அநியாயகார இராசனை எதிர்க்கலாம் கலீபாக்களையும் அமீர்களையும் காளிகளையும் நியமிப்பதும் ஹுகும்செய்வதும் ஆகாது அசுகாபிகளி லொருவரையாவது விரும்பவும் மாட்டோம், வெறுக்கவு மாட்டோம் சிறுபாவமாவது பெரும்பாவமாவது செய்தவன் காபிராவான். சீவனோடிருப்பவர்களினது துஆவும் சதகாவும் மவுத்தானவர்களுக்குப் பிரையோசனங் கொடுக்க மாட்டாது. தரையில் எந்த இடத்திலாவது சிறுநீருக் கிருக்கக்கூடாது இன்னார் சுத்தர் இன்னா ரசுத்தரென் றறியப் படாமையால் ஒருவரையாவது தொடவுங் கூடாது ஒருவருடனுங் கலந்திருந்து போஷிக்கவுங்கூடாது படையாயுதமுள்ளவர்கள் அதைப்பற்றி வஸிய்யத்துச் செய்யவேண்டும் அப்படி வஸிய்யத்துச் செய்யாதவன் அநியாய காரனாவான். காற்சட்டையுடன் தொழக்கூடாது ஒலிமார்களுக்குக் கறாமத்தில்லை, முந்தின நபிமார்களின் மார்க்க நிபந்தனையை மாற்றினது கூடாது குறுஆன் படைக்கப் பட்டது நன்மைக்கும் தீமைக்குந் தக்ககூலிகொடுப்பது அல்லாகுத்தஆலாவின்மீது கடன் மீசானிருந்து நன்மை தீமைகளின் பட்டோலை அதைப்பற்றிய கேள்விகணக்காகியவைக ளில்லை, பாவியா யிருந்து நரகம் புகுந்தவன்



மீளவே மாட்டான் ஷபாஅத்தில்லை அல்லது நபிமார்களுக்கும் மலக்குகளுக்குந்தான் ஷபா அத்துச் செய்யும் பாத்திய முண்டு கபுறில் கேள்வியும் அதாபுமில்லை, சுவர்க்கமும் நரகமும் படைக்கப்படவில்லை மனிதன் அநுபவிக்கும் எவ்வித துன்பமும் சரீரசுபாவத்தினாலும் ஆகார விகற்பத்தினாலும் கால கிரமத்தினாலும் உண்டாகின்றதே யன்றி களா கதுறைக்கொண்டல்ல, ஒருவன் தன் பாவத்துக்காகச் செய்யுந் தௌபா, கபூலாகாது துஆவும் சதகாவும் துன்யாவில் பிரையோசனந் தாராது, களாச்செய்யும் இபாதத்து தவறினவைகளுக்குப் பதிலாகாது பாவியானவன் ஆகிறத்தில் நரகம் புகுதவும் சுவர்க்கம் புகுதவு மாட்டான் மவுத்தானவனுக்கு அவன்செய்த நன்மைகள் கியாமம்வரையும் பிரயோசனங்கொடுக்காது எனபவைகளும் பிறவுமாம்.

6. கதரிய்யா என்பவர்களின் கொள்கைகளிற் சிலதாவன.

அல்லாகுத்தஆலா அடியார்களுடைய காரியங்களை யெல்லாம் அவர்கள்வசம் ஒப்புவித்து அக்காரியங்களை உண்டாக்கிக் கொள்ளும் பாத்தியத்தையுங் கொடுத்து விலக்கானவைகளையும் அறிவித்து விட்டான் ஆகையால், படைக்க நாடுகிறதும் படைக்கிறதும் கற்பனை செய்கிறதும் அவனுக்குக் கூடாது அகிலுக்குச் சரியானவைகளெல்லாம் தலீலைக்காண மிகைத்தவை இமாம்களின்கியாஸ், ஹதீதைப் பார்க்க மிகைத்தது ஜனாசாத்தொழுகை கூடாது அஃது மீதாக்கில்லை அல்லாகுத்தஆலா நன்மைதீமைகளைக் கற்பிக்கவில்லை அல்லது நன்மையை மாத்திரந்தான் கற்பித்தான் செயல்களெல்லாம் அல்லாகுத்தஆலாவின் புறத்திலுள்ளது பெரும்பாவியின் தௌபாவை கபூல்செய்யப்படாது பறுளு மாத்திரந்தான் சுன்னத்தில்லை சுவர்க்கமும் நரகமும் அழியாதவைகளல்ல என்பதும் பிறவுமாம்.

7. ஜபரிய்யா என்பவர்களின் கொள்கைகளிற் சிலதாவன.

அல்லாகுத்தஆலா படைப்புகளை யெல்லாம் படைத்து விட்டுப் பராக்கொளிந்திருக்கிறான் ஆகையால் எந்தவஸ்தும் அவனுடைய உத்தரவின்றித் தானாகவே வெளியாகின்றது அல்லாகுத்தஆலா புறத்தில் நின்றும் அடியார்மீது பறுலான காரியமேயில்லை அடியார்கள் நன்மையைக் கொண்டு கூலிகொடுக்கப் படுகிறவர்களேயன்றி தீமையைக் கொண்டு கூலிகொடுக்கப் படுகிறவர்களில்லை அடியார்களுக்குச் செயலேயில்லை அல்லாகுத்தஆலா காபிர்களை நரகத்திற்போட்டு வேதனைசெய்து மவுத்தாக்கிவிடுவான் அவர்களோ நரகத்தில் மய்யித்தாகவே யிருப்பார்கள் மன உதிப்புக்களெல்லாம் நன்றாயிருக்கினும் தொடர்ந்து நடக்கலாம்

இபாதத்தான கருமங்களை ஒருதரம் மாத்திரம் செய்தால்போதும் அந்தரங்கத்தில் முஉமீன் முஉமீனுமல்ல காபிர் காபிருமல்ல மனிதர்கள் பலர்கூடி ஏற்றுக்கொண்ட தெதுவானாலும் கைறு தான் பொருந்தப்படாத தெதுவானாலும் ஷற்றுதான் நன்மை செய்வதினால் பிரயோசனமுமில்லை தீமைசெய்வதினால் நஷ்டமு மில்லை என்பவைகளும் பிறவுமாம்.

8. முஅத்திலா என்பவர்களின் கொள்கைகளிற் சிலதாவன.

அல்லாகுத்தஆலாவை ஒருவஸ்து என்றும், அல்லவென்றும் சொல்லக் கூடாது சிறுத்தை மீசான் ஆகியவைகள் நா மறிந்திருக்கிறபடியல்ல, முகம்மது நபி ஹகீமேயன்றி றசூலல்ல (கியாமத்து) இல்லை அல்லாகுத்தஆலாவை துன்யாவிலேயே கண்ணாற் காணலாம் நபி மூசாஅலைகிஸ்ஸலாம் அல்லாகுத்தஆலாவுடன் வசனிக்கவில்லை முன்கர் நகீருடைய கேள்வியில்லை மலக்குல் மவுத்தில்லை சுவர்க்கவாளிகள் சுவர்க்கத்தில்புகுந்து சுகத்தை அநுபவிக்கும் வரைக்கும் சுவர்க்கமும் நரகவாளிகள் நரகத்தில் புகுந்து வேதனையை அநுபவிக்கும் வரைக்கும் நரகமும் தரிபட்டிருந்து பின்பு அவ்விரண்டும் அழிந்துபோம் உலகம் பூர்வமானது குறுஆன் ஓதுகிறவனின் ஓதலேயன்றி அல்லாகுத்தஆலாவின் திருவசனமல்ல என்பவைகளும் பிறவுமாம்.

(9.) முஷப்பிகா என்பவர்களின் கொள்கைகளிற் சிலதாவன.

அல்லாகுத்தஆலா ஜௌஹறு மற்ற ஜிஸ்முகளை நிகர்ந்த ஜிஸ்மல்ல அல்லாகுத்த ஆலாவுக்கு ரூபமுண்டு. அதை நாமறியமாட்டோம் ஈமான்மாத்திரந்தான் ஈமான் இல்லைப் பொறுத்தது ஆகையால் விதி விலக்குகளை அறியாதவன் காபிர் வாஜிபு சுன்னத்து ஆகியவைகளுக் கிடையில் வித்தியாசமில்லை என்பவைகளும் பிறவுமாம்.

(10.) மேலே சொல்லப்பட்ட ஆறுவகையாரும் வகையொன்றுக்கு 12-பன்னிரண்டு கூட்டமாக 72-கூட்டமாய்ப் பிரிந்தார்கள் இவ் வெழுபத்திரண்டு கூட்டத்தாரும் பிதுஅத்துக் காரர்களாம்.

(11.) அல்லாகுத்தஆலா நம் யாவரையும் இவ்வித விரோதக் கொள்கைகளைக் கொண்ட பிதுஅத்துக் காரரோடு சேர்க்காமல் காத்துக் கொள்ளுவானாக.

---



# அல்பஸ்லுல் ஸாதிசு பீபாபில் இஸ்லாம்.

## ச - ம் பிரிவு.

(91.) அல்லாகுத்தஆலாவின் சிபத்துக்கள் எத்தனைவகைப்படும்?

சிபத்தென்பது பண்பு வன்னிப்பெனவும் படும் அது வாஜிபான சிபத்துக்கள் முஸ்தஹீலான சிபத்துக்கள் ஜாயிசான சிபத்துக்களென மூன்றுவகைப்படும்.

(92.) வாஜிபான சிபத்தென்பதென்ன அருத்தமுடையது?

வாஜிபான சிபத்தென்பது அல்லாகுத்த ஆலாவுக்கு விதியான சிபத்தெனும் அருத்தமுடையதாம்.

(93.) வாஜிபான சிபத்துக்கள் எத்தனைவகைப்படும்?

நபுசிய்யா, சல்பிய்யா, மஆனிய்யா, மஅனவிய்யா, என நான்கு வகைப்படும்.

(94.) நபுசிய்யாவெனும் சிபத்தியாது?

(உஜூது) உள்ளமையுடையவனென்று மொன்றுமே நபுசிய்யா எனும் சிபத்தாம்.

இந்த சிபத்தை தாத்தைவிட்டுநீக்கிப் பேசலாகாது.

(95.) சல்பிய்யாவெனும் சிபத்துக்களெவை?

1. (கிதம்) பூர்வம் (பகா) அழிவின்மை (முகாலபத்துன்லில்ஹவாதிது) ஒப்பின்மை (கியாமுன்பிநபுசிகி) தன்னிற்றானிருத்தல் (வஹ்தானிய்யத்து) ஒருமை ஆகியஐந்துமே சல்பிய்யாவெனும் சிபத்துக்களாம்.

2. சல்பிய்யாவாவது தாத்துக்குத்தகுதியற்றவைகளை உரிந்துவிடும் சிபத்துக்களெனும் அருத்தங்கொண்டது.

(96.) மஆனிய்யாவெனும் சிபத்துக்களெவை?

1. (ஹயாத்து) சீவன் (இல்மு) அறிவு (இறாதத்து) நாட்டம் (குதறத்து) தத்துவம் (சம்உ) கேள்வி (பஸறு) பார்வை (கலாம்) பேச்சு ஆகிய எழுமே மஆனிய்யாவாகிய சிபத்துக்களாம்.

(97.) மஅனவிய்யாவெனும் சிபத்துக்களெவை?

1. (ஹையுன்) அல்லாகுத்தஆலா ஹயாத்துள்ளவன் (ஆலிமுன்) அறிவுள்ளவன் (முரீதுன்) நாட்டமுள்ளவன் (காதிறுன்) தத்துவமுள்

ளவன் (சமீஉன்) கேள்வியுள்ளவன் (பசீறுன்) பார்வையுள்ளவன் (முதகல்லிமுன்) பேச்சுள்ளவன் ஆகிய ஏழுமே மஅனவிய்யா வெனும் சிபத்துக்களாம்.

2. அல்லாகுத்தஆலாவின் ஹயாத்து உடம்பில்லாததும் அறிவு கல்பி ல்லாததும் நாட்டம் நபுசில்லாத்தும் தத்துவம் அவயவமில்லாத தும் கேள்வி காதில்லாததும் பார்வை கண்ணில்லாததும் பேச்சு நாவில்லாததுமாம்.

3. அல்லாகுத்த ஆலாவுடைய வாஜிபானசிபத்துக்கள். 94-ம் இலக்க வினாவின் விடையிற்சொல்லிய நபுசிய்யாவெனும் வகையிலொன்று. 95-ம் இலக்கவினாவின் விடையிற்சொல்லிய சல்பிய்யாவெனும் வகையில் ஐந்து. 96-ம் இலக்க வினாவின் விடையிற்சொல்லிய மஆனிய்யாவெனும் வகையில் ஏழு. 97-ம் இலக்கவினாவின் விடையிற்சொல்லிய மஅனவிய்யாவெனும் வகையில் ஏழு, ஆகிய இருபதுமேயாம்.

(98.) முஸ்தஹீலான சிபத்தென்பதின் அருத்தமியாது?

1. மேலேசொல்லப்பட்ட வாஜிபான சிபத்துக்கு மாறானசிபத்தென்பதாம்.

2. அது இருபதுசிபத்துக்கள் முஸ்தஹீலான இருபது சிபத்துக்களும் அல்லாகுத்த ஆலாவுக்கு அறவேயில்லையென நிர்ணயங்கொள்ள வேண்டும்.

(99.) முஸ்தஹீலான சிபத்துக்களெவை ?

இல்லாமை, அபூர்வம், அழிவு, ஒப்பு, யாதேனுமொன்றிலிருத்தல் பன்மை, மரணம், மூடம், நாடாமை, ஏலாமை, செவிடு, குருடு, ஊமை, மரணித்தவன், மூடன், நாட்டமில்லாதவன், ஏலாதவன் செவிடன், குருடன், ஊமையன், ஆகிய இருபதுமேயாம்.

(100.) ஜாயிசான சிபத்துக்களெவை?

மேலேசொல்லப்பட்ட வாஜிபு முஸ்தஹீல் எனும் சிபத்துக்களை த் தவிர மற்ற எல்லாவன்னிப்புகளுமாம் அது அல்லாகுத்தஆலாவுக் குண்டாயிருப்பதும் இல்லாமலிருப்பதும்ஒரேதன்மையுடையதாம் அதாவது படைத்தல் அழித்தல் உணவுகொடுத்தல் பிரையோசனஞ்செய்தல் தங்கடஞ்செய்தல் கொடுத்தல் விலக்கல் ஆகியவைகளும் பிறவுமாம்.

---



# அல்பஸ்லுல்ஸாபிஉ பீபாபில்இஸ்லாம்.

## எ - ம் பிரிவு.

(101.) றசூல்மார்களுக்கும் சிபத்துக்களுண்டோ?

ஆம் றசூல்மார்களுக்கும் வாஜிபான சிபத்துக்கள் முஸ்தஹீலான சிபத்துக்கள் ஜாயிசான சிபத்துகளென மூன்றுவகையான சிபத்துக்களுண்டு.

(102.) றசூல்மார்களுக்கு வாஜிபான சிபத்துக்களெத்தனை.

(சிதுகு) உண்மை (அமானத்து) விசுவாசம் (தபுலீகு மாஉமிறபிதபுலீகிஹீ (கல்குகளுக்கு அறிவிக்கும்படி ஏவப்பட்டகருமத்தை அறிவித்தல் ஆகிய மூன்றுமேயாம்.

(103.) றசூல்மார்களுக்கு முஸ்தஹீலான சிபத்துக்கள் எத்தனை?

(கிதுபு) பொய் (ஹியானத்து) சதிமானம் (கிதுமான்) அறிவிக்கும்படி ஏவின கருமத்தை மறைத்தல் ஆகிய மூன்றுமேயாம்.

(104.) றசூல்மார்களின் ஜாயிசான சிபத்துக்களெவை?

ஊண், குடிப்பு, உறக்கம், மறதி, பசி, தாகம், அழுகை, புன்சிரிப்பு நசல், சுகம், சந்தோஷம், சஞ்சலிப்பு, மலம், சலம், விவாகம் வியாபாரம், கூலிவேலை, கைத்தொழில், ஆகிய அனேககருமங்களாம்.

(105.) நபிமார்கள் எத்தனைபெயர்?

ஒருஇலட்சத்து இருபத்திநாலாயிரம்பெயரே நபிமார்களாம்.

(106.) றசூல்மார்கள் எத்தனைபெயர்.

1. பெலப்பானசொல்படி முந்நூற்றுப்பதின்மூன்றுபெயரே முறுசலான நபிமார்களாம்.

2. றசூல்மார்கள் முந்நூற்றிப்பதிநாலு பெயரெனவும் முந்நூற்றுப்பதினைந்து பெயரெனவும் (இலாபு) உண்டு.

(107.) வேதங்களை அனுப்பப்பட்ட றசூல்மார்க ளெத்தனைபெயர்?

1. மூஸா அலைஹிஸ்ஸலாம் நபி தாவூது அலைஹிஸ்ஸலாம் நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் நபி முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் [illegible]ம் நான்கு நபிமார்களுமாம்.

2. இத்தனை இத்தனை சுருபுகளை இன்ன இன்ன நபிமார்களுக் கனுப்பப்பட்டது என்பதை 2-ம் பாயின் முதலாம்பசலில் 16-ம் இலக்கவினாவின்விடையில் 5-ம் வசனத்திற்காண்க.

(108.) உலுல்அஸ்மி எனும்பட்டம்பெற்றநபிமார்களெத்தனைபெயர்?

1. பெலப்பானசொல்படி ஆதம் அலைகிஸ்ஸலாம் நூகு அலைகிஸ்ஸலாம் இபுறாகீம் அலைகிஸ்ஸலாம் மூசா அலைகிஸ்ஸலாம் ஈசா அலைகிஸ்ஸலாம் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லம் எனும் ஆறுபெயர்களுமேயாம்.

2. உலுல் அஸ்மி எனும் நபிமார்கள் ஐந்துபெயர்கள் என்பாருமுளர்.

(109.) மேன்மையாகிய குறுஆன் ஷரீபில் எத்தனை நபிமார்களைச் சொல்லப்பட்டிருக்கின்றனர்?

இன்ன இன்ன நபிமார்களென இருபத்தேழு நபிமார்களை அல்லாகுத்தஆலா குறுஆனிற் சொல்லியிருக்கிறான்.

(110.) நபிமார்களிலெல்லாம் (அபுளல்) வரிசையாகியநபியார்?.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களே நபிமார்களிலெல்லாம் வரிசையானவர்களாம்.

நபிமார்களிலெல்லாம் வரிசையானவர் மாத்திரமல்ல கல்குகளிலெல்லாம் அவரே வரிசையானவராம்.

கல்குகளிலெல்லாம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களும் பின்பு முருசலான நபிமார்களும் பின்பு நபிமார்களும் பின்பு ஹவாஸ்ஸான மலக்குகளும் பின்பு அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்கு அவர்களும் பின்பு உமறிபுனுல்கத்தாபு றலியல்லாகு அன்கு அவர்களும் பின்பு உதுமானிபுனு அப்பான் றலியல்லாகு அன்கு அலியிபுனு அபீதாலிபு றலியல்லாகு அன்கு எனும் இருவரும் பின்பு அஷறத்துல் முபஷ்ஷறா எனும் பத்து அசுகாபிமார்களும் அவர்களாவது முன்சொல்லிய நான்கு அசுகாபிமார்களும் சஃது இபுனு சைது சஃதிபுனு அபீவக்காஸ் தல்கத்திபுனு அப்துல்லா சுபைறிபுனு அவாம் அப்துற்றகுமானிபுனு அவுபு ஆமிறிபுனு ஜற்றாஹு றலியல்லாகு அன்கும் எனும் ஆறு அசுகாபிமார்களும் பின்பு அவாமான மலக்குகளும் பின்பு இமாம் ஹசன் ஹுசைன் ஹம்சா அப்பாஸ் றலியல்லாகு அன்கும் எனும் நால்வரும் பின்பு முகாஜிரீன்களாகிய அசுகாபிமார்களும் பின்பு அன்சாரீன்களும் பின்பு மேலேசொல்லப்படாத மற்றும் அசுகாபிமார்களும் பின்பு அவர்களையடுத்த நாட்களிலுள்ள தாபிஈன்களும் பின்பு இமாம் அபூஹனீபா றகுமத்துல்லாகி அலைகி இமாம் மாலிகி றகுமத்துல்லாகி அலைகி இமாம் ஷாபிஇ றகுமத்துல்லாகி அலைகி இமாம் அகுமது றகுமத்துல்லாகி அலைகி எனும் நான்கு இமாம்களும் பின்பு முஜ்தஹிதுகளும் பின்பு குதுபுகளும் பின்பு அவுலியாக்களும் பின்பு சாலிகீன்களும் வரிசையானவர்களாம்.

மாதர்களில் மறியம் பாத்திமா எனு மிருவரிலொருவர் பின்பு ஆயிஷா பின்பு கதீஜா பின்பு இவர்களல்லாத நம்பிறாட்டிமார்கள் றலியல்லாகு அன்குன்ன என்பவர்களே வரிசையானவர்களாம்.



---

## அல்பாபுல்றாபிஉ பீபயானித்தௌஹீதி.

(நான்காம்பாபு தௌஹீதைப்பற்றியது.)

## அல்பஸலுல் அவ்வலு பீபிரீபித் தௌஹீதி.

## க - ம் பிரிவு.

(111.) தீனுடைய மூன்றும் றுகுன்யாது?

தௌஹீதே தீனுடைய மூன்றும் றுகுனும்.

(112.) தௌஹீதாவதியாது?

அல்லாகுத்தஆலாவை ஒருமைப்பாடாகவிற் சேர்ப்பதே தௌஹீதாம்.

(113.) தௌஹீதுடைய றுகுன்களெத்தனை?

நபி, இதுபாத்து எனும் இரண்டுமே தௌஹீதுடைய றுகுன்களாம்.

(114.) நபியாவதியாது?

இல்லை எனும் அருத்தங்கொண்டதே நபியாம்.

(115.) இதுபாத்தாவதியாது?

உண்டென்று தரிபடுத்துவதே இதுபாத்தாம்.

(116.) தௌஹீதுடைய மறுதபாக்களெத்தனை?

தௌஹீதுல் உலூஹிய்யா, தௌஹீதுல் அபுஆல், தௌஹீதுல் ஸிபாத்து, தௌஹீதுல்வுஜூது என நான்கு மறுதபாக்களாம்.

(117.) தௌஹீதுல் உலூஹிய்யா எவ்வாறாம்?

நாயகத்தன்மைக்குப் பாத்திபமானவ னொருவனென்பதே தௌஹீதுல் உலூஹிய்யாவாம்.

(118.) தௌஹீதுல் அபுஆல்யாது?

செயல்களையுடையவ னொருவனென்பதே தௌஹீதுல் அபுஆலாம்

(119.) தௌஹீதுல் ஸிபாத்தென்பாரும்?

ஸிபத்தெனும் பண்புஅல்லது வன்னிப்புகளையுடையவனொருவனென்பதே தௌஹீது ஸிபாத்தாம்.

(120.) தௌஹீதுல் வுஜூதாவதியாது?

உள்ளமையுடையவனொருவனென்பதே தௌஹீது வுஜூதாம்.

---

## அல்பஸ்லுல் தானீபீபாபித் தௌஹீதி.

## ௨-ம் பிரிவு.

(121.) தௌஹீது உலூகிய்யாவின்படி கலிமாவுடைய மஅனாயாது?

லாமுஸ்தஹிக்குன்பில் உலூகிய்யத்தி இல்லல்லாவென்பதாம்.

(122.) லாமுஸ்தஹிக்குன்பில் உலூகிய்யதி இல்லல்லாவென்பதின் அருத்தமியாது?

நாயகத் தனத்துக்குப் பாத்திபமானவன் யாருமில்லை அல்லாகுத்தஆலாவைத்தவிர என்பதே தௌஹீதுடைய முந்தின மறுதபாவின்படி அருத்தமாம்.

(123.) தௌஹீது அபுஆலின்படி கலிமாவின் மஅனாயாது?

லாபாஇல இல்லல்லா வென்பதே தௌஹீது அபுஆலின்படி கலிமாவின் மஅனாவாம்

அதின் அருத்தமாவது செயல்களை யுடையவன் அல்லாகுத்த ஆலாவைத்தவிர வேறொருவனுமில்லை என்பதாம்.

(124.) தௌஹீது ஸிபாத்தின்படி கலிமாவின் மஅனாயாது?

லாஹையுன் வலாஆலிமுன் வலாமுரீதுன், வலாகாதிறுன் வலாசமீஉன் வலா பசீறுன், வலா முதகல்லிமுன் பில்ஹகீகதி இல்லல்லாவென்பதாம்.

ஹயாத்துள்ளவன் அறிவுள்ளவன் நாட்டமுள்ளவன் தத்துவமுள்ளவன் கேள்வியுள்ளவன் பார்வையுள்ளவன் பேச்சுள்ளவன் ஒருவனுமேயில்லை அல்லாகுத்த ஆலாவைத்தவிர என்பதே இதின் அருத்தமாம்.

(125.) தௌஹீது வுஜூதின்படி கலிமாவின் மஅனாயாது?

லாமவ்ஜூத இல்லல்லாவென்பதேயாம்.



அதின் அருத்தமாவது உள்ளமையுடையவனொருவனுமில்லை அல்லாகுத்தஆலாவைத் தவிர என்பதாம்.

(126.) தௌஹீது வுஜூதுக்கு வேறுபெயருண்டோ?

ஆம் தௌஹீது தாத்துஎன்றும் ஓர் நாமமுண்டு.

(127.) தௌஹீது உலூகிய்யாவில் யாதை இதுபாத்துச் செய்தல் வேண்டும்?

இலாகு முதலகை மாத்திரமே இதுபாத்துச் செய்தல்வேண்டும்.

(128.) பாஇல் எத்தனைவகைப்படும்?

1. பாஇல் ஹகீகி பாஇல் மஜாசி என இரண்டுவகைப்படும்.
2. பாஇல் ஹகீகியாவது உள்ளாஉள்ளபடி செய்பவன் என்பதாம்.
3. அல்லாகுத்த ஆலாவின் செயல்களோ சிபாத்தைக்கொளுகினதாயும் சிபாத்து தாத்தைக்கொளுகினதாயும் தாத்து தானாய்நிலைப்பட்டதாயுமிருக்குமாம்.
4. யாதோர்செயலை இரவலாய்ச்செய்பவனே பாஇலமஜாசியாம் அது அடியார்களாம்.
5. அடியார்களின் செயல்களோ அவர்களின் செயலுண்டாகும் பாஇலிய்யத்து செயல் விசையிமாகும் மபுஊலிய்யத்து (பிஇல்) செயல்ஆகிய மூன்றும் நிலையற்றதாயும் பலதுங் கூட்டானதாகவுமிருக்குமாம்.
6. பாஇல்ஹகீகி பாஇல்மஜாசி எனும் இரண்டுவகை பாஇலில் பாஇல் மஜாசியை நபிச்செய்து பாஇல்ஹகீகியை இதுபாத்துச் செய்தல் வேண்டும்.

(129.) தௌஹீது ஸிபாத்து எத்தனை வகைப்படும்?

1. ஸிபாத்துல் ஹகீகி ஸிபாத்துல் மஜாசி என இருவகைப்படும். அல்லாகுத்தஆலா (ஹையுன்) உயிருடையவன் (ஆலிமுன்) அறிவுடையவன் (முரீதுன்) நாட்டமுடையவன் (காதிறுன்) தத்துவமுடையவன் (பசீறுன்) பார்வையுடையவன் (சமீஉன்) கேள்வியுடையவன் (முதகல்லிமுன்) பேச்சுடையவன் என்பதே ஹகீகிய்யாகிய சிபத்துக்களாம்.
2. அல்லாகுத்தஆலா அடியார்களுக்கு மேலேசொல்லிய எழு சிபத்துக்களையும் இரவலாய்க்கொடுத்திருக்கிறான் அதுவே மஜாசிய்யான சிபத்துக்களாம்.

அல்லாகுத்தஆலா அடியார்களுக்குஇவ்வேழுசிபத்துக்களைக்கொடுத்திருந்தாலும் அதை நபிச்செய்து அல்லாகுத்தஆலா தான் ஹகீகத்தில் இந்த சிபத்துக்களையெல்லா முடையவனென்று இதுபாத்துச் செய்தல்வேண்டும்.

(130.) தௌஹீதுல் தாத்து எத்தனைவகைப்படும்?

1. மவுஜூது மஃனு மவுஜூது அதமியென இருவகைப்படும்.
2. மவுஜூது மஃனாவது கலப்பற்ற சுயமவுஜூதாம் அது அல்லாகுத்த ஆலாதான்.
3. மவுஜூது அதமிஆவது இல்லாமையெனும் அதமைச் சேர்ந்த மவுஜூதாம் அது கல்குகளின் தாத்துக்களாம்.
4. அல்லாகுத்த ஆலாவுக்கும் வுஜூதுண்டு கல்குகளுக்கும் வுஜூதுண்டு ஆகையால் கல்குகளின் வுஜூதை நபிச்செய்து அல்லாகுத்த ஆலாவின் வுஜூதையே இதுபாத்துச் செய்யவேண்டும்.

---

## அல்பாபுல் காமிசு பீபயானில் மஃரிபதி.

(ஐந்தாம்பாபு மஃரிபத்தைப் பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில் மஃரிபதி.

## க - ம் பிரிவு.

(131.) தீனுடைய நான்காம் அருகன்யாது?

மஃரிபாவே தீனுடைய நான்காம் அருகனும்.

(132.) மஃரிபத்து என்பதின் அருத்தமியாது?

அல்லாகுத்த ஆலாவை அறிதல் என்பதேயாம்.

(133.) மஃரிபா எத்தனை வகைப்படும்?

தன்சீகு, தஷ்பீகு, தன்சீகுமஃனு, என மூன்றுவகைப்படும்.

134. தன்சீகாவ தியாது?

அல்லாகுத்த ஆலாவைச் சகல மருவுகுகளை விட்டுத் துய்மையாக்குதலே மஃரிபத்து தன்சீகாம்.

(135.) தஷ்பீகாவ தியாது?

அல்லாகுத்தஆலாவை ஒப்பாக்குதலே மஃரிபத்து தஷ்பீகாம்.

(136.) தன்சீகு மஃனுஆவ தியாது?

கலப்பற்ற தன் சீகு என்பதே தன்சீகு மஃனென்பதின் அருத்தமாம்.



(137.) மஃரிபாவுடைய மூன்றுவகையில் எவ்வகையைக் கைக்கொள்ளவேண்டும்?

கலப்பற்ற தன்சீகெனும் தன்சீகு மஃனையே கைக்கொள்ளவேண்டும்.

(138.) தன்சீகு மஃனைக் கைக்கொண்டவர்கள் யார்?

நபிமார்களும் சாலிகீன்களுமே தன்சீகு மஃனைக் கைக்கொண்டனர், அதனால் தன்சீகு மஃனுக்கு நபிமார்கள் கலப்பறுதலுடைய சாலிகீன்களுடைய மஃரிபா என்று பெயராயிற்று.

139.) தன்சீகு மஃனுக்கு வேறுபெயருமுண்டோ?

ஆம் தன்சீகுமஃனை (மகுஅது சிதுகு) உண்மை குடிகொள்ளும் மெஞ்ஞானமெனவும் சொல்லப்படும்.

(140.) மஃரிபாவை உண்டாக்கிவிப்ப தியாது?

கஷ்பீ எனும் படிப்பும்(வஹபீ) எனும் அல்லாகுத்த ஆலாவின்நன்கொடையுமே மஃரிபாவை உண்டாக்கிவிக்கும் அதற்குத்தான் இல்முல்லதுன்னீ என்றும் இல்முல் கஷ்பென்றும் சொல்லப்படும்.

---

## அல்பஸ்லுல்தானி பீபாபில் மஃரிபதி.

## உ - ம் பிரிவு.

(141.) நகுஉடைய மறுதபாக்கள் எத்தனை?

ஆரிபீன்கள் சுருக்கியபடி அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யத்து, ஆலமுல்அறுவாஹு; ஆலமுல்மிதால், ஆலமுல்அஜ்சாம் ஆலமுல் இன்சான்; என எழு மறுதபாக்களாம்.

(142.) அஹதிய்யத்தென்ப தென்ன?

யாதோர்மட்டு மதிப்புச்சொல்லக்கூடாத குறிப்பற்ற கலப்பற்ற மறுதபாவே அஹதிய்யத்தாம் இதுவே நகுஉடைய மறுதபாக்களில் முந்தின மறுதபாவாம்.

(143.) வஹ்தத்தாவ தியாது?

வஹ்தத்தென்பது (தஅய்யுனுல் அவ்வல்) முதலாங்குறிப்பெனப் பொருள்படும்.

(144.) வாஹிதிய்யத்து என்பதின் அருத்தமியாது?

வாஹிதிய்யத்தாவது (தஅய்புனுல்தானி) இரண்டாங்குறிப்பெனு ம் அருத்தங்கொண்டதாம்.

(145.) ஆலம் அறுவாஹாவ தென்ன?

ஆலம் அறுவாஹென்பது றூஹுகளுடைய ஆலமென்பதாம் அது அல்லாகுத்த ஆலாவின் ஜலாலிய்யத்தான அஸ்மாவும் ஜமாலிய்யத்தான அஸ்மாவு மொன்றேடொன்றுமோதிக் கோலப்படாதிருந்த நூறு முகம்மதிய்யாவும் அதல்லாத எல்லா றூஹுகளுமாம்.

(146.) ஆலம்மிதாலென்பதின் அருத்தம் யாது?

மிதாலுடைய ஆலமென்பதாம் அதுகோலமற்ற அறுவாஹு ஆகயிருந்து கோலங்கொண்டதாம்.

(147.) ஆலம் அஜ்சாம் ஆவதென்ன?

கண்டிப்புகளுடைய ஆலமே ஆலம் அஜ்சாமாம் அது மண் ஜலம் காற்று நெருப்பாகியவைகளிறு லுண்டான கண்டிப்பாம் அதை ஆலம் ஷகாதாவென்றும் சொல்லுவார்கள்.

(148.) ஆலம் இன்சானாவ தியாது?

முன்சொல்லிய மறுதபாக்களையும் (மப்தஉ) (மஆதை) யும் அறிந்து ஷுகூதுசெய்யும் ஆரிபீன்களே ஆலம் இன்சானாம்.

(149.) மப்தஉ ஆவ தியாது?

மப்தஉ என்பது வெளியாகுந்தானமெனும் அருத்தங்கொண்டதாம்.

(150.) மஆது என்பதின் அருத்தமென்ன?

மஆது என்பது மீளுந்தானம் எனும் பொருள்கொண்டதாம்.

---

## அல்பஸ்லுல் தாலிது பீபாபில் மஃரிபதி.

## ௩ - ம் பிரிவு.

(151.) முந்தின மறுதபாவாகிய அஹதிய்யத்துக்கு வேறுநாமங்களுண்டோ?

அஹதிய்யத்தெனும் மறுதபாவுக்கு மறுதபதுல்அமா, வென்றும் மறுதபதுல், லாதஅய்யன், என்றும் மறுதபதுல் இதுலாக்கு என்றும் மறுதபதுல் தாத்துல் பஃது என்றும் மறுதபதுல் தாத்திஸ் ஸாதிஜு என்றும் பலநாமங்களுண்டு.



(152.) அமாவாவ தியாது?

விபரமற்ற இருளான மறுதபாவே அமாவாம்.

(153.) இரண்டாம் மறுதபாவாகிய வஹ்தத்துக்கு வேறு நாமங்களுண்டோ?

வஹ்தத்து எனும் மறுதபாவுக்கு ஹகீகத்து முகம்மதிய்யா வென்றும் ஷுயூனுல் தாத்திய்யா வென்றும் தஅய்யுனுல் அவ்வல் என்றும் மூன்று நாமங்களுண்டு.

(154.) ஹகீகத்து முகம்மதிய்யா வென்பதெது?

ஹகீகத்து முகம்மதிய்யா வென்பதை மகாமு அவ் அத்னா வென்றும் ஹகீகத்துல் ஹகாயிகு என்றும் சொல்லப்படும்.

(155.) வஹ்தத்து எனும் இரண்டாம் மறுதபாவுக்கு ஹகீகத்துல் ஹகாயிகு எனும் மறுநாமங்கொடுத்த காரணம் யாது?

அல்லாகுத்தஆலா கற்பித்த கற்பனைகளிலெல்லாம் முந்தினது முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் நூறாயிருப்பதால் (வஹ்தத்தை) ஹகீகத்து முகம்மதிய்யா எனவும் ஹகீகத்துல் ஹகாயிகு எனவும் சொல்லப்படும்.

(156.) மூன்றும் மறுதபாவாகிய வாஹிதிய்யத்துக்கு வேறுபெயர்களுண்டோ?

ஆம் வாஹிதிய்யாவுக்கு ஹகீகத்து ஆதமென்றும் அஃயானுல் தாபிதாவென்றும் தஅய்யுனுல்தானி என்றும் பலநாமங்களுண்டாம்.

(157.) வாஹிதிய்யாவெனும் மூன்றும் மறுதபாவுக்கு எத்தனை இஃதிபாருண்டு?

வாஹிதிய்யாவெனும் மூன்றும் மறுதபாவுக்கு வுஜூது இல்மு நூறு ஷுகூது எனும் அஸ்மாஉல் அவ்வலாகிய நான்கு இஃதிபாறுகளுண்டு.

(158.) ஷுஊன் ஆவதென்ன?

ஹக்குதஆலா தான்வெளியாக நாடியநாட்டமே ஷுஊனும்.

(159.) பைலு அகுதாசாவ தியாது?

அல்லாகுத்தஆலா மிகுதியாய் வெளியாகவேண்டுமென நாடிய நாட்டமே பைலு அகுதாசாம்.

(160.) அஃயானுல் தாபிதா வென்பதின் அருத்தமியாது?

அல்லாகுத்தஆலா தன்னுடைய வன்னிப்புக்களை அததுக்குத்தகுந்த தானத்தில் நிறுத்திவைத்தான் அதுவே அஃயானுல் தாபிதாவாம்.

---

## அல்பஸ்லுல் ருபிஉ பீபாபில் மஃரிபதி.

## ச - ம் பிரிவு.

(161.) பைலு முகத்தசாவதியாது?

அக்குதஆலாவின் ஜலாலும் ஜமாலும் ஒன்றோடொன்றுமோதித் தன்னுடைய தாத்தில் ஒளிவாகக் குமிழியெறிந்தது அதுவே பைலு முகத்தசாம்.

(162.) பைலு முகத்தசுக்கு வேறுநாமங்களுண்டோ?

ஆம் ஹூவிய்யத்து வஷிரிய்யாவெனவும் நூறுமுகம்மது எனவும் இருநாமங்களுண்டு.

(163.) நூறுமுகம்மதெனும் குமிழியைவடித் தெத்தனைபங்காய்ப் பிரிக்கப்பட்டது?

நூறுமுகம்மதெனுங் குமிழியைப் பதின்மூன்றுபங்காய்ப் பிரிக்கப்பட்டது.

(164.) நூறுமுகம்மதெனுங் குமிழியின் முதலாம் இரண்டாம் மூன்றும்வடிவுகளெவை?

முதலாம்வடிவு உலுல் அஸ்மி இரண்டாம்வடிவு முறுசலூன் மூன்றும்வடிவு அன்பியா வென்பதாம்.

(165.) நூறு முகம்மதெனுங் குமிழியின் நான்காம் ஐந்தாம் ஆறும் வடிவுகளெவை?

நான்காம்வடிவு அகுதாபு, ஐந்தாம்வடிவு அவுலியா, ஆறும் வடிவு, உலமா, வென்பதாம்.

(166.) நூறு முகம்மதெனுங் குமிழியின் ஏழாம் எட்டாம் ஒன்பதாம் வடிவுகளெவை?

ஏழாம் வடிவு முஉமினுகிய சாலிகூன், எட்டாம் வடிவு முஉமினுகிய பாசிகூன், ஒன்பதாம் வடிவு காபிறூன் என்பவைகளாம்.

(167.) நூறு முகம்மதெனும் குமிழியின் பத்தாம் வடிவு பதினோராம் வடிவுகளெவை?

பத்தாம் வடிவு ஹயவானுத்து, பதினோராம் வடிவு புல்பூடு என்பவைகளாம்.

(168.) நூறு முகம்மதெனுங் குமிழியின் பன்னிரண்டாம் வடிவியாது?

தற்கறடுகளே பன்னிரண்டாம் வடிவாம்.



(169.) நூறு முகம்மதெனுங் குமிழியின் பதின்மூன்றும் வடிவியாது?

துற்றத்துல் பைலாவென்பதே பதின்மூன்றும் வடிவாம்.

(170.) நூறென்பதியாது?

நூறென்பது ஒளிவு எனும் அருத்தங்கொண்டது.

---

## அல்பஸ்லுல் காமிசு பீபாபில் மஃரிபதி.

## ரு - ம் பிரிவு.

(171.) துற்றத்துல் பைலாவாவதியாது?

துற்றத்துல் பைலாவென்பது வெள்ளைமுத்தாம்.

(172.) துற்றத்துல் பைலாவும் வடிக்கப்பட்டதா?

ஆம் துற்றத்துல் பைலாவைப் பதின்மூன்றுதரம் வடித்துப் பதின்மூன்று வகையாக்கப்பட்டது.

(173.) துற்றத்துல் பைலாவின் முதலாம் வடிவியாது?

துற்றத்துல் பைலாவின் முதலாம் வடிவு அறுஷாம்.

(174.) துற்றத்துல் பைலாவின் இரண்டாம் வடிவென்ன?

துற்றத்துல் பைலாவின் இரண்டாம் வடிவு குறுசாம்.

(175.) துற்றத்துல் பைலாவின் மூன்றும் நான்காம் வடிவுகளியாவை?

துற்றத்துல் பைலாவின் மூன்றும்வடிவு ஏழாம்வானம் நான்காம் வடிவு ஆறும் வானமாம்.

(176.) துற்றத்துல் பைலாவின் ஐந்தாம் வடிவியாது?

ஐந்தாம் வானமே துற்றத்துல் பைலாவின் ஐந்தாம் வடிவாம்.

(177.) துற்றத்துல் பைலாவின் ஆறும் வடிவியாது?

துற்றத்துல் பைலாவின் ஆறும் வடிவு நான்காம் வானமாம்.

(178.) துற்றத்துல் பைலாவின் ஏழாம் எட்டாம் வடிவுகளெவை?

துற்றத்துல் பைலாவின் ஏழாம் வடிவு மூன்றும் வானம் எட்டாம் வடிவு இரண்டாம் வானமாம்,

(179.) துற்றத்துல் பைலாவின் ஒன்பதாம் பத்தாம் பதினோராம் வடிவுகளெவை?

துற்றத்துல் பைலாவின் ஒன்பதாம் வடிவு முதலாம் வானம் பத்தாம் வடிவு நெருப்பு மண்டலம் பதினோராம் வடிவு காற்றுமண்டலமாம்.

(180.) துற்றத்துல் பைலாவின் பன்னிரண்டாம் பதின்மூன்றும் வடிவுகளெவை?

துற்றத்துல் பைலாவின் பன்னிரண்டாம் வடிவு நீர்மண்டலம் பதின்மூன்றும் வடிவு மண்மண்டலமாம்.

---

## அல்பஸ்லுல்சாதிசு பீபாபில் மஃரிபதி.

## ௬-ம் பிரிவு.

(181.) நபுசுகளெத்தனை?

நபுசு அம்மாறு நபுசு, லௌவாமா நபுசு, முல்ஹிமா-நபுசு, முதும இன்னு நபுசு, றாளிய்யா நபுசு, மறுளிய்யா நபுசு, காமிலா என, ஏழு நபுசுக்களாம்.

(182.) நபுசு அம்மாறு எவ்வாறும்?

கெட்ட கருமங்களைக்கொண் டேவுவதே அதின் தன்மையாம்.

(183.) நபுசு லௌவாமாவின் குணம் யாது?

பொய், பரியாசம் முதலிய பழிப்பானவைகளேயாம.

(184.) நபுசு முல்ஹிமாவின் குணம் யாது?

நபுசு முல்ஹிமாவில்தான் சகலது முதிப்பாகின்றது. எவ்வெவ்வு திப்புக்களுண்டாயினும் நன்மையும் வணக்கமுமே மேலிடுமாம்.

(185.) நபுசு முதும இன்னுவின் தொழிலியாது?

தன் நபுசைத் தாள்மையாய்க் காணுதலே நபுசு முதும இன்னுவின் றொழிலாம்.

(186.) நபுசு றாளிய்யாவின் குணமியாது?

அல்லாகுத்த ஆலாவின் கட்டளைக்கு அமைந்துகொள்ளுதலேயாம்.

(187.) நபுசு மறுளிய்யாவின் பண்பியாது?

அல்லாகுத்த ஆலாவின் பொருத்தத்துக்குப் பாத்தியமாயிருத்தலேயாம்.



(188.) நபுசு காமிலாவாவதியாது?

சகல மகாம்களிலும் ஹால்களிலும் அமல்களிலும் பூரணமாயிருத்தலே நபுசு காமிலாவாம்.

(189.) பெருமை பொறுமை யாதியவைகளெந்நபுசின்குணம்?

பெருமையும் பொறுமையும் இவைகளுக் கொப்பாகியவைகளும் நபுசு அம்மாறுவின் குணமாம்.

(190.) மேலே சொல்லிய ஏழுநபுசுக்களில் எந்த நபுசின் குணங்கொண்டு நடக்கவேண்டும்?

நபுசு முதும இன்னுவின் குணத்தையே கைக்கொண்டு நடக்கவேண்டும்.

---

## அல்பஸ்லுல்ஸாபிஉ பீபாபில் மஃரிபதி.

## ௭-ம் பிரிவு.

(191.) மகாம்களெத்தனை?

நாசூத்து, மலகூத்து, ஜபறூத்து, லாகூத்து, ஹாஹூத்து, பாஹூத்து, ஜம்ஹூத்து; எனும் ஏழுமே மகாம்களாம்.

(192.) திக்றுகள் எத்தனைவகைப்படும்?

லாயிலாக இல்லல்லா, இல்லல்லா, அல்லா, ஹூ, ஹூஹக்கு, ஹூ அல்லா, ஹூ ஹூ என ஏழுவகைப்படுமென்றும் சிலாற் சொல்லப்பட்டன.

(193.) மகாம் நாசூத்தில் யாது செய்தலால் சேரலாம்?

நபுசு அம்மாறுவின் கெடுதிகளை விலக்கி ஷரீஅத்தின்படி நடந்து (லாயிலாக இல்லல்லா) எனும் திக்றை ஜஃறுகச் செய்தலால் சேரலாம்.

(194.) மகாம் மலகூத்தில் சேர்ப்பதெது?

1. நபுசு லௌவாமாவில் வரும் தீமைகளை அதின் மாற்றத்தினால் விலக்கி தரீக்கத்தை எடுத்து நடந்து (லாயிலாக இல்லல்லா) எனும் திக்றைச் செய்தல் மகாம் நாசூத்திற் சேர்க்குமாம்.
2. (லாயிலாக) என்பதை மறைத்து (இல்லல்லா) எனும் திக்றைச் செய்யவேண்டுமென்பாருமுளர்.

(195.) மூன்றும் மகாமில் சேர்க்கும் திக்றியாது?

லாயிலாக இல்லல்லா எனும் திக்றும் அதை தனக்கு மாத்திரம் கேள்க்கத்தக்கதாய் சிற்றுகச் செய்தல்வேண்டும், அவ்வாறு திக்று ச்செய்பவர்கள் முளித்திருப்பதையும், தனித்திருப்பதையும், பசித் திருப்பதையும், சுன்னத்தான இபாதத்துக்களையும் கைக்கொண் டவர்களா யிருத்தல்வேண்டும். பசித்திருப்பதென்பது நோன் பாயிருக்குதல் இதில் அல்லா என்றுமாத்திரம் திக்றுச் செய்ய வேண்டுமென்பாருமுளர்.

(196.) மகாம் லாகூத்தில் யாதுசெய்தலால் சேரலாம்?

தன்னைத் தாழ்மையாய்க் காண்பதுடன் லாயிலாக இல்லல்லா எனும் திக்றைத் தன் மனதுக்குள் நடத்துதலால் சேரலாம். இதி ல் ஹூ எனும் திக்றைச் செய்யவேண்டு மென்பாருமுளர்.

(197.) மகாம் ஹாஹூத்தில் யாது செய்தல்வேண்டும்?

ஹூஹக்கு எனும் திக்றுச் செய்தல்வேண்டுமாம்.

(198.) மகாம் பாஹூத்தில் செய்யவேண்டிய திக்றியாது?

ஹூ அல்லா என்பதாம்.

(199.) மகாம் ஜம்ஹூத்தில் யாதுசெய்தல்வேண்டும்?

ஹூ ஹூ எனும் திக்றுச் செய்தல்வேண்டும்.

(200.) ஜஃறு என்பதின் அருத்தமியாது?

பராசியம் என்பதே அதின் அருத்தமாம்.

முதலாம் அதிகாரம்

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# இரண்டாம் அதிகாரம்.

## கிதாபுஸ்ஸலாத்தி.

அல்பாபுல் அவ்வலுமுகத்தி மதுன்பீபயானிஸ்ஸலாத்தி.

(முதலாம்பாபு தொழுகையைப்பற்றியது.)

அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில்முகத்தி

மதிஸ்ஸலாத்தி.

க-ம் பிரிவு.

(1.) இஸ்லாம் மார்க்கத்தின் இரண்டாம் எடுப்பாவதியாது?

தொழுகையே இஸ்லாம் மார்க்கத்தின் இரண்டாம் எடுப்பாம்.

(2.) தொழுகையாவதியாது?

தகுபீறைக்கொண்டு துவக்கி தஸ்லீமைக்கொண்டு முடிக்கப்படும் சில சொந்தமாக்கப்பட்ட சொல்லுகளும் செயல்களுமே நெறியில் தொழுகையாம்.

(3.) தகுபீறைக்கொண்டு துவக்குதலாவதென்ன?

தொழுகைக்கு நிய்யத்து வைக்கவேண்டியவித நிய்யத்துடன் அல்லாகு அகுபறென்று வாயினால் மொழிந்து தொழுகையிற் புகுந்து கொள்ளுதலாம்.

(4.) தஸ்லீமாவதியாது?

தொழுகிறவன் அத்தொழுகையின் இரண்டாம் அத்தஹிய்யாத்தி ருப்பிலிருந் தோதவேண்டியவைகளையோதித் தொழுகையைவிட் டுப் புறப்படுகிற நிய்யத்துடன் அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்ம த்துல்லாகி என்று தொழுகையைவிட்டுப் புறப்படுதலாம்.

(5.) சில சொந்தமாக்கப்பட்ட சொல்லுகளெவை?

சில சொந்தமாக்கப்பட்ட சொல்லுக ளென்பது தொழுகைக்குச் சொந்தமாக்கப்பட்ட சில சொல்லுக ளென்பதாம் அது பாத்தி ஹா அத்தஹிய்யாத்து முதலிய ஓதல்களாம்.

(6.) சில சொந்தமாக்கப்பட்ட செயல்களெவை?

சுஜூது, றுகூஉ, அத்தஹிய்யாத்திருப்பு முதலிய செயல்களாம்.

(7.) பிரதிதினமும் ஒவ்வொருவர்பேரிலும் பறுலுஐன் ஆக்கப்பட்ட தொழுகைகளெவை?

சுபுஹு, லுஹறு, அசறு, மஃரிபு, இஷா எனும் ஐந்துதொழுகைகளுமே ஆண் பெண்ணாகிய ஒவ்வொருவரும் பிரதிதினமும் தொழவேண்டிய பறுலுஐன் ஆக்கப்பட்ட தொழுகைகளாம்.

(8.) பறுலுஐன் ஆகிய ஐந்து தொழுகைகளையும் பறுலாக்கப்பட்டதல்ல என்று சொல்லலாமா?

பறுலுஐன் ஆக்கப்பட்ட ஐந்து தொழுகைகளையும் பறுலல்ல என்று சொல்லலாகாது. அப்படிச்சொன்னவன் காபிறுவான்.

(9.) தொழுகை எப்போது பறுலாக்கப்பட்டது?

நபிகணாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிஃறாஜுக்குப்போன இரவில் பறுலாக்கப்பட்டது.

(10.) நபிகணாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் (நுபுவ்வத்து) நபிப்பட்டம்பெற்ற எவ்வளவுகாலத்தின்பின் தொழுகை பறுலாக்கப்பட்டது?

நபிகணாயகமவர்களுக்கு (நுபுவ்வத்து) நபிப்பட்டம் வந்து பத்து வருஷமும் மூன்று மாசமும் சென்றபின் தொழுகை பறுலாக்கப்பட்டது. அது றஜபு மாசம் 27-ம் இரவிலேயாம். அவ்விரவிற்றான் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் மிஃறாஜெனும் எற்றமேறினார்கள்.

---

## அல்பஸ்லுல் தானியிபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

## ௨-ம் பிரிவு.

(11.) சுபுஹுத்தொழுகை எத்தனை றகஅத்துக்களையுடையது?

சுபுஹுத்தொழுகை இரண்டு றகஅத்துக்களையுடையதாம்.

(12.) சுபுஹுத் தொழுகையை இரண்டு றகஅத்தாக்கிய (ஹிக்மத்து) யாது?

மனிதருக்கு அல்லாகுத்தஆலா கொடுத்த ஐயறிவில் முகர்ந்தறிதலாம் வாசம் நாற்றமெனும் இரண்டையும் பெற்றுக்கொள்ளுதற்காக (ஷுக்று) செய்வதே அதின் ஹிக்மத்தாம்.



(13.) லுஹறுத் தொழுகை எத்தனை றகஅத்துக்களை உடையது?

லுஹறுத் தொழுகை நான்கு றகஅத்துக்களை உடையதாம்.

(14.) லுஹறுத் தொழுகையை நான்கு றகஅத்தாக்கிய ஹிக்மத்தியாது?

ஐயறிவில் சுவையினால் இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பாகிய நான்கையும் பெற்றுக்கொள்ளுதற்காக ஷுக்று செய்வதே அதின் ஹிக்மத்தாம்.

(15.) அசறுத்தொழுகை எத்தனை றகஅத்துக்களையுடையது?

அசறுத்தொழுகை நான்கு றகஅத்துக்களையுடையதாம்.

(16.) அசறுத்தொழுகையை நான்கு றகஅத்தாக்கிய ஹிக்மத்தியாது?

ஐயறிவில் மூன்றாம் அறிவாகிய ஊறினால் சூடு குளிர் மெது திண்ணமெனும் நான்கையும் பெற்றுக்கொள்ளுதற்காக ஷுக்று செய்வதே அதின் ஹிக்மத்தாம்.

(17.) மஃரிபுத் தொழுகை எத்தனை றகஅத்துக்களை உடையது?

மஃரிபுத் தொழுகை மூன்று றகஅத்துக்களையுடையதாம்.

(18.) மஃரிபுத் தொழுகையை மூன்று றகஅத்தாக்கிய ஹிக்மத்தியாது?

ஐயறிவில் நான்காம் அறிவாகிய பார்வையினால் முன் வலது இடது ஆகிய மூன்றுதிசையையும் பார்ப்பதற்காக ஷுக்றுசெய்வதே அதின் ஹிக்மத்தாம்.

(19.) இஷாத்தொழுகை எத்தனை றகஅத்துக்களையுடையது?

இஷாத் தொழுகை நான்கு றகஅத்துக்களையுடையதாம்.

(20.) இஷாத் தொழுகையை நான்கு றகஅத்துக்களாக்கிய ஹிக்மத்தியாது?

ஐயறிவில் ஐந்தாம் அறிவாகிய ஓசையினால் முன் பின் வலது இடது ஆகிய நான்குதிசையிலுள்ள ஓசையைக் கேட்பதற்காக ஷுக்றுசெய்வதே அதின் ஹிக்மத்தாம்.

---

## அல்ப்பஸ்லுல்தாலிது பீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

### ௩-ம் பிரிவு.

(21.) சுபுஹூத் தொழுகையை முதன் முதல் தொழுதவரியார்?

நமதாதி பிதாவாகிய அபுல் பஷறு ஆதம் அலைகிஸ்ஸலா மவர்கள் முதன் முதல் சுபுஹூத்தொழுகை தொழுதார்கள்.

(22.) ளுஹறுத் தொழுகையைத் தொழுதவரியார்?

தாவூது அலைகிஸ்ஸலா மவர்கள் முதன் முதல் ளுஹறுத்தொழுகை தொழுதார்களாம்.

(23.) அசறுத் தொழுகையைத் தொழுதவரியார்?

சக்ராதிபதியாகிய சுலைமான் அலைகிஸ்ஸலாம் அவர்கள் முதன் முதல் அசறுத் தொழுகை தொழுதார்களாம்.

(24.) மஃரிபுத் தொழுகையைத் தொழுதவரியார்?

ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் முதன் முதல் மஃரிபுத் தொழுகை தொழுதார்களாம்.

(25.) இஷாத் தொழுகையை முதன் முதல் தொழுதவரியார்?

மூசா அலைகிஸ்ஸலா மவர்கள் முதன் முதல் இஷாத்தொழுகை தொழுதார்களாம்.

(26.) (சலவாத்துல் கம்ஸி) எனும் ஐந்து வகுத்துத் தொழுகைக்கும் றகஅத்துக்க ளெத்தனை?

ஐந்து வகுத்துத் தொழுகைக்குங் கூடிய றகஅத்துக்கள் பதினேழாம்.

(27.) ஐந்து வகுத்துத் தொழுகைகளையும் பதினேழு றகஅத்துக்களாக்கியதற்கு யாதும் சபபுண்டோ?

ஆம் இரவு பகலாகிய ஒருநாளில் 17-சாஅத்து நேரந்தான் முளிப்பிற் செல்கின்றன. ஆகையால் பதினேழு றகஅத்துக்க ளாக்கப்பட்டது.

(28.) பகலில் எத்தனை சாஅத்துக்கள் முழிப்பிற் செல்கின்றன?

பெரும்பாலும் பகலில் பன்னிரண்டு சாஅத்துக்கள் முளிப்பிற் செல்கின்றன.



(29.) இரவில் எத்தனை சாஅத்துக்கள் முளிப்பிற் செல்கின்றன?

பெரும்பாலும் இரவில் மஃரிபு தொடுத்து மூன்று சாஅத்தும் பஜ்றுக்குப்பின் இரண்டு சாஅத்துமாகிய ஐந்து சாஅத்துக்களுமே இரவில் முளிப்பிறற் செல்கின்றனவாம்,

(30.) சாஅத்தாவதியாது?

சாஅத்தென்பது அறுபதுமினிட்கொண்ட வோர்மணி நேரமாம்.

---

## அல்பஸ்லுல்றாபிஉ பீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

### ௪-ம் பிரிவு.

(31.) தொழுகை எல்லா மனிதர்கள்பேரிலும் வாஜிபானதா?

தொழுகை வாஜிபாகிறதெல்லாம் தாகிறாகிய முகல்லபாகிய முஸ்லீங்கள் பேரிலேதான்.

(32.) தாகிறாவதியாது?

ஹைறைவிட்டும் நிபாசைவிட்டும் துப்பரவாயிருத்தலே தாகிறாம்.

(33.) முகல்லபாவதியாது?

பராயம், புத்தி, நினைவு ஆகியவைகளுள்ள ஆடவர்களும் ஸ்திரீகளும் முகல்லபுதான்.

(34.) முஸ்லீமாவதியாது?

இஸ்லாம் மார்க்கவிதியினைக் கைக்கொண்டவர்களே முஸ்லீங்களாம்.

(35.) அசலில் காபிறாயிருப்பவன்பேரில் தொழுகை வாஜிபாகுமா?

அசலில் காபிறாயிருப்பவன்பேரில் தொழுகை வாஜிபில்லையாம்.

(36.) சிறுவர்மீது தொழுகை வாஜிபாகுமா?

பராயமற்ற ஆண் பெண் சிறுவர்கள்மீது தொழுகை வாஜிபில்லையாம்.

(37.) நினைவற்றவர்கள்மீது தொழுகை வாஜிபாகுமா?

தன் நினைவற்றவர்கள்மீது தொழுகை வாஜிபில்லையாம் பயித்தியம் பிடித்தவர்களு மப்படியே.

(38.) ஹைறுநிபாசுக்காரர்மீது தொழுகை வாஜிபாகுமா?

ஹைறு நிபாசுக்கார மாதர்கள்மீது தொழுகை வாஜிபில்லையாம். அவர்களோ ஹைறு நிபாசாயிருக்கும்போது தப்பிய தொழுகைகளை கலாச்செய்யவேண்டியதில்லை.

(39.) முறுதத்தானவர்கள்மீது தொழுகை வாஜிபாகுமா?

இஸ்லாம் மார்க்கத்திலிருந்து முறுதத்தானவர்கள்மீதுதொழுகை வாஜிபில்லை.

(40.) முறுதத்தானவன் முறுதத்தாயிருந்தகாலத்தில் வாஜிபில்லாத தொழுகையை இஸ்லாத்தில் மீண்டபின் கலாச்செய்யவேண்டுமா?

ஆம் முறுதத்து எவ்வளவுகாலம் முறுதத்தாயிருந்தானோ அவ்வளவுகாலத்துத் தொழுகைகளையும் (முத்தஇதுமுஸ்லிறு) அவ்விஸ்தியிருந்த காலத்துத் தொழுகைகளையும் கலாச்செய்தல் வாஜிபாம்.

## அல்பஸ்லுல் காமிசுபீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

## ௫-ம் பிரிவு.

(41.) கலாத் தொழுகையாவதியாது?

வகுத்துக் குறிக்கப்பட்ட தொழுகைகளி லொவ்வொன்றையுங் குறித்தநேரத்திற் தொழாமல் வேறேநேரங்களில் அத்தொழுகையைத்தொழுவதே கலாத்தொழுகையாம்.

(42.) கலாத் தொழுகையிற் பிரிவுகளுண்டோ?

உதுறுடன் கலாவானதொழுகை உதுறில்லாமல் கலாவானதொழுகையென கலாத்தொழுகை யிருபிரிவினையுடையதாம்.

(43.) உதுறுடன் கலாவான தொழுகையாது?

நித்திரை மறதி முதலியவைகளினால் கலாவான தொழுகையாம்.

(44.) உதுறில்லாமல் கலாவானதொழுகை யாது?

வகுத்தையறிந்து அவ்வகுத்துத் தப்புமட்டுந் தொழாமல் பிற்படுத்திய தொழுகையாம்.

(45.) உதுறுடன் தப்பியதொழுகையை கலாச்செய்ய வேண்டுமா?

1. உதுறுடன் தப்பியதொழுகையை சீக்கிரமாய் கலாச்செய்யவேண்டும்.

2. அப்படியே கலாச்செய்தல் சுன்னத்தாம்.

(46.) உதுறில்லாமல் தப்பியதொழுகையை கலாச்செய்யவேண்டுமா?

உதுறில்லாமல் தப்பிய தொழுகையையும் சீக்கிரமாய் கலாச்செய்யவேண்டும்.

அப்படியே கலாச்செய்தல் வாஜிபாம்.



(47.) ஜம்உடைய வகுத்துவரைக்கும் தொழுகையைப் பிற்படுத்தினால் ஹுகும்யாது?

ஜம்உடைய வகுத்துவரைக்குந் தொழுகையைப் பிற்படுத்தினவனைத்தௌபாச்செய்யத்தேடவேண்டும்.தௌபாச் செய்யாவிட்டால் கழுத்தில் வெட்டிக் கொல்வதே ஹுகுமாம்.

(48.) ஜம்உடைய வகுத்துக்கள் யாவை?

மஃரிபுடைய வகுத்தும் சுபுஹுடைய வகுத்துமே ஜம்உடைய வகுத்துக்களாம்.

(49.) கலாத்தொழுகை உள்ளவர்கள் சுன்னத்துத்தொழுகை தொழலாமா?

கலாத்தொழுகை யுள்ளவர்கள் சுன்னத்துத்தொழுகைதொழுதல் ஹறாம்.

(50.) கலாவான தொழுகைகளை எவ்வாறு தொழவேண்டும்?

கலாத்தொழுகையில் முன்னர் கலாவானதை முன்னும் பின்னர் கலாவானதைப் பின்னுமாய் வகுத்தின்வீதப்படி தொழவேண்டும். தறுத்திபாய்த்தொழுதல் சுன்னத்தாம்.

உதுறில்லாமல் தப்பிய தொழுகையை உதுறுடன் தப்பிய தொழுகையைக் காண முற்படுத்தித்தொழுதல் வாஜிபாம்.

## அல்பஸ்லுல் ஸாதிசுபீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

## ௬-ம் பிரிவு.

(51.) சிறுவர்களைத் தொழுகையைக் கொண்டேவவேண்டுமா?

(சபிய்யு) ஆண் பெண் சிறுவர்கள் மும்மயிசாயிருந்தால் தொழுகையைக் கொண்டேவுதல் வாஜிபாம்.

(52.) மும்மயிசு என்பதின் அருத்தம்யாது?

தானேபோஷிக்கவும் பானம்பண்ணவும் மலஞ்சலத்துக்கிருந்து துப்பரவுசெய்யவும் தக்க தன்மையையுடைய சிறுவர்களே மும்மயிசாம்.

(53.) மும்மயிசைத் தொழுகையைக்கொண்டேவுதல் யாருக்கு வாஜிபாகும்?

மும்மயிசைத் தொழுகையைக்கொண்டேவுதல் பெற்றாருக்கு வாஜிபாம்.

(54.) தொழுகையைக்கொண் டேவப்படும் பிள்ளைகள் எத்தனை பராயமுடையவர்களா யிருத்தல்வேண்டும்?

ஏழுவயது நிரம்பியவர்களா யிருத்தல்வேண்டும்.

(55.) தொழுகையைவிட்ட சிறுவர்களை அடிக்கலாமா?

பத்துவயது நிரம்பியபின் தொழுகையை விட்டவர்களுக்கு காயமில்லாத அடியா யடிக்கலாம். அப்படி யடிப்பதுவாஜிபாம்.

(56.) கலியாண முடிக்கப்பட்ட சிறுமியைத் தொழுகையைக் கொண்டேவுதல் யாருக்கு வாஜிபாம்?

(சவுஜதுன்சகீறு)' எனும் விவாகஞ்செய்யப்பட்ட சிறுமியைத்தொழுகையைக் கொண்டேவுவதும் அடிப்பதும் பெற்றாருக்கு வாஜிபாம். பெற்றாரையிழந்த சிறுமியாயிருந்தால் நாயகனுக்கு வாஜிபாகும்.

(57) பிள்ளைகளுக்கு முதன்முதல் படித்துக்கொடுக்கவேண்டியவைகளெவை?

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மக்கமாநகரத்திற்பிறந்து நபியாக அனுப்பப்பட்டு மதீனமாநகரத்தில் வுபாத்தாகி அடக்கப்பட்டார்களெனப் படித்துக்கொடுத்தல் பெற்றாருக்கு வாஜிபாம்.

(58.) பெற்றாரை இழந்த பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுப்பது யாருக்கு வாஜிபாகும்?

பெற்றாரை யிழந்த சிறுவர்களுக்குப் படித்துக்கொடுத்தல் வலிகாரன் அல்லது வசிய்யத்தை ஏர்த்துக்கொண்டவன்பேரில் வாஜிபாம்.

(59.) பெற்றார் வலிகாரன் வசிய்யத்தை ஏர்த்துக்கொண்டவன் ஆகியவர்களில்லாத சிறுவர்களைப் படிப்பித்தல் யாருக்கு வாஜிபாகும்?

பெற்றார் வலிகாரன் வசிய்யத்தை ஏர்த்துக்கொண்டவன் ஆகியவர்களில்லாதபிள்ளைகளைப் படிப்பித்தல் காளியின்பேரில் வாஜிபாம்.

(60.) சிறு அடிமைகளைப் படிப்பித்தல் யாருக்கு வாஜிபாகும்?

சிறு அடிமைகளைப் படிப்பிப்பதும் தொழும்படி ஏவுவதும அடிப்பதும் உடையக்காரர்பேரில் வாஜிபாம்.

---



## அல்பஸ்லுல் சாபிஉ பீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி.

## ௭-ம் பிரிவு.

(61.) தொழுகையிற்றொடுக்க முன்வேண்டிய ஷறுத்துக்களெவை?

தொழுகையிற்றொடுக்க முன்வேண்டிய ஷறுத்துக்கள் பத்தாம் அவைகளோர் தொழுது தீருமளவும் உண்டாயிருத்தல்வேண்டும்.

(62.) தொழுகையின் முதலாம் இரண்டாம் ஷறுத்துக்களெவை?

தொழுகையின் முதலாம் ஷறுத்து தொழுகிறவன் இஸ்லாமாயிருத்தல் இரண்டாம் ஷறுத்து தம்யீசுடையவனா யிருத்தலாம்.

(63.) தொழுகையின் மூன்றாம் ஷறுத்தென்ன?

தொழுகிறவன் சிறுதுடக்குப் பெருந்துடக்குகளில்லாதவனா யிருத்தலாம்.

(64.) தொழுகையின் நான்காம் ஷறுத்தாவதியாது?

தொழுகிறவனின் உடம்பும் உடையும் தொழும் இடமும் பொறுக்கப்படாத நஜீசில்லாததா யிருத்தலாம்.

(65.) தொழுகையின் ஐந்தாம் ஷறுத்தியாது?

தொழுகிறவனின் அவுறத்து மறைந்ததா யிருப்பதாம்.

(66.) தொழுகையின் ஆறாம் ஷறுத்தாவதென்ன?

தொழுகிறவன் கிபுலாவின் திசையளவில் முகம்நோக்கிக் கொள்ளுதலாம்.

(67.) தொழுகையின் ஏழாம் ஷறுத்தியாது?

தொழுகையைத் தன்மீது பறுலு என்றறிவதாம்.

(68.) தொழுகையின் எட்டாம் ஷறுத்தென்ன?

தொழுகையின் வகுத்தை அறிவதாம்.

(69.) தொழுகையின் ஒன்பதாம் ஷறுத்தியாது?

1. தொழுகையின் (கைபிய்யத்தை) அறிவதாம்.
2. (கைபிய்யத்) மாதிரி அல்லது விதமாம்.

(70.) தொழுகையின் பத்தாம் ஷறுத்தியாது?

தொழுகையின் பத்தாம் ஷறுத்து பறுலை பறுலென்றும் சுன்னத்தை சுன்னத்தென்றும் பிரித்தறிவதாம்.

## அல்பஸ்லுல் தாமினு பீபாபில் முகத்திமதிஸ்ஸலாத்தி

### ௮-ம் பிரிவு.

(71.) தொழுகையின் பத்து ஷறுத்துக்களி லொன்றையாயினும் விடலாமா?

மேலே சொல்லப்பட்ட பத்து ஷறுத்துக்களில் ஒன்றையாவது விட்டால் தொழுகைகூடாது.

(72.) ஒருவன் தொழும்போது தன்னை முறுதத்தாக்கிவிக்கும் நினைவை வருத்தலாமா?

தொழுபவன் தன்னை முறுத்தாக்கிவிக்கும் நினைவை வருத்தினல் தொழுகை கூடாது.

(73.) தொழும்போது ஹைலுகண்ட ஸ்திரியின் தொழுகை கூடுமா?

தொழும்போதில் ஹைலுகண்ட பெண்களின் தொழுகைகூடாது

(74.) (நஜீசு) அசுசி உடலிற் கிடக்கும்போதில் தொழலாமா?

தொழுபவனின் மேனி, உடை, தொழும் ஸ்தானமாகியவைகளில் பொறுக்கப்படாத நஜீசுகிடந்தால் தொழுகை கூடாதாம்.

75.) தொழும்போதில் அவுறத்து வெளியானல் தொழுகை கூடுமா?

உடை உடம்பைவிட்டும் நீங்கி அவுறத்து வெளியானே உடனே மறைக்காவிட்டால் தொழுகை கூடாது.

(76.) வகுத்துக்கு முன்தொழும் தொழுகை கூடுமா?

வகுத்துக்குறிக்கப்பட்ட தொழுகைகளை யதற்குக் குறித்த வகுத்துக்குமுன் தொழுதால் அத்தொழுகை பாத்திலாம்.

(77.) கிபுலாவின் திசைபிசகிய தொழுகை எவ்வாறும்?

தொழுபவனின் நெஞ்சு கிபுலாவின் திசையைவிட்டுச் சறுகினல் அத்தொழுகை பாத்திலாம்.

(78.) தொழுகையின் செயல்களையெல்லாம் பறுலென நினைந்தவனின் தொழுகை எவ்வாறும்?

ஆமிய்யாகிய ஒருவன் தொழுகையின் செயல்களையெல்லாம் பறுலென நினைந்தாலும் தொழுகை சிஹத்தாகுமாம்.



(79.) தொழுகையின் செயல்களையெல்லாம் சுன்னத்தென நினைந்தவனின் தொழுகை எவ்வாறும்?

தொழுகையின் செயல்களையெல்லாம் சுன்னத்தென நினைந்தவனின் தொழுகை சிஹத்தாகாது.

(80.) தொழுகையின் பறுலுக்களை சுன்னத்தெனக் கருதியவனின் தொழுகை எவ்வாறும்?

தொழுகையின் பறுலை சுன்னத்தெனக் கருதியவனின் தொழுகை சிஹத்தாகாது.

---

## அல்பாபுல்தானீ பீபயானித்தகாருத்தி.

(இரண்டாம்பாபு தகாறத்தைப் பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபித் தகாருத்தி.

### ௧-ம் பிரிவு.

(81.) தகாறத்தாவ தியாது?

ஹதது, நஜீசு, ஆகியவைக ளில்லாமல் துப்பரவாயிருத்தலே தகாறத்தாம்.

(82.) என்னத்தினற் (தகாறத்து) துப்பரவு செய்தல்வேண்டும்?

ஜலத்தினல் (தகாறத்து) துப்பரவுசெய்தல் வேண்டும்.

(83.) ஜலம் எத்தனை வகைப்படும்?

மாஉ முதலகு மாஉ முசையது மாஉ மகுறூகு என மூன்றுவகைப்படும்.

(84.) மாஉ முதலகாவ தியாது?

1. யாதோர் சேர்க்கையின்றி நீர்எனும் நாமம்பெற்ற ஜலம் மாஉமுதலகெனப்படும்.
2. அது தகூறென்றும் பெயர்பெறுமாம்.

(85.) மாஉ முசையதாவ தியாது?

1. நீருக்குருத்தில்லாத யாதேனு மொன்றைக்கொண்டு கைதிடப்பட்ட ஜலமாம் அது ஆணம் இளநீர் பன்னீர் முதலியவைகளாம்.
2. அதை தாகிறென்றும் சொல்லுவார்கள்.

(86.) மாஉ மகுறாக்ாவ் தியாது?

1. வெள்ளி பொன் அல்லாத அடிப்புக் கரகத்திலிருந்து அல்லது வார்ப்புக்கரகத்திலிருந்து வெய்யிலில்காய்ந்த நீர், அதிகச்சூடான நீர், அதிகங் குளிர்ந்தநீர், ஊற்றின்றி நெடுநாள் கட்டுப்பட்ட நீர், அசுசிகிடக்கும் நீர், ஆதியவைகளாம்.

2. பெரும்பாலார் வுலுச்செய்த நீர் காபிர்களின் கோயிலின் குளத்து நீர் முதலியவைகளினால் வுலுச்செய்வதும் மகுறாகாம்.

(87.) மாஉமுதுலகெனும் நாமம்பெற்ற நீர்யாது?

கடல், ஆறு, ஏரி, குளம், கிணறு, வாய்க்கால், கேணியாகியவைகளின் ஜலமும் மழை பனி முதலிய நீரும் மாஉ முதுலகாம்

(88.) மாஉமுதுலகினால் யாதுசெய்யலாம்?

வுலு, ஜனாபத்து முழுக்கு, ஹைலு முழுக்கு, நிபாச முழுக்கு, நஜீசைநீக்குதல் முதலியவைகள் செய்யலாம்.

(89.) தகூறென்பதின் அருத்தமென்ன?

தான் துப்பரவாயிருப்பதுடன் வேறெதையுந் துப்பரவாக்கவுந் தக்கதென்பதாம்.

(90.) தாகிறென்பதின் அருத்தமென்ன?

தான் துப்பரவேதவிர வேறெதையுந் துப்பரவாக்கக்கூடாத தென்பதாம்.

---

## அல்பஸ்லுல் தானிபீபாபித் தகாறுத்தி.

### உ-ம் பிரிவு.

(91.) மாஉமுதுலகு எத்தனைவகைப்படும்?

(மாஉமுதுலகு)எனும் கைதில்லாத ஜலம் மாஉன் முஸ்தஃமலுன் மாஉன் கைறு முஸ்தஃமலுன் என இருவகைப்படும்.

(92.) மாஉன் முஸ்தஃமலுன் என்பதியாது?

பறுலாகிய கழுவுதல்களில் உபயோகம் செய்யப்பட்ட ஜலமாம்.

(93.) மாஉன்கைறு முஸ்தஃமலுன் எவ்வாறும்?

பறுலாகிய கழுவுதல்களிலுபயோகிக்கப்படாத ஜலமாம்.



(94.) மாஉன் முஸ்தஃமலுன் எனும் ஜலத்தினால் ஹதஸைநீக்கலாமா?

ஹததுல் அசுகறு ஹதுல் அக்பறு எனும் இருவகைத்துடக்குகளும் மாஉன் முஸ்தஃமலுன் எனும் ஜலத்தினால் நீங்காது.

(95.) மாஉன் முஸ்தஃமலுன் எனும் ஜலத்தினால் நஜீசைநீக்கலாமா?

மாஉன் முஸ்தஃமலுன் எனும் ஜலத்தினால் (இசாவத்துன் நஜீசு) எனும் நஜீசை நீக்குதலுண்டாகாது.

(96.) குல்லத்தைன் 500-ஐந்நூறு இருத்தல் நிறை அல்லது அதின் அளவுகொண்ட முஸ்தஃமலாகிய ஜலத்தினால் துடக்குகளும் நஜீசும் நீங்குமா?

மாஉன் முஸ்தஃமலுன் எனும் ஜலம் ஒருவாறு 500 (பஃதாத்து) இருத்தல் நிறைகொண்டதா யிருந்தால் சிறுதுடக்குப் பெருந்துடக்கு, நஜீசு ஆகியவைகள் அந்நீரினால் நீங்குமாம்.

(97.) விருட்சங்களின் வேர்க்களிலிருந் தூறும் ஜலத்தினாற் தகாறத்துச் செய்யலாமா?

பெரும்பாலும் வேரினால் நீரூறுகின்ற அத்திமரம் முதலிய எந்த மரத்தின் வேரிலூறும் ஜலமானாலும் அதைக்கொண்டு தகாறத்துண்டாகாது.

(98.) வாழைமடலிலிருந் தூறும் நீரினால் தகாறத்துண்டாகுமா?

வாழைமடலிலிருந் தூறும் ஜலத்தினால் தகாறத் துண்டாகாது.

(99.) விருட்சங்களின் வெயர்வையால் தகாறத்துண்டாகுமா?

விருட்சங்களின் வெயர்வையினால் தகாறத்துண்டாகாது.

(100.) புட்பங்களின் மகரந்தத்தினால் தகாறத்துண்டாகுமா?

புட்பங்களின் பாணியினால் தகாறத்துண்டாகாது.

---

## அல்பஸ்லுல்தாலிது பீபாபித் தகாறுத்தி.

### ௩-ம் பிரிவு.

(101.) மாஉன் முதகையறுன் என்பதின் அருத்தம்யாது?

மாஉன் முதகையறுன் என்பது பேதமாகிய நீர் எனும் அருத்தங் கொண்டதாம்.

(102.) மாஉன், முதகையறுன் எனும் ஜலம் எத்தனைவகைப்படும்?

முதகையறுன்பிகலீதின் முதகையறுன் பிமுஜாவிறின் என இரு வகைப்படும்.

(103.) முதகையறுன் பிகலீதின் என்பதியாது?

நீரோடுகலந்தாற் பிரிக்கக்கூடாததும் நீருங்கலந்து பேதமான ஜலமாம்.

(104.) முதகையறுன் பிமுஜாவிறின் என்பதியாது?

நீரோடுகலந்தாற் பிரிக்கக்கூடியதும் நீருங்கலந்து பேதமான ஜலம் என்பதாம்.

(105.) முதகையறுன் பிகலீதின் எனும் ஜலம் எவ்வெப்பிரிவினையுடையது?

முதகையறுன் பிகலீதின் தாகிறின் முதகையறுன் பிகலீதின் நஜ்சின் என இருபிரிவுக்களை உடையதாம்.

(106.) முதகையறுன் பிகலீதின் தாகிறின் என்பதியாது?

குங்குமம் அல்லது அதற்கொப்பான் தாகிருகியவைகள் கலந்ததினூற் பேதமாகிய ஜலமாம்.

(107.) முதகையறுன் பிகலீதின் நஜ்சுன் என்பதியாது?

நஜீசு கலந்ததினூற் பேதமான ஜலம் என்பதாம்.

(108.) தாகிறு) கலந்து பேதமாகிய நீரினூல் தகாறத்துண்டாகுமா?

துப்பரவான வஸ்துக்கலந்து மிகுந்த பேதமுற்ற நீரினூல் தகாறத்துண்டாகாது அற்ப பேதமாயிருந்தால் தகாறத்துண்டாகும்.

(109.) நஜீஸ் கலந்து பேதமான நீரினூல் தகாறத்துண்டாகுமா?

நஜீசாகிய வஸ்துக்கலந்த பேதம் அற்பமாயிருந்தாலும் தகாறத்துண்டாகாது.

(110.) எவ்வெவ் விதங்களிற் பேதமென்றறியலாம்?

நிறம், சுவை, வாசம், ஆகியவைகள் பேதலித்தாலதுவே பேதமாம்.



## அல்பஸ்லுல்ருபிஉ பீபாபித் தகாருத்து.

## ச - ம் பிரிவு.

(111.) ஜலம் மிகுந்தநீர் குறைந்தநீரெனப் பிரிக்கப்பட்டதா?

ஆம் மாஉன் கதீறுன் மாஉன் கலீலுன் என ஜலம் இரு பிரிவாக்கப்பட்டது.

(112.) மாஉன் கதீறுன் என்பதென்ன?

குல்லத்தைன் அல்லது குல்லத்தைனுக் கதிகமான நீர் மிகுந்த நீரெனப்படும்.

(113.) மாஉன் கலீலுன்யாது?

குல்லத்தைனுக்குக் குறைந்தநீரே மாஉன் கலீலுனும்.

(114.) நிறையால் எவ்வளவு கொண்டது குல்லத்தைனும்?

பக்தாது நிறைப்படி ஐந்நூறு இருத்தல் ஜலங் கொண்டதே குல்லத்தைனும்.

(115.) குல்லத்தைன் என்பதின் அருத்தம்யாது?

இரண்டு குல்லத்து என்பதாம்.

(116.) ஒவ்வோர் குல்லத்தும் எவ்வளவு நிறைகொண்டது?

பக்தாது நிறைப்படி 250-இருநூற்றைம்பது இருத்தல் நிறைகொண்டதாம்.

(117.) கனஅளவால் எவ்வளவுகொண்டது குல்லத்தைனும்?

ஒன்றேகால் முளநீளம் ஒன்றேகால்முள அகலம் ஒன்றேகால் முள ஆளமுள்ள குழி அல்லது சாடி முதலியவைகள் நிரம்பிய ஜலமாம்.

இவ்வித நீளம் அகலம் கனங்கொண்ட குழி அல்லது சாடி நீர் ஐந்நூறு இருத்தல் நிறைகொண்டதாம்.

(118.) கிணறு முதலிய வட்டவடிவானதில் எவ்வாறு குல்லத்தைன் என்றறியலாம்?

விருத்தம் மூன்றுடு ஒன்றின்கீழ் ஏழு முளமும் அகலம் ஒருமுளமும் இரண்டரை முளத்தாள்வுமுடையது 500-ஐந்நூறு இருத்தல் நீர்கொள்ளுமெனும் கணிதவிதம் அறியலாம்.

(119.) குல்லத்தைனின் நிறையில் சிலது குறைவுறலாமா?

குல்லத்தைனின் கணிதமாகிய 500-ஐந்நூறு இருத்தலில் இரண்டொரு இருத்தல் குறைந்தாலும் குல்லத்தைனென்றே ஹுகும் செய்வார்கள்.

(120.) விருத்தமென்பதிவையாது?

விருத்தம், வட்ட வடிவு, சுற்றளவு, எனும் தமிழ் சொற்களும் முததவ்வறு, எனும் அறபுச் சொல்லும் ஒரே அருத்தமுடையவைகளாம்.

---

## அல்பாபுல்தாலிது பீபயானில் வுலூஇ.

### (மூன்றும்பாபு வுலுவைப்பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில் வுலூஇ

### க - ம் பிரிவு.

(121.) வுலூ என்பதியாது?

1. வுலுவுடைய நிய்யத்துடன் அதற்குச் சொந்தமாக்கப்பட்ட உறுப்புக்களில் ஜலத்தை உபயோகம் செய்தலே வுலுவாம்.
2. உலுச்செய்யும் (கைபிய்யத்து) விதத்தை ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் மக்கா ஷரீபில் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் படித்துக்கொடுத்தார்கள்.

(122.) வுலுவிற் சொந்தமாக்கப்பட்ட பறுலாகிய உறுப்புக்களெவை?

முகம், கை, கால், தலை, ஆகிய நான்கு உறுப்புக்களுமாம்.

(123.) முகம், கை, கால், தலை, எனும் நான்கு உறுப்புக்களையும் வுலுவிற் பறுலாக்கிய காரணம் யாது?

நமதாதி பிதாவாகிய அபுல் பஷறு ஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் சுவர்க்கத்தில் கோதுமைக் கனியைப் பறித்துத்தின்று சஞ்சலித்தழுதனர். அக்காரியத்துக்காய் இந்த நான்கு உறுப்புக்களும் வுலுவிற் பறுலாயிற்று.

(124.) முகங் கழுவுவதைப் பறுலாக்கிய காரணமென்ன?

ஆதம் அலைகிஸ்ஸலாம் முகத்தால் முன்னோக்கி கோதுமை மரத்தண்டை சென்றனர். அதற்காக முகங்கழுவுதல் பறுலாயிற்று.



(125.) கைகழுவுவதைப் பறுலாக்கிய காரணம்யாது?

ஆதம் அலைகிஸ்ஸலாம் கோதுமைக் கனியைக் கையாற் பறித்தனர். அதற்காகவே கைகழுவுதல் பறுலாயிற்று.

(126.) கால் கழுவுவதைப் பறுலாக்கிய காரணமென்ன?

ஆதம் அலைகிஸ்ஸலாம் காலால் நடந்து கோதுமை மரத்தண்டை சென்றனர். அதற்காகவே கால் கழுவுதல் பறுலாயிற்று.

(127.) தலைக்கு மஸ்குசெய்வதைப் பறுலாக்கிய காரணம்யாது?

ஆதம் அலைகிஸ்ஸலாம் முகத்தால் முன்னோக்கிக் காலால் நடந்து கையால் கோதுமைக் கனியைப் பறித்தபோது அவர்களணிந்திருந்த ஆபரணங்கள் விழுந்தன. அத்துக்கத்தினல் தலைமேல் கைவைத்து அழுதார்கள். அக்காரணம்பற்றியே தலையை மசகு செய்தல் பறுலாயிற்று.

(128.) மசகு என்பதின் அருத்தமியாது?

தடவுதலென்பதாம்.

(129.) முந்திய மூன்று உறுப்புக்களையும் கழுவவும் தலையை மசகு செய்யவும் பறுலாக்கிய காரணம்யாது?

தலைதானே பாவஞ்செய்யவில்லை பாவம் செய்த கையைத் தலைமேல் வைத்ததற்காகத் தலைக்கு மசகு செய்தல் பறுலாயிற்றும்.

(130.) எல்லா உறுப்புக்களுக்கும் பிரதானமாகிய தலையை முந்திய மூன்று உறுப்புக்களுக்கும் பிந்திச்சொல்லலாமா?

தலை எல்லாவுறுப்புக்களுக்கும் பிரதானமானதா யிருந்தும் ஆதம் அலைகிஸ்ஸலாமுடைய செயல்களில் பிந்தினதாயிற்று ஆனதால் முகம், கை, கால், எனும் மூன்றுக்கும் பிந்திச்சொல்லப்பட்டது.

---

## அல்பஸ்லுல்தானி பீபாபில் வுலூஇ.

### உ - ம் பிரிவு.

(131.) வுலுவுடைய அஸ்றாறு என்பதியாது?

வுலுவுடைய இரகசியப் பொருட்களே அதின் அஸ்றாறுகளாம்.

(132.) வுலுவில் கைகழுவுவதின் சிற்றுவதென்ன?

இருகைகளையும் ஹறுமளவில் நீட்டாதிருப்பதும் பிறரிடத்தில் யாதொன்றையுங் கேட்டு நீட்டாதிருப்பதுமாம்.

(133.) வாய்கொப்புளித்தலின் சிற்றுவதியாது?

நாவை; பொய், புறம், கோள், வீண்பேச்சாதியவைகளை விட்டுத் துப்புரவாக்கிக் கொள்வதாம்.

(134.) நாசிக்கு நீர் செலுத்துவதின் சிற்றுயாது?

பெருமை, தன்னையே பெரிதாய்க் காணுதலாதியவைகளை விட்டு நீங்குதலாம்.

(135.) முகங் கழுவுவதின் சிற்றுவ தியாது?

நாட்டமெனும் முகத்தை துன்யாவுடைய உசப்பெனும் இருளாகிய ஊத்தையை விட்டுத் துப்பரவாக்கி கல்பெனும் முகத்தை அல்லாகுத்த ஆலாவல்லாத எல்லாவற்றையும் விட்டுத் திருப்பிக் கொள்ளுதலாம்.

(136.) இரண்டு கையையும் முட்டுக் கையளவில் கழுவுவதின் சிற்றியாது?

தன் மருவுதலாகிய நண்பர் முதல் இரண்டு ஆலத்திலும் உள்ளவைகளைக் கொளுரும் எவைகளையும் விடுவதும் மேலெண்ணத்தைக் குறைப்பதும் கையாற் பிறரை அநியாயஞ் செய்யாதிருப்பதும் கொடை கொடுப்பதும் (நபுசின்) தத்துவம் ஆங்காரம் முதலியவைகளை விட்டு நீங்குவதுமாம்.

(137.) தலையை மசகு செய்யும் சிற்றுவதியாது?

அல்லாகுத்த ஆலாவின் எவலுக்கு வழிப்படுவதும் விசுலில் விடுவதும் நபுசைத் தலைமைத்தனம் அகப்பெருமை முதலியவைகளை விட்டு நீக்குவதுமாம.

(138.) இரண்டு காதுக்கும் மசகு செய்வதின் சிற்றியாது?

காதால் கேட்ட வீண்பேச்சு, கோள், பொய், புறம் முதலியவைகளை விட்டு நீங்குவதும் குறுஆன் ஹதீதாதியவைகளைக் கேள்ப்பதுமேயாம்.

(139.) இரண்டு காலையும் கழுவுவதின் சிற்றியாது?

உசும்புதல், நாட்டம், உற்சாகம் முதலியவைகளை விட்டொழிந்து அல்லாகுத்த ஆலாவின் கலா, கதுறுக்குப் பொருந்திக்கொள்ளுதலாம்.

(140.) கால் கழுவுவதைப்பற்றிய வேறு சிற்றுகளுமுண்டோ?

ஆம் ஆண்மைத் தத்துவத்தை விடுவது மோர்சிற்றும்.

---



# அல்பஸ்லுல் தாலிது பீபாபில் வுளூஇ.

## ந - ம் பிரிவு.

(141.) வுளுவுடைய ஷறுத்துக்களெத்தனை?

மாஉ, முதுலகு, எனும் ஜலமும், உறுப்புக்களில் நீரையோட்டுதலும், உறுப்புக்களில் நீரைச் செல்லவொட்டாதவைகளில்லாதிருத்தலும், உறுப்புக்களில் நீரைப் பேதமாக்கும் வஸ்துக்களில்லாதிருத்தலும்; தாயிமுல் ஹதத்தையுடையவர்களின் வுளுவுக்கு வகுத்து ஹாளிரு யிருத்தலும், வுளுச்செய்பவன் மும்யிசா யிருத்தலும், இஸ்லாமா யிருத்தலுமாகிய எழுமாம்.

(14[illegible].) உறுப்புக்களில் நீரை யோட்டுதலாவதியாது?

முகம், இரண்டுகை, இரண்டுகால்களாகிய உறுப்புக்களில் யாதோரிடையில்லாமல் எவ்விடமும் நனையத் தக்கதாய் நீர் ஓடும்படி கழுவுதலாம்.

(143.) உறுப்புக்களில் நீரைச் செல்லவொட்டாதவைகளெவை?

சுண்ணும்பு, எண்ணெய் ஆதியவைகளாம். இவைகளிருக்குமிடத்தில் அவைகளை நீக்கிவிடவேண்டும்.

(144.) உறுப்புக்களில் நீரைப் பேதமாக்கும் வஸ்துக்களியாவை?

உறுப்புக்களில் பூசப்பட்டிருக்கும் சகுபறான், சந்தல் முதலியவைகளாம். இவைகளையும் நன்றாய் நீக்கிவிடவேண்டும்.

(145.) ஹதது தாயிமானவர்களியார்?

தொங்குநீர், வாய்வு, வெட்டை, பெரும்பாடு, ஆகியவைகளால் வுளுமுறிச்சல் தாயுமாயிருப்பவர்களாம்.

(146.) தாயிமுல் ஹததுக்காரர் வகுத்துவாமுன் வுளுச்செய்யலாமா?

தாயிமுல் ஹதத்தையுடையவர்களின் வுளு (லறூறத்து)க் காக்கச் செய்யப்படும் வுளுவாம் லறூறத்துடைய வுளு வகுத்துக்கு முந்தினல் சிஹத்தாகாது.

(147.) உறுப்புக்களில் நீரைப் பேதமாக்குதலெனும் தகையுறு எவ்வகைப்பட்டது?

தகையுறன், தாகிறன், லாற்றன் எனும் வகையினையுடையதாம்.

(148.) தகையுறன் லாற்றன் என்பதியாது?

நீர் எனும் பெயரைப் பேதக்கடுமையால் நீக்கிவிடும் பேதமே லாற்றாகிய பேதமாம்.

(149.) சகுபறானவதென்ன?

குங்குமம் என்பதாம்.

(150.) சந்தலாவதியாது?

சந்தனம் என்பதாம்.

---

## அல்பஸ்லுல் ருபிஉ பீபாபில் வுலூஇ.

## ௪ - ம் பிரிவு.

(151.) வுலூவுடைய பறுலுக்களெத்தனை ?

நிய்யத்து வைத்தல் அந்த நிய்யத்துடன் முகங் கழுவுதல், இரண்டுகையையும் முழங்கையுள்படக் கழுவுதல், தலையில் மசகு செய்தல், இரண்டு காலையும் பரண்டையுள்படக் கழுவுதல், தறுதீபாய்ச் செய்தல், ஆகிய ஆறுமே வுலூவுடைய பறுலுக்களாம்.

(152.) வுலூவுடைய பறுலுக்கள் எதேதால் ஷறஆக்கப்பட்டது?

முகங்கழுவுதல், கைகழுவுதல், மசகு செய்தல், கால்கழுவுதல், ஆகிய நான்கையும் குறுஆன் ஷரீபைக்கொண்டும் நிய்யத்து, தறுதீபு எனு மிரண்டையும் ஹதீஸைக்கொண்டும் ஷறஆக்கப்பட்டது.

(153.) வுலூவுக்கு எவ்வாறு நிய்யத்து வைத்தல்வேண்டும்?

வுலூச்செய்கிறேன் என்று அல்லது வுலூவுடைய பறுலை இறுக்கிறேனென்று அல்லது சிறுதுடக்கை நீக்கிறேனென்று நிய்யத்து வைத்தல்வேண்டும்.

(154.) சிறுதுடக்கை நீக்கிறேனென்று நிய்யத்து வைப்பதிற் பிரிவுகளுண்டோ?

ஆம் தாயிமுல் ஹதத்துக்காரர் (முஜத்திது) ஆகிய வுலூவுக்காயினுஞ்சரி சிறுதுடக்கை நீக்கிறேனென்று நிய்யத்து வைத்தால் அந்த நிய்யத்து சிஹத்தாகாது.

(155.) முஜத்திதாகியவுலூவென்பதியாது?

வுலூவுடனிருப்பவர்கள் வுலூவை முறிக்குங் காரியங்களால் வுலூ முறியாமலிருக்கத் திரும்பவும் வுலூச்செய்தலே முஜத்திதாகிய வுலூவாம்.



(156.) முகமாவதியாது?

நீளத்தால் பெரும்பாலும் தலையில் உரோமம் முளைத்திருக்கும் ஸ்தானத்துக்கும் நாடிக்குழிக்கு மிடையிலுள்ளதும் அகலத்தால் இரண்டு செவிக்கும் இடையிலுள்ளதுமே முகமாம் இவ்வெல்லையிலடங்கியமேனிஉரோமம் அடங்கலையும் கழுவுதல் வேண்டும் முகங்கழுவுந் துவக்கத்திலேயே நிய்யத்து வைத்தல் வாஜிபாம்.

(157.) எவ்வாறு கைகழுவ வேண்டும்?

1. இரண்டு கைகளையும் முழங்கை யுள்படக் கழுவவேண்டுமாம்.
2. விரல்நுனிமுதல் முழங்கை யீறாயிருக்கும் மேனி உரோமமாகியவைகளில் அற்பமாவது நனையாதிருத்தலாகாது.

(158.) தலையில் மசகுசெய்த லெவ்வாறும்?

1. தலையிற் சிலதில் அது உரோமமாயினும் மேனியாயினும் நீரினால் நனைத்தலாம்.
2. உரோமங்கள் நனையத்தக்கதாய் தலையிற் காற்பங்களவு மசகு செய்த லுத்தமமாம்.

(159.) எவ்வாறு கால்கழுவுதல் வேண்டும்?

1. இரண்டு கால்களையும் பரண்டைவரைக்குங் கழுவுதல்வேண்டும்.
2. அதினும் உரோமம் மேனியாகியவைகள் நன்றாய் நனைந்திருத்த லுத்தமமாம்.
3. காலிற் பித்தவெடிப்பு முதலிய துளையுள்ளவர்கள் நன்றாய் நீரைச் செலுத்திக் கழுவுதல் வாஜிபாம்.

(160.) வுலூவின் தறுதீபியாது?

முன்சொல்லப்பட்ட விதப்படி ஒவ்வோ ருறுப்புக்களையும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கழுவுதலே தறுதீபாம்.

---

## அல்பஸ்லுல் காமிசு பீபாபில் வுலூஇ.

## ௫ - ம் பிரிவு.

(161.) வுலூவுடைய சுன்னத்துக்களெத்தனை?

புகஹாக்கள் சுருக்கமாய்ச் சொல்லியபடி வுலூவுடைய சுன்னத்துக்கள் முப்பத்தாறும்.

(162.) வுலுவுடைய முதலாம் இரண்டாம் மூன்றும் நான்காம் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் முதலாவது அஊது ஓதுதல் இரண்டாவது பிஸ்மில் ஓதுதல், மூன்றுவது கிபுலாவை முன்னோக்கிக்கொள்ளுதல். நான்காவது முன்கை இரண்டையும் மணிக்கட்டு வரைக்கும் கழுவுத லாகியவைகளாம்.

(163.) வுலுவுடைய ஐந்தாம் ஆறும் ஏழாம் எட்டாம் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் ஐந்தாவது முன்கை கழுவும்போது வுலுவுடைய சுன்னத்தை நிய்யத்து வைக்குதல் ஆறுவது சாய்த்துக்கொள்ளத்தக்க கேத்தல் முதலியவைகளாயின் இடப்பக்கத்திலும் அள்ளத்தக்க கரமாயின் வலப்பக்கத்திலும் வைத்தல் ஏழாவது மிஸ்வாக்குச் செய்தல் எட்டாவது பல்குற்றுதலாகியவைகளாம்.

(164.) வுலுவுடைய ஒன்பதாம் பத்தாம் பதினோராம் பன்னிரண்டாம் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் ஒன்பதாவது வாய் கொப்புளித்தல் பத்தாவது நாசியில் நீர்செலுத்தல் பதினோராவது ஒன்பதாம் பத்தாம் சுன்னத்துக்களை ஒரேவிடுத்தத்தி லெடுத்தநீரிற் சேர்த்தல் பன்னிரண்டாவது நோம்பாளி யல்லாதவர்கள் கடப்பாக்கிவிக்குத லாகியவைகளாம்.

(165.) வுலுவுடையசுன்னத்துக்களில் பதின்மூன்றும் பதினான்காம் பதினைந்தாம் பதினாறும் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் பதின்மூன்றுவது முகங்கழுவும்போது காதிலுந் தலையிலும் நாடியிறக்கத்திலும் சிலதைச் சேர்த்தல் பதினான்காவது முகத்தின் மேல்புறமிருந்தும் முன்கையிலிருந்தும் கால்விரலி லிருந்தும் துவக்குதல் பதினைந்தாவது கைகழுவும்போது கழுக்கட்டுவரைக்குஞ் சேர்த்துக் கழுவுதல் பதினாறுவது தலையடங்கலையும் மசஹு செய்த லாகியவைகளாம்.

(166.) வுலுவுடைய பதினேழாம் பதினெட்டாம் பத்தொன்பதாம் இருபதாம் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் பதினேழாவது மிகுந்த உரோமமுள்ளவர்கள் இருகைப் பெருவிரல்களையும் இரு சென்னியிலும் வைத்து இரண்டு கலிமா விரல்களையும் தலையின் மேற்புறத்தில்



சேர்த்துப் பிடறியளவும் நடத்தி மறுபடியும் துவக்கிய இடத்திற் கொண்டுவந்து முடித்தல் பதினெட்டாவது இரண்டு செவியையும் பெருவிரலால் வெளிப்புறமும் கலிமா விரலால் உள்புறமும் மசஹு செய்தல் பத்தொன்பதாவது புதிய நீரெடுத்து இரண்டு சின்னிவிரல்களால் இரண்டுகாதுக் குழியையும் மசஹுசெய்தல் இருபதாவது இடதுகைச் சின்னிவிரலால் வலக்கால் சின்னிவிரலின்கீழே தொடுத்து இடக்கால் சின்னிவிரல் வரைக்கும் எல்லா விரல்களையும் குடைந்து கழுவுதலாகியவைகளாம்.

(167.) வுலுவுடைய இருபத்தோராம் இருபத்திரண்டாம் இருபத்திமூன்றும் இருபத்திநான்காம் சுன்னத்துக்க ளெவை?

வுலுவுடைய இருபத்தோராம் சுன்னத்தாவது இரண்டு கால்களையும் கணைக்காலளவும் கழுவுதல் இருபத்திரண்டாவது ஒவ்வோருறுப்பும் உலாமுன் அடுத்த உறுப்பைக் கழுவுதல் இருபத்திமூன்றுவது உறுப்புக்களைத் தேய்த்துக் கழுவுதல் இருபத்திநான்காவது உறுப்புக்களில் வலதை யிடதைக்காண முந்திக்கொள்ளுதல் ஆகியவைகளாம்.

(168.) வுலுவுடைய இருபத்தைந்தாம் இருபத்தாறும் இருபத்தேழாம் இருபத்தெட்டாம் சுன்னத்துக்களெவை?

வுலுவுடைய சுன்னத்துக்களில் இருபத்தைந்தாவது கண்ணின் நான்கு குழிகளையும் முடிப்புச் சதைகளையும் தேய்த்துக்கழுவுதல், இருபத்தாறுவது அடர்ந்ததாடியைக் குடைந்து கழுவுதல், இருபத்தேழாவது விரல்களைக் கோர்த்துக் கழுவுதல், இருபத்தெட்டாவது அகத்தியமான தேவையற்ற பேச்சைப் பேசாதிருத்தல் ஆகியவைகளாம்.

(169.) வுலுவுடைய இருபத்தொன்பதாம் முப்பதாம் முப்பத்தோராம் முப்பத்திரண்டாம் சுன்னத்துக்களெவை?

வுலுவுடைய இருபத்தொன்பதாம் சுன்னத்தாவது ஜலம் ஊற்றுதலிற் பிறரை உதவி தேடாதிருத்தல், முப்பதாவது வியாதி யில்லாதபோதில் உறுப்புக்களைத் துடைக்காதிருத்தல், முப்பத்தோராவது எல்லா ஒவ்வோருறுப்பிடத்திலுங் கலிமா ஷகாதத்தை மும்மூன்றுதரம் ஓதுதல், முப்பத்திரண்டாவது கழுவுதலையும் மசஹுசெய்தலையும் மும்மூன்றாக்கிக் கொள்ளுதல், ஆகியவைகளாம்.

(170.) வுலுவுடைய சுன்னத்துக்களில் முப்பத்திமூன்றும் முப்பத்திநான்காம் முப்பத்தைந்தாம் முப்பத்தாறும் சுன்னத்துக்களெவை?

வுலுவுடையசுன்னத்துக்களில் முப்பத்திமூன்றுவது நோம்பில்லாதவன் வுலுச்செய்தபின் எஞ்சிய நீரிற் கொஞ்சங் குடித்தல்

முப்பத்திரான்காவது தன் உடைக்குள் கொஞ்சம் நீரைத்தெளித்துக்கொள்ளுதல், முப்பத்தைந்தாவது கிபுலாவை நோக்கிப் பார்வையை உயர்த்தி வுலுவுடைய துஆவை ஓதுதல், முப்பத்தாறுவது சூறத்து இன்னா அன்சலனாஹுவை மூன்றுதரம் ஓதுத லாகியவைகளாம்.

வுலுச்செய்தபின் கிபுலாவை நோக்கிப் பார்வையை உயர்த்தி ஓதவேண்டிய துஆவாவது.

அஷ்கது அன்லாயிலாக இல்லல்லாகு வஹ்தகு லாஷரீக்க லஹுவஅஷ்கது அன்னமுகம்மதன் அப்துஹு வறசூலுஹு சுபுஹான கல்லாஹும்ம வபிகம்திக அஷ்கது அன்லாயிலாக இல்லா அந்தஅஸ்தகுபிறுக வஅதூபு இலைக்க அல்லாஹும் மஜ்அல்னீமினத்தவ்வாபீன் வஜ்அல்னீ மினல்முததஹ்ஹிரீன் வஜ்அல்னீ மின் இபாதிகஸ் ஸாலிஹீன் என்பதாம்.

இந்த துஆவை ஓதியபின் இன்னா அன்சலனா சூறத்தை மூன்றுதரம் ஓதவும் வேண்டும்.

வுலுச்செய்தநீர் உலாமுன் வுலுவுடைய சுன்னத்து இரண்டு றக்அத்துத் தொழுதல் சுன்னத்தாம்.

வுலுவுடைய சுன்னத்தின் முந்தின றகஅத்தில் பாத்திஹா ஓதியபின் வலௌ அன்னஹும்இத்ளலமூ அன்புசஹும் ஜாஊக பஸ்தகுபிறுல்லாஹ வஸ்தகுபிறு லஹுமுற்றசூலு லவஜதுல்லாக தவ்வாபன் றஹீமா என்றும்.

இரண்டாம் றக்அத்தில் பாத்திஹா வோதியபின் வமன்யஃமல்சூஅன் வயலுலமு நபுசஹு தும்ம யஸ்தகுபிறுல்லாஹ யஜிதுல்லாஹ கபூறன் றஹீமா என்றும் ஓதவேண்டும்.

---

## அல்பஸ்லுல் சாதிசு பீபாபில் வுலூஇ.

## ௬ - ம் பிரிவு.

(171.) துடக்குகளைநீக்க ஆமானநீரை இழந்தவன் அல்லது நீரைஉபயோகித்தால் வியாதி அதிகரிக்குமெனப் பயந்தவன் எவ்வாறு துடக்கை நீக்கவேண்டும்.

புழுதியுள்ள மண்ணினால் தயம்மம்செய்து துடக்கை நீக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(172.) தயம்மமுடைய ஷறுத்துக்களெத்தனையாம்?

தயம்மமுடைய ஷறுத்துக்கள் பத்தாம்.



(173.) தயம்மமுடைய முதலாம்ஷறுத் தியாது?

தயம்மமுடைய முதலாம்ஷறுத்து மண்ணும்.

(174.) தயம்மமுடைய இரண்டாம்ஷறுத் தியாது?

தயம்மம்செய்ய எடுக்கும் மண் துப்பரவானதா யிருத்தலாம்.

(175.) தயம்மமுடைய மூன்றும்நான்காம் ஷறுத்துக்களியாவை?

தயம்மமுடைய மூன்றும் ஷறுத்து பறுலில் உபயோகிக்கப்படாத மண்ணாயிருத்தல், நான்காம் ஷறுத்து மண்ணை மா அல்லது மாவை நிகர்ந்த யாதுங் கலக்கா திருத்தலாம்.

(176.) தயம்மமுடைய ஐந்தாம் ஆறும் ஷறுத்துக்களியாவை?

தயம்மமுடைய ஐந்தாம் ஷறுத்து மண்ணைநாடுதல், ஆறும் ஷறுத்து முகத்துக் கொருதரமும் கைக்கொருதரமும் அம்மண்ணில் அடித்தலாம்.

(177.) தயம்மமுடைய ஏழாம்ஷறுத் தியாது?

தயம்மம்செய்ய ஆரம்பிக்கும்போதே உறுப்புக்களை நஜீசைவிட்டு நீக்குதலாம்.

(178.) தய்யம்முடைய எட்டாம் ஷறுத்தென்ன?

கிபுலாத் தடுமாறியிருக்கும்போது தயம்மம்செய்ய முன்னரே தேண்டித்து இதுவென நிச்சயித்துக் கொள்ளுதலாம்.

(179.) தயம்மமுடைய ஒன்பதாம் ஷறுத்தியாது?

வக்துத் ஹாலிருனதின்பின் தயம்மம் செய்தலாம்.

(180.) தயம்மமுடைய பத்தாம் ஷறுத்தியாது?

எல்லா ஒவ்வொருபறுலு ஐன் ஆகிய தொழுகைக்கும் ஒவ்வோர் தரம் தயம்மம் செய்தலாம்.

---

## அல்பஸ்லுல் சாபிஉ பீபாபில் வுலூஇ.

## ௭ - ம் பிரிவு

(181.) தயம்மமுடைய பறுலுக்களெவை?

புழுதியுள்ள தாகிருகிய மண்ணையெடுத்தல் மண்ணை எடுக்கும்போதே நிய்யத்துவைத்தல், முகத்தை மசஹுசெய்தல், இரண்டுகையையும் மசஹுசெய்தல் முன்சொன்னவைகளைத் தறுதீபாய்ச் செய்தல் ஆகிய ஐந்துமே தயம்மமுடைய பறுலுக்களாம்.

(182.) புழுதியுள்ள மண்ணென்றதால் யாதுநீங்கிற்று?

1. புழுதியில்லாத மண்நீங்கிற்று.
2. புழுதியில்லாத மண்ணாற்செய்யுந் தயம்மம் சிஹத்தாகாது.

(183.) தாகிருகிய மண்ணாவதியாது?

நஜீசு புரளாத மண்ணே தாகிருகிய மண்ணாம்.

(184.) மண்ணை எடுக்கும்போது வைத்த நிய்யத்துயாது செய்யும்வரைக்கும் நீங்காமலிருத்தல் வேண்டும்?

மண்ணையெடுக்கும்போது நிய்யத்துவைத்து முகத்தினோர் பகுதியை மசஹு செய்யும்வரைக்கும் அந்த நிய்யத்தை தாயிமாக்கிக் கொள்ளவேண்டும் அப்படியே நிய்யத்தை தாயுமாக்கிக் கொள்ளுதல் வாஜிபாம்.

(185.) தயம்மமுடைய நிய்யத்து எவ்வாறும்?

பறுலாகிய தொழுகையை ஆமாக்கத்தேடுகிறே னென்பதாம்.

(186.) தயம்மம்செய்பவன் தொழுகையை ஆமாக்கத் தேடுகிறே னென்று நிய்யத்துவைத்துப் பறுலாகிய தொழுகை தொழலாமா?

தயம்மம்செய்பவன் தொழுகையை ஆமாக்கத் தேடுகிறேனென்று நிய்யத்துவைத்துப் பறுலுத்தொழுகை தொழலாமென்பது பெலப்பற்றசொல்லாம்.

(187.) பறுலாகிய தொழுகையை ஆமாக்கத் தேடுகிறே னென்பதுக்கும் தொழுகையை ஆமாக்கத் தேடுகிறே னென்பதுக்குமிடையிற் பிரிவுகளுண்டோ?

1. தயம்மம் செய்பவன் பறுலானதொழுகையை ஆமாக்கத் தேடுகிறேனென்று நிய்யத்துவைத்தால் பறுலாகிய தொழுகையையும் சுன்னத்தாகிய தொழுகையையுந் தொழலாம்.

2. தொழுகையை ஆமாக்கத் தேடுகிறேனென்று நிய்யத்துவைத்தால் மதுஹபின்படி பறுலு தொழலாகாது. ஆகுமென்பாருமுளர்.

(188.) முகத்தை எவ்வாறு மசஹு செய்தல்வேண்டும்?

மூன்றும் பாபின் நான்காம் பசுலில் 156-ம் இலக்கவினாவின் விடையிற்சொல்லிய முகமெனும் நாமமுடைய இடத்தில் தயம்மமுடைய நிய்யத்துடன் புழுதி புரண்டகையாற்றடவவேண்டும் அதுவே முகத்தை மசஹுசெய்தலாம்.



(189.) இரண்டுகையையும் எவ்வாறு மசஹு செய்யவேண்டும்?

மூன்றும்பாபின் நான்காம் பஸ்லில் 157-ம் இலக்கவினாவின் விடையிற்சொல்லிய கையெனும் நாமமுடைய இடத்தில் புழுதிபுரண்டகையாற் றடவவேண்டும் அதுவே இரண்டுகையையும் மசஹு செய்தலாம்.

(190.) தயம்மமுடைய தறுதீபெவ்வாறும்?

ஆதியாய் முகத்தையும் அதன்பின் இருகையையும் மசஹு செய்தலே தறுதீபாம்.

---

## அல்பஸ்லுல் தாமினு மினபாபில் வுலூஇ.

## அ-ம் பிரிவு.

(191.) தயம்மமுடைய சுன்னத்துக்க ளெத்தனை?

தயம்மமுடைய சுன்னத்துக்கள் ஆறும்.

(192.) தயம்மமுடைய முதலாம் சுன்னத்தாவதியாது?

புழுதியை இலேசாக்கிவித்தலே தயம்மமின் முதலாம் சுன்னத்தாம்.

(139.) தயம்மமுடைய இரண்டாம் சுன்னத்தென்ன?

நிய்யத்தை வாயினாற் சொல்லுதலாம்.

(194.) எவ்வாறு நிய்யத்தை மொழியவேண்டும்?

நவைத்து இஸ்திபாஹதிஸ்ஸலாத்தில் புறாவி என மொழிதல்வேண்டும்.

(195.) தயம்மமுடைய மூன்றும்சுன்னத் தியாது?

பஸ்மலா ஓதுவதே தயம்மமுடைய மூன்றும் சுன்னத்தாம்.

(196.) பஸ்மலாவாவதியாது?

பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீ மென்பதே பஸ்மலாவாம்.

(197.) தயம்மமுடைய நான்காம் சுன்னத்தியாது?

வலதை இடதைக்காண முற்படுத்திக்கொள்ளுதலாம்.

(198.) வலதை எவ்வாறு முற்படுத்தவேண்டும்?

பின் 200-ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லப்படும் பிரகாரம் இரண்டாம் அடியிற்பட்ட புழுதியையுடைய இடதுகையால் வலதுகையை மசஹு செய்யவேண்டும் அதுவே வலதை முற்படுத்துதலாம்.

(199.) தயம்மமுடைய ஐந்தாம் சுன்னத்தியாது?

தொடர்பாய்க்கொண்டு வருவதே ஐந்தாம் சுன்னத்தாம்.

(200.) தயம்மமுடைய ஆறாம் சுன்னத்தியாது?

கைக்கு மசஹு செய்வதில் வலக்கையை மசஹு செய்யும்போது இடக்கைப் பெருவிரலைத்தவிர மற்றவைகளை வலக்கை விரல்களின் முதுகின்பேரில்வைத்து முழங்கை வரையிலும் நடத்தி மடக்கும்போது இடதுள்ளங்கையை வலது முழங்கையின் உள்புறத்தில் நடத்தி மணிக்கட்டைச் சேர்ந்தவுடன் இடதுபெருவிரலின் உள்ளை வலது பெருவிரலின்பேரில் நடத்துவதே தயம்மமுடைய ஆறாம் சுன்னத்தாம்.

இவ்விதமாகவே இடதுகைக்கும் வலதுகையால் மசஹு செய்யவேண்டும்.

---

அல்பஸ்லுல்தாசிஉ பீபாபில் வுலூஇ.

## கூ-ம் பிரிவு.

(201.) தயம்மமை முறிக்குங் கருமங்களெத்தனை?

தயம்மமை மூன்று கருமங்கள் முறிக்குமாம்.

(202.) தயம்மமை முறிப்பவைகளில் முந்தியதியாது?

வுலூவை முறிக்குங் கருமங்களெல்லாம் தயம்மமையும் முறிக்குமாம் அதுவே தயம்மமை முறிக்குங் கருமங்களில் முந்தினதாம்.

(203.) தயம்மமை முறிப்பவைகளில் இரண்டாங்கருமமியாது?

ஜலமில்லை என நிச்சயித்து வருத்துத் தப்புவதைப் பயந்து தயம்மம் செய்தவன் ஜலத்தைக்காணுதலாம்.

(204.) தயம்மமை முறிப்பவைகளில் மூன்றாங் கருமமியாது?

தயம்மம் செய்தவன் முறுதத்தாயிடுதலாம்.



(205.) உறுப்புக்களிற் சிலதில் ஜலத்தை உபயோகித்து சிலதிலுபயோகிக்கக்கூடாதவர்களெவ்விதமாய்த் துடக்கை நீக்குதல் வேண்டும்?

1. சுகமுள்ள உறுப்பை ஜலத்தினால் கழுவிக்கொண்டு நோயுள்ள உறுப்புக்காய்த் தயம்மம் செய்தல்வேண்டும்.

2. ஜுனுபாயிருப்பவன் தயம்மமை முந்தியும் பிந்தியும் செய்யலாம்.

(206.) தாயிமுல் ஹததுக்காரர் எப்போதில் தயம்மம்செய்தல் வேண்டும்?

1. வுலூ முறிச்சலுள்ளவர்கள் அந்த வியாதிஉள்ள உறுப்பைக் கழுவவேண்டிய நேரத்தில் தயம்மம் செய்தல்வேண்டும்.

2. கழுவுவதற்குத் தயம்மமை முற்படுத்தவும் பிற்படுத்தவும் ஆகும்.

3. தயம்மமை முற்படுத்துதலே நன்றாம்.

(207.) காயக்காரர் எவ்வாறு தயம்மம் செய்தல் வேண்டும்?

1. காயக்காரர் காயமுள்ள உறுப்பைத்தவிர மற்றவைகளை ஜலத்தினால் கழுவித் தயம்மமுஞ் செய்தல்வேண்டும்.

2. காயமுள்ள உறுப்பில் வஸ்திரம் முதலிய திரைபோட்டு நீக்கக்கூடாதவிதமாயிருந்தால் அவ்வுறுப்பைத்தவிர மற்றவைகளில் ஜலத்தை உபயோகித்து அத்திரையிற் சிலதையும் ஜலத்தால் மசஹுசெய்து தயம்மமுஞ் செய்தல்வேண்டும்.

3 இரண்டு உறுப்புக்களில் காயமிருந்தால் இரண்டு தரம் தயம்மம் செய்தல் வாஜிபாம்.

(208.) இரண்டுகையிலுங் காயமுள்ளவன் எத்தனைதரந் தயம்மம் செய்தல்வேண்டும்?

1. இருகையிலும் காயமுள்ளவன் ஒருதரந் தயம்மம் செய்தலேபோதியதாம்.

2. இரண்டுகாலிலுங் காயமிருந்தாலும் ஒருதரந் தயம்மம் செய்தலேபோதியதாம்.

3. யதைன் எனும் இரு கையும் ஒரே உறுப்பாம்.

4. ரிஜ்லைன் எனும் இரு காலும் ஒரே உறுப்பாம்.

(209.) வுலூச்செய்ய நீரும் தயம்மம்செய்ய மண்ணுமில்லாதவன் யாது செய்தல்வேண்டும்?

1. ஜலம், மண் எனும் இரண்டையுந் தேடுவதுக்குள் வருத்துத்தப்பிவிடுமாயின் பறுலைமாத்திரந் தொழவேண்டும்,

2. ஜலத்தையாயினும் மண்ணையாயினும் கண்டவுடன் அத்தொழுகையைமீண்டு தொழவேண்டும்.

(210) வருத்துக்கு முன்செய்த தயம்மம் சுன்னத்துத் தொழுகைக்குஆமா?

வருத்திடப்பட்ட சுன்னத்துத் தொழுகையைத் தொழ அதின் வருத்துக்கு முன்செய்த தயம்மம் போதியதல்ல.

---

## அல்பஸ்லுல் ஆஷிறு பீபாபில் வுலூஇ.

## ய - ம் பிரிவு.

(211.) வுலுவை முறிக்குங் கருமங்களெத்தனை?

முன்பின் துவாரங்களால் மனியைத்தவிர யாதேனும்புறப்படுதல், அகில் நீங்குதல், மனிதர் உள்ளங்கையினால் அபத்தைத்தொடுதல், தொடஹறுமான ஆடவர்களின் மேனியும் ஸ்திரிகளின் மேனியும் சந்தித்தலாகிய நான்கும் வுலுவை முறிக்குங் கருமங்களாம்.

(212.) முன்துவாரம் பின்துவாரமென்பவைகளியாவை?

1. ஆடவர்களுக்கு வழக்கமாய் சிறுநீர் முதலியன புறப்படும் தகறின் துவாரமும் பெண்களுக்கு வழக்கமாய்ச் சிறுநீர் முதலியன புறப்படும் பறுஜின் துவாரமுமே முன்துவாரமாம்.
2. ஆடவர்களுக்கும் ஸ்திரிகளுக்கும் வழக்கமாய் மலம் புறப்படும் வாசலேபின் துவாரமாம்.
3. சிறுநீர் புறப்படும் வாசலுக்கு குபுல் என்றும் மலம் புறப்படும் வாசலுக்கு துபுறு என்றும் சொல்லுவார்கள்.

(213.) குபுல், துபுறு, எனும் துவாரங்களாற் கண்ணுற் காணக்கூடாதவைகள் புறப்பட்டால் வுலுமுறியுமா?

குபுல், துபுறு, எனுந் துவாரங்களாற் கண்ணுற் காணக்கூடாத வஸ்துப் புறப்பட்டாலும் கண்ணுற் காணக்கூடிய வஸ்துப் புறப்பட்டாலும் வுலுமுறிந்துவிடுமாம்.

(214.) எவ்வாறு அகில் நீங்கும்?

மயக்கம், உறக்கம், பயித்தியம் முதலியவைகளால் அகில் நீங்குமாம்.



(215.) வுலுவோடிருப்பவன் எவ்வாறு நித்திரைசெய்யலாம்?

உலுவோடிருப்பவன் (நுஆசு) ஒருத்தூக்கந் தூங்கலாம். ஒருத்தூக்கத்தால் வுலுமுறியாது.

பின்தட்டிற் சதையுள்ளவர்கள் நன்றாயிருந்துகொண்டு உறங்கலாம். முழிக்கும்போது பின்தட்டு நீங்கியிருந்தால் வுலுமுறிந்துவிடும்.

(216.) ஒருத்தூக்கமோ அல்லவோ எனச் சக்குவைத்தவனின் வுலு எவ்வாறும்?

நித்திரை செய்பவன் முழித்து ஒருத்தூக்கமோ அல்லவோ என்று சக்கு நினைந்தால் வுலுமுறியாது.

(217.) அபமாவதியாது?

1. தகறு, பறுஜு, துபுறு, ஆகியவைகளே அபமாம்.

ஹயாத்தாயிருப்பவர்களின் அபமும், மரணித்தவர்களின் அபமும் ஒரேசரியானவைகளாம்.

2. உள்ளங்கையால், மனிதர் முன்துவாரம், பின்துவாரம், ஆகியவைகளைத் தொட்டால் வுலுமுறியுமாம்.

(218.) மனிதருடைய அபமென்றதால் யாது நீங்கிற்று.

மனிதர் அல்லாத பஹீமத்து எனும் ஹயவான்களுடைய அபம் நீங்கிற்று.

(219.) தொட ஹறுமான் ஆண் பெண்களின் மேனி சந்தித்தலாவதியாது?

இச்சிக்கப்படாத பருவத்தையும் சிறுவயதையுமுடைய ஆண்பெண்களி லொருவர் மற்றவரையும் நிகாஹுசெய்ய ஹறுமான ஆண்பெண்களி லொருவர் மற்றவரையும் தவிர மற்ற ஆடவர்களின் மேனியும் ஸ்திரிகளின் மேனியும் சந்தித்தால் வுலு முறிந்துவிடுமாம்.

(220.) உரோமம் மேனியிற் சேர்ந்ததா?

உரோமம், நகம், பல்லு, கண்ணுள், ஆகியவைகள் மேனியல்ல, அவைகள் சந்தித்தலால் வுலுமுறியாது.

---

# அல்பஸ்லுல் இகுதாஅஷற பீபாபில் வுலூஇ.

## கக - ம் பிரிவு.

(221.) வுலுவில்லாதவர்கள் செய்ய ஹறாமானவைகளெவை?

வுலுவில்லாதவர்கள் அல்லது ஷறுத்தின்படியுள்ள தயம்மம் இல்லாதவர்கள், தொழுவதும், ஸுஜூது செய்வதும், தவாபு செய்வதும், குறுஆனைச் சுமப்பதும், தொடுவது மாகிய ஐந்து செயல்களையும் செய்தல் ஹறாமாம்.

(222.) வுலுவில்லாமல் தொழும் தொழுகை ஷறஆக்கப்பட்டதா?

வுலுவில்லாமல் தொழும் தொழுகை ஷறஇல் உள்ளதல்ல.

(223.) சுஜூதென்ற தெது?

சஜிதா திலாவத்தையும் சஜிதா ஷுக்றையுமாம்.

(224.) தவாபாவதியாது?

கஃபாவைச் சுற்றுதலே தவாபாம். அதைப்பற்றி ஹஜ்ஜுடைய பயானில் காண்க.

(225.) குறுஆனைச் சுமக்குத லென்பதிற் பிரிவுகளுண்டோ?

குறுஆனையும் குறுஆன் எழுதியிருக்கும் பலகை முதலியவைகளையும் வுலுவில்லாதவர்கள் சுமப்பது ஹறாமாம்.

குறுஆனை துஆவென்று அல்லது பறக்கத்துக்கென்று நாடி எழுதியிருந்தாலும் சபரில் (மதாஉ) சாமான்களோடு வைத்திருந்தாலும் சுமப்பது ஹறாமாகாது.

(226.) குறுஆனைத் தொடுதலாவதியாது?

குறுஆனின் ஒரு (வறகு) ஆனாலும் அதின் (பயாலு) ஆனாலும் அதின் அருகு ஆனாலும் அதின் (ஜில்து) முதலியதானாலும் வுலுவில்லாதவர்கள் தொடுதல் ஹறாம்.

குறுஆனைச் சுமப்பதும் தொடுவதும் தம்யீசு இல்லாத சிறுவர்களுக்கு ஹறாமாகாது:

(227.) குறுஆனைச் சுமக்குதல்?

கலாசாக்கிவிக்குதல் எவ்வெக்கருமங்களில் வாஜிபாகும்.



குறுஆன் நஜீசில், விடக்கில், தரிபடக்கண்டாலும் காபிறுடைய கையிலிருக்கக்கண்டாலும் சேதமாய்ப் போகத்தக்க ஸ்திதியிற் கண்டாலும் தனக்கு வுலுவில்லாவிட்டாலும் அதைவிட்டு கலாசாக்கிவித்தல் வாஜிபாம்.

(228.) குறுஆனை உடையில் எழுதலாமா?

குறுஆனை உடையிலும் சுவர் முதலியவைகளிலும் எழுதுதல் மகுறூகாம். குறுஆனை நெருப்பிற் சுடுவதும் மகுறூகுதான்.

(229.) குறுஆனுக்கு நேரே காலைநீட்டலாமா?

குறுஆனுக்கு நேரே கால்நீட்டுதல் ஹறாம் குறுஆனை நஜீசான மையினாலும் கலத்தினாலும் எழுதுவதும் வேறே பாடையா லெழுதுவதும் ஹறாமாம்.

(230.) வுலுவிருக்க மறுதரம் வுலுச்செய்வதைத் தேடும் கருமங்களெவை?

வுலுவோடிருப்பவன் கலியாணமுமுடிக்க ஹலாலான பெண்பிள்ளையின்கண்ணுள் உரோமம், பல்லு, நகம், தன்னுடைய விதைஆனத்துமுடி பின் துவார வட்டவளையவெளி முழந்தாளுக்குந் தொப்புளுக்கு மிடையிலுள்ள மேனி ஆகியவைகளைத் தொடுதல். இரத்தங் குற்றிவாங்குதல், கொம்புவைத்தல், உரோமம், நகம், களைதல், யஹூதி, நசாறா, முஷ்ரிகு, காபிர்களைத் தொடுதல், முகவளைகிளாத வாலிபனைத் தொடுதல், வீணில் பேசுதல், கோபமுண்டாகுதல், ஜனசாவைத் தொடுதல், சுமக்குதல், அறுக்கப்படும், மாமிசத்தைப் போஷித்தல், முந்தின வுலுவினால் யாதேனு மோர் தொழுகையைத் தொழுதல், ஆகியவைகளாம். (ஜுனுபாளி) ஸ்நானம் செய்ய, போஷிக்க, பானம்பண்ண, உறங்க, மறுஜிமாஉ செய்ய, முன்னும் தொழுகையிற் கெக்கைபோட்டுச் சிரித்தாலும் சத்தித்தாலும் குறுஆன் ஓதுதற்கும் ஹதீது வஃலு சொல்லுதற்கும் அல்லாகுத்த ஆலஉவை திக்றுச்செய்தற்கும் சபா, மறுவாவில், தொங்கோட்டம் ஓடுதற்கும் பள்ளிவாசல்களிற் புகுதுதற்கும் நபிமார்கள் சாலிகீன்களின் கபுறுகளை சியாறத்துச் செய்தற்கும் அறபாவிற்றரிப்பதற்கும் ஜும்ஆவல்லாததில் குதுபா ஓதுதற்கும் வாங்கு இகாமத்துச் சொல்லுதற்கும், யாதேனு மொன்றை சகுவத்துக் கொண்டு பார்த்தாலும் முழித்திருந்தாலும் புறம்பேசினாலும் யாதேனுமொருகருமத்தில் அது வுலுவை முறிக்கும் முறிக்காதென் பதில்கிலாபு சொல்லப்பட்டிருந்து முறிக்காதென்பதை தொடர்ந்தாலும், கிதாபுகளைச் சுமப்பதற்கும், கண்திஷ்டிக்காரரின் கண்ணேறுவந்தாலும், வெண்குட்டங் கருங்குட்டம் பிடித்தவர்களைத் தொட்டாலும், ஒட்டகைப்பால் குடித்தாலும், மறுதரம் வுலுச்செய்தல் சுன்னத்தாம்.

# அல்பாபுல்ருபிஉ பியானில் குசுலி.

(நான்காம் பாபு ஸ்நானத்தைப் பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில்குசுலி.

## க - ம் பிரிவு.

(231.) தகாறத்துல்தானி என்பதியாது?

(குசுல்) முழுக்கே தகாறத்துல் தானியாம்.

குசுல்: ஸ்நானம், முழுக்கு, என்பனுவகளோரே அருத்தமுடையனவாம்.

(232.) முழுக்கு என்பதின் கருத்தென்ன?

*முழுக்குடைய நிய்யத்துடன் சரீரமடங்கலிலும் நீரைச் சொரிதலே முழுக்காம்.

(233.) முழுக்கை விதியாக்குங் கருமங்களெத்தனை வகைப்படும்?

1. ஆண்பாலார், பெண்பாலார், எனும் இருபாலாருக்கும் பொதுவான கருமங்கள். பெண்பாலாருக்குமாத்திரந் தனதான கருமங்கள் என இருவகைப்படும்.
2. இவ்விரு பகுப்பினையுடைய (மூஜிபாத்துல் குசுல்) முழுக்கை விதியாக்கி விப்பனவைகள் ஆறுகருமங்களாம்.

(234.) முழுக்கை விதியாக்குங் கருமங்களில் ஆண்பெண் ஆகிய இருபாலாருக்கும் பொதுவான கருமங்களெத்தனை?

மனிவெளிப்படுதல் அபவறை அபத்துள் மறைதல், மரணித்தல் ஆகிய மூன்றுகருமங்களுமாம்.

(235.) பெண்பாலாருக்குமாத்திரந் தனதான கருமங்களெத்தனை?

ஹைலு நீங்குதல், நிபாசு நீங்குதல், பிள்ளைப்பேறு நிருதல், ஆகிய மூன்று கருமங்களுமாம்.

(236.) மனி என்று அறிவிக்கும் அடையாளங்களெவை?

புறப்படும்போது இன்பம் அதிகரித்தலும், குதித்து விழுதலும், ஈரமாயிருக்கும்போது குழைத்தமாவின் வாசம்போன்று அல்லது பாளையின் வாசம்போன்றிருத்தலும், காய்ந்ததாய் இருக்கும்போது முட்டையின் வெள்ளைக்கருவின் வாசம்போன்றிருத்தலும், மனி என்றறிவிக்கும் அடையாளங்களாம். இவ்வடையாளங்களை இழக்கப்பட்டால் மனியல்ல.



மனி வெளிப்படுதல் என்றதால், மதி, வதி, வெளிப்படுதல், முழுக்கை விதியாக்காது என்றாயிற்று.

மதியாவது அதிக இலேசான இச்சையால் வெளிப்படுவதாம். அது மனியைப்போல் கனமானதாயிராது.

வதியாவது உஷ்ணத்தால் சிறுநீருக்குப் பின்னும் சுமை எடுத்தபோதும் வெளிப்படுமாம்.

மதிவதி வெளிப்படுதலால் முழுக்கு வாஜிபாகாது.

(237.) அபவறை ஆவதியாது?

கதனுச்செய்யப்படுந் தானமே அபவறையாம்.

உயர்திணையில் உயிரோடிருப்பவர்களின் அபம் அல்லது மரணித்தவர்களின் அபமாகியவைகளிலாவது அஃறிணையில் விலங்கு, பட்சி, மட்சம் ஆகியவைகளின் அபத்திலாவது கதனுச் செய்யப்படுந் தானம் வரைக்கும் புகுந்தால் முழுகுதல் வாஜிபாம்.

(238.) காய்ந்தமனி வஸ்திரத்திற் கிடக்கக்கண்டவனுக்கு முழுக்கு வாஜிபாகுமா?

தன்னுடுப்பு படுக்கும் விரிப்பு முதலியவைகளில் மனியைக்கண்டவன் ஸ்நானம் செய்தல் வாஜிபு அந்தமனி எப்போ வெளிப்பட்டதென்று நினைந்து இன்னவேளையிற்றான் வெளிப்பட்டது என (யகீன்) வந்தால் அதன்பின் தொழுத தொழுகைகளை எல்லாம் ஸ்நானம் செய்தபின் தொழுதல் வாஜிபாம்.

(239.) தனக்கு வெளிப்பட்டது மனிதானோ அல்லது மதியோவெனச் சக்குவைத்தவனுக்கு முழுக்கு வாஜிபாகுமா?

தனக்கு வெளிப்பட்டதை மனியா மதியாவெனச் சக்குவைத்தவன் மனியெனத் தரிபடுத்தி வாஜிபாக முழுகுதலும் மதியெனத் தரிபடுத்திக் கழுவுதலும் (கியாறு) அவனின் சம்மதமாம்.

(240.) பலவகை வாஜிபான முழுக்குகளுள்ளவன் எத்தனைதரம் முழுகவேண்டும்.

1. பலவகை வாஜிபான முழுக்குகளுள்ளவன் ஒருதரம் முழுகுதலே போதியதாம்.
2. பலவகையான சுன்னத்து முழுக்குகளுள்ளவனும் ஒருதரம்முழுகுதலே போதியதாம்.

3. வாஜிபான முழுக்கும் சுன்னத்தான முழுக்குமுள்ளவன் அவ்விரண்டையும் நிய்யத்துச் செய்தால் இரண்டு ஸ்நானமும் உண்டாகுமாம்.

4. ஒன்றைமாத்திரம் நிய்யத்து வைத்தால் நிய்யத்து வைத்தது மாத்திரமே உண்டாகுமாம்.

(குஸ்லுல் ஜனுபத்து) புணர்ச்சியினால் உண்டாகும் முழுக்குள்ளவன் தொழுதல் கஃபாவைத் தவாபுசெய்தல் குறுஆன் ஓதுதல் முசகுபைத் தொடுதல் சுமக்குதல் பள்ளியிற் றரித்தல் ஆகிய ஐந்துகருமங்களும் ஹறாமாம்.

---

## அல்பஸ்லுல் தானீ பீல்பாபில் குசுலி.

## உ - ம்பிரிவு.

(241.) பெண்களுக்கு முழுக்கை வாஜிபாக்குவிக்குங் கருமங்களில் முந்தியதியாது?

பெண்களுக்கு முழுக்கை வாஜிபாக்கும் மூன்று கருமங்களிலும் முந்தியது ஹைலாம்.

(242.) ஹைலாவ தியாது?

பெண்களின் கெற்பப்பையின் அந்தத்திலிருந்து மருநசாகிய வகுத்துக்களிற் புறப்படும் இரத்தமே ஹைலாம்.

(243.) எத்தனைவயதையுடைய ஸ்திரிக்கு ஹைலுவெளிப்படும்?

கமரிய்யாவாகிய ஒன்பது வயதையுடைய பெண்களுக்கு ஹைலு வெளிப்படுமாம்.

கமரிய்யாவாகிய ஒன்பது வருடத்திற்குப் பதினறு நாட்களின் முன் காணப்படும் இரத்தத்தையும் ஹைலென்பாருமுளர்.

(244.) ஹைலு எனும் இரத்தத்தின்நிறம் யாது?

ஹைலு இரத்தம் சிலருக்கு மஞ்சணிந்ததாயும் சிலருக்கு கலக்கமானதாயு மிருக்குமாம்.

(245.) ஹைலுநீங்குங்காலம் எத்தனை வகைப்படும்.

ஹைலு நீங்குங்காலம் குறைந்த காலம் நடுத்தரமானகாலம் நீண்டகால மென மூன்று வகைப்படும்.



(246.) குறைந்தகாலமாவ தியாது?

ஓரிரவும் பகலுமே ஹைலுநீங்குதலிற் குறைந்த காலமாம்.

(247.) நடுத்தரமான காலமாவ தியாது?

ஏழுநாள் அல்லது எட்டுநாள் ஹைலு நீங்குதலில் நடுத்தரமான காலமாம்.

இந்தேச வாசிகளிற் பெரும்பாலார் இவ்வகையினர்தான்.

(248.) மிகுந்தகாலமாவ தியாது?

ஹைலு நீங்குதலில் மிகுந்த அல்லது நீண்டகாலம் பதினைந்து நாட்களாம்.

இந்த மிகுந்தகாலமாகிய பதினைந்து நாட்களுக் கதிகமாய் ஹைலாயிருப்பவளைப் பெரும்பாட்டுக்காரியென் றழைப்பார்கள்.

(249.) பிள்ளைப்பெறுதலின் இரத்தம் (நிபாசு) எவ்வளவுகாலத்தில் மறுக்கும்?

1. (நிபாசு)பிள்ளைப்பெறுதலின் இரத்தம் மறுப்பதிலும்மூன்று வகையுண்டு. அவைகளாவன குறைந்தகாலம் அது ஓர் நொடிநேரமாம், நடுத்தரமானகாலம் அது நாற்பதுநாளாம், மிகுந்தகாலம் அது அறுபது நாளாம்.
2. மிகுந்த காலமாகிய அறுபதுநாளுக் கதிகமாய் நிபாசோ டிருப்பவளைப் பெரும்பாட்டுக்காரியென் றழைப்பார்கள்.

(250.) பெண்கள் ஹைலில்லாமல் துப்பரவா யிருக்குங்காலத்துக்கு மட்டுண்டோ?

பெண்கள் துப்பரவா யிருக்குங்காலத்திற் குறைந்தது பதினைந்து நாள், நடுத்தரமானது ஹைலின் தன்மையை விட்டு நீங்கியிருக்குங்காலம், மிகுந்தது அதற்கோர் கணக்கில்லை. ஹயாத்தெல்லாம் துப்பரவாகவே யிருக்கும் ஸ்திரிகளுமுண்டாம்.

---

## அல்பஸ்லுல் தாலிது பீபாபில் குசுலி.

## ௩ - ம் பிரிவு.

(251.) முழுக்குடைய ஷறுத்துக்க ளெத்தனை?

மூன்றும் பாபின் மூன்றும் பஸ்லில் 141-ம் வினவின்விடையிற் சொல்லிய வுழுவுடைய ஷறுத்துக்களேழுமே (குசுல்) முழுக்குக்கும் ஷறுத்துக்களாம்.

(252.) முழுக்குடைய பறுலுக்களெத்தனை?

நிய்யத்து, அந்நிய்யத்துடனே மேனியில் நீரையோடப்பண்ணுதல், ஆகிய இரண்டுமே (குசுல்) முழுக்கின் பறுலுக்களாம்.

(253.) ஸ்நானஞ் செய்யும்போது எவ்வாறு நிய்யத்து வைத்தல் வேண்டும்.

1. ஜுனுபாளியாயிருந்தால் நவைத்து றபுஉல் ஜனபதி என்றும் ஹைலுக்காரியாயிருந்தால் நவைத்து றபுஉல் ஹைலி என்றும் அவரவர்களுக்கு முழுக்குண்டான கருமத்தைத் தொட்டும் நிய்யத்து வைத்தல்வேண்டும்.

2. இதையன்றி நவைத்து (அதாஉ பறுலு குஸ்லி) அல்லது நவைத்து றபுஉல் ஹததி அல்லது நவைத்து றபுஉல்தகாறத்தி அனில் ஹததி என்றும் அல்லது அதா அல்குஸ்லி என்றும் பொதுப்பட நிய்யத்து வைத்துக்கொள்ளலாம்.

(254.) முழுக்குடைய நிய்யத்தில் யாது வாஜிபாகும்?

ஸ்நானத்தின் ஆதியில் நிய்யத்து வைத்தல் வாஜிபாம்.

(255.) எப்படி ஸ்நானஞ்செய்தல் வேண்டும்?

உடம்பில் நீரைச் செல்லவொட்டாமற் றடுப்பவைகளை நீக்கி சரீரத்தின் வெளிப்புற மெங்கும் ஜலம்பட்டு ஓடும்படி ஜலத்தைச் சொரிந்து நன்றாய்த்தேய்த்து ஸ்நானஞ்செய்தல் வேண்டும்.

(256.) ஸ்நானஞ்செய்பவன் தன் கண்ணினுள்ளிலும் நீர்செலுத்துதல் வேண்டுமா?

கண்ணினுள் வாயினுள் காதுகளினுள் நாசியினுள் ஆகிய இடங்களில் நீரைச் செலுத்துதல் வாஜிபல்ல.

(257.) ஸ்நானஞ் செய்பவன் எவ்வெவ்விடங்களில் ஜலத்தை ஓடப்பண்ணவேண்டும்?

உரோமங்களின் உள்ளும் புறமும் நகங்களின் உள்ளும்புறமும் பார்வைக்குத் தோற்றுகிறஅளவு காதுக்குழியினுள்ளும் காயங்களின் பிளப்பிலும் கதனாயில்லாதவனின் தலறின் கதனவரையின் தொலியினுள்ளும் பெண்கள் குந்தினல் புறப்படும் வெளியாகும் இடமாகிய இத்தானங்களில் நீரை ஓடப்பண்ணல் வேண்டும் அது வாஜிபாம்.

(258.) சடைஉரோமத்தினுள் ஜலத்தைச் செலுத்துதல் வேண்டுமா? தன்னுற் சடையான உரோமத்தினுள் ஜலத்தைச் செலுத்துதல் வாஜிபாகாது.



(259.) முழுக்குக்கு மூன்றுபறுலுண்டு மென்பாருமுளரோ? இமாம்ருபிஇய்யி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முழுக்குக்கு மூன்றுபறுலுண்டு மென்றனர்.

(260.) முழுக்கில் இமாம் ருபிஇய்யி அவர்கள் அதிகமாய்ச்சொன்ன பறுலு யாது?

மேனியில் நஜீசுகிடந்தால் முழுகமுன் அந்த நஜீசை நீக்கிக்கொள்ளுதலாம்.

## அல்பஸ்லுல் ருபிஉ பீபாபில் குசுலி.

## ச-ம் பிரிவு.

(261.) முழுக்குடைய சுன்னத்துக்களெவை?

பிஸ்மில் சொல்லுதல் அருவருப்பானவைகள் உடம்பிற்கிடந்தால் நீக்குதல் வுலுச்செய்தல் கைகால்களைக் குடைந்து கழுவுதல் மடிப்புச்சதைகளின் அருகுகளை நன்றாய்க் கழுவுதல் சரீரத்தைத் தேய்த்தல் வலப்பக்கத்தை முந்திக் கொள்ளுதல் கிபுலாவுக்கு முன்னோக்கிக்கொள்ளுதல் ஜலத்தை யூற்றுதலில் உதவி தேடா திருத்தல் அவ்வோ ருறுப்புக்களையும் மும்மூன்றுதரம் கழுவுதல் தொடர்பாய்க் கழுவுதல் ஸ்நானஞ்செய்தபின் ஷஹாதத்துக் கலிமாவை ஓதுதல் ஆகியவைகளே முழுக்குடைய சுன்னத்துக்களாம்.

262. முழுக்கின் மகுறூகுகளெவை?

தண்ணீரைக் கடப்புச்செய்தல் வுலுச்செய்யாமலும் வாய் கொப்புளிக்காமலும் நாசியில் ஜலத்தைச் செலுத்தாமலும் விடுதல் ஆகியவைகளே முழுக்கின் மகுறூகுகளாம்.

(263.) ஹைலு, நிபாசுக்காரர்களுக்கு ஹறுமாகுங் கருமங்களெவை?

மூன்ரும்பாபின் ஹதிஜோராம். பஸ்லில் (221ம்.) வினவின்விடையிற் சொல்லிய ஐந்துகருமங்களும் அதின் பறஉகளும் அவைகளல்லாத மூன்றுகருமங்களுமாம். அவைகளாவன

ஹைலாயிருக்கும், ஸ்திரிகளின் முழந்தாளுக்குந் தொப்புளுக்குமிடையில் இணக்கஞ் செய்தலும் ஜிமாஉ செய்தலும், நோன்புபிடித்தலுமாம்.

(264.) முழுக்கினால். மக்ரூஹாகாகும் கருமங்களெவை?

ஜுனுபானவர்கள் முழுகமுன்னும் ஹைளு. நிபாசு நீங்கிஸ்நானஞ்செய்ய முன்னும். போஷித்தல். பானம்பண்ணுதல் நித்திரை செய்தல் மறுதாம். ஜிமாஉசெய்தல் ஆகியவைகளே மக்ரூஹாகாம். ஊண்குடிப்பு நித்திரை. ஆகியவைகளை நாடினால் வுழூச்செய்து கொண்டு அக்கருமத்தைச் செய்தல் சுன்னத்தாம். மனைவி ஹைளாயிருப்பதை யறிந்து முரண்டாய்ப் புணர்ந்தவன். கப்பாறத்தாக் கொடுத்தல் வேண்டும், அதுசுன்னத்தாம்.

ஹைளுவந்த ஆதியில் புணர்ந்தால், அரைத் தங்கக்காசும். ஈற்றில் புணர்ந்தால் கால் தங்கக்காசும், சதகாக் கொடுத்தல் சுன்னத்தாம். அதுவே கப்பாறத்தாம்.

(264.) சுன்னத்தான முழுக்குகளெவை?

வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குமுன்னும் இரண்டு பெருநாட்களிலும் றமலான்மாசம், இரவு காலங்களிலும் சூரிய கிராணம் சந்திரகிராணம் பிடித்தாலும் மழைதேடித் தொழவும் மய்யித்தைக் குளிப்பாட்டினாலும் காபிர் இஸ்லாமிற் புகுதவும் மக்கத்திற் புகுதவும். மதீனத்திற் புகுதவும். ஹஜ்ஜுக்கு. அல்லது. உம்றாவுக்கு இஹ்றாம். கட்டச் சற்றுமுன்னும் தவாபு செய்ய முன்னும் தலை உரோமம் இஆனத்து உரோமம் கமுக்கட்டு உரோமம்நகம். களைந்தாலும் இரத்தங் குற்றிவாங்கினாலும். கொம்பு வைத்தாலும். பயித்தியம். போதக்கேடு ஜன்னி. ஜதுபு. முதலியவைகளிலிருந்து தெளிந்தாலும் ஆண்டில் முதன்முதல் மழைபெய்தாலும் சரீரத்தின் வாடைநிறம்பேதமானாலும் அய்யாமுத்த ஷரீக்கெனும் மூன்று நாட்களிலும் ஜம்றத்துல் அகபா ஜம்றத்துல் வுஸ்தா ஜம்றதுல் ஊலாவெனும். மூன்றுதானங்களிலும் கல்லெறிவதற்கும் அறபா. முஸ்தலிபா. மீனா. எனும் தானங்களிற் றரிப்பதற்கும் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் கபுறை சியாறத்துச்செய்யவும் மற்ற நபிமார்கள் ஒலிமார்களுடைய கபுறைசியாறத்துச் செய்யவும் முழுக்கு விதித்தது சந்தேகமாகி முழுக்கு வாஜிபில்லை எனத் தரிபடுத்தியபோதும் ஸ்நானம் செய்தலாம்.

மேலே சொல்லப்பட்ட முழுக்குகள் அறுபத்திநான்கும். சுன்னத்தான முழுக்குகளாம்.

(267.) வெள்ளிக்கிழமையில். எந்நேரத்தில் ஸ்நானஞ்செய்தல்வேண்டும்?

வெள்ளிக்கிழமை. பஜ்றுசாதிக்குப்பின் ஜும்ஆவில் தொடுக்கும் வரைக்கும் ஸ்நானம் பண்ணலாம்.

ஜும்ஆவிற்செருடுக்கச் சற்றுமுன் ஸ்நானம்செய்தல் அபுளலாம்.



(268.) சுன்னத்தான முழுக்குகளில் ஏற்றமான முழுக்கியாது?

ஜும்ஆவுடைய முழுக்காம்.

(269.) ஜும்ஆவுடைய முழுக்கு பெண்களுக்கும் சுன்னத்தாக்கப்பட்டதா?

ஜும்ஆ வாஜிபில்லாதவர்களாயிருந்தாலும் ஜும்ஆவுக்கு ஹாவிருகத் தகாதவர்களாயிருந்தாலும், ஸ்நானஞ்செய்தல் பெண்களுக்கு சுன்னத்தாம்.

(270.) இரண்டு பெருநாட்களிலும் எந்நேரத்தில் ஸ்நானஞ்செய்தல்வேண்டும்?

பெருநாளிரவின் மூன்றும்சாமம் தொடுத்து பொழுதஸ்தமிக்கும் வரைக்கும் ஸ்நானஞ் செய்யலாம்.

---

## அல்பாபுல் காமிசு பீபயானில் நஜாசதி.

(ஐந்தாம்பாபு நஜீசைப்பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில்நஜாசதி.

## க-ம் பிரிவு.

(271.) தொழுகையின் நான்காம் ஷறுத்தியாது?

தொழுபவனின் உடம்பும் அவனணைந்திருக்கும் உடையும் தொழும் ஸ்தானமும் துப்பரவாயிருத்தலாம்.

(272.) தொழுபவனின் உடம்பும்,உடையும்,தொழும் ஸ்தானமும், எவ்வாறு துப்பரவாயிருத்தல்வேண்டும்?

நஜீசில்லாமல் துப்பரவாயிருத்தல்வேண்டும்.

(273.) நஜீசாவதியாது?

தொழுகை சிஹத்தாகுதலை விலக்கியக்கும் அருவருப்பானதே, ஷறஇல் நஜீசாம்.

(274.) நஜீசு எத்தனைவகைப்படும்?

மகுபுவ்வுன் அன்கு, கைறுமகுபுவ்வுன் அன்கு, என இரண்டுவகைப்படும்.

(275.) முகுபுவ்வுன் அன்கு ஆகிய நஜீசு என்பதின் பொருள்யாது?

தொழுகைக்குப் பொறுக்கப்படத்தக்க நஜீசு என்பதாம்.

(276.) கைறு மகுபுவ்வுன் அன்கு வாகிய நஜீசு என்பதின் பொருள்யாது?

தொழுகைக்குப் பொறுக்கப்படாத நஜீசு என்பதாம்.

(277.) தொழுகைக்குப் பொறுக்கப்படாத நஜீசுகளெவை?

மலம், ஜலம், மதி, வதி, சத்தி, இரத்தம்,சலம், ஊனம், ஆகியவைகளும் மனிதன், மீன், விட்டில் எனும் மூன்றையுந்தவிரச் செத்தவையடங்கலும் புசிக்க ஆகாத ஊயவர்னின் எலும்பு, தோல்கொம்பு, பல்சதை உரோமம், கள்ளு,நாய்.பன்றி இவ்விரண்டா லொன்றுக்கு அல்லது எவ்வித ஊயுவானிலாவது பிறந்தகுட்டி ஆகியவைகளே பொறுக்கப்படாத நஜீசுக்களாம்.

278.) தொழுகையிற் பொறுக்கப்பட்ட நஜீசுகளெவை?

மூட்டை, தெள்ளு, ஒலுங்கு, ஈசல், ஈயின் இரத்தம், தன்னுலுடைந்தஙிலந்தி முதலியதின் இரத்தம். வவ்வாலுடைய நீர், மலம், ஈயின் மலம், ஆகியவைகள் மிகுத்திருத்தலும் நாய், பன்றியல்லாதவைகளின் இரத்தத்தில் இரத்தம் கொஞ்சமும், ஹைலு, பொன்மூக்குடைதலின் இரத்தம் ஆகியவைகளில் கொஞ்சமும், பொறுக்கப்பட்ட நஜீசுகளாம்.

(279.) மதியாவதியாது?

சொற்ப சம்வத்தினால் மென்மையாய் மஞ்சள்அல்லது வெண்மை நிறமுடையதாய் தகறினால் வெளியாகும் நீராம்.

(280.) வதியாவதியாது?

பெரும்பாலும் சிறுநீருக்கிருந்த பின்னும் பாரமானவைகளைச் சுமந்தபோதும் வெளியாகும் கலங்கிய வெண்ணிறமான நீராம்.

---

## அல்பஸ்லுத்தானி பீபாபில் நஜாசதி.

## ௨-ம் பிரிவு.

(281.) முத நஜ்ஜிசு என்பதின் பொருள்யாது?

நஜீசுபட்ட வஸ்துடங்கலும் முதநஜ்ஜிசாம்.



(282.) முதநஜ்ஜிசை யாதுசெய்தல்வேண்டும்.

யாதேனு மொன்றில் நஜீசு பட்டு முதநஜ்ஜி சாகிவிட்டால் கழுவுதலின் ஷறுத்தின்படி கழுவித்துப் பாவுசெய்தல் வேண்டும்.

(283.) எவ்வாறு நஜீசைக் கழுவவேண்டும்.

நஜீசானதில் ஜலம் ஊற்றி அந்த நஜீசின் கோலம் நீங்கும்வரைக்கும் நன்றாய்த் தேய்த்துக் கழுவவேண்டும்.

(284.) நஜீசைக் கழுவுதலில் ஷறுத்துமுண்டோ?

1. நஜீசைக் கழுவும்போது அதின் வாடை, நிறம், சுவை ஆகியவைகளை நீக்குதலே ஷறுத்தாம்.
2. நிறமும் வாடையு மிருந்தாலும் அல்லது சுவைமாத்திர மிருந்தாலும் துப்பரவாகாது.

நிறம் மாத்திரம் அல்லது வாடைமாத்திரம் நீங்காவிட்டால் குற்றமில்லை.

(285.) பார்வைக்குத் தோற்றத்தக்க நஜீசை எவ்வாறு சுத்திபண்ணுதல் வேண்டும்?

பார்வைக்குத் தோற்றத்தக்க நஜீசை இந்த பஸ்லின் 284 - மிலக்கவினாவின்விடையிற் சொல்லியபடி கழுவிச் சுத்திபண்ணுதல் வேண்டும்.

(286.) பார்வைக்குத் தோற்றாத நஜீசை எவ்வாறு சுத்திபண்ணுதல்வேண்டும்?

பார்வைக்குத் தோற்றாத நஜீசில் அதை அடைய வளையத்தக்கதாய்ச் சலத்தையூற்றி ஓடப்பண்ணவேண்டும்.

(287.) முகல்லளா எனும் கனமான நஜீசாவதியாது?

நாய், பன்றி, எனு மிரண்டுமே நஜீசு முகல்லளாவாம்.
நாய், பன்றி, எனு மிரண்டிலுமுள்ள யாதேனு முறுப்புக்கள் ஈரமாயிருக்கும்போது பட்டால் புதிய சலம் விட்டு எழுதரங் கழுவல்வேண்டும்.

எழுதரத்தில் ஒருதரம் மண்ணோடு விரவிக் கழுவுதல்வேண்டும். சலம்படுந் தானமெல்லாம் மண்ணும் படவேண்டும்.

முகல்லளாவினால் மண்தனை நஜீசானால் சலத்தினாற் கழுவுதலே போதுமானதாம்.

(288.) முகப்பபா வெனும் இலேசாக்கப்பட்ட நஜீசாவதியாது?

பால் மாத்திரங் குடிக்கும் சிறு ஆண் குழந்தையின் சிறுநீரே முகப்ப பாவாகிய நஜீசாம்.

(289.) முதவஸ்ஸிதா எனும் நடுத்தரமாக்கப்பட்ட நஜீசாவதியாது?

மேலே 287-ம் இலக்க வினாவின்விடையிற் சொல்லப்பட்ட முகல்லளாவாகிய நஜீசையும் 288-ம் இலக்கவினாவின்விடையிற் சொல்லப்பட்ட முகப்பாவாகிய நஜீசையுந் தவிர மற்ற எல்லா நஜீசுக்களும் முதவஸ்ஸிதாவாகிய நஜீசாம்.

முதவஸ்ஸிதாவாகிய நஜீசை அந்நஜீசு நீங்கும்படி ஒருதரங் கழுவுதலே வாஜிபாம். அதை மூன்றுதரங் கழுவுதல் அபுளலாம்.

(290.) முகல்லளாவாகிய நஜீசு உண்டாயிருத்தல் திட்டமான வழியால் நடக்கலாமா?

பாதை முகல்லளாவாகிய நஜீசு உடையதாயிருந்தும் அதிலுள்ள சேறு, சுரி, கால் முதலிய உறுப்புக்களில் அல்லது உடையில் கொஞ்சமாய்த் தெறித்துப் பிரிந்து தோற்றுவிட்டால் பொறுக்கப்படும். அவ்வழியால் நடக்கலாம்.

---

## அல்பாபுஸ்ஸாதிசு பீபயானில் கலாயி வல் இஸ்தின்ஜாயி.

(ஆறம்பாபு மலசல மோசனம் செய்தலையும் துப்பரவு செய்தலையும் பற்றியது.)

(291.) எவ்வாறு மலசல மோசனஞ் செய்தல்வேண்டும்.

பாதரட்சை யணிந்து, தலையை மூடி, கிபுலா, சூரியன், சந்திரன் ஆகியவைகளை முன்னோக்காமலும், பிற்காட்டாமலும், உடையை இடது காலிற் பொறுப்பாய் மெல்ல மெல்ல உயர்த்தி, அல்லது கால்சட்டை, சிறுவால் முதலியதை மெல்லமெல்லத் தாழ்த்தி, தலையிலும் இருசென்னையிலுங் கைவைக்காமல், பேசாமற், பல்குற்றாமல், மிஸ்வாக்குச் செய்யாமல், அதிகநேரப் படுத்தாமல் மலசல மோசனஞ் செய்தல்வேண்டும்.

(292.) மலசல மோசனஞ் செய்ய நினைந்தவனுக்கு சுன்னத்தான கருமங்களெவை?

மலசல மோசனஞ் செய்யுந் தானத்திற் செல்லும்போது இடது காலை முற்படுத்தலும் வலுப்பமாகிய திருநாமங்கள் குறுஆன் ஹதீது இல்முடைய எழுத்துக்கள் ஆகியவைகளை மெழுகுப்புடவை, முதலியதில் வைத்து மறைக்காவிட்டால் சுமக்காதிருத்தலுமாம்.



(293.) மலசல மோசனஞ் செய்பவனுக்கு சுன்னத்தான கருமங்களெவை?

மலஞ்சலத்தின் வாடையை மனிதர் எத்திக்கொள்ளக்கூடாத தூரத்திலிருத்தலும் ஒரு முழத்தின் மூன்றிலிருபங்கு உயரமுள்ள வோர் மறைவில் மூன்றுமுழ தூரத்துக்குள் பட்டஸ்தானத்திலிருத்தலுமாம்.

(294.) மலசல மோசனஞ் செய்பவனுக்கு எவ்வெக் கருமங்கள் ஹறாமாகும்?

வெட்ட வெளியில் கிபுலாவுக்கு முன்னோக்கியிருத்தல், அதற்குப் பிற்காட்டியிருத்தல்ஆகிய இரண்டு கருமங்களுமாம்.

(295.) மலசல மோசனஞ் செய்பவனுக்கு மகுறூகாகுங் கருமங்களெவை?

மலசல மோசனஞ் செய்பவன் தேவையுள்ள பேச்சைத் தவிர அதிகமாய்ப் பேசுதலும், படித்தலும், புசித்தலும், குடித்தலும், மிசுவாக்குச் செய்தலும், பல்லைக்குற்றுதலும், மூக்குச் சீறுதலும், பேன் குற்றுதலும், கண்மூடுதலும், தலையை முழந்தாளின்மேல் வைத்தலும், சாய்ந்திருத்தலும் கையை சென்னையில் வைத்தலும், ஆகியவைகளே மகுறூகாம்.

(296.) மலசல மோசனஞ் செய்யத்தகாத இடங்களெவை?

1. நதி, நீர்நிலை, நெருப்பு, சாம்பர், மனிதர்கூடுந்தானம், வழி, உணவுக்கேற்ற கனி உதிரும் மரத்தின்கீழ், பொந்துப்புடை, காற்றெதிர்ப்பு, கல்லு, கண்டித்த நிலம் (மகுபறு) மய்யித்தடக்கப்படுந் தானம், எலும்பு, உணவு என்பவைகளாம்.
2. இவைகளில் மலசல மோசனஞ் செய்தல் மகுறூகாம்.

(297.) மலசல மோசனஞ் செய்தபின் யாதினால் துப்பரவு செய்தல்வேண்டும்?

1. மலசல மோசனஞ் செய்தால் சலத்தினால் அல்லது கல்லினாற் சுத்திசெய்தலே வாஜிபாம்.
2. துபுறின் வட்டவளயத்திலும், கதனுவளைக்கு வெளியிலும், பெண்களின் பறுஜின் உதட்டருகின் வெளியிலும், நஜீசுபட்டிருந்தால்

கல்லினால் துப்பரவு செய்தாலும், சலத்தினாலும் கழுவவேண்டும். அப்படி சலத்தினால் துப்பரவு செய்தலே வாஜிபாம்.

3. சலத்தினால் அல்லது கல்லினால் துப்பரவு செய்தலில் நஜீசு அதின் கோலத்துடன் நீங்குதல்ஷறுத்தேயன்றி அத்தலம் சரசரப்பாயிருத்தல் ஷறுத்தல்ல.

4. சுத்திசெய்யும்போது நோம்பாளி அல்லாதவர்கள் விரலை இறைவனையும் செலுத்திக் கழுவுதல் சுன்னத்தாம்.

5. கல்லினால் துடைப்பதில் மூன்றுகற்களால் அல்லது ஓர் கல்லின் மூன்றருகுகளால் துடைத்தல்வேண்டும்.

6. கல்லால் துப்பரவுசெய்தபின் சலத்தினாற் கழுவுதல் ஏற்றமாம்.

(298.) மலசல மோசனஞ் செய்து துப்பரவுசெய்ய முன்யாது செய்தல்வேண்டும்?

மோசனஞ்செய்த தானத்தைவிட்டுச் சற்றே தள்ளியிருந்து நன்றாய்க்கனைத்து இடது கனிஷ்டவிரலால் துபுறக்குமேலே யுள்ள நரம்பின்மேல் பொறுக்கவைத்து பீசம் அல்லது பெண்களின் அபீம் வரைக்கும் இழுத்துவிடல் வேண்டும்.

(299.) மலசல மோசனஞ்செய்யப் போகும்போது ஓதவேண்டிய தியாது?

பிஸ்மில்லாஹி அல்லாகும்ம இன்னீ அஊதுபிக மின்ல் குபுதி வல் கபாயிதி என்பதாம்.

(300.) மலசல மோசனஞ்செய்து அத்தானத்தை விட்டுப் புறப்படும்போது ஓதவேண்டிய தியாது?

குபுறானக அல்கம்து லில்லாஹில்லதீ அதுகப அன்னியல் அதா வகபானீ என்பதாம்.

---

## அல்பாபுஸ் ஸாபிஉ பீபயானி சதுறுல் அவுறதி.

(ஏழாம்பாடம் அவுறத்தை மறைத்தலைப் பற்றியது.)

(301.) தொழுகையின் ஐந்தாம் ஷறுத்தியாது?

அவுறத்தை மறைத்தலே தொழுகையின் ஐந்தாம் ஷறுத்தாம்.



(302.) அவுறத்தாவ தியாது?

ஆடவர்களுக்கும் வெள்ளாட்டிகளுக்கும் முழந்தாளுக்குந் தொப்புளுக்கு மிடையிலுள்ள மேனியடங்கலுமாம் (ஹுற்றத்து) நாட்டான்மகளாகிய பெண்களுக்கு மணிக்கட்டுவரைக்கும் இரண்டு கையும் முகமுமல்லாத மேனியடங்கலுமாம்.

(303.) அவுறத்தை எவ்விதமாய் மறைத்தல் வேண்டும்?

அவுறத்தின் மேற்புறமும் சூழவும் மறைத்தல் வாஜிபாம்.

(304.) எவ்வெக் கருமங்களுக்காய் அவுறத்தை மறைத்தல் வாஜிபாகும்?

1. தொழுதல் தவாபுசெய்தல் குதுபா ஓதுதல் ஆகியவைகளுக்காய் அவுறத்தைமறைத்தல் பெரும்பாலும் வாஜியாம்.

2. மேற்சொல்லியவைகளுக்காக மாத்திரமல்ல எப்போதும் அவுறத்தை மறைத்தல் வாஜிபாம்.

நஜ்சான உடையினால் அல்லது வேறே உடுக்கத்தக்கவையில்லாதபோதில் பட்டுடையினால் தனித்த இடத்திலானாலும்சரி அவுறத்தைமறைத்தல் வாஜிபாம்.

தனித்தஇடத்தில் தொழுகையல்லாததில் ஆண்பிள்ளை முன்துவாரத்தையும் பின்துவாரத்தையும் பெண்கள் முழந்தாளுக்குந் தொப்புளுக்கு மிடையிலுள்ளதையும் மறைப்பது வாஜிபாம்.

(305.) எவ்வித உடை உடுத்தல்வேண்டும்?

சரீரத்தின்நிறம் தோற்றத்தக்க உடையையும் ஹறுமாக்கப்பட்ட உடையையுந் தவிர மற்ற எவ்வித உடையுந் தரிக்கலாம்.

(306.) ஹறுமாக்கப்பட்ட உடையாவது யாது?

நஜீசினால் உண்டாக்கப்பட்டது, நஜீசுப்பட்டது, பட்டு, பிறருடையது, முதலியவைகளாம்.

(307.) பட்டுவஸ்திரமும் நஜீசுபட்ட பருத்தி வஸ்திரமுமுடையவன்யாது செய்தல் வேண்டும்?

தொழும்போது பட்டு வஸ்திரத்தையும் மற்ற நேரங்களில் நஜீசுபுரண்ட பருத்திவஸ்திரத்தையுந் தரித்துக் கொள்ளுதல்வேண்டும். ஒருவனிடம் பட்டுவஸ்திரமும் பிறனுடைய பருத்திவஸ்திரமுமிருந்தால் பிறனுடைய வஸ்திரத்தைத் தரித்தலாகாது.

(308.) பட்டும், பருத்தியுங், கலந்த வஸ்திரந் தரிக்கலாமா?

1. பட்டும் பருத்தியுங் கலந்ததில் கொஞ்சமேனும் பருத்தி அதிகமானதே நன்று அப்படிப்பட்ட வஸ்திரந் தரித்தல் மகுறூகல்ல.

2. பட்டும் பருத்தியும் சரிசரியாய்க்கலந்த வஸ்திரந் தரித்தல் மகுறூகு.

3. நூலிற் சாயங்காச்சி நெய்த வஸ்திரந் தரித்தல் மகுறூகல்ல.

4. வஸ்திரத்தில் வெண்மையானதும் பின்பு சிவந்த சாயநூலால் நெய்ததும் வரிசையானதாம்.

(309.) வஸ்திரத்தை யிழந்தவன் யாதுசெய்தல் வேண்டும்?

வஸ்திரத்தை இழந்தவன் குழைகளால் மறைத்துத் தொழுதல் வேண்டும் குழையில்லாவிட்டால் களிமண்ணைப் பூசிக்கொண்டு தொழவேண்டும் களிமண்ணு மில்லாவிட்டால் வாஜிபாக நிர்வாணியாய்த் தொழலாம் அத்தொழுகையை கலாச்செய்தல் வேண்டும்.

(310.) நஜிசாகிய வஸ்திரம் வைத்திருப்பவன் யாதுசெய்தல் வேண்டும்?

ஒருவனிடம் நஜிசான வஸ்திரமிருந்து அதைக் கழுவிக்கொள்ளவிலாவிட்டாலும் பிறனிடம் வஸ்திரமிருந்தும் அவ்வயவன் இரவலாய்க் கொடாவிட்டாலும் நிர்வாணியாகத் தொழலாம்.

---

## அல்பாபுல் தாமினு பீபாபில் இஸ்திகுபாலுல் கிபுலதி.

(எட்டாம்பாபு கிபுலாவை நோக்குதலைப் பற்றியது.)

---

(311.) தொழுகையின் ஆறும் ஷறுத்தியாது?

தொழும்போது கிபுலாவுக்கு முன்னோக்கிக் கொள்ளுதலாம்.

(312.) கிபுலாவாவ தியாது?

மேன்மையாகிய மக்கா ஷரீபில் அபுல்பஷறு ஆதம் அலைகிஸ்ஸலாம் தொடுத்து இதுகாலவரையில் பதினான்கு பெயர்களாற் பரிவாரம் பார்க்கப்பட்ட திருஸ்தலமாகிய கஃபத்துல்லாவே கிபுலாவாம்.



(313.) தொழுபவனின் உடம்பில் எவ்விடம் கிபுலாவுக்கு நேரேயிருத்தல்வேண்டும்?

1. தொழுபவனின் நெஞ்சு கிபுலாவுக்குநேரே யிருத்தல்வேண்டுமேயன்றி முகத்தினால் நோக்குதல் ஷறுத்தல்ல.

2. முகத்தை கிபுலாவை விட்டுத் திருப்புதல் மகுறூகாம்.

கப்பற் சுக்கானிமுதலிய வேலைக்காரர்களைத் தவிரக் கப்பலிற் றொழுபவர்களெல்லாம் தொழுகையில் கிபுலாவை முன்னோக்குதல்வேண்டும்.

கப்பலில் தொழும்போது கப்பலைக் காற்றுத் திருப்புதலாலும் கிபுலாவை விட்டுச் சறுகிவிட்டால் உடனே நெஞ்சை கிபுலாவுக்கு நோக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

தொழுபவனின் நெஞ்சு (ஐன் கிபுலா) எனும் கஃபத்துல்லாவின் குறிப்புக்குநேரே யிருத்தலென்பதே யன்றி கஃபாவின் திசையளவிற் றிரும்புதலெனக் கொள்ளலாகாது.

(314.) கிபுலாவை முன்னோக்காமல் தொழலாமா?

ஆம் பயங்கரம் கடுமையானபோதில் தொழும் தொழுகையையும் (சபர்முபாஹு) ஷறஇல் ஆமாக்கப்பட்ட சபரில் தொழும் (நபில்) சுன்னத்துத் தொழுகையையும் தொழலாம்.

(315.) பயங்கரங் கடுமையானபோதில் எவ்வாறு தொழவேண்டும்?

எப்படித்தொழ வசதியாயிற்றோ அப்படித் தொழலாம்.

(316.) ஆமான சபராவ தியாது?

1. பாவமில்லாத எக்கருமத்துக்காவது பிரையாணப்படும் யாத்திரையாம்.

2. அது கட்டையானதானாலும் சபர்தான்.

3. யாத்திரை பிரையாணம் முதலிய தமிழ்ச்சொல்லுகளும் சபர் எனும் அறபுச்சொல்லும் ஒரே அருத்தமுடையன.

(317.) ஆமான சபர் என்பதனால் யாது நீங்கிற்று?

பயலும் வெள்ளாட்டியும் ஒளித்தோடும் பிரையாணம் சினச்செய்ய வட்டி வியாபாரஞ்செய்யப்போகும் பிரையாணம் முதலியவைகளும் இதை சேர்ந்தவைகளும் நீங்கிற்று.

(318.) ஆமான சபர் செய்பவனின் தொழுகையில் வாஜிபாகுங் கருமங்களெவை?

நபில் தொழுகையில் றுகூஉ செய்யும்போதும் சுஜூது செய்யும் போதும் கிபுலாவை நோக்கிக் கொள்ளுதலும் அவ்வல் தகுபீரை மொழியும்போதில் கிபுலாவைநோக்கிக் கொள்ளுதலுமாம்.

மற்றவைகளைத்தான் நாடிச்செல்லுந் திசையளவில் முன்னோக்கிச்செய்தல் வேண்டும்.

கிபுலா அளவிலேயே யன்றித் தான் நாடிச்செல்லுந் திசையை விட்டுத் திரும்புதல் ஹறாமாம்.

(319.) கிப்லாத் தெரியாமல் மயங்கினவன் யாதுசெய்தல் வேண்டும்?

1. கிபுலாத்தெரியாமல் மயங்கினவனும் குருடனும் தெரிந்தவர்களிடம் வினவவேண்டும் அல்லது பெரும்பாலார் தொழும்மிஃறாபை ஊணுதல் பிடித்துக்கொள்ள வேண்டும் அது வாஜிபாம்.
2. ஒருவன் தனித்தபோது கிபுலாத் தெரியாவிட்டால் யாதேனு மோர் திசையைநோக்கித் தொழுது பின்பு கிபுலாவை அறிந்த உடன் கலாச்செய்தல்வேண்டும்அப்படிகலாச்செய்தல்வாஜிபாம்.

(320.) கஃபாவுக்குள்ளே தொழுபவன் எவ்விடத்தை முன்னோக்குதல் வேண்டும்?

கஃபாவின் அடைக்கப்பட்ட வாயிலையாவது ஒருமுழத்தின் மூன்றிலிருப்பங்கு உயரமுள்ள வாயில்படியையாவது முன்னோக்கிக் கொள்ளவேண்டும்.

கஃபாவின் மதிளுடன்சேர்ந்த ஹஜ்று இஸ்மாயீலைத்தவிர கஃபாவின் மதிள்களில் எப்புறத்து மதிளையாவது முன்னோக்கிக் கொள்ளலாம்.

---

## அல்பாபுல் தாசிஉ பீபயானி அவுகாதிஸ்ஸலாதி.

(ஒன்பதாம்பாபு தொழுகையின் வகுத்துக்களைப் பற்றியது.)

(321.) தொழுகையின் எட்டாம் ஷறுத்தியாது?

வகுத்தை யறிதலாம்.



(322.) தொழுகையின் வகுத்துக்களெத்தனை?

1. இந்த அதிகாரத்தின் 1-ம் பாபின் 1-ம் பஸ்லில் 7-ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லியபடி ஐந்து வகுத்துக்களாம்.
2. வகுத்து என்பது நேரம் எனப் பொருள்படும்.

(323.) ளுஹறுடைய வகுத்தாவ தியாது?

பொழுது மத்தியைவிட்டுச் சறுகியநேரம் முதல் ஒருவஸ்துவின் நிழல் அதின் நீளம்போலாகும்வரைக்கும் ளுஹறுடையவகுத்தாம்

(324.) அசறுடைய வகுத்தாவ தியாது?

ஒருவஸ்தின் நிழல் அதின் நீளம் போலானது தொடுத்துச் சூரியன் அஸ்தமிக்கும் வரைக்குமாம்.

(325.) மஃரிபுடைய வகுத்தாவ தியாது?

சூரியன் அஸ்தமித்தநேரந் தொடுத்து செம்மேகம் மறையும் வரைக்குமாம்.

(326.) இஷாவுடைய வகுத்தாவ தியாது?

செம்மேகம் மறைந்தது தொடுத்து (பஜ்றுசாதிகு) மெய்வெள்ளை தோன்றும் வரைக்குமாம்.

(327.) சுபுஹுடைய வகுத்தாவ தியாது?

(பஜ்றுசாதிகு) மெய்வெள்ளை தோன்றியநேரந் தொடுத்து சூரியன் உதிக்கும் வரைக்குமாம்.

(328.) வகுத்துக்களிற் பிரிவுகளுண்டோ?

1. ஆம் அவ்வல் வகுத்து நடுவகுத்து ஆகிறு வகுத்து என மூன்று பிரிவுகளுண்டாம்.
2. எல்லா ஒவ்வொரு வகுத்திலும் அம் மூன்று பிரிவுகளுமுண்டு.
3. எல்லா ஒவ்வொரு தொழுகையையும் அதின் அவ்வல் வகுத்தில் தொழுதல் சுன்னத்தாம்.

வகுத்து வந்தவுடன் வுலுச்செய்து வஸ்திரம் அங்கி தலைப்பாகையாதியவைகளை யணிந்து ஜமாஅத்தை வழிபார்த்தலாலும்அடிமை ஆகிறு வகுத்தில் உரிமைப் பெற்றுக் கொள்ளலாமெனும் நம்பிக்கையினாலும் தயம்மம் செய்து தொழுபவன் ஆகிறு வகுத்தில் வுலுச்செய்து தொழலாமென ஆதரவு வைத்தலாலும் அவ்வல் வகுத்துத் தப்புதல் அதின்வரிசையைத் தப்பிவிக்காது.

(329.) மகுறூகுஆகிய வகுத்துக்களென்ன?

1. சுபுஹுடைய பிறுலு தொழுதபின் சூரிய னுதிக்கும் வரையிலுள்ள நேரமும், பொழுது உதித்து ஒரு வல்லயப்பிரமாண முயரும் வரையிலுள்ள நேரமும், பொழுது மத்தியிலிருக்கும் நேரமும், அசறு தொழுதபின் சூரியன் அஸ்தமிக்கும் வரையிலுள்ளநேரமும், சூரியன் மஞ்சணித்து அஸ்தமிக்கும் வரையிலுள்ள நேரமும் மகுறூகாகிய வகுத்துக்களாம்.

2. மேலே சொல்லப்பட்ட வகுத்துக்களில் சிறப்பாகிய மக்காவின் ஹறத்தில் தொழலாம்.

3. வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு ஹாளிறுனவர்கள் கதீபுமின்பறில் இருந்த நேரம் முதல் குதுபா ஓதித் தீரும் வரைக்கும் யாதோர் தொழுகையுந் தொழுதலாகாது.

4 ஒருவன் தொழும்போது கதீபு மின்பறிலாகிவிட்டால் அத்தொழுகையைச் சுருக்கி முடித்தல் வாஜிபாம் அத்தொழுகை பறுலான கலாத்தொழுகையா யிருந்தாலுமாம் அதைக் கொஞ்சமாவது நீட்டலாகாது.

5. குதுபா ஓதும்போதில் பள்ளிக்குட் புகுந்தவன் தஹியத்துல் மஸ்ஜிதுத் தொழுகை தொழுவதும் அத்தொழுகையின் நிய்யத்துடன் ஜும்ஆவுடைய சுன்னத்துத் தொழுகையை நிய்யத்து வைத்துக் கொள்ளுதலும் சுன்னத்தாம் அதை நீட்டலாகாது அதை நீட்டித் தொழுதல் ஹறுமாம்.

(330.) மகுறூகாகிய ஐந்துவகுத்துகளில் எவ்வெத் தொழுகைகளைத் தொழுதல் மகுறூகு தஹ்ரீமாவாம்?

சபபில்லாத் தொழுகைகளையும் சபபுபிந்திய தொழுகைகளையும் தொழுதலாம்.

---

## அல்பாபுல் ஆஷிறு பீபாபில் அதானி வல் இகாமதி.

(பத்தாம்பாபு வாங்கையும் இகாமத்தையும் பற்றியது.)

(331,) அதானெனும் அறபுச்சொல்லின் பொருள்யாது?

இத்தேசவாசிகள் அதை வாங்கு என்பார்கள்.



(332.) எத்தனை ஷறுத்துக்களை யுடையவர்கள் வாங்கு இகாமத்துச் சொல்லுதல்வேண்டும்?

இஸ்லாம், தமயீசு, தறுதீபு, தொடர்பு, அறபால் மொழிதல், ஜமாஅத்துக்காகச் சொல்லும் வாங்கை அவர்களுக்குக் கேள்க்கத்தக்கதாய்ச் சொல்லுதல், அதின் ஹறுபுகளையும் ஷத்துக்களையும் இகுறுபுகளையும் பிசகறமொழிதல், சுபுகுநேரத்தின் முந்தின வாங்கல்லாததில் வகுத்துப் புகுதலை யறிதல், சிற்றூரிலுள்ளவர்கள் இவ்வாங்கை காதுதாழ்த்திக் கேட்க நினைந்தார்களேயானால் அவர்களுக்குக் கேள்க்கத்தக்கதாய்ச் சத்தத்தை யுயர்த்திக் கொள்ளுதல் ஒருவாங்கில் இரண்டு பெயர் கூட்டாகா திருத்தல் ஆகிய பத்து ஷறுத்துக்களையும் உடையவர்களாம்.

(333.) வாங்கு சொல்லத்தக்கவர்கள் யார்?

இனிமையான ஓசையும் வகுத்தை நன்றாயறிதலும் உடைய பாலிகானவர்களே வாங்கு சொல்லத் தக்கவர்களாம்.

வாங்கு சொல்லுபவனை (முஅத்தீன்) என்பார்கள் முஅத்தினோ மேலே சொல்லிய கருமங்களை யுட்கொண்டவனா யிருத்தல் சுன்னத்தாம்.

(334.) வாங்கின சுன்னத்துக்களெவை?

வுலூச்செய்துகொண்டு பள்ளிவாசலின் வலப்பக்கமா யோருயரத்தில் நின்று இரண்டிரண்டு தகுபீறை ஒவ்வோர் மூச்சிலும் மற்றவைகளை ஒன்றொன்றாயும் கடைசியில் நிறுத்தி எழுத்தறச் சொல்லுதலும், இரைந்து சொல்பவன் இரு கலிமா விரலையும் இருகாதுட் புகுத்தி அருட்சியுடையபோது வாங்கில் கூடியமட்டில் சத்தமிட்டு அஷ்கதுவைச் சொல்லமுன் சிற்றாக இரண்டு அஷ்கதுவையும் இரண்டிரண்டுதரம் சொல்லுதலும் கிபுலாவை முகத்தினால் முன்னோக்குதலும் தரிபட்டு நிற்குதலும் இரண்டு ஹைய அலஸ்ஸலாத்திலும் ஒருதரம் வலப்பக்கந் திரும்புதலும் இரண்டு ஹைய அலல்பலாஹிலும் ஒருதரம் இடப்பக்கமாய்த் திரும்புதலும் சுபுஹில் இரண்டுஹைய அலத்தைனிக்கும்பின் அஸ்ஸலாத்து கைறுன் மினன்நவ்மி என இரண்டுதரம் சொல்லுதலும் இகாமத்தை விரைந்து ஜமாஅத்துகளுக்குக் கேள்க்கத் தக்கதாய் அதின் ஒவ்வோர் வாக்கியங்களையும் வாங்கின் அரைவாசியாக்கி கதுகாமதிஸ்ஸலாத்து என இரண்டுதரம் சொல்லுதலு மாகியவைகளேயாம்.

(335.) வாங்கிலும் இகாமத்திலும் மக்ருறாகானவைக ளெவை?

வாங்கின் லபுலுக்களையும் இகாமத்தின் லபுலுக்களையும் அதிக மாய் நீட்டுதலும் இராகம் பாடுதலும் இடையில் பேசுதலும் வீண் பராக்குப் பார்த்தலும் நிற்கத்தக்கவர்கள் இருந்து சொல்லுதலும் ஜுனுபா யிருக்கும்போது சொல்லுதலு மாகியவைகளாம்.

(336.) வாங்கை பாத்திலாக்கிவிக்குங் கருமங்களெவை?

வாங்கு சொல்லும்போதில் முறுதத்தாகுதல் மயக்கம் போதக் கேடு பயித்தியம் ஆகியவைக ளுண்டாகுதல் நீளமாய் வாய்மூடு தல் நீளமாய்ப் பேசுதல் ஆகியவைகளே வாங்கை பாத்திலாக்கி விக்குங் கருமங்களாம்.

(337.) எவ்வெக் கருமங்களுக்காக வாங்கு சொல்லுதல் சுன்னத்தாம்.

1. போதக்கேட்டினல் விழுந்தவன், நீராக்கோபி, நீங்காத்துக்கமுடையவன், துஷ்டமிருகங்கள் ஆகியவைகளின் காதுகளிலும், நெருப்பினல் வேகுந் தானங்களிலும், ஜின் ஷைத்தான் கோட்டி கொள்ளும் இடங்களிலும், ஹதீது வஃலுசொல்ல ஆரம்பிக்கும்போதும், சபர்போகிறவர்ப் பயண மனுப்பும்போதும், வாங்கு சொல்லுதலும் இகாமத்துச் சொல்லுதலும் சுன்னத்தாம்.
2. பிள்ளைப் பிறந்தவுடன் அப்பிள்ளையின் வலக்காதில் வாங்கும் இடக்காதில் இகாமத்தும் சொல்லுதலும் சுன்னத்தாம்.
3. வபா, ஜுதரி, காய்ச்சல், குத்து, முதலிய முசீபத்துக்கள் உண்டானபோதிலும் கடிய காற்று மழை வெள்ளம் முதலியவைகள் உண்டான போதிலும் வாங்கு சொல்லுதலும் ஷறஆம்.

(338.) வாங்குக்கும் இகாமத்துக்கும் ஜவாபு சொல்லுதல் வேண்டுமா?

ஆம் வாங்குக்கும் இகாமத்துக்கும் ஜவாபு சொல்லுதல் சுன்னத்து ஜனும்.

வாங்கு சொல்லும்போதில் வுலுச் செய்துகொண் டிருந்தாலும் குறுஆன் ஓதிக்கொண்டிருந்தாலும் ஜுனுபா யிருந்தாலும் நிபாசுக்காரியா யிருந்தாலும் வாங்கின் சத்தங் கேட்டவுடன் மறுஹபன் பிஸ்ஸலாத்தி அஹ்லன் வசஹ்லன் வமறுகபன் பில்காயிலி அதில்ன் என்பதும் வாங்கின் ஒருகலிமாவாவது ஹறுபு விழங்கும்படி கேட்டால் அதின் தீர்ச்சியில் அதைப்போல் ஜவாபு சொல்லுதலும், அதிற் சிலதைக்கேட்டவன் கேட்டதுக்கும் கேள்க்கப்படாததுக்கும் ஜவாபு சொல்லுதலும் சுன்னத்தாம்,



நான்கு ஹைய அலாத்துக்கும் லாஹவுல வலாகுவ்வத இல்லாபில்லாகில் அலிய்யுல் அளீம் என்று நான்குதரம் சொல்லுதலும் சுபுஹில் சொல்லப்படும் அஸ்ஸலாத்து கைறுன் மினன்நவுமி எனும் இரண்டு தரத்துக்கும் ஒவ்வோர் தரத்துக்கு மொவ்வோர் தரம் சதக்த வபரிறுத்த வபில்ஹக்கி நதகுத என்று சொல்லுதலும், இரண்டு கதுகாம திஸ்ஸலாத்துக்கும் அகாம ஹல்லாஹு வஅதாமஹா மாதாம திஸ்ஸமாவாதி வல்அறுளி வஜ்அல்னீ மின்சாலிஹீன அஹ்லஹா என்று இரண்டுதரம் சொல்லுதலு மாகியவைகளே சுன்னத்தாம்.

வாங்கில் அஷ்ஹது அன்னமுகம்மதற்றசூலுல்லாஹி என்றுசொல்லியபின் அதுபோல் ஜவாபுசொல்லி இரண்டு பெருவிரல் நகத்தையும் முத்தி இரண்டு கண்ணிலுந்தடவி மறுஹபன் பிஹபீபி வகுற்றதுஐனீபிக யாறசூலல்லாஹி என்றோதுதலில் மிகுந்தபிரையோசனங்க ளுண்டாகுமெனப் பெரியோர்களாற் சொல்லப்பட்டன.

(339.) வாங்குக்கும் இகாமத்துக்கும் ஜவாபுசொல்லத் தகாதவர்கள் யார்?

ஜிமாஉ செய்பவர்களும் கலாவுக்கிருப்பவர்களும் இஸ்திஞ்சோ டிருப்பவர்களும் வாங்குக்கும் இகாமத்துக்கும் ஜவாபு சொல்லா திருத்தலே சுன்னத்தாம்.

மேற்சொல்லிய கருமங்களை விட்டுச் சொற்பநேரம் பிரிந்திருந்தால் முழுவதுக்கும் ஜவாபுசொல்லுதல் சுன்னத்தாம்.

போசனம் பானம் பண்ணுபவன் அக்கருமத்தை நிறுத்தாமல் ஜவாபு சொல்லலாம்.

படுப்பவன் எழும்பியிருந்தும் நடப்பவனும் வாகனக்காரனும் தரிபட்டும் ஜவாபு சொல்லுதல் முஸ்தஹப்பாம்.

(340.) வாங்குசொல்லித் தீர்ந்தவுடன் யாதுசெய்தல்வேண்டும்?

1. வாங்குசொல்லித் தீர்ந்தவுடனும் இகாமத்துச் சொல்லித் தீர்ந்த உடனும் துஆ ஓதுதல்வேண்டும்.
2. (துஆவாவது) அல்லாஹும்ம சல்லிவசல்லிம் வபாரிக் அலா செய்யிதினு முகம்மதின் வஆலிகி வசுஹ்பிகி வசல்லிம் அல்லாஹும்ம றப்ப காதிகித் தகுவதித்தாமதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆதிசெய்யிதினு முகம்மதினில் வசீலத வல்பளீலத வஷ்ஷறப வத்தறஜதல் றபீஅதல் ஆலியதஷ்ஷபீபதி வபுஅதுஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு வறுசுகுனு ஷபாஅதஹு வஅவ்ரிதுனு கவுளகு யவுமல் கியாமதி இன்னக லாதுகுலிபுல் மீஆது இன்னல்லாஹ வமலாயிகதஹு யுசல்லூன அலன்நபிய்யி யாஅய்யுஹல்ல

தீன ஆமனூசல்லூ அலைஹி வசல்லிமு தஸ்லீமா வசல்லல்லாஹு அலாகைரி கல்கிஹி செய்யிதிஞு முகம்மதின் வஆலிஹி வசகுபிஹி அஜ்மயீன் என்பதாம்.

3. மஃரிபுடைய வாங்கின் துஆவுக்கடுக்க அல்லாகும்ம காதா இகுபாலு லைலிக வஇதுபாறு நகாரிக வஅஸ்வாது துஆதிக பகுபிறுலீ என்றும் சுபுஹுடைய வாங்கின் துஆவுக்கடுக்க அல்லாகும்ம காதா இகுபாலு நகாரிக வஇதுபாறு லைலிக வஅஸ்வாது துஆதிக பகுபிறுலீ என்றும் ஓதுதல் வேண்டும்.

## அல்பாபுல் ஹாதீஅஷற பீபயானி

## ஸிபதிஸ்ஸலாத்தி.

## பதிஞேராம்பாபு. தொழுகையின்

## கைபிய்யத்தைப்பற்றியது.

## அல்பஸ்லுல்அவ்வலுபீபாபி

## ஸிபத்திஸ்ஸலாத்தி.

## க - ம் பிரிவு.

(341.) சிபத்துஸ்ஸலாத்து. என்னும் சொல்லின் பொருள்யாது?

தொழுகையுடையவன்னிப்பு என்பதாம்.

(342.) தொழுகையுடைய பறுலுக்களெத்தனை?

தொழுகையுடைய பறுலுக்கள்பத்தொன்பதாம்.

343. தொழுகையுடைய பத்தொன்பதுபறுலும் எத்தனைபிரிவுக்களை உடையது?

(கல்பு) இருதயத்தினால் நிறைவேற்றப்படுவது. சொல்லால் நிறைவேற்றப்படுவது. செயலால் நிறைவேற்றப்படுவது என. மூன்று பிரிவுக்களையுடையனவாம்.

கல்பால் நிறைவேற்றப்படும் பறுலாவது (நிய்யத்து) ஒன்றுமாம் சொல்லால் நிறைவேற்றப்படும் பறுலுக்களாவன தக்பீறு, பாத்திஹா அத்தஹிய்யாது, சலவாத்து, முந்தியசலாம், ஆகியஐந்துமாம். செயலால் நிறைவேற்றப்படும். பறுலுக்களாவன. நிலை, றுகூஉ, றுகூஇல்தரித்தல், இகுதிதால் அதில் தரித்தல், முதலாம். சுஜூது அதில் தரித்தல், நடு இருப்பு; அதில் தரித்தல், இரண்டாம்



சுஜூது, அதில்தரித்தல், அத்தஹிய்யாத்திருப்பு, தறுதீபு, ஆகிய பதின்மூன்று பறுலுக்களுமாம்.

(344.) தொழுகையுடைய முதலாம்பறுலு யாது?

நிய்யத்துவைத்தலே தொழுகையின் முதலாம் பறுலாம்.

(345.) தொழுகைக்கு எவ்வாறு நிய்யத்து வைத்தல் வேண்டும்?

நிய்யத்தின் ஷறுத்து, வாஜிபு, சுன்னத்து ஆகியவைகள் பிறழாமல் நிய்யத்து வைத்தல் வேண்டும்.

(346.) தொழுகையுடைய முதலாம் பறுலாகிய நிய்யத்தின் ஷறுத்துக்களெத்தனை?

தொழுகையின் செயல்களை நாடுதல், வக்த்தைக்குறித்தல், சிறுபிள்ளையானாலும் பறுலான தொழுகையைப் பறுலென்று குறித்தல், கலாத்தொழுகையாயின் கலாவென்றும் அதாத்தொழுகையாயின் அதாவென்றும் குறித்தல், மேலே சொல்லப்பட்டவைகளை விபரமாய்க் கல்பில் தரிப்பித்தல், நிய்யத்தை அவ்வல் தக்பீறுடன் சேர்த்தல், ஆகிய ஆறுமே நிய்யத்துடைய ஷறுத்துக்களாம்.

(347.) தொழுகையுடைய நிய்யத்தில் எத்தனைகருமம் வாஜிபாகும்?

தொழுகையின் செயலை நாடுதல், தொழும் தொழுகையைக் குறித்தல், பறுலான தொழுகையைப் பறுலெனக் குறித்தல், ஆகிய மூன்று கருமங்களுமாம்.

(348.) வக்த்தைக்கொண்டு கைதிடப்பட்ட நபில் தொழுகையின் நிய்யத்தில் எத்தனைகருமம் வாஜிபாகும்?

வக்த்தைக்கொண்டு கைதிடப்பட்ட நபில் தொழுகையின் நிய்யத்திலும் யாதேனும் சபபைக்கொண்டு கைதிடப்பட்ட நபில்தொழுகையின் நிய்யத்திலும் செயலை நாடுதல் தொழும் தொழுகையைக் குறித்தல்எனும் இரண்டு கருமங்களுமே வாஜிபாகுமாம்.

(349.) நபில் முதுலகுத் தொழுகையின் நிய்யத்தில் எத்தனை கருமம் வாஜிபாகும்?

தொழுகையின் செயலை நாடுதல் ஒன்றுமே நபில் முதுலகுத்தொழுகையின் நிய்யத்தில் வாஜிபாகுமாம்.

(350.) தொழுகையுடைய நிய்யத்தின் சுன்னத்துக்களெவை?

அல்லாவுக்காக என்பதை எடுத்துக் காட்டலும், அதாத்தொழுகையாயின் அதாவென்றும் கலாத்தொழுகையாயின் கலாவென்றும்

எடுத்துக்காட்டலும்,கிபுலா அளவில் முன்னோக்கிறேனென்பதை எடுத்துக்காட்டலும்,நகஅத்தின் தொகையைக் குறித்தலும்,தக்பீர்கட்டச் சற்றுமுன் மொழியத்தக்கவன் மொழிதலும்,நிய்யத்தின் சுன்னத்துக்களாம்.

---

## அல்பஸ்லுல்தானி பீபாபி ஷிபத்திஸ் ஸலாத்தி.

## உ-ம் பிரிவு.

(351.) தொழுகையுடைய இரண்டாம் பறுலு யாது?

தக்பீர் தஹற்றமே தொழுகையின் இரண்டாம் பறுலாம்.

(352.) தொழுகையின் துவக்கமான தக்பீறுக்கு தக்பீர் தஹற்றமெனும் நாமந்தரித்த காரணம்யாது?

தொழுகையிற் புகுதமுன் ஹலாலாயிருந்த.தொழுகையைப் பாசிதாக்கிவிக்கும் கருமங்களெல்லாம் அவ்வல் தக்பீர்தொடுத்து சலாங்கொடுக்கும் வரைக்கும் ஹறுமாயிருந்தவையாம்.

(353.) தொழுகையின் தக்பீறுவ யாது?

1. நிய்யத்தை (கல்பு) இருதயத்தில் ஹாளிருக்கிக்கொண்டு அல்லாகு அகுபர் என்று மொழிதலாம்.

2. பின்வருமாறு ஒவ்வோர் தொழுகைக்கும் தக்பீறு கட்டவேண்டும்.

ளுஹறுத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீபறுலல் ளுஹரி அறுபஅ றகஆதின் அதாஅன் முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

அசறுத்தொழுகையின் தக்பீறுவது உசல்லீபறுலல் அசரி அறுபஅ றகஆதின் அதாஅன் முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

மஃறிபுத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீபறுலல் மஃறிபி தலாத றகஆதின்அதாஅன் முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில்லாகிதஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

இஷாத்தொழுகையின் தக்பீறுவது உசல்லீ பறுலல் இசாஇ அறுபஅ றகஆதின் அதாஅன் முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில் லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.



சுபுஹுத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீபறுலல் சுபுஹிறகஅதைனி அதாஅன் முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

ஜும்ஆத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ பறுலல்ஜும்ஆ றகஅதைனி முஸ்தகுபிலன் இலல்கஃபதி ஷரீபதினில்லாகி தஆலாஅல்லாகு அகுபர் என்பதாம்.

ளுஹறுடைய முந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல் ளுஹரி றகஅதைனி கபுலிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர்என்பதாம்.

ளுஹறுடைய பிந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல்ளுஹரி றகஅதைனி பகுதிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

அசறுடைய முந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல் அசரி றகஅதைனி கபுலிய்யதன் லில்லாகிதஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

மஃறிபுடையபிந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல் மஃறிபி றகஅதைனி பகுதிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

மஃறிபுடைய பிந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல் மஃறிபி றகஅதைனி பகுதிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

இஷாஉடைய முந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னத்தல் இஷாஇ றகஅதைனி கபுலிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

இஷாஉடைய பிந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீசுன்னதல் இஷாஇ றகஅதைனி பகுதிய்ய தன் லில்லாகிதஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

சுபுஹுடைய முந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவதுஉசல்லி சுன்னதல் சுபுஹி றகஅதைனிகபுலிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

ஜும்ஆ உடைய முந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னதல் ஜும்ஆ றகஅதைனி கபுலிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

ஜும்ஆ உடைய பிந்தின சுன்னத்துத் தொழுகையின் தக்பீறுவது உசல்லீ சுன்னதல் ஜும்ஆ றகஅதைனி பகுதிய்யதன் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர்என்பதாம்.

வித்றுத்தொழுகையின் தகுபீறுவது உசல்லீ சுன்னதல் வித்ரி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம். அத்தொழுகையின் தனிமையான ஒருறகஅத்துக்குத் தகுபீறுவது உசல்லி சுன்னத றகஅதன் மினல்வித்ரி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

இஷ்றாக்குத் தொழுகையின் தகுபீறுவதுஉசல்லீ சுன்னதல்இஷ்றாகி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

ளுஹாத்தொழுகையின் தகுபீறுவது உசல்லீ சுன்னதல் ளுஹா றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

தஹிய்யத்துத் தொழுகையின் தகுபீறுவது உசல்லீ சுன்னதல் தஹிய்யதுல் மஸ்ஜிதி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

இஸ்திகாறுத் தொழுகையின் தகுபீறுவது உசல்லீ சுன்னதல் இஸ்திகாறு றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

அவ்வாபீன் தொழுகையின் தகுபீறுவது உசல்லீ சுன்னதல் அவ்வாபீன றகஅதைனி லில்லாகிதஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

தஸ்பீஹுத் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீ சுன்னதல் தஸ்பீஹி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதும் அத்தொழுகையின் நான்கு றகஅத்துகளையும் ஒருசலாமில் தொழுபவன் உசல்லீ சுன்னத்தல் தஸ்பீஹி அறுபஅ றகஆதின் லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதுமாம்.

நோன்புப் பெருநாள் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீ சலாதல் ஈதில் பித்ரி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீ சலாதல் ஈதில் அழ்ஹா றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

சூரியகிராணத் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீசுன்னதல்ஸலாதல்கு குசூபிஷ்ஷம்ஷி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

சந்திரகிராணத் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீ சலாதல் குசூபில் கமரி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர



மழைதேடித் தொழும் தொழுகையினுடைய தகுபீறுவது உசல்லீ சலாதல் இஸ்திஸ்காஇ றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

தறாவீஹுத் தொழுகையுடைய தகுபீறுவது உசல்லீ சலாதல் தறாவீஹி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம். தறாவீஹு இருபது றகஅத்து மேலேசொல்லிய பிரகாரம் பத்துத்தரந்தகுபீர் கட்டவேண்டும்.

(354.) தொழுகையின் இரண்டாம் பறுலாகிய தகுபீர் தஹ்றீமுடைய ஷறுத்துக்களெத்தனை?

தகுபீர் தஹ்றீமுடைய ஷறுத்துக்கள் பத்தாம்.

(355.) தகுபீறுடைய முதலாம் ஷறுத்தியாது?

தகுபீறு அல்லாகு அகுபரென்ற சொல்லாகவே இருத்தலாம்.

(356) தகுபீறுடைய இரண்டாம் மூன்றும் நான்காம் ஐந்தாம் ஷறுத்துக்களியாவை?

தகுபீறுடைய இரண்டாம் ஷறுத்து அத்தகுபீறை அறபுப்பாஷையாற் சொல்லுதல், மூன்றாம் ஷறுத்து ஹறுபுகளை பிசகறச்சொல்லுதல், நான்காம் ஷறுத்து அத்திலுள்ள ஹறுபை இலேசாக்காமல் சொல்லுதல், ஐந்தாம் ஷறுத்து ஹம்சையும் ஹேயையும் நீட்டாமற்சொல்லுதல், ஆகியவைகளாம்.

(357.) தகுபீறுடைய ஆறாம் ஏழாம் எட்டாம் ஷறுத்துக்களெவை?

தகுபீறுடைய ஆறாம் ஷறுத்து தகுபீறிலுள்ள பேய்க்கு சகூனபடச்சொல்லுதல், ஏழாம் ஷறுத்து அல்லாவை முந்தியும் அகுபரைப் பிந்தியும் சொல்லுதல், எட்டாம் ஷறுத்து தொடர்பாய்ச் சொல்லுதல், ஆகியவைகளாம்.

(358.) தகுபீறுடைய ஒன்பதாம் பத்தாம் ஷறுத்துக்களெவை?

தகுபீறுடைய ஒன்பதாம் ஷறுத்து இரைச்சலில்லாத நேரமும் செவிடில்லாதவனுமாயிருந்தாற் செவிகேள்க்கச் சொல்லுதல், பத்தாம் ஷறுத்து நிலையிற்றானே தகுபீறை முடித்தல், ஆகியவைகளாம்.

(359.) தகுபீரில் வாஜிபாகுங் கருமங்களெத்தனை?

தகுபீறை மொழியும்போதில் நிய்யத்தை இருதயத்தில் அப்பியாசப்படுத்துதல் தன் செவி கேள்க்கச்சொல்லுதல், ஆகிய இரண்டு கருமங்களுமாம்.

(360.) தகுபீறுவையை சுன்னத்துக்க ளெவை?

தகுபீறைப் பிரசித்தமாய்ச் சொல்லுதல் இருகையையும் வஸ்திரம் முதலியவைகளைவிட்டு நீக்கி விரித்து உயர்த்தி விரற்களின் நுனி கள் செவியின்மேற் புறத்துக்கு நேரே வரத்தக்கதாயும் அதில் இருபெருவிரலும் இரண்டு செவியின் சோணைக்கிநேராயும் இரு உள்ளங்கையும் இரு தோள்புயத்துக்கும் நேராயும் கிபுலாப்பக்க முயர்த்தி அத்துடன் தகுபீறைத் துவக்கி இரண்டு கைகளையும் உந்திக்குமேலே நெஞ்சுக்கு கீழேயாம் இடத்தில் வைத்தலும், அத் துடன் தகுபீறை முடித்தலும், வலக்கையால் இடக்கை மணிக்கட் டின் முதுகைப்பிடித்தலும் அக்கைகளை இடப்பக்கமாய்ச் சாய்த் துக் கொள்ளுதலு மாகிய வைகளாம்.

## அல்பஸ்லுல்தாலிது ஃபாபி ஸிபத் திஸ்ஸலாத்தி.

## ௩ - ம் பிரிவு.

(361.) தொழுகையுடைய மூன்றும்பறுலாயாது?

நிலை அது பறுலான தொழுகையை [illegible] நின்றுதொ ழும் நிலையாம்.

(362.) சுன்னத்தான தொழுகையையும் நின்று தொழுவேண்டுமோ?

சுன்னத்தாகிய தொழுகையை நின்று தொழுதல் பறுலில்லை.

நின்று தொழத்தக்கவன் இருந்தும் படுத்துந் தொழலாம்.

(நபில்) சுன்னத்துத் தொழுகையை நின்று தொழுதல் அபுளலாம்.

(363.) பறுலான தொழுகை என்றதில் எவ்வெத்தொழுகைகள் சேர்ந்துகொண்டன?

(சலாத்துந்நதுறு) நேர்ந்த தொழுகையும், (சலாத்துல்மஆது) மீழு விக்குந் தொழுகையும் சேர்ந்துகொண்டன.

இவ்விரண்டு தொழுகைகளிலும் நிலை வாஜிபாம்.

(364.) பறுலான தொழுகையை நின்று தொழ எலாதவர்கள் யாதுசெய்தல்வேண்டும்?

நின்று தொழ எலாவிட்டால் இருந்தும் இருந்துதொழ எலாவிட் டால் [illegible] படுத்தும். ஒருக்கணித்து [illegible]



(365.) கப்பல் முதலியவைகளில் பிரயாணஞ் செய்பவன் எவ்வாறு தொழுவேண்டும்?

நின்றால் தலைசுற்றுதல் முதலிய முஷக்கத்து உண்டாகுமெனப் பயந்தால் இருந்து தொழலாம்.

(366.) ஹதது தாபுமானவன் பறுலான தொழுகையை இருந்துதொழலாமா.

1. நின்று தொழும்போது தடுக்க எலாவிட்டால் இருந்துதொழ லாம்.
2. இருந்து தொழும்போதும் தடுக்க எலாவிட்டால் மல்லாந்துபடுத் துக்கொண்டு தொழலாம்.

(367.) தொழுகையின் மூன்றும் பறுலாகிய நிலையின் ஷறுத்தியாது?

வலப்பக்கம் இடப்பக்கம் சாயாமலும் முன்பின் பக்கங்களில் கு னியாமலும் நிமிராமலும் நிற்பதாம்.

(368.) நிலையின் சுன்னத்துக்களெவை?

1. நிற்கும்போதும் றுகூஉ இகுதிதால் செய்யும்போதும் இருகாலை யும் கிபுலாவுக்கு நேரேவிரல்களை பொருத்தாமலும் அதிகமாய் விரி க்காமலும் வைத்தல், தலையை மிகுதமாய் கவிழ்த்தாதிருத்தல், குரு டனாயிருந்தாலும் எல்லா ஹாலிலும் சுஜூதிடும் தானத்தையே பார்த்தல் ஆகியவைகளாம்.
2. அத்த ஹிய்யாத்தில் இல்லல்லா என்னும்போது சுஜூதிடும் தான த்தைப் பார்த்தல் சுன்னத்தல்ல.

(369.) நிலையில் இரண்டு காலுக்கு மிடையில் எவ்வளவுதூர மிருத்தல்வேண்டும்?

ஒரு ஜாண் இடையிருத்தல்வேண்டும்.

(370.) கஃபா ஷரீபில் தொழும்போதிலும் சுஜூதிடுந் தானத்தைப் பார்க்கவேண்டுமா?

கஃபாவிலானாலும் இருளிலானாலும் சரி சுஜூதிடுந் தானத்தை யே பார்த்தல்வேண்டும்.

## அல்பஸ்லுல் ருபிஉ ஃபீபாபி ஸிபத் திஸ்ஸலாத்தி.

## ௪ - ம் பிரிவு.

(371.) தொழுகையுடைய நான்காம் பறுலுயாது?

எல்லா ஒவ்வொரு றகஅத்திலும் பாத்திஹா ஓதுதல் தொழுகையின் நான்காம் பறுலாம்.

(372.) பாத்திஹாவின் ஷுறுத்துக்களெவை?

பாத்திஹாவின் ஷுறுத்துக்கள் எட்டாம் அவை வருமாறு ஒவ்வோர் ஹறுபுகளையும் நன்றாய் மொழிதல், ஒவ்வோர் ஷறுத்துக்களையும் இலேசாக்காமல் உச்சரித்தல், ஒவ்வோர் இகுறுபுகளையும் நன்றாய் உச்சரித்தல், ஆயத்துக்களின் ஒழுங்கின்படி ஓதுதல், தொடர்பாய் ஓதுதல், அறபுப்பாஷையால் ஓதுதல், தன் செவிக்குக் கேள்க்கத்தக்கதாயோதுதல், நின்றவனாகவே ஓதுதல் என்பவைகளாம்.

(373.) பாத்திஹாவுடைய ஹறுபுக்களெத்தனை?

பிஸ்மியின் ஹறுபுக்களோடு நூற்றினாற்பத்தொரு ஹறுபுக்களாம்.

(374.) பாத்திஹாவுடைய ஷத்துக்களெத்தனை?

பதினான்கு ஷத்துக்களாம்.

(375.) பாத்திஹாவின் மஅனாவைப் பேதமாக்கத்தக்க (கதா) பிழை வர ஓதலாமா?

அப்படி ஓதுதல் ஹறாம்.
அதின் மஅனாவைப் பேதமாக்கத்தக்க கதாபிழைவர ஓதுதல் ஹறாமென் றறிந்தவன் முரண்டாய் ஓதினால் தொழுகைபாத்திலாம்.

(376.) இமாமுடைய பாத்திஹாவுக்கு ஆமீன் கூறுதலால் மஉமூமுடைய ஓதலின் தொடர்பு தப்பிவிடுமா?

மஉமூமானவன் தொழுகையைக்கொண்டு கொளுகிய திக்றுக்களில் யாதேனுமொன்றை ஓதும்போதில் இமாமுடைய பாத்திஹாவுக்கு ஆமீன் கூறினாலும் அவருடன் சஜிதாத்திலாவத்துச் செய்தாலும் அவனுடைய ஓதலின் தொடர்பு தப்பாது.

ஒருவன் பாத்திஹா ஓதிக்கொண்டிருக்கும்போதில் தும்மி அல்ஹம்துலில்லா என்றாலும் வேறேயொருவன் தும்மி ஹம்து சொல்லியபோதில் அவனுக்கு மாறுத்தரமாக யறுஹமஹுல்லா என்றாலும்; பாத்திஹாவின் தொடர்பு தப்பிவிடும். அவன் மடக்கி பாத்திஹா ஓதுதல்வேண்டும். தும்மி ஹம்து சொன்னவனுக்கு மாறுத்தரமாகயறுஹமகல்லா என்றால் தொழுகை பாத்திலாம்.



(377.) இமாமுடைய ஓதல்பொறுத்துக்கொண்டதற்காய் பாத்திஹா ஓதுபவன் சொல்லிக் கொடுத்தலால் அவன் ஓதும் பாத்திஹாவின் தொடர்பு தப்பிவிடுமா?

இமாமுடைய ஓதல் பொறுத்துக் கொண்டதற்காய்ச் சொல்லிக் கொடுத்தல் அவர் பிழையாய் ஓதுவதைச் சொல்லிக் கொடுத்தல் ஆகியவைகள் மஉமூமுடைய பாத்திஹாவின் தொடர்பைத் தப்பிவிக்காது.

(378.) இமாமுக்குச் சொல்லிக்கொடுக்கும்போது எவ்வாறு நிய்யத்து வைத்தல்வேண்டும்?

தான் அதை ஓதுவதாய் நிய்யத்து வைத்தல்வேண்டும்.
தான் ஓதுவதாயும் சொல்லிக்கொடுப்பதாயும் நிய்யத்து வைத்துக்கொண்டாலும் குற்றமில்லை.

சொல்லிக்கொடுத்தலை மாத்திரம் நிய்யத்து வைத்தால் தொழுகை பாத்திலாகிவிடுமாம்.

(379.) பாத்திஹாத் தெரியாதவன் யாது செய்தல்வேண்டும்?

பாத்திஹாவின் கதுறுக்கு வேறே ஆயத்துக்களை ஓதுதல்வேண்டும்.

வேறே ஆயத்துக்களும் பாடமில்லாதவன் அதின் கதுறுக்கு எழு திக்றுக்களை ஓதுதல்வேண்டும்.

திக்றுக்களுந் தெரியாவிட்டால் பாத்திஹா ஓதத்தக்கநேர மளவு நிற்கவேண்டும் அது வாஜிபாம்.

(380.) பாத்திஹாவில் அரைவாசி தெரிந்தவன் யாது செய்தல்வேண்டும்?

தெரிந்த அரைவாசியையும் ஓதி மடக்கியும் அதையே ஓதுதல்வேண்டும்.

---

## அல்பஸ்லுல் காமிசு பீபாபிஸிபத் திஸ்ஸலாத்தி.

## ௫-ம் பிரிவு.

(381.) தொழுகையுடைய ஐந்தாம் பறுலுயாது?

றுகூஉ செய்தலாம்.

(382.) றுகூஉடைய ஷறுத்துக்களெவை?

இரண்டு அகங்கையும் இரண்டு முழந்தாளையுந் தொடத்தக்கதாய்க்குனிதல், றுகூஉ செய்யும்போது வேறொன்றையும் நாடாதிருத்தல், ஆகிய இரண்டுமேயாம்.

(383.) றுகூஉடைய சுன்னத்துக்களெவை?

றுகூஉ செய்யும்போது பிடரி முதுகந்தண்டு ஆகியவைகளை செவ்வையாய் நிமித்திக் கொள்ளுதல், கணைக்கால் தொடை ஆகியவைகளை நிமித்திக்கொள்ளுதல். இருஅகங்கையையும் இரண்டு முழந்தாட்சில்லின்மேல் வைத்தல், விரல்களை விரித்துக்கொள்ளுதல் கிபுலாவின் திசையை முன்னோக்குதல், சுபுகான றப்பியல் அளீம் வபிஹம்திகி என மூன்றுதரம் ஓதுதல் ஆகியவைகளாம்.

(384.) தொழுகையுடைய ஆறாம்பறுலுயாது?

றுகூஇல் தரித்தலாம்.

(385.) தொழுகையின் ஆறாம்பறுலுடைய ஷறுத்துக்களெத்தனை?

முன்பின் சாயாமல் அசைவின்றி ஒடுங்குதலாய்த் தரிபடுதலாம்.

(386.) தொழுகையுடைய ஏழாம்பறுலு யாது?

இஉதிதால் செய்தலாம்.

(387.) இஉதிதாலுடைய ஷறுத்துக்களெத்தனை?

நிற்குதல், இஉதால் செய்தலையே நாடுதல், அதில் ஷறஆக்கப்பட்ட திக்றுக்கதிகந் தாமதிக்காதிருத்தல், எனும் மூன்று ஷறுத்துக்களுமாம்.

(388.) இஉதிதாலுடைய சுன்னத்துக்களெவை?

றுகூஐ விட்டுத் தலையை யுயர்த்தும்போதில் சமிஅல்லாகுலிமன் ஹமிதகு என்றோதுதல். இஉதிதாலில் நிற்கும்போது றப்பனாலகல் ஹம்துமில் அஸ்ஸமாவாத்திவமில் அல்அறுள வமில்அமாஷி உதமின்ஷையின் பகுதஹு என்றோதுதல் முதலியவைகளாம்.



(389.) தொழுகையுடைய எட்டாம் பறுலுயாது?

இஉதிதாலில் தரித்தலாம்.

(390.) இஉதிதாலில் தரிப்பதின் ஷறுத்துயாது?

கோணாமல் வளையாமல் முதுகைச் செவ்வனே நிறுத்துதலொன்றுமேயாம்.

---

## அல்பசுலுல் சாதிசு பீபாபிஸிபத் திஸ்ஸலாத்தி.

## ௬-ம் பிரிவு.

(391.) தொழுகையுடைய ஒன்பதாம் பறுலுயாது?

முந்தின சுஜூது செய்தலாம்.

(392.) தொழுகையின் ஒன்பதாம் பறுலாகிய முதலாம் சுஜூதின் ஷறுத்துக்களெவை?

தரையில் நெற்றியைப் பொறுக்கும்படி வைத்தல், இரண்டு முழந்தாளிற் சிலதையும், இரண்டு உள்ளங்கையிற் சிலதையும், இரண்டு கால்விரற்களின் உள்ளிற் சிலதையும், தரையில் வைத்தல், நெற்றியை தன்னுடைய சுமக்குதலில் அகப்படாததில் வைத்தல், தலை, கழுத்து ஆகிய இரண்டின் கனம் தரையில் பொறுக்கத்தக்கதாய் வைத்தல், தலைபணிந்தும் பின்தட்டு உயர்ந்து மிருத்தல் சுஜூதைத்தவிர வேறே யாதொன்றையும் நாடாதிருத்தல், ஆகிய ஆறு ஷறுத்துக்களுமாம்.

(393.) சுஜூதுடைய சுன்னத்துக்களெவை?

இரண்டு கையையும் இரண்டு காலையையும் அவைகளின் விரல்களையும் கிபுலாவுக்கு நேரே மிகுதிபொத்தாமலும் விரிக்காமலும் தோளுக்கு நேராக இருகையையும் தரையில் வைத்தல் மூக்கைத் தரையில் பொறுக்கத்தக்கதாய் வைத்தல், சுஜூதில் தரிபட்டபோது சுபுஹான றப்பியல்அஉலா வபிஹம்திஹி என்று மூன்றுதரம் சொல்லுதல் ஆண்பிள்ளை இருகையையும் விலாவைவிட்டு நீக்கி இடைபோட்டுக்கொள்ளுதல், பெண்பிள்ளை விலாவோடு கையைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியவைகளாம்.

(394.) எவ்வாறு சுஜூது செய்தல் மக்றூகாம்?

கண்ணை மூடிக்கொண்டு சுஜூது செய்தல் மக்றூகாம்.

(395.) தொழுகையுடைய பத்தாம் பறுலுயாது?

முந்தின சுஜூதில் தரித்தலாம்.

(396.) சுஜூதில் தரித்தலின் ஷுறுத்தியாது?

முன்பின் வலமிடம் சாயாமல் அசை வொடுங்குதலெனும் ஒன்றுமேயாம்.

(397.) தொழுகையுடைய பதினோராம் பறுலுயாது?

இரண்டு சுஜூதுகளுக்கு மிடையிலிருக்கும் இருப்பாம்.

அதை இடையிருப்பென்று சொல்லுவார்கள்.

(398.) இடையிருப்பின் ஷுறுத்துக்களெவை ?

நிமிர்ந்திருத்தல் சுஜூதைவிட்டெழும்பும்போது வேறொன்றையும் நாடாதிருத்தல் அதில் ஷறஆக்கப்பட்ட திக்றின் நோத்துக் கதிகமாய் நீட்டாதிருத்தலாகியவைகளாம்.

(399.) தொழுகையுடைய பன்னிரண்டாம் பறுலுயாது ?

இடையிருப்பில் தரித்தலாம்.

(400.) இடையிருப்பினுடைய தரிப்பின் ஷுறுத்தியாது?

முன்பின் வலமிடம் சாயாம லசைவொடுங்குதலாம்.

---

## அல்பஸ்லுல்சாபிஉ பீபாபி ஸிபத்திஸ்ஸலாத்தி

## எ - ம் பிரிவு.

(401.) தொழுகையுடைய பதின்மூன்றும் பறுலுயாது?

இரண்டாம் சுஜூதாம்.

இரண்டாம் சுஜூதின் ஷுறுத்துக்கள் ஆறு அதின் விபரத்தை 11ம்-பாபின் 6-ம் பசுலில் 392-ம் இலக்க வினாவின் விடையிற் காண்க.

(402.) தொழுகையுடைய பதினான்காம்பறுலு யாது?

இரண்டாம் சுஜூதில் தரித்தலாம்.

(403.) தொழுகையுடைய பதினைந்தாம்பறுலு யாது?

பிந்தின அத்தஹிய்யாத்து ஓதுதலாம்.



(404.) அத்தஹிய்யாத்து ஓதுதலில் எத்தனை ஷுறுத்துக்களுண்டு?

அத்தஹிய்யாத்தில் எழு ஷுறுத்துக்களுண்டு அவைகளாவன அதின் ஹுறுபுக்களை அவ்வவ் வெழுத்தின் தானம் பிசகாமல் மொழிதல், ஒவ்வோர் ஷத்தையும் இலேசாக்காமல் மொழிதல் இருருபுக்களைப் பிசகாமல் மொழிதல், தறுதீபாக ஓதுதல், தொடர்பாய் ஓதுதல், தன்செவி கேள்க்கத்தக்கதாய் ஓதுதல், இருப்பிலேயே ஓதுதலாம்.

(405.) தொழுகையுடைய பதினாறும்பறுலு யாது?

பிந்தின அத்தஹிய்யாத் திருப்பாம்.

(406.) பிந்தின அத்தஹிய்யாத்திருப்பின் ஷுறுத்துக்களெத்தனை?

கோணாமல் இருத்தல் சுஜூதை விட்டெழும்பும்போது வேறொன்றையும் நாடாதிருத்தல் ஆகிய இரண்டுமாம்.

(407.) தொழுகையுடைய பதினேழாம்பறுலு யாது?

பிந்தின அத்தஹிய்யாத் திருப்பிலேயே நபிநாயகம் ஸல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்மீதில் சலவாத்து ஓதுதல்.

அதின் ஷுறுத்துக்களோ இந்தபசலின் 404-ம் இலக்கவினாவின் விடையில் விபரிக்கப்பட்டவைகளாம்.

(408.) தொழுகையுடைய பதினெட்டாம்பறுலு யாது?

முந்தின சலாங்கொடுத்தலாம்.

(409.) முந்தினசலாமின் ஷுறுத்துக்க ளெத்தனை?

அதின் ஹுறுபுகளின் தானம் பிசகாமல் மொழிதல், ஷத்துக்களை இலேசாக்காமல் மொழிதல், தொடர்பாய் மொழிதல், தன் செவிகேள்க்கத்தக்கதாய் மொழிதல், இருப்பிலேயே மொழிதல், எனும் ஐந்துமாம்.

(410.) தொழுகையுடைய பத்தொன்பதாம் பறுலுயாது?

மேலே சொல்லப்பட்ட பத்தொன்பது பறுலையும் மேலே சொல்லியபடி ஒன்றன்பின் ஒன்றாய் கொண்டுவருதலெனும் தறுதீபாம்.

---

## அல்பஸ்லுல் தாமினு பீபாபி ஸிபத்திஸ்ஸலாத்தி.

## அ - ம் பிரிவு.

(411.) தொழுகையுடைய சுன்னத்துக்க ளெத்தனை வகைப்படும்?

அபுஆலு சுன்னத்து ஹைஅது சுன்னத்து என இருவகைப்படும்.

(412.) அபுஆலு சுன்னத்துக்களியாவை?

அபுஆலு சுன்னத்துக்கள் எட்டாம் அவைகளாவன. நடு அத்தஹிய்யாத்தோதுதல், நடுஅத்தஹிய்யாத் தோதுவதற்காய் இருக்குதல், நடுஅத்தஹிய்யாத்தில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மீதில் சலவாத் தோதுதல், சுபுஹூத் தொழுகையின் பிந்தின றக்அத்துடைய இகுதிதாலிற் குனூத்து ஓதுதல், குனூத்து ஓதுதற்காய் நிற்குதல், குனூத்து ஓதியபின் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மீதில் சலவாத் தோதுதல், நபிநாயக மவர்களின் கிளையாரை அந்த சலவாத்திற் சேர்த்துக் கொள்ளுதல், பிந்தின அத்தஹிய்யாத்துடைய சலவாத்தில் நபிநாயக மவர்களின் கிளையாரைச் சேர்த்துக்கொள்ளுதல் என்பவைகளாம்.

மேலே சொல்லப்பட்ட அபுஆலு சுன்னத்துக்களில் ஒன்றையாவது மறந்து அல்லது மனமுரண்டாய்விட்டால் சஃவு சுஜூதுசெய்தல் வேண்டும்.

413. அத்தஹிய்யாத்தின் பறுலான ஓதல் எவ்வாறும்?

அத்தஹிய்யாத்து லில்லாஹி சலாமுன் அலைக அய்யுகன் நபிய்யு வறகுமத்துல்லாஹி வபறகாத்துஹூ சலாமுன் அலைனா வஅலா இபாதில்லாகிஸ் ஸாலிகீன் அஷ்கது அன்லாயிலாக இல்லல்லாகு வஅன்ன முகம்மதற்ற சூலுல்லாகி என்பதாம்.

இந்த அல்பாலுக்களில் ஒன்றையாவது விட்டால் சஃவு சுஜூது செய்தல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பறுலாகிய அல்பாலுக்களைத் தவிர வேறேயுள்ளதும் லபுலுக்களை விட்டதற்காய் சஃவு சுஜூது செய்தல் தேவையுறாது.

(414.) நடுஅத்தஹிய்யாத் தோதுவதற்காய் இருத்தலாவதியாது?

நபிநாயகமவர்கள் பேரில் சலவாத்தோதுவதோடு முந்தின அத்தஹிய்யாத்தோதி முடியுமட்டாய் எழும்பாமல் இருப்பதேயாம்.

தனிமையாய்த் தொழுபவன் அல்லது இமாமானவன் நடுஅத்தஹிய்யாத் திருப்பிலிருப்பதை மறந்து இதற்குப் பின்னுள்ள பறுலாகிய நிலையில் நின்றதன்பின் அபுஆலு சுன்னத்தாகிய நடுஅத்தஹிய்யாத் திருப்புக்கு வருதல் ஹறுமாம்.

இவ்வாறு செய்தல் ஹறுமென்பதை அறிந்தவன் மனமுரண்டாய் நடுஅத்தஹிய்யாத் திருப்பளவில் மீண்டால் தொழுகை பாத்திலாகிவிடும்.

நடுஅத்தஹிய்யாத் திருப்பிலிருக்க மறந்து எழும்பிய எழும்புதல் நிலையுடைய ஹத்துக்கு முடுகாதிருந்தால் இருப்பாகிய அபுஆலு



சுன்னத்தளவில் சேருதலும் அம்மறதிக்காய் சஜிதா சஃவு செய்தலும் சுன்னத்தாம்.

மஉமூமானவன் இவ்விருப்பை மறந்து எழும்பினால் மீண்டு இமாமுடன் கூடிக்கொள்ளுதல் வாஜிபாம்.

நடுஅத்தஹிய்யாத்திருப்பை மறந்து நிலையளவிற் சேர்ந்த மவுமூம் மீண்டு இமாமுடன் கூடாவிட்டால் தொழுகை பாத்திலாம்.

(415) நடுஅத்தஹிய்யாத்தின் பறுலான சலவாத்தியாது?

இந்த பகலில் 413 - ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லிய பறுலான ஓதல்களை ஓதியபின் அல்லாகுமமசல்லி அலா செய்யிதினா முகம்மதின் என்று அல்லது சல்லல்லாகு அலாமுகம்மதின் என்றுஅல்லது சல்லல்லாகு அலாறசூலிஹி என்று அல்லது சல்லல்லாஹூ அலன் நபிய்யி என்று ஓதுதலாம்.

(416.) சுபுஹூத்தொழுகையுடைய பிந்தின றகஅத்தின் இகுதிதாலில் எவ்வாறு குனூத்து ஓதுதல்வேண்டும்?

அல்லாஹும் மகுதினீ பீமன் ஹதைத்த வஆபினீபீமன் ஆபைத்த வதவல்லனீ பீமன் தவல்லைத்த வபாரிக்லிபீமா அஉதைத்த வகுனீ ஷற்றமாகலைத்த வஇன்னக தகுலீ லாயகுலா அலைக்க வஇன்னகு லாயதில்லு மன்வாலைத்த வலா யஇஸ்ஸுமன் ஆதைத்த தபாறக்த றப்பனா வதஆலைத பலகல் ஹம்து அலாமாகலைத்த வஅஸ்தகுபிறுக வஅதூபு இலைக்க என்பதாம்.

(417.) இகுதிதாலிற் குனூத்து ஓதுதற்காய் தரித்தலாவதியாது?

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்பேரில் சலவாத்தும் அந்த சலவாத்தில் நபிநாயகமவர்களின் கிளையார்களைச் சேர்த்து ஓதுதலோடு குனூத்து ஓதி முடியும் வரைக்கும் அடுத்த பறுலாகிய சுஜூதளவில் சேராமல் நிற்குதலாம்.

தனிமையாய்த் தொழுபவன் அல்லது இமாமானவன் குனூத்து ஓதுதற்காய் இகுதிதாலிற் றரிப்பதை மறந்து அடுத்த பறுலாகிய சுஜூதளவில் வந்ததன்பின் நினைந்து குனூத்து ஓதுதற்காய் இகுதிதாலிற் றரித்தல் ஹறுமாம்.

அபுஆலு சுன்னத்தாகிய குனூத்தை ஓதமறந்து அடுத்த பறுலைச் செய்தவன் மீண்டு அபுஆலு சுன்னத்துக்காய்த் தரித்தால் தொழுகைபாதிலாம்.

குனூத்து ஓதுந் தானமாகிய இகுதி தாலில் நிற்க மறந்து சுஜூதுக்குப்போன குனிதல்சுஜூதுடைய ஹத்துக்கு முடுகாதிருந்தால் இகுதிதாலாகிய அபுஆலு சுன்னத்தளவில் மீளுதலும் அம்மறதிக்காக சஃவு சுஜூது செய்தலும் சுன்னத்தாம்.

மஉமூமானவன் இவ்விருதிதாலே மறந்து சுஜூதுக்குப்போனாலும் மீண்டு இமாமுடன் கூடுதல் வாஜிபாம்.

குனூத்தின் தரிப்பாகிய இருதிதாலே மறந்து சுஜூதுக்குப்போன மவுமூமும் மீண்டு இமாமுடன் கூடாவிட்டால் தொழுகை பாத்திலாம்.

இமாம் குனூத்து ஓதும்போதும் மஉமூம் ஆமீன் கூறுதலும் குனூத்தில் வஇன்னக தருலீதொடுத்து கடைசிவரைக்கும் இமாமோடு ஓதி பின்சலவாத்து ஓதும்போது ஆமீன்கூறுதலும் சுன்னத்தாம்.

(418.) குனூத்தில் எவ்வாறு சலவாத்து ஓதுதல்வேண்டும்?

இந்த பசுலின் 416-ம் இலக்க வினாவின் விடையாகிய குனூத்தை ஓதியபின் அல்லாகும்மசல்லி அலா செய்யிதினா முகம்மதின் என்று அல்லது 415-ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லியபடி ஓதுதல்வேண்டும்.

(419.) குனூத்தோடு ஓதவேண்டிய சலவாத்தில் எவ்வாறு ஆல்களைச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்?

இந்த பசுலின் 416-ம் இலக்க வினாவின் விடையையும் 415-ம் இலக்க வினாவின் விடையாகிய அல்லாகும்மசல்லி அலா செய்யிதினா முகம்மதின் என்பதையும் ஓதி அத்தோடு வஅலா ஆலிமுகம்மதி என்பதைச்சேர்த்தோதுதல் வேண்டும்.

(420.) இரண்டாம் அத்தஹியாத்தும் அத்தோடு சலவாத்தும் ஓதுவதோடு எவ்வாறு ஆல்களைச் சேர்த்தல்வேண்டும்?

இரண்டாம் அத்தஹியாத்தும் கமாசல்லைத்த முதலிய சலவாத்தும் ஓதும்போதில் அலாசெய்யிதினா முகம்மதின் என்று ஓதுவதோடு வஅலாஆலி செய்யிதினா முகம்மதின் என்று சேர்த்தல்வேண்டும்.

நடுஅத்தஹியாத்து குனூத்து எனும் இரண்டிலும் சலவாத்து ஓதுதற்காய் நிற்பதையும் ஆல்கள்பேரில் சலவாத்து ஓதுதற்காய் நிற்பதையும் இருப்பதையும் தனித்தனியே 412-ம் இலக்க வினாவின் விடையாகிய 8 அபுஆலு சுன்னத்துக்களோடும் சேர்த்தால் அபுஆலு சுன்னத்துக்கள் 12 பன்னிரண்டாம்.

இப்பன்னிரு சுன்னத்துக்களில் ஒன்றை அல்லது ஒன்றிற் சிலதை மறந்து அல்லது மனமுரண்டாய்விட்டாலும் அல்லது விட்டதிற் சந்தேகித்தாலும் அத்தொழுகையின் கடைசியில் இரண்டு சஜ்வு சுஜூதுசெய்து சலாம் கொடுத்தல் வேண்டும்.



# அல்பஸ்லுல் தாசிஉ பீபாபி ஸிபத் திஸ்ஸலாதி.

## ௯-ம் பிரிவு.

(421.) தொழுகையுடைய ஹைஅது சுன்னத்துக்களென்பதின் பொருள் யாது?

ஹைஅது என்பதின் பொருள் கோலமென்பதாம் இதைப் பெரும்பாலார் அலங்கார சுன்னத்துக்களென்பார்கள்.

(422.) தொழுகையுடைய ஹைஅது சுன்னத்துக்களெத்தனை?

ஹைஅது சுன்னத்துக்கள் மிகுதமாம். பெரும்பாலார் 25 இருபத்தைந்து சுன்னத்துக்களென்றனர் (அவைகள் வருமாறு)

423. தொழுகையின் முதலாம் இரண்டாம் மூன்றாம் ஹைஅது சுன்னத்துக்களெவை?

தக்பீர் கட்டும்போதும் றுகூஉக்குப் போம்போதும் நடுஅத் தஹியாத்திருப்பி விருந் தெழும்பும் போதும். விரலின் அருகுகள் செவியின் மேல் பக்கத்துக்கு நேராகவும், பெருவிரல் செவியின் சோணைக்கு நேராகவும், புறங்கை தோள் புயத்துக்கு நேராகவும் வர இரண்டுகையையும் உயர்த்துதல் முதலாம் சுன்னத்தாம்.

நேரவிட்டிருந்த இரண்டு கையையும் தக்பீறுடனே உயர்த்திக் கொண்டு வந்து நெஞ்சுக்குக்கீழே வைப்பதோடு தக்பீறை முடித்தல், அபுளலாம். கை உயரவேண்டிய அளவுக்கு உயர்ந்த உடன் தக்பீறை முடித்து விட்டுக் கையை நெஞ்சில் கட்டிக் கொள்ளுதல் நன்று, என்பாரு முளர். இரண்டாம் சுன்னத்து வலக்கையை இடக்கையின் மணிக்கட்டில் வைத்தலாம். மணிக்கட்டைப் பிடித்துக் கொள்ளுதல் சுன்னத்து.

மூன்றாம் சுன்னத்து இரண்டு கையையும் நெஞ்சுக்குக் கீழேவைத்தல். அதை இடப்பக்கம் சாய்த்துக் கொள்ளுதல் நன்றாம். இந்த சுன்னத்துகளை 11-ம்பாபின் 2-ம்பசுலில் 360-ம் இலக்கவினாவின் விடையில் காண்க.

(424.) தொழுகையின் நான்காம் ஐந்தாம் ஆறாம் ஹைஅது சுன்னத்துக்களெவை?

நான்காம் சுன்னத்தாவது தக்பீறாத்துலஹற்ற முக்கடுக்க ஜனசாத் தொழுகையல்லாத மற்ற எல்லாத் தொழுகைகளிலும் வஜ்ஜஹ்த்து

வஜ்ஜஹுத்தாவது வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ பதறஸ்ஸமாவாதி வல்அறுள ஹனீபன் முஸ்லிமன் வமாஅன மினல் முஷ்ரிகீன் இன்னஸ் ஸலாத்தீ வநுஸுகீ வமஹ்யாய வமமாதீ லில்லாஹி றப்பில் ஆலமீன் லாஷரீக லஹு வபிதாலிக உமிர்த்து வஅன மினல் முஸ்லிமீன் என்பதாம்.

வஜ்ஜஹுத்துக்குப் பின் தனித்துத் தொழுபவனும் ஷாபிஈ மதத்தின் பிரகாரம் இமாமும் பின்வருமாறு ஓதுதல் வேண்டும். அதாவது அல்லாகும்ம அந்தல் மலிகு லாஇலாஹ இல்லா அந்த சுப்ஹானக வபிஹம்திக அந்த றப்பீ வஅன அப்துக ளலம்து நப்ஸீ வஃதறப்து பிதன்பீ பஃபிர்லீ துனூபீ ஜமீஅன் லாயஃபிறுத் துனூப இல்லா அந்த என்றும் அல்லாகும்ம பாஇது பைனீ வபைன கதாயாய கமாபாஅத்த பைனல் மஷ்ரிகி வல்மஃரிபி அல்லாகும்ம நக்கினீ மின்கதாயாய கமாயுனக்கத் தவ்புல் அப்யலு மினத்தன்ஸி அல்லாகும்மஃஸில்னீ மின்கதாயாய கமா யுஃஸலுத் தவ்புல் அப்யலு பில்மாயி வஸ்ஸல்ஜி வல் பறதி என்பதாம்.

வஜ்ஜஹுத் தப்பிவிடுமென்று அல்லது இமாமுடைய றுகூஉடன் சேர்ந்துகொள்ளக் கூடாதென்று அல்லது மறந்து அஊதையாவது பாத்திஹாவையாவது ஓதத்தொடுத்தாலும் அல்லது தக்பீர் கட்டின உடனே இமாமோடு இருந்துவிட்டாலும் வஜ்ஜஹுத்து ஓதக்கூடாது.

தக்பீறு கட்டினவுடனே இமாமோடு ஆமீன் கூறிவிட்டால் வஜ்ஜஹுத்தை விடலாகாது.

ஐந்தாம் சுன்னத்தாவது எல்லா றகஅத்திலும் அஊது ஓதுதலாம். ஆறாம் சுன்னத்தாவது சுஜூதுடைய தலத்தைப் பார்த்தலாம்.

சுஜூதுடைய தலத்தைப்பார்த்தல் (குஷூஉ) உள்ளச்சத்தை வருத்துமாம்.

தொழும்போதில் முன்னே நிற்பவனின் அவுறத்துத்தெரிந்தாலும் அம்று முன்னே நின்றாலும் கண்ணை மூடிக்கொள்ளலாம்.

(425.) தொழுகையின் ஏழாம் எட்டாம் ஒன்பதாம் சுன்னத்துக்களெவை?

ஏழாம் சுன்னத்தாவது ஆமீன் கூறுதலாம்.

ஜஹ்றுன தொழுகையில் இமாம் ஆமீன் கூறவேண்டிய நேரத்தைவிட்டுப் பிற்படுத்தினால் மஃமூம் சத்தமிட்டு ஆமீன் கூறவேண்டும். பாத்திஹா ஓதி முடிந்தவுடன் கொஞ்சம் வாய்மூடி றப்பிஹ்பிர்லீ ஆமீன் என்று சொல்லுதல் நன்றாம்.



ஆமீனுக்கும் சூறத்துக்கு மிடையிலும், சூறத்துக்கும் றுகூஉடைய தக்பீறுக்கு மிடையிலும், தக்பீறு தஹற்றுமுக்கும் வஜ்ஜஹுத்துக்குமிடையிலும் வஜ்ஜஹுத்துக்கும் அஊதுக்கு மிடையிலும் சுப்ஹானல்லா என்று சொல்லும் கதுறுக்குக் கொஞ்சம் வாய்மூடவேண்டும் அது சுன்னத்தாம்.

இமாமுடன் ஆமீன்கூற வசதிப்படாவிட்டால் அவருடைய ஆமீனுக்குப்பின் ஆமீன் கூறவேண்டும்.

எட்டாம் சுன்னத்தாவது சுப்ஹுத் தொழுகையிலும் மற்றத் தொழுகைகளின் முந்தின இரண்டு றகஅத்திலும் பாத்திஹாவுக்குப்பின் குறுஆனிற் சிலதை ஓதுதலாம்.

இமாமுடைய ஓதலை தொழுகையிற் கேட்ட மஃமூம் சூறத்து ஓதுதல் மக்றூகாம்

இமாம் ஓதும் ஓதல் கேள்க்காவிட்டாலும்கேட்டு ஹறுபு விளங்காவிட்டாலும் மஃமூம் சிற்சுக சூறத்து ஓதுதல் வேண்டும்.

மஃமூம் மூன்றாம் றகஅத்தில் அல்லது நான்காம் றகஅத்தில் இமாமுக்கு முந்தி பாத்திஹாவை முடித்துவிட்டால் குறுஆனில் ஏதாவது ஓதுதலும் அத்தஹிய்யாத்தை முடித்துவிட்டால் துஆ ஓதிக்கொண்டிருத்தலும் சுன்னத்தாம்.

குறுஆனில் இரண்டு சூறத்துப் பாடமில்லாதவர்கள் ஒருசூறத்தையே இரண்டு றகஅத்திலும் ஓதுதலாலும் யாதோர் சூறத்தும் பாடமில்லாதவர்கள் பாத்திஹாவை இரண்டாந்தரமும் ஓதுதலாலும் அசுல் சுன்னத்துண்டாகுமாம்

நீண்ட ஓர் ஆயத்து நிரப்பமான வோர் சூறத்தைக்காணப் பெரிதாயிருந்தாலும் நிரப்பமான வோர் சூறத்தை ஓதுதலே அபுளலாம்.

மஅனாவைப் பிழையாக்கத்தக்க (கதா) வாஓதுபவன் சூறத்தை ஓதாதிருத்தல் வேண்டும் அப்படி ஓதுதல்ஹறாமென்று சொல்லுவார்கள்.

முந்தின றகஅத்தில் ஓதப்படும் சூறத்து இரண்டாம் றகஅத்தில் ஓதப்படும் சூறத்தைக் காணப் பெரிதாயிருத்தலும் முசஹ்பின் தறுதீபின்படியே யிருத்தலும் வேண்டும் அது சுன்னத்தாம்.

வெள்ளிக்கிழமை சுபுஹில் சூறத்து சஜ்தாவும் சூறத்துத் தஹ்றும் ஜும்ஆத் தொழுகையிலும் அதின் இஷாவிலும் முந்தின முந்தின றகஅத்தில் சூறத்துல் ஜும்ஆ அல்லது சப்பிஹிஸ் மறப்பிகல் அஃலாவும் இரண்டாம் றகஅத்தில் முனாபிகூன் சூறத்தும் ஹல்அதாக

கூன் அல்லது ஹல்அதாவும் வெள்ளிக்கிழமை மஃரிபில் சூறத்துல் காபிறூன் சூறத்துல் இகுலாசும் அடுத்த சனிக்கிழமை மஃரிபில் குல்அஊது பிறப்பில் பலகு குல்அஊது பிறப்பின்னுசியும் ஓது தல்சுன்னத்தாம்.

(முசாபிர்)பிரையாணி வெள்ளிக்கிழமை யிரவின் சுபுஹூத்தொழுகையிலும்மற்றநாட்களின் சுபுஹூத் தொழுகையிலும்சூறத்துல் காபிறூனவையும் சூறத்துல் இகுலாசையும்ஓதுதல் சுன்னத்தாம்.

சுபுஹின் சுன்னத்துத்தொழுகை மஃரிபின் சுன்னத்துத்தொழுகை தவாபின் சுன்னத்துத்தொழுகை தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுகை இஸ்திகாருத் தொழுகை இஹ்றாம் கட்டுதற்காய்த் தொழும்சுன்னத்துத் தொழுகை ஆகியவைகளின் முந்தின றகஅத்தில் சூறத்துல் காபிறூனவும் இரண்டாம் றகஅத்தில் சூறத்துல் இகுலாசும் ஓதுதல் சுன்னத்தாம்.

மேலே சொல்லப்பட்டவைகளில் ஓதவேண்டிய சூறத்தைவிட்டு வேறே சூறத்தை முதலாம் றகஅத்தில் ஓதினுல் இரண்டாம் றகஅத்தில் சொல்லப்பட்ட இரண்டு சூறத்தையும் ஓதுதல்வேண்டும், முந்தின றகஅத்தில் இரண்டாம் றகஅத்தில் ஓதவேண்டிய சூறத்தை ஓதினுல் இரண்டாம் றகஅத்தில் முந்தின றகஅத்தில் ஓதவேண்டிய சூறத்தை ஓதுதல்வேண்டும்.

மறந்து ஓதவேண்டிய சூறத்தைவிட்டு வேறே சூறத்தை ஓதத் தொடுத்தால்நினைவு வந்தவுடன் அந்தசூறத்தை முறித்து ஓதவேண்டியதை ஓதுதல் வேண்டும்.

இன்ன இன்ன வகுத்துக்களில் இன்ன இன்ன சூறத்து ஓதுதல் சுன்னத்து எனக்குறிக்கப்பட்டவைகளில் நீளம் கட்டைஎன்றும் அடுத்தா யிருக்கவில்லையென்றும் நோட்டமிட லாகாது.

வகுத்துக் கிட்டுமையானபோதில் சுன்னத்தாக்கப்பட்ட சூறத்திற் சிலதைக்காண குறிக்கப்படாத கட்டையான இரண்டுசூறத்தாகன்றும்.

குறிக்கப்பட்ட இரண்டு சூறத்துக்களில் ஒன்று பாடமில்லாதிருந்தால் பாடமுள்ளதை ஓதி மற்றதுக்குப் பதிலாக அந்த சூறத்திக்குச் சரியானதாயும் அதற்குக் கீழேயுள்ளதாயும் ஓதுதல்வேண்டும். குறுஆனின் தொடர்பு தப்பினுலும்சரி. அந்த சூறத்துக்குக் கீழேயுள்ள சூறத்துப் பாடமில்லையானுல் மேலே யுள்ளதை ஓதுதல்வேண்டும்.

குறுஆன்ஓதும்போதில் றஃமத்துடையஆயத்துவந்தால் அதை கேள்ப்பதும், அதாபுடைய ஆயத்துவந்தால் அதைவிட்டுக் காவல்



தேடுதலும், தகுபீறு, தகுமீது, தஸ்பீகு, இஸ்திகுபாறு, ஆதியவைகள் வந்தால் அதறுக்குத்தக்கபடி ஓதுதலும் சுன்னத்தாம், அதை ஓதக்கேட்பவனும் ஓதுபவனும் தொழுதுகொண் டிருந்தாலும் வேறே எவ்வாறுயிருந்தாலுமாம் தொழுகையில் பாத்திஹா ஓதும்போதில் அதை ஓதினவன் மடக்கியும் பாத்திஹா ஓதுதல் வேண்டும்.

குறுஆனில் யாதை யோதினுலும் துவக்கத்தில் அஊதும்பிஸ்மிலும் ஓதுதல் சுன்னத்து.சூறத்து பறுஅத்தின் துவக்கந்தொடுத்து முடிவீறுக எதை ஓதினுலும் பிஸ்மில் ஓதலாகாது,அதை சுன்னத்தாக்கப்படவில்லை. றமலான் மாசம் தறுவீஹூத் தொழுகையில் குறுஆனைக் கோர்வைப்படி ஓதுபவர்கள் அஊதையும் சூறத்தின் துவக்கமல்லாததில் பிஸ்மிலேயும் சிற்றுக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

ஒன்பதாம் சுன்னத்தாவது உயரும்போதுங் குனியும்போதும் தகுபீர் சொல்லுதலாம்.

அவ்வத்தலங்களிற் சேருமளவும் தகுபீறை நீட்டிக்கொண்டே போதல் சுன்னத்தாம்.—

தனிமையாய்த் தொழுபவனும் மஉமூமும் தகுபீறைப் பராசியமாய் சொல்லுதல் மகுறூகாம்.

(426.) தொழுகையின் பத்தாம் பதினோராம் பன்னிரண்டாம் சுன்னத்துக்க ளவை?

பத்தாம் சுன்னத்தாவது றுகூஉவிட்டெழும்போது சமிஅல்லாஹுலிமன் கமிதஹூ என்பதாம்.

பதினோராம் சுன்னத்தாவது இகுதிதாலில் றப்பனு லகல்கம்து மில்அஸ்ஸமாவாதி வமில்அல் அறுவமில் அமாஷிஉதமின் ஷெய்யின் பகுது என்பதாம்.

சுபுஹூத்தொழுகையின் இரண்டாம் றகஅத்துடையஇகுதிதாலில் இரண்டு புயத்துக்கும் நேரோ இரண்டுகையையு முயர்த்தி விரித்தேந்தி குனூத்தோதுதல் வேண்டும்.

ஊரில் வபா முசிபத்து முதலியநோய்அடைய வனைந்தபோதில் ஐந்துவகுத்துத் தொழுகையிலும் பிந்திய றகஅத்தின் இகுதிதாலில் குனூத்து ஓதுவதை சுன்னத்தாக்கப்பட்டன இதில் அந்த பலாயைத் தட்டுவதற்காக துஆக்கேட்கும்போது மாத்திரம் இருகையையும் கவிழ்த்திக்கொள்ளுதல் வேண்டும்.

றமலான்மாதம் இரண்டாம் பதினைந்தின் துவக்கந் தொடுத்துக்கடைசிவரையில்விதுறின்கடைசி றகஅத்தின் இகுதிதாலில் குனூத்து ஓதுதல் சுன்னத்தாம்,

இவ்விரண்டின் குனூத்தையும் விட்டதற்காய் சஜிதாசஹ்வு செய்யலாகாது.

பன்னிரண்டாம் சுன்னத்தாவது றுகூஇலும் சஜூதிலும் தஸ்பீகுசெய்தலாம் அதாவது றுகூஇல் சுபுஹான றப்பியல் அளீம் வபிஹம்திஹி என்பதும் சஜூதில் சுபுஹான றப்பியல் அஉலா வபிஹம்திஹி என்பதுமாம் அவ்விரண்டில் ஒவ்வொன்றையும் மும்மூன்று தரம் ஓதுதல் சுன்னத்தாம்.

(மகுரூறு)நீளப்படுத்துதல் ஆமாகிய இமாமும் மஉமூமும் தனிமையாய்த் தொழுபவனும் அல்லாகும்மலக சஜத்துவபிக ஆமந்துவலக அஸ்லம்து அந்த றப்பீ சஜத வஜ்ஹிய லில்லதீ கலகஹூ வசவ்வறஹூ வசக்க சம்அஹூ வபசறஹூ பிகவ்லிஹி வகுவ்வதிஹி பதபாறகல்லாஹூ அஹ்சனுல் காலிகீன் என்று ஒருதரம் ஓதுதல்வேண்டும்.

(427.) தொழுகையின் பதின்மூன்றும் பதினான்காம் பதினைந்தாம் சுன்னத்துக்களெவை?

1. பதின்மூன்றும் சுன்னத்தாவது சஜூதுக்குப் போகும்போது ஆதியாய்தி இரண்டு முட்டுக்காலையும் அதன்பின் நெற்றியையும் மூக்கையும் த[illegible]ரயில் வைத்தலாம்.
2. மூக்கை த[illegible]ரயில் வைக்காமல் உயர்த்திக்கொள்ளுதல் மகுறூகு.
3. பதினான்காம் சுன்னத்தாவது ஆண்பிள்ளை றுகூஇலும் சஜூதிலும் இரு [illegible]ங்கைகளையும் விலாவை விட்டு அகற்றிக்கொள்ளுதலாம்.
4. பெண்கள் கொடுங்கையை விலாவோடு சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.
5. சஜூதில் இருகையையும் காலையும் விரல்களையும் கிபுலாவுக்கு நேரே மிருதுமாய்ப் பொத்தாமலும் விரிக்காமலும் தோள்புயத்துக்குநேராக இருகைகளையுந் தரையில்வைத்து மூக்கை தரையில் பொருப்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.
6. சஜூதில் இரண்டு முட்டுக்காலையும் ஒருசாணுடைய தூறுக்கு இடையிருக்கத்தக்கதாய் அகட்டிவைத்தலும் கைவிரல் கால்விரலாகியவைகள் பிடவை முதலியதை விட்டு நீங்கினதாயிருத்தலும் சுன்னத்தாம்.
7. பதினைந்தாம் சுன்னத்தாவது ஆடவர்கள் சஜூது செய்யும்போது வயிற்றை இருதுடையை விட்டு முயர்த்திக்கொள்ளுதலும் மாதர்கள் சேர்த்துக்கொள்ளுதலுமாம்.



ஆறும் பசுலின் 393-ம் இலக்கவினாவின் விடையில் மேலேசொல்லப்பட்டவைகளைக் காண்க.

8. ஆறும் பசுலின் 397-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லப்பட்ட இடையிருப்பை இடது காலை மடக்கி விரித்து வலது காலை விரல்களின் உள்ளிற் பொறுப்பாய் நட்டியிருப்பதில் கைவிரல்களை கிபுலாவுக்கு நேரே இருதுடைகளின்மேல் வலது கையை வலது துடையின்மேலும் இடதுகையை இடது துடையின்மேலும் வைத்து றப்பி குபிறுலீ, வறுஹம்னீ, வஜ்புறுனீ, வறுபகுனீ, வறுசுகுனீ, வஹ்தினீ, வஆபினீ, என்றோதுதல்வேண்டும்.

வஆபினீ என்பதைமாற்றி வகுபு அன்னீ என்றும் சொல்லுவார்கள்.

நடு இருப்பில் இருந்த உடனே றப்பிகுபிறுலீ என்று மூன்றுதரம்ஓதிப் பின்பு வறுஹம்னி தொடுத்து வஆபினீ வருமட்டும் ஓதவேண்டுமென்றும் சொல்லிப்பட்டன.

(428.) தொழுகையின் பதினாறும் பதினேழாம் பதினெட்டாம் சுன்னத்துக்களெவை?

பதினாறும் சுன்னத்தாவது சஜூதைவிட்டெ[illegible]ழும்பி இஸ்திறுஹத்திருப்பிருப்பதாம். அவ்விருப்பை இமாம்வி[illegible]டால் மஉமூமும் விட்டுவிடலாம் இமாம் விட்டாலும் மஉமூம் இ[illegible]ஸ்திறுஹத்திருப்பு இருந்[illegible]புதல் சுன்னத்தாம்.

பதினேழாம் சுன்னத்தாவது இரண்டு அத்தஹிய்யாத் திருப்பிலும் வலக்கையின் கலிமா விரலை[illegible]ப் பெருவிரலின் நுனியைக் கலிமாவிர[illegible]ல் வைத்து மற்றவிரல்களை மடக்கிக்கொள்ளுதலாம்.

இரண்டாம் சஜூதைவிட்டு அத்தஹிய்யாத் திருப்பிருக்க உயரும்போது இரண்டு கையிலும் பொறுப்பாய் எழும்பி இடதுகையின்விரல்கள் கிபுலாவுக்கு நேரேயிருக்கும்படி இடது முட்டுக்காலின்மேல்வைத்து வலது கையின் கலிமாவிரலைத்தவிர மற்ற விரற்களைப் பொத்திக் கலிமா விரலின் நுனியைக் கொஞ்சம் சாய்த்து நீட்டி அதினருகில் மேலே சொல்லியபடி பெருவிரலை வைத்துக்கொண்டு அத்தஹிய்யாத்து ஓதவேண்டும்.

பதினெட்டாம் சுன்னத்தாவது அத்தஹிய்யாத்தில் இல்லல்லாவென்று ஓதும்போது வலது கையின் கலிமா விரலை உயர்த்துதலாம்.

உயர்த்திய கலிமாவிரலைச் சோரவிடாமல் முதலாம் அத்தஹிய்யாத்தைவிட்டெழும்பும் வரைக்கும் இரண்டாம் அத்தஹிய்யாத்

தோதி இரண்டு சலாமுங் கொடுக்கும் வரைக்கும் அப்படியே உயர்த்திக்கொண்டிருத்தல் சுன்னத்தாம்.

இரண்டாம் அத்தஹிய்யாத் திருப்பில் கலிமா விரலை உயர்த்த முன் சுஜூதிடுந் தானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பார்வையைக் கலிமா விரலை உயர்த்தியநேரந் தொடுத்து சலாங்கொடுக்கும் வரைக்கும் அக்கலிமா விரலிற் செலுத்துதலாம்.

(429.) தொழுகையின் பத்தொன்பதாம், இருபதாம், இருபத்தோராம் சுன்னத்துக்களெவை?

பத்தொன்பதாம் சுன்னத்தாவது முதலாம் அத்தஹிய்யாத்திருப்பு நடு இருப்புகள் இஸ்திறுஹத் திருப்புகள் ஆகியவைகளை இபுதிறுஷ் இருப்பாய் இருத்தலாம். இபுதிறுஷ் இருப்பாவது இந்த பசுலின் 427-ம் இலக்கவினாவின் விடையில் பல இலக்கங்களிட்டுச் சொல்லப்பட்டவைகளில் 8-ம் இலக்கமிட்டு இடது காலை மடக்கி என்று துவக்கி இருகையையும் இரண்டு தொடையின்மேல் வைத்தல் என்று முடிக்கப்பட்ட விதமாக இருக்கும் இருப்பாம்.

மஸ்பூகானவனும் சஜிதா சஹ்வுசெய்யவேண்டியவனும் இபுதிறுஷ்இருப்பு இருக்கவேண்டும்.

இருபதாம் சுன்னத்தாவது இரண்டாம் அத்தஹிய்யாத் திருப்பைத் தவற்றுக் இருப்பாய் இருத்தலாம்.

தவற்றுக் இருப்பாவது வலது காலை நாட்டி இடது காலை அதின்கீழால் வெளிப்படுத்தியிருப்பதாம்.

இந்த பசுலின் ...-ம் இலக்கவினாவின் விடையாகிய அத்தஹிய்யாத்தின் பறுலான ஓதல்களுடன் நிரம்புதலான ஓதலாவது அத்தஹிய்யாத்துல் முபாறக்கதுஸ்ஸலவாத்துத் தய்யிபாத்திலில்லாகி அஸ்ஸலாஅலைக அய்யுஹன்னபிய்யு வறஹ்மதுல்லாஹி வபறக்காதுஹு அஸ்ஸலாமு அலைனா வஅலாஇ பாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்கது அன்லாயிலாக இல்லல்லாஹு வஅஷ்கது அன்ன முஹம்மதற்றசூலுல்லாஹி அல்லாகும்மசல்லி அலாசெய்யிதினா முகம்மதின்வஅலா ஆலிசெய்யிதினா முகம்மதின் கமாசல்லைத அலாசெய்யிதினாஇபுறுஹீம வஅலாஆலிசெய்யிதினா இபுறுஹீம வபாரிகுஅலா செய்யிதினா முகம்மதின் வஅலா ஆலிசெய்யிதினா முகம்மதின் கமா பாறக்த அலாசெய்யிதினாஇபுறுஹீமவ அலா ஆலிசெய்யிதினா இபுறுஹீம றப்பனா இன்னக ஹமீதுன் மஜீது அல்லாகும் மகுபிறுலி மாகத்தம்து வமாஅக்கறுது வமாஅசுறறுது வமா அகுலத்து வமா அஷ்றபுது வமா அந்தஅகு லமுபிகி இன்னக அந்தல் முகத்திமு வஅந்தல் முஅக்கிறு லாயிலாக இல்லா அந்த சுபுஹானக இன்னீ குந்து மினல் ளாலிமீன். அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின்



அதாபில் கபுரி வமின் அதாபின்னார் வமின் பித்னதுல் மஹ்யாய வமமாதி வமின்பித்னதி மஸீஹித்தஜ்ஜால் அல்லாகும்ம இன்னீ ளலம்து நபுசீ ளுல்மன் கதீறன் கபீறன் பகுபிறுலீ மகுபிறதன்மின் இந்திக இன்னக அந்தல் கபூறுற்றஹீம். அல்லாகும்ம யாமுகல்லிபல் குலூபு தப்பித் கல்பீ அலாதீனிக வதாஅதிக வஈமானிக யா அல்லாகு என்பதாம்.

இமாமானவன் அத்தஹிய்யாத்தில் நீளமாய் ஓதாமல் அத்தஹிய்யாத்திலும் சலவாத்திலும் பறுலான ஓதல்மட்டுக்குக் குறைய சுன்னத்தான ஓதலிற் சுருக்கிக் கொள்ளுதல் சுன்னத்தாம்.

இருபத்தோராம் சுன்னத்தாவது இரண்டாம் சலாம் வாங்குதலாம்.

முதல் சலாங்கொடுத்து இரண்டாம் சலாங் கொடுக்க முன்வு ஆழுறித்துவிட்டால் இரண்டாம் சலாம் கொடுத்தல் ஹறுமாம்.

சலாமில் வறஹ்மதுல்லாஹி என்பதை அதிகப்படுத்திக்கொள்ளுதல் சுன்னத்தாம்.

(430.) தொழுகையின் இருபத்திரண்டாம் இருபத்திமூன்றும் இருபத்திநான்காம் இருபத்தைந்தாம் சுன்னத்துக்களெவை?

இருபத்திரண்டாம் சுன்னத்தாவது இரண்டு சலாங் கொடுக்கும்போதும் கன்னத்தைப் பின்னே இருப்பவர்கள் கண்டுகொள்ளத்தக்க அளவு திருப்புதலாம்.

... கன்னத்தைப் பின்னுள்ளிருப்பவன் கண்டுகொள்ளத்தக்க அளவு திருப்பி அஸ்ஸலாமு அலைகும் வறஹ்மத்துல்லாஹி வபறகாத்துஹு என்று சொல்லுதலும் அப்படிச் சொல்லும்போது தொழுகையை விட்டுப் புறப்பட்டேனென்று நினைத்துக்கொள்ளுதலும் வேண்டும்.

அந்த சலாமினால் வலதுபாகமிருக்கும் இமாமுக்கும் ஜமாஅத்தாருக்கும் முஃமீனாகிய மனுஜின் மலக்குகளுக்கும் சலாம்சொன்னதாகவும் இடதுபாகமிருக்கும் இமாம் ஜமாஅத்துடைய சலாமுக்கு புறத்தி சொல்வதாய் நினைத்து இரண்டாம் சலாம் கொடுக்கச் சற்றுமுன் தலையை உயர்த்திக் கொஞ்சம் கவிழ்த்தி இடதுபாகமிருப்பவர்களுக்குச் சலாம் சொன்னதாகவும் அவர்களுக்கு ஜவாபுசொன்னதாகவும் பின்னுள்ளவர்களுக்கும், முன்னாலேயுள்ளவர்களுக்கும் இரண்டால் ஒரு சலாமைக்கொண்டு சலாம் சொன்னதாகவும் புறத்தி சொன்னதாகவும் நினைத்துகொள்ளுதல் வேண்டும்.

எதிரேயிருப்பவர்களுக்கு முந்தின சலாமைக்கொண்டே சலாமையும் புறத்தியையும் நினைத்தல் அபுளலாம்.

முதல் சலாமில் வலக்கன்னத்தை திருப்பிய அளவு இரண்டாம் சலாமிலும் இடக்கன்னத்தை திருப்புதல் சுன்னத்தாம்.

இருபத்திமூன்றும்சுன்னத்தாவது தொழுகையிற் புகும்போது யாதேனும் பராக்கற்றவனாகவும் சந்தோஷித்தவனாகவும் புகுதலாம்.

இருபத்திநான்காம் இருபத்தைந்தாம் சுன்னத்துக்களாவன. (குகூஉ) (குலூஉ) எனும் இரண்டுமாம் அது உள்ளச்சத்துடனே தொழுதலாம்.

---

## அல்பாபுல்தானி அஷறபியாவில் சஜிததிஸ்ஸஹ்வி.

(பன்னிரண்டாம்பாபு சஜிதாசஹ்வைப்பற்றியது.)

## க - ம் பிரிவு.

(431.) சஜிதாசஹ்வு என்பதியாது?

மறந்ததற்காய்ச் செய்யப்படும் சுஜூதென்பதாம்.

அது தொழுபவர்கள் இரண்டாம் அத்தஹிய்யாத் தோதியபின் சலாங்கொடுக்கச் சற்று முன்செய்யப்படும் இரண்டு சுஜூதுக்களாம்.

(432.) சஜிதாசஹ்வு செய்பவர்களுக்கு யாது செய்தல் வாஜிபாகும்?

சஜிதா சஹ்வுசெய்ய ஆரம்பிக்கும்போதே நிய்யத்துவைத்தல் வாஜிபாம்.

நிய்யத்து வைக்காமல் சஜிதா சஹ்வுசெய்தால் தொழுகை பாத்திலாகிவிடும்.

(433.) தொழுகையில் சஜிதா சஹ்வுசெய்தலை ஆமாக்கப்படாதவைகளெவை?

அபு ஆது சுன்னத்தல்லாத சுன்னத்துக்களாம்.

தொழுகையில் அபுஆது சுன்னத்தல்லாத வேறே எந்த சுன்னத்தையாயினும் விட்டதற்காய் சஜிதாசஹ்வுசெய்தலாகாது. அதையறிந்து முரண்டாய் சஜிதாசஹ்வு செய்தால் தொழுகை பாத்திலாம்.

(434.) ஓதலினால் சஜிதாசஹ்வைத் தேடுபவைகள் எவை?

பாத்திஹாவை அல்லது அதிற்சிலதை அதின் தானமல்லாத்ததில் ஓதுதல், அத்தஹிய்யாத்தை அல்லது அதிற் சிலதை அதின் தான



மல்லாத்ததில் ஓதுதல், சூறத்தை அதின் தானமல்லாததில் ஓதுதலாகியவைகளும் பிறவுமாம்.

(435.) செயலால் சஜிதாசஹ்வைத் தேடுபவைகள்யாவை?

மறந்து செயலாலுள்ள வோர் பறுலை அதிகப்படுத்துதல், இருதிதால் இரண்டு சுஜூதுக்கிடையிலுள்ள இருப்புக்களை நீட்டுதல் ஆகியவைகளும் பிறவுமாம்.

(436.) சஜிதாசஹ்வைத் தேடத்தக்க சக்கியாது?

மூன்று றகஅத்துத் தொழுதோமோ நாலு றகஅத்துத் தொழுதோமோ எனவரும் சக்கு சஜிதாசஹ்வைத் தேடுமாம் இவ்விதச் சக்குள்ளவன் மேலும் ஓர் றகஅத்துத் தொழுவதுடன் அச்சக்கு நீங்கிவிட்டாலுமாம்.

ஒருவன் நாலோ மூன்றோவெனச் சக்குவைத்து நான்காம் றகஅத்துக்குஎழும்பமுன் மூன்றாமெனத் திட்டம்வந்ததேயாகில் சஜிதா சஹ்வுசெய்தலாகாது எழும்பிய பின் திட்டம் வருமேயாகில் சஜிதா சஹ்வு செய்தல்வேண்டும்.

(437.) இமாம் சஜிதாசஹ்வுசெய்யத் தேடுங் கருமத்தையும்விட்டு சஜிதாவும் செய்யாமல் விட்டால் மஃமூம் சஜிதாசஹ்வு செய்தல்வேண்டுமா?

இமாஞ்சலாங்கொடுத்தபின் மஃமூம் சஜிதா சஹ்வு செய்தல் வேண்டும்.

(438.) இமாமோடு சஜிதா சஹ்வுசெய்த (மஸ்பூக்கு) தன் தொழுகையின் கடைசியிலும் சஜிதா சஹ்வு செய்தல் வேண்டுமா?

மஸ்பூக்கு தன்தொழுகையின் கடைசியில் சஜிதா சஹ்வு செய்தல் வேண்டும்.

இமாமைத் தொடர்ந்திருக்கும்போது மஃமூம் அபுஆது சுன்னத்து முதலியவைகளை மறந்து செய்யவில்லையாகில் அதற்காக சஜிதா சஹ்வு செய்தல் சுன்னத்தல்ல.

இமாம் சஜிதா சஹ்வு செய்யும்போது பின்வந்து கூடிய மஸ்பூக்கானவனும் துவக்கமாகவேவந்து சேர்ந்தவனும் இமாமைத் தொடர்ந்து சுஜூது செய்தல் வாஜிபாம் இமாம் இன்னதைத்தான் மறந்தார் என்று அறியாவிட்டாலுமாம்.

இமாமோடு சஜிதா சஹ்வு செய்தல் வாஜிபென்றறிந்து முரண்டாய்த் தொடராவிட்டால் தொழுகை பாத்திலாகிவிடுமாம்.

இமாமோடு தொடர்பா யிருக்கும்போதில் மஉமூமுக்கு மறதி யுண்டானால் அம்மறதிக்காய் சஜிதா சஃவு செய்யலாகாது தொடர்பு நீர்த்தபின் வந்த மறதிமுதலியதற்காக சஜிதா சஃவு செய்தல் வேண்டும்.

இமாமுல் அகுலம் செய்யிதுனா அபூஹனீபா இமாமுடைய மதுகபைத் தொடர்ந்த இமாமைசுப்ஹூத்தொழுகையில் தொடர்ந்து தான் குனூத்தை ஓதிக்கொள்ள இடங்கிடைத்தால் ஓதிக்கொண்டு இமாமுடன் முந்தினசுஜூதில் சேர்ந்துகொள்ளலாம் அப்படியே சேர்ந்துகொள்ள இடங்கிடைக்காவிட்டால் அவரை விட்டுப் பிரிக்கிற நிய்யத்து வைத்துப் பிரிதல் வேண்டும் அல்லது குனூத்தோதாமல் இமாமோடு சுஜூது செய்யலாம்.

மேற்சொல்லியப்படி குனூத்து ஓதினாலும் ஓதாவிட்டாலும் சஜிதாசஃவுசெய்தல் சுன்னத்தாம்.

குனூத்து ஓதப்படாத எத்தொழுகையையேனுந் தொழுபவனைத்தொடர்ந்து சுப்ஹுடையபறுலைத்தொழும் மஉமூம்மேலே சொல்லியவாறே செய்தல்வேண்டும்.

இமாமோடு முந்தின சுஜூதில்சேர்ந்துகொள்ளக்கூடாத அற்ப நேரம் மஉமூமுக்குக் கிடைத்தால் வழக்கமான குனூத்தை விட்டு சுருக்கமானவோர் குனூத்தை ஓதிக்கொள்ளுதல் சுன்னத்தாம் அதாவது அசுஅலுகயாகபூறு லன் தகுபிறலீ வசல்லல்லாகு அலா செய்யிதினா முகம்மதினின் நபிய்யி வஅலா ஆலிகி வசகுபிகி வசல்லம் என்பதாம்.

(439.) சலாங்கொடுத்ததன் பின்வரும் சக்குசஜிதா சஃவைத் தேடுமா?

சலாங் கொடுத்ததின்பின் நிய்யத்து தகுபீறுதஹற்றமல்லாத ஷறுத்து பறுலுக்களில் சக்குவருமாயின்யாதோர் குறைபாடுமுண்டாகாது.

நிய்யத்து தகுபீர் தஹற்ற மென்பவைகளில் சக்குவருமாயின் அதாவது சலாங்கொடுத்ததின் பின் மறந்துவிட்டது திட்டமாயிருந்து அவனுமோ தொழுகையை பாத்திலாக்கிவிக்கும் நஜீசு முதலியவைகள் படாமலும் நேரம் நீளப்படாமலும் இருந்தால் விடப்பட்டதி லிருந்து எடுத்து எஞ்சியதைத் தொடுத்து முடித்தல் வாஜிபாம் கிபுலா மாறியிருந்தாலும் கொஞ்சம் பேச்சு பேசினாலும் கொஞ்சம் நடந்து பள்ளியை விட்டுப் புறப்பட்டாலுமாம்.

(440.) சஜிதா சஃவில் ஓதவேண்டியது யாது?

சஜிதாசஃவில் சுபுகானமன் லாயனாமு வலாயசகூ என்பதாம்.



## அல்பாபுல் தாலிது அஷறா பயானில் சஜிதத்திலாவதி.

(பதின்மூன்றாம்பாபு சஜிதாத்திலாவத்தைப் பற்றியது.)

(441.) சஜிதாத்திலாவத் தாவதியாது?

குறுஆன் ஷரீபை ஓதுபவனும் ஓதும்போது கேட்டிருப்பவனும் சஜிதாத்தி லாவத்துடைய நிய்யத்துடன் செய்யும் சுஜூதாம்.

சஜிதாஉடைய ஆயத்தைச் சிறுவர்கள் ஓதினாலும் வுலுவில்லாதவர்கள் ஓதினாலும் காபிர் ஓதினாலும்கேட்டவர்கள் சஜிதாத்திலாவத்துச் செய்தல் வேண்டும்.

ஜுனுபாயிருப்பவன் ஹைலோடிருப்பவன் மஸ்துப்பிடித்தவன் நினைவு தடுமாறினவன் ஆகியவர்களின் ஓதலைக் கேட்டதற்காகவும் கினிநாகணவாய் முதலிய ஹயவான்களின் ஓதலைக் கேட்டதற்காகவும் சஜிதாத்தி லாவத்துச் செய்தல் சுன்னத்தல்ல.

குறுஆனைக் கேள்க்கவேண்டுமெனும் நாட்டத்துடன் கேட்டவன் அந்த சஜிதாச்செய்தல் நாட்டமில்லாமற்கேட்பவனைக்காண பெலமான சுன்னத்தாம்.

தொழும்போதாவது அல்லது மற்ற எப்போதாவது சஜிதா உடைய ஆயத்தை ஓதி சஜிதாச்செய்து பின்பும் அந்த ஆயத்தையே மறுதரமும் ஓதினால் மறுதரமும் சஜிதாச் செய்தல் வேண்டும்.

(442.) குறுஆனில் சஜிதாத்திலாவத்துச் செய்தலை வருந்துவிக்கும் ஆயத்துக்களெத்தனை?

பதினான்கு ஆயத்துக்களாம் இப்பதினான்கு ஆயத்தில் ஒன்றையாவது ஓதினாலும் ஓதக் கேட்டிருந்தாலும் சஜிதாச் செய்தல் சுன்னத்தாம்.

(443.) சஜிதாத்திலாவத்தின் பறுலுக்களெத்தனை?

சஜிதாத்தி லாவத்துச் செய்பவன் சஜிதாத்தி லாவத்துச் செய்கிறேனென்று நிய்யத்து வைத்துத் தகுபீர் கட்டுதலொன்றுமேயாம்.

தொழாமலிருக்கும்போதில் சஜிதாத்திலாவத்து செய்வதின் பறுலாவது, நிய்யத்தும் தகுபீர் தஹற்றமும், தொழுகையின் சுஜூதுபோல் ஒரு சுஜூது செய்தலும், ஒருசலாம் கொடுத்தலுமாம்.

தொழுகை இல்லாதபோதில் சஜிதாத்திலாவத்துக்கு ஷறுத் தாவது தொழுகையின் ஷறுத்துக்களாம்.

(444.) சஜிதாத்திலாவத்து எவ்வாறு செய்தல்வேண்டும்?

தொழுகையின் சுஜூதுபோல் ஒரு சுஜூது செய்தல் வேண்டும்.

(445.) சஜிதாத்திலாவத்தில் ஓதவேண்டியதியாது?

சுஜூதில் ஓதவேண்டிய தஸ்பீகு ஓதியபின் சஜத வஜ்ஹீ லில்லதீ கலகஹு வசவ்வறஹு வசக்கசம்அஹு வபசறஹு பிகவுலிஹி வ குவ்வதிஹி பதபாறகல்லாகு அகுசனுல் காலிகீன் என்பதாம்.

(446.) தொழுபவன் சஜிதாத்திலாவத்துச் செய்யலாமா?

ஆம் தொழுபவன் தன்னுடைய ஓதலுக்காக சஜிதாத்திலாவத்துச் செய்யலாம்.

மஉமூமானவன் இமாமுடைய ஓதலுக்காக சஜிதாத்தி லாவத்துச்செய்தல் வேண்டும்.

இமாம் சஜிதாத்தி லாவத்துடைய ஆயத்தை ஓதிவிட்டு சஜிதாச் செய்யாமல் றுகூஉடைய ஹத்தைச் சேர்ந்தபின் சுஜூதுக்குப் போக நாடுவாராயின் சுஜூதுக்குப் போதல் ஜாயிசல்ல.

சிற்றியத்தான் தொழுகையில் இமாம்சஜிதாத்தி லாவத்துள்ள ஆயத்தை ஓதினல் தொழுகை தீருமட்டும் சஜிதாச் செய்யாமல் பிற்படுத்தல் சுன்னத்தாம்.

(447.) சஜிதாத்தி லாவத்தின் பொருட்டால் தொழுகை பாத்திலாகுமா?

ஜமாஅத்துத் தொழுகையில் இமாம் சஜிதாச்செய்ய மஉமூம் சஜிதாச் செய்யாவிட்டாலும் இமாம் சஜிதாச்செய்யாதிருக்க மஉமூம் சஜிதாச் செய்தாலுந் தொழுகை பாத்திலாம்.

இமாம் சஜிதாச்செய்து தலையையுயர்த்தும் வரைக்கும் மவுமூம் அறியாமலிருந்து பின்பு அறிந்தால் தொழுகை பாத்திலாகாது.

இமாம் தலையை உயர்த்த முன் அறிந்த மஉமூம் உடனே சஜிதாச் செய்தல் வேண்டும்.

மஉமூம் சஜிதாவுக்குப் போம்போது இமாம் எழும்பிவிட்டால் இவனுமப்படியே எழும்பவேண்டும்.

448.) சஜிதாவை ஹறுமாக்கிவிப்பவைகளியாவை?

சஜிதாச் செய்யவேண்டுமென நினைந்து குறுஆன் ஓதி சஜிதாச் செய்தலும் யாதேனும் சபபில்லாமல் அல்லாகுத் தஆலா அளவில் முடுகுதல் பெறநாடிச் சஜிதாச் செய்தலுமாம்.



(சஜிதா ஷுக்[illegible]றைப் பற்றி[illegible]து.)

(449.) சஜிதா ஷுக்குறுசெய்யத்தக்[illegible]வர்களியாவர்?

தான் வழிபார்த்திருந்த அல்லது வழி[illegible]ார்த்திருக்காதவோர் [illegible]கு மத்து, தனக்கு மாத்திரம், அல்லது [illegible]சந்ததியாருக்கு மாத்திரம் சொந்தமாய் அல்லது தன் தேசவாசிகளுக்கெல்லாம் பொதுவாய் உண்டானல் அவர்களும் தனக்கு மாத்திரம் அல்லது தன் சந்ததியாருக்கு மாத்திரம் சொந்தமானது அல்லது தன்தேச வாசிகளுக்கெல்லாம் பொதுவானது ஆகியவோர் ஆபத்து நீங்கினல் அவர்களும் சஜிதா ஷுக்று செய்யத்தக்கவர்களாம் அவர்களுக்கு அது சுன்னத்தாம்.

(450.) குறுஆன் ஷரீபில் எத்தனை இடத்தில் சஜிதா ஷுக்குறுண்டு?

குறுஆன் ஷரீபில் (சாத்துவல் குறுஆன்) எனும் சூறத்தில் மாத்திரம் ஓர் சஜிதா ஷுக்குறு இருக்கின்றது.

தொழுகையில் சஜிதா ஷுக்குறுசெய்தல் ஜாயிசல்லவாம்.

---

## அல்பாபுல் றுபிஉ அஷற பீபயானில் முபுதிலாத்திஸ்ஸலாத்தி.

### பதினன்காம்பாபு தொழுகையைப் பாத்திலாக்கிவிப்பவைகளைப்பற்றியது.

(451.) தொழுகையை பாத்திலாக்கிவிக்குங் கருமங்களெத்தனை?

தொழுகை பத்துக் கருமங்களால் பாத்திலாகும் அவைகளாவன தொழும்போதிற் பேசும் கலாம், தொடர்பாய் மூன்று செயற்களைச் செய்தல், நோன்பை முறிக்கத் தக்கவைகளை உபயோகித்தல், துடக்குண்டாகுதல் நஜீசு படுதல், கிபுலாவுடைய திசையை விட்டு நெஞ்சைத் திருப்புதல் அவுறத்து வெளியாகுதல் நிய்யத்தைப் பேதமாக்கிவித்தல் ரித்தத்தை வருத்துங் கருமங்களுண்டாகுதல் செயலளவிற் சேர்ந்த பறுலுக்களை அதிகப்படுத்தலும் இருத்தால் இரண்டு சுஜூதுக் கிடையிலுள்ள இருப்புக்களாகியவைகளை அதிகப்படுத்துதலு மாகியவைகளாம்.

(452.) தொழுகையை பாத்திலாக்கத்தக்க (கலாம்) யாது?

குறுஆன் மற்றும் திக்றுகளல்லாததில் தொடர்பாய் இரண்டு ஹறுபுகள் வெளியாகத் தக்கதாய் மொழிதலாம் அது. தொழுகையை பாத்திலாக்கிவிடும், அவ்விரண்டு ஹறுபும் மஅனு இல்லாததானுலும்சரி பறுலான ஓதலல்லாததை ஓதுவதற்காய்க்களைத்தகளைப்

யில் இரண்டு ஹுறுபு அல்லதற்கதிகமான ஹுறுபுகள் வெளியானாலும் தும்மல் இருமல் அழுகை சிரிப்பு ஆதியவைகளை முரண்டாய்ச் செய்ததால் இரண்டு ஹுறுபுகள் வெளியானாலும் தொழுகை பாத்திலாம்.

மஅனாவில்லாத இரண்டு ஹுறுபுகள் வெளியானால் மாத்திரமல்ல மஅனாவை விளங்கவைக்கும் ஒருஹுறுபு வெளியானாலும் தொழுகை பாத்திலாகிவிடும்.

மறதியால் அல்லது பழலான ஓதல்களை ஓதுவதற்காய்க் கனைத்தபோது அல்லது நோன்பாளி நோன்பை முறிக்கும் காறலை வெளிப்படுத்துதற்காய்க் கனைத்தபோது இரண்டு ஹுறுபுகள் வெளியானாலும் தொழுகை பாத்திலாகாது.

காசம் இருமல் முதலிய நோயாளர் இருமும் இருமலில் எத்தனை ஹுறுபு வெளியானாலும் தொழுகை பாத்திலாகாது.

தொழுபவன் (கிறுஅத்து) ஓதலை நாடாமல் காலல்லாகு காலத் நப்பிய்யு என்றால் தொழுகை பாத்திலாகிவிடும்.

(453.) தொழுகையை முறிக்கும் மூன்று செயல்களாவன யாவை?

தொழுகையின் செயலல்லாத செயலை அதிகமாக அல்லது முரண்டாக அல்லது மறதியாகத் தொடர்பாய் மூன்று செயல்களைச் செய்தலாம்.

தொடர்பாய் மூன்றடிவைத்தல் தொடர்பாய் மூன்றுதரம் வாயைச் சுவைத்தல் தொடர்பாய் மூன்றுதரம் மணிக்கட்டை அசைத்தல் தொடர்பாய் மூன்றுதரம் காலை அசைத்தல் ஆகியவைகள் தொழுகையை பாத்திலாக்கிவிக்கும் செயல்களாம்.

எடுத்தகையை வைத்தலும் தூக்கியகாலை மற்றக்காலுக்கு நேரேவைத்தலும் ஒரேசெயலாம் தூக்கியகாலை மற்றக்காலுக்கு முந்திவைத்தல் இரண்டு செயலாம்.

குதித்துப் பாய்தலால் தொழுகை பாத்திலாகிவிடும்.

நடுக்கல் வலிப்பு மிகுந்த சொறிவு ஆதியவைகளால் எவ்வளவு செயல்கள் உண்டானாலும் பொறுக்கப்படும்.

கையின் மணிக்கட்டுத் தரிபாடாயிருப்பதோடு விரலைமாத்திரம் சொறிவதற்காய் அல்லது தஸ்பீகுகளை எண்ணுவதற்காய் உசுப்புதல் தொழுகையை பாத்திலாக்காது.



(454.) நோன்பைமுறிக்கும் வஸ்துக்களை உபயோகித்தலாவதியாது?

போஷித்தல், பானம்பண்ணுதலாதியவைகளாம் உபயோகித்தலென்பதை பருமாறுதல் என்றும் பெரும்பாலார் சொல்லுகின்றனர்.

நோன்பை முறிக்குங் கருமங்களற்பமாயிருந்தாலும் தொழுகையை பாத்திலாக்கிவிடும்.

மறதியினால் மிகுதமாய்த் தின்பது நோன்பை பாத்திலாக்காவிட்டாலும் தொழுகையை பாத்திலாக்கிவிக்கும்.

சுத்தமான உமிழ் நீருடன்கலந்த நீரை முழுங்குதலும், பேதலித்த உமிழ்நீரை முழுங்குதலும், கண்டத்தின் ஹத்தைவிட்டுவெளியானகாறலை முழுங்குதலும் தொழுகையை பாத்திலாக்கிவிக்கும்.

(455.) தொழுகையில் துடக்குண்டாகுதலாவதியாது?

தொழும்போது சிறுதுடக்கு அல்லது பெருந்துடக்கு உண்டாகுதலாம்.

(456.) நஜீசுபடுதலாவதியாது?

ஐந்தாம் பாபின் முதலாம் பசுலில் 277-ம் இலக்கவினாவின்விடையிற் சொல்லப்பட்ட பொறுக்கப்படாத நஜீசு மேனியிலும் உடையிலும் உறுப்புக்கள் படுந்தானங்களிலும் படுதலாம்.

சொல்லப்பட்ட பொறுக்கப்படாத நஜீசுபட்டால் தொழுகை பாத்திலாம்.

விசுவாசியாகிய ஒருவர் உன்மேனியில் நஜீசு கிடக்கின்றது என்று அறிவித்தால் அதை உண்மைதானென்று ஒப்புக்கொண்டு அத்தொழுகையை மீளுவித்தல் வாஜிபாம்.

கையைக்கொண்டு நஜீசை உதறினால் தொழுகை பாத்திலாகும்.

(457.) நெஞ்சு கிபுலாவுடைய திசையைவிட்டு நீங்குதலாவதியாது?

தொழுபவனின் நெஞ்சு ஐன்கிபுலாவைவிட்டு நீங்குதலாம்.

(458.) அவுறத்து வெளியாகுதலாவதியாது?

அவுறத்தெனும் நாமம்பெற்ற மேனியைவிட்டு வஸ்திரமாதியவைகள் நீங்கிவிடுதலாம். தொழும்போதில் அவுறத்து வெளியானால் தொழுகை பாத்திலாகிவிடும்.

உடுத்திருந்த வஸ்திரத்தைக் காற்று நீக்க உடனே மறைத்தாலும், வஸ்திரம் அவிழ்ந்தவுடனே மறைத்துக்கொண்டாலும், தொழுகை பாத்திலாகாது.

தொழும்போது அவுறத்து வெளியாயிற்று என்று விசுவாசியான ஒருவர் அறிவித்தால் அத்தொழுகையை மீளுவித்தல் வாஜிபாம்.

(459.) நிய்யத்தைப் பேதப்படுத்துத லாவதியாது?

1. தொழும்போது தொழுகையைவிட்டுப் போடுவோமென நினைத்தல், இருமனதாயிருத்தல், ஆகியவைகளாம். இவைகள் தொழுகையை பாத்திலாச்கி விக்குமாம்.

2. தொழுகையை மனமுரண்டாய் முறிப்பது ஹறாம்.

அடர்ந்தேறிவரும் வஸ்வாசினுல் நிய்யத்தில் பேதம் நேர்ந்தால் தொழுகை பாத்திலாகாது. வஸ்வாசினுல் ஈமான் மற்றும் எவ்வித இபாதத்தும் முறியாது.

3. தொழும்போதில் கொலைசெய்தல் ஹறாமாகிய மாடு முதலியசீவ பிராணிகள் சேதப்படத்தக்க நிலைமையிலிருக்கக்கண்டால்தொழுகையைவிட்டு அவைகளை கலாசாக்கிவிக்கலாம்.

4. பாம்பையும் தன்னை அநியாயஞ்செய்யவரும் பகைஞனையுங்கண்டாலும், தன்னை வியாரப்படுத்தத் தக்கபொருள் கள்ளன்கையிலகப்படக்கண்டாலும், தொழுகையைவிட்டு அவைகளை கலாசாக்கிவிக்கலாம்.

5. தனிமையாய்த் தொழும்போது ஷறஆக்கப்பட்ட ஜமாஅத்தை நிறுத்தாட்டப்படக் கண்டால் தான் தொழும்பறுலான தொழுகையை நபில் முதுல காகப்பிரட்டி இரண்டு றகஅத்தில் சலாங்கொடுத்து அந்த ஜமாஅத்துடன் கூடித் தொழுதலும், இரண்டு றகஅத்து முடிய முதல் ஜமாஅத்துத் தப்பிவிடுமெனப் பயத்தால் உடனே தன் தொழுகையை முறித்து ஜமாஅத்துடன் கூடிக்கொள்ளுதலும், பெலப்பான சொல்படி சுன்னத்தாம்.

6. தனிமையாய்த் தொழுபவன் மூன்றும் றகஅத்தளவிற் சேர்ந்தபோது ஜமாஅத்தை நிறுத்தாட்டப்படக் கண்டால் தொழுகையை நிரப்பமாக்குதல் அந்த ஜமாஅத்து முடியமுன் சேர்ந்துகொள்ளலாமாயின் சுன்னத்து.

7. துஹறுதொழுபவன் அசறுதொழும் ஜமாஅத்தைக்கண்டு அதை முறித்தல் ஜாயிசல்ல. அதை சுன்னத்தாகப் பிரட்டினும் பாவியாவான்.

(460.) தொழுகையை முறிக்கும் ஒன்பதாம் பத்தாம் கருமங்களைப்பற்றிய விபரங்களெவை?

ஒன்பதாம் கருமம் தொழுபவன் நித்தத்திலாகுதலாம், தொழுபவன் தொழுந் தருணத்தில் முறுதத்தாகிவிட்டால் அப்போதே



அவன் இஸ்லாமின் ஊகுமைவிட்டு நீங்கிவிட்டான் இஸ்லாமைவிட்டு நீங்கினவனின் தொழுகை ஏற்கப்படாது.

பத்தாங்கருமமாகிய செயலாவுள்ள பறுலுக்களை அதிகப்படுத்தலும், இகுதிதால் இரண்டு சஜூதுக்கிடையிலுள்ள இருப்பாகியவைகளை அதிகப்படுத்தலும் என்றதாவது செயலளவிற்சேர்ந்த ஒவ்வொருபறுலையும் அதற்குக்குறித்த ஓதல்களின் நேரத்துக்கதிகமாய் நீட்டலும் இகுதிதாலையும் இரண்டு சஜூதுக்குமிடையிலுள்ள இருப்பையும் அதில் ஓதவேண்டிய ஓதலின் நேரத்துக்கதிகமாய் நீட்டலுமேயாம்.

---

## அல்பாபுல் காமிசு அஷற பிப்பானில்

## மகுறூ ஹாத்திஸ்ஸலாத்தி.

(பதினைந்தாம்பாடு தொழுகையின் மகுறூகுகளைப்பற்றியது.)

(461.) தொழுகையில் மகுறூகானவைகளுண்டோ?

ஆம் தொழுகையிற் பல மகுறூகுகளுண்டு.

(462.) தொழுகையிற் புகுதமுன் உண்டாகும் மகுறூகுகளெவை?

1. போசனம் பானம் ஆகியவை ஹாளிருயிருக்கும்போதில் பசித்தவன் போஷிக்காமலும் தாகித்தவன் குடிக்காமலும் தொழுதல் ஆகியவைகளாம்.

2. மலம், சலம், காற்று, ஆகியவைகளை அடக்கிக்கொண்டு தொழுதலும் மகுறூகாம்.

3. மலசல முட்டுப்பாட்டினுல் சகிக்கக்கூடாத வருத்தமுண்டாகில் ஹாளிருகிய தொழுகையை கலாவாக்கி (களாஹாஜத்து) மலசலமோசனஞ்செய்தபின் அத்தொழுகையைச் சிக்கிரமாய்த்தொழுதலால் வருத்தை கலாவாக்கின குற்றமுண்டாகாது.

(463.) எவ்வெவ் விடங்களில் தொழுவதை மகுறூகாக்கப்பட்டன?

1. மனிதர் நடக்கும்வழி, குப்பை, ஒட்டகமந்தை, மாட்டுமந்தைஸ்தலங்கள், பாலங்கள், தெரு, ஆயத்துறை, தவாலைப்புறுஸ்தானம், கக்கூசு, கொல்லை, கஸ்ஸாப்புக்கடை, திடுகூறுய் வெள்ளம்வரும் ஆற்றருகு, பிசகானமுதலால் கட்டிய பள்ளி, கோயில்களாகிய இடங்களிற் றெழுதல், மகுறூகாம்.

2. ஹலாலான பொருளாற் கட்டப்பட்டனவோ அல்லவோ வெனச்சக்குண்டாகும் கட்டிடங்களில் தொழுதல் மகுறூகல்ல.

(464.) தொழும்போது கண்ணைமூடிக் கொள்ளலாமா?

கண்ணைமூடிக்கொண்டு தொழுவதும் இருளில் தொழுவதும் மக்ரூறாகாம்.

(465.) எவ்வித விரிப்பில் தொழுதல் மக்ரூறாகாம்?

1. தொழுபவர்களைப் பராக்காக்கி விக்கத்தக்க வருணமுடைய பின்னல் சித்திரிப்புக்களாலாய விரிப்பில் தொழுதல் மக்ரூறாகாம்.
2. தன் துப்பட்டியின் நடுவை வலது தோளின்மேலும் அதின் இரண்டு நுனியையும் இடது தோளின்மேலும் போட்டுக்கொண்டு தொழுதலும் மக்ரூறாகாம்.

(466.) தொழுபவன் தான் சுஜூதிடுந் தலத்தைத்தவிர மற்றவைகளைப் பார்க்கலாமா?

ஜமாஅத்தை நிறுத்தாட்டப்படுவதையும், தனக்கோர் ஊறுதத்தை வருத்துபவை வருமெனும் சந்தேகத்தையும், பார்ப்பதேயன்றி வீணாய் முகத்தைக்கொண்டு சுஜூதிடுந் தானமல்லாதவைகளைப் பார்ப்பதும், உயரப்பார்ப்பதும், தன்னைப் பராக்குப்பூட்டத் தக்கவைகளைப் பார்ப்பதும் மக்ரூறாகாம்.

(467.) தொழுபவனின் தலையாலுண்டாகும் மக்ரூறுகளெவை?

1. தொழுபவன் தலையை மூடாதிருத்தல், தலையைக் கவிழ்த்திக்கொள்ளுதல், ஆகியவைகளாம்.
2. தொழும்போது கிபுலாவுக்கு நேராகவுந் தன்முகத்துக் கெதிராகவும் உமிழ்தல் மக்ரூறாகாம்.
3. தொழுகையில்லாத வேளைகளிலு மப்படி யுமிழ்தல் மக்ரூறுதான்
4. சுஜூதிடுந் தானத்திற்கிடந்து நெற்றியி லொட்டிய புழுதிமுதலியவைகளைத் துடைத்தல், பெருமூச்செறிதல், மூக்கைப் பொத்திக்கொள்ளுதல், நெட்டி முறித்தலாகியவைகளும் மக்ரூறாகாம்.
5. பள்ளியல்லாத ஸ்தானங்களில் தொழும்போது உமிழ் நேருமானல் தலையைக் கவிழ்த்தி இடதுபுறம் அல்லது மனிதர் இடதுபிறமிருந்தால் இடதுகாலின்கீழ் உமிழ்தல் வேண்டும்.
6. பள்ளியில் தன்னிடது புறமிடக்குந் துப்பட்டியில் உமிழ், நீர், காறல், சளி, முதலியவைகளை எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

(468.) தொழுபவனின் புயத்தால் உண்டாகும் மக்ரூறு யாது?

தோள்புயத்தைத் திறந்துகொண்டு தொழுதலாம்.



(469.) உரோமம் முதலியவைகளை முடிந்துகொண்டு தொழலாமா?

1. தொழுபவன் உரோமத்தை முடிந்துக்கொள்ளுதலும், வஸ்திரமாதியவைகளை முடிந்துகொள்ளுதலும் மக்ரூறானவைகளாம்.
2. மாதர்கள் தங்கள்கூந்தலை அவிழ்த்திக்கொண்டு தொழுதல் மக்ரூறாகாம்.

(470.) தொழுபவன் இரண்டுகாலையும் சேர்த்து நின்று தொழலாமா?

தொழுபவன் இரண்டுகாலையும் சேர்த்துக்கொண்டு நிற்பதும், முன்பின்னாய்க் காலைவைத்து நிற்பதும், உதட்டை இலேசாய் உசப்புவதும், மக்ரூறாகாம்.

---

## அப்பாபுல் சாதிசு அஷற பீபயானி சலாத்துன்நபில்.

(பதினாறாம்பாபு சுன்னத்துத் தொழுகையைப்பற்றியது.)

### அல்பஸ்லுல் அவ்வலு பீபாபிசலாத்துன்நபில்.

### ௧-ம் பிரிவு.

(471.) சலாத்துன் நபில் என்பதின் பொருள்யாது?

சுன்னத்துத் தொழுகை என்பதாம்.

நபில், ததவ்வுஉ, சுன்னத்து, முஸ்தஹப்பு, மன்தூப்பு, எனும் ஐந்தும் ஒரே அருத்தமுடைய சொல்லுக்களாம்.

(472.) சுன்னத்துத் தொழுகை எத்தனை வகைப்படும்?

நபில் முகையதுத் தொழுகை, நபில் முதலகுத்தொழுகை, என இருவகைப்படும்.

(473.) நபில் முகையதுத் தொழுகை யாவதியாது?

நேரம், காரியம், இடம் என்பவைகளைக்கொண்டு கைதிடப்பட்ட நபில் தொழுகையாம். அது இன்ன இன்ன (வகுத்த) நேரத்தில் இன்ன இன்ன (சபபு)காரியத்துக்காக இன்ன இன்ன இடத்திற் சென்றால் இன்ன இன்ன தொழுகைகளைத் தொழவேண்டுமென நியமிக்கப்பட்டனவாம்.

(474.) நபில் முதலகுத் தொழுகையாவதியாது?

தான நேர காரிய ஸ்தலங்களைக்கொண்டு தனைபுறைத நபில் தொழுகையாம்.

(475.) நபில் முகையதுத் தொழுகை எத்தனைவகைப்படும்?

இமாம் ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்படாத தொழுகை, இமாம் ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்பட்ட தொழுகை, என இருவகைப் படும்.

(476.) ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்படாத நபில் தொழுகைகளெவை?

றவாத்திபுத் தொழுகைகள், வித்றுத் தொழுகை, இஷ்றாக்குத் தொழுகை, ழுஹாத்தொழுகை, தஹிய்யத்துத் தொழுகை, வுழுத் தொழுகை, இஸ்திகாறுத் தொழுகை, அவ்வாபீன் தொழுகை, தஸ்பீஹாத் தொழுகை, தஹஜ்ஜுத்துத் தொழுகை, ஆகியவைகளாம்.

(477.) ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்பட்ட நபில் தொழுகைகளெவை?

(சலாத்துல் ஈதைன்) இரண்டு பெருநாள்தொழுகைகள், (சலாத்துல் குசூபைன்) இரண்டு கிராணத் தொழுகைகள், (சலாத்துல் இஸ்திஸ்கா உ) மழைதேடித் தொழும்தொழுகை தறாவீஹாத்தொழுகை ஆகியவைகளாம்.

(478.) நபில் முகையதில் (வகுத்தி) நேரத்தைக்கொண்டு தளைபூண்ட தொழுகைகளெவை?

றாத்திபத்தான தொழுகைகள், வித்றுத்தொழுகை, இஷ்றாக்குத் தொழுகை, ழுஹாத்தொழுகை, அவ்வாபீன் தொழுகை, தஹஜ்ஜுத்துத் தொழுகை, என்பவைகளும் இரண்டு பெருநாள்தொழுகைகள் தறாவீஹாத் தொழுகை என்பவைகளுமாம்.

(479.) இடத்தைக்கொண்டு தளைபூண்ட நபில் முகையதுத் தொழுகையாது?

தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுகை ஒன்றுமேயாம்.

(480.) நபில் முகையதில் (சபபு) காரியத்தைக்கொண்டு தளைபூண்ட நபில் தொழுகைகளெவை?

வதித்தொழுகை, இஸ்திகாறுத் தொழுகை ஆகியவைகளும் கிராணத்தொழுகையும் மழைதேடித் தொழும்தொழுகையுமாம்.

ஹயாத்தில் ஒருதரம் தொழவேண்டுமென்று சுன்னத்தாக்கப்பட்ட தஸ்பீஹாத் தொழுகை காரணகாரியதான நேரங்களாற் கட்டுப்படாத நபில் தொழுகையாம்.

---



## அல்பஸ்லுல்தானி பீபாபி சலாத்துன்நபில்.

## உ-ம் பிரிவு.

(481.) றாதிபத்தான சுன்னத்துத் தொழுகைகளெவை?

1. ழுஹறுடைய பறுழுதொழ முன் இரண்டு சலாமில் நான்கு றகஅத்தும், பின் இரண்டு சலாமில் நான்கு றகஅத்தும், அசறுடைய பறுழுதொழ முன் இரண்டு சலாமில் நான்கு றகஅத்தும், மஃரிபுக்குமுன் ஒரு சலாமில் இரண்டு றகஅத்தும், பின் ஒரு சலாமில் இரண்டு றகஅத்தும், இஷாவுடைய பறுழுதொழ முன் ஒரு சலாமில் இரண்டு றகஅத்தும், பின் இரண்டு றகஅத்தும், சுபுஹுடைய பறுழுதொழ முன் ஒரு சலாமில் இரண்டு றகஅத்து மாகிய இருபத்திரண்டு றகஅத்துக்களாம்.

2. இந்த றாதிபத்தான சுன்னத்துக்களில் ழுஹறுடைய பறுழு தொழ முன் இரண்டு றகஅத்து, பின் இரண்டு றகஅத்து, மஃரிபுக்குப்பின் இரண்டு றகஅத்து, இசாவுக்குப்பின் இரண்டு றகஅத்து, சுபுஹுக்கு முன் இரண்டு றகஅத்து, ஆகிய பத்து றகஅத்துக்களும் றாதிபத்தான சுன்னத்துக்களில் சுன்னத்து முஅக்கதாவான தொழுகைகளாம்.

3. முன்னென்றும் பின்னென்றும் சொல்லப்பட்ட சுன்னத்துத் தொழும்போது முந்தினதற்கு கபுலிய்யதன் என்றும் பிந்தினதற்கு பஃதிய்யதன் என்றும் நிய்யத்திற் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அதின் விபரத்தைப் பதினோராம் பாபின் இரண்டாம் பசுலின் 353-ம் இலக்க வினாவின் விடையிற்காண்க.

(482.) எந்நேரத்தில் வித்றுத் தொழுகை தொழவேண்டும்?

1. இசாத்தொழுதநேரந் தொடுத்து பஜ்று சாதிக்கு எனும் மெய்வெள்ளை வெளுப்பதற் கிடையிலுள்ள நேரத்தில் தொழுதல்வேண்டும்.

2. வித்றுத்தொழுகையில் மிகுந்தது பதினொரு றகஅத்து, இதில் குறைந்தது,ஒன்பது றகஅத்து,இதில் குறைந்தது ஏழு றகஅத்து, இதில் குறைந்தது ஐந்து றகஅத்து, இதிற் குறைந்தது மூன்று றகஅத்து, இதிற் குறைந்தது ஒரு றகஅத்தாம்.

3. பதினோர் றகஅத்துக்களுக் கதிகமாய்த் தொழுதல் ஷாயிசல்ல.

4. இத்தனை றகஅத்துத் தொழுவேனெனக் குறிப்பிட்டுக்கொண்டு தொழுபவன் அதைக்காண அதிகப்படுத்த நினைத்தால் குறிப்பிட்டதின் கடைசியில் அது அதிகப்படுத்துவதளவில் ஆரம்ப முன்

அதிகப்படுத்துவதின் நிய்யத்து வைத்தல்வேண்டும். குறித்த றகஆத்தில் குறைக்க நினைத்தால் அத்தஹிய்யாத் திருப்பிலிருக்க முன் நிய்யத்து வைத்தல்வேண்டும்.

5. துவக்கத்தில் இத்தனை றகஅத்து எனக் குறிக்காவிட்டால் பதினொரு றகஆத்தும் தொழலாம்.

6. வித்றுத் தொழுபவன் இரண்டிரண்டு றகஅத்துக் கொவ்வோர் தரம் சலாங் கொடுத்தல்வேண்டும். அது அபுளலாம்.

7. மூன்று றகஅத்துத் தொழுபவன் முதலாம் றகஅத்தில் சப்பிஹிஸ்மறப்பிகல் அஃலாவும், இரண்டாம் றகஅத்தில் குல்யா அய்யுஹல்காபிறூனவும், மூன்றாம் றகஅத்தில் குல்குவல்லா, குல்அஊது பிறப்பில் பலகு, குல்அஊது பிறப்பின் நாசு, எனும் மூன்று சூறத்துக்களும் ஓதித் தொழவேண்டும்.

8. மூன்று றகஅத்துக் கதிகமாய்த் தொழுபவர்கள் மேலே சொல்லப்பட்ட ஐந்து சூறத்துக்களையும் சொல்லியவீதப்படி பிந்திய மூன்று றகஆத்திலும் ஓதுதல்வேண்டும்.

9. வித்று தொழுது சலாங்கொடுத்தபின் சுபுஹானல் மலிகுல் குத்தூசு என்று மூன்றுதரம் சொல்லுதல்வேண்டும். மூன்றாந்தரத்தில் தொனியை உயர்த்திச் சொல்லுதல் நன்றாம்.

10. சுபுஹானல் மலிகுல் குத்தூசு என்று மூன்றுதரம் சொல்லியபின் சுபுஹானஇல்மலிகி வல்மலகூதி சுபுஹானதில் இஸ்ஸதி வல் அலமதி வல்குத்றதி வல் ஹைபதி வல்ஜலாலி வல்கமாலி வல்பகாஇ வல்ளியாஇ வல்தஹூஇ வல் ஆலாஇ வல்நுமாஇ வல்கிபுரியாயி வல்ஜபறூத்தி சுபுஹானல் மலிகில் ஹையில்லதீ லாயனூமு வலாயமூத்து சுப்பூஹுன் குத்தூசுன் றப்புனா வறப்புல் மலாயிகதி வர்றூஹு. அல்லாகும்ம இன்னீ, அஊதுபிரிலாக மின்சகுதிக பிமுஆபாத்திக மின்உகூபதிக, வஅஊதுபிக லாஉஹ்ஸீ தனா அன் அலைக அந்தக மாஅதுனைத்த அலாநபுசிக என்றோதுதல்வேண்டும்.

11. பஜ்று சாதிக்குமுன் விழித்திடலாமெனும் நம்பிக்கையுள்ளவர்கள் றமலான் மாசத்தில் வித்றுத் தொழுகையின் ஜமாஅத்துத் தப்பினாலும் பிற்படுத்தித் தொழுதல் சுன்னத்தாம்.

12. றமலான் மாசத்தின் இரண்டாம் பதினைந்தில் வித்றுத் தொழுபவர்கள் அத்தொழுகையின் கடைசி றகஅத்தில் குனூத்தோதுதல் சுன்னத்தாம்.

(483.) எந்த வகுத்தில் இஷ்ருக்குத் தொழுகை தொழவேண்டும்?

பொழுது ஒருவல்லயப் பிரமாணம் உயர்ந்ததின்பின் இஷ்ருக்குத் தொழுகை தொழவேண்டும்.



(484.) எந்தவகுத்தில் ளுஹாத் தொழுகை தொழவேண்டும்?

1. பொழுது ஒருவல்லயப் பிரமாணம் உயர்ந்ததுக்கும் மத்தியானத்துக்கு மிடையிலுள்ள எந்நேரத்திலாவது தொழலாம்.

2. இதில் ஏற்றமான வகுத்தாவது பொழுது உதித்து ஒருசாமம் சென்றவுடனே யுள்ளவகுத்தாம்.

3. ளுஹாத்தொழுகை இரண்டிரண்டு றகஅத்தாக எட்டு றகஅத்து மட்டும் தொழலாம்.

4. (மஸ்ஜிது) பள்ளிவாசலில் ளுஹாத்தொழுதல் அபுளலாம்.

5. ளுஹாத் தொழுபவர்கள் முதலாம் றகஅத்தில் வஷ்ஷம்ஸியும், இரண்டாம் றகஅத்தில் சூறத்து வல்ளுஹாவும், அல்லது முதலாம் றகஅத்தில் சூறத்துல் காபிறூனவும், இரண்டாம் றகஅத்தில் சூறத்துல் இகுலாசும் ஓதவேண்டும்.

6. இஷ்ருக்குத் தொழுகை ளுஹாத்தொழுகை எனும் இரண்டில் இஷ்ருக்குத் தொழுகையை முந்தியும் ளுஹாத் தொழுகையைப் பிந்தியும் தொழவேண்டும்.

(485.) தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுகையாவதியாது?

1. (மஸ்ஜிது) பள்ளிவாசலிற் புகுந்தவன் இருக்க முன் பள்ளிக்குக் காணிக்கையாகத் தொழும் தொழுகையாம்.

2. பள்ளியிற் புகுந்தவுடன் வேறே யாதேனும் பறுலான அல்லது சுன்னத்தான தொழுகைகளைத் தொழுபவன் தஹிய்யத்தை நாடாவிட்டாலும் தஹிய்யத்துத் தொழுகை உண்டாகுமாம்.

3. பள்ளியிற் புகுந்தவுடன் ஜனாசாத்தொழுகை, சஜிதாத்திலாவத்து, சஜிதாஷுக்று, என்பவைகளைச் செய்தலால் தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுகை உண்டாகாது.

4. குதுபா முடியும் தருணத்திலும் ஜமாஅத்தை நிறுத்தப்படுந் தருணத்திலும் பள்ளியிற் புகுந்தால் நின்றவனாகவே வழிபார்த்தல்வேண்டும்.

பள்ளியிற் புகுந்து தஹிய்யத்துத் தொழத்தக்க வசதியில்லாவிட்டாலும் அல்லது தொழ நாட்டமில்லாவிட்டாலும் சுபுஹானல்லாக் கலிமாவை நான்குதரம் ஓதவேண்டும். அது சுன்னத்தாம்.

(486.) வுளுத்தொழுகை யாவதியாது?

வுளுச்செய்து அந்த ஜலம்வற்ற முன் அதின் நிய்யத்துடன் தொழும் தொழுகையாம்.

(487.) இஸ்திகாருத் தொழுகை யாவதியாது?

1. யாதேனும் நல்கருமத்துக்காக அல்லாகுத்த ஆலா இடத்தில் கைறுதேடித் தொழும் தொழுகையாம்.

2. வியாபாரம், யாத்திரை, மனைகோலுதல், குடிபுகுதல், நிகாகு முடித்தல், கப்பல், நாவாய் ஓடமாதியவைகளி லேறுதல், புதிய பெண் மணவறை புகுதல், ஒருக்காலும் போகாத பூமிக்குப் போகுதல், முற்றாய்க் காபிரீன்கள் வாசஞ்செய்யுமிடத்திற் புகுதல், ஆகிய கருமங்களுக்கு ஆரம்பிக்கும்போதும் இவைகளுக் கொப்பான நற்கருமங்களுக்கு ஆரம்பிக்கும்போதும் இஸ்திகாருத்தொழுகை தொழுதல் சுன்னத்தாம்.

(488.) எந்த வகுத்தில் அவ்வாபீன் தொழுகை தொழவேண்டும்?

1. மஃரிபுக்கும்இஷாவுக்குமிடையிலுள்ள வகுத்தில்தொழவேண்டும் அது மஃரிபுடைய பறுலும் அதின் சுன்னத்தும் தொழுது அதின் திக்று அவுறாத்துக்களும் ஓதியபின்னும்.

2. அவ்வாபீன் தொழுகை இருபது றகஅத்தாம். ஆறுறகஅத்து அல்லது நான்கு றகஅத்து குறைந்தது. இரண்டு றகஅத்தும் தொழலாம்.

3. சலாத்துல் கபுலத்து என்பதும் சலாத்துல் அவ்வாபீன் என்பதும் ஒரே அருத்தமுடைய சொல்லுகளாம்.

(489.) தஸ்பீஹாத் தொழுகையாவதியாது?

1. தொழுகையின் ஒவ்வோரிடங்களிலும் ஓதவேண்டியவைகளை ஓதியபின் பின்வருமாறு தஸ்பீஹாகளை ஓதித்தொழும் தொழுகையாம். ஒவ்வோர்நாளும் தஸ்பீஹா தொழுதல் சுன்னத்து. நாடோறுந் தொழ லலாதவர்கள், வாரத்துக் கொருமுறை; அல்லது மாசத்துக்கொருமுறை, அல்லது வருடத்துக் கொருமுறை, அல்லது சீவாந்தம் ஒருமுறை யாயினுந் தொழவேண்டும்.

2. தஸ்பீஹாத் தொழுகை. நான்கு றகஅத்து அந்த நான்கு றகஅத்தையும் இரண்டு சலாமில் தொழுதல் சுன்னத்தாம் ஒருசலாமிலுந் தொழலாம்.

3. தக்பீறு, தஹற்றம்கட்டிவழக்கப்படி வஜ்ஜகுத்து, அஊது, பாத்திஹா, சூறத்து ஆகியவைகளை ஓதித்தீர்ந்தபின் நிலையிலேயே பதினைந்துதரம் தஸ்பீஹாசெய்து: றுகூஉக்குப்போய் அதில் ஓதவேண்டியதிக்று முதலியதை ஓதியபின் பத்துத்தரம் தஸ்பீஹாசெய்து இஉதிதாலில் தரித்து அதில் ஓதவேண்டியவைகளை ஓதியபின் பத்துத்தரம் தஸ்பீஹாசெய்து முதலாம் சுஜூதுசெய்து. அதில் ஓதவேண்டியவைகளை ஓதியபின் பத்துத்தரம் தஸ்பீஹாசெய்து நடுஇருப்பிருந்து அதில் ஓதவேண்டியதை ஓதியபின் பத்துத்தரம் தஸ்பீஹாசெய்து இரண்டாம். சுஜூதுசெய்து அதில்ஓதவேண்டியவைகளை ஓதியபின் பத்துத்தரம், தஸ்பீஹாசெய்து இஸ்திறாஹத்திருப்பிருந்து அதிலும் ஓதவேண்டியவைகளை ஓதியபின் பத்துத்தரம் தஸ்பீஹா செய்யவேண்டும்.



4. இவ்வாறு சொல்லப்பட்ட ஒவ்வொரு றகஅத்துக்களிலும், எழுபத்தைந்து தஸ்பீஹா நிரம்பவேண்டும்.

5. இரண்டாம் றகஅத்தில் இஸ்திறாஹத் திருப்பில்லை. அதில் ஓதவேண்டுமெனச் சொல்லப்பட்டதை இரண்டாம் றகஅத்தின் அத்தஹிய்யாத்தில் அத்தஹிய்யாத்தோத முன்னும், கடைசி அத்தஹிய்யாத்திருப்பில் அத்தஹிய்யாத்தோத முன்னும். ஓதவேண்டும்.

6. தஸ்பீஹாத் தொழுகையின் முதலாம் றகஅத்தில் சூறத்து அல்ஹாக்கும், இரண்டாம் றகஅத்தில் சூறத்து வல் அஸ்ரியும், மூன்றாம் றகஅத்தில் குல்யாவும், நான்காம் றகஅத்தில் குல்குவல்லாஹாவும், ஓதுதல் சுன்னத்தாம்.

7. வெள்ளிக்கிழமை மத்தியான காலத்தில் தொழுதல் நன்றாம்.

(490.) தஹஜ்ஜுத்துத் தொழுகையாவதியாது.

1. உறங்கி முழித்து இரவில் தஹஜ்ஜுத்துடைய நிய்யத்தோடு தொழும் தொழுகையாம்.

2. தஹஜ்ஜுத்துத் தொழுகையிற் குறைந்தது இரண்டு றகஅத்துமிகுந்ததற்கு மட்டில்லை, பன்னிரண்டு றகஅத்து என்றும் சொல்லுவார்கள்.

3. தஹஜ்ஜுத்துத் தொழும் வகுத்தாவது சஹ்றுடைய வகுத்தாம்.

4. தஹஜ்ஜுத்துத் தொழுகையை நபிநாயகம், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பறுலைப்போற் பாவித்து வந்தமையால் நாளும் விடாமல் தொழுது வருவது உத்தமம்.

5. தஹஜ்ஜுத்துத் தொழுதபின் இஸ்திஃபாறு துஆக்களை மிகுதமாக்கிவித்தல் சுன்னத்து.

6. றகஅத்தின் தொகையை மிகுதமாக்குதலைக்காண நிலையை நீளமாக்கிவித்தல் அபுளலாம்.

7. தஹஜ்ஜுத்துத் தொழுகையின் முதலாம் றகஅத்தில் பாத்திஹா ஓதியபின். சூறத்து யாசீன் ஒருதரமும் சூறத்துல் முசம்மில் பன்னிரண்டு தரமும் இரண்டாம் றகஅத்தில் சூறத்து யாசீன். ஒரு

தாமும் சூறத்து முசம்மில் பதினோர் தாமும் மூன்றும் றகஅத்தில் சூறத்து யாசீன் ஒருதாமும் சூறத்து முசம்மில் பத்துத்தாமும் ஓதித் தொழவேண்டும்.

8. இவ்விதமாய்ப் பன்னிரண்டு றகஅத்துத் தொழவேண்டு மென்பது சூபியாக்களாற் சொல்லப்பட்டதாம்.

9. வழக்கமாய் தஹஜ்ஜத்துத் தொழுபவர்கள் கையூலத் தூக்கம் உறங்குதலும் சுபுஹுடைய சுன்னத்துக்கும் பறுலுக்கு மிடையில் வலப்பக்கமாய் ஒருக்களித்துச் சாய்ந்து இவ்வாறே கபுறில் கிடப் போமென அப்பியாசப் படுத்திக்கொள்ளுதலும் சுன்னத்தாம்.

---

## அல்பசுலுல் தாலிது பிபாபி சலாத்துன் நபில்.

## ங - ம் / பிரிவு.

(491.) சலாத்துல் ஈதைனி எனும் சொல்லின் பொருள்யாது.

இரண்டு பெருநாள்த் தொழுகை என்பதாம்.

இரண்டு பெருநாளாவது. நோன்புப் பெருநாளும். ஹஜ்ஜுப் பெருநாளுமாம். இவ்விரண்டால் முந்தினதற்கு. (ஈதுல் அஸ்கர்) சின்னப்பெருநாளென்றும். இரண்டாவதற்கு. (ஈதுல்அக்பர்) பெரியபெருநாளென்றும். நோன்புப் பெருநாளுக்கு. ஈதுல் பித்ரி என்றும் ஹஜ்ஜுப் பெருநாளுக்கு. ஈதுல் அழ்ஹாவென்றும் பல நாமங்களுண்டு.

பெருநாள்த் தொழுகையின் வக்த்தாவது. சூரியன் உதித்த நேரந்தொடுத்து. அது மத்தியைவிட்டு நீங்குவதற்கிடையிலுள்ள வக்த்தாம்.

ழுஹாவுடையவக்த்தில், தொழுதல் அபுளலாம்.

ழுஹாவுடைய வக்த்தில் ஏற்றமானதை 484ம் இலக்க வினாவின் விடையில். 2ம் இலக்கவசனத்திற் காண்க.

ஒவ்வோர் பெருநாளிலும் முன்குறித்த வக்த்தில் இரண்டு றக அத்துத் தொழுதல் சுன்னத்தாம்.

பெருநாள்த்தொழுகைக்குத் தக்பீர் தஹ்றீம் கட்டி வஜ்ஜஹ்துத் தோதியபின் அஊது ஓதுமுன் கையை உயர்த்தி ஏழுதரம் தக்பீர் கட்டுதல்வேண்டும்.



இரண்டாம் றகஅத்துக்கு எழும்பி அஊது ஓதுமுன் கையை உயர்த்தி ஐந்துதரம் தக்பீர்கட்டுதல் வேண்டும். இவ்விதம், ஒவ்வோர் றகஅத்திலும் மேற்சொல்லிய அளவுதக்பீர் கட்டியபின் பாத்திஹாவோதி. வழக்கப்படியே தொழவேண்டும்.

மேலேசொல்லிய தக்பீறுகளுக்கிடையில் சுபுஹானல்லாஹி வல் ஹம்துலில்லாஹி வலாயிலாக இல்லல்லாகு வல்லாகு அக்பர். என்று ஓதவேண்டும்.

இமாமை யிரண்டாம் றகஅத்திற் றொடர்ந்தவன். இமாமோடு ஐந்துதக்பீர் கட்டித்தான் தனிமையாய்த் தொழும் றகஅத்திலும் ஐந்து தக்பீர்தான் கட்டவேண்டும்.

தக்பீர்: தஹ்றீம் கட்டிவஜ்ஜஹ்துத்தோதியபின் மறந்து அஊது ஓதிவிட்டாலும் தக்பீரில் தொடுத்துக் கொள்ளலாம். பாத்திஹா வில்தொடுத்து விட்டால் பாத்திஹா வோதித் தீர்ந்தபின்பின் தக்பீரில் தொடுத்தல்வேண்டும். தக்பீறுக்குப்பின் பாத்திஹாவை ஓதுதல் சுன்னத்தாம்.

நோன்புப் பெருநாள்த் தொழுகையை போஷித்தபின் தொழுவதும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையைத் தொழுதபின். போஷிப்பதும் சுன்னத்தாம்.

ஹஜ்ஜுப் பெருநாளில் கிழக்குவெளுக்கமுன் றொடுத்துச் சூரியன் ஒருவல்லியப்பிரமாணம் வரைக்கு முயருமட்டாய் போஷிக்காமலிருத்தல் சுன்னத்தாம்.

பெருநாள் தொழுகைகளின் முதலாம் றகஅத்தில் சூறத்து காபும், இரண்டாம் றகஅத்தில் சூறத்து. இக்தறபவும் அல்லது முதலாம் றகஅத்தில் சப்பிஹிஸ்மறப்பிகல் அஃலாவும் இரண்டாம் றக அத்தில் கல்அதாவும் ஓதுதல் சுன்னத்தாம்.

இரண்டு பெருநாள் தொழுகையும்தொழுதபின் இரண்டிரண்டு குதுபா ஓதுதல் வேண்டும். முதலாம் குதுபாஓத ஆரம்பிக்கும் போது ஒன்பது தக்பீறும், இரண்டாம் குதுபா ஓத ஆரம்பிக்கும் போது ஏழுதக்பீறும், விசேஷமான வசனப்பிரிவுகளில்தக்பீறை மிகுதமாக்குதலும் குதுபாஓதும் கதீபுக்கு சுன்னத்தாம்.

ஹஜ்ஜுமாசத்தின் ஒன்பதாம்நாள். சுபுஹுதொடுத்து அய்யாமுத்தஷ்ரீக்குக்கடைசி. அது. பதின்மூன்றாம் நாள் அசறுவரைக்கும் தொழுகைக ளடங்கலுக்கும்பின். அத்தொழுகைகள் அதாவாயிருந்தாலும் சுன்னத்தாயிருந்தாலும் கழாவா யிருந்தாலும் நேர்ச்சையாயிருந்தாலும்சரி. தக்பீறு சொல்லுதலும் நோன்புப் பெரு

நாள். மஃரிபு தொடுத்து பெருநாள்த் தொழுகையின் தக்பீறு தஹ்றீம் வரைக்கும். மேற்சொல்லிய விதமாய் ஈத்தொழுகைகளுக்குப் பின்னும், தக்பீறு சொல்லுதலும் சுன்னத்தாம்,

ஹஜ்ஜுமாசம் பிறைக்கண்ட நாள்முதல் அய்யாமுத்தஷ்ரீக்கின் கடைசிவரைக்கும் மாட்டா டொட்டகம் முதலிய ஹய்வான்களைக் கண்டாலும் அவைகளின் தொனியைக் கேட்டாலும் தக்பீறு சொல்லவேண்டும், அது சுன்னத்தாம்.

இரண்டு பெருநாள் இரவையும் திக்று சலவாத்து குறு ஆன் தக்பீறு முதலியவைகளைக்கொண்டு ஹயாத்தாக்கிவித்தல் வேண்டும்.

(ஜும்ஆ) வெள்ளிக்கிழமையில் பெருநாள் வருமேயாகில் இரண்டுக்கும் அத்தின் தொழுகையை வெவ்வேறாகத் தொழுவதும் இரண்டின் குத்பாக்களையும் வெவ்வேறாக ஓதுவதும் அபுளலாம்.

ஜும்ஆவின்குத்பாவையே இரண்டுக்கும் போதுமாக்கிக்கொள்ளவும் ஆகும். அப்படியானால் ஜும் ஆவின்குத்பாவைக்கொண்டு ஜும்ஆவை நாடுதல் ஷர்த்தாம், இரண்டையும் நாடினாலும் பெருநாள் குத்பாவை மாத்திரம் நாடினாலும் ஜும்ஆவாத்திலாம்.

## (492.) சலாத்துல் குசூபைனி என்பதின் பொருள்யாது?

இரண்டு கிரணத்தொழுகை என்பதாம்.

இரண்டு கிரணமாவது சூரியகிரணமும் சந்திர கிரணமுமாம்.

கிரணம் பிடித்து வெளுப்பதற் கிடையிலுள்ளநேரமே கிரணத்தொழுகையின் வக்த்தாம்.

சூரிய கிரணம் பிடித்தாலும் சந்திரகிரணம் பிடித்தாலும் இரண்டு றகஅத்துத் தொழுகை தொழுவதும் இரண்டு குத்பா ஓதுவதும் சுன்னத்தாம்.

கிரணத்தொழுகையில் நிரப்பமானது ஒவ்வோர் றகஅத்திலும் இரண்டிரண்டு நிலையும் இரண்டிரண்டு றுகூஉமாம்.

மேலே சொல்லப்பட்டதைக் காண நிரப்பமாகிய விதமாவது முந்தின நிலையில் பாத்திஹா ஓதியபின் சூறத்துல் பகறு அல்லது குறுஆனில் சூறத்துல் பகறு உடைய கதுறுக்கு ஓதுவதும், இரண்டாம் நிலையில் குறுஆனில் இருநூறு ஆயாத்து ஓதுவதும், இரண்டாம் றகஅத்தின் முதலாம் நிலையில் குறுஆனில் நூறு ஆயாத்து ஓதுவதும், இரண்டாம் நிலையில் குறுஆனில் நூறு ஆயாத்து ஓதுவ



தும், முதலாம் றகஅத்தின் முதலாம் றுகூஇல் நூறு ஆயாத்துடைய கதுறுக்கு தஸ்பீஹு செய்வதும் இரண்டாம் றுகூஇல் எண்பது ஆயாத்துடைய கதுறுக்கு தஸ்பீஹு செய்வதும் இரண்டாம் றகஅத்தின் முதலாம் றுகூஇல் எழுபது ஆயாத்துடைய கதுறுக்கு தஸ்பீஹு செய்வதும்இரண்டாம் றுகூஇல் ஐம்பது ஆயாத்துடைய கதுறுக்கு தஸ்பீஹு செய்வதுமாய்த் தொழுவதாம்.

சூரிய கிரணத் தொழுகையின் ஓதல்களை சிற்றாக ஓதுவதும் சந்திர கிரணத் தொழுகையின் ஓதல்களை (ஜஹ்று) பராசியமாகவும் ஓதுவதும் சுன்னத்தாம்.

வெள்ளிக் கிழமை கிரணம் பிடித்து அதுவே பெருநாளுமாக இருந்தால் ஜும்ஆ குத்பாவே போதுமானதாம். அந்த குத்பாவில் கிரணத்தின் சமாசாரம் பெருநாளில் நடத்தவேண்டிய பித்று, உலுஹிய்யா, சதக்கா, முதலியவைகளைப் பற்றியும், எடுத்துக் காட்டவேண்டும். அது சுன்னத்தாம்.

## 493. சலாத்துல் இஸ்திஸ்காஇ என்பதின் பொருள்யாது?

மழைதேடித் தொழும் தொழுகை என்பதாம்.

ஊரில் மழைபெய்யாவிட்டாலும், நீர்குறைந்தாலும், இமாம்அல்லது அவ்வூரின் தலைவரானவர்கள் பிரசைகளை மூன்று நோன்பு பிடிக்கும்படி செய்து நான்காம் நாள் நோன்பு பிடித்தவர்களாய் தாழ்மையான வஸ்திரந் தரித்து தாக்கித்தவர்களாய் இஸ்திகுபாறை அதிகமாக்கினவர்களாய் சிறுபிள்ளைகளையும், சாலிகீன்களையும், மாடா டொட்டக முதலிய ஹயவான்களையும் கூட்டிக்கொண்டு ஒவ்வொருவரும் அவரவர் செய்த நன்மைகளைக் கொண்டு சிபாரிசு தேடினவர்களாய் அவ்வூரை யடுத்த வோர் மைதானிற் சென்று அல்லாகுத்த ஆலாஇடத்தில் மழைதேடி இமாம் ஜமாஅத்தாய் இரண்டு றகஅத்துத் தொழுவதும் இரண்டு குத்பா ஓதுவதும் சுன்னத்தாம்.

முதலாம் குத்பா ஓத ஆரம்பிக்கும்போது ஒன்பதுதரமும் இரண்டாம் குத்பா ஓத ஆரம்பிக்கும்போது எழுதரமும் இஸ்திகுபாறு செய்வதும் விசேஷ வசனப்பிரிவுக்களில் இஸ்திகுபாறை அதிகப்படுத்துவதும் சுன்னத்தாம்.

இரண்டாம் குத்பாவின் மூன்றி லொருபங் கோதியபின் துஆக் கேள்ப்பதும், அப்போதில் கதீபு கிபுலாவை முன்நோக்கிக் கொள்வதும், கதீபும் ஜமா அத்துக்களும் தங்கடங்கள் மேலிற் போட்டிருக்கும் (ரிதா) பரிவட்டம் துப்பட்டியையவலதை இடதாக்கி இடதை வலதாக்கி உள்ளை வெளியாக்கிவெளியை உள்ளாக்கி மேலைக் கீழாக்கி கீழை மேலாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

பிரட்டிய தாப்பட்டி அப்படியே இருக்க அவரவ ரிருப்பிடம் செல்லுதல் வேண்டும்.

அல்லாகுத்த ஆலா இடத்தில் நபி நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் கிளையார்களைக் கொண்டும், அசுஹாபி மார்களைக் கொண்டும், விசேஷமாய் நபி நாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தகப்பனு ருடைய சகோதர ராகிய செய்யிதுனா அப்பாசு றலியல்லாகு அன்கு, அவர்களின் பொருட்டைக் கொண்டும் துஆவில் வசீலாத் தேட வேண்டும்.

இவ் வொழுங்கின்படி செய்வதில் மழைபெய்தால் ஒரேநரத்தில் விட்டுவிடலாம். மழைபெய்யா விட்டால் மறுபடியும் அவ்வாறே செய்தல் வேண்டும் அதிலும் மழைபெய்யாவிட்டால் இஸ் திகு பாறை அதிகப் படுத்துதல் வேண்டும். ஆண்டில் முதல் முதல் பெய்யும் மழையில் அல்லது வெள்ளத்தில் நனைந்து குளித்து வுழுச்செய்தல்வேண்டும்.

மழை பெய்யும்போதில் ஓதவேண்டிய துஆவாவது அல்லாகும்மசையிபன் ஹனீஅன் வஸைஹன் நாபிஅன் என்பதாம்.

மழைபெய் தோய்ந்தவுடன் ஓதவேண்டிய துஆவாவது முதிருனா பிபலுலில்லாஹி வறஹ்மதிஹி என்பதாம்.

மழை மிகுதமாய்ப்பெய்தலால் யாதேனும் ஈறுறுத்து உண்டானால் ஓதவேண்டிய துஆவாவது அல்லாஹும்ம ஹவாலைனா வலா அலைனா அல்லாகும்ம, சுகுயா றகுமதின் வலாசுகுயா அதாபின் வலாமஹ்கின் வலாபலாஇன் வலாகதுமின் வலாஅறுகின் என்பதாம்.

(494.) தருவீஹாத்தொழுகையை எந்தவகுத்தில் தொழவேண்டும்?

றமலான் மாசத்தில் ஒவ்வோ ரிரவிலும் இஷாத்தொழுதின் பின் தொழவேணடும்

தருவீஹாத் தொழுகை இருபது றகஅத்தாம் இரண்டிரண்டிறகஅத்துக் கொவ்வோர் விடுத்தமாய்ப் பத்துதரம் சலாம் கொடுத்தல் வேண்டும்.

தருவீஹாத் தொழுகையை ஜமாஅத்தாய்த் தொழுதல் சுன்னத்து ஜமாஅத்துக் கிட்டாவிட்டால் தனிமையாய்த் தொழுதுகொள்ளலாம். அதுவும் சுன்னத்தாம்.

எல்லா ஒவ்வொரு றகஅத்திலும் பாத்திஹா ஓதியபின் குறத்து ஓதவேண்டும்; அது குறுஆனின் துவக்க மிருந்து நாடோறுந் தறுதீயாக ஓதித் தமாமாக்குதல் முஸ்தஹப்பாம்.



ஒவ்வோர் சலாமுங் கொடுத்தபின் கலிமாச் சொல்வதும் சலவாத்துச் சொல்வதும் இரண்டிரண்டு சலாமுக்குப்பின் நான்குயார்களையும் வீதப்படி குறித்து அவர்களைத் தொட்டுறிலுவான் கூறுதலும் புகழுத்தக்க வழக்கமாம். அது தருவீஹாத் தொழுகைக்கு ஆரம்பிக்கமுன் அஸ்ஸலாது ஜாமிஆ றஹ்மகுமுல்லா முகம்மதினில் பதுறி சல்லல்லாகு அலைக்க யாறசூலல்லாஹி அல்லாகும்ம சல்லி வசல்லிம் அலாறசூலிக செய்யிதினா முகம்மதின் வஅலாஆலி செய்யிதினா முகம்மதின் பலுலன்மினல்லாகி வநிகுமா வமகுபிறதன் வறஹ்மா வஆபியதன் வசலாமா என்பதும் இரண்டாம் சலாம் கொடுத்தபின் சல்லூஅலன் நபிய்யில் முஸ்தபல் முகுதார் செய்யிதினா முகம்மதின் வஆலிஹி செய்யிதினா அமீறுல் முஉமினீன அபீபகுறுனிஸ்ஸித்திக்கு சல்லல்லாகு அலைக யாறசூலல்லாஹி பலுலன் மினல்லாகி வநிஹ்மா வமகுபிறதன் வறகுமா வஆபியதன் வசலாமாஎன்பதும்நான்காம் சலாங்கொடுத்தபின் சல்லூஅலன் நபிய்யில் முஸ்தபல் முகுதாறு செய்யிதினா முகம்மதின் வஆலிகி செய்யிதினா அமீறுல் முஉமினீன உமறிபுனுகத்தாபு என்றதின்பின் சல்லல்லாகு அலைக தொடுத்து வசலாமா வரைக்கும் ஓதுவதும் ஆறாம் சலாங் கொடுத்தபின் சல்லூ அலன் நபிய்யில் முஸ்தபல் முகுத்தாறு செய்யிதினா முகம்மதின் வஆலிகி செய்யினா அமீறுல் முஉமினீன் உதுமானிபுனு அப்பான் என்றதின்பின் சல்லல்லாகு தொடுத்து சலாமா வரைக்கும் ஓதுவதும் எட்டாம் சலாங் கொடுத்தபின் சல்லூஅலன் நபிய்யில் முஸ்தபல் முகுதாறு செய்யிதினா முகம்மதின் வஆலிகி செய்யிதினா அமீறுல் முஉமினீன அலிய்யிபுனு அபீத்தாலிபு என்றதின்பின் சல்லல்லாகு தொடுத்து சலாமா வரைக்கும் ஓதுவதும் றமலான் மாசத்தின் முதலாம்பத்தில் ஒவ்வோர் றிலுவானின் பின்னும் அல்லாகும்மறுஹம்னா மஅஹூம் பிறஹ்மதிகயா அறுஹமர் றாஹிமீன் என்றும் இரண்டாம்பத்தில் அல்லாகும்ம இன்னா நசுஅலுகல் ஜன்னத வஊதுபிக மினன்னார் என்றும் மூன்றாம்பத்தில் அல்லாகும்ம இன்னக அபுவ்வுன் துஹிப்புல்அபுவ பகுபுஅன்னா யாகரீம் யாறஊபு யாஅல்லா என்றும் துஆஒதியபின்லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி என்றும் ஓதவேண்டும்.

தருவீஹாத் தொழுதபின் ஓதவேண்டிய துஆவாவது அல்லாகும்ம ஜுஅல்னாபில் ஈமானி காமிலீன், வலிபறாயிலிக முஅத்தீன் வலிஸ்ஸலாத்தி ஹாபிலீன், வலிஸ்ஸகாதிபாயிலீன், வலிமா இன்தக தாலிபீன், வலிஅபுவிகறாஜீன், வபில்ஹுதா முதமஸ்ஸிகீன், வஅனில்லகுவி முஉரிளீன், வபித்துன்யா ஸாகிதீன், வபில்ஆகிறதி றாகிபீன், வபில்களாயி றாளீன், வலின்னஹ்மாஇஷாகிரீன், வஅலல்பலாஇ சாபிரீன், வதஹ்தலிவாஇ ஹபீபிக வநபிய்யிக வக

பிய்யிக முகம்மதின் சல்லல்லாகு அலைஹிவசல்லம யவுமல் கியா மதிலாயிதின், வதிலல் கவுலி வாரிதின், வமின்சன்தூகின் வஇஸ் தபுறகின் முதலப்பிசின், வமின்கூடீரானின் முத சவ்விஜீன், வமின் தஆமில்ஜன்னதி ஆகிலீன், வமின்லபனின் வஅசலின் முசப்பா வஷாரிபீன், பிஅருவாபின் வஅபாரீக்க வகஉஸின்மின்மான் மஆல் லதீன அன்அம்த அலைகிம் மினன் நபிய்யீன வஸ்ஸித்தீகீன மினஷ் ஷுஹதாஇ வஸ்ஸாலிஹீன் அல்லாகும்ம ஜுஅல்னா,பீகா தஷ்ஷுகு ரிஷ்ஷதீபி மினஸ்ஸுஅதாஇல் மகுபூலீன் வலா தஜ்அல்னா யாஅல் லாகு மினல் அஷ்கியாஇல் மதுறூதீன் அல்லாகும்ம வஇன்னலக பீகுல்லிலைலதின் மின்லயாலீ சகுரி றமலான உதகாஅ வதுலகாஅ வஉமறாஅ வகுலகாஅ பஜ்அல்னா யாஇலாகனாமின் உதகாயிக வதுலகாஇக வஉமறாயிக வகுலகாஇக மினன்னார் வல்அபுவ இக் தல்ஹிசாப் என்றோதுவதாம்.

றமலான் மாசத்தின் முதலாம்பத்தில் அல்லாகுத் தஆலாவின் றஹ்மத்தையும் இரண்டாம்பத்தில் அல்லாகுத் தஆலாவின் பிழை பொறுக்குதலையும் மூன்றும் பத்தில் நரகத்தைவிட்டு உருமையிடு வதையும் கேட்பது சுன்னத்தாம்.

(495.) (சலாத்துல் ஈதைனி) எனும் இரண்டு பெருநாள்த் தொழுகைக்கும் எவ்வாறு தகுபீர் கட்டவேண்டும்?

ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்குத் தகுபீருவது உசல்லி சலா த்தல் ஈதில்அழுஹா றகஅதைனி லில்லாகி அல்லாகு அகுபர் என்பதாம்.

நோன்புப் பெருநாள் தொழுகைக்குத் தகுபீருவது உசல்லி சலாத்தல் ஈதில்பித்ரி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

(496.) (சலாத்துல் குசூபைனி) இரண்டு கிராணத் தொழுகைக்கும் எவ்வாறு தகுபீர் கட்டவேண்டும்?

சூரியகிராணத் தொழுகைக்கு தகுபீருவது உசல்லி சலாத்தல் குசூபிஷ் ஷம்ஸி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகு பர் என்பதாம்.

சந்திரகிராணத் தொழுகைக்குத்தகுபீருவது உசல்லி சலாத்தல் குசூபில் கமரி றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்பதாம்.

(497) (சலாத்துல் இஸ்திஸ்காஇ) மழைதேடித் தொழும் தொழுகைக்கு எவ்வாறு தகுபீறு கட்டவேண்டும்?

உசல்லி சலாத்தல் இஸ்திஸ்காஇ றகஅதைனி லில்லாகி தஆலா அல்லாகு அகுபர் என்று தகுபீர் கட்டவேண்டும்.



(498.) தருவீஹுத்தொழுகைக்கு எவ்வாறு தகுபீர் கட்டவேண்டும்?

உசல்லி சலாத்தல் தருவீஹு றகஅதைனி லில்லாகித்தஆலா அல் லாகு அகுபர் என்று தகுபீர் கட்டவேண்டும்.

மேலேசொல்லியவாறு தகுபீர் கட்டுபவர் இமாமாயிருந்தால் இமாமன் என்பதையும் மஉமூமாயிருந்தால் மஉமூமன் என்பதை யும் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். இந்த பஸ்லின் 495-ம் 496-ம் 497-ம் 498-ம் இலக்கவினாக்களின் விடையை 353-ம்இல க்கவினாவின் விடையாகிய 2-ம்வசனத்தொடர்பிலுங் காணலாம்.

(499.) ஜமாஅத்தை சுன்னத்தாக்கப்பட்ட நபில்தொழுகைகளுக்கும் இகாமத்துச் சொல்லுதல் வேண்டுமா?

இகாமத்துச் சொல்லுதலாகாது அதற்குப்பதிலாக அஸ்ஸலாத்து ஜாமிஆறஹ்மகுமுல்லா என்று சொல்லுதல் வேண்டும்.

(500.) நபில் தொழுகைகளில் எவ்வெந்தொழுகைகள் வரிசையானது?

நபில்தொழுகையில் அதிக வரிசையான தொழுகை ஹஜ்ஜுப்பெ ருநாள்த்தொழுகையாம் அதின்பின் நோன்புப் பெருநாட்தொழு கைஅதின்பின். சூரியகிராணத்தொழுகை, அதின்பின், சந்திரகிரா ணத்தொழுகை, அதின்பின், மழைதேடித்தொழும் தொழுகை, அ தின்பின் வித்ருத்தொழுகை, அதின்பின், சுபுஹின் சுன்னத்து த் தொழுகை, அதின்பின், முத்திபத்தான சுன்னத்துத் தொழு கைகள், அதின்பின், தருவீஹுத்தொழுகை, அதின்பின், லுஹாத் தொழுகை, அதின்பின், தவாபு, தஹிய்யத்து, இஹ்றாம், வுலு, ஆகி யவைகளின் தொழுகைகள், இவைகளிற் பிந்தின ஒவ்வொன்றை க்காணவும் முந்தின ஒவ்வொரு தொழுகையும் வரிசையானதாம்.

நபில் முதுலகு எனும் தொழுகையை இன்னவகுத்தில் தொழ வேண்டுமென யாதோர் வகுத்தையுங் குறிக்கப்படவில்லை.

நபில் முதுலகுத் தொழுகையை ஒரு றகஅத்தில் அத்தஹிய் யாத்தோதி சலாங்கொடுக்கவும் ஆமாம். இரண்டிரண்டுறகஅத்து க்கொருதரம் சலாங்கொடுத்தல் சுன்னத்தாம்.

றஜபுமாசத்தின் முதலாம் வெள்ளிக்கிழமை யிரவு சலாத்துற்ற காயிபு எனத்தொழும் பன்னிரண்டு றகஅத்துக்களும் சகுபான் மாசம் பறுஅத்துடைய இரவில் தொழும் நூறு றகஅத்துக்களும் ஆசூறு இரவில் தொழும் தொழுகையும் பிதுஅத்துல் கபீஹாஎனு ம் பழிக்கப்பட்ட சுன்னத்துக்களாம்.

இத்தொழுகைகளைக் காட்டும் ஹதீதுகளும் மவ்லூஆம்.

## அல்பாபுல் சாபிஉ அஷறபீபயானில் ஜமாஅதி.

(பதினேழாம்பாபு ஜமாஅத்துத் தொழுகையைப் பற்றியது)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபில் ஜமாஅதி.

### க-ம் பிரிவு

(501.) சலாத்துல் ஜமாஅதி எனும் சொல்லின் பொருள் யாது?

பலர்கூடி ஒருவர் இமாமாகவும் மற்றவர்கள் மஉமூமாகவும் தொழும் தொழுகை என்பதாம்,

பறுலாகிய அதாத்தொழுகையை ஜமாஅத்தாய்த் தொழுதல் சுன்னத்து முஅக்கதாவாம்.

இமாம் நவவி றஹ்மஹுல்லா அவர்களின் சொல்படி பாலிகாகிய ஹுர்றாகிய முகீமாகிய ஆண்பிள்ளைகள் பறுலாகிய தொழுகையை ஜமாஅத்தாய்த் தொழுதல் பறுலு கிபாயாவாம்.

ஜமாஅத்துத் தொழுகையை பறுலுஐன் என்பதும் தொழுகை சிறத்தாவதற்கு ஷறுத்து என்பதும் பெலப்பான சொல்லல்ல.

ஆண்பிள்ளைகள் ஜமாஅத்தை விடுதல் மக்றூகு-மாதர்கள் விடுதல் மக்றூகல்ல.

பள்ளியில் தனிமையாய்த் தொழுவதைக்காண ஜமாஅத்தாய் வேறே இடத்திற் றொழுதல் அபுளலாம்.

முஸ்லீங்கள் வாசஞ்செய்யும் ஊரில் ஒரு இடத்திலாவது இமாம் ஜமாஅத்து நடக்காவிட்டால் அவ்வூரில் வசிப்பவர்களெல்லாரும் பாவியாவார்கள்.

(502.) ஜமாஅத்துத் தொழுகைக்கு எத்தனை பெயர்கள் கூட வேண்டும்?

ஜமாஅத்தில் குறைந்தது ஒரு இமாமும் ஒரு மஉமூமும் கூடித் தொழுவதாம்.

இதற் கதிகமானவர்களெவ்வளவுபெயர்கள் கூடியுந் தொழலாம்.

மஉமூங்கள் மாதர்களானாலும் சிறுவர்களானாலும் ஜமாஅத்தாய்த்தொழலாம்.

ஓர் பள்ளியில் வழக்கமாய்த் தொழுபவர்கள் இத்தனை பெயர்களென்றும் அப்பள்ளியில் இமாமத்துச் செய்வதற்காய் நியமிக்கப்



பட்ட இமாமு முண்டாயிருந்தால் அவ்விமாம் வருமுன் ஜமாஅத்தை நிறுத்தாட்டுதல் மக்றூகாம்.

அவ்விமாமின் அனுமதியோடும் அல்லது பித்னா உண்டாகாதென்றிருந்தாலும் ஜமாஅத்து மட்டிடக்கூடாதவர்களாயிருந்தாலும் ஜமாஅத்தை நிறுத்தாட்டல் மக்றூகல்ல.

பள்ளியல்லாத இடத்தில் மிகுந்த ஜமாஅத்தும் பள்ளியில் குறைந்த ஜமாஅத்து முண்டாயிருந்தால் இபுனு ஹஜறு இமாமுடைய சொல்லின்படி பள்ளியில் தொழுவதே அபுளலாம்.

இமாம் பறுலுகள் வாஜிபுகள் ஷறுத்துக்களாகியவைகளை இருகொள்ளாதவராயிருந்தாலும், அல்லது, அதை சுன்னத்து என்று நாடிக் கொண்டுவருபவராயிருந்தாலும்; அவ்விமாமை விட்டுத் தனிமையாய்த் தொழுதல் அபுளலாம்.

பாசிகாகிய இமாமோடு தொழும் மிகுந்த ஜமாஅத்தைக் காணவும் ஆலிமாகிய இமாமோடு தொழும் குறைந்த ஜமாஅத்துடன் கூடித் தொழுதல் அபுளலாம்.

அவ்வல் வகுத்தில் குறைந்த ஜமாஅத்துடன் தொழுவது ஆகிறு வகுத்தில் மிகுந்த ஜமாஅத்துடன் தொழுவதைக் காண ஏற்றமாம்.

(503.) பறுலான தொழுகையை இரண்டுதரம் அல்லது அதற்கதிகமாய்த் தொழலாமா?

பறுலான தொழுகையைத் தனிமையாய்த் தொழுபவன் அவ்வகுத்திலேயே ஜமாஅத்தை நிறுத்தாட்டப்படக் கண்டால் அந்த ஜமாஅத்துடன் சேர்ந்து அத்தொழுகையை ஒருதரம் மீளுவித்தல் சுன்னத்து. இரண்டுதரம் மீளுவிக்கலாமென்று சிலர்பாய்ச் சொல்லியிருக்கின்றனர்.

பறுலான தொழுகையை மீளுவிப்பவர்கள் பறுலான தொழுகையை மீளுவிக்கிறேனென்று நிய்யத்துவைத்தல் ஷறுத்தாம்.

ஜமாஅத்தை ஷறஆக்கப்பட்ட சுன்னத்துத் தொழுகைகளையும் மீளுவித்துத் தொழுதல் சுன்னத்தாம்.

கலாத் தொழுகையையும் ஜனாசாத் தொழுகையையும் மீளுவித்தல் சுன்னத்தல்ல. மீளுவித்துத் தொழுதால் தொழுகை சிஹத்தாகும்.

(504.) கலாவான தொழுகையைத் தொழும் இமாமும் அதாவான தொழுகையைத் தொழும் மஉமூமும் ஜமாஅத்தாகத் தொழலாமா?

கலாத் தொழும் இமாமைத் தொடர்ந்து அதாத்தொழுகையைத் தொழுவதும் அதாத்தொழும் இமாமைத் தொடர்ந்து கலாத்தொ

ழுகையைத் தொழுவதும் பறுலுதொழும் இமாமைத் தொடர்ந்து சுன்னத்துத் தொழுகையைத் தொழுவதும் சுன்னத்துத்தொழும் இமாமைத் தொடர்ந்து பறுலு தொழுவதும் சுன்னத்தல்ல.

கலாத் தொழும் இமாமும் மஃமூமும் ஜமாஅத்தாய்த் தொழலாம் அது சுன்னத்தாம்.

ஜனாஸாத் தொழுகையைத் தொழுபவன் சஜ்தாத்திலாவத்து சஜ்தாஷுக்ரு செய்பவர்களைத் தொடரலாகாது.

தஸ்பீஹாத் தொழுகை தொழுபவனை வேறேயாதுந் தொழுகை தொழுபவன் தொடர்ந்தால் இஃதிதாலிலும் நடு இருப்பிலும் அவன் நீளப்படுத்தும் நேரம் அதின்பின்னுள்ள பறுலில்போயிருந்து வழிபார்த்தல் வேண்டும்.

(505.) மஃமூம்களில் வரிசையானவர்களியார்?

இமாமுடைய தக்பீறத் தஹ்றீமுக் கடுக்கத் தக்பீர் தஹ்றீம் கட்டும் மஃமூம், அதின்பின் சேர்ந்த எல்லா மஃமூங்களைக் காணவும் வரிசையானவனும்.

இமாமுடைய தக்பீறுக்கடுக்க மஃமூமும் தக்பீர் கட்ட ஆரம்பித்தால் இமாமுடைய தக்பீறுத் தஹ்றீமைச் சார்ந்த தனித்தவரிசையைப் பெற்றுக்கொள்ளுவான்.

இலேசான வஸ்வாசினுல் உண்டாகும் தாமதம் அவ்வரிசையைத் தப்பிவிக்காது.

மஸ்பூக்கு ஆகிய மஃமூம்களில் முந்திய முந்தியவர்கள் பிந்திய பிந்தியவர்களைக் காண வரிசையா லதிகமானவர்களாம்.

இமாமின் தக்பீறுத் தஹ்றீமுடைய வரிசை தப்பி விடுமெனப் பயந்து விரைவாய் நடக்குதலை விடவேண்டும் அது சுன்னத்தாம்.

ஜும்ஆவில் ஜமாஅத்துத் தப்பிவிடுமெனப் பயந்தால் விரைவாய் நடப்பது வாஜிபு.

இமாம் முந்தின சலாங்கொடுக்க முன் கூட்டத்தைச் சேர்ந்துகொண்டாலும்ஜமாஅத்தின் பிரையோசனமுண்டாகும். அப்பிரையோசனமோ முற்றாய்ச் சேர்ந்தவனின் பிரையோசனத்துக்குக் குறைந்ததாம்.

(506.) தனிமையாய்த் தொழும்போது இமாமுக்குத்தக்க ஒருவனைக் கண்டால் அவனைத் தொடர்ந்துகொள்ளலாமா?

கண்டவுடனே ஜமாஅத்தை நிய்யத்து வைத்து அவ்விமாமைத் தொடர்ந்துகொள்ளலாம்.



இமாமுடைய தொழுகை முற்றமுன் இவனுடைய தொழுகை முற்றிவிட்டால் இமாமைவிட்டுப் பிரிகிறேனென்று நிய்யத்துவைத்து சலாங்கொடுப்பதைக்காண இமாமை வழிபார்த்தவனாய் அத்தஹிய்யாத்திருப்பிலிருந்து அவருடன் சலாங்கொடுத்தல் அபுளலாம்.

(507.) மஃமூம் இமாமில் யாதோர் குறையையுங் காணுமல் அவனைவிட்டுப் பிரிந்துகொள்ளலாமா?

இமாமில் யாதோர் குறையையுங் காணுதிருக்கும்போது பிரிதல் ஜமாஅத்தின் பளீலாவைத் தப்பிவிக்குமாம்.

மஃமூமானவன் தனக்கு யாதோர் முட்டுப்பாடு மில்லாமல் பிரிதலு மப்படியே. இமாமில் தொழுகையை பாத்திலாக்கத்தக்க காரியத்தைக் கண்டவுடன் பிரிந்துகொள்ளும் நிய்யத்துவைத்துப் பிரிதல்வேண்டும் அது வாஜிபாம். பிரியாவிட்டால் தொழுகை பாதிலாகிவிடும்.

(508.) தொழுகையின் எந்த இடத்தில் இமாம் மஃமூங்களை வழிபார்த்தல்வேண்டும்?

இமாம் அல்லது தனிமையாய்த் தொழுபவன் றுகூஇல் அல்லது பிந்தின அத்தஹிய்யாத் திருப்பிலிருக்கையில் ஒருவன் இவனைத் தொடரவேண்டுமென நினைந்து தொழும் ஸ்தானத்துட் பிரவேசித்த அலாமத்தை யறிந்தால் மிகுதி நீளப்படுத்தாமல் அவனை வழிபார்த்தல் சுன்னத்தாம்.

வந்தவனோ தாமதகாரனும் பழிக்கப்பட்ட வஸ்வாசுடையவனுமாயிருந்தால் வழிப்பார்ப்பதாகாது. அவனை வழிப்பார்த்தல் சுன்னத்தல்ல.

ஜமாஅத்துக்கள் சம்மதித்தாலும் ஓர் பெரிய மனிதனுக்காய் அல்லது மிகுந்த ஜமாஅத்துக்கள் கூடித் தொழுதவதற்காய்த் தொழுகையை நீளப்படுத்தல் மக்ரூகு தன்ஸீமாவாம்.

(509.) ஜமாஅத்துத் தொழுகையை இமாம் நீளப்படுத்தலாமா?

அபுஆதுசுன்னத்து ஹைஅத்து சுன்னத்துக்களைச் செய்வதோடு தொழுகையை நீளப்படுத்தாதிருத்தல் இமாமுக்கு சுன்னத்தாம்.

நீட்டித் தொழுவதை மஹ்சூறான ஜமாஅத்துக்கள் பொருந்திக்கொள்வோமென்றும், அத்தொழுகையில் வேறொருவரும் வந்து கூடாமலுமிருந்தால் அவ்வத்தானங்களிலுள்ள மஃதூறான திக்றுக்களாலும் துஆக்களாலும் நீட்டலாம்.

(510.) மஸ்பூக்கு என்பதின் பொருள்யாது?

நடுத்தரமாய்ப் பாத்திஹா ஓதப்போதாத நேரத்தில் வந்து கூடினவனே மஸ்பூக்காம்.

மஸ்பூக்கானவன் தக்பீர் கட்டினவுடன் வஜ்ஜகுத்து அஊது ஓதாமல் பாத்திஹா ஓதுதல்வேண்டும்.

மஸ்பூக்கானவன் தக்பீர் கட்டினவுடன் வஜ்ஜகுத்து அஊது ஆகியவைகளை ஓதத் தொடுத்தாலும் யாதொன்றுமோதாமல் நின்றாலும் அவ்வளவுக்குக் காணுமெனத் தக்கமட்டுக்கு பாத்திஹாவில்ஓதி இமாமோடு றுகூஇல் சேர்ந்துகொள்ளுதல்வேண்டும்.

இவ்வாறு நடத்தாமல் றுகூஉக்குப் போனால் தொழுகை பாத்திலாகிவிடும்.

மேலே சொல்லியபடி யோதியபின் இமாம் சுஜூது செய்வதற்காய்க் குனியக்கண்டால் றுகூஉக்குப் போகாமல் இமாமைத் தொடர்ந்து இமாமோடு சுஜூதுக்குப் போகுதல்வேண்டும்.

இதனாலந்த றகஅத்துத் தப்புவதேயன்றித் தொழுகையாதோர் குறைவுமுறாது. இவ்விதமாய் இமாமைத் தொடராவிட்டால் தொழுகைபாத்திலாம்.

பாத்திஹாவைச் சுமக்கத்தக்க இமாமோடு நிலையிற் தக்பீர் கட்டி றுகூஇல்போய்ச் சேர்ந்து திட்டமாய்த் தரித்தவன் அந்த றகஅதில் சேர்ந்துகொண்டவனும்.

இமாம் சலாங்கொடுத்தபின் மஃமூமுக்கு பாக்கியிருந்தால் எழும்பித் தொழவேண்டும்.

எழும்பும்போது தன்னுடைய அத்தஹிய்யாத்தின் தலமாயிருந்தால் தக்பீர் சொல்லி எழும்பவேண்டும்.

## அல்பஸ்லுல் தானி பீபாபில் ஜமாஅதி.

## உ-ம் பிரிவு.

(511.) குதுவத்தாவதியாது?

ஜமாஅத்துத் தொழுகையில் இமாமை மஃமூம் தொடர்தலாம். அதின் ஷறுத்துக்களேழாம் அவை வருமாறு.



(512.) குதுவத்துடைய முதலாம் ஷறுத்தியாது?

ஹாஸிருகிய இந்த இமாமைத் தொடர்ந்துகொண்டேன் என்று அவ்வல் தக்பீரில் நிய்யத்து வைத்தலாம்.

இவ்வாறு நிய்யத்து வைக்காமல் ஜமாஅத் தொழுகையைத் தொழுதால் அத்தொழுகை சிஹாத்தாகாது. ஜமாஅத்தொழுகையல்லாத வேறே யாதுந் தொழுகையாயின் தனிமையாய்த் தொழுததாகும்.

குதுவத்துடைய நிய்யத்தில்லாமல் யாரேனு மொருவனைச் செய்கைகளில் தொடர்ந்து [illegible] வழிபார்த்தால் தொழுகை பாத்திலாம்.

(513.) குதுவத்துடைய இரண்டாம் ஷறுத்தியாது?

நிற்குமிடத்தில் இமாமின் குதிகாலைக் காண மஃமூமின் குதிகால் பிந்தினதாயிருத்தலாம்.

இமாமுக்குச் சரியாய் நிற்பது மக்றூகாம்.

குதி முந்தினதில் சக்குவந்தாலும் விரல்கள் முந்தியிருந்தாலும் தங்கடஞ் செய்யாது.

மஃமூம் ஒருவனாயிருந்தால் இமாமுக்கடுக்க வலபக்கத்தில் நிற்கவேண்டும், பின்பு வேறேயொருவன் வந்தால் இமாமின் இடப்பக்கத்தில் நின்று தக்பீர் கட்டியபின் மஃமூமாகிய இருவரும் இமாமுக்கு நேரே பிற்பக்கமாய் சப்பாகுதல் வேண்டும், பின்பு வருபவர்களெல்லாம் வலப்பக்கமும் பின்பு இடப்பக்கமுமாய் நின்று சப்பை நிரப்பியபின் மற்ற சப்பில் தொடுத்தல்வேண்டும்.

இரண்டுபெயர் அல்லது அதற்கதிகமானவர்கள் வந்தால் இமாமுக்கு நேரே பிற்பக்கத்தில் நிற்கவேண்டும்.

அரமாகிய வலப்பக்கம் இமாமுக்கு அடுத்த இடப்பக்கத்தைக் காண நன்றாம்.

சப்பை நிரப்புமுன் மற்ற சப்பில் தொடுத்தல் மக்றூகு.

சப்பில் இடமில்லாவிட்டால் தனியேநின்று தக்பீர் கட்டியபின் சப்பில் ஒருவனை இழுத்துக்கொள்ளுதல் வேண்டும், இழுப்பவனுக்கு இழுக்கப்பட்டவன் வழிப்படுதல் சுன்னத்தாம்.

தொழுபவனை இழுப்பதின் ஷறுத்துக்கள் நான்காம் அவைகளாவன, இழுக்கப்பட்டவன் சுதந்தரனாயிருத்தல், இருவரும் ஒன்றாய்க்கூடி நிற்க ஆமாயிருத்தல், இழுக்கப்படும் சப்பில் இரண்டுபெயருக் கதிகமானவர்கள் உண்டாயிருத்தல், தக்பீர் கட்டியபின் இழுத்தல் என்பவைகளாம்.

தகுபீர் கட்டமுன் இருத்தல் ஹறும்.இச்செயல்களில் தொடர்பான மூன்று செயல்க ளுண்டாகா திருத்தல் வேண்டும்.

சப்பில் இடையிருந்தால் அவ்விடையை நிரப்புவதற்காய் சப்புகளுக்குள் நுழைந்துபோகலாம்.

இமாமுக்கு தனித்த ஓர்பெண்பிள்ளை தொழும்போதில் அம்மாது இமாமுக்குப் பிற்பக்கத்திலேயே நிற்க வேண்டும்.

இமாமை அடுக்க பாலிகான ஆடவரும் அதின்பின் பாலிகாகாத ஆண்பிள்ளைகளும் அதின்பின் குன்தாவும் அதின்பின் சிறுவிகளும் அதின்பின் விருதாப்பிய ஸ்திரிகளும் அதின்பின் கன்னிஸ்திரிகளும் நிற்கவேண்டும்.

பெரிய ஆண்பிள்ளைகளுக்காய் முந்தின சப்பில் நிற்கும் சிறுபிள்ளைகளைப் பிற்படுத்தலாகாது.

(514.) குதுவத்துடைய மூன்றும் ஷறுத்தியாது?

இமாம் குனிதல், நிமிர்தல், ஆகியவைகளைக்கண்டு அல்லது முந்தின சப்பில் நிற்பவர்களைக்கண்டு அல்லது திரையில்லாதபோது இமாமுடைய சத்தம் கேள்ப்பதா லறிந்துகொள்ளுதலாம்.

இமாமின் தொனியைத் தெரிவிக்கும் (முபல்லிகு) உடைய தொனியைக் கேள்ப்பது இமாமுடைய தொனியைக் கேள்ப்பது போலாம்.

(515.) குதுவத்துடைய நான்காம் ஷறுத்தியாது?

இமாமும் மஉமூமும் ஒரே ஸ்தானத்திலா யிருத்தலாம்.

ஒரே இடத்தில் இமாமுக்கும் மஉமூமுக்கு மிடையில் 300-மூன்நூறுமுள இடையிருந்தாலும் தொடர்பு தப்பாது.

இமாம் பள்ளியிலும் மஉமூம் வெளியிலும் நிற்பதாயின் திரையில்லாத முந்நூறுமுழத்துக் கதிகப்படாத தூரத்துக்குள்ளாயிருத்தல் வேண்டும்.

திரையிருக்கும் ஸ்தானமாயின் அத்திரையிலுள்ள பாதைக்கு நேரேயொருவன் தரிபட்டு இமாம் குனிதல் நிமிர்தலாகியவைகளைக் காட்டுபவனுய்நிற்பதுஷறுத்தாம்.இவ்விதமாய் நிற்பவனை இமாமைப்போற் பாவித்துக்கொள்ள வேண்டும். அவனை அவ்வல் தகுபீரிலும் தரிபடுந் தானத்திலும் முந்தினுல் தொழுகை பாத்திலாம். அவனுடைய தொழுகை;இவர்கள் தகுபீர் கட்டியபின் பாத்திலானுல் இவர்களின் தொழுகை பாத்திலாகாது.



இமாம் மேல்மாடியிலும் மஉமூம் கீழ்வீட்டிலும் நின்றுதொழும் இருவருக்கும் யாதோர் திரையில்லாதிருத்தல் ஷறுத்து.

மேலேநிற்பவனின் கால்கீழேநிற்பவனின் தலைக்கு நேரேயிருத்தல் ஷறுத்தல்ல,அவ்விருவரும் பள்ளியல்லாத ஸ்தானத்திலாயிருந்தாலுமாம். அப்படியாயின் ஏணியிருப்பது மாத்திரமல்ல அதின் வாயிலும் அடைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(516.) குதுவத்துடைய ஐந்தாம் ஷறுத்தியாது?

குனூத்து, முந்தின அத்தஹிய்யாத்து முதலிய சுன்னத்துக்களில் இமாமுடன் சரியா யிருத்தலாம்.

குனூத்து அத்தஹிய்யாத்து முதலியவைகளை இமாம்விட்டால் விடுவதும் செய்தால் செய்வதுமே இமாமுடன் சரியாயிருத்தலென்பதாம்.

அபுஆலு சுன்னத்து ஒன்று அல்லது பலதை இமாம்விட்டால் அதையறிந்த மஉமூம் அதைச்செய்யநாடி இமாமைவிட்டுப்பிரிந்துகொள்ளத்தக்க நிய்யத்துவைத்துப் பிரிந்து அவ்வபுஆலு சுன்னத்தைக் கொண்டுவருதலால் ஜமாஅத்தின் வரிசை தப்பாதது மாத்திரமல்ல அது ஏற்றமாம்.

இமாம் நடு அத்தஹிய்யாத்தையும் இஸ்திறாஹத்திருப்பையும் விட்டு எழும்பினுல் மஉமூம் அக்குறைவை நிரப்புதற்காய் இருப்பதாகாது.

இமாம் குனூத்தோதாததையறிந்த மஉமூம் தான் குனூத்தோதி முந்தின சுஜூதில் கூடிக்கொள்ளாதவிட்டால் லாகிறின்படி தொழுகை பாத்திலாம்.

இமாம் இரண்டுசலாமுங் கொடுத்ததின்பின் மஸ்பூக்காகிய மஉமூம் எழும்பி எஞ்சியதை நிறைவேற்றவேண்டும்.

ஒரு சலாங்கொடுத்தபின் எழும்புதல் மக்ரூகாம்.

(517.) குதுவத்துடைய ஆறும் ஷறுத்தியாது?

செயலாவுள்ள இரண்டு பறுலுக்கு தொடர்பாய் யாதோர் உதுறுமில்லாதபோதில் பிந்தாதிருத்தலாம்.

மஸ்பூக்கல்லாத மஉமூம் பாத்திஹா ஓதுவதற்காய்ப் பிந்தி இமாம் றுகூஉ, இஉதிதால், முதலாம் சுஜூது, நடுஇருப்பு, ஆகிய இவ்வளவும் செய்து இரண்டாம் சுஜூதிலிருக்கும்போது பாத்திஹாவை முடித்து றுகூஉக்குப்போனுல் அந்தறகஅத்துத் தப்பாது.

மேற்சொல்லியபடி அத்திஹாவைமுடிக்காவிட்டால் நெட்டை பறுலானநான்காவதாம் நிலையில்அல்லதுஅத்தஹிய்யாத்தி லிருக்கும்போது கூடிப் பின்னுலே ஒரு றகஅத்துத் தொழுதல் வேண்டும்;

(518.) குதுவத்துடைய ஏழாம் ஷுறுத்தியாது?

செயலாலுள்ள இரண்டு பறுலைக்கொண்டு இமாமை முந்தாதிருத்தலாம்.

ஒரு பறுலைக்கொண்டு இமாமை முந்துதல் தொழுகையை பாத்திலாக்காவிட்டாலும் ஹறுமாம்.

செயலாலுள்ள பறுலுக்களி லொன்றை அல்லது பலதை இமாமுடன் சேர்ந்ததாய்ச் செய்தல் மக்குறூகாம்.

மஉமூமுடைய செயலின் துவக்கம் இமாமுடைய செயலின் உசம்புதலொடுங்கியபின் உண்டாகவேண்டும்.

சொல்லாலுள்ள பறுலுக்களில் தக்பீர் தஹ்றீமையும் சலாமையுந்தவிர மற்ற பறுலைக்கொண்டு இமாமை முந்துதல் மக்குறூகாம்.

தக்பீர் தஹ்றீமையும் சலாமையுங்கொண்டு முந்துதல் தொழுகையை பாத்திலாக்கிவிக்கும்.

இமாம் பாத்திஹா ஓதிமுடிய முன் பாத்திஹா ஓதி முடிக்கத்தக்க மஉமூம் சிற்றிய்யத்தான தொழுகையில் இமாமுடைய பாத்திஹாவுக்குப் பிற்படுத்துதல் சுன்னத்தாம்.

(519.) ஜமாஅத்துத் தொழுகையி லுண்டாகும் மக்குறூகானவைகளைச் செய்தால் தொழுகை சிஹத்தாகுமா?

தொழுகை சிஹத்தாகும் ஜமாஅத்தின் பிரயோசனங் கிட்டாது.

(520.) கட்டை பறுலுக்களெவை?

இருதிதால் இரண்டு சுஜூதுக்கிடையிலிருக்கும் இரிப்பாகியவைகளாம்.

---



## அல்பஸ்லுல் தாலிது பீபாபில் ஜமாஅதி.

## ந - ம் பிரிவு.

(521.) இமாமத்துக்குப் பாத்திபமாகிய [illegible]ரில் முற்படத்தக்கவரியாவர்?

மிகுதமாய் பிகுஹுடைய இல்மு படித்தவராம்.

அவ்விதமானவ ரில்லாவிட்டால் காரியையும், பின்பு, ஹாபிஸையும், பின்பு நுணுக்கமுடையவரையும், பின்பு வம்மிசபதியையும், பின்பு விருத்தாப்பியனையும், முற்படுத்துதல் வேண்டும்.

(522.) மேலே சொல்லியவைகளில் சரிசரியான தறஜாவையுடைய பலர் உண்டாயிருந்தால் முற்படத் தக்கவர் யாவர்?

ஒவ்வொருவர் பெயருக்கும் கரைபோட்டு அதில் சொல்லப்பட்டவரே முற்படத் தக்கவராம்.

(523.) அறபிகளுக்கு அஜமி இமாமத்துச் செய்யலாமா?

ஆம் அது கிலாபுல் அவுலாவாம்.

(524.) இமாமத்துக்குப் பாத்திபமான முசாபிறும் முகீமும் உண்டாயிருந்தால் இமாமத்துச் செய்யத்தக்கவர் யாவர்?

முகீம் இமாமத்துச் செய்தல்வேண்டும்.

வீட்டில் தொழும்போது அவ்வீட்டுக்காரனையே முற்படுத்துதல் வேண்டும்.

(525.) ஹாபிஜும் காரியுமாகிய இருவரும் பாலிகானவனுமிருந்தால் யார் இமாமத்துச் செய்தல்வேண்டும்?

பாலிகானவனே இமாமத்துச் செய்தல்வேண்டும்.

(526.) ஸ்திரிகளும் இமாமத்துச் செய்யலாமா?

ஆம் பெண்களுக்குப் பெண்கள் இமாமத்துச் செய்யலாம்.

இமாமத்துச் செய்யும் பெண்கள் ஜமாஅத்தின் மத்தியில் நிற்கவேண்டும்.

(527.) கதனு இல்லாதவனைத் தொழுகையில் தொடரலாமா?

கதனு இல்லாதவனையும் மிகுந்த வஸ்வாசுக்காரனையும் பாசிகானவனையும் தொடர்தல் மக்குறூகாம்.

(528.) மஅனுவை பேதப்படுத்தாத கதாவிட்டு ஓதுபவனைத் தொடரலாமா?

அவ்வித கதாவிடுபவனைத் தொடர்தல் மகுறூகாம்.

(529.) ஒருவனை இமாமத்துக்குப் பாத்திபமென்று தொடர்ந்தபின் இமாமத்துக்குப் பாத்திபமில்லையென்று வெளியானால் யாது செய்தல் வேண்டும்?

அவ்வாறு வெளியாயினும் அவனின் உடையின் வெளியில் பொறுக்கப்படாத நஜீசு இடப்பதாய் வெளியாயினும் உடனே தொழுகையை மீளுவித்தல் வேண்டும். அதுவாஜிபாம் அந்தகனு யிருந்தால் மீளுவித்தல் வாஜிபல்ல.

(530.) ஜமாஅத்துக்கும் ஜும்ஆவுக்கும் போகாத குற்றத்தை நீக்கிவிக்கும் உதுறுகளெவை?

உடையை நனைக்கும் மழை, பாதையிலுள்ள சவரி, மிகுத்த உஷ்ணம், மிகுத்த சீதளம், கடுத்த இருள், நோய், மலம், சலம், வாய்வு, ஆகியவைகளின் முட்டுப்பாடு, லாயிகாகிய வஸ்திர மில்லாமை, தன்னை அல்லது தன்பொருளைப் பிறர் மோசஞ் செய்வார்களெனும் திகில், தாங்கமுடியாத பசி, தாகம், பிந்துவுக்குப் பயப்படுதல், நோயாளியிடம் உதவிக்காய் யாதோர் துணையும் இல்லாவிட்டால் தான் ஹாலிறு யிருத்தல், தன்வம்மிசத்தி லுள்ளவனுக்குசக்ருத்து ஹால் முடுகுதலா யிருக்குதல், மய்யித்தைச் சீக்கிரமாய்ஆயத்தம் பண்ணுவதற்கா யிருத்தல், என்பவைகளும் வாய்நாற்றம் கமுக்கட்டு நாற்றம், பெருவியாதி, வெண்குட்டம், உண்டாயிருப்பதால் தான்வெழ்க்கித்தல் மாத்திரமல்ல ஜமாஅத்துகளும் பொருத்தக் கெடுவார்களாயின் அவைகளும் இவைபோலாகிய பிறவுமாம்.

உதுறு இல்லாமல் ஜமாஅத்தை விட்டவர்கள் ஓர் தங்கக்காசு அல்லது அரைத்தங்கக்காசு சதகாக் கொடுத்தல் வேண்டும்.

பெருவியாதிகாரனைக் கண்டால் ஆறுமுழத்துக்கப்பால் நிற்க வேண்டுமென்றும் அந்நோய் வளரக்கண்டால் அவர்களை அறியாமல் அல்ஹம்து லில்லா ஹில்லதீ ஆபானீ மிம்மபுதலாக் கபிஹென்று ஓதவேண்டுமென்றும் அவர்கள் அந்நோயால் சுவாத்தியம் பெறும்படி துஆச் செய்தல்வேண்டு மென்றும் சொல்லப்பட்டன அது முஸ்தஹப்பாம்.

---



# அல்பாபுல் தாமினு அஷறப்பயானி சலாத்தில் ஜும்அதி.

(பதினெட்டாம்பாடு ஜும்ஆத் தொழுகையைப் பற்றியது.)

---

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாயி சலாத்தில் ஜும்அதி.

## க - ம் பிரிவு.

(531.) சலாத்துல் ஜும்ஆவென்பதின் பொருள்யாது?

ஜும்ஆத் தொழுகை யென்பதாம்.

முகல்லபும் நாட்டா மகனுமாகிய ஆடவனும், யாதோர் உதுறில்லாதவனும், உள்ளூரானு மாகிய ஒவ்வோர் ஆண்பிள்ளையும் ஜும்ஆத் தொழுகை தொழுதல் பறுலுஐனும், இவர்களே ஜும்ஆவை நடத்தாட்டத் தக்கவர்கள்.

ஸ்திரி அடிமை சிறுவர் ஆகியவர்களால் ஜும்ஆ இயபடாது அவர்கள் தொழும் ஜும்ஆத்தொழுகையால் ளுஹுறுத் தொழுகையிறுபடும் இவர்களின் தகுபீறுத் தஹற்றும் பின்வருமாறு கணக்கிடப்பட்டவர்களின் தகுபீறுத் தஹற்றுமுக்குப் பிந்தினதா யிருத்தல் வேண்டும்.

(532.) ஜும்ஆவின் ஷறுத்தை இழந்த சிற்றூர் வாசிகளுக்கு ஜும்ஆ வாஜிபாகுமா?

ஜும்ஆவின் ஷறுத்துக்களை இழந்த சிற்றூரின் ஜும்ஆவை நடத்தத்தக்க ஊர்ப்பக்கத்தருகில் நின்று நிதானமான தொனியையுடைய ஒருவன் சத்தமிட்டால் அத்தொனியை அவ்வூர்ப்பக்கமாகிய ஜும்ஆவை நடத்தத்தக்க ஊரின் அருகில் நிற்கும் நிதானமாகிய கேள்வியை உடையவன் இரைச்சலில்லாத வேளையில் கேட்டுக்கொள்ளுவானென் றிருந்தால் அச்சிற்றூர் வாசிகளுக்கும்ஜும்ஆவாஜிபாகும் அவர்களோ ஜும்ஆவை நடத்தாட்டப்படும் ஊரில் ஜும்ஆவுக்கு ஹாலிறாகவேண்டும்.

ஜும்ஆவின் ஷறுத்துக்களுள்ள தனிமைதனிமையாகிய பெயர்களையுடைய எல்லா ஒவ்வோர் சிற்றூர்வாசிகளும் அவ்வூர்களோ அடுக்கஅடுக்க இருந்தாலும் உறுபில் பிரிந்ததென்று சொல்லப்படுவதால் அவ்வூரின் ஜும்ஆவை நடத்தாட்ட வேண்டும்.

(533.) வெள்ளிக்கிழமையில் ஜும்ஆத்தொழுகை தொழாமல் ளுஹறுதொழலாமா?

யாதேனும் ஜும்ஆவை விழுத்தாட்டத்தக்க உஜுறில்லாத ஒருவன் ஜும்ஆவுடைய இமாம் அத்தொழுகையைத் தொழுது சலாங்கொடுத்துவிட்டார் என்பதைத் திட்டமாய் அறியாமல் தொழுதலாகாது; ளுஹறு தொழுபவனின் தொழுகை கூடாது.

இவ்விதம்தொழக்கூடாதென்பதையறியாதவன் ளுஹறுதொழுதால் அது நபில் முதலகாக விசயமாகும் அறிந்தவன் ளுஹறு தொழுதால் அது பிரையோசனமற்ற வீண்தொழுகையாகும்.

ஜும்ஆ விதிக்காதவர்களுடைய உஜுறு மறைவாயிருந்தால் மறைவில் ஜமாஅத்தாய்த் தொழுதல் சுன்னத்தாம்.

ஜும்ஆவிதித்த ஊரில் ஜும்ஆத் தொழாமலும் இரண்டுகுதுபாவின் பறுலுக்களையும் ஓதித் தொழுகையைச் சுருக்கமாய்த் தொழக்கூடிய நேரம்வரைக்கும் பிற்படுத்தித் தொழாமலும் ளுஹறுத் தொழுகையைத் தொழுதால் அத்தொழுகை கூடாது.

ஜும்ஆ விதிக்காத மாதர், சிறுவர்கள், அடிமை, முசாபிர் முதலியோர்களும் உஜுறுள்ளவர்களும் தங்கள் பிரியப்படி ளுஹறை அதின் வக்தில் எப்போதுந் தொழலாம் அவர்கள் ஜும்ஆத்தொழுதால் ளுஹறுதான் இறுபடும்.

(534.) ஜும்ஆவுடைய ஷறுத்துக்கள் எத்தனை?

ஆறு ஷறுத்துக்களாம்.

(535.) ஜும்ஆவின் முதலாம் ஷறுத்தியாது?

ஜும்ஆத் தொழுகையின் முதலாம் றகஅத்து முற்றாய் ஜமாஅத்தோடிருந்தலாம்.

இரண்டாம் றகஅத்தின் றுகூஉக்குப்பின் வந்து கூடினவன் நிய்யத்து ஜும்ஆவென்று தக்பீர் கட்டவேண்டும் அவ்வாறு தக்பீர் கட்டி நான்கு றகஅத்துந் தொழவேண்டும்.

(536.) ஜும்ஆவின் இரண்டாம் ஷறுத்தியாது?

(கநா) பிணியில்லாமல் யாத்திரையை ஓதத்தக்கவர்கள் நாற்பது பெயர்கள் சேர்தலாம்.

ஒருவனின்பொருள் வியாபாரம் பெண்சாதி பிள்ளைகள் இரண்டு அல்லது பலவூர்களிற் சரிசரியா யிருந்தால் எவ்விடத்தில் இருப்பானோ அவ்விடத்தில் நாற்பதுபெயரி லொருவனாய்க் கணக்கிடலாம்.



ஒருவூரில்மனைவி மக்களும் வேறோரூரில் வியாபாரம் பொருள் முதலியவைகளுமிருந்தால் அவனை மனைவிமக்களிருக்குமிடத்தில் நடக்கும் ஜும்ஆவில் நாற்பதுபெயரி லொருவனாக்கிக் கொள்ளலாம்.

உள்ளூர் வாசிகளான நாற்பதுபெயரில்லாத ஊரில் பெலப்பான சொல்படி அவ்வூராரில் பன்னிரண்டுபெயர்கள் அல்லது நான்கு பெயர்கள் கூடி ஜும்ஆத்தொழுகையைத் தொழலாமெனச் சொன்ன இமாமைத்தொடர்ந்து ஜும்ஆவை நடத்தாட்டினால் குதுபா ஓதித் தொழுதபின் ளுஹறு தொழுதல் வேண்டும் அது அபுனலாம்.

(537.) ஜும்ஆவுடைய மூன்றாம் ஷறுத்தியாது?

அவ்வூரின் நான்கு எல்லைகளுக்கு மிடையிலுள்ள ஸ்தானத்தில் ஜும்ஆவை நடப்பித்தலாம்.

(538.) ஜும்ஆவுடைய நான்காம் ஷறுத்தியாது?

ஜும்ஆத் தொழுகையாகிய இரண்டு றகஅத்தும் சலாமுன்பட ளுஹறுடைய வக்த்துக்குள் நிர்தலாம்.

(539.) ஜும்ஆவுடைய ஐந்தாம் ஷறுத்தியாது?

இரண்டு குதுபாவும் ஓதி முடிந்ததின்பின் தொழுவதாம்.

(540.) ஜும்ஆவுடைய ஆறாம் ஷறுத்தியாது?

ஊரில் நெருக்கம் தூரம் முதலியவைகளில்லாமலும் பித்னா முதலியதில்லாமலும் இருக்கத்தக்க விடத்தில் இரண்டு அல்லது அதற்கதிகமான ஜும்ஆவை நடத்தாட்டாதிருத்

மேற்சொல்லியவைக ளில்லாதபோதில் இரண்டு ஜும்ஆவை நடத்தாட்டப்பட்டால் தக்பீறத்து இஹ்றாம் முந்தின ஜும்ஆவே ஏர்க்கப்பட்டதாம்.

றூம் ஷாம் முதலிய பெரும் பட்டணங்களிற் சகலரும்ஓரிடத்தில் கூடித்தொழ வருத்தமாயிருந்தால் தேவைக்குத் தக்கமட்டுக்கு அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

மேற்சொல்லியபடி இரண்டுஸ்தானத்தில் ஜும்ஆ நடப்பிக்கத்தக்க ஊரில் ஜும்ஆத்தொழுகை தொழுதுமுடிந்தவுடன் பேணுதலுக்காய் ளுஹறு தொழுதல் சுன்னத்தாம்.

# அல்பஸ்லுல்தானி பீபாபில் ஜும்அதி.

## உ - ம் பிரிவு.

(541.) ஒவ்வோர் ஜும்ஆவிலும் எத்தனை குதுபா ஓதுதல்வேண்டும்?

இரண்டு குதுபா ஓதுதல்வேண்டும்.

(542.) இரண்டு குதுபாவுக்கும் ஷறுத்துக்களெத்தனை?

ஏழு ஷறுத்துக்களாம் அவை வருமாறு குதுபாவுடைய பறுலுக்களை கதீபைச் சேர்த்து நாற்பது பெயர் கேள்க்குதல், பறுலுக்களை அறபுப்பாஷையால் ஓதுதல், நிற்கத்தக்க கதீபு நின்றோதுதல், சிறுதுடக்குப் பெருந்துடக்கு நஜீசு ஆகியவைகளைவிட்டுத் துப்பரவாயிருத்தல், அவுறத்தை மறைத்தல், இரண்டு குதுபாவுக்குமிடையில்சற்று நேரம் இருந்து தரிபடுதல், தொடர்பாய் ஓதுதல் என்பவைகளாம்.

குதுபா ஓதித் தீர்ந்தவுடன் தாமதிக்காமல் தொழுகையில் தொடுத்தலும் ஷறுத்தாம்.

(543.) குதுபாவின் பறுலுக்களெத்தனை?

இரண்டு குதுபாவிலும் எட்டு பறுலுக்களுண்டாம்.

குதுபாவின் எட்டுபறுலுக்களும் ஒவ்வொரு குதுபாவுக்கும் சொந்தமானவை, இரண்டிலொரு குதுபாவுக்குச் சொந்தமானவை, இரண்டாம் குதுபாவுக்கு மாத்திரம் சொந்தமானவை, என மூன்று வகைப்படும்.

(544.) ஒவ்வோர் குதுபாவுக்கும் சொந்தமாகிய பறுலுக்களெத்தனை?

அல்ஹம்துலில்லாஹி என்றோதுதல், நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள்பேரில் சலவாத்து ஓதுதல், ஹாளிரீன்களுக்குத் தக்வாவைக்கொண்டு வசிய்யத்துச் செய்தல், எனும் மூன்றுமாம்.

(545.) இரண்டிலொரு குதுபாவுக்கு சொந்தமாகிய பறுலுயாது?

ஓர் குதுபாவில் மஅனாவை விளங்கவைக்கும் ஓர் ஆயத்து ஓதுதலாம்.



(546.) இரண்டாம் குதுபாவுக்கு மாத்திரம் சொந்தமாகிய பறுலுயாது?

முஉமின்களுக்கு துஆக் கேட்பதாம்.

544-ம் இலக்கவினாவின் விடையாகிய மூன்று பறுலுக்களையும் இரண்டு குதுபாவிலும் நடத்தாட்டினால் ஆறு பறுலாகும் 545-ம் இலக்கவினாவின் விடையாகிய பறுலு ஒன்று 546-ம் இலக்கவினாவின் விடையாகிய பறுலு ஒன்று ஆக பறுலுக்கள் எட்டாம்.

(547.) இரண்டு குதுபாவிலுமுள்ள சுன்னத்துக்களெவை?

மேலேசொல்லிய பறுலுக்களை தறுத்தீபாகக் கொண்டுவருதல், ஆயத்து ஓதி முடிந்தபின் ஜும்ஆ அடங்கலிலும் குறத்து காபை அல்லது திம் ஸஜ்தை மின்பறிலிருந்தோதுதல், இரண்டாம் குதுபாவில் சஹாபாக்களில் இராஜாவாயிருந்தவர்களுக்கும் தற்காலத்திலுள்ள முஸ்லிமாகிய இராஜர்களுக்கும் அவர்களின் சேனைகளுக்கும் வெற்றியைக்கொண்டும் உதவியைக்கொண்டும் நீதமாய் நடப்பதுகொண்டும் துஆச் செய்தல், கதீபு குதுபாவில் நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய பெயரைச் சொல்லும்போது ஜமாஅத்துக்கள் மிகுதி சப்தமாக்காமல் சத்தத்தை உயர்த்தி சலவாத்துச் சொல்லுதல், அசுஹாபிமார் தம்பிருட்டிமார்களின் பெயரைக் கேட்டால் றிலுவான் கூறுதல், தும்மினவன் அல்ஹம்து சொல்லுதல், அதைக் கேட்டவன் ஜவாபுசொல்லுதல், குதுபா ஓதும்போதில் வாய்மூடிக் காதுதாழ்த்திக்கேட்குதல், கதீபுக்கு அடுக்க இருக்குதல், கதீபைப் பார்த்தல், ஆகியவைகளாம்.

கதீபானவர் சகலர்களும் பள்ளிக்குள் ஹாளிருகியபின் அவர்களின்மீது சலாம் சொல்லி நுழைந்து தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுகை தொழாமல் மிஹ்றுபுக்கடுக்க இரண்டுமுள விடைக்குள் வலப்பக்கத்தில் மின்பர் அல்லது மின்பரை சேர்ந்த மெளருயாத்திலேறும்போது அடுக்க இருப்பவர்களுக்கு சலாம் சொல்லி முஸ்தருறைற யடுக்க எறினவுடன் மனிதரை முகநோக்கி சலாம்சொல்லி முஸ்தருஹிருத்தல், அப்போதில் முஅத்தின் அவரையடுத்த வலப்பக்கத்தில் நின்று ஜமாஅத்துகளுக்குக் கேட்கும்படி வாங்கு சொல்லுதல், கதீபு இடக்கையில் வாள் அல்லது அசாமுதலியதைப் பிடித்துக்கொண்டு நிற்குதல், வலமிடந்திரும்பாமல் நீட்டாமல் நாகரீகமாய் இசைபிசகாமல் தொனியை உயர்த்திச் சாளயப் பாட்டுடன் ஜமாஅத்துகளுக்கு பறுலுக்கள் நன்றாய்கேட்கத்தக்கதாய் ஓதுதல், இரண்டு குதுபாவுக்கு மிடையில் குறத்துல் இகுலாசு ஓதத்தக்கநேரம் இருக்குதல், அப்போதில் அந்த குறத்தை ஓதுதல், குதுபாவை இஸ்திகு பாறைக்கொண்டு முடித்தலாகிய வைகளும் சுன்னத்தாம்.

(548.) ஜும்ஆவை நாடினவனுக்கு சுன்னத்தானவைகளியாவை?

ஸ்நானம் செய்தல், அழகான உடை யணிதல், சோம்பாளி யல்லாதவர்கள் தோற்றமின்றிய வாசனைத் திரவியம் பூசிக்கொள்ளு தல், முகவேலை செய்துகொள்ளுதல், மூக்கு கமுக்கட்டு உரோமங்களை களைதல், நகமறுத்தல், தாடியை விடுவித்துச் சீப்பு முதலியவைகளைக்கொண்டு வாருதல், சுறுமா இட்டுக்கொள்ளுதல், தனக்கு லாயிகான தலைப்பாகை கட்டிக்கொள்ளுதல், வருத்த மின்றியா யிருந்தால் நீண்ட பாதையால் கால்நடையாய் நடந்துபோகுதல், வரும்போது முந்தின பாதையால் வருதல், ஆகியவைகளாம்.

வெள்ளிக்கிழமை இரவு கிழக்கு வெளுத்தநேரந் தொடுத்து ருஅபாவுக்குப் போகும்நேரம் வரைக்கும் ஸ்நானம் செய்யலாம். அது சுன்னத்து மூஅக்கதாவாம். ஜும்ஆவுக்கடுக்க ஸ்நானம் செய்தல் ஏற்றமாம். அவ்விஸ்நானம் தப்பிவிட்டால் கலாச்செய்யலாம்.

நீரை உபயோகிக்க ஏலாதவன் தயம்மும் செய்துகொள்ளுதல் சுன்னத்தாம். கதீபைத் தவிர மற்றவர்களும் பஜ்ருதொடுத்து மத்தியானம் வரைக்கும் ஜும்ஆவுக்குப் போகலாம்.

நகம் அறுக்கும்விதமாவது வலதுகைக்கலிமாவிரலிலிருந்து வலது சின்னிவிரல்வரைக்கும் அறுத்ததின்பின் பெருவிரல் நகமறுத்தல்வேண்டும் வலதுகையிலுள்ளவைகளை அறுத்து முடிந்தவுடன் இடக்கைச் சின்னிவிரலிலிருந்து பெருவிரல்வரைக்கும் அறுத்ததின்பின் காலில்வலது சின்னிவிரலிலிருந்து துவக்கி இடது சின்னிவிரல் வரைக்கும் அறுத்தலாம்.

சுறுமா இடும் விதமாவது எல்லா ஒவ்வொரு கண்ணிலும் ஒத்தைப்பட அல்லது அச்செயல் மொத்தமாய் ஒத்தைப்படச்செய்யலாம்.

தலைப்பாகில் தொங்கவிடுவதும் சுன்னத்தாம்.

ஜமா அத்துத் தொழுகைக்குப் போகும்போதும் ஹதீது வஃலு கேட்கப்போகும்போதும் குர்ஆன் ஓதப்போகும்போதும் இவ்விடங்களிலிருந்து வரும்போதும் மேலேசொல்லியபடி செய்தல் சுன்னத்தாம்.

வெள்ளிக்கிழமையிரவிலும் பகலிலும் குறத்துல் கஃபு ஓதுவதும், சலவாத்து ஓதுவதும், இவ்விரண்டையும் மிகுதமாக்குவதும், மிகுதமாய் துஆக்கேட்பதும், ஜும்ஆத் தொழுது சலாங்கொடுத்துக் கால்மடிப்பை எடுக்க முன், அல்லது யாதேனும் பேச்சிற்றொடுக்க முன் பாத்திஹா, குல்குவல்லா, குல்அஊது பிறப்பில்



பலகு, குல்அஊது பிறப்பின்னாசு, ஆகியவைகளை ஏழேழுதரம் ஓதுவதும் சுன்னத்தாம்.

வெள்ளிக்கிழமை துஆக் கேட்பதற்கு அற்பநேர முண்டென்று ஹதீது வந்திருப்பதால் அது இன்னநேரந்தானென்று குறிப்பதில் இமாம்களுக் கிடையில் மிகுந்த கிலாபு உண்டாயின. இதில் மிக ஆதாரவான வசுத்தாவது கதீபு மின்பறில் இருந்தது தொடுத்து தொழுது சலாங்கொடுப்பதற் கிடையிலுள்ளவகுத்தாம். ஆகையால் நாம் கதீபுடைய துஆவுக்குத்தானே கையை யுயர்த்தாமல் மெல்ல மெல்ல ஆமீன் என்று சொல்லிக் கொள்ளுதல்வேண்டும்.

(549.) முந்தின சப்பில் இருப்பவர்களைச் சவட்டிக்கொண்டு முன்னேறலாமா?

அது ஹறாம் முந்தின சப்பில் இடையிருந்தால் அதை நிரப்புதற்காய் ஒரு சப்பு இரண்டு சப்பைச் சவட்டலாம்.

(550.) வெள்ளிக்கிழமை கிழக்கு வெளுத்தபின் பிரயாணஞ் செய்யலாமா?

இடையில் அல்லது போகும் தலத்தில் ஜும்ஆக் கிட்டுமென என்ணமிருந்தாலும் வழித்துணைவர்கள் தப்பிவிடுவார்கள் அதனால் தங்கடம் உண்டாகுமென்றிருந்தாலுமேதவிர மற்ற எவ்விதமானாலும் அப்பிரயாணஞ் செய்தல் ஹறாம்.

பிரயாணஞ் செய்பவன் ஜும்ஆ பிடிக்காதவனாயிருந்தாலும் வெள்ளிக்கிழமை யிரவில் சபர்போகுதல் மக்றூகு.

ருதுபாவுடைய வாங்குக்குப்பின் ஜும்ஆத் தொழுது தீருமளவும் வியாபாரம் முதலிய எத்தொழிலும் செய்தல் ஹறாம்.

சூரியன் மத்தியைவிட்டுச் சறகி ருதுபாவுடைய வாங்குசொல்லும் வரைக்கும் வியாபாரம் முதலிய எத்தொழிலும் செய்தல் மக்றூகாம்.

அல்பாபுல் தாஸிஉ அஷறு பியானில் லிபாஸி.

(பத்தொன்பதாம் பாபு உடையைப்பற்றியது.)

(551.) (லிபாஸ்) என்பதின் பொருள்யாது?

உடுப்பு என்பதாம் அது ஆடை, வஸ்திரம், உடை, எனவும்பெயர் பெறும்.

அது பட்டு வஸ்திரம், பட்டும் பருத்தியுங் கலந்த வஸ்திரம், பருத்தி வஸ்திரம், சாயங்காச்சப்பட்ட வஸ்திரம், என நான்கு வகைப்படும்.

(552.) ஆடவர்கள் பட்டுவஸ்திரந் தரிக்கலாமா?

பாலிகாகிய ஆண்பிள்ளைகள் பட்டுவஸ்திரந் தரிப்பதும் போர்த்துவதும மறைப்பதும் இவைகளை விரித்தவைகளும் ஹறாமாம்.

நான்கு விரல் அளவான அகலம் அல்லது அதற்கதிகமான அகலமாயிருந்தாலும் ஆண்பிள்ளைகளுக்கு ஹலாலாகிய வஸ்திரத்தின் அருகை வழக்கமானபடி தனிப்பட்டினுல் செய்வதும் அவ்வஸ்திரத்தைத் தரிப்பதும் ஹறாமாகாது.

தன் மனைவி பட்டுவஸ்திரம் அணிந்திருக்கையில் ஜிமாஉ முதலிய சுகங்கள் பாராட்டலாம்.

பட்டுவிரிப்பின்மேல் பருத்திப் பிடவையை விரித்து அதின்பேரில் இருக்கலாம். அப்பிடவை இளஞ்சவ்லாவா யிருந்தாலுமாம்.

மிகுந்த சூடு, குளிர், முதலிய வருத்தங்கள் பட்டணிவதால் அல்லது உபயோகித்தலால் இலேசாகுமேயாகில் அப்படியே செய்யலாம்.

பட்டுநூலால் தைப்பதும் தஸ்பீகு கோர்ப்பதும் ஜாயிசாம்.

(553.) பெண்கள் பட்டுவஸ்திரந் தரிக்கலாமா?

பாலிகாகிய பெண்களும் பாலிக்காகாத ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பட்டுவஸ்திரந் தரிக்கலாம்.

பட்டினுல் மறைப்புப்போடுவதும் மதிட்களை அலங்கரிப்பதும் ஸ்திரிகளுக்கு ஹறாமாம்.

(554.) பட்டும் பருத்தியுங் கலந்த வஸ்திரம் எத்தனைவகைப்படும்?

நிறையால் பட்டும் பருத்தியும் சரியானது, பருத்தி குறைந்து பட்டதிகமானது பட்டுக்குறைந்து பருத்தி மிகுத்தது, என மூன்று வகைப்படும்.

நிறையால் பட்டும் பருத்தியும் சரிசரியான கலப்பினையுடைய வஸ்திரமும் பட்டுக்குறைந்து பருத்தி மிகுத்த கலப்பினை உடைய வஸ்திரமும் தரிப்பது பாலிகான ஆடவர்களுக்கு ஹலால்.

பாலிகான பெண்களும் ஆண்குளந்தை பெண்குளந்தைகளும் தனிப்பட்டாடைகளும் பட்டையும் பருத்தியையும் எவ்வாறுவது கலந்த ஆடைகளையும் தரித்துக்கொள்ளலாம்.



(555.) தனிப்பருத்தியினுல் அமைக்கப்பட்ட வஸ்திரந் தரிக்கலாமா?

பாலிகாகிய ஆடவர்கள் ஸ்திரிகள் பாலிகாகாத ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் ஆகிய எவர்களுந் தரிக்கலாம்.

(556.) ஜும்ஆநாளில் எவ்வித வஸ்திரம் அணிதல் வேண்டும்?

வெண்மையான வஸ்திரந் தரித்தல் வேண்டும்.

பெருநாட்களில் விலை ஏறப்பெற்ற வஸ்திரம் அணிதல் வேண்டும்.

கால்சட்டை சாறீன்வேட்டி முதலியவைகளை குதிகால் முகத்தின் அரைவாசிவரைக்கும் தாழ்த்துவதும், அங்கியின்கையை மணிக்கட்டுவரைக்கும் தாழ்த்துவதும் சுன்னத்தாம்.

கால்சட்டை சாறீன்வேட்டி முதலியவைகளைப் பரண்டைவரையில் தாழ்த்தினுல் சுன்னத்துத் தப்பிவிடும்.

அணியும்போது வலதை முற்படுத்துவதும் களையும்போது இடதை முற்படுத்துவதும் சுன்னத்தாம்.

தலைப்பாகையின் தொங்கலை ஒருமுள நீளம்வரைக்குந் தாழ்த்தலாம் பெருமையை நாடினுல் ஹறாமாம்.

துர்க்கந்தம் அழுக்கு ஆகியவைகளுள்ள ஆடையை அணியாதிருத்தல் துக்கத்தையும் நீக்கி அகிலையும் உண்டாக்குமாம்.

(ஆபரணத்தைப்பற்றியது.)

(557.) (தஹ்லியப்பத்து) ஆபரணம் எத்தனைவகைப்படும்?

பொன் ஆபரணம் வெள்ளி ஆபரணம் என இருவகைப்படும்.

(558.) ஆடவர்கள் பொன் ஆபரணம் அணியலாமா?

பாலிகாகிய ஆண்பிள்ளை பொன் ஆபரணமணிதல் ஹறாம்.

வெள்ளி மோதிரத்தின் கிண்ணியில் இரத்தினம் பிடிப்பதற்காயாவது கொஞ்சப்பொன் சேர்ப்பதும் ஹறாம்.

பொன்னல்லாத மற்ற லோகங்களோடு கலந்த பொன்னும் அப்படியேயாம்.

பாலிகத்தாகிய பெண்களும் ஆண்குளந்தை பெண்குளந்தைகளும் பொன் ஆபரணம் அணியலாம்.

(559.) ஆடவர்கள் வெள்ளி ஆபரணம் அணியலாமா?

பாலிகாகிய ஆடவர்கள் ஒருமோதிரத்தைத்தவிர வெள்ளியாலாகிய எவ்வித ஆபரணமும் அணிதலாகாது. அது ஹறாம்.

வெள்ளியால் ஒரு மோதிரம் அணிதல் சுன்னத்தாம்.

பாலிகத்தாகிய ஸ்திரீகளும் சிறுவர்களும் வெள்ளியாபரணமணியலாம்.

இரும்பினாலும், செம்பினாலும், ஈயத்தினாலும், மோதிரம் அணிதல் ஜாயிசாயிருந்தாலும் அணியாதிருப்பது உத்தமமாம்.

(560.) முசஹ்புக்கு பொன்னினால் அல்லது வெள்ளியினால் ஆபரணம் சூட்டலாமா?

ஆடவர்கள் தங்கள் முசஹ்புக்கு வெள்ளியினால் ஆபரணம் சூட்டுவதும் பெண்கள் பொன்னினாலும் வெள்ளியினாலும் ஆபரணம் சூட்டுவதும் ஜாயிசாம்.

---

## அல்பாபுல் இஷ்ரீன் பீபானி சலாத்தில் முசாபிர்.

(இருபதாம்பாடம் பிரயாணியின் தொழுகையைப் பற்றியது.)

(561.) சலாத்துல் முசாபிர் என்பதின் பொருள்யாது?

1. பிரயாணியின் தொழுகை என்பதாம்.

2. யாத்திரை, பிரயாணம், சபர், என்பவைகள் ஒரேபொருளுடைய சொல்லுகளாம்.

3. மஃசிய்யத்தல்லாத ஆமான கருமத்துக்காய் ஒட்டகையின் நிதானநடையாக இரண்டுநாள் தூரம் அல்லது அதற்கதிக தூரத்திலிருக்கும் ஊரைநாடிக் கடலால் அல்லது கரையால் யாத்திரைசெய்பவனே தொழுகையைச் சுருக்கியும் சேர்த்தும் தொழத்தக்க முசாபிறாம்.

(562.) பிரயாணஞ் செய்பவன் தனக்கு விதியான தொழுகையை எவ்வளவுகாலம் வரைக்கும் சுருக்கியும் சேர்த்தும் தொழலாம்?

1. முசாபிறு தன்னூரி னெல்லையைக்கடந்து நாடின இடத்திற் சேரும்வரைக்கும் அல்லது அதற்கிடையிலுள்ள வேறோர் இடத்தில் நான்குநாள் தரிப்பதாய் நிய்யத்துவைக்கும் வரைக்கும் சுருக்கியும் சேர்த்தும் தொழலாம்.

2. நினைத்தவிடஞ் சேருமுன் இடையில் தரித்தவன் நாலுநாள்தரிக்கவேண்டுமென நிய்யத்துவைக்காமல் இன்று நாளை என்றெண்ணி பதினெட்டுநாள் வரையும் சென்றாலும் கஸ்று ஜம்உ தொழலாம்.



(563.) சலாத்துல் முசாபிறு என்பது எத்தனை வகைப்படும்?

சலாத்துல் கஸ்று சலாத்துல் ஜம்உ என இருவகைப்படும்.

(564.) சலாத்துல் கஸ்று ஆவது யாது?

561-ம் இலக்க வினாவின் விடையில் 3-ம் இலக்க வசனத்திற் சொல்லிய பிரயாணமும் 562-ம் இலக்கவினாவின்விடையில் 1-ம்2-ம் வசனங்களிற் சொல்லியபடி தரிப்பவனும் தன்பேரில் வாஜிபாகியஅதாத் தொழுகையையாயினும் சபரில்கலாவான கலாத்தொழுகையையாயினும் நான்கு றகஅத்துத் தொழுகையை இரண்டு றகஅத்தாகச் சுருக்கித் தொழுவதே கஸ்றுத் தொழுகையாம்.

(565.) சலாத்துல் ஜம்உ ஆவதியாது?

561-ம் இலக்க வினாவின் விடையில் 3-ம் இலக்க வசனத்திற் சொல்லிய பிரயாணமும் 562-ம் இலக்கவினாவின் விடையில் 1-ம் 2-ம் இலக்க வசனங்களிற் சொல்லியபடி தரிப்பவனும் தன்பேரில் வாஜிபாகிய அதாத்தொழுகையை யாயினும் சபரில் கலாவான கலாத்தொழுகையையாயினும் ளுஹறு அசறு எனுமிரண்டையும் சேர்த்துத் தொழுவதே ஜம்உத் தொழுகையாம்.

(566.) கஸ்றுத் தொழுகையின் சுறுத்துக்களெவை?

[illegible] குபீல்தானே கஸ்று தொழுகிறேனென நிய்யத்து வைத்தல், [illegible] இருத்தல், தொழுகை தீருமளவும் அந்த நிய்யத்து மாறாமலும் சபர் நிறைவாயிருத்தலெனும் மூன்றுமாம்.

(567.) ஜம்உத் தொழுகை எத்தனை வகைப்படும்?

முற்படுத்திச் சேர்த்துத் தொழும் தொழுகை, பிற்படுத்திச் சேர்த்துத்தொழும் தொழுகை, என இருவகைப்படும்.

(568.) முற்படுத்திச் சேர்த்தலாவது யாது?

ளுஹறுடைய வக்த்தில் அசறுத்தொழுகையையும், மஃறிபுடைய வக்த்தில் இஷாத்தொழுகையையும் சேர்த்தலாம்.

முற்படுத்திச் சேர்ப்பதின் சுறுத்தாவது முந்தின தொழுகையில் எவ்விடத்திலாவது பிந்தின தொழுகையை இத்துடன் சேர்ப்பேனென நிய்யத்துவைத்தல், வக்த்துடைய தொழுகையை முன்னே தொழுதல், இரண்டு தொழுகைக்கு மிடையில் இலேசாக இரண்டு றகஅத்துத் தொழத்தக்க நேரமளவும் பிரிக்காதிருத்தல், இரண்டாம் தொழுகைக்குத் தக்பீர் கட்டுமளவும் சபர்நீடித்திருத்தல், எனும் நான்குமாம்.

முற்படுத்தித் தொழும் முந்தின தொழுகைக்கு உசல்லீபறுலல் ழுஹறி றகஅதைனி கஸ்றன் லில்லாஹிதஆலா அல்லாகு அகுபர் என்றும் இரண்டாம் தொழுகைக்கு உசல்லீபறுலல் அசரி றகஅதைனி கஸ்றன் ஜம்அன் லில்லாஹிதஆலா அல்லாகு அகுபர் என்றும் நிய்யத்து வைத்துத் தகுபீர் கட்டவேண்டும்.

(569.) பிற்படுத்திச் சேர்த்தலால் நியாது?

அசறுடைய வகுத்தில் ழுஹறையும் இஷாவுடைய வகுத்தில் மஃறிபையும் சேர்த்தலாம்.

பிறபடுத்திச் சேர்ப்பதின் ஷறுத்துக்களாவன, முந்தின தொழுகையின் வகுத்தில் ஒரு றகஅத்துத் தொழத்தக்க நேரமிருக்கையில் பிந்தின வகுத்தில் இத்தொழுகையைச் சேர்த்துத் தொழுவேனென்று நிய்யத்து வைத்தல், இரண்டாம் தொழுகையின் கடைசி வரைக்கும் சபர்நீராதிருத்தல், எனும் இரண்டுமேயாம்.

பிற்படுத்தித் தொழும் முந்தின தொழுகைக்கு உசல்லீபறுலல் ழுஹறி றகஅதைனி கஸ்றன் ஜம்அன் மஅல்அசரி தஉகிறன் லில்லாஹி அல்லாகு அகுபர் என்றும் இரண்டாம் தொழுகைக்கு உசல்லீபறுலல்அசரி றகஅதைனி கஸ்றன் லில்லாஹி அல்லாகுஅகுபர் என்றும் நிய்யத்துவைத்துத் தகுபீர் கட்டவேண்டும்.

பிற்படுத்திச் சேர்ப்பவன் முந்தின தொழுகையை முந்தியும் பிந்தின தொழுகையைப் பிந்தியும் வகுத்தின் தறுதீபுப்படி தொழுதல் வேண்டும் அது சுன்னத்தாம்.

பாலிகாகாதவன் முற்படுத்தித் தொழுதபின்பு பாலிகாகிவிட்டால் அத்தொழுகையை மீளுவித்தல் வாஜிபாகாது.

முற்படுத்தித் தொழுவதும் பிற்படுத்தித் தொழுவதும் ஒரே பதவியை உடையதாம்.

பிந்தின வகுத்தில் நடைமுதலிய பராக்கு உண்டாகுமென்றெண்ணமிருந்தால் முற்படுத்துவதும் முந்தின வகுத்தில் பராக்குண்டாகிப் பிந்தின வகுத்தில் சாவகாசம் உண்டாகுமேயாகில் பிற்படுத்துவதும் சுன்னத்தாம்.

சேர்த்துத் தொழும் தொழுகையின் முந்தின சுன்னத்தைத் தொழுது பின்பு இரண்டு பறுளுக்களையுந் தொழுது பின்பு முந்தினதின் பிந்தின சுன்னத்தையும் பின்பு இரண்டாம் தொழுகையின் முந்தின சுன்னத்தையும் பின்பு பிந்தின சுன்னத்தையும் தொழுதல் வேண்டும்.



(570.) கஸ்றுதொழும் இமாமை நிரப்பமாய்த் தொழுபவன் தொடரலாமா?

தொடர்ந்து தொழலாம் எஞ்சிய தொழுகையை இமாம்சலாம் கொடுத்தபின் தொழுதல் வேண்டும்.

கஸ்று தொழுபவன் இரண்டு றகஅத்துத் தொழுதபின் மறந்து எழும்பி நான்கு றகஅத்துந் தொழுதபின் நிரப்பமாய்த் தொழுவதை நிய்யத்து வைத்தால் பின்னும் இரண்டு றகஅத்துத் தொழவேண்டுமாம்.

மறதியால் அதிகப்படுத்துவது வீணாய்ப் போகின்றமையால் அவ்விதம் நிரப்பமாக்கித் தொழுவதை நாடாவிட்டால் நினைத்தவுடனிருந்து சஜிதா சஃவு செய்து சலாங்கொடுத்தல் வேண்டும்.

கஸ்றுதொழும் இமாம் சலாம் கொடுத்தவுடன் நான்கஸ்று தொழுதேன் என்று அறிவிக்கவேண்டும்.

ஓர்முசாபிர் நிரப்பமாய்த் தொழுபவனைத் தொடர்ந்தாலும், அல்லது முசாபிரென்றெண்ணித் தொடர்ந்தபின் முகீமென்று வெளியானாலும், அல்லது கஸ்றுதொழாமல் தகுபீறகட்டியபின் கஸ்றாகத் தொழுவேனோ அல்லது நிரப்பமாய்த் தொழுவேனோ என இருந்திப்பானாலும் அல்லது, கஸ்றை நிய்யத்து வைத்தானோ நிய்யத்து வைக்கவில்லையோ எனச் சந்தேகித்தாலும் நிரப்பமாய்த் தொழுதல் வாஜிபாம்.

## அல்பாபுல் இஹ்தா வஇஷ்ரீன் பீபயானி சலாத்தில் ஜுமுஆ.

(இருபத்தோராம்பாபு ஜுமுஆத் தொழுகையைப்பற்றியது.)

(571.) சலாத்துல் ஜுமுஆ என்பதின் பொருள்யாது?

மய்யித்துத்தொழுகை என்பதாம்.

(572.) முஸ்லிமாகிய மய்யித்தினால் அவ்வூர் வாசிகளுக்கு நாலுவிதக்கருமங்கள் பறுளு கிபாயாவாகும்.

அம்மய்யித்தைக் குளிப்பாட்டுதல் கபனிடுதல் தொழுவித்தல் அடக்கம்பண்ணுதல் எனும் நான்கு கருமங்களும் பறுலுகிபாயாவாகும்.

ஓர்மய்யித்தை மலக்குகள் ஜின்கள் குளிப்பாட்டித் தொழுவிக்கக் கண்டாலும் அவ்வூரி லுள்ளவர்கள்பேரில் பூண்ட பறுலு நீங்காது.

தம்யீசாகிய வோர்சிறுபிள்ளை அந்த நான்கு பறுலையும் செய்து நிறைவேற்றி விட்டாலும் எல்லாருடைய பறுலும் நீங்கிவிடும்.

மய்யித்தை ஆயத்தமாக்குவதற்கு வேண்டிய செலவடங்கலும் அம்மய்யித்தின் சொந்தமான முதலா யிருக்கவேண்டும் மனைவிக்குச் சொந்தமான ஆஸ்தி யிருந்தாலும் அவளுக்கும் அவளின் வேலைக்காரிக்கும் புருடன் செலவிட்டு அடக்கம்பண்ணவேண்டும்.

ஆஸ்தியில்லாத மய்யித்தாயிருந்தால் அம்மய்யித்து உயிரோடிருக்கையில் யார்மீது நபகா விதியாயிருந்ததோ அவர்செலவிட்டு அடக்கம் பண்ணவேண்டும்.

மய்யித்தின் நபகா விதித்தவர்களு மில்லாதபோதில் பைத்துல்மாலாலும் பைத்துல்மால் இல்லாதபோதில் அவ்வூர்வாசிகளாகிய முஸ்லீம்களிற் செலவிடத் தக்கவர்களாலும் செலவிட்டு அடக்கம் பண்ணவேண்டும்.

(573.) எவ்வாறு மய்யித்தைக் குளிப்பாட்டவேண்டும்?

மய்யித்தை ஓர்முகட்டின்கீழ் கட்டில்முதலிய உயரத்தில் வைத்துக் குளிப்பாட்டுபவர்களை யன்றிமற்றவர்களை அவ்விடம் வரவொட்டாமலாக்கி ஓர் பழைய இலேசான பிடவையால் மூடிக் குளிர்ந்த சலத்தினுற் குளிப்பாட்டவேண்டும்.

குளிப்பாட்டுபவர்கள் நான்கு பெயருக் கதிகப்படாம லிருப்பதும் ஒத்தைப் பட்டவர்களா யிருப்பதும் குளிப்பாட்டும்போதில் அல்லாகுத் தஆலாவை திக்றுச்செய்வதும் மய்யித்தின் முகத்தை மூடிவைப்பதும் குளிப்பாட்டுதலின் கடைசியில் கலிமா ஷகாதத்துச் சொல்வதும் குளிப்பாட்டுபவர்களில் ஒருவர் மய்[illegible]த்தை தன் வலது முட்டில் இருப்பாட்டிக் கொஞ்சம் சாய்த்து வைப்பதும் மய்யித்தில் யாதேனும் (ஐபைக்) கண்டால் ம[illegible]றப்பதும் சுன்னத்தாம்.

குளிப்பாட்டும்போது அவசியமாய் மய்யித்தி[illegible] மேனியிற் கிடக்கும் அசுசிகளை நீக்கி கையிலோர் பிடவைத் துண்டைச் சுற்றிக் கொண்டு மய்யித்தை நன்றாய்த் தேய்த்துக் கழு[illegible]ாத்தானவன் வுலுச் செய்வதுபோல் வுலுவின் பறுலு சுன்னத்துகளை நிரப்பமாய்ச் செய்வித்து கலிமா விரலால் மிஸ்வாக்குச் செய்து சின்னிவிரலால் நாசியைத் துப்பரவாக்கி இலந்தையிலை, சீயாக்காய், அரப்பு, முதலியவைகளால் மெல்ல மெல்லத் தேய்த்து வல



திற் றுவக்கிச் சரீரமடங்கலிலும் மூன்றுதரம் ஜலத்தை ஓடத்தக்கதாய் ஊற்றி அதின் கடைசியில் கொஞ்சம் சூடத்தையுங் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆண்பிள்ளையாகிய மய்யித்தை ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையாகிய மய்யித்தைப் பெண்பிள்ளையுமே குளிப்பாட்டத்தக்க யோக்கியர் கணவனை மனைவியும் மனைவியை கணவனும் குளிப்பாட்டலாம்.

தொடவும் பார்க்கவும் ஆமாகிய சிறுபிள்ளையாகிய மய்யித்தை யாராவது குளிப்பாட்டலாம்.

(574.) ஜலம் இல்லாத இடத்தில் எவ்விதமாய் மய்யித்தைக் குளிப்பாட்டவேண்டும்?

ஜலம் கிடையாவிட்டாலும் குளிப்பாட்டுவதால்மய்யித்துமோசமாய்ப் போகுமேயானாலும் தயம்மம் செய்தல்வேண்டும் அது வாஜிபாம்.

(575.) கபன்போடத்தக்க வஸ்திரம் யாது?

பீத்தலில்லாத கெட்டியான பழைய வெள்ளைப்பிடவையாம்.

பிடவை இல்லாவிட்டால் தோல் தோலில்லாவிட்டால் புற்பூடுகளை புற்பூடுகளை யில்லாவிட்டால் களிமண் ஆகியவைகளால் மறைத்தல் வேண்டும் மேற்சொல்லிய விதப்படி செய்தல் வாஜிபாம்.

கபன் பறுலானகபன் நிரப்பமான கபனென இருவகைப்படும்.

(576.) பறுலாகியகபன் எவ்வாறாம்?

மாதர்களடங்கலுக்கும் அடிமையானவும்சரி முகத்தையும் இருகையையும் தவிர மற்ற இடங்களை எல்லாம் மறைப்பதும் ஆண்பிள்ளைகள் அடங்கலுக்கும் முழந்தாளுக்குந் தொப்புளுக்குமிடையிலுள்ள மேனியை மறைப்பதுமாம்.

(577.) நிரப்பமாகிய கபன் எவ்வாறாம்?

ஆண்பிள்ளைக்கு சரீரமடங்கலையும் மறைக்கத்தக்க மூன்று பிடவையும் ஓர்அங்கியும் ஓர்தலைப்பாகையும் மாதர்களுக்கு சரீரமடங்கலையும் மறைக்கத்தக்க இரண்டுபிடவையும் ஓர் அங்கியும் ஓர் கையேலியும் ஓர் முகமூடியுமாம்.

மய்யித்தின் மேனியில் அல்லது கபனில் குர்ஆனையும் வலுப்பமாகிய அசுமாக்களையும் மையினால் எழுதுவதும் பெண்பிள்ளை

யின் ஜனாசா வாயிருந்தாலும் பட்டுவஸ்திரத்தால் மறைப்பதும் ஹறாமாம்.

ஸ்திரீயாகிய மய்யித்துக்கும் சிறுபிள்ளையாகிய மய்யித்துக்கும் பட்டினாற் கபன்செய்தல் மக்ரூகாம்.

கபனை அம்பர் முதலியதால் மூன்றுதரம் புகைகாட்டுதல், சரீர மடக்கலையும் மறைக்கும் பிடவையை ஒன்றொன்றாய் விரித்து பல மணம் போடுதல், மேனியை அடுத்ததில் சூடம்போடுதல், மய்யித்தின் துவாரங்களிலும் சுஜூது செய்யும் ஏழுஉறுப்பிலும் சூடத்துடன் கலந்த பஞ்சை மெதுவாக வைத்தல், மேலே சூடத்தை மிகுதமாக்குதல் மய்யித்தைமென்மையாய்க் கபனில் வைத்து முகம் கவிழ்த்தாமல் கபன்போடுதல் கபனின் இரண்டு பக்கத்தையும் துண்டுக்கரைகளாற் கட்டுதல் ஆகியவைகளும் சுன்னத்தாம்.

(578.) காபிரின் பிள்ளைகளைக் கபன்இட்டு அடக்கவேண்டுமா?

காபிரின் பிள்ளைகள் கலிமாச்சொல்லி பலூகாக முன்மரணித்தால் கபன் இட்டடக்குதல் வாஜிபாம் அம்மய்யித்தைக் குளிப்பாட்டவும் ஆகும்.

(579.) விழுபிள்ளையாகிய கட்டிக்கும் கபன்செய்தல் வேண்டுமா?

நான்குமாசந் தீருமுன் விழுந்த கட்டியைக் குளிப்பாட்டுவதும் கபன் செய்வதும் ஜாயிசு. நான்கு மாசந் தீர்ந்தபின் விழுந்த கட்டியைக் குளிப்பாட்டுவதும் கபன்செய்வதும் வாஜிபாம்.

கொஞ்சமாவது துடித்தால் அல்லது சத்தமிட்டால் நான்கு பறுலையும் நட்ப்பித்தல் வேண்டும்.

(580.) கற்பஸ்திரீயாகிய மய்யித்தை அடக்கம் பண்ணலாமா?

வயிற்றிலிருக்கும் சிசு மரணித்தது திட்டமாகும்வரைக்கும் அடக்கம்பண்ணக் கூடாது.

அச்சிசு உயிரோடிருப்பது திட்டமாயிருந்தால் மய்யித்தின் வயிற்றைக்கீறி அச்சிசுவை எடுத்தல்வேண்டும்.

---



## அல்பஸ்லுல் தானீபாபி சலாத்தில் ஜனாசதி.

### உ-ம் பிரிவு.

(581.) மய்யித்துத் தொழுகையின் ஷறுத்துக்களெவை?

தொழுகையின் ஷறுத்துக்களும் அவையல்லாத இரண்டு ஷறுத்துக்களுமாம் அதாவது குளிப்பாட்டுதல் அல்லது தயம்மம்செய்தல் முந்தினதாயிருப்பதும் ஹாளிறாகிய மய்யித்தாயிருந்தால் கபுறில் தொழுவிப்பதாயினும் திக்கும் தானத்தில் மய்யித்தை முந்தாதிருப்பதுமாம்.

(582.) மய்யித்துத் தொழுகையின் பறுளுக்களெத்தனை?

நிய்யத்து வைத்தல், நிற்கத்தக்கவன் நிற்குதல், முந்தினை தக்பீரைச் சேர்த்து நான்கு தக்பீர் கட்டுதல், முதலாம் தக்பீருக்குப்பின் பாத்திஹா ஓதுதல், இரண்டாம் தக்பீருக்குப்பின் சலவாத்து ஓதுதல், மூன்றும் தக்பீருக்குப்பின் மய்யித்து இளம்பாராயமுள்ளதாயினும் அதற்குத் தனதாய் துஆச்செய்தல், நான்காம் தக்பீருக்குப்பின் சலாங்கொடுத்தல் எனும் ஏழுமாம்.

(583.) மய்யித்துத் தொழுகைக்கு எவ்வாறு நிய்யத்து வைக்கல் வேண்டும்.

ஹாளிறாகிய மய்யித்தா யிருந்தால் அம்மய்யித்தின்பேரில் தொழுவிப்பதை மாத்திரம் நிய்யத்துவைத்தல் போதுமானதாம்.

(காயிபான) மய்யித்தா யிருந்தால் அம்மய்யித்தின் பெயரைக் குறித்தல் வாஜிபென்பது (பகுஹு) உடைய சொல்லாம்.

ஹாளிறாகிய மய்யித்துத் தொழுகைக்கு நிய்யத்தாவது உசல்லீ பறுலல் அலாகாதல் மய்யிதி அறுபஅ தக்பீறாத்தின் லில்லாகி தஆலா அல்லாகு அக்பர் என்பதாம்.

காயிபாகிய மய்யித்துத் தொழுகைக்கு நிய்யத்தாவது உசல்லீ பறுலல் மய்யித்தில் காயிபி அறுபஅ தக்பீறாத்தின் லில்லாகித்தஆலா அல்லாகு அக்பர் என்பதாம்.

(584.) மய்யித்துத் தொழுகையின் சுன்னத்துக்களெவை?

முதல் தக்பீர் கட்டியபின் பாத்திஹா ஓதுமுன் அஊது ஓதுதல் தக்பீரல்லாதவைகளை சிற்றுக்கிவித்தல் வஜ்ஜஹுத்தும் சூறத்தும் ஓதாமல் விடுதல் மூன்றும் தக்பீறுக்குப்பின்னுள் மஉதூறான துஆக்களை மிகுதமாக்குதல் சலாம் கொடுக்குமுன் அல்லாகும்ம லாத்

துஹற்றிம்ஹு அஜ்றஹா வலாத்தபுத்தினு பஃதஹு என்றோதுதல் ஆகியவைகளும் பிறவுமாம்.

(585.) மய்யித்துத் தொழுகையின் இரண்டாம் தக்பீறுக்குப்பின் ஓதவேண்டிய சலவாத்து யாது?

அல்ஹம்துலில்லாஹி அல்லாகும்ம சல்லி வசல்லிம் அலாசெய்யிதி னு முகம்மதின் வஆலிஹி என்பதாம் அத்தோடு அல்லாகும்ம குபி று லில்முஉ மினீன வல்முஉ மினாத்தி என்பதையும் சேர்த்துக் கொள்ளுதல்வேண்டும்.

மூன்றும் தக்பீறுக்குப்பின் அல்லாகும்ம குபிறுலஹு வறுஹம் ஹு என்றோதுதல் போதியதாம்.

மூன்றும் தக்பீறுக்குப்பின் ஓதவேண்டிய முஉதாறுன துஆக்க ளில் ஏற்றமானதாவது அல்லாகும்மகுபிறுலஹு வறுஹம்ஹு வஉ புஅன்ஹு, வஆபிஹி, வஅக்றிம் நுசுலஹு வவஸ்ஸிஉ முத்கலஹு, வகுஸில்ஹு, பில்மாஇ வத்தல்ஜி, வல்பறதி, வநக்கிஹி, மினல்க தாயா, கமாயுநக்கத்தவுபுல், அபுயலுமினல் தனஸி, வஅபுதில்ஹு, தாறன்கைறன், மின்தாரிஹி, வஅஹலன், கைறன்மின், அஹலிஹி, வசவுஜன்; கைறன், மின்சவுஜிஹி, வஅதுகில்ஹுல்ஜன்னத, வஅஇது ஹு, மின்அதாபில்கபுரி, வபித்னதிஹி, வமின்அதாபின்னார், அல்லா கும்மகுபி றுலிஹைய்யினா, வமய்யிதினா வஷாஹிதினா, வகாயிபினா, வச கீரினா; வகபீரினா, வதகரினா, வஉன்தானா, அல்லாகும்ம மன்அஹ் யைத்தஹுமின்னா, பஅஹ்யிஹி அலல் இஸ்லாம், வமன் தவப்பைத் ஹுமின்னா, பதவப்பஹு, அலல்ஈமான், என்பதாம்.

சிறுபிள்ளை யாகிய மய்யித்தாயிருந்தால் பின்வரும் துஆவைச் சேர்த்து ஓதுதல்வேண்டும். அதாவது அல்லாகும்மஜ் அல்ஹுபறத ன்லிஅபவைஹி, வசலபன், வதுகுறன், வஇஹதன், வஷபீஅன், வஷபீஅன், வதக்கில்பிஹி, மவாசினஹுமா, வஅபுரிகுல்சபுற, அலா குலூபிஹிமா, வலாதபுதின்ஹுமா, பஃதஹு வலாதுஹற்றிம்ஹுமா, அஜ்றஹு என்பதாம்.

சிசுவிற்பிறந்த பிள்ளை யாயின் அல்லாகும்மஜ் அல்ஹுபறதன்லி அபவைஹி என்பதை மாற்றி அல்லாகும்மஜ் அல்ஹு பறதன்லி உம் மிஹி என்றோதுதல்வேண்டும்.

(586.) மய்யித்தைத் தொழுவிக்கும் இமாம் மய்யித்தின் எவ்விடத்துக்கு நேரே நிற்குதல்வேண்டும்?

மய்யித்தைத் தொழுவிக்கும் இமாமும் (முன்பரிது) தனிமையாய்த் தொழுபவனும் ஆண்பிள்ளையாகிய மய்யித்தின் தலைக்கு நேராகவும் பெண்பிள்ளை யாகிய மய்யித்தின் இடுப்புக்கு நேராகவும் நிற்பது வேண்டும் அது சுன்னத்தாம்.



(587.) மய்யித்துத் தொழுகைக்கு இமாமாகத் தக்கவர்யார்?

அம்மய்யித்தின் தகப்பனும், தகப்பனில்லாவிட்டால் மய்யித்தின் மகன், மகனுமில்லாவிட்டால் அசபத்துடைய தறதிபின்படி உடன்பிறந்தான், பின்பு உருமை யிட்டவன், பின்பு அறுஹாம்காரர், பின்பு புருடன், பின்பு மேலேசொல்லப்பட்ட ஒருவரின் உத்தரவு பெற்றவன் ஆகியவர்களாம். இவர்களோ முந்திய முந்தியமுறை பாவின்படி முற்படவேண்டும்.

மய்யித்து ஹயாத்தாயிருக்கும்போது ஒருவனைத் தொழுவிக்கும்படி வசிய்யத்துச் செய்திருந்தால் அவ்வசிய்யத்தை நேர்த்துக்கொண்டவனையே முற்படுத்தவேண்டும்.

(588.) மய்யித்துத் தொழுகைக்கு எத்தனை பெயர்கள் கூடவேண்டும்?

ஒருவர் தொழுதாலும் போதுமாம்.

நாற்பது பெயர்கள் கூடித் தொழுவித்தால் தொழுபவர்களுக்கு மிகுந்த தவா புண்டாகும், தொழுபவர்களுக்கு மாத்திரமல்ல மய்யித்துக்கும் மிகுந்த தவாபு கிடைக்கும்.

மய்யித்துத் தொழுபவர்கள் மூன்று சப்புக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

தொழுபவர்கள் மிகுதமாய்க் கூடுவார்களென்று தொழுகையைப் பிற்படுத்தலாகாது.

மய்யித்துப் பேதமாகுமேயாகில் அப்படித் தாமதித்தல் ஹறாம்.

(589.) மய்யித்தைப் பள்ளியினுட் புகுத்துவிக்கலாமா?

ஆம் மய்யித்துப் பேதமாயிருப்பதால் பள்ளியில் யாதும் நஜீசுபடக்கூடுமென்பதைப் பயப்படாவிட்டால் பள்ளியினுள் வைத்துத் தொழுவித்தல் அபுனலாம்.

(590.) குளிப்பாட்டாமல் அடக்கம்பண்ணப்பட்ட மய்யித்தை யாது செய்தல்வேண்டும்?

குளிப்பாட்டாமல் அல்லது தயம்மம் செய்யாமல் அடக்கம்பண்ணப்பட்ட மய்யித்தைத் தோண்டியெடுத்து நான்கு பறுலையும் நடப்பித்து அடக்கம்பண்ணவேண்டும்.

மய்யித்துப் பேதலித்துவிட்டால் அப்படிச் செய்யலாகாது.

---

# அல்பஸ்லுல்தாலிது பிபாபிசலாத்தில் ஜனாசதி.

## ந-ம் பிரிவு.

(591.) கபுறு என்பதின் பொருள்யாது?

மய்யித்தை அடக்கம் பண்ணப்படும் குழி என்பதாம்.

கபுறுடைய வாஜிபிற் குறைந்ததாவது பிரேதத்தின் வாடையையும் விலங்கினம் முதலியவைகளின் கெடுதியையும் விலக்கத்தக்கதான்மையுடையதாம்.

கபுறுடைய ஹத்தில் நிரப்பமானதாவது நாலரைமுழ ஆழமும் ஒன்றரைமுழ அகலமுமுள்ளதாம்.

(592.) கபுறில் மய்யித்தை எவ்விதமாய் வைத்தல்வேண்டும்?

கபுரின் நடுவில் மய்யித்தை வைக்கக்கூடியதாகவும் கிபுலாப்பக்கம் சாய்ந்ததாகவும் ஓர் பிள்ளைக் குழிதோண்டி கபுறின் கால்மாட்டிலால் மய்யித்தின் தலையை வாங்கிப் பிள்ளைக் குழியில் வைத்தல்வேண்டும். இவ்வாறு மய்யித்தை வைத்தபின், மய்யித்தின்வலக்கன்னத்தைவிட்டுக் கபனைநீக்கி மண்ணில்சேர்த்துப் பச்சைச்செங்கல் முதலியதைத் தலைக்குத் தலையணையாக வைத்துக்கட்டுகளை அவிழ்த்து அப்பிள்ளைக் குழியைச் செங்கல் முதலியதால் அடைத்தல்வேண்டும், பலகை முதலியதாலு மடைக்கலாம். இவ்வாறு செய்தல் சுன்னத்தாம்.

கபுறில் மய்யித்தை கிபுலாவுக்கு நேரே முகந்திருப்பிவைத்தல் வாஜிபாம்.

கபுறில் மய்யித்தை இறக்கும்போது பிஸ்மில்லாகி அலாமில்லதி றசூலில்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லம் என்றோதுதல்வேண்டும்.

(593.) இரண்டு மய்யித்துக்களை ஒரு கபுறில் அடக்கலாமா?

மனைவியையும் புருஷனையும் நிக்காஹ் செய்ய ஹறாமானவர்களையுந் தவிர மற்ற இரண்டு மய்யித்துக்களை ஒருகபுறில் அடக்கம் பண்ணலாகாது அது ஹறாம்.

(594.) எவ்வெக் கருமங்களுக்காய் கபுறைத் தோண்டலாம்?

அடக்கஞ் செய்யப்பட்ட கபுறைச் சிலகருமங்களுக்காய்த் தோண்டலாம் அவைகளாவன குளிப்பாட்டாமல் அடக்கஞ்செய்தல், முன் அடக்கம்பண்ணப்பட்ட மய்யித்து முற்றாய் இறந்துபோகுதல், வம்பறியலா யெடுக்கப்பட்ட நிலத்தி லடக்கம்பண்ணுதல், பிறருடைய பொருளை முழுங்கியிருத்தல், கபுறில் மோதிரம் முதலிய பொருள் விழுதல், கிபுலாமாறி அடக்கப்பண்ணுதல், காபிரை ஹறத்தி லடக்குதல், அனந்தாகாரர் அம்மய்யித்து ஆணென்றும் பெண்ணென்றும் வாதித்தல், வயிற்றில் பிள்ளையிருக்க மரணித்து அடக்கியபின் அப்பிள்ளை தாயின் வயிற்றைக் கீறியெடுத்தால் ஹயாத்தாயிருக்குமெனும் நம்பிக்கையுண்டாகுதல், ஒருவன் தன் மனைவியின் வயிற்றிலிருக்கும் பிள்ளை ஆணாயிருந்தால் அவன் தலாக்கு என்று சொல்லியிருக்கையில் அவ்விஸ்திரி மரணித்துவிட்டாலதை யறியவேண்டியதாயிருக்க அறிய முன் அடக்கம்பண்ணுதல் ஆகியவைகளாம்.



இக்கருமங்களைத் தவிர வேறே எக்கருமத்துக்காவது கபுறைத் தோண்டுதல் ஹறாம்.

(595.) மய்யித்தை கபுறில் வைத்தபின் யாதுசெய்தல்வேண்டும்?

அருகே நிற்பவர்கள் மூன்றுதரம் மண் அள்ளிப்போடவேண்டும் முந்தின தரத்தில் மின்ஹா கலக்குனாகும் என்றும் இரண்டாம்தரத்தில் வபின்கா நுஈதுகும் என்றும் மூன்றுந் தரத்தில் தாறதன் உகுறா என்றும் ஓதி மண்போடுதல் சுன்னத்தாம்.

(596.) கபுறை எவ்வளவுக்கு உயர்த்துதல்வேண்டும்?

ஒருசாண் அளவு உயர்த்துவதும், முகடு கூட்டுவதும், கால்மாட்டிலுந் தலைமாட்டிலுங் கல்லு அல்லது பலகை முதலியதை நட்டுவதும், கபுறில் றைஹான் பூண்டு முதலியதை நட்டுவதும், தாய் பிள்ளைகளை ஒரேதானத்திற் சேர்ப்பதும் கபுறில் ஜலம் தெளிப்பதும் வேண்டும் அவைகள் சுன்னத்தாம்.

மய்யித்தை அடக்கம்பண்ணியபின் சகலரும் கபுறினண்டை தரித்து அம்மய்யித்துக்காக துஆக் கேட்பதும் குறுஆன் ஓதி துஆச்செய்வதும் சுன்னத்தாம்.

குறுஆனை முற்றாய் ஓதி கதியாச்செய்தல் அழகான கருமமாம்.

முகல்லபாகிய மய்யித்தாயிருந்தால் ஓர் ஆண்பிள்ளை தலைமாட்டுக்கு நேரேயிருந்து தல்கீன் ஓதுதல்வேண்டும் அது சுன்னத்தாம்.

தல்கீன் ஓதும்போது மற்றவர்கள் நிற்குதல் ஏற்றமாம்.

வகுபுச் செய்யப்பட்ட ஸ்தலங்களில் கபுறைச்சூழ மதில் கட்டுவதும் குப்பா முதலிய கட்டிடங் கட்டுவதும் ஹறாம்.

(தல்கீன்.)

இத்தேசங்களில் பெரும்பான்மையோர் ஓதிவரும்தல்கீனாவது, வாயிலாக இல்லல்லாஹு முகம்மதுற் றசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் குல்லுமன் அலைஹா, பானின், வயபுகா, வஜ்கு, றப்பிகதுல்ஜலாலி, வல்இக்றாம். குல்லுநபுசின் தாயிகதில், மவுத்து, வஇன்னமா துவப்பவுன உஜூறகும், யவுமல்கியாமா, பமன் சுசிக அனின்னாரி, வஉதுகிலல்ஜன்னத பகதுபாச வமல், ஹயாத்துத்துன்யா, இல்லா மதாஉல், குறூர், யாஅபுதல்லா, ஹி புனுஅமதில்லாஹி, உதுகுரில் அகுதல்லதீ குருஜ்தஅலைஹி, மினா ரித்துன்யா, வசஹாத்தஅலைகி, இலாதாரில், ஆகிறா, குத்தபீலாயாத்தி கதுக்கது, அன்லாயிலாக இல்லல்லாஹு வதுக்கது அன்ன முகம் மதற்றசூலுல்லாஹி வதுக்கது அன்னல், மவுத்தஹக்கு, வஅன்னல் கபுறஹக்கு வஅன்னஸ்ஸுஆலஹக்கு வஅன்ன முன்கறன்வநகீறன் வமஅ அலைது ஹூமாஹக்கு வஅன்னல் ஜவாபஹக்கு வஅன்னல் பகுத்ஹக்கு வஅன்னல் ஹிசாபஹக்கு வஅன்னல்மீசானஹக்கு வஅன்னஸ்ஸிறாதஹக்கு வஅன்னல் ஜன்னதஹக்கு வஅன்னன்னாறஹக்கு வஅன்னஷ்பாஅத றசூலில்லாஹி சல்லல்லாஹு அலைஹிவசல்லம ஹக்கு, வஅன்னஸ்ஸாஅத ஆதியதுன் லாறைப பீஹா வஅன்னல்லாஹ யபுஅது மன்பில்குபூர் அல்ஆன கதுகிறு த்த்டைன அதுபாகித்தம் வபீமுதல்லதில் ஹல்கா வபைனஅசாகி ரில்மவுதாவஇதாஜாஅகல் மலகானில்கரீமானில் அனீமானில் ஹாயிலானில் முஅக்கலாக்கிபிக, முன்கறன், வநகீறன், அலைஹிமா, மினல்லாஹில்ஸலாம், புஅய்கலாக, வஅஜ்லசாக, வலாயறூஆக, வலாயகூலாக, மஇதா அஅலாக, மன்றப்புக, வமன்நபியுக, வமா தீனுக, வமாகிபுலதுக, வமாஇமாமுக, வயன், இகுவானுக, பகுல்லகுமா, பிலிசானின், பகீகின், தல்கின், தல்கின், பிலாஜசஇன், வலா கலஉ, அல்லாகுறப்பீ, வமுகம்மதுன், நபிய்யி, வல்இஸ்லாமுதீனி, வல்கஃபது, கிபுலதீ, வல்குர்ஆனு, இமாமீ, வல்முஸ்லிமீன, இகுவானீ, றப்பியல்லாகு லாயிலாஹ இல்லல்லாஹு அலைஹி தவக்கல்து, வஹுவறப்புல் அறுஷில்அளீம், அலாத்ராலிக, ஹையீத, வ அலைஹிமுத்த, வஅலைஹிதபுஅது இன்சா அல்லாகு வஅக்த, மினல் ஆமினீன், தப்பதகல்லாகு பில்கவுலில், தாபிது, யுதப்பிதுல்லா குல்லதீன, ஆமனூ பில்கவுலில்தாபிது, பில்ஹயாதித்துன்யாவபில் ஆகிறா, யாஅய்யது, கன்னபுசல், முதுமஇன்னா, இறுஜிஈ, இலா றப்பிகி றாளியதன், மறுளிய்யா, பதுகுலீ, பீஇபாதீ, வதுகுலீ, ஜன்னதீ, இன்னல்லாஹ, வமலாயிகதஹு, யுசல்லூன அலன், நபிய்யி யாஅய்யுஹல்லதீன, ஆமனூசல்லூ அலைஹிவசல்லி மூதஸ்லீமா, தகுவாகும்பீகா, சுபுஹானகல்லாகும்ம வதஹிய்யதகும் பீகா சலாம் வஆகிறு தகுவாகும் அனில்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் என்பதாம்.



சிறுவர்களை அடக்கம்பண்ணியபின் பாத்திஹா ஓதி ஓர் துஆ ஓதுதல்வேண்டும் அதாவது அல்லாகும்ம வசுர்தல், திபிஹல்லதீ லம்யபுஹுகில், அஹ்லாம, வலம்யஜ்ரி, அலைகில் அஹ்லாம், கலக் றூயிஇறுததிக, வதவப்பைதஹு, பிறஹ்மதிக, அல்லாகும்மஜ்அல்கு, பறதன், விஅபவைஹி, வசலபன், வதுகுறன், வஇலதன், வகுதிபாறன், வஷபீஅன், வதக்கில்பிஹி, மவாசீனஹுமா, வஅபுரிகுஸ்ஸபுறஅலா, குலூபிஹிமா, வலாதபுதின்ஹுமா, பகுதகு,வலா துஹ்ரிம்குமா அஜ்றகு என்பதாம்.

(597.) பிசபிலில் ஷஹீதானவர்களைக் குளிப்பாட்டுதல்வேண்டுமா?

அவர்களைக் குளிப்பாட்டுவதும் தொழுவிப்பதும் ஹறாம்.

அவர்களின் சரீரத்தைவிட்டு இரத்தத்தை நீக்குதலும் ஹறாமாம்.

ஷஹீதானவர்களுக்குக் கபன்செய்ய அவர்களின் இரத்தம் தோய்ந்த உடுப்பையே ஏற்றமாம்.

மீசானில் காரணமின்றி பன்னிரண்டுகட்டத்தார்கள் தவாபால் சேர்ந்து கொள்ளுவார்கள். அவர்களாவன அநியாயமாய்க் கொலைசெய்யப்பட்டவர்கள், வயிற்றுநோயால் மரணித்தவர்கள், கொள்ளைக்குத்து வியாதியால் மரணித்தவர்கள், தாய்தகப்பன் மனைவி [illegible] முதலியவர்களை விட்டுத் தனித்த [illegible] இருக்கும்போது மரணித்தவர்கள், நெருப்பினால் [illegible] மரணித்த [illegible] ஜலத்தினால் வாதைப்பட்டு மரணித்த [illegible], வீடு முதலியவை இடிந்துவிழுதலால் மரணித்தவர்கள், பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் தீண்டலால் மரணித்தவர்கள், பிள்ளைப் பெறும் வருத்தத்தினால் மரணித்தவர்கள், [illegible] மரணித்தவர்கள், இல்மைப்படிக்கும் காலத்தில் மரணித்தவர்கள், இஷ்கினால் மரணித்தவர்கள், ஆகியவர்களாம்.

கடலில் கப்பல் முதலியவைகளில் மவுத்தான மய்யித்தை அடக்கம்பண்ணக் கரையிடுதல் வருத்தமாயிருந்தால் சகல பறுளுகளையும் நடத்தி இரண்டு பலகை அல்லது இரண்டு கம்புக்கிடையில் வைத்துக் கட்டியிறக்குதல்வேண்டும்.

(தஃஸியத்து.)

(598.) தஃஸியத்து எனும் சொல்லின் பொருள்யாது?

சலிப்பாற்றுதல் என்பதாம்.

சகல வியாகுலமுடையவர்களையும் சலிப்பாற்றுதல் சுன்னத்தாம். கடிதம் ஆள்முதலியவைகளை அனுப்புதலாலும் சலிப்பாற்றுதலின் சுன்னத் துண்டாகும்.

ஓர் மய்யித்தை அடக்கம்பண்ணி மூன்றுநாள் சென்றபின் தஃஸியத்துச் செய்தல் மக்றூகாம்.

மய்யித்தடக்கும்போது (காயிபா) யிருந்தவன் எவ்வளவுகாலஞ் சென்றபின் வந்தாலும் தஃசிய்யத்துச் செய்யலாம்.

முகல்லபாகிய மய்யித்துக்காக தஃசிய்யத்துச் செய்யும்போது அஃளமல்லாஹு அஜ்றகவஅஃசன அசாக்க வஃகபறலி மய்யித்திக என்றும் குழந்தையாகிய மய்யித்துக்காக தஃசிய்யத்துச் செய்யும்போது அஃளமல்லாஹு அஜ்றகவ அஃசன அசாக்க வஜஅலஹு லக பறதன் வஅஃளமஹா அலைக என்றும் ஓதுதல்வேண்டும்.

மய்யித்தின் கூட்டத்தார்களும் உறுத்தார்களின் அயலிலிருப்பவர்களும் தூரத்திலிருக்கும் இனத்தவர்களும் (முஹப்பத்து) நேட்பாளர்களும் அவ்வீட்டாளிக்கு ஓரிரவைக்கும் பகலைக்கும் தக்க போசனம் கொண்டுபோய்க் கொடுப்பதும் போஷிக்கும்படி அலட்டுவதும் சுன்னத்தாம்.

ஒப்பாரி சொல்பவர்களுக்குக் கொடுத்தல் ஹறாம்.

(599.) மய்யித்தைப்பற்றி ஒப்பாரிசொல்லுவதால் அம்மய்யித்துக்கு வேதனை உண்டாகுமா?

ஒப்பாரிசொல்லும்படி வசிய்யத்துச்செய்து அதைவிட்டுத் தௌபாச்செய்யாமல் மவுத்தானால் மய்யித்துக்கு வேதனையுண்டாகும்.

ஒப்பாரி சொல்லுதல் ஹறாம்.

கன்னத்திலும் நெஞ்சிலும் அடித்துக்கொள்ளுதல், உடையைக் கிழித்தல், வழக்கமில்லா வஸ்திரந் தரித்தல், சாம்பர் மண் ஆகியவைகளை வாரித் தலையிற் போட்டுக்கொள்ளுதல், கருமைநிறமான வஸ்திரம் அங்கி முதலியவைகளை அணிதல், வழக்கமாய்ப் பாதரட்சை அணிபவர்கள் அணியாதிருத்தல், ஆகியவைகளெல்லாம் ஒப்பாரியிலுள்ளதாம்.

சத்தத்தை உயர்த்தாமல் அழுதலாமாயிருந்தாலும் அதைவிடுதலேற்றமாம்.

ஒருவருக்காவது மூன்றுநாளுக்கதிகம் சலிப்பது ஜாயிசாகாது மனைவி புருஷன்பேரில் இத்தாத் திருமணவும் சலிக்கலாம்.

ஆலிமாகிய ஒருவர் மவுத்தானால் யாவரும் சலிப்பது சுன்னத்தாம்.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் உபாத்துக்காகச் சலிப்பது எல்லா மூமின்கள்பேரிலும் வாஜிபாம். மாதாபிதா மனைவி புருஷன் முதலியவர்களிலொருவர் மரணித்தால் மற்றவர்கள் எவ்விதம் சலிப்பார்களோ அதைக்காண எங்களை நேர்வழிகாட்டும் நாயகமவர்களின் உபாத்தைப்பற்றி அதிகமாய்ச் சலித்தல்வேண்டும்.



(600.) கபுறை சியாறத்துச்செய்தல் வேண்டுமா?

கபுறை சியாறத்துச்செய்தல் ஆடவர்களுக்கு சுன்னத்து பெண்களுக்கு மக்றூகாம்.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் றவ்ளா ஷரீபை சியாறத்துச்செய்தல் ஆடவர்கள் ஸ்திரிகளடங்கலுக்கும் சுன்னத்து முஅக்கதாவாம்.

நபிமார்களுடைய கபுறை சியாறத்துச் செய்வதும் பெரியோர்களின் கபுறை சியாறத்துச்செய்வதும் ஆண்பெண் அடங்கலுக்கும் சுன்னத்து என்பது சிலருடைய சொல்லாம்.

வியாழக்கிழமை இரவு வெள்ளிக்கிழமை இரவு திங்கட்கிழமை இரவு என்பவைகளே கபுறை சியாறத்துச் செய்வதற்கு ஏற்றமானதாவுமாம்.

குறுஆன் ஷரீபில் சூறத்து யாசீனும், பாத்திஹாவும், ஆயத்துல் குர்சியும், சூறத்துல் இக்லாசும், சூறத்துல்பலகும், சூறத்துல் நாசியும், ஓதி கபுறாளிகளுக்குப் பொதுவாய்த்துஆ ஓதுதல்வேண்டும்.

பெரும்பான்மையோ ரோதிவரும் துஆவாவது அல்லாஹும்ம றப்பல் அறுவாஹில் ஆலியா வல்அஜ்சாதல் பாலியா வல்இளாமன் னகிறதி அல்லதீ கறஜத்மினத்துன்யா வகியபிக முஃமினதுன் வ அன்ஸில் அலைஹா றவ்ஹன்மின்க இன்திக வசலாமன் மின்னி அல்லாஹும் மவல் குபூறகும் அன்னதன்மின்ரியாளில் ஜின்னதி வலா தஜ்அல் குபூறகும் ஹுபுறதன் மின்ஹுபுரின் நீறான் அல்லாஹும்ம அவுசில்தவாப மா கறஃனாகு இலா அஹ்லில் கபூறி அஸ்சலாமு அலைக்கும் யா அஹ்லல் குபூறி மினல் முஃமினீன வல்முஃமினாதி வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன எனபதாம்.

கபுறாளிகள் அடங்கலுக்கும் பொதுவாய் துஆக்கேட்கும்போது கபுறுகள் பிறமேயிருந்தாலும் கிபுலாவை முன்னோக்கி ஓதுதல் வேண்டும்.

பெற்றோர் முதலிய குறிப்பானவர்களுக்கு துஆச்செய்யும்போது அவர்களின் முகத்தளவில் முன்னோக்கி நின்றோதுதல்வேண்டும்.

கபுறாளிகள்பேரில் பொதுவாய் சலாம்சொல்லுவதும் குறிப்பானவர்களைத் தனதாக்கி சலாம்சொல்லுவதும் சுன்னத்தாம்.

பெற்றோர் உஸ்தாதுமார்களுடைய கபுறுக்குமுன்னே ஹாயாத்தாயிருக்கும்போது எவ்விதம் உபசாரம் செய்வோமோ அவ்விதமே உபசாரஞ் செய்தல்வேண்டும்.

## இஸ்லாம் மார்க்கத்தின் இரண்டாம் எடுப்பைப் பற்றியவைகள்

முற்றிற்று.

# கிதாபுஸ்ஸகாத்தி.

## அல்பாபுல் அவ்வலு பீபயானிஸ் ஸகாதி.

(முதலாம்பாபு சகாத்தைப்பற்றியது.)

## அல்பசுலுல் அவ்வலு பீபாபிஸ் ஸகாதி.

## க - ம் பிரிவு.

(601.) இஸ்லாம் மார்க்கத்தின் மூன்றும் எடுப்பாவ தியாது?

சகாத்துக் கொடுப்பதாம்.

(602.) சகாத்தாவ தியாது?

(மால்) திரவியத்தைத்தொட்டும் (பதன்) தேகத்தைத்தொட்டும் பின்வருமாறு பிறத்திப்படுத்தப்பட்டதை ஷறஇல் சகாத்தென்பார்கள்.

ஹிஜுறத்து இரண்டாம் வருடத்தில் பித்ருக்கொடுப்பதை பறுக்கியபின் சகாத்துக்கொடுத்தல் பறுலாக்கப்பட்டதாம்.

முஸ்லிமாகிய ஹுர்றாகிய ஆண்பெண் அடங்கலும் பின்வருமாறுள்ள ஆஸ்திகளில் அதற்குக்குறித்த தொகைவைத்திருந்தால் சகாத்துக்கொடுப்பது வாஜிபாம்.

(603.) எவ்வெவ்வகையான ஆஸ்தியில் சகாத்து வாஜிபாகும்?

பொன், வெள்ளி, ஒட்டகம், மாடு, ஆடு, கோதுமை, நெல், முதலிய வித்துக்கள் ஈத்தம்பழம், திராட்சப்பழம், எனும் எட்டுவகை ஆஸ்தியிலும் சகாத்துக்கொடுத்தல் வேண்டும் அது வாஜிபாம்.

604.) பொன் வெள்ளி எனும் இருவகைப் பொருளிலும் எவ்வளவு வைத்திருப்பவர்கள் சகாத்துக் கொடுத்தல் வேண்டும்?

சுத்தமான இருபது களஞ்சிப்பொன் நிரப்பமான ஒரு வருடக்காலம் இருந்தால் அரைக்களஞ்சிப்பொன் சகாத்துக் கொடுத்தல் வேண்டும்.

பொன்னில் மேற்சொல்லிய இருபது களஞ்சிக்கு எவ்வளவு அதிகப்பட்டாலும் அவ்வளவுக்கும் இருபது களஞ்சிக்கு அரைக்களஞ்சிவீதம் கொடுத்தல் வேண்டும்.

நிரப்பமான ஒருவருடக்காலம் இருநூறு வெள்ளிக்காசு வைத்திருந்தால் ஐந்துவெள்ளிக்காசு சகாத்துக் கொடுத்தல் வேண்டும்.



வெள்ளியில் மேற்சொல்லிய இருநூறு திருகத்னைக்காண எவ்வளவு அதிகப்பட்டாலும் அவ்வளவுக்கும் இருநூற்றுக்கு ஐந்துவீதம் கொடுத்தல்வேண்டும்.

கடப்பின்றிய ஆபாரணத்தில் சகாத்து வாஜிபாகாது.

வருடக்கடைசியில் இருநூறிருக்கம் பெறுமதியுள்ளவர்த்தகச்சரக்கு வைத்திருப்பவர்கள் இருநூற்றுக்குஐந்துவீதம்சகாத்துக்கொடுத்தல் வேண்டும் (அதுமுலாம்).

இருநூற்றுக்கு ஐந்து எனும் எண்ணின் சின்னம் 40-க்குஒன்று என்பதாம்.

சிதானமான எழுபத்திரண்டு தேர்ல் கோதுமை நிறைகொண்டது ஓர் களஞ்சியாம்.

ஒன்பதே எட்டு மாக் கோதுமை நிறைகொண்டது ஓர் திருக்மாம் அந்தவீதப்படி எழுகளஞ்சிநிறைகொண்டது 10-பத்துவெள்ளிக்காசாம்.

(605.) எத்தனை ஒட்டகமிருந்தால் சகாத்துவாஜிபாகும்?

ஐந்து அல்லது ஐந்துக்கதிகமான ஒட்டகங்களிருந்தால் சகாத்துவாஜிபாகும்.

ஐந்து ஒட்டகமிருந்தால் ஒரு வயதையுடையவோர் செம்மறியாடு அல்லது இரண்டு வயதையுடையவோர் வெள்ளாடு கொடுத்தல் வேண்டும்.

அப்படியே பத்து ஒட்டகத்துக்கு இரண்டு ஆடும், பதினைந்துக்கு மூன்று ஆடும் இருபதுக்கு நான்கு ஆடுமாம்.

இருபத்தைந்து ஒட்டகமிருந்தால் ஒரு வயதையுடையவோர் பெட்டை ஒட்டகமும், முப்பத்தாறு ஒட்டகமிருந்தால் இரண்டு வயதையுடையவோர் ஒட்டகமும், நாற்பத்தாறு ஒட்டகமிருந்தால் மூன்று வயதையுடையவோர் ஒட்டகமும், அறுபத்தொரு ஒட்டகமிருந்தால் நான்கு வயதையுடையவோர் ஒட்டகமும், எழுபத்தாறு ஒட்டகமிருந்தால் இரண்டு வயதையுடைய இரண்டு ஒட்டகங்களும், தொண்ணூற்றொரு ஒட்டகமிருந்தால் மூன்றுவயதையுடைய இரண்டு ஒட்டகங்களும், நூற்றிருபத்தொரு ஒட்டகமிருந்தால் இரண்டு வயதையுடைய மூன்று ஒட்டகங்களும் கொடுத்தல் வேண்டும்.

மேலே சொல்லிய பிந்தின தொகைக்கு அதிகமாயிருந்தால் நாற்பதுக்கு இரண்டுவயதையுடைய பெண்ணொட்டகம் ஒவ்வொன்று வீதமாகவும் ஐம்பதுக்கு மூன்று வயதையுடைய ஒவ்வொன்று வீதமாகவும் கொடுத்தல் வேண்டுமாம்.

(606.) எத்தனை மாடு வைத்திருந்தால் சகாத்துக் கொடுப்பது வாஜிபாகும்?

முப்பது அல்லது முப்பதுக்கதிகமான மாடுகள் இருந்தால் சகாத்துக்கொடுப்பது வாஜிபாம்.

முப்பது மாடு இருந்தால் ஒரு வயதையுடைய வோர் காளையும் நாற்பது இருந்தால் இரண்டு வயதை யுடைய வோர் கடாரியும் அறுபது இருந்தால் ஒரு வயதை யுடைய இரண்டு காளையும் கொடுத்தல் வேண்டும்.

மேற்சொல்லிய தொகைக்கு அதிகமாய் எவ்வள விருந்தாலும் ஒவ்வொரு முப்பதுக்கும் ஒவ்வொரு காளைவீதமும் ஒவ்வொரு நாற்பதுக்கு ஒவ்வொரு இரண்டு வயதை யுடைய கடாரிவீதமும் கொடுத்தல் வேண்டும்.

(607.) எத்தனை ஆடு இருந்தால் சகாத்து வாஜிபாகும்?

நாற்பது அல்லது நாற்பதுக்கதிகமான ஆடுகளிருந்தால் சகாத்து வாஜிபாகும்.

நாற்பது ஆடுக ளிருந்தால் ஓர் ஆடும் நூற்றிருபத்தொன்றிருந்தால் இரண்டு ஆடும் இருநூற்றொன் றிருந்தால் மூன்று ஆடும் நானூறு இருந்தால் நாலு ஆடும் கொடுத்தல் வேண்டும்.

மேற்சொல்லிய பிந்திய தொகைக்கதிகமாய் எவ்வள விருந்தாலும் ஒவ்வொரு நூற்றுக்கும் ஒவ்வொரு வயதையுடைய செம்மறியாடொவ்வொன்று அல்லது இரண்டு வயதை யுடைய வெள்ளாடொவ்வொன்று வீதம் கொடுத்தல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட தொகைகளின் இரண்டு தொகைக்கிடையிலுள்ள ஒவ்வோரெண்களும் முந்தின தொகையிற் சேர்ந்ததாம்.

(608.) கோதுமை நெல் முதலிய வித்துக்களில் எவ்வளவு வைத்திருப்பவர்கள் சகாத்துக் கொடுப்பது வாஜிபாகும்?

வைக்கல் சாவி முதலியவைகளில்லாத ஐந்து கோட்டை அல்லது அதற்கதிகமானவைக ளிருந்தால் சகாத்துக் கொடுப்பது வாஜிபாம்.

கோதுமை - நெல் - சோளம் - மொச்சை - பயறு - கேப்பை - கம்பு - வரகு - இறுங்கு - தினை - காடைக் கண்ணி - முத்து - உளுந்து - கடலை ஆகியவைகளில் ஒவ்வொன்றிலும் ஐந்துகோட்டை யிருந்தால் பத்துக்கு ஒன்று வீதம் சகாத்துக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வோர் போகத்திலு மப்படியே.



(609.) ஈத்தம்பழம் திராட்சப்பழம் எனும் பழவருக்கங்கள் எவ்வளவு வைத்திருப்பவர்கள் சகாத்துக்கொடுப்பது வாஜிபாகும்?

ஐந்து கோட்டை அல்லது அதற்கதிகமானவை வைத்திருப்பவர்கள் சகாத்துக்கொடுப்பது வாஜிபாகும்.

ஈத்தம்பழம்-திராட்சப்பழம் என்பவைகளில் ஒவ்வொன்றிலும் சாவிதொலி இல்லாத ஐந்து கோட்டையிருந்தால் பத்துக்கு ஒன்றுவீதம் கொடுத்தல் வேண்டும், ஒவ்வோர் போகத்திலு மப்படியே.

அறுபது மரக்கால் கொண்டது ஓர் கோட்டையாம் நிதானமான கையினால் இரண்டுகைகிரம்பிய நான்கு சிறங்கைகள் ஓர் மரக்காலாம்.

(610.) நீர்வரி முதலிய செலவுகள் செய்து விளைவித்[illegible] சகாத்துக்கொடுத்தல் வேண்டுமா?

608-ம் இலக்கவினவின் விடையிலும் 609-ம் இலக்கவினவின் விடையிலும் சொல்லப்பட்டவைகளை விளைவிப்பதற்காய் நீர் வரி முதலிய செலவுகள் செய்திருந்தால் இருபதுக் கொன்றுவீதம் கொடுத்தல் வேண்டும்.

மழையினாலும் [illegible] விளைந்தவைகளுக்குத் தக்[illegible] வின படி [illegible]

## அல்பசுலுல் தானி பீபாபிஸ் ஸகாத்தி.

## ௨-ம் பிரிவு.

(611.) எத்தனை ஷறுத்துக்களைக் கொண்டு சகாத்து இருபதும்?

சகாத்தை இறுக்கிறேன் என்று நிய்யத்துவைத்தல் சகா[illegible] பெற்றுக்கொள்ளத் தக்கவர்களுக்குக் கொடுத்தல், எனும் இரண்டு ஷறுத்துக்களைக்கொண்டு சகாத்து இறுபடுமாம்.

தன் திரவியத்திலிருந்து சகாத்தைப் பிரிக்கும்போது அல்லது வகீலிடம் ஒப்பிக்கும்போது நிய்யத்து வைத்தல்வேண்டும். இது என்னுடைய பொருளின் சகாத்தாயிருக்கும் என்று நிய்யத்து வைக்கவேண்டுமே யன்றி அப்படி வாயினாற் சொல்லுதல் ஷறுத்தல்ல.

தன் திரவியத்திலிருந்து சகாத்தைப் பிரிக்கும்போது அல்லது வகீலிடம் ஒப்பிக்கும்போது நிய்யத்து வைக்காமல் பொருளடங்கலையுங் கொடுத்தாலும் சகாத்திறு படாது.

வருடம் முடிந்தவுடன் திரவியமும் முஸ்தஹிக்கீன்களும் ஹாஜிருயிருக்க சகாத்துக்கொடுக்காமல் பிற்படுத்துதல் ஹறாம் அவ்வாறு பிற்படுத்தியபின் அப்பொருள் சேதமடைந்தாலும் சகாத்து அவன்பேரிற் கடனாம்.

(612.) சகாத்துவாங்கப் பாத்திபமானவர்க ளியாவர்?

மேன்மையாகிய குறுஆன் ஷரீபிற் சொல்லியபடி பகீர்கள், மிஸ்கீன்கள், சகாத்தை அறவாக்கும் வேலைக்காரர், புதிதாய் இஸ்லாமானவர்கள் அடிமைகள், கடன்காரர் பீசபீல்காரர் முசாபிரீன்கள் எனும் [illegible]களுமாம்.

[illegible] அழைக்கப்படும்.

இந்த எட்டுவகையினரும் ஹாஜிருயிருந்தால் [illegible]க்கும் கொடுத்தல்வேண்டும் இவர்களில் ஒவ்வொரு வகையினர்களிலும் மும்மூன்று பெயர்களுக்குக் குறையாமல் கொடுப்பது வாஜிபு.

(613.) எவ்விதமான ஸ்திதியினரை பகீரென்று சொல்லலாம்?

தனக்கும் தான் செலவிட வேண்டியவர்களுக்கும் செலவுக்குத்தக்கவருமதியாக் கூடிய சம்பாத்தியமும் பொருளும் இல்லாதவனை பகீரென்று சொல்லப்படும் [illegible]

வாசம்பண்ண வீடும் வஸ்திரம் முதலியவைகளும் வைத்திருப்பதால் பகீரெனும் பெயர் நீங்காது.

(614.) மிஸ்கீன் எனும் நாமத்தா லழைக்கத்தக்கவர்க ளியாவர்?

தனக்கும் தன்செலவைப் பெற்றுக்கொள்பவர்களுக்கும் செலவுக்குக் காணுதமுதல் அல்லது சம்பாத்தியம் உடையவனே மிஸ்கீனென் றழைக்கத் தக்கவனும்.

(615.) சகாத்துவாங்கும் வேலைக்காரர்க ளியார்?

சகாத்து வாஜிபானவர்களிடம் சகாத்தை அறவாக்கி ஒன்றாய்ச் சேர்த்து முஸ்தஹிக்கின்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்காய் அவ்வூர் இமாமால் நியமிக்கப்பட்டவர்களாம்.

அவர்களை ஆமிலீன்களென்று சொல்லுவார்கள்.

(616.) புதிய இஸ்லாம் எனப்படுபவர்க ளியாவர்?

முன் வேறே மார்க்கத்திலிருந்து நீனுல் இஸ்லாம் எனும் மெய்ம் மார்க்கத்தி லானவர்களாம்.



அவர்களின் நிய்யத்துப் பிலமற்றதா யிருப்பதற்காகவும் வேறே மார்க்கங்களுக்கும் எங்களுடைய மார்க்கத்திக்கு மிடையிலுள்ள சிறப்பையும் பிரித்துக் காட்டுவதற்காகவும் புதிய இஸ்லாமானவர்களுக்கு சகாத்துக் கொடுத்தல் வேண்டும்.

(617.) அடிமைகளில் எத்தன்மையுடையவர்களுக்கு சகாத்துக் கொடுத்தல் வேண்டும்?

உருமைப் பெறுவதற்காய்த் தன் செய்யிதுக்கு இவ்வளவு காலத்தில் இன்னதொகை தருவேனென்று சீட்டெழுதிக்கொடுத்து அச்சீட்டிற் சொல்லியதொகை கொடுக்க ஏலாத அடிமைகளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

அவ்வடிமைகளின் உத்தரவோடு சீட்டுப்பெற்ற செய்யிதிடம் கொடுத்தாலும் அவர்களுக்குக் கொடுத்ததாகும்.

(618.) கடன்காரரில் சகாத்துவாங்கப் பாத்திபமானவர்கள் யாவர்?

தீமையில்லாத கருமத்துக்காய்க் கடன்பட்டு அதை இறுக்க ஏலாதவர்களாம்.

(619.) முஸ்தஹிக்கீன்களில் 7-ம் 8-ம் வகையினர் யாவர்?

பீசபீல் காரரும் முசாபிரீன்களுமாம்.

குறித்த வோரிடத்தை நாடாமல் பிரையாணஞ் செய்பவர்களுக்கும் விதிவிலக்கான கருமத்துக்காகப் பிரையாணஞ்செய்பவர்களுக்கும் கொடுத்தலாகாது.

(620.) ஹாஷிமிக் கிளையாருக்கு சகாத்துக் கொடுக்கலாமா?

ஹாஷிமிக் கிளையாருக்கு மாத்திரமல்ல முத்தலிப்புக் கிளையாருக்கும் அவர்களின் உருமைக்காரருக்கும் கொடுக்கப்படாது கொடுத்தால் சகாத்து இறுபடாது.

அறுபதுவருடக்காலம் போஷிக்கத்தக்க உணவுக்கு ஐவேசுள்ள சிமான்களுக்கும் காபிறுக்கும் 617-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லிய அடிமையல்லாத மற்ற அடிமைகளுக்கும் சமமான சாப்பாட்டுக்குத்தக்க நிதியுள்ள பெற்றார் புருடன் மக்களாகியவர்களின் செலவால் போதுமாக்கப்பட்டவர்களுக்கும் கொடுத்தலால் சகாத்து இறுபடாது.

## அல்பாபுல்தானீ பீபயானில் பித்றதி வஸ்சதகாத்தி.

(இரண்டாம்பாடு பித்றவையும் சதகாவையும் பற்றியது.)

(621.) ஒவ்வொருவரும் பித்றாக்கொடுக்கவேண்டுமா?

முஸ்லிமாகிய ஹுர்றாகிய ஒவ்வொருவரும் தனக்கும் தன்பேரில் நபகாவிதியானவர்களுக்குமாக பித்றாக்கொடுப்பது பறுலாம்.

(622.) பித்றுக்கொடுப்பது எப்போதில் ஹலாலாகும்?

ஒவ்வொரு வருடமும் றமலான்மாசந் தீர்ந்து சவ்வால்மாசம் புகுந்தும்போதில் ஹலாலாகும். றமலானுடைய துவக்கந் தொட்டும் பித்றுக்கொடுக்கலாம்.

நோன்புப் பெருநாட் தொழுகை தொழுததின் பின்னும் கொடுக்காமல் பிற்படுத்துதல் மக்றூகாம்.

(623.) ஒவ்வொருவரும் எவ்வளவு தானியம் கொடுத்தல்வேண்டும்?

நான்கு முத்து தானியம் முஸ்தஹிக்கின்களுக்குக் கொடுத்தல்வேண்டும் அது பறுலாம்.

பித்றுக்கொடுக்கப்படுந் தானியம் கொடுப்பவனிருக்குமூரில் பெரும்பாலு முபயோகிக்கப்படுவதா யிருத்தல் வேண்டும்.

(624.) நோன்புப் பெருநாளிரவில் பிறந்த பிள்ளைக்கும் அவ்வருடத்தில் கொடுக்கவேண்டிய பித்றுக் கொடுத்தல் வேண்டுமா?

அவ்விரவில் பிறந்த பிள்ளைக்காகவும் அவ்விரவில் கலியாணம் முடிக்கப்பட்ட ஸ்திரிக்காகவும் அவ்விரவில் வாங்கப்பட்ட அடிமைக்காகவும் பித்றுக்கொடுத்தல் வாஜிபாக்கப்படவில்லை.

(625.) எவ்வித ஸ்திதியையுடையவர்கள் பித்றுக் கொடுத்தல் வேண்டும்?

நோன்புப் பெருநாளிரவிலும் பகலிலும் தனக்கும் தான் நபிகாக்கொடுக்கவேண்டியவர்களுக்கும் செலவிட்டு மிஞ்சியதும் தான் கொடுக்கவேண்டிய கடனுக்கும் வாசம்பண்ணும் வீட்டுக்கும் தன் அடிமைக்கும் வாகனத்துக்கும் செலவிட்டு மிஞ்சியதும் அல்லது மிஞ்சத்தக்கதுமான பொருளுள்ளவர்கள் பித்றுக்கொடுக்கத்தக்க ஸ்திதியை உடையவர்களாம்.

## (சதகாவைப் பற்றியது.)

(626.) சதகாவென்பதின் பொருள்யாது?

கொடை என்பதாம்.

அது சீமான்கள் மாத்திரமல்ல வறியவர்களும் கொடுக்கலாம்.

ஒவ்வொருநாளும் கொஞ்சமாயினும் மனிதர்களுக்குத் தேவையானதைக்கொண்டு சதகாக்கொடுத்தல் சுன்னத்தாம் அதை இரகசியமாய்க் கொடுத்தல் நன்று.

இரகசியமாய்க் கொடுப்பது பிரசித்தமாய்க் கொடுப்பதைக்காண அபுழலாம்.



(627.) எவர்களுக்கு சதகாக்கொடுத்தல் மிகஏற்றமாகும்?

அகுறபுகளுக்கும், பின்பு அயலாருக்கும் பின்பு மஹ்றமிகளுக்குமாம், மஹ்றமிகளில் முந்தினவர்கள் பிக்கின் முடுகுத லுடையவர்களைக்காண ஏற்றமானவர்களாம். பால்குடியாலும் சம்பந்தத்தாலும் மஹ்றமாவார்கள்.

பால்குடித்தலால் ஹறுமானவர்கள் சம்பந்தத்தால் ஹறுமானவர்களைக்காண ஏற்றமாம்.

அகுறபுகளுக்குப்பின் அயலாரே ஏற்றமானவர்கள் அகுறபுத்தன்மையும் அயலனுடைய தன்மையும் ஒன்றாய்ச் சேர்ந்தவர்கள் தனித்த வோர்தன்மையை உடையவர்களைக்காண ஏற்றமானவர்களாம்.

(628.) எவ்வேளையில் சதகாக்கொடுத்தல் வேண்டும்?

எவ்வேளையிலும் சதகாக்கொடுக்கலாம். நோயாளியா யிருக்கும் வேளையில் சதகாக்கொடுத்தல் நன்று. அது சுன்னத்தாம்.

றமலான் மாசத்திலும், றமலான் மாசத்தின் கடைசிப்பத்திலும், துல்ஹஜ்ஜிமாசமுந்தின பத்திலும், இரண்டு பெருநாட்களிலும், ஆசுறாவிலும், அறபாத்திலும், வெள்ளிக்கிழமை இரவிலும், கிரகணம் பிடித் திருக்கும்போதும், சதகாக்கொடுத்தல் அவுலாவாம்.

றமலான் ஆசுறா ஆகியவைகளில் தன் குடும்பத்தார்கள். இனத்தார்கள் பேரில் விஸ்தீரமாய்ச் செலவுசெய்தல் சுன்னத்தாம்.

உலமாக்களுக்கும் இல்மைப்படிப்பவர்களுக்கும் சதகாக்கொடுத்தல் ஒன்றுக்கு 70000-எழுபதாயிரம் வரையில் அதிகப்படுத்துமாம்.

(629.) சதகாக்கொடுப்பதற்கு மிக உத்தம ஸ்தானம் யாது?

மக்காவும் மதீனாவு மாம், மக்காவிலும் மதீனாவிலும் சதகாக்கொடுத்தல் மற்றஇடங்களில் சதகாக்கொடுப்பதைக்காண உத்தமமாம்.

(630.) ஹறாமும் ஹலாலும்கலந்த பொருளில் நின்றும் சதகாக் கொடுத்தா லதைவாங்கலாமா?

அவ்விதத் திரவியக்காரன் கொடுப்பதைவாங்குதல் மக்றூகாம். ஹறுமென்பாருமுளர்.

சகாத்துக்கொடுக்கும்போதும் சதகாக் கொடுக்கும்போதும் றப்பனா தகப்பல் மின்னா இன்னக அன்தஸ்ஸமீஉல் அலீம் என்றும் வாங்கும்போது ஆஜறகல்லாகு பீமா அஉதைத்த வஜஅலகு லகதகூறு என்றும் ஓதுதல் சுன்னத்தாம்.

## இஸ்லாம் மார்க்கத்தின் மூன்றாம் எடுப்பாகிய சகாத்தைப்பற்றியவைகள் முற்றிற்று.

# கிதாபுஸ்ஸியாம்.

## அல்பாபுல் அவ்வலு பீபயானிஸ்ஸியாமி.

(முதலாம் பாபு நோன்பைப்பற்றியது.)

## அல்பஸ்லுல் அவ்வலு பீபாபிஸ்ஸியாமி.

## க-ம் பிரிவு.

(631.) இஸ்லாம் மார்க்கத்தின் நான்காம் அஸ்பர்ந்து யாது?

முஸ்லிமாகிய முகல்லபாகிய ஒவ்வொரு ஆடவர்களும் ஒவ்வொரு ஸ்திரிகளும் றமலான்மாசத்தில் நோன்புபிடிப்பதாம்.

(ஸவும்) எனும் அறபுச்சொல் நோன்பு எனும் பொருள்கொண்டது.

(632.) நோன்பு எக்காலத்தின் பறுலாயிற்று?

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் ஹிஜ்றத்து எனும் யாத்திரைசெய்து இரண்டு வருடத்தின் பின் பறுலாயிற்று.

(633.) நோன்புபிடிப்பது வாஜிபில்லை என்று சொல்லலாமா?

சொல்லவேபடாது அப்படிச் சொன்னவன் முறுதத்தாகிவிடுவான்.

(634.) நோன்பு எத்தனை வகைப்படும்?

பறுலாகிய நோன்பு சுன்னத்தாகிய நோன்பு என இருவகைப்படும்.

பறுலாகிய நோன்பு ஸவும றமலான் ஸவுமன்னதுறு என இருவகைப்படும்.

ஸவுமன் நதுறு எனும் நேத்திக்கடன் நோன்பு நேர்ந்தவர்கள் பேரில் பறுலாம்.

(635.) றமலான்மாசமென நிச்சயிக்கத்தக்க அத்தாட்சிகளெவை?

ஷகுபான் மாசம் நிரம்புதல், றமலான் மாசத்தின் பிறையைக் காணுதலெனும் இரண்டு அத்தாட்சிகளையும் கொண்டு றமலான்மாசமென நிச்சயித்தல் வேண்டும்.



ஷகுபான்மாசம்நிரம்புதலாவது அம்மாசம் முப்பதுநாட்களால் நிரம்புதலாம்.

ஷகுபான்மாசத்தின் பிறையை ஷாஹிதுக்குத் தக்கவர்களாகிய இருவர்காண்பது தொடுத்து முப்பதுநாள் நிரம்பினால் அடுத்தநாளை றமலான்மாசமென நிச்சயித்து நோன்புபிடித்தல் வேண்டும்.

பிறையைக் காணுதலாவது ஷகுபான் மாசத்தின் முப்பதாம் இரவிற் பிறையைக் காணுதலாம்.

ஷகுபான்மாசத்தின் முப்பதாம்இரவில் ஷாஹிதுக்குத்தக்கவொருவர் பிறையைக்கண்டால் அவ்விரவை றமலான் மாசத்தின் இரவென்று நிச்சயித்து நோன்புபிடித்தல் வேண்டும்.

(636.) றமலான் மாசத்தின் பிறையைத் தேடிப்பார்க்க வேண்டுமா?

இல்லை. ஷகுபான் மாசத்தின் முப்பதாம்இரவில் றமலான்மாசத்தின் பிறையைத் தேடிப்பார்த்தல் சுன்னத்தாம்.

ஷகுபான் மாசத்தின் முப்பதாம் பகலில் பிறையைக்கண்டால் கண்டநேரந்தொடுத்து பொழுது அஸ்தமிக்கும் வரைக்கும் நோன்புபோல் இருப்பது ஜாயிசல்ல அப்பிறையோ எதிராய்வரும் இரவின் பிறையாம். றமலான் மாசத்தின் முப்பதாம்பகலிற் பிறையைக்கண்டு நோன்பை விடுவதும் ஜாயிசல்ல.

(637.) சிறுவர்களை நோன்பு பிடிக்கும்படி ஏவவேண்டுமா?

ஏழுவயதையுடைய சிறுவர்களை ஏவவேண்டும் பத்துவயதையுடையவர்களாயிருந்தால் அடித்தல் வேண்டும்.

அது பெற்றோர் அல்லது வலீ அல்லது வசிய்யத்தை ஏற்றுக்கொண்டவன் முறையே நடப்பித்தல் வேண்டும்.

ஏழுவயதுக்குக்குறைந்த சிறுவர் பயித்தியகாரர் சுகத்தை ஆதரவு வைக்கப்படாத நோயாளர் நோன்புபிடிக்கஏலாத வயோதிபர் ஆகியவர்களுக்கு அதாவாறும் கலாவாறும் நோன்புபிடிப்பது வாஜிபாகாது.

(638.) ஹைலு நிபாசோடிருப்பவர்கள் நோன்புபிடிக்க வேண்டுமா?

1. ஹைலாயிருப்பவளும் நிபாசாயிருப்பவளும் நோன்புபிடித்தல் வாஜிபில்லை.

2. எத்தனைநாள் ஹைலாயிருந்தாலும் எத்தனைநாள் நிபாசாயிருந்தாலும் அத்தனை நோன்பையும் கலாச்செய்தல் வேண்டும்.

3. ஹைலுக்காரியின் ஹைலு அல்லது நிபாசுக்காரியின் நிபாசு றமலான் மாசத்தின் பகலில் துப்பரவானுல் துப்பரவான நேரந்தொடுத்து சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் நோன்புபோலிருப்பது சுன்னத்தாம்.

4. ஹைலினுலும் நிபாஸினுலும் சென்ற நாட்களோடு 3-ம் வசனத்திற்சொல்லிய நாளையும்சேர்த்து கலாவாக நோன்புபிடித்தல் வேண்டும். அது வாஜிபாம்.

(639.) பிறையைக்கண்டு நோன்புபிடித்த ஊரிலிருந்து நோன்புபிடித்துப் பிறையைக்காணுமல் நோன்புபிடித்த ஊருக்குப்போனவன் யாதுசெய்தல் வேண்டும்?

அவ்வூரார் எத்தனை நோன்பு பிடிப்பார்களோ அத்தனை நோன்பு பிடித்து அவர்களோடு பெருநாட் கடமைகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

பிறையைக்காணுத ஊரிலிருந்து நோன்புபிடித்தவன் பிறையைக்கண்டு நோன்புபிடித்த ஊரைவிற் சென்றுல் முப்பது நோன்பு நிரம்பாவிட்டாலும்அவ்வூரார்பெருநாட்கடமைகளை நிறைவேற்றுவதோடு இவனும் பெருநாட்கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும் இருபத்தெட்டு நோன்பு பிடித்தவனுயிருந்தால் ஒரு நோன்பை கலாச்செய்தல் வேண்டும்.

(640.) நோன்புபிடிக்க ஏலாத வயோதிபர்களும் சுகத்தின் ஆதரவு வைக்கப்படாத நோயாளரும் யாதுசெய்தல்வேண்டும்?

ஒவ்வொரு நாளுக்கும் பகரமாய் ஒவ்வொரு முத்துக்கொடுத்தல் வேண்டும்.

---

## அல்பஸ்லுல்தானி பீபாபிஸ்ஸவுமி.

## உ - ம் பிரிவு.

(641.) நோன்புடைய பறுலுக்களெவை?

இரவில் நிய்யத்துவைத்தல், பகற் காலத்தில் நோன்பை முறிப்பவைகளை விட்டுத் தடுத்துக்கொள்ளுதல், எனும் இரண்டுமாம்.

எல்லா ஒவ்வோ ரிரவிலும் நிய்யத்து வைத்தல்வேண்டும்.



றமலான் மாசத்தின் முதலாமிரவில் றமலான் மாதம் முப்பது நாளும் நோன்பு பிடிப்பேனென்று நிய்யத்து வைத்தால் அவ்விதம் நிய்யத்துவைத்த வோர்நாளுக்கும் போதுமாகுமேயன்றி எல்லா நாளுக்கும் போதுமாகாது. நிய்யத்தை வாயினுல் மொழிதல் முஸ்தஹப்பாம்.

பறுலாகிய நோன்புடைய நிய்யத்தாவது நவைத்து ஸவுமகதின் அன்அதாஇ, பறுலறமலானி, காதிஹிஸ் ஸனதிலில்லாஹித ஆலா என்பதாம்.

இதின் பொருளாவது இந்த வருஷத்து றமலான் மாசத்தின் பறுலான நோன்பை அதாவாக நாளை பிடிக்க நிய்யத்து வைக்கி [illegible]தாம்.

அல்லாஹுக்காக என்றதின்பின் அல்லாகு லாயிலாக இல்லாகு வல்ஹைறுயுல் கையூம் அல்காயிமு அலாக்குல்லி நபுசின் பிமாகசபது என்றோதுதல் சுன்னத்தாம்.

நிய்யத்தை ஒவ்வோரிரவிலும் ஏழுதாம் வாயினுல் மொழிதல் சுன்னத்தென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

நாளை றமலானுயிருந்தால் நோன்பாயிருப்பேனென்று நிய்யத்து வைத்தால் அன்று றமலானுயிருந்தாலும் அந்த நிய்யத்தினுல் நோன்புகூடாது.

றமலான் மாசத்தின் முப்பதாமிரவில் இவ்வாறு நிய்யத்துவைத்து அவ்விரவோ றமலானிலுள்ளதென்று திட்டமானுல் அந்த நிய்யத்துப் போதியதாம்.

நிய்யத்துவைக்காமல் சவ்றுநேரம் போஷித்தாலும் பகல்காலத்தில் நோன்பை முறிக்குங் கருமங்களைப் பேணிக்கொண்டாலும் நோன்பாகாது.

நோன்பை முறிப்பவைகளை உபயோகிக்காமல் கிழக்கு வெளுத்தநேரந் தொடுத்து பொழுது அஸ்தமிக்கும் வரைக்கும் தடுத்துக் கொள்ளுதல்வேண்டும்.

பகல் காலத்தில் நோன்பை முறிக்குங் கருமங்களைச் செய்தல் ஹறுமென்றறிந்திருந்து முரண்டாய் அக்கருமங்களைச் செய்தால் நோன்பு பாத்திலாகிவிடும். அந்த நோன்பை கலாச்செய்தல் வாஜிபாம்.

(நோன்பை முறிக்குங் கருமங்களைப்பற்றியது.)

நோன்பை முறிப்பவைகளாவன: நோன்பாளி தன் துவாரங்களி லொன்றில் அல்லது பலதில் பார்வைக்குத் தோற்றத்தக்கவஸ்

தைச்செலுத்துதல், கன்னிஸ்திரிகள் குர்திபிருக்கையில் முன்னு வாரத்தில் வெளியாகுந் தலத்திவ்விரல் முதலியயாதேனுமொன்றைச்செலுத்துதல், மலசௌசம் செய்யும்போது குபுறின் வட்ட வளையத்துக்குள்ளே யாதேனு மொன்றைச் செலுத்துதல், சத்தித்தல், புணர்ச்சி செய்தல், புணர்ச்சியல்லாத வேறெவ்வித சுகம் பாராட்டுதலாலேனும் மனியிறக்குதல், தன்னைத்தான கழுவுதலை மிகுதமாக்குதலால் நீர் செல்லுதல், தாம்பூலம், ஆகியவைகளாற் பேதலித்த உமிழ்நீரை முழுங்குதல், தொண்டையின் (ஹத்தை) விட்டு வெளிப்பட்ட காறலை முழுங்குதல், ஜிமாஉ செய்யும்போது பஜ்று வெளுத்ததை யறிந்தவுடன் தனைவெளிப்படுத்தாமல் தாமதித்தல், பகலில் மறதியாக ஜிமாஉ செய்தவன் நினைவு வந்தவுடன் வெளிப்படுத்தாதிருத்தல், [illegible]போசனமிருக்கையில் விழச்சு வெளுத்தால் அதை [illegible]ப்பாதிருத்தல், ஆகியவைகளாம். இக்கருமங்கள் மாத்திரமல்ல, இவைபோல்வனவும் அப்படியேயாம்.

(642.) நோன்புடைய ஷறுத்துக்களெத்தனை?

நோன்பு பிடிப்பதற்காய் நிய்யத்து வைக்கும்போது பறுலான நோன்பாயிருந்தால் றமலான் என்றும், கலாவென்றும், நதறென்றும், கப்பாறத்துடைய நோன்பாயிருந்தால் கப்பாறத்தென்றும், குறித்தல், பொழுது அஸ்தமித்து பஜ்று சாதிகு தோன்றுதற்கிடையில் நிய்யத்து வைத்தல், ஆகிய இரண்டுமாம்.

(643.) எத்தனை ஷறுத்துக்களைக்கொண்டு நோன்பு இறுபடும்?

நோன்பாளி பகல்முற்றாய் இஸ்லாம் மார்க்கமாகவும் அகிலோடுமிருத்தல், ஹைழு, நிபாசு, மயக்கம், போதக்கேடு முதலியவையுண்டாகாதிருத்தல், ஆகிய இரண்டு ஷறுத்துக்களைக்கொண்டு நோன்பு இறுபடுமாம்.

(644.) நோன்புடைய சுன்னத்துக்களெவை?

இரவில் நாலொருசாமம் சென்றபின் சஹறு, வஜீபனம் புசித்தல், வருத்தில் சக்குண்டாகும் வரைக்கும் சஹறைப் பிற்படுத்துதல், ஈத்தம்பழத்தினால் சஹ்று செய்தல், யாதோர் போசனமுமில்லாதபோதி லோர்மிடர் ஜலத்தினாலாவது சஹ்றுசெய்தல், நேரம் சக்காகிவிட்டால் சஹ்றுசெய்யாதிருத்தல்பொழுது அஸ்தமித்தது திட்டமானவுடன் நோன்புதுறக்குதல், ஈத்தம்பழத்தைக்கொண்டு நோன்பு துறக்குதல், நோன்புதுறப்பதற்காய் எடுக்கும் ஈத்தம்பழம் மூன்றுசுளையாயிருக்குதல், நோன்பாளியை தன்னோடு நோன்பு துறப்பித்தல், நோன்பு துறக்கும்போது அல்லாகும்ம லகசும்



ஹுவலாரிசுகிக அபுதறுத்து என்றோதுதல், ஈத்தம்பழமில்லாவிட்டால் ஜலத்தினால் நோன்பு துறக்குதல் ஆகியவைகளாம்.

நோன்பு துறக்குமுன் வாய்கொப்புளித்தலும் மிஸ்வாக்குச்செய்தலும் மக்றூகு.

சஹ்றுசெய்தலால் நோயுண்டாகுமேயானால் சஹ்றுசெய்தல் சுன்னத்தாகாது.

இரவில் யாதேனும் போசிக்காமல் முரண்டாய் இரண்டு நோன்புகளைச் சேர்த்தல் ஹறாம்.

(645.) றமலான் மாசத்தின் அதாவான நோன்பை ஜிமாஇனால் முறித்தவன் யாதுசெய்தல்வேண்டும்?

றமலான் மாசத்தில் அதாவான நோன்பு பிடித்திருக்கும்போதில் ஜிமாஉசெய்து நோன்பை முறித்தவன் அந்த நோன்பை கலாச்செய்வதும் கப்பாறத்துக் கொடுப்பதும் வாஜிபாம்.

கப்பாறத்தாவது ஓர் மூமினுடைய அடிமையை உரிமையிடுதலாம். அடிமையை உரிமையிட ஏலாதவர்கள் அறுபது மிஸ்கீன்களுக்கு வஜீபனம் கொடுக்கவேண்டும்.

அறுபது மிஸ்கீன்களுக்காவது வஜீபனங் கொடுக்கத் தாராணியில்லாவிட்டால் தாராணி உண்டாகும்வரைக்கும் அது அவன்பேரில் விதியான கடனாகும்.

ஜிமாகு செய்யப்படும் பெண்களுக்குக் கப்பாறத்து வாஜிபில்லை.

றமலான் மாசத்தின் கலாவான நோன்பு நதறுடைய நோன்பு கப்பாறத்துடைய நோன்பு ஆகியவைகளைப் பிடித்திருக்கும்போதில் ஜிமாஉ செய்தால் அந்த நோன்பை கலாச்செய்தல்வேண்டும் கப்பாறத்துக் கொடுப்பது வாஜிபில்லை.

விபசாரம் செய்தல் லிவாத்துச்செய்தல், பின்துவாரத்தில் புணர்தலாகியவைகள் கப்பாறத்தைந் விதியாக்குமாம்.

(646.) நோன்பை விடுவதை வாஜிபாக்கிவிப்பவைகளெத்தனைவகைப்படும்?

ஆடவர்களுக்கும் மாதர்களுக்கும் பொதுவானது ஸ்திரிகளுக்கு மாத்திரம் சொந்தமானது என இருவகைப்படும்.

யாதேனும் நிக்கிலைப்பட்ட சங்கைபெற்ற ஜீவனை நோன்பைவிட்டாலேயன்றி அந்நேரத்தில் விலக்கிவிடக்கூடாமையாயிருந்தால் நோன்பைவிடுதல் வாஜிபாம். ஆடவர்களுக்கும் ஸ்திரிகளுக்கும் பொதுவான கருமமாம்.

தன்வயிற்றிலிருக்கும் கர்ப்பம் நோன்பு பிடித்தால் அழிந்துபோமெனப் பயப்படுதல், பால்வற்றிப்போவதால் மதலைகள் வருந்துவார்களெனப் பயப்படுதல். ஆகியவைகளே ஸ்திரிகளுக்குச் சொந்தமான கருமங்களாம்.

இவ்விஸ்திரியினையுடையவர்கள் நோன்பைவிடுவது வாஜிபாம்.

நோன்பை விடுவதை ஜாயிசாக்கிவிப்பவைகளாவன. கஸ்றுதொழுதக்க சபரும் தயம்மம் செய்யத்தக்க வியாதியும் பசியும் தாகமுமாம்.

வருத்தமில்லாத முசாபிறு நோன்பு பிடிப்பது அபுளலாம்.

(647.) றமலான் மாசத்தில் மிகுதமாய்ச் செய்யவேண்டிய சுன்னத்தான அமல்களெவை?

குறுஆன் ஓதுதல் ஓதிக்கொடுக்குதல், திக்று சலவாத்து ஓதுதல். முதலியவைகளும், தறாவீஹு தஹஜ்ஜுத்து வித்று முதலிய தொழுகைகளைத் தொழுவதும், சதகாக்கொடுப்பதும் மிகுதமாய்ச் செய்யவேண்டிய சுன்னத்தான அமல்களாம் இவை போல்வனவும் அப்படியே.

(லைலத்துல் கதுறைப்பற்றியது.)

(648.) லைலத்துல் கதுறுடைய அடையாளங்களெவை?

அவ்விரவில் சீதளோஷ்ண மொன்றையொன்று மிகுக்காமல் சமமாயிருக்குமென்றும், நாய் குலைக்காதென்றும், வெள்ளி யரிந்து விழாதென்றும், ஷைத்தான் வெளியே வராதென்றும் அவ்விரவின் பகலிற் சூரியன் சுடரின்றி சந்திரனைப்போ லுதயமாகுமென்றும், சிற்சிலராற் சொல்லப்பட்டன. இவைகளே அதின் அடையாளங்களாம்.

லைலத்துல் கதுறு ஒருவருடத்தி லோர்நாளென்றும் பறுஅத்துடைய இரவுதானென்றும், றமலான் மாசத்திலென்றும், றமலான் இருபதுக்குப்பின் ஒற்றையான நாட்களிலென்றும், றமலான் இருபத்தேழிலென்றும் பல சொற்களுள.

லைலத்துல் கதுறுடைய இரவு லைலத்துல் கதுறல்லாத மற்ற ஆயிரம் மாசத்தைக்காண விசேஷமானதாம்.

றமலான் மாசத்தின் துவக்கம் ஞாயிற்றுக்கிழமை அல்லது புதன்கிழமையாயிருந்தால் இருபத்தேழாம் இரவுலைலத்துல் கதுறென்றும் திங்கட்கிழமையாயிருந்தால் இருபத்தொன்றிலென்றும், செவ்வாக்கிழமையாயிருந்தால் இருபத்தேழிலென்றும், வியாழக்



கிழமையாயிருந்தால் இருபத்தைந்திலென்றும் சனிக்கிழமையாயிருந்தால் இருபத்துமூன்றிலென்றும் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலிறஹ்மத்துல்லாஹித்த ஆலா அலைஹி சொன்னார்களாம்.

(இஃதிகாபைப்பற்றியது.)

(649.) இஃதிகாபாவதுயாது?

அதின் நிய்யத்துடன் பள்ளியில் தரிபடுதலே இஃதிகாபாம்.

இஃதிகாபுடைய நிய்யத்துடன் பள்ளியில் உலாவினாலும் இஃதிகாபின் தவாபு உண்டாகும்.

நிய்யத்துவைத்தல் குறித்தநேரத்தில் தரித்தல் எனும் இரண்டுமே அதின் ஷுறுத்துக்களாம்.

நவைத்துல் இஃதிகாப பீகாதல் மஸ்ஜிதி லில்லாஹித்த ஆலா என்பதே அதின் நிய்யத்தாம்.

தொடர்பாய் இத்தனைநாளிருப்பேனென நிய்யத்துவைத்தவன் (கலாவுக்கு) மலசலமோசனம் செய்தல், ஸ்நானம் செய்தல் போலுள்ள லாஜிமானவை களுக்காய்ப் புறப்பட்டுத் தாமதிக்காமல் வந்துவிட்டால் இஃதிகாபு பாத்திலாகாது.

ஜனாசாத் தொழுவதற்காய்ப் புறப்பட்டாலும் ஜும்ஆத் தொழுவதற்காய்ப் புறப்பட்டாலும் மனியை வெளிப்படுத்தினாலும் இஃதிகாபு பாத்திலாகிவிடும்.

இஃதிகாபு இருப்பவர்கள் நோன்பு பிடித்தவர்களாய் இருப்பதும் ஜும்ஆப் பள்ளியில் இருப்பதும் அபுளலாம்.

பைத்துல்முகத்திசப்பள்ளியில்இஃதிகாபிருப்பேனென்று குறித்தவர்கள் மதீனத்துப் பள்ளியில் இருப்பதும் மதீனத்துப்பள்ளியில் இஃதிகாபிருப்பேனென்று குறித்தவர்கள் மக்கத்துப்பள்ளியிலிருப்பதும் ஜாயிசாம்.

மக்கத்துப்பள்ளியில் இஃதிகாபு இருப்பேனென்று குறித்தவர்கள் அதிலேயே இருக்குதல்வேண்டும்.

(சுன்னத்து நோன்புக்களைப்பற்றியது.)

(650.) சுன்னத்தாக்கப்பட்ட நோன்புக்கள் எத்தனைவகைப்படும்?

சுன்னத்து முஅக்கதாவான நோன்பு சுன்னத்தான நோன்பு என இருவகைப்படும்.

துல்ஹஜ்ஜிமாசம் ஒன்பதாகிய அறபாநாளில் நோன்புபிடித்தல், முஹற்றமாசம் பத்திலும் பதினொன்றிலும், இரண்டு நோன்

புபிடித்தல், ஷவ்வால்மாசத்தில் ஆறுநாள் நோன்புபிடித்தல், துல்ஹஜ்ஜிமாசத்தை தவிர மற்ற மாசங்களில் பதின்மூனறு பதினான்கு பதினைந்து ஆகிய மூன்றுநாட்களிலும் நோன்பு பிடித்தல் ஒவ்வோர் வாரத்திலுமுள்ள வியாழக்கிழமை திங்கட்கிழமைகளில் நோன்புபிடித்தல், ஆகியவைகள் சுன்னத்து முஅக்கதாவாம்.

ஷவ்வால் மாசத்தில் பெருநாளை யடுத்தநாட் தொடுத்து ஆறு நாள்வரைக்கும் தொடர்பாய் நோன்புபிடித்தல் சுன்னத்தாம்.

றஜபுமாசம் ஷஃபான்மாசமாகியவைகளில் நோன்பு பிடிப்பதும் துல்ஹஜ்ஜிமாசத்துவக்கந்தொடுத்து ஒன்பதுநாள்வரைக்கும் நோன்பு பிடிப்பதும். முஹற்றம் மாசம் துவக்கந்தொடுத்துப் பத்துநாள் நோன்பு பிடிப்பதும் அபுளலாம்.

ஹஜ்ஜுச் செய்பவர்கள் அறபாநாளில் நோன்பு பிடிக்காதிருத்தல் ஹஜ்ஜுமாசத்தின் பதின்மூன்றில் நோன்பு பிடிப்பதற்குப் பதிலாக. பதினாறில் நோன்பு பிடித்தலாகியவைகள் சுன்னத்தாம்.

மேலே சொல்லிய நாட்களில் பறுவான நோன்பு பிடிப்பதுடன் சுன்னத்தையும் நினைத்துகொண்டால், கலா. இறுபடுவதோடு சுன்னத்தான நோன்பு பிடித்த தவாபும் கிடைக்கும்.

புருஷன் தன்மனைவியை நபில் முதலகான நோன்புபிடிக்கவிடாமல் தடுக்கலாம். வியாழக்கிழமை திங்கட்கிழமைகளிற் பிடிக்கும் நோன்பையு மப்படியே. ஆசூறாவின் நோன்பையும் அறபாவின் நோன்பையும் பிடிக்கவிடாமற் தடுத்தல் ஜாயிசல்ல.

புருஷன். ஊரில் ஹாளிறா யிருக்கும்போதில் அவனுடைய அனுமதியின்றி சுன்னத்தான நோன்பு பிடித்தல் ஹறாம். புருஷனின் உத்தரவின்றி. ஆசூறா. அறபாவுடைய நோன்பு பிடிப்பது ஹறாமாகாது.

வழக்கமாய் சுன்னத்து நோன்பு பிடிப்பவன். நிகாஹுமுடித்தால் மணவறை நாட்களில். நோன்பு பிடிக்கா திருத்தல், சுன்னத்தாம்.

சுன்னத்தானநோன்பு பிடித்திருக்கும்போது விருந்துக்கழைக்கப்பட்டு அத்தருணத்தில் போஷிக்காவிட்டால் விருந்துக்காரனுக்கு மனவருத்த முண்டாகுமென்றிருந்தால் நோன்பைவிடுதல் சுன்னத்தாம், அவ்வாறுவிட்ட நோன்பை. கலாச் செய்தல் சுன்னத்து.

இரண்டு பெருநாட்களிலும் துல்ஹஜ்ஜுமாசம், பதினொன்று பன்னிரண்டு. பதின்மூன்றிலும் ஷஃபான் மாசத்தில் பிறைகண்டது சக்காயிருக்கும்போதும் நோன்புபிடித்தல் ஹறாம் ஷஃபான



மாசம் பதினைந்துக்குப்பின் கடைசிவரைக்கும் நோன்புபிடிப்பதும் ஹறாமாம். பிந்தியது தன்ஆதத்துக்கு நேரானதாயிருந்தால் ஹறாமாகாது.

ஷஃபான் மாசம் பதினைந்துக்குமுன் தொடுத்து நோன்புபிடித்தாலும் அல்லது வழக்கத்துக்கு நேரானதாயிருந்தாலும் நதறுடைய நோன்பாயிருந்தாலும் கலாவான நோன்பாயிருந்தாலும் பிடிக்கலாம்.

## இஸ்லாம் மார்க்கத்தின் நான்காம் எடுப்பைப்பற்றியவைகள்

முற்றிற்று.

# கிதாபுல் ஹஜ்ஜி வல்உம்றதி.

## அல்பாபுல் அவ்வலு பீபயானில் ஹஜ்ஜி வல்உம்றதி.

(முதலாம்பாபு ஹஜ்ஜையும் உம்றாவையும் பற்றியது)

(651.) இஸ்லாம்மார்க்கத்தின் ஐந்தாம் பர்ளாவது யாது?

மக்கா ஷரீபிற் சென்று ஹஜ்ஜும் உம்றாவும் செய்தலாம்.

முஸ்லிமாகிய முகல்லபாகிய ஹுர்றுகிய (முஸ்தகீஉ) தாரணி பெற்ற ஒவ்வொருவரும் ஆயாத்தில் ஒருதரம் ஹஜ்ஜும் உம்றாவும் செய்தல் வாஜிபாம்.

முஸ்லிம் என்றதனால் குபிரிலிருப்பவர்களும் முகல்லபென்றதனால் சிறுவர்களும் புத்தியீனம் பிடித்தவர்களும் ஹுர்றென்றதனால் அடிமைப் பாத்தியமுடையவர்களும் ஹஜ்ஜும் உம்றாவும் செய்தல் வாஜிபாகாதவர்களென்பது வெளியாயிற்று.

(இஸ்திதா அத்து) தாரணியாவது மக்கா ஷரீபுக்குப்போய் வரத்தக்க செலவும் வாகனம் அல்லது அதின் கூலியும் தன்மீது நபகா விதித்தவர்களின் நபகாவும் வழியில் அச்சந்தீர்தலும் பெண்கள் தங்களுக்கு ஆமாகிய துணையுமாம்.

புருஷன் தன் மனைவியை ஹஜ்ஜுச்செய்யக் கூட்டிப்போவதும் அவ்விஸ்திரி அவனின் உத்தரவுடன் இஹ்றாம் கட்டுவதும் சுன்னத்தாம்.

(652.) ஹஜ்ஜுடைய பர்ளுக்களெவை?

நிய்யத்துவைத்தல், அறபாவில் தரித்தல், தவாபுசெய்தல், தொங்கோட்டம் ஓடுதல், தலைமுடிகளைதல், மேற்சொல்லியவைகளை தறுத்தீபாகச் செய்தல் எனும் ஆறுமாம்.

ஹஜ்ஜின் நிய்யத்தாவது நவைத்துல் ஹஜ்ஜவஅஹ்றம்துபிஹி லில்லாஹி தஆலா என்பதாம்.

துல்ஹஜ்ஜிமாசம் ஒன்பதாம்பகல் சவாலுக்கும் பெருநாளிரவின் பஜ்றுக்கு மிடையிலுள்ள நேரத்தில் கொஞ்சநேரமாவது அறபாமலையிற் றரிப்பதே அறபாவிற் றரித்தலாம்.

(653.) உம்றாவின் பர்ளுக்க ளெத்தனை?

நிய்யத்துவைத்தல் தவாபுசெய்தல் தொங்கோட்டம் ஓடுதல் தலைமுடிகளைதல், தறுத்தீபு எனும் ஐந்துமாம்.



(654.) தவாபாவது யாது?

ஹறத்திற்புகுந்து ஹஜறுல் அசுவதை முத்திக்கொண்டு கஃபாவை இடப்பாகத்திலாக்கி கஃபாவைச் சுற்றுதலாம்.

தவாபின் ஷறுத்துக்களாவன. இரண்டு துடக்கையும் விட்டு துப்புரவாயிருத்தல், அவுறத்தை மறைத்தல், நிய்யத்துவைத்தல், ஹஜறுல் அசுவதுக்குத் தன் திரேகம் நேரிடும்படியாய் நின்று தவாபை துவக்குதல், தவாபுசெய்யும்போது கஃபாவை இடப்பக்கமாக்கிக்கொள்ளுதல், ஏழுதரம் சுற்றுதல் எனும் ஆறுமாம்.

தவாபுடைய சுன்னத்துக்களாவன, எல்லா ஒவ்வொரு சுற்றுதலையும் ஹஜறுல் அசுவதைத்தொட்டு முத்தியே தொடங்குதல் மூக்கு நன்றாய் அதிற் படும்படி முத்துதல் அதில் நெற்றியை வைத்தல் என்பவைகளும் பிறவுமாம்.

தவாபு செய்யும்போது ஓதவேண்டிய தாஸ்லாகிய விருதுகள் பாடமில்லாதவர்கள் றப்பனா ஆதினா பித்துன்யா ஹசனதன் வபில் ஆகிறதி ஹசனதன் வகினா அதாபன்னார் என்று ஓதுவதே போதுமாம். தவாபில்மாத்திரமல்ல எவ்வெத்தானங்களிலும் அதை ஓதலாம், அல்லாகும்ம இன்னலீ தனூபன் லீமானையினா வலை னக வதுனூபன் லீமானைதன் வலைனகல்கிக அல்லாகும்ம மா கானமின்காலக பகுபிறுஹு வமாகானமின்கா லிகல்கிக பதஹும் மல்கு அன்னீ என்றும்ஓதுதல் நன்றாம்.

(655.) ஹஜ்ஜுச்செய்பவர்களுக்கு வாஜிபாகும் கருமங்க ளெவை?

இஹ்றாம் கட்டுதற்காய்க் குறிக்கப்பட்ட ஸ்தானத்திற் சென்றவுடன் இஹ்றாம் கட்டுதல், முஸ்தலிபாவிற் றரிக்குதல், மினாவிற் றரிக்குதல், தவாபுல் இயாளாச்செய்தல், ஜம்றத்துல் அகபாவில் கல்லெறிதல், அய்யா முத்தஷ்ரீக்கின் சவாலுக்குப்பின் கல்லெறிய வேண்டிய மூன்றுஸ்தலங்களிலும் கல்லெறிதல்எனும் ஐந்துமாம்.

இஹ்றாம் கட்டுதற்காய் நியமிக்கப்பட்ட ஸ்தானங்களாவது, மதீனாவிலிருந்து வருபவர்களுக்கு பீறு அலி எனும் ஸ்தலம் அல்லது துல்ஹுலைபா எனும்ஸ்தலமும் ஷாம் மிசிர் மக்ரிபுமுதலிய தேசங்களிலிருந்து வருபவர்களுக்கு ஜகுபா எனும் ஸ்தலமும் யமன் பதியின் நாட்டின் திசையிலிருந்து வருபவர்களுக்கு யலம்லம் எனும் ஸ்தலமும் ஹிஜாசிலிருந்தும்யமன் கடல்பக்கமிருந்தும் வருபவர்களுக்கு கறனு எனும் ஸ்தலமும் மஷ்ரிகிலிருந்து வருபவர்களுக்கு தாத்து இறுகுஎனும் ஸ்தலமுமாம்.

மக்காவில்வசிப்பவர்களுக்கு மக்காவின் ஹில்லலே இஹ்றாம் கட்டவேண்டிய ஸ்தானமாம்.

இஃறாம் கட்டும் ஸ்தலத்தை மீகாத்தென்று சொல்லுவார்கள்.

முஸ்தலிபாவில் பெருநாளிரவின் பாதிக்குப்பின் இரவில் கொஞ்சநேரமாவது தரித்தல்வேண்டும்.

மினாவில் அய்யா முத்தஷ்ரீகின் இரவுகளில் மிகுந்த நேரம் தரித்தல்வேண்டும்.

பெருநாளிரவின் பாதிசென்றபின் ஜம்றத்துல் அகபாவில் ஏழு கல்லெறிதல் வேண்டும்.

ஜம்றத்துல் அகபா ஜம்றத்துல் வுஸ்தா ஜம்றத்துல் ஊலா எனும் மூன்று தானங்களிலும் அய்யா முத்தஷ்ரீக்கின் சவாலுக்குப்பின் முறையே ஒவ்வொருநாளும் ஏழு, கல்லுவீதம்மூன்றுதானத்திலும் 21 கல்லுஎறிதல் வேண்டும்.

ஒவ்வொரு ஹஜ்ஜுச் செய்பவர்களும் எறியவேண்டிய கல்லாவது ஒவ்வொரு தானத்திலும் ஏழுகல்லுவீதம்மூன்றுதானத்திலும் எறியவேண்டியதொகை 21 அவ்வாறு மூன்றுநாள் எறிந்தால் அறுபத்து மூன்று முன்னர் எறிந்தகல்லு ஏழு ஆக எழுபதாம்.

(656.) ஹஜ்ஜுடைய சுன்னத்துக்க ளெவை?

இஃறாம் கட்டவும், மக்காவிற் புகுதவும், அறபாவில் தரிக்கவும், முஸ்தலிபாவில் தரிக்கவும், அய்யா முத்தஷ்ரீகெனும் நாட்களில் கல்லெறியவும், கொஞ்சநேரத்துக்குமுன் ஸ்நானம்செய்தல், இஃறாம்கட்டுமுன் மணம்பூசிக்கொள்ளுதல், தல்பிய்யாச்சொல்லுதல், தல்பிய்யாவை மிகுதமாக்குதல், ஹஜ்ஜுடைய நிய்யத்தை வாயினால் மொழிதல், சலவாத்தோதுதல், சுவர்க்கத்தைக் கேட்குதல் நரகத்தைவிட்டுக் காவல்தேடுதல் என்பவைகளாம்.

சிறப்புற்ற மக்கா ஷரீபைக்கண்ட உடன் அல்லாகும்ம ஸித்கா தல்பைத தஷ்ரீபன், தக்ரீமன், வதஃளீமன், வமஹாபதன் வஸித் மன்ஷர்றபஹு, வஅள்ளமஹு, மிம்மன் ஹஜ்ஜஹு, வஃதமறஹு தஷ்ரீபன், வதஃறீமன், வதஃளீமா, அல்லாகும்ம, அந்தஸ்ஸலாம், வமின்கஸ்ஸலாம், பஹைய்யினா, றப்பனா, பிஸ்ஸலாம், அல்லாகும்ம, இன்னகுன்ன, நகுல்லு, உகுத்த, வாஷாத்த, உகுறு, வகுபிது, வாதியன், வக்குனா அகுறு, கத்தா, ஆதைனக, கைறு, மருஜூம் பின், அர்தஅன்னா, இலைக ஃறஜ்னா, வபைத்தக, கஜஜ்னா, பறுகம், முல்கா, நிகாலினா பியனு இ பைதிக, என்றோதுதல் வேண்டும்.

தல்பிய்யாவாவது லப்பைக்க, அல்லாகும்ம லப்பைக்க, லாஷரீக்க, லகலப்பைக்க, இன்னல்ஹம்த வன்னிஃமதலக, லாஷரீக்க லக, என்பதாம்.



தல்பிய்யாவை ஒரு ஹாலிலிருந்து வேறொரு ஹாலனுவில் திரும்புந்தோறெல்லாம் சொல்லுதல் முக்கியமான சுன்னத்தாம்.

ஹஜ்ஜாஜிகள் ஒருவரையொருவர் சந்திக்கும்போதும் மேட்டிலிருந்து பள்ளத்திலும் பள்ளத்திலிருந்து மேட்டிலும் வீட்டிலிருந்து வெளியிலும் வெளியிலிருந்து வீட்டிலும் ஆகும்போதும் முக்கியமாய்த் தல்பிய்யாச் சொல்லுதல் வேண்டும்.

மிகுந்த தானங்களில் சலவாத்துச் சொல்லுதலும் சுவர்க்கத்தைக் கேட்பதும் நரகத்தைவிட்டுக் காவல்தேடுதலும் சுன்னத்தாம்.

தவாபுல் குதூமெனும் தவாபு செய்யும்போதும் தொங்கோட்டம் ஓடும்போதும் ஓதவேண்டிய திக்றுகளிருப்பதால் அவைகளை ஓதுதலே சுன்னத்தாம்.

அறபா இரவில் மினாவில் தரிப்பதும், மஷ்அறுல் ஹறாமில் தரிப்பதும், அவ்வத்தானங்களில் ஓதவேண்டியவைகளை ஓதுவதும் சுன்னத்தாம்.

அறபாவில்தரித்து அதிலோதவேண்டியவைகளையும் ஓதுதல் வேண்டும் அது சுன்னத்தாம்.

(657.) இஃறாம் கட்டினவர்களுக்கு எவ்வெக்கருமங்கள் ஹறாமாகும்?

1. ஜிமாஉசெய்தல், முத்திதல், முதலிய எவ்வித இணக்கமாவது செய்தல் மனியை இறக்குதல், நிகாகுசெய்தல், நிகாகுசெய்து கொடுத்தல் வேட்டைமிருகத்தைக் கொலைசெய்தல் ஹறத்திலுள்ள புல் பூண்டு முதலியவைகளைப் பிடுங்குதல், மணம்பூசுதல், தலை தாடியாகிய இடங்களிலும் உரோமத்திலும் எண்ணெய் பூசுதல், தேகத்திலுள்ள உரோமங்களையும் நகத்தையும் அறுக்குதல், ஆடவர்கள் தலையை மூடுதல் சரீரமடங்கலையும் மறைக்கத்தக்க ஆடை அணிதல் பெண்கள் முகத்திற் சிலதை மறைத்தல் என்பவைகளாம்.

ஹறத்திலுள்ள பல் பூண்டைப் பிடுங்குதல், இஃறாம் கட்டினவர்களுக்கு மாத்திரமல்ல இஃறாம் கட்டாதவர்களுக்கும் ஹறாமாம்.

பெண்களின் தாடியில் முளைத்திருக்கும் உரோமங்களையும் நீக்குதல் ஹறாம்.

ஐந்துவிரல்களுக்கு அதிகமான விரலில் முளைத்த நகமாயிருந்தாலும் நீக்குதல் ஹறாம்.

யாதொன்றையும் சேதம்வருத்தாத எண்ணெய் மணம் முதலியவைகளைப் பூசுதல் பிதுயாவை வாஜிபாக்காது

657-ம் இலக்க விஞவின் விடையாகிய 1-ம் இலக்கத்திற் சொல்லியவைகளில் ஒன்றையாவது செய்தால் பிதுயாக்கொடுத்தல்வேண்டும்.

பிதுயாவாவது ஒருவருடைத்துச் செம்மறி அல்லது இரண்டுவருடத்து வெள்ளாடு அல்லது ஹறமத்திலுள்ள ஆறு மிஸ்கீனுக்கு மூன்று மரக்கால் தானியம் கொடுத்தலாம் இவைகளில் யாதேனுமொருவகை பிதுயாவாவது கொடுக்க ஏலாதவர்கள் மூன்றுநாள் நோன்பு பிடித்தல்வேண்டும்

காகம், பருந்து, பாம்பு, எலி, கடிநாய் ஆகியவைகளை ஹறத்திற் கண்டால் இஹ்றாம் கட்டினவர்கள் கொல்லலாம் இஹ்றாம் கட்டினவர்கள் மாத்திரமல்ல இஹ்றாம்கட்டாதவர்களும் கொல்லுதல் வேண்டும் அது சுன்னத்தாம்.

ஈர், பேன், முதலியவைகளைக் கொல்லுதல் சதகாக் கொடுப்பதைச் சுன்னத்தாக்கி விக்குமாம்.

ஹஜ்ஜில் ஏவப்பட்ட யாதேனுமொன்றை விட்டால் ஓர் ஆடறுத்து குறுபான் கொடுத்தல்வேண்டும். சொல்லப்பட்ட குறுபான் கொடுக்க ஏலாவிட்டால் இஹ்றாமுக்குப்பின் பெருநாளுக்குமுன் மூன்று நோன்பு பிடித்தல்வேண்டும், தன்னூரில் பிடிப்பதாயின் ஏழுநாள் நோன்புபிடித்தல் வேண்டும்.

ஜிமாஉ செய்தால் ஒரு ஒட்டகம் ஏலாவிட்டால் ஒரு மாடு அதற்கும் ஏலாவிட்டால் ஏழு ஆடு கொடுப்பது [illegible] மாதிஞல் ஹஜ்ஜை முறித்தவர்கள் நீபரமாய் களாச்செய்தல் வாஜிபு சுன்னத்தான ஹஜ்ஜாயிருந்தாலும் மேற்சொல்லியபடி செய்தல் வேண்டும்.

(658.) கஃபாவில் நின்றும் யாதேனு மொன்றை வெளிப்படுத்தலாமா?

கஃபாவின் மணம் கல்லு களிமண் ஆகியவைகளை வெளிப்படுத்தல் ஹறாம்.

கஃபாவின் போர்வையில் மிச்சமானவைகளை கஃபாவின் பிரையோசனத்துக்காக விற்கலாம் அதை விற்கப்பட்டால் வாங்கி பறக்கத்துக்காக வைத்துக் கொள்ளலாம்.

சம்சம் தண்ணீரைக் கொண்டுவருதல் சுன்னத்தாம்.

ஹஜ்ஜைக்கொண்டு அல்லது உம்றாவைக்கொண்டு இஹ்றாம் கட்டியிருப்பவர்களைப் பகையர்கள் மறித்து ஹஜ்ஜுடைய நாளும் நெருங்கிவிட்டால் தஹல்லுல் செய்யலாம்.



தஹல்லுலாவது இஹ்றாமைவிட்டு தஹல்லுலாகிற நிய்யத்துக் கொண்டோர் ஆடறுத்து தஹல்லுலாகிற இடத்திலுள்ள மிஸ்கீன்களுக்குத் தானகவே பிரித்துக்கொடுப்பதாம்.

(659.) நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய கபுறை எவ்வாறு சியாறத்துச் செய்தல் வேண்டும்?

சிறப்புற்ற மதீனத்து ஹத்தில் புகுதமுன் ஸ்நானம்செய்து துப்பரவான ஆடையணிந்து நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கண்ணிஞற் காண்பதுபோல பாவித்து பயபக்தியாய் சங்கையாகிய பள்ளியிற் பிரவேசித்து றவுளாவின் மின்பறுக்குத் தாளாலே நின்று தஹிய்யத்துல் மஸ்ஜிதுத் தொழுது தன் நாட்டம் நிறைவேறவும் கபூலாகவும் அல்லாகுத்தஆலா இடம்கேட்டு சங்கையாகிய கபுறில் நாயகத்தின் முகத்தை நோக்கித் தலையைத் தாள்த்தி உள்ளச்சமாக அஸ்ஸலாமு அலைக யாறசூலல்லாகி சல்லல்லாகு அலைகிவசல்லம் என்று சலாம்சொல்லிச் சற்று வலப்பக்கம்வந்து செய்யிதுனு அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்குபேரில் சலாம்சொல்லிச் சற்றுதள்ளி நின்று செய்யிதுனு உமறிபுனுகத்தாபு றலியல்லாகு அன்குபேரிலும் சலாம் சொல்லவேண்டும்.

இவ்விதம் செய்தபின் நபிநாயகம் அவர்களின் கபுறின்கிட்ட சென்று அல்லாகுத்த ஆலா இடம் நபிநாயகம் அவர்களைக்கொண்டு வசீலாத் தேடித் தனக்கும் தன் குடும்பத்தார்களுக்கும் முஸ்லீங்களாகிய எல்லாருக்கும் ஷபாஅத்தைக் கேட்குதல்வேண்டும்.

இவ்விதங் கேட்டபின் கிபுலாவை நோக்கித் தனக்குத் தேவையானவைகளையெல்லாம் துஆவில் சேர்த்து ஓதுதல் வேண்டும்.

தனக்குத் தேவையானவைகளைக் குறித்து துஆச்செய்தபின் பாத்திமத்துஸ்ஸுஹறா றலியல்லாகு அன்ஹா அவர்களின் கபுறையும் அப்பாசு றலியல்லாகு அன்கு அவர்களின் கபுறையும் இமாம் ஹசன் றலியல்லாகு அன்கு அவர்களின் கபுறையும் சியாறத்துச் செய்து (ஜன்னத்துல் பகீஇல்) சென்று செய்யிதுனு உதுமான் றலியல்லாகு அன்கு முதல் அகுலுல் பைத்துக்களில் அவ்விடம் அடக்கம் பண்ணப்பட்டவர்களையும் மற்ற அசுகாபிகள் தாபிஊன்கள் இமாம்கள் முதல் சகல சாலிஹீன்களையும் சியாறத்துச் செய்து (உகுதில்) சென்று செய்யிதுனு ஹம்சா றலியல்லாகு அன்குவையும் சியாறத்துச் செய்தல்வேண்டும்.

மஸ்ஜிதுகுப்பாஎனும் இடத்துக்குப்போய் நபிநாயகம் அவர்கள் உலுச்செய்த கிணற்றில் உலுச்செய்வதும் அக்கிணற்று நீரில் குடிப்பதும் சுன்னத்தாம்.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் கபுறை தவாபு செய்தல் ஹறாம்.

நபிநாயகம் அவர்களின் கபுறை தொடுவதும் முத்துவதும் பற க்கத்தை நாடினால் ஜாயிசு முகத்தைக் கபுறுடன் சேர்த்தல் மகுறூகு அந்த கபுறை சியாறத்துச் செய்ய முன் சதகாக் கொடுப்பது சுன்னத்தாம்.

(660.) ஹஜ்ஜாஜிகளை எப்போதில் சந்திக்கவேண்டும்?

அவர்களுடைய வீட்டிற் புகுதமுன் சந்தித்து துஆச்செய்யும்படி தேடவேண்டும்.

ஹஜ்ஜாஜிகளுக்கு கப்பலல்லாகு ஹஜ்ஜக வசபற தன்பக வஅகுபல அலைக என்று துஆச்செய்தல் சுன்னத்தாம்.

---

## அல்பாபுல்தானி பியானில் உலுஹிய்யதி வல்அகீகதி.

(இரண்டாம்பாபு உலுஹிய்யாவையும் அகீகாவையும்பற்றியது)

(661.) உலுஹிய்யாவாவ தியாது?

உலுஹிய்யாவின் நிய்யத்துடன் 662-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லப்படும் நாட்களில் 663-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லப்படும் மிருகங்களை அறுத்து 664-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லப்படும் பிரகாரம் பிரித்துத் தானுமெடுத்துப் பிறருக்குங் கொடுத்தலே உலுஹிய்யாவாம்.

உலுஹிய்யாக் கொடுக்கத்தக்க முஸ்லிமாகிய ஹாற்றாகிய ஆடவர்களும் பெண்களும் உலுஹிய்யாக் கொடுத்தல் சுன்னத்து முஅக்கதாவாம்.

உலுஹிய்யாக் கொடுப்பவன் தன்கையினால் அறுக்குதல் அல்லது அறுக்கப்படும் ஸ்தானத்தில் ஹாஜிறாயிருக்குதல் சுன்னத்தாம்.

பெண்கள் ஓர் ஆண்பிள்ளையை வகிலாக நியமித்துக்கொள்ளுதல் அபுளலாம்.

உலுஹிய்யாக் கொடுக்க நினைத்தவனுக்குதுல்கஜ்ஜு மாசத்துவக்கம் முதல் உலுஹிய்யாக் கொடுக்கும் வரைக்கும் தன் உடம்பின் உரோமங்களை நீக்குதல் நகம் அறுக்குதல் ஆகியவைகள் மகுறூகாம்.



(662.) எப்போதில் உலுஹிய்யாக் கொடுக்கவேண்டும்?

துல்ஹஜ்ஜு மாசம் பத்தாம்நாள் அது ஈதுல் அழ்ஹாவினும் பெருநாளின்பொழுது ஓர் வல்லயப்பிரமாணம் உயர்ந்தது முதல் அய்யாமுத்தஷ்ரீக்கின் கடைசிவரைக்குமாம்.

இரவில் உலுஹிய்யா அறுக்குதல் மகுறூகு.

(663.) உலுஹிய்யாக் கொடுக்கத்தக்க மிருகங்களெவை?

ஒருவருடத்துச் செம்மறி அல்லது இரண்டுவருடத்து வெள்ளாடு அல்லது மூன்று வருடத்து மாடு அல்லது ஐந்து வருடத்து ஒட்டகம் என்பவைகளாம்.

மேற்சொல்லிய மிருகங்களில் (ஐபு) உள்ளதும் வரண்டதும் காதறுந்ததும், ஹமலானதும், உலுஹிய்யாக் கொடுக்கத்தகாதவைகளாம் புருவையும் விதையடித்ததும், காது கிழிந்ததும், ஐபுள்ளவைகளல்ல.

கொழுத்த ஓர் ஆடு கொழுக்காத இரண்டு ஆடுகளைக் காண அபுளலாம்.

ஓர் ஆடு ஒருவரைத் தொட்டும் ஒரு மாடு அல்லது ஒட்டகம் ஏழுபெயர்களைத் தொட்டும் [illegible]

(664.) உலுஹிய்யாக் கொடுக்கப்பட்ட மிருகத்தின் மாமிசத்தை யாதுசெய்தல்வேண்டும்?

அம்மாமிசத்தை மூன்றுபங்கு வைத்து ஒன்றை உலுஹிய்யாக்கொடுப்பவன் எடுத்துக்கொள்ளுதலும், மற்ற ஓர் பாகத்தை தகுதிவான்களுக்கு கதியாவாக அனுப்புதலும், மற்ற ஓர் பாகத்தை சதகாக் கொடுத்தலும் வேண்டும் அதுவே சுன்னத்தாம்.

அம்மாமிசத்திற் கொஞ்சமாவது பச்சையாகவேயெடுத்து புகருக்களில் ஒருவருக்காவது சதகாக் கொடுக்குதல் வாஜிபாம்.

உலுஹிய்யாக் கொடுத்தவன் மூன்றிலோர்பாகத்தைக் காண அதிகமாய்த் தின்னாமை அபுளலாம், தான் எடுத்துக்கொண்ட மாமிசத்திற் சிலதை பறக்கத்துக்காய்த் தான் போஷிக்க வைத்துக் கொள்ளுதலும் அது ஈரலாக இருப்பதும் மற்றதைச் சதகாச்செய்தலும் அபுளலாம், அதின் தோலை சதகாச்செய்தலும் அபுளலாம்.

உலுஹிய்யாவில் கொஞ்சமாவது விற்பது ஜாயிசல்ல.

நேர்ச்சையான உலுஹிய்யாவில் தான் தின்பதும் ஜாயிசல்ல.

உஹுஹிய்யாவிலும் பின்சொல்லப்படும் அகீகாவிலும் காபிறுக்குக் கொடுத்தலாகாது.

(665.) உஹுஹிய்யா அறுக்கும்போது ஓதவேண்டியதியாது?

அல்லாகும் மகுபிறு என்று மூன்றுதரம் சொல்லி பிஸ்மில்லா இற்றஹ்மா னிற்றஹீம் என்றும் சொல்லி மூன்றுதகுபீர்சொல்லி வலில்லாகில் ஹம்து அல்லாகும்ம காதிமின்க வஇலைக்க அல்லாகும்ம பதகப்பல்மின்னீ என்பதாம்.

அப்போதில் நபிநாயக முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள்பேரில் சலவாத்துச் சொல்வதும் முஸ்தஹப்பாம்.

(அகீகாவைப்பற்றியது.)

(666.) அகீகாவாவதியாது?

பிள்ளைப் பிறந்ததற்காய் 668-ம் இலக்க வினுவின் விடையிற்சொல்லப்படும் தன்மையையுடைய மிருகங்களை அகீகாவுடைய நிய்யத்துடன் அறுத்துக்கொடுத்தலாம்.

அகீக்காக் கொடுத்தல் தகப்பனுக்கு அல்லது தாய்க்கு சுன்னத்தாம்.

(667.) அகீக்காவை எப்போது கொடுத்தல்வேண்டும்?

பிள்ளைப்பிறந்தநேரந் தொடுத்து புலூகாகும் வரைக்கும் கொடுக்கலாம். பிள்ளைப்பிறந்த ஏழாம்நாள் உதயகாலத்திற் கொடுத்தல் சுன்னத்தாம்.

(668.) அகீக்காக் கொடுக்கத்தக்க மிருகம்யாது?

ஆடாம், ஆண்குழந்தையாகில் இரண்டு ஆடும் பெண்குழந்தையாகில் ஒரு ஆடும் கொடுத்தல்வேண்டும்.

அதின் எலும்பைத் தறிக்காமல் மாமிசத்தைக் கழற்றி இனிப்புப் போட்டுச் சமைத்துக்கொடுப்பதும் இஸ்லாமான மருத்துவச்சிக்கு அதின் வலக்காற் சக்கைக் கொடுப்பதும் சுன்னத்தாம்.

அகீக்காக் கொடுத்தவர்கள் அதில் போஷித்தல், கதியாக்கொடுத்தல் சதகாக் கொடுத்தலாகியவைகளின் ஹுகுங்களியாவும் உஹுஹிய்யாவிற் சொல்லியபடியேயாம்.

(669.) பிள்ளைப்பிறந்தவுடன் யாதுசெய்தல்வேண்டும்?

வலக்காதில் வாங்கும் இடக்காதில் இகாமத்தும்இரண்டுகாதிலும் வஇன்னீ அஉது காபிஹ வதுற்றிய்யதகா மினஷ்ஷைத்தானிற்ற



ஜீம் என்றும் பின்பு ஈத்தம்பழம்அல்லது நெருப்பில்வேகாத இனிப்பினல் சேனை புகட்டுவதும் பிள்ளைப்பிறந்த ஏழாம்நாளில் பிள்ளையின் தலையை இறக்கி அதின் நிறைக்குப் பொன்சதகாக்கொடுப்பதும் கொடுக்க ஏலாவிட்டால் வெள்ளி சதகாக் கொடுப்பதும் ஏழாம்நாளில் பெயர்வைப்பதும் சுன்னத்தாம்.

சேனை புகட்டத்தக்க யோக்கியர் சாலிகான ஆண்பிள்ளையாம். சாலிகான ஆண்பிள்ளையில்லாவிட்டால் சாலிகான பெண்பிள்ளையே சேனைபுகட்டத்தக்கவளாம்.

சேனைபுகட்டுபவர் அப்பிள்ளையின் தகப்பனுக்கு பாறகல்லாகு லக பில்மவகூபிலக என்று துஆச்செய்து அதற்கு சொல்லுதலும் தகப்பன் ஜசாக்கல்லாகுகைறன் என்பதும் சுன்னத்தாம்.

பிள்ளைப்பிறந்து ஏழுநாட் செல்லு முன் அப்பிள்ளை மரணித்தாலும் ஏழாம்நாளில் பெயரிடுதலும் நாலுமாதஞ் சென்றபின் விழும் சிசுக்குப் பெயரிட்டடக்கம்பண்ணுதலும் வேண்டும்.

பெயர்களில் ஏற்றமானது அப்துல்லா, அப்துர்றஹ்மான் என்றும் அல்லாவுடைய அஸ்மாக்களில் ஒன்றைக் கொண்டு அப்து எனும் மொழியைச் சேர்த்துப் பெயரிடுதலாம்.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களின் திருநாமத்தைக்கொண்டு பெயரிடுதல் ஏற்றமானதாம்.

நபிநாயகம் அவர்களைத்தவிர மற்ற நபிமார்களின் பெயர்களைக் கொண்டு பெயரிடுதல் மக்றூகல்ல.

மலிகுல் முலூக்கு அப்துந் நபி, அப்துன்னபி, காளிகுளாத்து ஜாருல்லா றசூலுல்லா முதலிய பெயரிடுதல் மக்றூகு.

மலக்குகளின் நாமத்தைக்கொண்டு நாமந்தரித்தல் ஹறுமாகாது.

ஷைத்தாபு, ஹுறுபு; எனும் பெயர்களைத் தரித்தல் மக்றூகு.

வரிசையானவர்களைச் சயிக்கினைப் பெயரினல் அழைத்தல் சுன்னத்து.

கெட்டப்பட்டப் பெயரைத் தரிப்பதும் அப்பெயரினல் அழைப்பதும் ஹறுமும்.

பெண்களின் பெயர்களில் மறியம்பித்திம்மா, ஆயிஷா, கதீஜா எனும் பெயர்களும் மற்ற நம்பிருட்டிமார்களின் பெயர்களும், பெண்களுக்குத் தரித்தல் வேண்டும். இவைகளில், ஆயிஷா, சாறு ஹவ்வா, றஹ்மா, சபுறு முதலிய பெயர்கள் ஏற்றமானதாம்.

ஆண்பிள்ளைகளின் பெயர்களைக்கொண்டு பெண்களை அழைத்தல் ஆதத்துக்கு மாறும், மகுறூகல்ல.

அடிமைகளை மாசங்களின் பெயர்களையும் அழகான பெயர்களையுங் கொண்டு அழைக்கலாம்.

(670.) பிள்ளைகளைப் பெற்றாரின் நாமத்தா லழைக்கலாமா?

பிள்ளைகளைப் பெற்றார் உஸ்தாதுமார்களின் பெயரினால் அழைத்தல் மகுறூகு.

புருடன் மனைவியாகிய இருவரிலொருவரை மற்றவரின் நாமத்தா லழைத்தல் மகுறூகாகாது.

பெற்றார் மக்களை அன்பு வருத்துவதற்காய்க் கெட்டபெயரினால் அழைக்கலாம் அப்பெயரையே நிலைப்படுத்தலாகாது தான் ஹயாத்தாயிருக்குங் காலமெல்லாம் தன்மக்களுக்குத் தன்பெயரிடாதிருத்தல் சுன்னத்து.

ஆடு, மாடு முதலியவைகளுக்கும் வயல், வீடு, தோப்பு, முதலியவைகளுக்கும் பெயரிட்டு அழைக்கலாம்.

முஸ்லீங்களாகிய சகலரும் முறைவண்ணமாய் எண்ணை தேய் [illegible] மும்மூன்றுதரம் சுறுமா இட்டுக்கொண்டு உறங்குதல் நாற்பது நாற்பதுநாளுக்கொருமுறை நகம் ஆனத்து உரோமம் கமுக்கட்டு உரோம மாதியவைகளைக் களைதல் அவைகளைப் புதைத்தல், மீசையை உதடுவெளியாகத்தக்கதாய்வெட்டுதல் தலைஉரோமம். தாடிரோமங்களின் நரையை சிகப்பு அல்லது மஞ்சள் நிறமாகும்படி சாயங்காய்ச்சுதல்; தலைஉரோமம் தாடிரோமங்களைச் சீப்புமுதலியவைகளால் விடுத்துவாருதல், பெண்களுக்கு தாடி மீசை முளைத்தால் பிடுங்குதல், பெண்கள் புருடன் ஹாளிறா யிருக்கும்போது மருதணிமுதலியதால் கைகால்களை அடையவளை யச்சாயங்காச்சுதல் என்பவைகள் சுன்னத்தாம்.

கருமையான சாயங் காய்ச்சுதலும், பல்லை இராவுதலும்; கூந்தலை நஜீசான உரோமத்துடன் அல்லது மனிதரின் உரோமத்துடன் சேர்ப்பதும், பச்சை குற்றுதலும் ஆண்பிள்ளை, கை, கால்களுக்கு மருதணி முதலியவைகளாற் சாயங் காய்ச்சுதலும் ஹறாமாம்:

கண்டத்துக்கு மேலுள்ள உரோமங்களை நீக்குதல், தலை உரோமங்களைக் கொஞ்சம் இறக்கி, மற்றதை, இறக்காமல் வைத்தல், ஆகியவைகள், மகுறூகாம்.

தலை உரோமத்தை, சிகர்த்த பட்டுநூல், கம்பிளி நூல்களைக் கொண்டு சேர்த்துக் கொண்டை முடியலாம்.



## அல்பாபுல் தாலிது பீபயானில் ஸைதிவல் திபுஹி.

### மூன்றாம்பாபு. வேட்டையாடுதலையும் தெபுஹ் செய்தலையும் அறிவிப்பையும் பற்றியது.

---

(971.) மாமிசமாகிய நாமத்தா லழைக்கத்தக்க ஹயவானின் மாமிசம் ஹலாலாவதற்கு யாது செய்தல் வேண்டும்.?

வேட்டையாடுதல் அல்லது அறுக்குதல் வேண்டும். அது விரட்டியாத ஹயவானை வேட்டையாடலும், மருவுதலான ஹயவானை அறுத்தலுமாம். இவ்விரண்டாலும் மரணித்தல் வேண்டும்.

வேட்டையிற் பழகிய நாய் வல்லத்தான், இராசாளி, முதலியவைகளோ, வை அதுபிடித்து மரணித்தல் அல்லது, அம்புமுதலியவைகளைத்து மரணித்தல். அல்லது இவைகளால் வேட்டையாடப்பட்டு மரணிக்குந் தருணமாகிய ஹறக்கத்திற் காணப்பட்டு மரணித்தல், அல்லது அதையறுப்பதற்காய் யாதேனும் நிறக்கேடு செய்யா திருக்க மரணித்தல் அல்லது அம்மிருகம் ஹயாத்து முஸ்தகிற்றத்துள்ளதா யிருப்பதைக்கண்டு, உடனே அறுத்து மரணித்தல் ஆகியவைகளால் மடலின்மாமிசம் ஹலாலாம்.

நாய்பிடித்து, அம்மிருகத்தின் மாமிசத்தில் கொஞ்சமாவது தின்றாலும், உடையவனைக்கண்டு விரளாவிட்டாலும் அவனுக்குக் கொடுக்காவிட்டாலும் வேட்டையின் ஷறுத்துத் தப்பிவிடும் வேட்டையில் ஷறுத்துத் தப்பினால் அகப்பட்ட ஹயவானின் மாமிசம் ஹறாமாகும்.

குறித்த இலக்குத் தவறாமல், சுபெயனைச் சோதித்துக் காணப்பட்டவன் துப்பாக்கியால் வேட்டை யாடலாம்.

எவ்வித வேட்டையிலகப்பட்டதா யிருந்தாலும் அம்மிருகத்தின் ஹயாத்து முஸ்தகிற்றத்து, தரிபாடா யிருந்து அறுக்காவிட்டால் ஹலாலாகாது.

களிமண் உண்டைகளை வில்லில்வைத்தெய்து வேட்டையாடலாம்: இது, முன்னாட்களில் ஆகத்தான வேட்டையாம்.

(972.) எத்தனை ஷறுத்துக்களைக்கொண்டு வேட்டை மிருகம் ஹலாலாகும்.?

வேட்டை யாடுபவன், முஸ்லீமா யிருக்குதல். வேட்டையையெய்யத்து வைத்தல். பார்வை யுள்ளவனா யிருத்தல். மும்மயிசா யிருத்தல். ஹஜ்ஜுக்கு இஹ்றாம் கட்டாதவனா யிருத்தல் நாய், வல்லத்தான் இராசாளி அம்பு துப்பாக்கி, ஆகியவைகளைக்கொண்டு, வேட்டையாடுதல் எனும் ஆறுமாம்.

(673.) நாயைக்கொண்டு வேட்டையாடப்பட்ட மிருகத்தில் அந்த நாய்கடித்த இடம் ஹலாலாமா.?

வேட்டைநாய் கடித்த ஸ்தானத்தை கழுவிவிட்டால் ஹலாலாம்.

(அறுப்பைப் பற்றியது.)

(674.) அறுப்பின் ஷறுத்துக்களெவை?

நிய்யத்து வைத்தல், அறுப்பவன் இஸ்லாமாயிருத்தல். மூச்சையும் மரியையும் அறுக்குதல். அறுத்து முடியுமட்டாய் அறுத்த கையை, உயர்த்தா திருத்தல் எனும் ஐந்துமாம்.

அறுக்கிறேன். அல்லது, இதைஹலாலாக்கிறேன். என்று நிய்யத்து வைத்தல் வேண்டும்.

மூச்சுப்பறிகிற மூச்சை அறுத்தல்வேண்டும்.

அறுக்கையில். அம்மிருகம் துடித்ததற்காய், பதறிக் கையை எடுத்தவன், கொஞ்சமும் தாமதிக்காமலும் கிறக்கேடு செய்யாமலும் அறுத்தால் ஹலாலாம்.

(675.) அறுப்பின் வாஜிபுகளெவை?

அறப்பு முடியுமுன் சாகிறவஸ்தின் ஹறக்கத் தளவிலாகாமல் இருப்பதற்காய். மூச்சை சீக்கிரமாய் அறுத்தலொன்றுமேயாம்.

(676.) மூச்சைத் தலைப்பக்கத்திற் சேர்த்துக் கொள்ளலாமா.?

(ஹல்கு) மூச்சை முற்றாய்த்தலைப்பக்கத்திற்சேர்த்து அறுத்தால், சுன்னத்துத் தப்பிவிடும். அதனால் மாமிசம் ஹறாமாகாது.

மூச்சியில் கொஞ்சமாவது தலைப்பக்கத்திற் சாராமல் முற்றும், உடற் பக்கத்தில் சார்ந்திருந்தால், அம்மிருகத்தின்: மாமிசம் ஹறாமாம்.

(677.) தாயை அறுப்பதால் மாணித்தகுட்டிஹலாலாகுமா?

தாயைஅறுத்தபோது வயிற்றிலிருந்த குட்டி உடனே மாணித்தாலும், தாயின் வயிற்றைக் கீறிவெளிப்படுத்தியபோது துடித்தசாய், வெளியாகி மாணத்தாலும் அதுஹலாலாம்.

(678.) அறுப்பின் சுன்னத்துக்களெவை.?

அறுக்கப்படுபவை தாகித்திருந்தால் தாகந்தீர்த்தல். அறுக்குந்தானத்தளவில் மெல்ல மெல்ல இழுத்தல், கத்தியைக் கூராக்கிக்



கொள்ளுதல், அறுக்கப்படும் பிராணியின் ஹல்கையும் அறுப்பவனின் முகத்தையும் கிபலாவுக்கு நேராய்த் திருப்பிக்கொள்ளுதல். அறுக்கும்போதும்வேட்டையிற் குறிப்புவைக்கும்போதும்வலையிற் கண்ணி தோண்டும்போதும் பிஸ்மில்லாஹி வல்லாஹு அகுபர் அல்லாகும்ம சல்லிவசல்லிம் அலாசெய்யிதினா முகம்மதின் வஆலிஹி என்றோதுதல் கத்தியை ஹல்கில் மென்மையான பொறுப்பாய் நடத்தி மீளுவித்து இருபக்கத்தின் நரம்பையும் அறுத்தல். ஒட்டகத்தை நிப்பாட்டி அல்லது முட்டுக்குத்தவைத்து அறுத்தல், மற்றமிருகங்களை ஒருபக்கமாய்ச் சாய்த்துக்கிடத்தியறுத்தல் கரையில் ஹயாத்தாயிருக்கும் பெருமீன்களை அறுப்பின் பிரகாரம் அறுத்தல் ஆகியவைகளாம்.

(679.) வியாதிதொடாத பிராணியில் ஷறுத்திடப்படுபவைகளெவை?

அறுக்கத் தொடுக்கும்போது ஹயாத்து முஸ்தகிற்றத்துத் தரிபாடாயிருந்து அறுத்தபின்பின் மிகுந்த துடிக்குதலாய்த் துடித்தல். இரத்தம் ஒலித்தாலும் குதித்தாலும் ஹயாத்து முஸ்தகிற்றத்துத் தரிபாடாயிருக்குமென்ற எண்ணமுண்டாகுதல் எனு மிரண்டுமாம்.

ஹயாத்து முஸ்தகிற்றத்தில் சக்குவைக்கப்பட்டால் அம்மாமிசம் ஹறாம்.

நோய், பசி, முதலியவைகளால் குற்றுயிராயிருக்கும் பிராணியை அறுக்கலாம். அம்மாமிசமும் ஹலாலாம்.

(680.) அறுப்பின் மக்ரூகுகளெவை?

அறுபடப்போகிற பிராணிக்கெதிரே கத்திதீட்டுதல், வேறோர் பிராணியை எதிரே வைத்துக்கொண்டு அறுக்குதல், இருளில் அறுத்தல், இரவில் அறுத்தல், மழுங்கிய கத்தியால் அறுத்தல், அறுக்கும்போது பிஸ்மில் சலவாத்தாதியவைக ளோதாதிருத்தல், ஹறாம் போக முன் தலையைத் திருகுதல், உரித்தல், என்பவைகளாம்.

உயிருள்ள சிறுமீனை அறுப்பதும் உயிரோடே சமைப்பதும் மக்ரூகாம்.

## அல்பாபுல்றுபிஉ பீகிதாபில் அது அமதி.

(நான்காம்பாபு போசனமாமிசமாதியவைகளைப்பற்றியது.)

(681.) (ஹயவானத்து) உயிர்ப்பிராணிகள் எத்தனைவகைப்படும்?

மஉகூல் கைறு மஉகூல் என இருவகைப்படும்.

ஷறஇல் போஷிப்பதற் காமாக்கப்பட்டவைகளை மஉகூல்என்றும் ஆமாக்கப்படாதவைகளை கைறு மஉகூல் என்றும் அழைப்பார்கள்.

(682.) மஉகூல் ஆகியவைகள் எத்தனைவகைப்படும்.

மஉகூலுல் பற்றிய்யா மஉகூலுல் பஹ்ரிய்யாவென இருவகைப் படும்.

நிலத்தில் வசிப்பவைகள் பற்றிய்யாவென்றும் நீரில் வசிப்பவைகள்பஹ்ரிய்யாவென்றும் பெயர்பெறும்.

கைறுமஉகூலும் பற்றிய்யாபஹ்ரிய்யாவென இருவகைப்படுமோம்

(683.) நிலத்தில்வசிப்பவைகளாகிய விலங்குகளில் மஉகூலானவைகள்எவை?

ஒட்டகம் மாடு ஆடு குதிரை மரை மான் முயல் குழிநரிகுளிமான் கலைமுளா உடும்பு மானிறமுள்ள வெள்ளெலி முள்ளான் மலையணில் முதலிய விலங்குகளாம்.

(684.) பட்சி ஜாதியில் மஉகூலானவைகளெவை?

கோழி வான்கோழி காளுன்கோழி கின்னிக்கோழி நீமுழுங்கி புறா அன்னம் குயில் காடை சிட்டுக்குருவி கொண்டைக்கிளாத்தான் கவுதாரி பயிர்க்காகம் பொன்னி அடைக்கலான் தாரா பாத்தை அன்றில் கொக்கு நாரை. குருகு புள்ளு சிறகி உள்ளான் பூனிதுக்கணன் முதலிய இடுக்கித்தின்னாத பறவைகளடங்கலுமாம்.

(685.) நீரில்வசிப்பவைகளாகிய மட்சசாதியில் மஉகூலானவைகளெவை?

ஆப்தரிய்யர் கணவா சுறா விளாங்கு திருக்கை இறால்முதலிய மீன் வகையடங்கலுமாம்.

மட்டி சங்கு சிப்பி ஜவிரலி முதலியவைகள் ஹறும் கிலாபின்படி மகுறூகு.

மஉகூலாகிய ஹய்வானை அறுப்பதற்குமுன்யாதேனும் உறுப்புக்களைப்பிரித்துப் புசித்தல் ஹறாமாம்.

பித்தும் உரோமமும் கெட்டியாகிய எலும்பும் ஹறுமாம்.

குதையாகிய உறுப்பும் முன்துவாரமும் பின்துவாரமும் தகறும் சலையும் ஊத்தாம் பெட்டியும் தோலும் சவ்வும் நாம்பும் மகுறூகாம்.



மஉகூலானவைகளின் தங்கடம் வருத்தாத முட்டையடங்கலும் ஹலாலாம்.

ஆமை காகம் பாரந்து ஆகியவைகளின் முட்டை மகுறூகு தஹ்ரீமாவாம்.

கோழிமுட்டையில் மஞ்சட்கரு, வெள்ளைக்கருவுடன் கலந்திருந்தாலும் குஞ்சு உண்டாகத்தக்கதா யிருந்தால்ஹலாலாம்:

மஉகூலாகிய ஹய்வானிற் சிறியதை விதையடிக்கலாம் பெரியதை விதையடிக்கலாகாது அதுவெறுமாம். செவியை வெட்டுதல் முகத்திற் சூடு சுடுதலாகியவைகளும் ஹறாம். வியாதிக்காக அல்லது அடையாளத்துக்காக முகமல்லாத ஸ்தலங்களிற் சேதப்படுத்தாத விதமாய்ச் சுடலாம். ஒருஹறையால் அறிந்து கொள்ளத்தக்க அடையாளமாகுமென்றிருக்க இரண்டு அல்லது அதற்கதிகமான ஹறுபுகள் சுடலாகாது.

மனிதரையும் வியாதிக் காய்ச் சுடலாம்.புள்ளை முதலியநோய் நீக்குவதற்காய் அவயவங்களி லொன்றையுந் தறிக்கலாம்.

செத்த மஉகூல் எலி ஆகியவைகளை போஷிக்கும்படி காபிர்களுக்குக் கொடுத்தல், உயிருள்ளதை அறுக்காமல் தின்பார்களென்றறிந்துகொண்டு காபிரானவர்களுக்கு விற்குதல், ஆகியவைகள் ஹறுமாம்.

நஜீசானதையும் செத்ததையும் காகம், பூனை, புலி, முதலியவைகளுக்குக் கொடுக்கலாம்.

(686.) கைறு மஉகூல்ஆகியவைகளெவை?

விலங்கினத்தில் யானை, புலி, கரடி, ஓநாய், சிங்கம், நாய், கழுதை, கோவேறுகழுதை, பூனை, நரி, பெருநரி, மந்தி, குரங்கு, அருக்கு. பெருச்சாளி, செருந்தி, பாக்கான், முதலியவைகளும் ஓணான், அணில், அரணை, எலி, மூஞ்சூறு, உண்ணி, முதலியவைகளும் பட்சிசாதியில் இராசாளி,வல்லூத்தான்,வல்லூறு,காகம், கழுகு, பருந்து, ஆந்தை, கூகை, கரிக்குருவி, செம்பகம், மரங்கொத்தி, கங்காணம், கிளி, மயில், வௌவால், முதலியவைகளும் வண்டு. குளவி, வண்ணாத்தி, தும்பி, ஈசல், ஓலங்கு, மின்மினி, ஈ, எறும்பு, மூட்டை, சென்னு, கொசு, புழுக்கள், முதலியவைகளும் பாம்பு, பல்லி, கட்டுவக்காலி, தேள், முதலிய விஷமுள்ள செந்துக்களும் இவைகளைத்தவிரக் காலினாலிடுக்கிப் புசிப்பவைகளடங்கலுமாம்.

(687.) நஜீசைத் தின்னும் மௌகூலாகிய ஹயவானைப் போஷிக்கலாமா?

ஒட்டகம், ஆடு, மாடு, கோழி முதலியவைகள் நஜீசானவைகளைப் புசிப்பதால் நஜீசின் வாடை வெளியானால் அதின் பால் இறைச்சி முட்டையாகியவைகளைப் போஷித்தல் மக்ரூகாம்.

நஜீசைத்தின்ற ஒட்டகத்தை நாற்பது நாளும் மாட்டை முப்பது நாளும் ஆட்டை ஏழுநாளும் கோழியை மூன்று நாளும் துப்புரவான தீன் அருந்தும்படி செய்வதால் அந்த மக்ரூகு நீங்குமேயன்றி கழுவுதலால் நீங்காது.

பெரிய மீனின் வயிற்றிலுள்ள நஜீசை நீக்குமுன் கருவாடுபோடப்பட்டால் பின்பு அந்தக் கழுவினாலேயன்றி ஹலாலாகாது.

எறும்பு முதலியன தேன் தேன்போன்றவைகளில் விழுந்து செத்தால் அதை நீக்குதல் வருத்தமாயிருந்தால் ஹலாலாம்.

காய் பழங்களிலுள்ள புழுக்களை நீக்குதல் வருத்தமாகுமேயானால் பிரிக்காமல் புசித்தல் ஜாயிசாம்.

நஜீசில் முளைத்த கீரை அல்லது மரத்தின்கனி மக்ரூகல்ல.

(688.) சங்கை கொடுக்கப்பட்ட ஹயவான்களுக்கு உடையக்காரன் போசனங் கொடுத்தல் வேண்டுமா?

ஆம் போசனம் மாத்திரமல்ல குடிக்க ஜலமுங் கொடுத்தல் வேண்டும்.

தீன் தின்னாத கன்றுகளுக்குக் காணும்படி தாயின்பாலை விட்டு வைத்தலும் வாஜிபாம்.

பாலை அறப் பீச்சாமல் விடுவதும் கறப்பவன் தன் நகத்தை அறுப்பதும் சுன்னத்தாம்.

கன்றுக்குப்பால் தேவையற்றமுன் தாயைவிட்டுக் கன்றைப் பிரித்தல் ஹறாம் கன்றை அறுக்கலாம்.

மிருகத்தை வீணாய் அடித்தல் அதிகச்சுமை ஏற்றுதல் வழக்கமான சுமையை எப்போதும் சுமப்பித்தல் எப்போதும் வண்டியில் பூட்டியடித்தல் அதின் உரோமத்தை ஒட்டவெட்டுதல் அல்லதை சிரைத்தல் வாலைவெட்டுதல் ஆகியவைகள் ஹறாம்.

கன்று மரணித்த தாயில் எவ்விதமாயும் பால்கறக்கலாம்.

மிருகங்கள் புணருங்காலத்தில் ஆண் மிருகங்களையும் பெண்மிருகங்களையும் சேகரமாக்குதல் வாஜிபாம்.

குதிரை அல்லது குதிரைக் கொப்பான பெரிய தகறுள்ள மிருகத்தை மாடு முதலிய மிருகங்களில் விடுதல் ஹறாம். தமர்க்கடா காளை முதலியவைகளைப் புணர்ச்சிக்குக் கொடுத்துக் கூலிவாங்குவதும் ஹறாம்.



போருக்குவிடுவதற்காய் விலங்கு பட்சி ஆகியவைகளை வளர்த்தல், போருக்குவிடல், அதற் குதவிசெய்தலாகியவைகள் ஹறாம். அவைகள் முட்டிக்கொள்ளுதல் கொத்திக்கொள்ளுதலைக் கண்டால் தெண்டித்து விலக்குதல் வாஜிபாம். முட்டுகின்ற மாடுமுதலியதை மனிதர்கள் புழங்கும் வழிகளில் விடாதிருத்தல் உடையவன்பேரில் வாஜிபாம்.

காற்குளம்பு தேய்ந்து வருத்தப்படுத்துமேயாகில் வழக்கம்போல் நடிக்கலாம் மிருகத்தை வருத்தப்படுத்தாமல் இலாடமுங் கட்டலாம்.

மனிதனையும் ஹயவானையும் மற்றெல்லாவற்றையும் சூரேவியென்பது ஜாயிசல்ல, சுன்னத்தின்படி காபிரான வர்தவர்களையும் பெரும்பாவிகளையும் மொத்தமாய்க் குறிக்காமல் லஃனத்துச்செய்யலாம். யசீதைலஃனத்துச் செய்யலாமென்ற கிலாபு நடந்திருந்தாலும் குஜ்ஜத்துல் இஸ்லாம் கஸ்ஸாலி இமாம் அவர்களின் சொற்படி ஜாயிசல்ல.

பிறனுடைய நிலத்தில் கூடுவைத்த பட்சியின் முட்டையை எடுப்பதும் பிறனுடைய வலையில் அல்லது கூட்டில்விழுந்த மீன் அல்லது மான் முதலியவைகளைப் பிடிப்பதும் ஹறாம்.

ஆடுமாடு முதலியதின் தோலை விரிப்பாக்கிக்கொள்ளலாம் புலி முதலியதின் தோலை விரிப்பாக்கிக்கொள்ளுதல் பெருமையை வருத்துதலால் ஹறாம்.

தீமையை வருத்தும் நட்டுவக்காலி, பாம்பு, பல்லி, எலி, காகம் பருந்து, கடிநாய், கரடி, புலி, மூட்டை, சென்னு, வண்டு, குளவி, முதலியவைகளைக் கொல்லுதல் சுன்னத்து. மக்காஷரீபின் ஹறத்திற் கண்டாலும் கொல்லுதல் வேண்டும்.

பிரயோசனமும் தீமையு வருத்துபவைகளாகிய வல்லுத்தான் இராசாளி ஆதியவைகளைக் கொல்லுதலும்கொல்லாமல்விடுவதும் ஒன்றையொன் றேற்றமானதல்ல.

பிரயோசனமும் தீமையுமில்லாத ஆமை நண்டு கடிக்காதநாய் ஆதியவைகளைக் கொல்லுதல் மக்ரூகு.

தீமைவருத்தாத தேன்குளவியையும் அவ்வித வேட்டைநாயையும் கொல்லுதல் சுன்னத்தின்படி ஹறாம்.

கூலையாளி யெறும்பையும் சுறத்தெனும் சாக்குருவியையும் கொல்லுதல் ஹறாம்.

வழக்கமாய்த் தீமை வருத்தாதவைகள் தீமைவருத்த ஆரம்பித்தால் கொல்லலாம்.

உடம்பைத் தீமைவருத்தும் மண், கல்லு, செங்கல்லு, களிமண், சுண்ணாம்பு, கரி, சாம்பர், உமி முதலியவைகளும் நஜீசானவைகளும் தப்பரவானதில் அவருப்பான காறல் சளி மனி முதலியவைகளும் செத்ததோலில் ஊறவைக்கப்பட்டவைகளும் ஹறுமாம்.

தங்கடப்பட்டவனுக்கு விலக்கப்பட்டவைகளெல்லாம் ஆகுமாயிருந்தாலும் அததின் பத்விபதவியாய்க்கொண்டுவருதல்வேண்டும். அது கோழியும் செத்த மயிலுமிருந்தால் கோழியைத் தின்பது போலாம். பிறனின் உணவும் செத்ததுமிருக்க பிறத்தியான் ஹாஸிருயிருந்து உயிரைக் காப்பாற்றுகின்றமட்டில் செத்ததைத் தின்பதைக்கண்டு கொடாவிட்டாலும் பெறுமதியானவிலைக் கதிகமாய்ச் சொன்னாலும், செத்ததைத் தின்னலாம். பிறத்தியானோடு போராடுதல்ஜாயிசல்ல அதை அதிகவிலைக்குச் சம்மதித்து வாங்கினாலும் பெறுமதி கொடுப்பதே வாஜிபாகும்.

போசனமும் ஜலமும் இருந்து தானுமதனவில் ஹாஜத்தில்லாதவனுயிருக்கையில் சம்மை கொடுக்கப்பட்ட ஹயவான்களிலொன்று அல்லது பலது அதனவில் ஹாஜத்தானுல் அம்மிருகத்துக்கதைக் கொடுத்தல் வேண்டும் கொடாவிட்டால் பாவியாவான்.

(689.) அகிலைத் தங்கடம் செய்யும் வஸ்துக்களைப் போஷிக்கலாமா?

கள்ளு, சாராயம், அரக்கு, கஞ்சா, பூமத்து, மிகுதிஅபியூன், சாதிக்காய் சாதிபத்திரி முதலியவைகளைப் போஷித்தல் ஹறும், போஷித்தல் மாத்திரமல்ல குடித்தலு மப்படியே.

கள்ளு சாராயம் அரக்குமுதலியவைகளைக் குடித்தல் ஹத்தை விதியாக்குமாம்.

மருந்துக்காக கொஞ்சம் அபியூன் பூமத்து கஞ்சா பாசாணம் ஆகியவைகளும் மஸ்து வருத்தாதமட்டில் சாதிக்காய் சாதிபத்திரியும் தின்னலாம்.

(690.) தொழில்களில் மேலானதொழிற்களெவை?

வேளாமை முதலிய பயிர்ச்செய்கையாம்.

கைத்தொழில் வர்த்தகம் கூலிவேலையாகியவைகளில் மூன்றின ஒவ்வொன்றும் பின்தின ஒவ்வொன்றைக்காண வரிசையானதாம்.

ஜாடு வாரி கஸ்ஸாப்பு ஹஜ்ஜாம் காதின் பஸ்ஸாது ஆகியவர்களின் தொழில்களால் சம்பாதித்த போசனம் மக்ருறாகு, சவாம்பண்ணுதல்முதலிய சிறுமையான தொழில்களால் சம்பாதித்தல் மக்ருறாகல்ல.

---



## அல்பாபுல் காமிசு பீபயானின் நதுரி.

(ஐந்தாம்பாபு நதுரைப்பற்றியது.)

(691.) நதுறென்பதின் பொருள்யாது?

நேர்ச்சை என்பதாம் அது முஸ்லீமாகிய முகல்லபாகிய றஷீதாகிய ஒருவன் தனக்கு பறுலு ஐனாக அல்லது சுன்னத்து ஐனாக விதியாகாததைத் தானாகவே விதியாக்கிக் கொள்ளுதலாம்.

(692.) நதுறு எத்தனை வகைப்படும்?

நதுறுத் தபற்றுறு நதுறு முஜாசாத்து என இருவகைப்படும்.

(693.) நதுறுத் தப்பற்றுறு அவதியாது?

முனஜ்ஜிசாகிய லபுலாக அல்லாவுக்காக என்பேரில் தொழுகையில் இன்னது அல்லது நோன்பில் இன்னது அல்லது எவ்வித இபாதத்திலாவது இன்னது அல்லது சதகாவில் இன்னது அல்லது குறுஆன் ஓதலில் இன்னது அல்லது நிகுதிகாயில் இன்னது விதியாயிருக்கு மென்பதாம்.

(694.) நதுறு முஜாசாத்தாவதி யாது?

அல்லாகுத்தஆலா இன்னதை சொஸ்தமாக்கினுல் அல்லது இன்னதைத்தந்தால் என்பேரில் தொழுகையில் இன்னது அல்லது நோம்பில் இன்னது அல்லது எவ்வித இபாதத்திலாவது இன்னது அல்லது சதகாவில் இன்னது அல்லது நிகுதிகாயில் இன்னது அல்லது எவ்வித குறுபத்திலாவது இன்னது விதியாயிருக்கு மென்பதாம்.

(695.) முனஜ்ஜிசாவதி யாது?

நதுறை வேறே யாதேனு மொன்றோடு கொளுகாமையாம்.

(696.) மேலே 693-ம் இலக்க வினவின்விடையிலும் 694-ம் இலக்க வினவின் விடையிலும் சொல்லியபடி நிய்யத்துவைத்தல் போதுமாகுமா?

நிய்யத்துவைத்தால்நதுறு சிறத்தாகாது.வாயினுல் மொழிதல்வேண்டும். இல்லாமல் நிய்யத்துவைத்தல் மாத்திரம் போதுமென்றும் சொல்லப்பட்டன.

(697.) மகுசிய்யத்தாகிய யாதேனு மொன்றைப் பெற்றுக்கொள்ளு தற்காய் நேர்ச்சைசெய்யலாமா?

பாவமான எக்கருமத்தையேனும் பெற்றுக்கொள்ளுதற்காய் நேர்ச்சை செய்தல் ஹறாம்.

(698.) யாதேனு மொன்றைப் பெற்றுக்கொள்ளுதற்காய் நேர்ச்சை செய்தவன் அதைப் பெற்றுக்கொள்ள முன் நிறைவேற்றலாமா?

அது நிறைவேற முன்னும் நிறைவேறிவிட்டாலுங் கொடுக்கவேண்டியதில்லை.

முனஜ்ஜிசாகிய நேர்ச்சை நிறைவேறினால் தாமதிக்காமல் கொடுத்தல் வாஜிபாம்.

(699.) நேர்ச்சையில் பெரியோர்களைக்கொண்டு வசீலாத் தேடலாமா?

அல்லாகுத்த ஆலா இன்னதைச் சொஸ்தப்படுத்தினால் அல்லது கலாசாக்கினால் இன்னார்பேரில் இன்னது ஓதுவேன் அல்லது அவரின் தர்காப்பரிபாலனர்களுக்கு இன்னதைக் கொடுப்பேனென்று வசீலாத் தேடலாம். அவ்விதம் நிறைவேறினால் கொடுத்தல் வாஜிபாம்.

(700.) இன்ன இடத்தி லடங்கிய இன்ன ஒலியுல்லாவுக்கு இன்னதைக் கொடுப்பேனென்று நேர்ச்சைசெய்யலாமா?

அவ்வாறு நேர்ச்சை செய்தால் கூடாது. அதனால் அவ்விடத்தில் நடக்கும் ஆமான செலவுக்கு அல்லது அவ்விடப் பரிபாலனர்களுக்கென்று கருதினால் செலவு செய்யலாம் முஜாவிரீன்களுக்குங் கொடுக்கலாம்.

இரண்டாமதிகாரம்

கிதாபுல்ஸலாத்தி

முற்றிற்று.

# மூன்றாம் அதிகாரம்.

## கிதாபுல்புயூஇ.

### அல்பாபுல் அவ்வலு பீபயானில்பைஇ.

(முதலாம்பாபு வர்த்தகத்தைப்பற்றியது.)

(1.) பைஉ என்பதின் பொருள்யாது?

வர்த்தகம் என்பதாம். அது விற்பனவு கொள்வனவு ஆகிய வியாபாரமாம்.

(2.) பைஇனுடைய றுக்னுகளெவை?

ஆகிது மஃகூது அலைஹி சீகா எனும் மூன்றுமாம்.

விற்பவன் கொள்பவனாகிய இருவரையும் ஆகிது என்றும் விற்கப்படுபவைகளை மஃகூது அலைஹி யென்றும் ஈஜாபு, கபூல் ஆகியவைகளை சீகா என்றும் சொல்லுவார்கள்.

(3.) விற்பனவு கொள்வனவு செய்யும் இருவரும் எத்தனை ஷறுத்துக்களை யுடையவர்களா யிருத்தல்வேண்டும்?

புலூகு, அகில், அதமுற்றிக்கு, அதமுல்ஹஜ்று, அதமுல் இக்றாகு பிகைரிஹக்கி, எனும் ஐந்து ஷறுத்துக்களை யுடையவர்களா யிருத்தல்வேண்டும்.

அதமுற்றிக்கு என்பது அடிமைப்பாத்தியமாம்.

முஸ்ஹபையும் முஸ்லிமாகிய அடிமையையும் வாங்குபவன் இஸ்லாமாயிருத்தல் ஷறுத்தாம்.

படையாயுதமாகிய கத்தி முதலியவைகளை வாங்குபவன் ஹறுபிக்காபிரல்லாதவனா யிருத்தலும் ஷறுத்தாம்.

கொடிமுந்திரிகைப் பழத்தை (கம்று) சாராயம் வடிப்பவனுக்கும், முகவனை இருத்த அடிமையை விலாத்தைக்கொண்டறியப்பட்டவனுக்கும், போருக்குவிடுவதற்காய்ச்சேவலையும், பாய்ச்சலுக்குவிடுவதற்காய்க் கடாவையும், பட்டாடை யணிபவனுக்குப் பட்டையும் விக்கிரகத்துக்கு மணம் பூசுபவனுக்குக் கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும் தகுதிறு செய்யாமல் தின்பது இட்டமாகிய காபிருக்கு ஆடு, மாடு, முதலிய மிருகங்களையும். விற்பது ஹறாம்.

மேற்சொல்லிய கருமங்கள் நடக்குமென்பது சந்தேகமாயிருந்தால் விற்பனவு செய்தல் மக்ரூகு.

பாதைவெட்டி மறிக்குங் கள்வர்களுக்கும் அனீச்சாட்டியகாரர்களுக்கும் ஆயுதபாணங்களை விற்பதும் ஹலாலான பொருளும் ஹறாமான பொருளும் வைத்திருப்பவனுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதும் மக்ரூகு.

(4.) வர்த்தகஞ் செய்யப்படுபவைகளின் ஷறுத்துக்களெவை?

அது துப்பரவானதாயிருத்தல், யாதேனும் பிரயோசனம் பெறத்தக்கதாயிருத்தல். விற்பவனின் சொந்தமாகவேயிருத்தல், விற்பவனுக்குடையதாகவே யிருத்தல், அறியப்பட்டதா யிருத்தலெனும் ஐந்துமாம்.

நஜீசானவைகளில்கள்ளையும் செத்தமிருகத்தின் தோலையும் விற்கக்கூடாது, செத்த தோல் ஊறப்போட்ட கள்ளு சிறுக்கவாக்க இடம்பாடானதாயிருந்தாலுமாம். நஜீசுடன் கலந்ததைப் பிரிக்காமல் விற்கலாம் உரத்துக்காய் சாணி முதலியதையும் விற்கலாம்.

யாதேனு மொன்றில் சிலது மற்றதை யறிவிக்கத்தக்கதாயிருந்தால் அதைக் காண்பதுவே போதுமாம்.

விற்பனவில் தருவிக்கெனும் கொளுகுதலும், தருவித்தெனும், நேரத்தைக் குறித்தலும் ஜாயிசல்ல. விற்பனவு செய்யப்படுபவை ஒப்பிக்கத்தக்கதா யிருத்தல்வேண்டும்.

ஓழித்தோடியஅடிமை தப்பிப்போன மிருகம் எடுக்க ஏலாதபறி கொடுத்த பொருள் வலையில் பிடிக்க ஏலாத தடாகத்துமீன் ஆகியவைகளை விற்றால் விற்பனவு கூடாது; பறிகொடுத்த பொருள் எடுத்துக்கொள்ள இடம்பாடானதாயிருந்தால் விற்கலாம்.

(வட்டியைப்பற்றியது.)

(பைஉல்ரிபா) வட்டியில் சேர்ந்த வர்த்தகங்களாவன, போசன தானியங்கள் பொன், வெள்ளி ஆகியவைகளில் அவ்வவ்வினத்தை அவ்வவ்வினத்துக்குப் பகரமாய் விற்கப்படுமேயாகில் அவ்விரண்டும் ஒரேமஜ்லிசில் ஹாளிறாயிருப்பது மாத்திரமல்ல விற்பவனும் கொள்பவனும், அம்மஜ்லிசைவிட்டுப் பிரிய முதல் கைப்பற்றிக் கொள்ளுதலும் வேண்டும். நிறுக்கப்படுபவையாகில் நிறையாலும் அளக்கப்படுபவையாகில் அளவையாலும் சரிசரியாயிருத்தல்வேண்டும். இல்லாவிட்டால் ஹலாலாகாது.

மேலேசொல்லியவைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்தால் கைப்பற்றுதலும் தவணையில்லாதிருத்தலும் ஷறுத்தாம்.



(வட்டி நான்குவகைப்படும்.)

வட்டியாவது இரண்டிலொரு பாகத்தை அதிகமாக்குதல், கடன் கொடுத்தவனுக்குக்கடன்வாங்கினவனால் பிரயோசனத்தை ஷறுத்திடுதல், விற்கப்படுபவைகளைக் கைப்பற்றாமல் விற்பனவு பேசிய மஜ்லிசைவிட்டுஇருவரி லொருவர் பிரிதல், இரண்டிலொரு பாகத்தில் தவணையை ஷறுத்திடுதல் என நான்குவகைப்படும்.

கடன் கொடுத்தவனுக்குக் கடன் வாங்கினவனால் பிரயோசனத்தை ஷறுத்திடுதலை கடன்வட்டியென்றும் இரண்டி லொரு பாகத்தில் தவணையை ஷறுத்திடுதலை தவணை வட்டி என்றும் சொல்லப்படும்.

தானியம் நாணயமாகியவைகளி லுண்டாகும் வட்டியால் நிவிர்த்திபெறத்தக்க விதமாவது இருவரி லொருவர் மற்றவருக்குத் தன்னுடைய ஹக்கைஹிபத்தாச் செய்தல் அல்லது கடன் எண்டு கொடுத்துப் பின் நீக்கிவிடுதலாம்.

தன் வெள்ளாட்டிக்கும் அவளின் பிள்ளைக்கு மிடையில் விற்பனவு ஹிபத்து, பாகப் பிரிவு, கதியா முதலியவைகளால் பிரித்தல் ஹறாம். இப்பிரிவிலும் மேற்சொல்லிய வட்டி விற்பனவிலும் விற்பனவு பாத்திலாம்.

தாயைவிட்டுப் பிள்ளையைப் பிரிவுப்பராயம்வந்தபின்னும் விலங்கினத்தின் கன்றை பால்குடி மறுத்த பின்னும் பிரிக்கலாம்.

தம்பிசாகிய சிறுபிள்ளையை புலூகாக முன்பிரித்தல் மக்ரூகு.

(5.) வர்த்தகஞ் செய்பவர்கள் எவ்வாறு ஈஜாபு கபூல் சொல்லுதல்வேண்டும்?

விற்பவன் அல்லது விற்பவனின் வகீல் (பிகுதுக) உமக்கு நான்விற்றேன் அல்லது (மல்அகுதுகஹா) இதைஉமக்கு நான் உடையதாக்கித் தந்தேன் என வாயினால் மொழிதல்வேண்டும் இதுவே ஈஜாபாம்.

கபூலாவது கொள்பவன் அல்லது அவனின் வகீல் இஷ்தறைத்து நான் வாங்கிக்கொண்டேன். அல்லது தமல்லக்து நான் உடையதாக்கிக்கொண்டேன் அல்லது கபில்து நான் கபூல்செய்துக்கொண்டேன். என வாயினால் மொழிதலாம்.

கினாயாவாகிய லபுஸுக்களைக்கொண்டும் ஈஜாபு கபூல் உண்டாகும். அவ்வித லபுஸுக்களை மொழியும்போது விற்பவன் விற்பனையையும் கொள்பவன் கொள்வனவையும் நிய்யத்து வைத்தல்வேண்டும்.

ஈஜாபுக்கும் கபூலுக்கு மிடையில் நீண்ட பிரிவின்மையாயிருத்தல் வாஜிபு.

(6.) கியாறு எத்தனை வகைப்படும்?

கியாறுல் மஜ்லிஸ் கியாறுல்ஷறுத்து கியாறுல் ஐபு என மூன்றுவகைப்படும்.

கியாறுல் மஜ்லிசாவது வர்த்தகம் நடத்திய ஸ்தலத்தை விட்டு விற்பவனும் கொள்பவனும் பிரிய முன் தங்கடங்கள் சம்மதப்படி நடத்திக்கொள்ளுதலாம், வர்த்தகம் நடத்திய இருவரிலொருவர் அவ்வியாபாரம் முடிவானதை யறிந்துகொண்டு அந்தஸ்தலத்தை விட்டுப் பிரிந்தால் கியாறு விழுந்துவிடும்.

வர்த்தகம் முடிவான ஸ்தானத்தைவிட்டு எவ்வளவு நேரம் பிரியாதிருந்தாலும் கியாறுண்டு.

வர்த்தகம் நடத்திய இருவரிலொருவர் மரணிப்பதால் மரணித்தவனின் கியாறு அவனின் அநந்தாகாரரளவில் திரும்புமாம்.

(7.) கியாறுல் ஷறுத்து ஆவதியாது?

வர்த்தகம் நடத்திய இருவரும் அல்லது ஒருவர் மூன்றுநாளுக்குள் பிரியமானால் எடுத்துக்கொள்வேன் இல்லாவிட்டால் எடுக்கமாட்டேனென்று ஷறுத்திட்டுக் கொள்ளுதலாம் அது மூன்றுநாட் சென்றால் விழுந்துபோம்.

(8.) கியாறுல் ஐபு எவ்வாறாம்?

வர்த்தகஞ் செய்யப்பட்டதி லுள்ள ஐபை அறிவிக்காமல் விற்றால் கொண்டவனுக்கு ஷறஇல் நியமிக்கப்பட்ட கியாறுண்டு. அவ்வைபு விற்பனவுசெய்ய முன்னுண்டானதாயிருத்தல்வேண்டும்.

கியாறுல்ஐபுசெயலாலுள்ள மருட்டினால் தரிபடுமாம். மாடாதியவைகளுக்கு மடிக்கட்டுதல் ஹறாம்.

கல்வகை முத்து ஆகியவைகளை வாங்குவதில் பார்வைக்காரனாயிருப்பவனை நம்பி அவனின் பார்வைப்படியென்று வாங்கினதில் அவனுடைய பார்வைக்குச் சரிவராதிடில் கியாறுண்டாமாம்.

வாங்கப்பட்டதில் ஐபுஉண்டாயிருப்பதைக் கண்ணுற்றபோதே தீவிரமாய் பஸ்கு செய்தல்வேண்டும். யாதோர் உதறின்றிப் பிற்படுத்தினால் பஸ்கு செய்யக்கூடாது.

வகுத்துவந்து நுழைந்த தொழுகை, ஹாளிருயிருக்கும்வஜ்பனம், களாஹாஜத்து என்பவைகளாற் செல்லும் நேரம் பிரத்தைத் தப்



பிவிக்காது. விற்றவனுக்குச் சலாம் சொல்லுதலும் கியாறைத்தப்பிவிக்காதாம். இரவில்கண்ட ஐபை விடியுமட்டும் பிற்படுத்துதலு மப்படியே.

நோயினால் விற்றவனிடம் செல்லவியலாவிட்டால் இரண்சாட்சிகளின் முன்னிலையில் பஸ்குசெய்தல் வேண்டும்.

ஐபுவெளியான அடிமையை யாதோர் பணிவிடையும் செய்வித்தலாகாது. கொஞ்சமாவதுசெய்வித்தால் மீளுவித்தல் ஆகாது.

ஓர் மிருகத்தை சகல ஐபுகளையும் விட்டு நீங்கியதென்று ஷறுத்திட்டு அல்லது ஐபினால் மீளுவித்தலில்லை என்று ஷறுத்திட்டு விற்றால் அவ்விற்பனவு கூடும், அதுதுடைய காலத்தில் அவ்வைபு இருந்து அதை விற்றவனறியாவிட்டால் விற்றவன் நீங்கிவிடுவான்.

ஹயவானல்லாததில் மறைந்த ஐபு வெளியான ஐபு அடங்கலையும் விட்டு விற்றவன் நீங்கான்.

யாதேனும்ஐபைக்கண்டு இந்த ஐபு பூர்வமானது அல்லது புதியதென்பதில் இருவரும் விரோதித்தால் விற்றவனைச் சத்தியங்கொண்டுண்மைகொள்ளுதல் வேண்டும். பழைய ஐபைப்புதிய ஐபினாலேயன்றி அறியப்படாதிருந்தால் கொடுத்துவிடல் வேண்டும். புதிய ஐபுக்காய் யாதேனும் போட்டுக்கொடுக்கவாகாது.

ஐபினால் மீளுவிப்பதில் கொழுப்புப்போல் சேர்ந்த அதிகமெல்லாம் அதைத்தொடரும் அதைவிட்டுப்பிரிந்த அதிகமெல்லாம் அதைத்தொடராது. தொடராவிட்டாலும் அது வாங்கினவனுக்காம் இவனுடைய ஆட்சிக்குவந்தபின் உண்டானஹம்லு மப்படியேயாம்.

விற்கப்பட்டதைக் கொண்டவன் ஒப்புக்கொள்ள முன் விற்றவனே பாதுகாக்கப் பொறுப்பாளியாவான் விற்றவனின் பொறுப்பிலிருக்கையில் உண்டாகும் இலாபமும் சேதமும் அவனையே சேருமாம். அதையோ விற்றவன் சேதப்படுத்தினால் விற்பனவை முறித்ததுபோலாயிற்று, பிறர் சேதப்படுத்தினாலும் யாதேனும்ஆபத்தினாற் சேதம் நேரிட்டாலும் ஐபாகிவிட்டாலும் விற்பனவுமுறிந்துவிடுமாம்.

வாங்கினவன் சேதப்படுத்தினால் ஒப்புக்கொண்டதாயிற்று. வாங்கினவன் கைப்பற்ற முன் யாதேனும் விற்பனவு கதியா, சதகா, ஈடுவைத்தல் கூலிக்குக் கொடுத்தலாதியவைகள் செய்தால் அது பாத்திலாம்.

தோட்டம், வீடு, ஆகியவைகளின் திறப்பை (முஷ்தரீ) கொள்வனவுகாரனிடம் கொடுத்தலே அந்த நிலையியற் பொருள்களை

ஒப்பிவித்தலாம். அப்போதே விற்றவன் அதிலிருக்குந் தன்னுடையபொருட்களை நீக்கிக்கொள்ளுதல்வேண்டும்

இயங்கியற்பொருளாகிய கப்பல், ஹயவான், ஆதியவைகளை தன் தானத்தைவிட்டு கொள்வனவுகாரனின் ஸ்தானத்தில் ஆக்குதலே ஒப்புவித்தலாம். கப்பல் முதலியவைகளிலிருக்குந் தன்னுடைய பொருட்களை இறக்கிவிடல்வேண்டும்.

(விருட்சம். வீடு. கனி. முதலிய வர்த்தகத்தைப் பற்றியது.)

(9.) பைஉல் உஸூலிவஸ்திமார் என்பதின் பொருள்யாது?

நிலம், வீடு, மரம், பழமாகியவைகளின் வர்த்தகம் என்பதாம்.

நிலம் விற்பதால் அந்த ஸ்தானத்தில் தற்காலத்திலுள்ள மரம் வீடு, முதலியவைகள் கொள்வனவு காரனுக்கே உடையதாகும்.

தோட்டம், சிற்றூர் முதலியவைகளை விற்பனவு செய்தலால் அதிலுள்ள நிலம், வீடு, மரமாதியவைகளெல்லாம் சேர்ந்துகொள்ளுமாம். கழட்டப்பட்ட கதவு நிலைகளும் கட்டிற் புட்டுவமாகியவைகளும் நிலத்திற் புதைக்கப்பட்ட கல்லுகளும் விற்பனவு செய்யப்பட்டதாகாது. கட்டப்பட்ட நிலைகள், மரங்கள், அவ்விற்பனவில் சேர்ந்துகொள்ளுமாம்.

வீட்டை விற்பதில் அதிலுண்டான பூமி, மரம், கட்டிடங்கள் பலவுற்றும் ஏழாம் பூமிவரைக்கும் கொண்டவனுக்குடையதாம்.

பயல் வெள்ளாட்டிஆகியவர்களை விற்கும் விற்பனவில் காதிலணிந்திருப்பதும் காறை, காப்பு, மோதிரம், செருப்பு ஆகியவைகளும் ருஜிஹான் சொல்படி உடையும் சேராது.

பூமியைத்தவிர மரத்தைமாத்திரம் பச்சையாய் விற்கலாம். அவ்விற்பனவில் அம்மரத்தின்பச்சையாகிய கொப்பும்வேரும்சேருமே தவிர அம்மரம் நிற்கும் நிலம் சேராது.

மரவிற்பனவில் விற்கும்போது வெளியான பழங்கள், தேங்காய், இளநீர், முதலியவைகள் சேராது.

பழம் வெளியானாலும் வெளியாகாவிட்டாலும் இருவரிலொருவருக்குப் பழத்தைப் பேசி விற்றால் பேசினபடியே நடத்துதல் வேண்டும்.

வெளியான பழத்தையும் மரத்தையும் மொத்தமாகப் பேசிக்கொண்டால் அப்பழத்தை அறுக்குமட்டாய்த் தாமதித்தல்வேண்டும்.



மிருக விற்பனவில் தாயை விற்பதால் அதின் வயிற்றிலிருக்கும் குட்டியும் கொள்வனவு காரனுக்குடையதாகும்.

தாயொருவனுக்கும் சிசு ஒருவனுக்குமாயிருக்கும் மிருகத்தை விற்றால் தாயை வாங்கியவனுக்குக் குட்டிகொண்டுடையதாகாது.

(10.) விற்பனவு கொள்வனவுகாரர்களாகிய இருவருக்கும் கிலாபு நேரிட்டால் யாதுசெய்தல்வேண்டும்?

பாயிஉம் முஷ்தரீயும் விற்பனவு செய்யப்பட்டதில் அருது சரிதானென் றேர்த்துக்கொண்டு உரொக்கம், தவணையில் அல்லது இயாறுடைய ஷறுத்துடன் அல்லது இயாறுடைய ஷறுத்தின்றி என்பதில் அல்லது தொகையின்கதறில் இருதிலாபாகி சாட்சிகளும் வித்தியாச வித்தியாசமாய்ச் சொன்னால் அவ்விருவரில் எல்லா ஒவ்வொருவருந்தன் சொல்லைத் தரிபடுத்தி மற்றவனின் சொல்லைத் தடுக்கத்தக்கதாய் சத்தியம் செய்தல்வேண்டும், சத்தியம் செய்தபின் இருவரும் அவரவர்களின் கொள்கைக்குக் குறைந்தவிற் பொருந்திக் கொள்ளலாம். அவ்வாறு ஒருவருக்கொருவர் சயித்துக்கொள்ளாவிட்டால் அவ்விற்பனவை ஹாகிம் பஸ்கு செய்தல் வேண்டும்.

யாதேனுமொன்றை நானுமக்கு விற்றேனென்று பாயிஉசொல்ல மற்றவன் அதையெடுத்து வைத்தாய் என்று அல்லது நன்கொடைசெய்தாய் என்று இருவரும் பிணங்கிக்கொண்டால் அதைப் பற்றிச் சத்தியம் பண்ணலாகாது.

கொடுக்கல் வாங்கலில் விகற்பமுண்டானால் பெரும்பாலும்சித்தத்தை வழக்காடுபவனையே ஏர்த்துக்கொள்ளுதல்வேண்டும்.

வியாதியாயிருக்கும்போதில் நன்கொடை கொடுத்த ஓர் நன்கொடையைப்பற்றி அந்த நன்கொடை கொடுத்தவனின் அநந்தரகாரர் அவன் அறிவில்லாம லிருக்கையில் சொன்னானெனக் கொண்டுவரும் தருவாவை ஒப்புக்கொள்ளுதலாகாது.

நன்கொடை கொடுக்க முன்னமே மயக்கமுண்டாகி இந்த நன்கொடை கொடுக்கும்வரைக்கும் மயக்கமாகவே இருந்தானென வரும் தருவாவை ஒப்புக்கொள்ளலாம்.

கொள்வனவுகாரன் வாங்கியதில் ஐபிருக்கக்கண்டு மடக்கிக் கொண்டு வர விற்றவனோ அதை ஏர்த்துக்கொள்ளாமல் வரும் தருவாவில் விற்றவனை சத்தியங்கொண் டுண்மைகொள்ளப்படும்.

## அல்பாபுல்தானி பீபமானிஸ்ஸல்ம்.

(இரண்டாம்பாபு முதல்கடனைப் பற்றியது.)

(11.) சலாமென்பதின்பொருள் யாது?

முதல்கடனென்பதாம் அது ஓர்வகை வர்த்தகமாம்.

(12.) சலமென்பதை வேறே யாதேனும் நாமங்களைக்கொண்டும் அழைக்கலாமா?

ஆம் பை உஸ்ஸிம்மத்து என்னும் அழைக்கலாம்.

(13.) (சலம்) எனும் வர்த்தகத்தின் அருகுன்களெவை?

முதல் கடன் கொடுப்பவன் முதல்கடன் வாங்குபவன் தானியமாதியவைகள் கொடுக்கப்படும் பொருள் சீகா எனும் ஐந்துமாம்.

(14.) சீகா வாவதி யாது?

ஈஜாபு கபூல் எனும் இரண்டுமேசீகாவாம்.

(15.) சல்ம் எனும் வர்த்தகத்தின் ஈஜாபு எவ்வாறும்?

(பொருள்) முதல் கடன்கொடுப்பவன் (அஸ்லம்து இலைக) உமக்கு நான் இன்னதொகையை முதல்கடனாகத் தந்தேன் நீர் இன்னதைத் தருவதற்காக என்பதாம்.

இன்னதொகை என்பதைமாற்றி கொடுக்கப்படும் தொகையை (மிஅது) நூறு (அல்பு) ஆயிரம் எனக்கொள்ளுதல் வேண்டும்.

(16.) சலம் எனும் வர்த்தகத்தின் கபூல் எவ்வாறும்?

(கபில்து) நான் கபூல் செய்துகொண்டேன் என்பதும் இதற்கொப்பானவைகளுமாம்.

(17.) சலம் எனும் வர்த்தகத்தின் ஷறுத்துக்களெவை?

அவ்வர்த்தகம் பேசி முடிவான தானத்திலேயே தொகையைக்கைப்பற்றுதல் ஒப்பிக்கப்பொருந்திய காலத்தில்கிடைக்கத்தக்கதாயிருத்தல் அளவால் மட்டிடத்தக்கதை அளந்தும் நிறையால் மட்டிடத்தக்கதை நிறுத்தும் மட்டிடுதல் என்பவைகளாம்.

(18.) சலம் எனும் வர்த்தகம் செய்யத்தக்க தானியமாதியவைகளை ஒப்பிக்கப்பொருந்திய ஸ்தலம் எத்தன்மையுடையதாயிருத்தல் வேண்டும்?

அறியப்பட்டதா யிருத்தல்வேண்டும்.



(19.) அருகில் ஷறுத்திடப்பட்டகாலத்தில் ஒப்பிக்கக் கிடையாததில் சலமெனும்வர்த்தகம் சிஹத்தாகுமா?

சிஹத்தாகாது.

(20.) முட்டை முட்டைக் கொப்பானவைகளில் சலம் எனும் வர்த்தகம் செய்யலாமா?

அவ்விதமானவைகளுக்காய் முதல் கடன் கொடுத்தலும் வாங்குதலுமாகாது.

---

## அல்பாபுல்தாலிது பீபயானில் கறலி வற்றகுனி.

(மூன்றாம்பாபு கடனையும் ஈட்டையும்பற்றியது.)

(21.) கறலு என்பதின் பொருள் யாது?

கடன்கொடுத்து வாங்குதல் என்பதாம்.

ஷறஇில் கறலு சுன்னத்தென நியமித்தார்கள்.

(22.) கறலுடைய சீகா எவ்வாறும்?

கடன்கொடுப்பவன் நானுமக்குக் கடன்தந்தேன் அல்லது உமக்குடையதாக்கினேன் இதுபோல் திரும்பத்தருவதற்காக என்றுசொல்லுதலாகிய ஈஜாபும் கடன் வாங்குபவன் ஒப்புக்கொண்டேன் என்று சொல்லுதலாகிய கபூலுமாம்.

இஜாபும் கபூலும் பிரிவின்றியதாயிருத்தல் வேண்டும்.

எனக்குக் கடன்கொடு எனக் கேட்பவனுக்குக் கொடுத்தல் கடனும்.

கொடு என்று கேட்பவனுக்குக் கொடுத்தல் கடனாகாது, நன்கொடையாகும். இதில் பகரத்தைப்பற்றிய ஐயத்தில் இருவரும் வித்தியாசமுற்றால் கொடுத்தவனின் சொல்லையே உண்மைகொள்ளுதல் வேண்டும்.

ஹுக்குமிய்யி ஆகிய கடன் ஈஜாபு கபூலளவில் தேவையுறாது.

ஒருவனிடத்தில் ஓர் தொகையைக் கடனாய்க் கேட்பவனை இன்னானிடத்தில் அத்தொகையை வாங்கிக்கொள்ளென்று சொன்னால் இன்னானெனச் சுட்டப்பட்டவன் கேட்கப்பட்டவனுக்குக் கொடுக்கவேண்டியதா யிருந்தால் ஜாயிசுதான் இல்லாவிட்டால் கடன்கேட்பவன் அத்தொகையைக் கைப்பற்றுவதில் கேட்கப்பட்டவனின் வகிலாவான்.

ரொட்டி குளைத்தமா முதலியவைகளையும் கடன்கொடுக்கலாம்.

கடன்கொடுத்தவனின் உத்தரவினால் கடன்வாங்குபவன் கைப்பற்றுதல்கொண் டுடையதாக்கிக் கொள்ளுதலாம்.

கடன்வாங்குபவனிடத்தில் கொடுத்தவனின் உடமையிருந்தால் மீண்டுகொள்ளலாம் இவனின் கையைவிட்டு நீங்கியபின் மீண்டு வந்ததாயிருந்தாலுமாம்.

கடன்வாங்கியதை ஈடுவைத்திருந்தாலும் அடிமை உருமைப்பத்திரமெனும் கிதாபத்துக் கொடுத்திருந்தாலும் மீளுவித்தலாகாது.

யாதேனு மொன்றைக் கடன்வாங்கினால் அதற்கொப்பான்து கிடைக்கத்தக்கதா யிருந்தால் அதின் ரூபத்துக்கு நிகரானதைக் கொடுத்தல் வாங்கியவனுக்கு வாஜிபாம்.

நல்லதுக் காய்க்கெட்டதை கபூல்செய்தலும் கடன்கொடுத்த ஸ்தலமல்லாததில் அதற்கொப்பானதை கபூல்செய்தலும் வாஜிபாகாது.

கடனுக்காகக் கொடுப்பதை சுமந்துபோகுதற்குச் செலவு வராதிருந்தாலும் அல்லது செலவைக்கொடுத்தவன் சுமந்துகொண்டாலும் கடன்வாங்கிய ஸ்தலமல்லாத்ததில் கொடுக்கலாம்.

கடன்வாங்கினதானமல்லாத்ததில்கொடுத்தால் அவ்விடத்தில் அந்நேரத்தில் உண்டாகிய விலையைத் தேடலாம்.

(23.) சிறுவர் பயித்தியகாரர்களின் பொருளைக் கடன்கொடுக்கத் தக்கவரி யாவர்?

காளியாம் அவரோ ஜவேசுள்ளவனுக்குக் கடன் கொடுக்கலாம்.

(24.) தன் சகோதரர்களுக்குக் கடன்கொடுக்கலாமா?

ஆம் பாலிகாகிய ஆகிலாகிய தன் உடற்பிறந்தவர்களுக்கு யாதேனுமொன்றைச் செலவுக்குக் கொடுக்க அவனோ யாதொன்றும் பேசாமல் வாங்கித் தின்றால் கொடுத்தவன் மீளுவித்தலாகாது கேட்டாலும் கொடுத்தல் வாஜிபல்ல.

(25.) அருதுடைய மஜிலிசில் யாதேனும் ஷறுத்திடாமல் கொடுக்கப்பட்ட கடனை வாங்கினவன் கொடுத்தவனுக்கு யாது செய்தல் வேண்டும்?

வாங்கினவன் கொடுத்தவனுக்கு யாதும் பிரையோசனஞ் செய்தல் சுன்னத்தாம்.

அதைப் பெற்றுக்கொள்ளுதல் கடன் கொடுத்தவனுக்கு மருறாகாது.



எவ்விதமான பிரையோசனத்தையாவது இழுத்துவரத்தக்க ஷறுத்திட்டுக் கடன்கொடுப்பதால் வரும் பிரையோசனம் வட்டியாம். அது இஜ்மா இன்படிஹறாம். கடன்கொடுக்கும்போது அததின் பெறுமதியான கூலிக்கதிகமாய்ப் பேசித்தோட்டம், வீடு, கப்பல் ஆதியவைகளைக் கொடுத்தலும் ஹறாமாம். அக்கூலியைக் கடப்பாக்காமல் முன்பின் சாடையாய்ப் பேசினாலும் மஷ்றாகு உலமாக்களில் பெரும்பாலாரிடத்தில் ஹறாமாம்.

ஈட்டை அல்லது பிணையை ஷறுத்திட்டுக் கடன்கொடுக்கலாம். நிலம், தோட்டம், ஆதியவைகளைக் கொடுத்த கடனுக்கு ஈடாக எடுத்து அக்கடனைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் அதின் பிரையோசனத்தைக் கையாடுதலே ஒத்தியாம் அது ஹறாமாம்.

மேலே சொல்லியபடி கையாடிய பிரையோசனத்தை முதலில் நீக்கிவிட்டாலும் அந்நிலத்துக்கு யாதேனு மோர் தொகையை இருவரும் பேசிப் பொருந்தி நிலக்காரனுக்குக் கொடுத்தாலும் அது ஹறாமாகாதாம்.

(றகுனைப்பற்றியது.)

(26.) றகுன் என்பதின் பொருள் யாது?

கடன் கொடுத்தவன் நம்புதலுக்காக ஈடுபிடித்த லென்பதாம்.

ஈடுவைக்கப்படும் பொருள் வர்த்தகஞ் செய்யத்தக்கதாயிருத்தல் வேண்டும்.

பொதுவாகிய பொருட்களை ஈடுவைக்கலாம்.

ஈடுவைப்பதில் ஈடுபிடிப்பவனை இடஞ்சற் படுத்தும் காரியங்களை ஷறுத்திடலாகாது.

உடையவனின் உத்தரவின்றி ஈடுபிடித்தவன் ஈடுபிடிக்கப்பட்ட பொருளை ஆட்சி செய்தலாகாது. ஈடுவைக்கப்பட்டவைகளின் ஆட்சி ஈடுபூண்டதின்பின்னும். ஈடுபூண முன் உடையவன்ஹிபத்துக்கொடுத்தல் மாத்திரமல்ல வேறே யொருவனிடம் ஈடும்வைக்கலாம்.

ஈடுவைக்கப்பட்ட வெள்ளாட்டியைப் புணர்வதாலும் கலியாணமுடித்துக்கொடுப்பதாலும் ஈடுபிடித்தவன் மரணிப்பதாலும் பயல் விரண்டோடுதலாலும் ஈடு முறியாது.

ஈடுபிடித்தவனும் கூலிக்குப் பிடித்தவனும் அப்பொருள் சேதமாயிற்றென்று சத்தியஞ் செய்தால் உண்மைகொள்ளுதல்வேண்டும். அப்பொருளை உடையவனிடம் கொடுத்துவிட்டேனென்று சொல்லிவரும் வழக்கில் அவர்களை உண்மைகொள்ளுதலாகாது.

30

யாதேனுமொன்றை ஈடுவைக்கும்போது தவணைகுறித்து இத் தவணைபோல் பணந் தராவிட்டால் இதுவோ இப்பொருளின் விலையென்பதால் விற்பனவு பாசிதாகிவிடும் ஈடு பாசிதாகமாட்டாது.

ஈடுபிடித்தவன் ஈடுகொடுத்தவனைத்தனக்குவருமதியாகிய கடனை ஈட்டைவிற்றுவது நிறைவேற்றும்படி தேடலாம். அப்படியே நிறைவேற்றுவிட்டால் ஹாகிமிடம் அறிவித்து அவரால் அக்கடனை நிறைவேற்றிக்கொள்ளுதல்வேண்டும்.

ஈடுவைத்தவன் மேலேசொல்லியபடி ஹாகிமுடைய சொல்லை ஒப்புக்கொள்ளாமல் முரண்டினுல் அவன் கொடுக்கவேண்டியது தரிபாடானபின் ஈடுவைத்தவனின் உடமை என்றும் ஈடுவைத்ததும் றஜாவானுல் உடனேவிற்று அதனுலக்கடனை நிறைவேற்றுதல்வேண்டும்.

பெண்களின் பொருட்களை ஈடுதேடி அவைகளை அணிந்துகொள்ளுதற்கு உத்தரவும்பெற்று அணிதலை வழக்கமாக்கிக் கொள்ளுதலால் ஈடுபிடித்தவன் நகைக்குப் பொறுப்பாளியாகான்.

ஈடு வைத்தவனும் ஈடுபிடித்தவனும் ஈடுதன்னிலேயே தகவலாறுர்களேயாகில் ஒருவன்நான் ஈடுவைத்தேன் எனவும் மற்றவன் ஈடுவைக்கவில்லை எனவும் அல்லது அப்பொருளின் கதறில் தகவலானுல் அல்லது அதின் தொகையில் தகவலானுல் ஈட்டுக்காரனைத்தான் உண்மைகொள்ளுதல் வேண்டும்.

(27.) றகுனுடைய சிகா எவ்வாறும்?

கடன்வாங்கினவன் நான் ஈடுவைத்தேன் எனும் ஈஜாபும் கடன் கொடுத்தவன் நான் ஈடு பெற்றேன் எனும் கபூலுமாம்.

(28.) சிறுவர்களின்பொருளை ஈடுவைக்கலாமா?

தகப்பனுயிருந்தாலும் அல்லது பாட்டனுயிருந்தாலும் அல்லது ஹாக்கிமாயிருந்தாலும் சிறுவர் பயித்தியகாரரின் பொருளை ஈடுவைக்கப்படாது.

அவர்களின்பொருளை மேலே சொல்லப்பட்டவர்கள் பயிர்ச்செய்கை வியாபாரம் முதலிய சிவாதாரத்தொழிலுக்காக வட்டியின்றி ஈடுவைத்துச் சிவாதாரபோஷனஞ் செய்யலாம்.

(29.) ஈடுவைக்கப்பட்ட தோட்டம் வீடு முதலியவைகளின் செலவுக்குப் பொறுப்பாளியாகத் தக்கவர் யாவர்?

தோட்டம் வீடு முதலியவை மாத்திரமல்ல குதிரை, மாடு, வண்டி முதலியவைகளுக்கு நேரிடும் செலவு அவைகளைப் பாதுகார்க்க



வேண்டியசெலவு பழுதுபட்டதை நிறைவேற்றுதற்கான செலவு ஆகியவைகளுக்கும் உடையவனே பொறுப்பாளியாம்.

(30.) வகுபாக்கப்பட்ட உடமைகளை ஈடுவைக்கலாமா?

அவ்விதப் பொருட்களையும் பிள்ளைப்பெற்ற சுற்றியத்தையும் ஈடுவைக்கப்படாது.

ஈடுபூண்டபின் அவ்வீட்டுடமையை வேறொருவனுக்கு ஈடாக்குதலும் வெள்ளாட்டியைப் புணர்தலும் விற்பதும் வகுபுவைப்பதும் வேறொருவனுக்கு நிகாஹு முடித்துக்கொடுப்பதும் ஜாயிசல்ல.

ஈடுவாங்கினவனுக்கு வெள்ளாட்டியை முடித்துக்கொடுக்கலாம் அல்லது அவனுடைய உத்தரவுகொண்டு செய்யலாம்.

---

## அல்பாபுல் றுபிஉ பீபயானில் ஹஜ்ரி வத்தபுலீஸ்.

(நான்காம்பாபு ஹஜ்றையும்தபுலீசையும் பற்றியது.)

(31.) ஹஜ்று தபுலீஸ் என்பவை யாவை?

அல்லாகுத்தஆலாஉடைய கடனில் தீவிரமாய் நிறைவேற்றவேண்டியதும் அல்லது ஆதமியுடைய கடனில் தவணையில்லாதகடனும்ஒருவனின் பேரிலுண்டாகி அவன் வசமிருக்கும்பொருளைக் காண அதிகமாகிவிட்டால் அவனே தன்னைத் தடைசெய்தலைத் தான் தானே கேட்பதுகொண்டும் அல்லது அவனுக்குக் கடன் கொடுத்தவன் தேடுதல் கொண்டும் தடைசெய்யப்படுவதாம். அத்தடையே பங்கிலோட்டு என்பதாம்.

ஓர் கடனாளி அவனுக்கு எவ்வளவாவது பொருளுண்டு மென்று றஜாவுக்குவந்தால் அவனைத் தடைசெய்யப்படும்.

(32.) தடுக்கப்பட்டவனின் பொருளை எவ்வாறு கடன்கொடுத்தவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்?

தடுக்கப்பட்டவனின் பொருள் அது அவன் வசிக்கும் வீடாயிருந்தாலும் அவனுடையசமுகத்திலும்கடன்கொடுத்தவர்களின் சமுகத்திலும் விற்று வீதம்போல் பிரித்துக் கொடுத்தல்வேண்டும்.

(33.) மகன் கொடுக்கவேண்டிய கடனுக்காகத் தகப்பனைத் தடைசெய்யலாமா?

தடை செய்யக்கூடாது.

கடன்கொடுத்தவனின் பிதாவுபிதாவின்பிதா தாய் தாயின்தகப்பன் தாயின்தாய் அது எவ்விதகூறத்திலாயது அசுலென்றுகுமோ அவர்கள் எல்லாம் தடுக்கப்படத் தக்கவர்களல்லர்.

(34.) யாதோர் ஐவேசுமில்லாத கடனாளியை யாதுசெய்தல் வேண்டும்?

கடனாளியிடம் யாதோர் ஐவேசுமில்லை என்பது ருஜூவானல் ஐவேசுள்ளவனாகும் வரைக்கும் தடைசெய்த லாகாது.

கடனாளி தான் யாதோர் ஐவேசுமற்றவனென்று ருஜூவுக்கு வரும் வரைக்கும் மறியற்படுத்தித் தண்டிக்கலாம்.

தான் தானே மறியலைத் தெரிந்து கொண்டால்அவனுக்கு உத்தரவுகொடுத்தல்வேண்டும்.

(35.) மறியற் படுத்தப்பட்டவனை ஹாகிம்யாது செய்தல்வேண்டும்?

அவன் யாதொரு வருடனும் பேசாமலும் ஜூம்ஆவுக்குப்போகாமலும் யாதோர் தொழிலும் செய்யாமலும் இருக்கும்படி செய்தல்வேண்டும். அவ்வாறு செய்தலில் யாதேனும் பிரையோசனத்தைக் கண்டால்செய்யலாம், இல்லாவிட்டால் அவ்வாறு செய்தலாகாது. அவனுக்குப் போசனம்நீர் ஆதியவைகளைக் கொடுக்காமல் விலக்குதல் ஜாயிசல்ல.

(36.) எவ்வளவுகால வரைக்கும் சிறுவரையும் பயித்தியகாரர்களையும் தடைசெய்தல்வேண்டும்?

பயித்தியகாரனை அம்மயக்கந் தெளியும் வரைக்கும் சிறுவர்களைப் பிறைக்கணக்கால் பதினைந்து வருடம் வரைக்கும் தடுத்தல்வேண்டும்.

பயித்தியகாரனின் பயித்தியந் தெளிந்தும், சிறுவர்கள் றஷீதாகாதிருந்தாலும் புலூகாகுதல் கொண்டும் இஸ்லாம், தலாக்கு, குல்உ, தசற்றுபு, ஆகியவைகள் கூடுமாம்.

(37.) சிறுவர்களுக்கு வலியாகத்தக்கவர் யாவர்?

தகப்பன் பின்பு தகப்பனின் தகப்பன் பின்பு வசியத்துப் பெற்றவன் பின்பு அப்பட்டணத்திலுள்ள காளி அவனே நீதிமானாயிருந்தால், அப்பொருள் வேறே ஊரிலிருந்தால் அவ்வூர் காளி ஆகியவர்களாம்.

இவர்களில்லாவிட்டால் அவ்வூரிலுள்ள சாலிஹானவர்களே வலியாம்.



சிறுவர்களின் சரக்குகை இணக்கத்துக்காகத் தவணைக்கு விற்று ஈடுபிடித்துக்கொள்ளுதல்வேண்டும்.

சிறுவர்களின் பொருளை தகப்பன் பாட்டன் ஆதியோர்வைத்துப் புளங்கியபின் அப்பிள்ளைக்காகச் செலவிட்டதாய் வாதம்பண்ணினல் அவர்களைச் சத்தியஞ் சொண் டுண்மை கொள்ளுதல் வேண்டும். அப்பொருளை வைத்திருந்தவன் காளியாயிருந்தால் சத்தியமின்றி உண்மைகொள்ளுதல்வேண்டும்.

(38.) சிறுவர்களின் வலி அவர்களை யாதுசெய்தல்வேண்டும்?

குறுஆன் அதபு ஆதிய ஈன் முன்மாதிரிகள் படிப்பித்தல்வேண்டும்.

அச்சிறுவர்களின் பொருளில் அக்கருமங்களுக்காய்ச் செலவிட்டதையும் ஒப்புக்கொள்ளுதல்வேண்டும்.

(39.) சிறுவர்களின் பொருளில் வலியாய் நியமிக்கப்பட்டவன் தன் செலவுக் கெடுக்கலாமா?

வலி தத்துவவேலை பார்ப்பதால் தன் தொழில்விட்டுப் போவதாயிருந்து தானும் பகீராயிருந்தால் தன் செலவுமட்டுக் கெடுத்துக் கொள்ளலாம், சீமானவன் எடுத்தல் ஜாயிசல்ல.

(40.) தகப்பன்பாட்டனாகியவலிகாரர் அச்சிறுவர்களின் பொருளில் தன் செலவுக் கெடுக்கலாமா?

அவர்கள் சீமானாயிருந்தாலும் அவர்களுக்குப் போதுமானமட்டுக்கு அப்பொருளி லெடுக்கலாம்.

மகனுடைய மகனை வேலைசெய்யத் தேடுவானேயாகில் அவனுக்குக் கூலிகொடுத்தல் வாஜிபு அதை யவன் வம்பிக்காவிட்டாலும் கொடுத்தல்வேண்டும். அப்பிள்ளையோ புலூகாயிருந்து புத்தியுள்ளனுமாயிருந்தால் அதின் கூலி வாஜிபில்லையாம்.

---

## அல்பாபுல்காமிசு பீபயானில் ஹவாலதி.

(ஐந்தாம்பாபு சாட்டுதலைப் பற்றியது.)

(41.) ஹவாலா வாவதியாது?

ஒருவனல் ஒருவனுக்குவரவேண்டிஹக்கைத் தான்கொடுக்கவேண்டியவனுக்குச் சாட்டுதலாம்,

(42.) ஹவாலாவுடைய ருகுன்களெத்தனை ?

சாட்டுபவன் சாட்டுதலை ஏர்த்துக்கொள்பவன் சாட்டப்படுபவன் சாட்டுபவனுக்குச் சாட்டப்படுபவன் கடன்கொடுக்க வேண்டியதாயிருத்தல் சாட்டுபவன் சாட்டுதலை ஏர்த்துக்கொள்பவனுக்குக் கடன்கொடுக்கவேண்டியதாயிருத்தல் சீகா எனும் ஆறுமாம்.

(43.) ஹவாலாவுடைய சீகா யாது ?

சாட்டுபவன் சொல்லும் ஈஜாபும் ஏர்ப்பவன் சொல்லும் கபூலுமாம். இவ்விரண்டும் யாதோர் தொழுகுதலற்றதா யிருத்தல்வேண்டும்.

(44.) ஹவாலா எனும் சாட்டுதலால் சாட்டுபவன் அச்சாட்டுதலை ஏர்த்துக்கொள்பவனின் கடனால் நீங்கிவிடுவானா?

ஆம் கடனால் நீங்கிவிடுவான்.

(45.) ஹவாலா எனும் சாட்டுதலால் சாட்டுபவனுக்குக் கொடுப்பவனாகிய முஹ்தாலு அலைஹி எத்தன்மையுடையவனாவான் ?

தான் கொடுக்கவேண்டியவனுக்குக் கொடுக்கவேண்டிய கடனால் விலகி அவனின் சாட்டுதலை ஏர்த்துக்கொண்டவனுக்குக் கொடுக்கவேண்டிய கடனாளியாவான்.

(46.) சாட்டுதலை ஏர்த்துக்கொண்டவனின் ஹக்கு எவ்வாறும்?

சாட்டுதலை ஏர்த்துக்கொண்டவனின் ஹக்கு சாட்டப்பட்டவனின் பேரில் திரும்பிவிடுமாம்.

(47.) சாட்டுபவனின் சாட்டுதலின்படி ஏர்த்துக்கொண்ட கொடுக்கல் வாங்கல் முடிவாகாவிட்டால் யாது செய்தலாகாது?

சாட்டுதலை ஏர்த்துக்கொண்டவன் சாட்டுபவனளவில் மீளுதலாகாது.

(48.) முஹீல் என்பதின் பொருள்யாது?

சாட்டுபவனென்பதாம்.

(49.) முஹ்தால் என்பதின் பொருள்யாது?

சாட்டுதலை ஏர்த்துக்கொண்டவனென்பதாம்.

(50.) முஹ்தாலு அலைஹி என்பதின் அருத்தம்யாது?

சாட்டப்படுபவன் என்பதாம்.

---



அல்பாபுல்சாதிசு பிபயானில் ளமானி வல்கபாலதி.

(ஆறும்பாபு பிணையைப் பற்றியது.)

(51.) ளமான் ஆவதியாது?

பிணையென்பதாம் அது பொருட்பிணையும் கடன்பிணையுமாம்.

(52.) கபாலா ஆவதியாது ?

அது ஆள்பிணையென்றுங் குறிப்பான வஸ்துவின் பிணையென்றும் அருத்தங்கொள்ளுமாம்.

அது இரவலான உடமைக்கும் வம்பறியலான பொருளுக்கும் பிணைப்படுதல் ஹக்குமுடைய மஜ்லிசுக்குக் கொண்டுபோவதற்காய்ப் பிணைப்படுதல் ஆகியவைகளாம்.

(53.) பிணையாகத்தக்கவர் யாவர்?

முகல்லபாகிய ரஷீதாம்.

இத்தன்மையுடையவர்கள் பிறனுடைய பொறுப்பில் பொறுத்த கடனுக்கும் பிணையிற்கலாம்.

(54.) அடிமையைப் பிணைக்கு ஏர்க்கப்படுமா?

அவ்வடிமையின் நாயகனுடைய உத்தரவுகொண்டு ஏர்த்துக்கொள்ளப்படும்.

(55.) கடன் பிணையில் அக்கடன்காரன் நீங்கிவிடுதலைஷர்த்திடலாமா?

அவ்விதமாய் ஷர்த்திட்டால் அப்பிணை கூடாது. ஹக்காளிக்கு ஹக்குச் சேரும் வரைக்கும் கடனாளியையும் பிணையாளியையுந் தேடலாம்.

(56) பிணையை விரியாக்கிவிக்கும் சீகாயாது?

உமக்கு இன்னானால் வரவேண்டிய கடனுக்கு நான் பிணை அல்லது அதை நான் சுமந்துகொண்டேன் என்று ளமானிலும் அவனின் சரீரத்துக்கு அல்லது அந்தக் குறிப்பானதுக்கு நான் பிணையாயிருக்கு மென்று கபாலாவிலும் பிணையாளி சொல்லுதலாம் இது சுஹுறத்தாம்.

(57.) பிணையில் தகுலீக்கு நேரிட்டால் அப்பிணை சிஹத்தாகுமா?

இத்தனை நாளென்ன நாளைக்கொண்டும் இன்னநேரமென்ற நேரத்தைக்கொண்டும் இவ்விதமிருந்தாலென்ற தன்மையைக்கொண்டும் தகுலீக்காகப் பிணைப்பட்டால் அப்பிணை சிஹத்தாகாது.

(58.) இருவர் ஒருவனுக்குப் பிணைப்படலாமா?

ஆம் அப்படியே பிணைப்பட்ட ஒவ்வொருவரிடமும் பொருள் அடங்கலையுந் தேடலா மென்றும் ஒவ்வொருவரிடமும் சரிபாதி தரும்படி தேடவேண்டுமென்றும் கிலாபுண்டு.

(59.) முகல்லபென்பதின் அருத்தமென்ன?

வெல் விலகல் விதித்தவனென்பதாம்.

(60.) றஷீதென்பதின் பொருள் யாது?

செய்யவேண்டியவைகளைச் செய்யவும் விலகவேண்டியவைகளால்விலகவும் தக்கவன் என்பதாம்.

---

## அல்பாபுஸ்ஸாபிஉ பீபயானில்ஷிறுகதி.

(ஏழாம்பாபு கூட்டுத்தொழிலைப் பற்றியது.)

(61.) ஷிறுகத்து என்பதின் பொருள்யாது?

கூட்டுத்தொழில் என்பதாம் அது இரண்டுபெயர் அல்லது அதற்கதிகமானவர்கள் வர்த்தகம் கைத்தொழிலாதியவைகள் செய்வதற்காய்க் கூடுதலாம். அநந்தரப்பொருளைக் கைப்பற்றப் பலர்சேர்தலு மோர்வகை ஷிறுகத்தாம்.

(62.) ஷிறுகத்து எனும் கூட்டுத்தொழில்செய்ய யோக்கியர் யாவர்?

ஷறஇன்படி சறுபெனுங் கொடுக்கல் வாங்கல் செய்ய ஜாயிசானவர்களாம்.

(63.) ஷிறுகத்து எத்தனை வகையாம்?

அநந்தரங்கொள்ளுதலால் இருவர் அல்லது அதற்கதிகமானவர்கள் கூடுதல் வர்த்தகம் கைத்தொழிலாதியவைகள் செய்வதற்காய் இருவர் அல்லது அதற்கதிகமானவர்கள் கூடுதல் எனும் இருவகையாம்.

(64.) வர்த்தகம் கைத்தொழிலாதியவைகள் செய்ய இருவர் அல்லது அதற்கதிகமானவர்கள் கூடும் கூட்டுத்தொழிலாகிய ஷிறுகத்து எத்தனை வகைப்படும்?

ஷிறுகத்துல் இன்னான் ஷிறுகத்துல் அபுதான் ஷிறுகத்துல் வுஜூகு ஷிறுகத்துல் முபாவளா என நான்கு வகைப்படும்.



(65.) ஷிறுகத்துல் இன்னானவதியாது?

கூட்டுவியாபாரிகளாகிய ஒவ்வொருவரும் முதலிட்டுக் கலந்து இலாபத்திலும் நஷ்டத்திலும் கூட்டாகி ஒவ்வொருவரும் மற்றவரைத் தன்பிரதிப்படி கொடுக்கல் வாங்கல் செய்ய உத்தரவுகொடுத்துக் குறித்ததொழிற் செய்தலாம்.

(66.) ஷிறுகத்துல் அபுதானவதியாது?

சுமைகாரராதியோர்களில் ஒவ்வொருவரும் சரிசரியாய் அல்லது ஏற்ற வாட்டமாய்ச்செய்து சேர்ந்ததொகையை எல்லாரும் சரிசரியாய்ப் பிரித்தெடுத்துக்கொள்ளுதலாம்.

(67.) ஷிறுகத்துல் வுஜூகாவது எவ்வாறாம்?

கூட்டு வியாபாரிகளாகிய ஒவ்வொருவரும் தன்றன் பொறுப்பில் உரொக்கத்துக்கு அல்லது தவணைக்கு யாதேனும் வாங்கி வியாபாரம் செய்தலில் இலாபம் வந்தால் பங்கிட்டுக்கொள்ளுதலாம்.

(68.) ஷிறுகத்துல் முபாவளா எவ்வாறாம்?

ஒவ்வொருவரும் முதலிட்டு அம்முதலைக் கலக்காமற் செய்யும் தொழிலில் இலாபம் வந்தா லிருவரும் பங்கிட்டுக்கொள்வதும் ஒருவரின் கடனுக்காய் மற்றவர் வாதிக்கப்படுவதுமாம்.

69.) இந் நான்குவகையில் ஷறஇல் ஆமாக்கப்பட்ட ஷிறுகத்து யாது?

ஷிறுகத்துல் இன்னானெனும் வகையொன்றுமேயாம் மற்றமூன்றுவகையும் பாத்திலாம்.

(70.) ஒவ்வொருவரும் ஏற்ற வாட்டமாய் முதலிட்டு வர்த்தகஞ் செய்தலால் வரும் இலாபத்தை எவ்வாறு பிரித்துக் கொள்ளுதல் வேண்டும்?

அவரவரிட்ட முதலின் கதுருக்குப் பிரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

---

## அல்பாபுல் தாமினு பீபயானில் வகாலதி வல்கிருளி.

(எட்டாம்பாபு வகாலத்தையும் கதுபதசையும் பற்றியது.)

(71.) வகாலத்தாவதியாது?

தன் கருமத்தில் ஒன்றையாவது பலதையாவது வேறேயொருவருக்கொப்பித்து அக்கருமத்துக் கவரைக் காரியஸ்தனாய் நியமித்தலாம்.

வகிலும் முஅக்கிலும் ஜாயிசுத் தசற்றுபை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(72.) எவ்வெக்கருமங்களில் வகில் நியமிக்கலாம்?

வர்த்தகஞ்செய்தல் ஹிபத்துக் கொடுத்தல் ஈடுவைத்தல் நிகாஹு முடித்தல் தலாக்குச்சொல்லுதல் ஆகியவைகளிலும் இவைகளை நிகர்ந்தவைகளிலுமாம்.

(73.) எவ்வெக்கருமங்களில் வகில் நியமித்தலாகாது?

வருங்காலத்தில் ஆட்சியாய்வருவதை விற்பதுக்கும் இனிமேல் நிகாஹுசெய்யப்படும் பெண்ணை தலாக்குச் சொல்லுதலுக்கும் ஹஜ்ஜு உம்ரு உலுஹிய்யா எனும் இபாத்துக்க ளல்லாதமற்ற இபாதத்துகளுக்கும் தான் விண்ணப்பம் செய்யவேண்டியதற்கும் இதை நிகர்ந்தவைகளுக்கும் வகில் நியமித்தலாகாதாம்.

அடிமை பாசிகு ஆகியவர்களை நிகாஹின் கபூலில் வகிலாக்கலாம் நிகாஹு முடித்துக்கொடுக்க வகிலாக்கக் கூடாது.

(74.) வகாலத்தின் சீகா எவ்வாறும்?

வகாலத்துக் கொடுப்பவன் உன்னை இன்ன கருமத்தில் வகிலாக்கினேன் என்று அல்லது இன்னதில் உன்னை எனக்குப்பகரமாக்கினேன் என்று வாயினுல் மொழியும் ஈஜாபும் முஅக்கில் வகாலத்தைத்தட்டாதிருத்தலெனும் கபூலுமாம். வகாலத்தை ஏர்த்துக் கொள்பவன் கபூல்செய்துகொண்டே னென்று சொல்லுதல்ஷாறுத்தல்ல.

(75.) வகில் தானாகவே வேறொருவனை வகிலாகநியமிக்கலாமா?

வகிலானவன் தனக்குச் செய்யக்கூடிய வேலையில் முதலாளியின் உத்தரவின்றித் தானாய் ஒருவனை வகிலாக்கிவித்தல் ஜாயிசல்ல.

(76.) எவ்[illegible]ருணங்களால் வகாலத்து நீங்கிவிடும்?

வகில் தானாய் நீங்கிக்கொள்ளுதலாலும் முஅக்கில் நீக்குவதாலும் மரணத்தினுலும் பயித்தியத்தினுலுமாம்.

யாதோர் குறிக்கப்பட்ட கருமத்தில் வகிலாக நியமிக்கப்பட்டவனின் முஅக்கிலுடைய ஆட்சி நீங்கிப்போகுதலால் அவனின் வகீல்தனமும் நீங்கிவிடும்.

(சுது பகுசைப்பற்றியது.)

(77.) கிறாலாவது யாது?

தன் முதலைப்பிறனிடத்தில்வியாபாரஞ்செய்யவும் அவ்வியாபாரத்தில் கிடைக்கு மிலாப மிருவருக்கும் பங்கெனவும் பொருத்திக் கொடுத்தலாம் அதை சுது பகுசு என்றும் சொல்லுவார்கள்.



(78.) எவ்வித நாணயத்தில் கிறாலுகூடாது?

அடிக்கப்பட்ட கலப்பற்ற நாணயமல்லாதவைகளில் கிறாலுகூடாதாம்.

(79.) கிறாலில் பொருந்திய இலாப மெவ்விதமா யிருத்தல்வேண்டும்?

இத்தனையென அறியப்பட்டதாயிருத்தல்வேண்டும்.

(80.) கிறாலு எனும் வர்த்தகத்தின் முதலுக்குச் சேதம் நேரிட்டால் பொறுப்பாளியாகுபவர்யார்?

முதல் கொடுத்தவனும். நட்டத்தில் எவ்வளவாவது சுது பகுசுகாரன்பேரில் வைத்தலாகாது.

---

## அல்பாபுத்தாசிஉ பீபயானில் வதீஅத்தி.

(ஒன்பதாம் பாபு அமானத்தைப்பற்றியது.)

(81.) வதீஅத்து என்பதின் பொருள்யாது?

அமானம் [illegible] பிணையம் வைத்தல் அறுதிமா[illegible]த்தலென்றும் சொல்லப்படும்.

(82.) அமானம் வைக்கத்தகாதவைகளெவை?

நாய் பன்றி நஜீசானவைகள் ஹறாமான விளையாட்டு பாண்டங்களென்பவைகளாம்.

(83.) வதீஅத்தின் சீகா எவ்வாறும்?

அமானங் கொடுப்பவன் இதை உன்னிடம் அமானமாக்கினேன். அல்லது இதை உன்னிடம் பேணுதலு[illegible]வைத்துக்கொள்ளும்படி தேடினேனென்பதும் அல்லது அமானத்தை [illegible] வைத்துக்கொண்டு இதை எடுத்துவை யென்று வாயினுல் மொழிவதும் அப்பொருளை ஏர்ப்பவன் கபூல்செய்தலுமாம்.

(84.) அமானதப் பொருளைக்காப்பாற்ற ஏலாதவர்கள் அதை ஒப்புக்கொள்ளலாமா?

ஒப்புக்கொள்ளுதல் ஹறாம்.

(85.) அமானதப் பொருளை ஒப்புக்கொண்ட[illegible] அதை வேறொருவனிடம் வைக்கலாமா?

அப்பொருளை உடையவனின் உத்தரவின்றி வேறொருவனிடம் வைத்தலாகாது. அவ்வாறு வைத்தால் அப்பொருளுக் கெவ்வித சே

தம் வர்தாலும் வைத்தவனே பிணையாளியாவான். இரண்டாம் முறையில் வைக்கப்பட்டவன் காளியாயிருந்தாலுமாம்.

(86.) எவ்வெக்கருமங்களுக்காகத் தன்னிடமிருக்கும் அமானதப்பொருளைப் பிறனிடத்தில் வைத்தல்வேண்டும்?

தனக்கு வியாதி உண்டாகுதல் தான் சபர்போகுதல் நெருப்புப் பிடித்தல் அதை வைத்திருக்கும் தலம் சுருபாய்ப் போகுதல் ஆகியவைகளாம்.

இக்கருமங்களுக்காய் வேறோர் நம்பிக்கையானவனிடம்வைத்திருக்குங்காலத்தி லப்பொருளுக்குச் சேதம்வந்தால் தான் பிணையாளியாகான்.

(87.) யாதுசெய்தலால் அமானதப்பொருளை ஏற்றுக்கொண்டவன் பிணையாளியாவான்?

சூதானமில்லாத ஸ்தானத்தில் வைத்தல் அதைச் சேதப்படுத்தும் கறையான் முதலியவைகளை விட்டுக் காப்பாற்றாதிருத்தல் காற்று [illegible] உடையவனேவிய கார்மானத்தைவிடுதல் அதைக் கேட்டு வந்தபோது ஒப்பிக்காதிருத்தல் ஒப்பிக்கமாட்டேனென அல்லத் தட்டுதல் என்பவைகளும் உடையவனுக்குத் தேவையற்ற அணிதல் ஏறுதல் ஆமானத்துவைத்த பொருளிலொருரு பாவையாவது எடுத்தல் ஆகியவைகளைச் செய்தலால் பிணையாளியாவான் அமானதப்பொருளை எடுத்தவன் அதற் கொப்பானதையதிற்போட்டாலு மப்படியே.

(88.) [illegible] னதப்பொருளைத் தன் தேவைக்கு [illegible] யாகிக்க லாமா?

உபயோகித்தலாகாது அப்படி உபயோகஞ் செய்தற்கு உடையவன் உத்தரவு கொடுத்தானென வழக்கு நேரிட்டால் அவனே தானே சத்தியங்கொண் டுண்மை கொள்ளப்படும்.

(89.) தன்னிடமிருக்கும் அமானதப் பொருளையுடையவன் இன்னானென [illegible] அறியப்படாவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

அப்பொருளைத் தெண்டித்துப் பாதுகாத்தல் வேண்டும் வெளியாகாவிட்டால் இராஜர்கள் காளிமார்பேரில் அப்பொருளை எக்கருமத்தில் செலவழித்தல் விதியாகுமோ அதில் செலவழிக்கலாம்.



அச்செலவோ முஸ்லிமானவர்களுக்குத் தேவையான கருமமாயிருந்தால் அதில் அதிகத்தேவையான முட்டுப்பாட்டுடையவனை முற்படுத்தல் வேண்டும்.

பள்ளிவாசல் கட்டுதலாதிய செலவுசெய்த லாகாது.

(90.) இவ்வித ஹுகுமை அறியாதவர்கள் யாதுசெய்தல்வேண்டும்?

இவ்வித ஹுகுமை அறிந்த விசுவாசியாகிய ஆலிமிடத்தில் அப்பொருளை ஒப்பித்தல்வேண்டும் அவரோ வறஉ உள்ளவராகவுமிருந்த அறிவுடையவராகவு மிருத்தல் ஏற்றமாம்.

---

## அல்பாபுல் ஆஷிறு பீபயானில் ஆரிய்யதி.

(பத்தாம்பாபு இரவலைப்பற்றியது.)

(91.) ஆரிய்யத்தாவது யாது?

இரவல்கொடுத்து வாங்குதலென்பதாம்.

(92.) இரவல்கொடுக்க வாங்கத் தக்கவர்கள் யாவர்?

முகல்லபாகிய றஷீதானவர்களாம். அவர்களுக்கு அது ஜாயிசாம்.

இரவல் கொடுப்பவன் இதை இரவலாகத்தந்தேன் அல்லது அதின் பிரயோசனத்தை ஆமாக்கினே னென்பதும் இரவல்வாங்குபவன் கபூல்செய்வதுமே ஆரிய்யத்தின் ஷர்த்தாம்.

(93.) தான் இரவலாய் வாங்கியதை வேறொருவருக்குக் கொடுக்கலாமா?

உடையவனின் உத்தரவின்றிக் கொடுத்தல் ஜாயிசல்ல.

அதின் பிரயோசனத்தைத் தனக்குப் பதிலாய் வேறொருவனை நிறைவேற்றிக்கொள்ளும்படி தேடலாம்.

(94.) இரவலாய்க் கொடுக்கத்தகாதவைகளெவை?

மெழுகுதிரியும் அதுக்கொப்பானவைகளுமாம்.

அதைக் கொளுத்தாமல் அலங்காரத்துக்காகப் பாவிக்கும் நிச்சயங்கொண்டு இரவல் கொடுக்கவும் வாங்கவு மாமாம்.

(95.) இரவலாய் வாங்கிய பொருள் சேதப்பட்டால் யார் அப்பொருளுக்குப் பொறுப்பாளியாவர்?

இரவல் வாங்கினவனே பொறுப்பாளியாவான்.

இப்பொருளைக்கொண்டு இன்னதைச் செய்துகொள்ளென உத்தரவு பெற்ற பொருளை அவ்வித உபயோகஞ் செய்தலாற் சேதம் நேரிட்டால் வாங்கினவன் பொறுப்பாளியாகான்.

யாதோர் பொருளை சரியான கூலியாய்க் கூலிக்குப் பிடித்தவனிடம் வேறொருவன் இரவலாக வாங்கி உபயோகிக்குங் காலத்தில் அப்பொருளுக்குச் சேதம் நேரிட்டால் இவன் பொருப்பாளியாகான்.

வகுபாகிய கிதாபை ஓர் ஆலீம் வாங்கி உபயோகிக்குங்காலத்தில் சேதம் நேரிட்டால் அவர் பொறுப்பாளியாகார்.

(96.) இரவல் கொடுத்தவனுக்கும் வாங்கினவனுக்கு மிடையில் தகவல்வந்தால் யாரை உண்மைகொள்ளுதல்வேண்டும்?

உத்தரவு கொடுக்கப்பட்ட செயலாற் சேதம் நேரிட்டதென்றும் அதனால் சேதம் நேரிடவில்லை வேறேதம் செய்கையினால் சேதம் நேரிட்டதென்றும் இரவல் வாங்கினவனுக்கும் கொடுத்தவனுக்கு மிடையில் வழக்குவந்தால் கொடுத்தவனையே உண்மைகொள்ளுதல்வேண்டும்.

(97.) இரவலாகியபொருளை உடையவனிடம் ஒப்பிப்பதற்குண்டாகுஞ் செலவு யார்கொடுத்தல் வேண்டும்?

இரவல் வாங்கினவனே கொடுத்தல் வேண்டும்.

(98.) நிலத்தை இரவலாய் வாங்கலாமா?

ஆம் மரம் நட்டுதற்கு அல்லது வீடுகட்டுதற்கு நிலத்தை இரவலாய் வாங்கினால் ஒருதடவையே யன்றிக் கூடாது.

கட்டினதை இடித்தாலும் நட்டினதைப் பிடுங்கினாலும் மறுபடி செய்யப் புதிதாய் உத்தரவு பெறுதல் வேண்டும்.

(99.) இரவலாய் வாங்கிய கிதாபில் கதாவிருக்கக் கண்டால் யாதுசெய்தல் வேண்டும்?

உடையவனி னுத்தரவோடு திருத்துதல் வேண்டும்.

பிழை காணப்பட்டது முசஹ்பாயிருந்தால் திருத்துதல் வாஜிபாம். முசஹ்பைப்பிழை திருத்துவதில் திருத்துபவனி னெழுத்ததின் மையாவைக் குறைத்துப்போடுமென்றிருந்தால் வாஜிபல்ல.

(100.) வகுபாகிய கிதாபு முசஹ்பு ஆகியவைகளில் கதாவிருக்கக் கண்டால் யாதுசெய்தல் வேண்டும்?

திட்டமான கதாவிருக்கக்கண்டால் திருத்துதல் வாஜிபாம்.



## அல்பாபுல் இருதா அஷறபீபயானில்கஸ்பி.

(பதினோராம் பாபு பிறனுடைய ஹக்கைப் பறித்தலைப் பற்றியது.)

(101.) கஸ்பு ஆவது யாது?

பிறனுடைய ஹக்கை பறித்துக்கொள்ளுதலாம் இதை வம்பறியலென்றும் வழங்குவார்கள் அது ஓர்வகைச் சோரமாம்.

(102.) யாதேனும் பிரையோசனம் பெறத்தக்க (கஸ்பு) செய்யலாமா?

பிரையோசனமுள்ளதா யிருந்தாலும் பிரையோசனமற்றதாயிருந்தாலும் கஸ்பு செய்தல் ஹறாமாம்.

(103.) கஸ்பு செய்தெடுக்கப்பட்ட பொருளை யாது செய்தல்வேண்டும்?

உடையவனுக்குக் கொடுக்கவேண்டும் அப்பொருள் சேதமாகிவிட்டால்அதைப்பறித்த காலந்தொடுத்துச் சேதமாகிய நாள்வரையில் அதின் விலையில் ஏறிய விலைக்குப் பொறுப்பாளியாகுதல் வேண்டும். அது வாஜிபாம்.

(104.) சலம் எனும் வர்த்தகஞ் செய்தல் ஜாயிசாகிய பொருளைப் பறித்தெடுத்தால் யாதுசெய்தல்வேண்டும்?

அளவால் நிறையால் மட்டிடக்கூடியதாம் மேற்சொல்லிய வர்த்தகஞ் செய்தல் ஜாயிசுமான பொருளைப் பறித்துச் சேதப்படுத்தினால் அது எவ்விடத்தி லிருந்ததோ அவ்விடத்தில் அதற்கொப்பானதைக்கொண்டு பிணையாளியாகுதல் வேண்டும்.

(105.) கஸ்பு செய்யப்பட்ட மேற்சொல்லிய பொருளுக்கொப்பானதையும் இழக்கப்பட்டால் யாது செய்தல்வேண்டும்?

அப்பொருளுக்கு நிகரானதை இழக்கப்பட்டாலும் அதைக் காணப்பட்டு விலை அதிகமாகிவிட்டாலும் பெறுமதியைக் கொடுத்தல் வேண்டும், பறிக்கப்பட்டதோ அளவால் அல்லது நிறையால் மட்டிடக்கூடாததா யிருந்தாலும் அப்படியே செய்தல்வேண்டும், நிகராகிய வஸ்துக்களில் பொருத்தங்கொண்டு விலையையும் எடுக்கலாம்.

(106.) தோணி தோணிக்கொப்பானவைகளின் கணைக்கட்டை அவிழ்த்ததால் சேதமாகிவிட்டால் அதற்குப் பொறுப்பாளி யாகுபவரியாவர்?

அவிழ்த்துவிட்டவனாம்.

அக்கட்டை அவிழ்த்தபோது ஓர் புயல்வந்த சபபால் அல்லது கஸ்புவெளியாகாமற் சேதப்பட்டால் பொறுப்பாளியாகான்.

(107.) கஸ்பு செய்தவன் யாதுசெய்தலால் நீங்கிவிடுவான்?

தான் பறித்த பொருளை உடையவனிடம் கொடுத்தலால் நீங்கிவிடுவான்.

உடையவனின் முன்னிலையில் வைத்தலே போதுமாம்.

(108.) கஸ்பு செய்யப்பட்ட பொருள்காரனை மறைக்கப்பட்டால் யாது செய்தல்வேண்டும்?

அவ்வூர் காளியிடம் கொடுத்தல் வேண்டும்.

(109.) கஸ்பு செய்யப்பட்ட பொருளைத் தன்பொருளோடு கலந்ததால் பிரித்தறியக்கூடாமலாகிவிட்டால் யாது செய்தல்வேண்டும்?

கிகருள்ள பறித்தெடுத்த பொருள் அல்லது விலையுள்ள பொருள் தன்னுடைய பொருளோடு கலந்துமேற்சொல்லியவாறுவிட்டால் அதை உடையதாக்கிக் கொள்ளுதல்வேண்டும். அதற்கவன் கடன்காரனுவான்.

(110.) இவ்வாறு கலக்கப்பட்ட திரவியம் வைத்திருப்பவனைக் காளி யாதுசெய்தல்வேண்டும்?

அதற்குப் பதில் கொடுக்குமட்டாய் அப்பொருளை ஆட்சிபண்ணுமல் தடைசெய்தல்வேண்டும்.

---

## அல்பாபுல் இதுறு அஷறபீபயானில் இஜாறத்தி.

(பன்னிரண்டாம்பாடு கூலிக்குக்கொடுப்பதைப் பற்றியது.)

(111.) இஜாறத்து என்பதின் பொருள்யாது?

கூலிக்குக் கொடுத்தலென்பதாம். அது ஈஜாபு கபூலின்றி ஸிஹறத்தாகமாட்டாது.

(112.) இஜாறத்துடைய சீகா எவ்வாறும்?

கூலிக்குக் கொடுப்பவன் இன்னதை உமக்கு இவ்வளவு காலத்துக்குக் கூலிக்குத் தந்தேன் அல்லது அதின் பிரயோசனத்தை உடையதாக்கித் தந்தேன் எனும் ஈஜாபும் கூலிக்குப் பிடிப்பவன் கபூல் செய்துகொண்டேன் எனும் கபூலுமாம்.



(113.) இஜாறத்து எத்தனை வகைப்படும்?

இஜாறத்துல் திம்மத்து இஜாறத்துல் ஐன் என இருவகைப்படும்.

(114.) இஜாறத்துல் திம்மத்து என்பதின் சீகா எவ்வாறும்.

(முஸ்தஉஜிறு) கூலிக்குப் பிடிப்பவன் கூலிக்குக் கொடுப்பவனை நோக்கி உன்னிடத்தில் இன்னமிருகத்தைக் கூலிக்குத் தேடினேன் அதோ இன்னவிதமானது என்பதும் அல்லது உன்னிடத்திலெனக் கின்னது உண்டாக அல்லது இன்ன இடத்துக் கேறிப்போக இன்னதைக் கூலிக்குத் தேடுகிறேன் என்பதுமாம்.

(115.) இஜாறத்துல் ஐனென்பதின் சீகா எவ்வாறும்?

உன்னிடத்தில் இன்ன மிருகத்தைக் கூலிக்குத் தேடினேன் அல்லது எனக் கின்னது உண்டாவதற்காக உன்னிடத்தில் இன்னதைக் கூலிக்குத் தேடினேனென்பதாம்.

(116.) இஜாறத்துல் திம்மத்தின் சீகாவில் பொருந்திய கூலியை எப்போதிற் கைப்பற்றிக்கொள்ளுதல் வேண்டும்?

அதின் ஈஜாபு கபூல் நடந்த மஜ்லிஸிலேயே கைப்பற்றிக்கொள்ளுதல் ஷறுத்தாம்.

(117.) இஜாறத்து ஐனிற்பொருந்திய கூலி எவ்வாறுயிருத்தல்வேண்டும்?

கூலிக்குப் பிடிப்பவன் யாதைக் கூலிக்குப் பிடித்தானே அதனுல் அப்பிரையோசனம் பெற இடம்பாடாயிருந்தால் மூஜிறுக்கு இன்னதைக் கொடுப்பேனென்று கதறிடுவதும் அது குறிக்கப்பட்டதாயிருத்தலும் வேண்டும் அது ஷறுத்தாம்.

(118.) வாடைக்குப் பிடிக்கப்பட்டதின் பிரையோசனம் எத்தன்மையுடையதா யிருத்தல் வேண்டும்?

வாடைக்குப் பிடிப்பவனுக்குக் கிடைக்கத்தக்கதா யிருத்தல்வேண்டும்.

விலையில்லாத பிரையோசனத்தை வாடைக்குக் கொடுப்பதும் எடுப்பதும் ஸிஹறத்தல்ல.

வீட்டை வாடைக்குக் கொடுப்பவன் அவ்வீட்டின் தூறப்பைக் கொடுப்பதும் பழுதைத் திருத்திக்கொடுப்பதும் மெழுகிக்கொடுப்பதும் வேண்டுமாம்.

வாடைக்குப்பிடித்த வீட்டைப்பெருக்குவதும் தண்ணீர் தெளிப்பதும் வாடைக்குப் பிடித்தவன் செய்தல் வேண்டும்.

(119.) குறுஆன்ஓதக் கூலிக்குப்பிடிக்கலாமா?

குறுஆன் ஓதவும் மய்யித்தை ஆயத்தமாக்கவும் குளிப்பாட்டவும் கூலிக்குப் பிடிக்கலாம் குறுஆன் ஓதி துஆவோதவும் கூலிக்குப் பிடிக்கலாம்.

இவ்வாறு கூலிக்குப் பிடிக்கப்பட்டவர்கள் இன்னாருக்காக ஓதுகிறேனென்று நிய்யத்துவைத்தல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்டவர்கள் கொஞ்சமாவது கதாவிட்டாலும் மனமுரண்டாய் விட்டாலும் அதற்காகப்பெறும் கூலி ஹலாலாகாது. முஸ்தஉஜிறு எவ்விதம் ஷறத்திட்டானோ அவ்விதம் செய்தல் வேண்டும்.

(120.) கூலிபேசாமல் சவரம் வண்ணமை முதலியவைகள் செய்யலாமா?

செய்தலாகாது. அவ்வாறு செய்தால் கூலிகிடையாது. எழுதுதலுமப்படியே.

என்னை உன்வீட்டிற் குடியிருத்தாட்டென்று சொன்னவனைக் குடியிருத்தாட்டினால் அவனிடம் கூலி தேடலாகாது.

கப்பலாதியவைகளில் உடையவனின் உத்தரவில்லாமலேறிதன் பிரையோசனத்தைப் பெற்றுக்கொண்டவன் கூலிகொடுத்தல்வேண்டும். கூலிபேசாமல் உடையவனிடம் உத்தரவுபெற்று ஏறினவன் கூலி கொடுக்கமாட்டான்.

நேரத்தைக்குறித்துப் பேசப்பட்டதின் கூலியை அந்தநேரஞ் சென்றால் கொடுத்தல் வேண்டும் அந்த நேரத்துக்குள் அவ்வேலை நிறைவேறாவிட்டாலுமாம்.

---

## அல்பாபுல்தாலிது அஷற பீபாபில் லுகததி.

(நான்காம்பாபு புறக்கப்படும் பொருளைப் பற்றியது.)

(121.) லுகதந்து என்பதின் பொருள் யாது?

புறக்கப்பட்ட பொருளென்பதாம். அதை விழுபொருளெனவும் வழங்குவார்கள்.

(122.) லுகதத்து எத்தனை வகைப்படும்?

நீபரமாய்ச் சேதப்படத்தக்கப் பொருள் நீபரமாய்ச் சேதப்படாத பொருள் என இருவகைப்படும்.



(123.) நீபரமாய்ச் சேதப்படத்தக்க பொருட்களெவை?

சோறு, இச்சடி, பச்சை ஈத்தம்பழம், கீரை ஆதியவைகளாம்.

(124.) நீபரமாய்ச் சேதப்படாத பொருட்களெவை?

வெள்ளி, பொன், செம்பு, ஆதியவைகளாம்.

(125.) நீபரமாய்ச் சேதப்படத்தக்க பொருட்களைப் புறக்கினால் யாதுசெய்தல்வேண்டும்?

புறக்கியபோதே தான் அதை உடையதாக்கிக்கொண்டு போஷித்தல் வேண்டும். அப்பொருளை உடையவன் வெளியானால் அதின் விலையைக் கொடுத்தல் வேண்டும். அதற்குப் புறக்கினவன் பொறுப்பாளியாவான்.

(126.) நீபரமாய்ச் சேதப்படாதவைகளைப் புறக்கினால் எவ்வளவு காலவரைக்கும் பிரசித்தப்படுத்தல் வேண்டும்?

கடைகளிலும் பள்ளிவாசல்களிலும் மனிதரிடம் ஒருவருடம்வரைக்கும் பிரசித்தப்படுத்தவேண்டும்.

(127.) அவ்வளவுகால வரைக்கும் பிரசித்தப்படுத்தியும் உடையவனை அறியாவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

புறக்கினவன்றானே தான் உடையதாக்கிக் கொண்டேனென்று சொல்லி உடையவன் வெளியானால் பதல் கொடுப்பேனென்று நாட்டம்வைத்துத் தனக்குடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(128.) யாதோர் லுகதத்தைக் காலினாலெடுத்தால் எடுத்தவன் பொறுப்பாளி யாவானா?

காலாலெடுத்தவன் பொறுப்பாளி யாதான்.

(129.) வேலி முதலிய அடைப்புக்குள் உதிர்ந்து கிடக்கும் கனி ஆதியவைகளை உடையவனின் உத்தரவின்றிப் புறக்கலாமா?

அதை உடையவனின் உத்தரவின்றிப் புறக்குவதும் வேலிக்கு வெளியில் விழுந்ததை யாவரும் எடுக்கக்கூடாதென்பது ஆத்தாயிருந்தால் புறக்குவதும் ஹறாமாம்.

(130.) அற்பமான வோர் பொருளைப் புறக்கினால் யாதுசெய்தல் வேண்டும்?

அறிவிக்காமல்தானே எடுத்துக்கொள்ளலாம் அது ஓர் [illegible] சுழைபோலாம்.

---

## அல்பாபுல் ருபிஉ அஷ்ற பீபயானில் வகுபி.

(பதினான்காம்பாபு வகுபைப்பற்றியது.)

(131.) வகுபாவது யாது?

தனக்குச் சொந்தமானதும் அதனால் பிரையோசனம் பெறத்தக்கதும் தரிபாடாயிருப்பதுமாகிய பொருளை ஆமானபாதையில் தடைப்படுத்திவைத்தலாம். அதின் பிரையோசனம் தற்காலத்திலுண்டாயிருத்தலும் வருங்காலத்தில் வரத்தக்கதாயிருத்தலும் வேண்டும்.

(132.) வகுபுடைய சிகா எவ்வாறும்?

வகுபுவைப்பவன் இதை நான் வகுபாக்கினேன். அல்லாவுடைய பாதையில் ஆக்கிவிட்டேன் என்றுவாயினால் மொழிதலாம்.

இத்தானத்தைப் பள்ளியாக்கினேனென உடையவன் மொழிந்தாலும் அது மவுகூபாகிவிடும்.

பள்ளியாக்கினேனென்று வகுபாக்கப்பட்ட நிலத்தில் ஜுனுபாளிதரித்தல் ஹறாமாகும் அவ்வாறு வகுப்பு செய்யப்பட்ட ஸ்தானத்திற்றான் இகுதிகாபெனும் ஸுன்னத்துண்டாகுமாம்.

(133.) வகுபுவைக்கப்படுபவை எவ்விதமானதாயிருத்தல்வேண்டும்?

வகுபு வைத்தவனின் ஆட்சியைவிட்டு அதைப் பரிபாலிப்பவனிருட்சியிற்றிரும்புதலை கபூல் செய்யக்கூடியதாயிருத்தல்வேண்டும்.

(134.) எவ்வெப்பொருட்களை வகுபு வைத்தலாகாது?

தனக்குச் சொந்தமல்லாதவைகளையும் விளையாட்டுப் பாண்டங்களையும் ஊதுவத்தி மெழுகுதிரிபோலாகியவைகளையும் வகுபு வைத்தலாகாது.

முகாத்தபு உம்முவலது முதலியவர்களையும் வகுபுவைக்கப்படாது.

(135.) தனக்கென்று வகுபு வைத்துக்கொள்ளலாமா?

தனக்கென்று வகுபுவைத்தலும் என் கடனை நிறைவேற்றிக்கொள்வனென்று ஷறுத்திடுதலும் ஸிஹத்தாகாது.

தான் வகுபுவைத்த கிதாபைப் பார்ப்பதையும் தான் தோண்டிய கிணற்றில் ஜலம் குடிப்பதையும் ஷறுத்திட்டுக்கொள்ளலாம்.

புகறாக்களுக்கென்று வகுபுவைத்தவன் அவனும் பகீறாகிவிட்டால் அதின் பிரையோசனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.



தான் வகுபாக்கிய மவுகூபைத்தானே பாதுகாப்பதாய் ஷறுத்திட்டவன் பார்வைக்காரனின் கூலிபோலாகியதை எடுத்துக்கொள்ளலாம்.

மவுகூபின் பிரையோசனத்தைக் கைக்கொள்ளுதற்காய் ஓர்கூட்டத்தாரையும் குறித்துக்கொள்ளலாம்.

நபிநாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரில் வகுபாக்கியதின் பிரையோசனத்தில் அவர்களின் றவுளாவுக்ிணங்கிய தேவைகளுக்காய்ச் செலவுபண்ணலாம்.

ஒருவரைக்குறித்து இன்ன ஊராருக்கென்று வகுபுசெய்தால் அவ்வூரில் ஸாளிருக முகிமாக இருப்பவனுக்கு அல்லது அவ்வூரைவிட்டு வர்த்தகஞ் செய்ய சாயிபானவனுக்குச் செலவுசெய்தல் வேண்டும்.

இன்னான் ஒவ்வொருநாளும் குறுஆனில் இவ்வளவு ஓதுதற்காய் வகுபாக்கினேனென்று வகுபு செய்தால் பிரிந்து பிரிந்தாவது குறுஆனில் எவ்விடமாயிருந்தாலும் குறித்த கதறுக்கு ஓதுதல் போதியதாம்.

(136.) எவ்விதமாய் நியமித்த வகுபு பாத்திலாகிவிடும்?

அன்பியாக்கள் அவுலியாக்கள் சாலிகின்களுடையகபுறல்லாதவைகளைப் பாதுகாப்பவர்களுக்கென்று அல்லது பாதைவெட்டி முறிக்கும் கள்வர்களுக்கென்று அல்லது கோயில் பாதுகாவல்காரர்களுக்கென்று வகுபுவைத்தலாம்.

(137.) யாதொன்றையும் விபரிக்காமல் வகுபுசெய்தவனின் வகுபை யாதுசெய்தல் வேண்டும்?

அதில் அவன் அக்காலத்தில் வளமையாக்கிவைத்த உறவை தொடர்தல்வேண்டும் அவனின்பின் வகுபவைப்பவர்கள் நடத்திவரும் வளக்கத்தைத் தொடர்தல்வேண்டும்.

(138.) மவுகூபின் பிரையோசனத்தைக் கைப்படுதற்காய்க் குறிக்கப்பட்டவர்கள் மரணித்துவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

வகுபுவைத்தவனின் குடல்வாய்ச் சனத்தில் முடுகுதலான பகீர் அதைக் கைப்பற்றுதல் வேண்டும்.

(139.) வகுபு செய்தவன் அதைக் காப்பாற்றுதற்குத் தன்னை ஷறுத்திட்டுக் கொள்ளலாமா?

தன்னைமாத்திரமல்ல தன்னிஷ்டப்படி எவரையாவது ஷறுத்திட்டுக்கொள்ளலாம்.

ஒருவரையும் ஷறுத்திடப்படாத மவுகூபின் பிரையோசனத்தைக் காளியே கைப்பற்றுதல் வேண்டும்.

மவுகூபைக் காப்பாற்றுபவனுக்கென்று ஷறுத்திடப்பட்ட கூலியை காளியே பார்வைக்காரனு யிருந்தாலும்எடுத்தலாகாது.காளி அநியாயம் செய்வாரெனப் பயப்படப்படுமேயாகில் அந்தமவுகூபு யார்வசமிருக்குமோ அவரே அதை நடப்பித்தல் வேண்டும்.

அதின் ஹூகும் அறியாதவராயிருந்தால் (பிகுகு) அறிந்த ஒருவரிடம் ஒப்பித்துப்போடலாம் இல்லாவிட்டால் அவரிடம் கேட்டுத் தானுகவே நடப்பித்தல் வேண்டும்.

மவுகூபைப் பாதுகாக்கும் பார்வைக்காரன் நீதிமானுயிருப்பதும் அதை நடப்பிப்பதில் நேர்வழி பெற்றவனுயிருப்பதும் வேண்டும்.

(140.) மவுகூபைக் காப்பாற்றுபவனுக்குக்கூலி நியமிக்கப் படாவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

ஹாகிமவிற் சென்று கூலி நியமிக்கும்படி சொன்னுல் அவர் அவனுக்குச் செல்லும் நபகாவிலும் உஜ்றத்து மிதுவிலும் குறைந்ததைக் கொடுக்கும்படி கட்டளை செய்தல் வேண்டும்.

---

## அல்பாபுல் காமிசு அஷற பீபயானில் ஹிபதி.

(பதினைந்தாம்பாபு நன்கொடையைப் பற்றியது.)

(141.) ஹிபத்து என்பதின் பொருள் யாது?

நன்கொடை என்பதாம் நன்கொடை கொடுக்கப்படும் பொருள் விற்பனவு செய்யத்தக்கதா யிருத்தல் வேண்டும்.

(142.) ஹிபத்துக் கொடுக்கத்தக்கவர் யாவர்?

முகல்லபாகிய றஷீதாகியவர்களாம் இவர்களை யன்றி மற்றவர்களாற் கொடுக்கப்படும் ஹிபத்தை கபூல்செய்யலாகாது.

(143.) ஹிபத்துடைய சீகா எவ்வாறும்?

ஹிபத்துக்கொடுப்பவன் உனக்கு நன்கொடை தந்தேனென்று வாயினுல் மொழியும் ஈஜாபும் ஒப்புக்கொள்பவன் அதைஒப்புக் கொண்டேனென்று வாயினுல் மொழியும் கபூலுமாம்.

ஈஜாபு கபூலின்றி ஹிபத்துக்கொடுப்பவனும் வாங்குபவனும் சம்மதித்துக்கொண்டாலும் ஹிபத்துண்டாகுமாம்.



(144.) ஹிபத்தில் யாதேனுமொன்றைக் கொளுகிப்பேசலாமா?

அது கொளுகுதலுடையதா யிருந்தால் கூடாது. ஹிபத்தைப் பெறுபவனின் சீவியத்தைப்பற்றிக் கொளுகுதலாய் பேசிக்கொடுக்கப்படும் ஹிபத்து பாத்திலாகாது.

ஹிபத்துக் கொடுப்பவனின் சீவியத்தை அல்லது மற்றவர்களின் சீவியத்தைப்பற்றிக் கொளுகினுல் பாத்திலாம்.

(145.) நஜீசாகிய தோல் எண்ணெ ஆகியவைகளை ஹிபத்துக்கொடுக்கலாமா?

அவைகளை ஹிபத்துக்கொடுத்தால் கூடாது விற்பனவுகூடும்.

(146.) ஹிபத்தைக் கைப்பற்றுதல் வேண்டுமா?

ஆம் அது கைப்பற்றுதல்கொண்டேயன்றி அகுதினுல் உண்டாகாது.

(147.) எவ்விதமாய்க் கைப்பற்றுதலை அறியலாம்?

கொடுத்தவன் அல்லது அவனின் காரியஸ்தன் உத்தரவு செய்தலினுலேயாம்.

ஹிபத்துக் கொடுக்கப்பட்ட பொருள் ஹிபத்துப் பெறுபவனின் கைவசமிருந்தாலும் அப்படியேயாம். அவனின் சமுகத்தில் வைத்தல் போதுமாகாது.

(148.) ஹிபத்துக் கொடுப்பவன் பெறுபவனுகிய இருவரி லொருவர் மரணித்தால் யாதுசெய்தல்வேண்டும்?

மரணித்தவனின் அநந்தாகாரர் கைப்பற்றுதலிலும் கைப்பற்றிக் கொடுப்பதிலும் நின்று கொள்ளுதல்வேண்டும்.

(149.) தன்மக்களி லொருவரைக்காண ஒருவருக் கதிகமாய் ஹிபத்துக் கொடுக்கலாமா?

அப்படி ஹிபத்துக் கொடுக்குதல் மகுறூகு அதை ஹறுமென்றும் சிலர் சொல்லுகின்றனர்.

கதியாவும் சதகாவும் அப்படியேயாம்.

கதியா, சதகா. ஹிபத்து எனும் மூன்றும் எறக்குறைய ஒரே பொருட்களை யுடையவைகளாம்.

(150.) எவ்வாறுகிய கதியாவை மீளுவித்துக்கொள்ளலாம்?

ஓர் பெண்ணைக் கலியாணம் முடிக்ககாடி அப்பெண்ணிடம் அல்லது அவளின் வகீலிடம் கொடுத்தனுப்பிய கதியாவை மீண்டு பெற்றுக்கொள்ளலாம்.

---

## அல்பாபுல் சாதிசு அஷறபீபயானில்

## இகுறாறி வஸ்ஸுல்கி.

(பதினாறம்பாபு விண்ணப்பம் இணக்கம் என்பவைகளைப்பற்றியது.)

(151.) இகுறாறு என்பதின் பொருள்யாது?

விண்ணப்ப மென்பதாம் அது சுயபுத்தியுள்ள முகல்லபானவன் தன் பொருத்தத்தோடு வாயினால் மொழிதலாம்.

சிறுவர் பயித்தியகாரர் ஹக்கின்றி வம்பிக்கப்பட்டவர்கள் சொல்லும் விண்ணப்பம் இகுறாறாகாது.

உண்மையைக்கொண்டு வம்பிக்கப்பட்டவனின் விண்ணப்பம் கூடுமாம்.

(152.) மனியினால் புஹுகானேனெனும் இகுறாறை உண்மைகொள்ளலாமா?

அப்படியாக இடம்பாடுண்டாயிருந்தால் சத்தியமின்றி உண்மை கொள்ளலாம்.

(153.) வயதினால் புஹுகானேனெனும் இகுறாறைச் சாட்சிகளைக் கொண்டுண்மை கொள்ளலாமா?

அப்படி வழக்கடிப்பவன் பிறரறியாத பிறதேசவாசியாயிருந்தால் சாட்சிகளைக்கொண்டுண்மைகொள்ளலாம்.

(154.) இகுறாறுடைய ஷறுத்துக்களியாது?

ஹக்குப்பூண்ட சொல்லைக்கொண்டறிவிக்கும் சொல்லுக்களைச் சொல்லுதலாம்.

எனக்குன்மீது இன்னது வரவேண்டுமல்லவா என்பவனுக்கு உண்மைதான் மெய்சொன்னாய் நீ என்னை நீக்கிவிட்டுப் போட்டாய் என்பவைகளெல்லாம் இகுறாறாம்.



(155.) மரணவியாதியிற் சொல்லும் இகுறாறு கூடுமா?

மரணவியாதியில் தன்னுடையஅனந்தரகாரனுக்கு இகுறாறுசெய்தாலும் கூடும். அதுகடனைப்பற்றியதாயினும் அல்லதுகுறிப்பானவோர் பொருளைப்பற்றியதாயினுமாம் அதை அவனின் (மையுமுதல்) சொந்தமுதலில்நின்றுமே நீக்கப்படும் அவ்விகுறாறை வேறே அனந்தரகாரர் பொய்யாக்கிவித்தாலுமாம்.

(156.) வியாதிக்காரன் எவ்விதமாய்ச் சொல்லும் இகுறாறை ஒப்புக்கொள்ளலாம்?

வியாதிக்காரன் இன்னானுக்கு என்னுடைய இன்னதை நன்கொடைசெய்து கைப்பற்றிக்கொடுத்தேனெனும். இகுறாறை ஒப்புக்கொள்ளலாம்.

(157.) அறியப்படாத்ததைக் கொண்டு இகுறாறு செய்யலாமா?

அறியப்படாததாயிருந்தாலும் இகுறாறு செய்யலாம்.

(158.) இகுறாறு செய்தவன் பசாதை வழக்கடித்தால் யாதுசெய்தல் வேண்டும்?

தான் விற்றதாக அல்லது ஹிபத்துக்கொடுத்துக் கைப்பற்றிக்கொடுத்ததாக இகுறாறு செய்தவன் அப்படிச் சொல்லவில்லை என்று வாதித்தால் அவ்வழக்கை எர்க்கப்படாது அவனேயாதொன்றையும் விபரித்தறியாத பதவிபோலாகிய மூடனாயிருப்பதுகொண்டு அவனின் ஹாலுடையலாகிறு அவனுடையசொல் லுண்மையென அறிவித்தால் தான் ஒப்புக்கொள்ளப்படும்.

(சுல்ஹைப் பற்றியது.)

(159.) சுல்ஹாவது யாது?

வாதி பிறதிவாதியாகிய இருவர்களையும் இராசிப் படுத்துதலாம் அது வழக்கிடப்பட்ட பொருள் அதின் தொகையல்லாததிற்றான்.

(160.) எவ்வெக்கருமங்களில் சுல்ஹுண்டாகாது?

வாதியின் சொல்லு உண்மையாயிருந்தாலும் பிரதிவாதி விண்ணப்பம் செய்வதின்பேரிலேயே யன்றி அல்லத் தட்டுதலிலும் வாய்மூடுதலிலும் சுலஹுண்டாகாது.

வழக்காளிக்குச் சாட்சியில்லாதிருக்க பிரதிவாதி அல்லத் தட்டினாலும் வாய்மூடினாலும் இராசி பேசக்கூடாது.

---

## அல்பாபுல் சாபிஉ அஷ்ற பீபயானில் வசிய்யதி.

(பதினேழாம்பாபு வசிய்யத்தைப் பற்றியது.)

### 161. வசிய்யத்தாவ தியாது?

தன்னுடைய பொருளைத் தன்மெளத்துக்குப்பின் இன்னவிதமாய் நடப்பிக்கவேண்டுமெனக் கற்பித்தலே வசிய்யத்தாம்.

அது தன்னுடைய துன்யாவின் பொருளை ஆகிறதின் கையுடன்சேர்த்தலாம்.

### (162.) எவ்வாறு வசிய்யத்துச் செய்தல் மக்ருஹாகாம்?

வசிய்யத்துச் செய்பவன் தன்னுடைய பொருளில் மூன்றிலொரு பங்கைக்காண அதிகமாய் வசிய்யத்துச் செய்தல் மக்ருஹாகாம்.

அனந்தாகாரரைப் பேறுகெடுப்பதற்காக மூன்றிலொன்றுக்கதிகமாய் வசிய்யத்துச் செய்தல்ஹறாமாம்.

மரணவியாதியல்லது சுவாத்தியமாயிருக்கும்போது நடந்த வசிய்யத்து மூன்றிலொன்றைக் காண அதிகமாயிருக்கவோர் முகல்லபான அனந்தரகாரன் அவ்வதிகத்தை தட்டிவிட்டால் அவ்வசியத்து அவ்வதிகத்திற் செல்லாது.

பலவாரிசுகளிற் சிலர் தட்டியதை சிலர் ஆமாக்கிவித்தால் தட்டிவிட்ட அதிகத்தில் அதை ஆமாக்கிவித்தவர்களின் பங்கில் அவ்வசிய்யத்துச் செல்லுமாம்.

முகல்லபும் சாட்டான் மகனுமானவன் தன்பொருத்தத்துடன் ஹலாலான கருமத்துக்காய்த் தன்பொருளை வசிய்யத்துச் செய்தல் சிறந்தாகும்.

வசிய்யத்து வாயினால் மொழிதல் கொண்டே சிறந்தாகுமாம்.

### (163.) வருங்காலத்தி லியற்றப்படும் பள்ளி முதலியதுக்கென்று வசிய்யத்துச் செய்யலாமா?

வருங்காலத்தி லியற்றப்படும் பள்ளிக்கு அல்லது பின் உண்டாகும் ஹமலுக்கு அல்லது குறிப்பற்ற ஒருவனுக்கு வசிய்யத்துச் செய்தே னென்ற வசிய்யத்துக் கூடாது.

வசிய்யத்துச் செய்யும்போது திட்டமாய் உண்டான ஹமலுக்கும் வசிய்யத்து நடந்த நேரம்முதல் ஆறுமாசத்துக் குள்ளாகத் தரிபாடான ஹயாத்துக்கொண்டு பிறந்த ஹமலுக்கும் வசிய்யத்



துச் செய்யாதநாட் தொடுத்து நாலுவருடத்துக்குள்ளாக வேறேயொருவனுக்கு அல்லது செய்யிதுக்கு அப்பெண் விரிப்பாயிராமல் அவனில் நின்றுமே ஹமலுண்டாக இடம்பாடாயிருக்கும் ஹாலில்பிறந்த ஹமலுக்கும் வசிய்யத்துச் செய்தால் அவ்வசிய்யத்துக்கூடும்.

### (164.) புகறாக்களுக் கென்று வசிய்யத்துச் செய்தபொருளை வசிய்யத்துச்செய்தவனின் அனந்தரகாரிஇுள்ள பகிர் எடுத்துக்கொள்ளலாமா?

அதில் கொஞ்சத்தையாவ தெடுக்கக்கூடாது.

### (165.) இன்னானுக்கு இன்னதைக்கொடு அல்லது இன்னானுக்கு இன்னதை ஆக்கிப்போடு என்ற சொல்லுடன் மவுத்துக்குப் பின் என்றுசொல்லுதல் வசிய்யத்தாகுமா?

ஆம் அப்பேச்சு வசிய்யத்தாவதற்குஷறுத்தாம்.

### (166.) வசிய்யத்தைப்பற்றி நடக்கும் எழுத்து வசிய்யத் தாகுமா?

அது சயிக்கினையாகுமேயன்றி கலப்பற்ற வசிய்யத்தாகாது.

### (167.) வசிய்யத்துச்செய்தவன் மரணித்தபின் வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருள் யாருக்குடையதாகும்?

அவ்வசியத்தை கபூல் செய்பவனுக் குடையதாகும். வசிய்யத்துச் செய்தவன் மரணித்த காலந்தொடுத்து அவ்வஸ்துவில்வரும் வருமதியும் அதற் குண்டாகும் செலவும் அவன்பேரிலேயாம்.

### (168.) அயலாருக்கென்று வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருளையாது செய்தல்வேண்டும்.

அவனின் வீட்டைச்சூழ்ந்த நான்கு திசைகளில் நின்றும் ஒவ்வோர் திசையிலும் நாற்பது வீட்டுக்காரருக்குக் கொடுத்தல் வேண்டும்.

எல்லா ஒவ்வொருவரின் பங்கையும் அதிற்குடியிருப்பவர்களின் தொகைக்கு பிரித்துக்கொள்ளுதல் வேண்டும்.

### (169.) உலமாக்களுக்கென்று வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருளை எவ்வெவ் வில்முகளைப் படித்தவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

மேன்மையாகிய குறுஆன் ஷரீபின் தப்சீறு ஹதீது பிக்கு எனும் மூன்று இல்மையும் படித்தவர்களுக்குக் கொடுத்தல்வேண்டும்.

இம்மூன்று இல்மையும் உடையவர்களில் ஒவ்வொன்றில் மும்மூன்று பெயருக்குக் கொடுத்தல் போதியதாம்.

மனிதரில் மிருதமாய்ப் படித்தவர்களுக்கென்று வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருளை பிகுகு உடைய உலமாக்களுக்கே கொடுத்தல்வேண்டும்.

காரிகளுக்கென்று வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருளை குறுஆன் முழுமையும் பார்க்காமல் ஓதுபவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

மனிதரில் மிகுந்த மடையருக்கென்று வசிய்யத்துச் செய்யப்பட்ட பொருளை விக்கிர காராதனை செய்பவர்களுக்குக் கொடுத்தல்வேண்டும்.

(170.) மவுத்தைக்கொண்டு சொருக்கப்பட்ட வசிய்யத்தைத் தானே மீளுவித்துக் கொள்ளலாமா?

ஆம். அதனுல் வசிய்யத்து அழிந்துபோகும்.

# கிதாபுல் பறாயிலி.

## அல்பாபுல் தாமினு அஷ்ற பீபயானில் தரிக்கத்தி.

(பதினெட்டாம்பாபு அனந்தரப்பொருளையும் அதைச் சார்ந்தவைகளையும்)

(பற்றியது.)

(171.) தரிக்கத்து என்பதின் பொருள்யாது?

மரணித்தவனின் பொருள் என்பதாம்.

(172.) மரணித்தவனின் பொருளை யாதுசெய்தல் வேண்டும்?

மரணித்தவரை அடக்கம்பண்ணுதற்குத்தக்க செலவுசெய்து அவர் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்து எஞ்சியதின் மூன்றிலோர் பாகத்தில் அவருடைய வசிய்யத்தை நிறைவேற்றியபின் மிஞ்சியபொருளை வாரிதீன்கள் பின்வருமாறு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மரணித்தவரின் பொருளில் சகாத்து சட்டுடைமை சேர்ந்திருந்தால் அடக்கம்பண்ணுதற்குச் செலவுசெய்ய முன் கொடுத்துப் போடுதல் வேண்டும்.

(173.) அனந்தரங் கொள்ளுதலை ஆமாக்கிவிப்பவைக ளெவை?

(நிகாஹ்) விவாகம், உருமை, வம்மிசம், இஸ்லாம் எனும் நான்குமாம்.



(174.) அனந்தரங் கொள்ளுதலை விலக்கிவிப்பவைக ளெவை?

கொலைசெய்தல், அடிமையாயிருத்தல், வம்மிசம் மாறுதல், முறுத்தாதல், எனும் நான்குமாம்.

முஸ்லீமும் காபிறும் ஒருவருக்கொருவர் அனந்தரங்கொள்ளுதலாகாது.

முறுத்தானவன் ஒருவருடைய பொருளையும் அனந்தரங்கொள்ளுதலாகாது. அவனுடைய பொருளையும் ஒருவரும் அனந்தரங் கொள்ளப்படாது அதைக் கொள்ளைமுதலில் சேர்த்தல் வேண்டும்.

காபிர் காபிருடைய பொருளை அனந்தரங்கொள்ளலாம், அவர்களின் மதம் பேதமாயிருந்தாலுமாம்.

கொலைசெய்தவன் தன்னுற் கொலைசெய்யப்பட்டவனின் பொருளை அனந்தரங்கொள்ளுதலாகாது. அக்கொலைக்கு சபபாயிருந்தவனு மப்படியே.

அடிமை அடிமைத்தனத்துடன் அனந்தரங் கொள்ளுதலாகாது.

(175.) வாரிதீன் என்பதின் பொருள்யாது?

அனந்தரங்கொள்பவர்க ளென்பதாம் அது ஆண்பால் பெண்பாலெனும் இருபாலாருக்கும் பொதுவினதாம்.

(176.) ஆடவர்களில் அனந்தரங்கொள்பவர்கள் யாவர்?

அவர்கள் இருக்கிசாறின்படி 10-பத்து வகையினராம்.

அவர்களாவது மகன், மகனுடைய மகன், பிதா, பிதாவுடைய பிதா, சகோதரன், சகோதரனின் மகன், சிறியதகப்பன் பெரிய தகப்பன், அவ்விருவர்களின் மகன், புருடன், உருமைவிட்டவன் என்[illegible]ர்களாம்.

அவர்கள் பஸ்தின்படி 15-பதினைந்து வகையினராம்.

அவர்களாவது மகன் மகனுடைய மகன் பிதா பிதாவுடைய பிதா சகோதரன் தகப்பனின் மகன் தாயின் மகன் சகோதரனின் மகன் தகப்பனின் மகனுடையமகன் தகப்பனின் சகோதரனுகிய சிறியதகப்பன் தகப்பனுடைய தகப்பனின் மகனுகிய சிறியதகப்பன் தகப்பனின் சகோதரனுகிய சிறியதகப்பனின்மகன் தகப்பனின் தகப்பனுடைய மகனுகிய சிறியதகப்பனின் மகன் புருடன் உருமையிட்டவன் என்பவர்களாம்.

(177.) மாதர்களில் அனந்தரங் கொள்பவர்களியாவர்?

அவர்கள் இருக்கிசாறின்படி எழுவகையினராம்.

அவர்களாவது மகள் மகனுடைய மகள் தாய் பாட்டி சகோதரி மனைவி உருமைவிட்டவள் என்பவர்களாம்.

அவர்கள் பஸ்றின்படி 10-பத்து வகையினராம்.

அவர்களாவது மகள் மகனின் மகள் தாய் தாய்வகையிலுள்ள பாட்டி தகப்பனின் வகையிலுள்ள பாட்டி சகோதரி தகப்பனின் மகள் தாயின்மகள் மனைவி உருமைவிட்டவள் என்பவர்களாம்.

(178.) ஆடவர்களெல்லாம் சேகரமாயிருந்தால் யாரரியார் அநந்தரங்கொள்பவ ராவர்?

தகப்பனும் மகனும் புருடனுமாம்.

(179.) பெண்களெல்லாம் சேகரமாயிருந்தால் யாரியார் அனந்தரங்கொள்பவ ராவர்?

மகளும் மகனுடைய மகளும் தாயும் சகோதரியும் மனைவியுமாம்.

(180.) ஆடவர்கள் ஸ்திரிகள் ஆகிய இருபாலாரும் சேகரமாயிருந்தால் யாரியார் அனந்தரங்கொள்பவ ராவர்?

தாயும் தகப்பனும் மகனும் மகளும் புருடன் அல்லது மனைவியுமாம்.

---

## அல்பாபுல் தாசிஉ ஃபீபயானில் புறூளில் மகுதூரி வத்தக்ஸீபி.

(பத்தொன்பதாம்பாபு.)

வாரிசுகளி லொவ்வொருவரும் பெற்றுக்கொள்ளும் தொகையையும் அசபத்தையும் பற்றியது.

—ooOoo—

(181.) அனந்தரம் எத்தனை வகைப்படும்?

பறுலு அசபத்து என இருவகைப்படும்.

பறுலென்பது மேன்மையாகிய குறுஆன் ஷரீபில் பின்வருமாறு சொல்லப்படுபவர்களில்இன்னாரின்னார் தரிக்கத்தில் இன்ன இன்னதொகை பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென மட்டிடப்பட்டதாம்.

(182.) அது எத்தனை பிரிவுக்களுடையது?

மூன்றிலிரண்டு, அரை, கால், அரைக்கால், மூன்றிலொன்று, ஆறிலொன்று, என ஆறுபிரிவுக்களை யுடையதாம்.



(183.) தரிக்கத்தின் மூன்றிலிரண்டு பாகத்தைப் பெறுபவர்களியாவர்?

மரணித்தவரின் இரண்டு புத்திரிகள் அல்லது அதற்கதிகமாகியபுத்திரிகள் மகனுடைய இரண்டு புத்திரிகள் அல்லது அதற்கதிகமானவர்கள் இரண்டு சகோதரிமார் அல்லது அதற்கதிகமானவர்கள் தகப்பனுடைய இரண்டு புத்திரிகள் அல்லது அதற்கதிகமானவர்களாம்.

(184.) தரிக்கத்தின் அரைவாசியைப் பெறுபவர்களியாவர்?

தனித்தனி ஒவ்வொருவராகிய ஐவர்களாம் அவர்களாவது புருடன் மகள் மகனுடையமகள் சகோதரி தகப்பனின்மகள் என்பவர்களாம்.

புருடன் தன் மனைவிக்குப் பிள்ளையில்லாவிட்டால் மேற்சொல்லிய தொகையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(185.) தரிக்கத்தின் நாலிலோர்பாகத்தைப் பெற்றுக்கொள்பவர்களியாவர்?

தன் மனைவிக்குப் பிள்ளையிருக்கும்போது புருடனும் பிள்ளையில்லாதபோது மனைவியுமாம்.

(186.) தரிக்கத்தின் எட்டிலோர் பாகத்தைப் பெறுபவரியாவர்?

பிள்ளையிருக்கும்போது மனைவி பெற்றுக்கொள்ளுவள்.

எத்தனை மனைவிமார் இருந்தாலும் 185-ம் இலக்கவினாவின் விடையில் சொல்லிய நாலிலோர் பாகத்தையும் 186-ம் இலக்கவினாவின் விடையில் சொல்லிய எட்டிலோர் பாகத்தையும் ஒவ்வொருவரும் சரிசரியாய்ப் பிரித்துக் கைப்பற்றிக்கொள்ளுதல்வேண்டும்.

(187.) தரிக்கத்தின் மூன்றிலோர் பாகத்தைப் பெறுபவரியாவர்?

மரணித்தவரின் பிள்ளை அல்லது மகனுடைய பிள்ளை அல்லது சகோதரர்களில் இருவர் அல்லது அதற்கதிகமானவர்களில்லாவிட்டால் தாயும் தாயுடைய மக்களில் இருவர்களுமாம்.

(188.) தரிக்கத்தின் ஆறிலோர் பாகத்தைப் பெற்றுக்கொள்பவர்களியாவர்?

பாட்டியும் மரணித்தவரின் பிள்ளையிருக்கும்போது தகப்பனும் பாட்டனும் மரணித்தவரின் பிள்ளை அல்லது மகனின் பிள்ளை அல்லது உடற்பிறந்தவர்களிலிருவர் அல்லது அதற்கதிகமானவ

ர்க ளிருக்கும்போது தாயும் மகளிருக்கும்போது மகனுடைய மகளும் சகோதரியிருக்கும்போது தகப்பனுடைய வேர்மகள். அல்லது அதற்கதிகமானவர்களும் தாயுடைய மக்களில் ஒருவருமாம்.

தாயும் தகப்பனும் ஆடவன் ஸ்திரியாகிய இருவரி லொருவரும் பெற்றுக்கொள்ளும் தரிக்கத்தில் ஆடவனுக்கு அல்லது ஸ்திரிக்கு விதித்த தொகையை நீக்கிய மூன்றி லொன்றில் எஞ்சியதை தாயே பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அசபத்தைப்பற்றியது.)

(189.) அசபத்துக்காரர் என்பதின் பொருள்யாது?

மரணித்தவரின் தரிக்கத்தில் பறுலுக்காரருக்கு நியமிக்கப்பட்ட பங்கு நீக்கி மீதியிருந்தாலும் அல்லது பறுலுக்காரர் இல்லாதபோது எல்லாவற்றையும் கைக்கொள்பவர்களாம்.

(190.) அசபத்துக்காரர் யாவர்?

மகன் மகனுடைய மகன் பிதா பிதாவுடைய பிதா சகோதரன் பிதாவுடைய மகன் அவர்களின் ஆண்மக்கள் பிதாவுடைய சகோதராகிய சிறியதகப்பன் பெரியதகப்பன் அல்லது பிதாவுடைய தகப்பனின் மகனாகிய சிறியதகப்பன் பெரியதகப்பன் அவர்களின் ஆண்மக்கள் என்பவர்களாம்.

வம்மிசத்தாலாகிய அசபத்துக்குப்பின் உருமையிட்டவனே அசபத்துக்காரனும். உருமையிட்டவனில்லாவிட்டால்அவனின் அசபத்துக்காரராகிய ஆடவர்களாம்.

மரணித்தவரின் தனிமையாகிய வேர்மகன் அவனின் தரிக்கத்தையெல்லாம் எடுத்துக்கொள்ளுதல்வேண்டும்.

இரண்டு அல்லது அதற் கதிகமான ஆண்மக்கள் தகப்பனின் தரிக்கத்தை சரிசரியாய்ப்பங்கிட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆண்மக்களும் பெண்மக்களும் இருந்தால் இரண்டு பெண்மக்கள் ஓர் ஆண்மகனுக்குச் சரியாவார்கள்.

அனந்தரகாரர்களுக்குக் கொடுத்து எஞ்சியதை புருடனையும் மனைவியையும் தவிர மற்ற பறுலுக்காரர்களுக்கு அவரவர்களின் பங்குக்கு நிகராக மறுபடியும் கொடுக்கப்படும் என்று முதஅக்கிரீன்கள் பதுவாச்செய்தனர். இதையே றத்து என்பார்கள்.

பறுலுக்காரரிலொருவரையும் காணப்படாவிட்டால் அறுஹாம் காரருக்குக் கொடுத்தல்வேண்டும்.



அவர்களாவது புத்திரியின் புத்திரர், உடற்பிறந்தவனின் புத்திரி சிறியதகப்பன் பெரியதகப்பனின்புத்திரி, தாயொண்டித்த சிறிய தகப்பன், தாய்மாமன், தாயுடன்பிறந்தவள், தகப்பனுடன் பிறந்தவள், தாயுடைய பிதா, தாயின் தகப்பனுடைய தாய், தாயுடைய மகனின் புத்திரர் என்பவர்களாம்.

---

## அல்பாபுல் இஷ்ரீன் பீபயானில் ஹஜ்பி வல்முஷற்றகதி வல் ஜத்திவல் இருவதி வல்அவுலி.

(இருபதாம் பாடம் ஹஜ்பையும் சில நூதன மசாயில்களையும் பற்றியது.)

(191.) ஹஜ்பாவதியாது?

வாரிஸீன்களிற் சிலரைச் சிலர் அனந்தரம் கொள்ளவொட்டாமல் தடுத்தலாம்.

மரணித்தவரளவி லதிக முடுகுதலுள்ளவர் அவரைக்காரணத் தூரமானவரை ஹஜ்பு செய்வார்.

(192.) தாயுடைய புத்திரனை எத்தனைசாரார் ஹஜ்புசெய்வார்கள்?

மரணித்தவரின் புத்திரர்களும் அவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலுமாம், மரணித்தவரின் மகனின் புத்திரர்களும் அவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலுமாம், மரணித்தவரின் பிதாவும், மரணித்தவரின் பாட்டனும் ஆகிய நான்குசாராரும் ஹஜ்புவார்கள்.

(193.) சகோதரனை ஹஜ்பு செய்பவர்களியாவர்?

மரணித்தவரின் புத்திரன், மரணித்தவரின் மகனுடைய புத்திரன், மரணித்தவரின் பிதா எனும் மூன்று சாரார்களுமாம்.

(194.) மரணித்தவரின் பிதாவுடைய புத்திரனையும் ஹஜ்பு செய்யப்படுமோ?

ஆம் 193-ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லிய மூன்று சாராரும் மரணித்தவரின் சகோதரனுமாம்.

மரணித்தவரின் மகனுடைய புத்திரனை அவரின் மகன் ஹஜ்பு செய்வான்.

மரணித்தவரின் மகனுடைய புத்திரன் என்பதில் எவ்வளவு கீழேயிறங்கினாலும் அவ்வாறு கீழே இறங்கிய ஒவ்வொரு சாரார்

களையும் அவர்களைக் காண மரணித்தவராளவில் முடுகுதலுடைய சாரார் ஹஜ்பு செய்வார்கள்.

எவ்வகையினுலாகிய பாட்டியாளாயிருந்தாலும் மரணித்தவரின் தாய் ஹஜ்பு செய்வாள்.

பிதாவின் பிதாவாகிய ஜத்தையும் பிதாவின் தாயாகிய ஜத்தத்தையும் பிதா ஹஜ்பு செய்வான்.

(195.) மரணித்தவருக்கு மூன்றிலிரண்டு பங்கை நிரப்பமாகத் தேடத்தக்க புத்திரிகளிருக்கும்போது அவரின் புத்திரனுடைய புத்திரிமார் அனந்தரங் கொள்ளலாமா?

அவர்கள் அனந்தரங் கொள்ளுதலாகாது.

அப்பெண்களின் தறஜாவில் அல்லது அவர்களுக்குக் கீழான தறஜாவில் ஆடவர்களிருந்தால் அவர்களோ மீதியைப் பெற்றுக் கொள்ளும் அசபத்துக்காரராவர்.

மரணித்தவருக்கு மூன்றி லிருபாகத்தைத் தேடும் சகோதரர்களிருக்கும்போது பிதாவின் புத்திரிமார் அனந்தரங் கொள்ளுதலாகாது.

(196.) முஷற்றக்கத்து என்பதின் பொருள்யாது?

கூட்டு என்பதாம் அது பயானுல் மஸ்அலத்துல் முஷற்றக்கதி என விரியும். அதின்படி அருத்தமாவது பின்வருமாறு சிலர் சிலரோடு ஒரு பறுளில் கூட்டாகும் மஸ்அலாவை விபரித்தல் என்பதாம்.

மரணித்தவரின் சகோதரரும் தாயுடைய புத்திரருமே ஒரே பறுளில் கூட்டாவார்கள்.

(197.) இம் மஸ்அலாவுக்கு வேறு நாமங்களுண்டோ?

ஆம் ஹிமாரிய்யா வென்றும் ஹஜரிய்யா வென்றும் யம்மிய்யாவென்றும் மின்பாரிய்யா வென்றும் பல நாமங்களுண்டு.

புருடனும் தாயும் அல்லது பாட்டியாளும் தாயுடைய இரண்டு புத்திரர்களும் சகோதரனும் ஓர் மரணித்த ஸ்திரியின் தரிக்கத்தை அனந்தரங் கொள்ளும்போது அச்சகோதரனே தாயுடைய புத்திரனை மூன்றிலோர் பங்குக்குக் கூட்டாக்கிக்கொள்ளுவான். அச்சகோதரனுக்குப் பதிலாகத் தகப்பனின் புத்திரனிருந்தாலும் கஜ்பாயிடுவான்.

(198.) மரணித்தவரின் பாட்டன் அவரின் சகோதரர்களோடு சேர்ந்து அனந்தரங் கொள்ளலாமா?

ஆம் பாட்டன் சகோதரர்களோடு சேர்தலால் சலாக்கியமுண்டாகுமேயானுல் அவர்களோடு சேர்ந்து அனந்தரங்கொள்ளலாம்





இவ்விடத்தில் சகோதரனென்றதில் பிதாவுடைய புத்திரன் சேர்ந்துகொண்டான்.

(199.) மரணித்தவரின் பாட்டனும் ஓர் சகோதரனுமிருந்தால் எவ்வாறு பிரித்துக்கொள்ளுதல் வேண்டும்?

இருவரும் சரிசரியாய்ப் பிரித்துக்கொள்ளுதல்வேண்டும்.

பாட்டனும் இரண்டு ஆண் சகோதரர்களும் ஓர் சகோதரியும் இருந்தால் பறுளின்படி பிரித்துக்கொள்வதைக் காண அதின் மூன்றிலோர் பாகத்தை எடுத்துக்கொள்ளுதல் பாட்டனுக்கு நன்றாம்.

இரண்டு மகளும் பாட்டனும் இரண்டு சகோதரர்களும் இருந்தால் ஆறிலொன்றுவது மற்றதைக்காண மிகுதமாம்.

மனைவியும், தாயும், பாட்டனும், இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும், இருந்தால் பறுளுக்காரரின் பங்கு நீக்கி மீதியின் மூன்றிலொன்று பாட்டனுக்கு நன்றாம்.

ஓர் புத்திரியும் பாட்டனும் ஓர் சகோதரனும் ஓர் சகோதரியும் இருந்தால் சொல்லப்பட்டவர்களோடு சேர்ந்து பிரித்துக்கொள்ளுதல் பாட்டனுக்கு நன்றாம்.

(200.) பறுழினுடைய மஸ்அலாத்துக்களில் எத்தனை மஸ்அலா அஸ்லாகும்?

ஆறு பன்னிரண்டு இருபத்துநான்கு எனும் மூன்று மஸ்அலத்துக்களுமாம்.

ஆறு ஒற்றையாகவும் இரட்டையாகவும் பத்துவரைக்கும் பன்னிரண்டு ஒற்றையாகவே பதினேழுவரைக்கும் இருபத்துநான்கு இருபத்தேழுவரைக்கும் அதிகப்படுத்தப்படும்.

## மூன்றும் அதிகாரம்

கிதாபுல்புயூஇ

முற்றிற்று.

# நான்காம் அதிகாரம்.

## கிதாபுன் நிகாஹி.

### அல்பாபுல் அவ்வலுபீபயானின் நிகாஹி.

(முதலாம்பாபு விவாகத்தின் பொதுவிபரங்களைப் பற்றியது)

### அல்பஸ்லுல் அவ்வலு பீபாபின் நிகாஹி.

### க - ம் பிரிவு.

(1.) நிகாஹு என்பதின் பொருள்யாது?

இன்காஹு தஸ்வீஜு எனுமிரண்டிலோர் லபூலைக்கொண்டு புணர்ச்சியை ஆமாக்கிவிக்கும் அக்துதே ஷறஇல் நிகாஹாம்.

புணர்ச்சியில் ஹாஜத்தாகி மகர் நபகா வஸ்திரம் ஆகியவைகள் கொடுக்கத் தக்க ஆடவன் நிகாஹுசெய்தல் சுன்னத்தாம்.

மகர் நபகா ஆடை ஆகியவைகள் கொடுக்கத் தகுதியற்ற புணர்ச்சியில் ஹாஜத்தானவன் நிகாஹு செய்தல் மகுறூகு.

மகர் முதலிய மூன்றுங் கொடுக்கத் தகுதியற்றவன் ஜிமாஇல் ஹாஜத்தானால் நோன்புபிடித்து ஷகுவத்தைக்குறைத்தல் நன்று. கைப்பூர மாதிய மருந்துக்களால் ஷகுவத்தைக் குறைத்தல் மகுறூகாம்.

நபகா முதலியவைகள் கொடுக்கத் தக்கவன் ஜிமாஇல் ஹாஜத்தில்லாதவனாயிருந்தால் இபாதத்தைக்கொண்டு பராக்காகுதல் அபுலவாம்.

(2.) நிகாஹு முடிக்கக்கருதிய ஆடவன் ஸ்திரியாகிய இருவரிலொருவர் மற்றவரை நிகாஹு முடிக்குமுன் பார்க்கலாமா?

ஆம் கிதாபுஸ்ஸலாத்தின் 7-ம்பாபின் 302 - ம் இலக்க வினாவின் விடையிற் சொல்லிய அவுறத்தைத் தவிரமற்ற மேனியைப் பார்த்தல் சுன்னத்தாம்.

பார்க்கும்போது ஓர் மஹ்றமைக்கூட வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆடவன் ஸ்திரியாகிய இருவரிலொருவர் மற்றவரைப் பார்க்க வசதிப்படாவிட்டால் தனக்குச சொந்தமானவோர் ஸ்திரியைப் பார்த்துவரும்படி அனுப்பி ஆராய்ந்துகொள்ளுதல் சுன்னத்தாம்.



(3.) பாலிகாகிய ஆடவன் அஜ்னபிய்யத்து ஆகிய ஸ்திரியைப் பார்க்கலாமா?

அவ்விஸ்திரியைப் பார்ப்பதும் ஆசையுடன் அவளின்தொனியைக் கேட்பதும் ஹறாம்.

சிறுவரின் அபத்தைத்தவிர மற்ற இடங்களைப் பார்க்கலாம்.

தாயும் பால் கொடுப்பவளும் உடம்பின் எவ்விடத்தையாவது தேவையான அளவு பார்க்கலாம்.

மாதர்கள் பாலிகாகிய ஆடவனையும் காபிறத்து ஆகியஸ்திரியையும் விலைமகளையும்பார்ப்பதும் அவர்களுடன் தனித்தலும்ஹறாம்.

நீதிமானாகிய பயல் தன் நாயகியைப் பார்க்கலாம்.

(4.) அஜ்னபிய்யாகிய ஆடவன் அஜ்னபிய்யத் தாகிய ஸ்திரி என்பவர்களி லொருவர் மற்றவரின் உடம்பை விட்டுப் பிரிந்த உறுப்பைப் பார்க்கலாமா?

அதுஹறாம்

அவயவம் மாத்திரமல்ல உரோமம் நகமாகியவைகளைப் பார்ப்பதும் ஹறாமாம் அவ்வுறுப்பைக் கண்டவர்கள் மறைத்தல் வாஜிபாம்.

இருவரிலொருவர் மற்றவரைப் பார்ப்பதில் ஆடவன் ஸ்திரியைப்பார்த்தல் கொடிய ஹறாமாம்.

மஹ்றமானவன் பிரசித்தமுற்ற பாஸிகாயிருந்தால் அவனுக்குத் திரைபோடுதல் சுன்னத்தாம்.

(5.) இரண்டு ஆடவர் அல்லது இரண்டு மாதர் ஒரு விரிப்பில் உறங்கலாமா?

ஒருவிரிப்பி லுறங்குதலும் ஓர் ஆடையிற் படுப்பதும் ஹறாம்.

பத்துவயதை உடைய சிறுவர்களை பெற்றோர் சகோதரர்களோடு படுக்கவொட்டாமற் பிரித்தல் வாஜிபு.

முகவரைகீறாத இளைஞனை இச்சைகொண்டு பார்ப்பதும் தொடுவதும் ஹறாம்.

(6.) விவாகப்பொருத்தம் பேசுபவர்கள் யாதுசெய்தல் வேண்டும்?

அப்பேச்சை நடத்துமுன் மாப்பிள்ளை அல்லது மாப்பிள்ளையின் வகில் ஓர் குத்பாஓதித் தன் கருத்தை வெளிப்படுத்தியவுடன் அவ்விஸ்திரியின் வலிகாரன் சம்மதித்து வாக்குச்சொல்லுமுன் தா

ன் அல்லது தன்னுடையவகீல் ஓர் குதுபா ஓதிவாக்குச் சொல்லுதல் வேண்டும் அது சுன்னத்தாம்.

நிகாஹுநடக்கும் தருணத்தில் துவக்கமாய் வலிகாரன் அல்லது அவனின் நாயிபு ஓர் குதுபா ஓதுதல் சுன்னத்தாம்.

(7.) ஒருவருக்குப்பேசிச் சம்மதங் கொடுக்கப்பட்ட பெண்ணை மற்றவருக்குப் பேசலாமா?

பேசிச் சம்மதி நடந்ததை யறிந்தவன் அப்பெண்ணைத் தனக்குப் பேசுதல் ஹறாம்.

இத்தேசங்களில் மாப்பிள்ளை பேசுதலே வழக்கமாயிருத்தலால் அதையும் மேற்சொல்லியவாறே யொசுபிடித்தல் வேண்டும்.

முந்தியவருக்கு யாதேனும் ஜவாபு பிறக்காவிட்டாலும் பிறக்கணித்துவிட்டாரென்று அறிந்தாலும் மற்றவர் பேசலாம்.

பெண் மாப்பிள்ளையைப்பற்றியும் ஓர் செய்கிடம் ஷரீகுபெறநாடியிருப்பதைப்பற்றியும் ஒருவனிடம் கொடுக்கல் வாங்கல்செய்ய நாடியிருப்பதைப்பற்றியும் ஒருவரிடம் ஆராய்ந்தால் அவர்களிலுள்ள ஐபையும் அகீதாப் பேதத்தையும் நம்பிக்கைக்குறைவையும் விபரமாய் உண்மைப்படி உபதேசமாய்க் கூறவேண்டும். அது வாஜிபாம்.

ஆராயப்பட்டவர் அவ்வாறு சொல்லாவிட்டால் மடிப்புச் செய்தவராவர் அது புறமாய் வராது.

(8.) குதுபா ஓதப்பட்ட பெண்ணுக்கு யாதை கதியா அனுப்புதல் வேண்டும்?

மணம் அனுப்புதல் வேண்டும்.

விவாகம்செய்ய முன் யாதேனு மொன்றை இருவரும் கதியா அனுப்புதல் சுன்னத்து மாப்பிள்ளை முந்துதல் அபுளலாம்.

விவாகஞ்செய்தலை நாடினாலும் நாடாவிட்டாலும் யாவரும் கதியாஹதியத்து ஆகியவைகள் செய்தல் முஸ்தஹப்பு. பெரும்பாலும் விவாகத்துக்காய் உபயோகித்தல் மருவுதல் முஹப்பத்து ஆகியவைகளை அதிகப்படுத்தும்.

மணவாளன் பெண்ணிடத்தில் யாதேனுமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல்விவாகம் செய்யேனென மறுத்து யாதேனு மொன்றைப் பெற்றுக்கொண்டு விவாகம் செய்தால் அப்பொருள் கைவசமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனிடம் மீட்டிக்கொள்ளலாம்.



(9.) எவ்வித ஸ்திரியை நிகாஹு முடித்தல் வேண்டும்?

தீன் ஒழுக்கம் உயர்ந்தவம்மிசம் அழகு சற்குணம் புத்தி கற்புநிலைமை இனப்பெருக்கம் கன்னி எனும் தன்மைகளை உடையஸ்திரியை நிகாஹு முடித்தல் வேண்டும். அதுவே சுன்னத்தாம்.

மெலிந்த நடைக்காரி செம்பட்டை முடியுடையவள் பூனைக்கண்ணி அதிக முனக்கமுடையவள் முந்திய மணவாளனுக்குப் பிள்ளையுண்டாகி அப்பிள்ளையுட னிருப்பவள் செய்த நன்றியைச் சொல்லிக்காட்டுபவள் முந்திய மணவாளன்மேல் அதிக ஆசையுள்ளவள் துன்யாவில் மிகுந்த அவாவுடையவள் ஏறிய மகர்க்காரி சிறுவிலுற்பத்தியானவள் பாசிகுடைய புத்திரியாகியவர்களை விவாகம்செய்தல் மகுறூகாம்.

இவ்வித ஸ்திரியையுடையோர் மாதிறுல் மயலாகி அம்மாதை விவாகஞ் செய்யவேண்டுமெனப் பொறுமையாயிருப்பவன் அவ்விஸ்திரியையே விவாகம்செய்தல் அபுளலாம்.

(10.) எவ்வேளையில் நிகாஹுசெய்தல் வேண்டும்?

சவ்வால் மாசத்தின் முதலாம் வெள்ளிக்கிழமை காலையில் ஜும்ஆப் பள்ளியில்சாலிஹான கூட்டத்தில் நிகாஹு செய்தல் வேண்டும் அதுவே சுன்னத்தாம்.

வலிகாரன் கைபிடித்துக் கொடுத்தபின் அம்மாசத்தில்தானே புணர்ச்சிசெய்தல் வேண்டும் அதுவும் சுன்னத்தாம்.

விவாகத்தருணத்தில் கூடியிருப்பவர்கள் நிகாஹு முடிந்தவுடன்பாறக்கல்லாகுல்கவபாறக அலைக்கவஜமஅபைனஹுமாபீகைரின் வஆபியத்தின் என்று துஆச்செய்தலும் சோபனங் கூறுதலும் சுன்னத்தாம்.

---

## அல்பஸ்லுல் தானி பீபயானின் நிகாஹி.

## உ - ம் - பிரிவு.

(11.) நிகாஹு எத்தனை வகைப்படும்?

பறுலாகிய நிகாஹு, வாஜிபாகிய நிகாஹு, சுன்னத்தாகிய நிகாஹு, மகுறூகாகியநிகாஹு, ஹறுமாகிய நிகாஹு, முபாஹாகிய நிகாஹுஎன ஆறு வகைப்படும்.

(12.) பறுலாகிய நிகாஹு எவ்வாறும்?

நிகாஹுமுடிக்காமல் சிறுவினுல் விலகிக்கொள்ளுதற் கிடம்பாடில்லாதவன் முடிக்கும் நிகாஹாம்.

அவன் மகர்கொடுக்கவும் நபகாக்கொடுக்கவும் தகுதிபெறுவிட்டால் கடன்வாங்குதல் வேண்டும் அவனுடைய நிய்யத்து சிறுவைவிட்டு நீங்கிக்கொள்ளுதற்கேயாயின் மிடிமையைப் பயப்படலாகாது. கடன்வாங்கிக் கொள்ளுதற்கும் சம்பாதித்தற்கும் இடம்பாடில்லாதவன் நோன்புபிடித்தல் வேண்டும்.

(13.) வாஜிபாகிய நிகாஹு எவ்வாறும்?

ஆசைமிகுத்ததற்காய் முடிக்கும் நிகாஹாம்.

(14.) சுன்னத்தாகிய நிகாஹு எவ்வாறும்?

ஜிமாஉ மகர் நபகா ஆகிய வைகளின் பேரிற் தாரணியுள்ளவன் முடிக்கும் நிகாஹாம்.

இத்தன்மையை உடையவன் நிகாஹு முடித்தல் சுன்னத்தும் அக்கதாவாம் இதில் (சிறு) விபசாரம் செய்யாமை அல்லது சாலிஹாகிய பிசு உண்டாகுதல் அல்லது சுன்னத்துண்டாகுதல் அல்லது எவுக்கு வழிப்படுதல் ஆகியவைகளை நிய்யத்துவைத்தல் வேண்டும்.

இவ்வாறு நிய்யத்து வைக்காமல் மோகதாக நிவிர்த்தி இன்ப மென்பவைகளை நிய்யத்துவைத்து நிகாஹு முடித்தால் தவாபு கிடையாது சுன்னத்தும் உண்டாகாது.

(15.) மக்ரூஹாகிய நிகாஹு எவ்வாறும்?

அநியாயத்தைப் பயந்து முடிமுடிக்கும் நிகாஹாம்.

(16.) ஹறாமாகிய நிகாஹு எவ்வாறும்?

திட்டமாய் அநியாயம் செய்யப்படுமெனப் பயந்து முடிக்கும் நிகாஹாம்.

(17.) முபாஹாகிய நிகாஹு எவ்வாறும்?

மேலேசொல்லியவைகளை நிய்யத்து வைக்காமல் லீலை செய்தலை மாத்திரம் நிய்யத்து வைத்து முடிக்கும் நிகாஹாம் அவ்வாறுகிய நிகாஹிலும்தவாபுண்டாகாது.

(18.) நிகாஹினுலுண்டாகும் ஆபத்துக்களெவை?

குடும்பஸ்தன் போஷனமாதியவைகளுக்காய் ஹறாமாகச் சம்பாதித்தல், தலைவியின் ஹக்குகளை நிறைவேற்றாமை, போஷணபானமாதியவைகளில் பராக்காகுதல் பொருட்சேகரித்தல் பொருளும் பிள்ளைகளும் மிகுதமாகுதலைக்கொண்டு பெருமையாய்க் கெம்பீரம் பேசுதல் போகஞ்செய்தலை அதிகப்படுத்துதல் ஆகியவைகளாம்.

(19.) கற்புடைய ஸ்திரி எவ்வாறு யிருத்தல் வேண்டும்?

சாலிஹாகிய தலைவியின் அழகு அல்லாகுத்த ஆலாவைப் பயப்படுதலும் ஐசுவரியம் உள்ளதைக்கொண்டு போதுமாக்கிக் கொள்ளுதலும் ஆபரணம் கற்பு நாணம் மடம் பயிர்ப்பாகியவைகளும் நாட்டம் மரணத்துக்காய் தக்க தங்கரிப்புத் தேடுதலுமென் றறிந்து நடப்பவளாயிருத்தல் வேண்டும்.

(20.) தலைவி எவ்வெக்கருமங்களைக் கைக்கொள்ளுதல் வேண்டும்?

தன் பெற்றூர் சுற்றத்தார்களைக் காணத் தலைவனின் ஹக்குகளை முற்படுத்துதல், அவனின் அனுமதியின்றி மனையைவிட்டகலாமை, அவனின் படுக்கையை வெறுக்காமை, தலைவன் செய்நன்றியை மறக்காமை தலைவன் புணர்ச்சிக் கழைத்தபோதில் விலகாமை, வீட்டு வேலையாகிய சமைத்தல் வஸ்திரம்தோய்த்தல் முதலியவைகளில்தானே அதிகாரியாயிருத்தல் ஆகியவைகளையு மிதற்கொப்பாகியவைகளையும் கைக்கொள்ளுதல் வேண்டும்.

---

## அல்பஸ்லுல் தாலிது பீபயானின் நிகாஹி.

## ௩-ம் பிரிவு.

(21.) நிகாஹினுல் எத்தனை கருமங்கள் உண்டாகும்?

தலைவனும் தலைவியும் ஷறஇல் சொல்லிய விதமாய்ச் சுகம்பெறுதல், ஆடவன் தன் மனைவியை மனையைவிட்டகலாமற் றடுத்தல், மகர் கொடுக்கத்தக்க தனவந்தனுயிருத்தல், நபகாக் கொடுக்கத்தக்க தனவந்தனுயிருத்தல், சம்பந்தத்தினுல்ஹறு முண்டாகுதல், இருபக்கத்திலும் அனந்தரங் கொள்ளுதல், ஆடவன் தன் மனைவிமார்களைச் சரியாய் நடத்துதல், மனைவி தன் தலைவனுக்கு வழிப்படுதல், மனைவி பிணங்கிக்கொண்டபோதில் அதபு வருத்துதற்குத் தலைவன் காரியஸ்தனுகுதல், நிகாஹுசெய்ய ஹறுமான இரண்டு அல்லது அதற்கதிக மாதர்களைச் சேகரிக்காமை ஆகிய பத்துக் கருமங்களுமாம்.

தலைவனும் தலைவியும் ஷறஇற் சொல்லிய விதமாய் இணக்கஞ்செய்தலாவது தலைவன் தன் ஸ்திரியின் பின் துவாரத்திலும் ஹை

லாயிருக்கும்போதிலும் நிபாசா யிருக்கும்போதிலும் முழந்தாளு க்குந்தொப்புளுக்கு மிடையிலுள்ள மேனியில் இணக்கஞ்செய் யாமல் மற்றெவ்விடங்களிலாயினும் இணக்கஞ் செய்தலாம்.

ஹைலாயிருக்கும்போதும் நிபாசாயிருக்கும்போதும் தொப்பு ளுக்குக் கீழானதும் முழந்தாளுக்கு மேலானதுமாகிய உடம்பின் எவ்விடங்களிலும் இணக்கஞ் செய்யலாம்.

(22.) ஆடவர்களி னுத்தரவின்றி மனைவி வீட்டைவிட்டுப் புறப்படலாமா?

தன் புருடனின் உத்தரவின்றி வீட்டைவிட்டு புறப்படலாகாது; புறப்பட்ட ஸ்திரி பாவியாவாள்.

பெற்றோர்வரக்கூடாத வருத்தமாயிருந்தால் அவர்களைப் பார்ப் பதற்குப் போகும்படி ஆடவன் உத்தரவு கொடுத்தல்வேண்டும்.

இமாம் ஜமாஅத்துத் தொழுகைக்குப் போகவிடாமற் றடுக்கப் பட்டவள் யாதோர் கருமத்துக்கும் புறப்படலாகாது.

நசல்மினவுதற் காயினும் நிகாஹுமுடிக்க ஹறுமானவர்களின் வலீமாவுக்காயினும் மனைவியைப் போகவிடாமல் தடுத்தல் மண வாளனின் கடமையாம்.

மணவாளனில்லா மாதர்கள் மணவாளனுள்ள பெண்களைப் போலேதான்.

(23.) மகர்வதியாது?

அகுதினாலும் துகூலினாலும் பெண்களுக்கு மணவாளர் கொடுத்த ல்வேண்டுமென ஷறஇல் நியமிக்கப்பட்ட உரொக்கத்தொகையே மகர். அது புருஷரின்பேரில் வாஜிபாம்.

அதை சதாக்கு என்றும் சொல்லுவார்கள். அதின் விபரத்தை மூன்றும்பாபின் 47-ம் இலக்கவினாவின் விடையிற் காண்க.

(24.) நபகாவாவதியாது?

அன்னம், வஸ்திரம், வாசஞ்செய்யுமிட மாகியவைகளுக்காய் செல வாக்கப்படுபவைகளாம். அதின் விபரத்தை 5-ம் பாபின் அறுப த்தொன்பதாம் இலக்கவினாவின் விடையிற் காண்க.

(25.) நிகாஹு செய்தல் ஹறுமாகிய சம்பந்தமுடைய ஸ்திரிகள் யாவர்?

மனைவியின் தாய் தான் புணர்ந்த மனைவியின் புத்திரி பிதாவின் மனைவி பாட்டனின் மனைவி புத்திரனின் மனைவியாகியவர்களாம்.



மனைவியின் தாய் என்பது வம்மிசத்தினாலாகியதாய் அல்லது பால் குடித்தலால் ஆகியதாயாம்.

புணர்ச்சி (ஜிமாஉ) செய்யமுன் தலாக்குச் சொல்லப்பட்ட ஸ்தி ரியின் புத்திரியை நிகாஹு செய்யலாம்.

பிதாவின் மனைவி என்பது வம்மிசத்தினால் ஆகிய பிதாவின் ம னைவி அல்லது பால்குடித்தலாலாகிய பிதாவின் மனைவியாம். பா ட்டனின் மனைவி என்பது மப்படியே.

பிதாவின் மனைவி புத்திரனின் மனைவி தன் மனைவியின் தாய் ஆகியவர்கள் ஹறுமாகுதற்கு அவர்களிலொவ்வொருவரும் தன் தன் மனைவியுடன் ஜிமாஉ செய்யாவிட்டால் அவரவர்களுக்கிடை யில் நடந்த நிகாஹு சஹீகானதாயிருத்தலே ஷறுத்தாம்.

தன் தேவியென்றெண்ணி பரஸ்திரியைப் புணர்தல், கிரயத்தி ற்கு வாங்கிய ஸ்திரியைப் புணர்தல், பாசிதாகிய நிகாஹினால் சவு ஜத்தாகிய ஸ்திரியைப் புணர்தல் பாசிதாகிய விலையினால் வாங்கிய ஸ்திரியைப் புணர்தலாகியவைகளால் புணரப்பட்டவளின் தாய் மாரும் புத்திரரும் ஹறுமாவார்கள்.

மேற்சொல்லியவர்களைப் புணர்ந்தவனின் புத்திரர்களுக்கும் பிதாவுக்கும் அவ்விஸ்திரி ஹறுமாவாள்.

(26.) மணவாளன் மனைவியாகிய இருவருக்கு மிடையில் எவ்வாறு அனந்தரமுண்டாகும்?

மாணித்த மணவாளனின் திரவியத்தில் மனைவி சிலவேளை எட்டி லொன்றும் சிலவேளை கால்பங்கும் மாணித்த மனைவியின் திரவி யத்தில் மணவாளன் சிலவேளை அரைவாசியும் சிலவேளை கால்பங் கும் பெற்றுக்கொள்வாராம். இதின் விபரத்தை மூன்றும் அதிகார த்தின் 19-ம் பாபில் 184-ம் 185-ம் 186-ம் இலக்கவினாக்களின் விடைகளின் காண்க.

(27.) ஒன்றுக்கதிகமான மனைவியர்களை எவ்விதமாய் நடத்துதல் வேண்டும்?

ஒவ்வோர் ஸ்திரியிடத்திலும் சரிசரியாய் இராத்தரித்தல் வேண்டு ம் அது வாஜிபாம்.

நோயாயிருக்குங்காலத்தில் ஒவ்வோர் ஸ்திரியையும் அவரவர் முறைப்படி அழைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஒரு ஸ்திரியினிடத்திலேயே யிருந்தால் சுவாத்தியம்பெற்றபின் ஒவ்வோர் ஸ்திரியிடத்திலும் அவ்வளவு நாள் இருத்தல்வேண்டும்.

வெள்ளாட்டியாகிய ஸ்திரியும் நாட்டாண்மகளாகிய ஸ்திரியும் உள்ளவர்கள் நாட்டாண்மகளாகிய ஸ்திரியிடத்தி லிருந்தகாலத்தின் அரைப்பங்குக்காலம் வெள்ளாட்டியாகிய ஸ்திரியிடத்தில் தரித்தல்வேண்டும்.

பல மனைவிமா ருள்ளவர்கள் ஒவ்வோர் நாள் அல்லது மும்மூன்று நாள் ஒவ்வோர் ஸ்திரியிடத்திலும் தரிபட வேண்டும்.

புணர்ச்சி முத்தம் ஆகியவைகளைச் சரிசரியாய் நடத்துதல் வாஜிபில்லை ஆயினும் முஸ்தஹப்பாம்.

(28.) எவ்வெக்கருமங்களில் மனைவி மணவாளனுக்கு வழிபடுதல் வேண்டும்?

எப்போது தன் மணவாளன் லீலைக்கழைத்தாலும் அப்போதில் வழிப்படுதல் மனைவிக்கு வாஜிபாம். பிற்படுத்தாமல் தீவிரமாய் வழிப்படுதல்வேண்டும்.

அதிகப் புணர்ச்சியால் மனைவி வருத்தப்படுவாளேயாயின் தாணிக்குத் தக்கபடி புணர்தல் வேண்டும்.

யாதேனும் முபாஹான காரியங்களுக்காய் மணவாளன் ஏவினால் மனைவி வழிப்படுதல் வாஜிபாம். பாவமான காரியங்களாயின் வழிப்படுதல் வாஜிபல்ல.

மணவாளன் தன் தேவியை அதபு வருத்துதலாவது தன் தேவி வழிப்படாதபோதில் மணவாளன் அவ்வாறு நடக்கவொட்டாமற் றடுத்துத் தக்கபடி அதபு வருத்துதலாம்.

ஹைலு நிபாசாகியவைகளை விட்டொழிந்தவளாயும் பறுலாகிய நோன்பை விட்டொழிந்தவளாயு மிருக்கும் ஸ்திரியை மணவாளன் லீலைக்கழைத்தபோதில் இணங்காமல் மறுத்தால் அதபு வருத்தலாம்.

மணவாளனின் உத்தரவின்றி வீட்டைவிட்டுப் புறப்படுபவளையும் ஜனபத்து முழுக்கை விடுபவளையும் தொழுகையை விடுபவளையும் அலங்கரித்தலை விடுபவளையும் அடிக்கலாம்.

எலும்பு முறியவும் தோல் கிளம்பவும் தோல் கறுக்கவும் தக்க அடியாக அடித்தலாகாது.

மணவாளன் சுவாத்தியமாயும் ஹாஸிருனவனாயு மிருக்கையில் அவனின் உத்தரவின்றி நபில் நோன்புபிடித்தல் மக்ரூஹாம்.

இவ்வாறு நோன்புபிடித்தவள் மணவாளன் நோன்பை விடச்சொன்னால் விடலாம்.



(29.) மனைவியை நலவாய் நடத்துதல் எவ்வாறும்?

ஸ்திரிகள் அகில் குறைந்தவர்களா யிருத்தலால் தன் மனைவியால் கிருபைகூர்ந்து அவளினால் வரும் நோவினைகளைத் தாங்கி அவளின் துற்குணத்தை சற்குணமாக்கத்தக்க முறைமைகள்செய்து சோபித்தாலும் அதபுக்குறைவாய் நடந்தாலும் சபுறுசெய்து கலந்துறவாடிச் சமானமாயிருந்து நடுத்தரமாய் செலவு செய்து நல்ல தீன்பண்டங்களைத் தானும் அவளுமாய்ப் போஷித்து ஆண்மைக் குறைவின்றி நன்முன் மாதிரியாய் நடத்துதலாம்.

தன் மணவாளன் தகறு முதலிய மூன்றையும் தறிக்கப்பட்டவனென ஹாகிமிடத்தில் நிகாஹைப் பிரிக்கத்தேடினால் ஹாகிம் அந்த ஹாலிலேயே அவ்விருவருக்கு மிடையிலுள்ள நிகாஹைப் பிரித்தல் வேண்டும்.

(30.) ஓர் ஆடவன் நிகாஹில் எவ்வெப்பெண்களைச் சேகரித்தல் ஹறாமாகும்?

இரண்டு பெண்களில் எவளை ஆண்பிள்ளையாக்கிப் பார்த்தாலும் அவன் மற்றவளை நிகாஹ்செய்தல் ஹறாமாகுமே அவ்விருவரையும் நிகாஹாலும் இத்தாவாலும் ஒன்றுச்சேகரித்தல் ஹறாமாம்.

ஓர் ஸ்திரியை விவாகஞ்செய்து அவள் அம்மணவாளனின் நிகாஹி லிருக்க அல்லது இத்தாவிலிருக்க அவ்விஸ்திரியின் சகோதரி அல்லது அவளின் பிதாவின் புத்திரி அல்லது அவளின் தாயின் சகோதரி அல்லது அவளின் சகோதரியின் புத்திரி ஆகியவர்களில் ஒரு ஸ்திரியையாவது நிகாஹ்செய்தலாகாது.

கிரையங்கொண்ட வெள்ளாட்டியைப் புணர்தலாலும் மஹ்றமுகளைச் சேர்தல் ஹறாமாம்.

ஓர் ஸ்திரியை விவாகஞ்செய்து அவளிருக்க அவளின் புருடனின் புத்திரி அல்லது அவளின் புத்திரனின் மனைவி என்பவர்களை விவாகம் செய்யலாம்.

சேகரித்தல் ஹறாமாகிய இரண்டு அல்லது அதற்கதிகமான ஸ்திரிகளை இரண்டு அகுதினால் நிகாஹ்செய்தலால் முந்தியவளின் நிகாஹ்கூடும் அவளுடன் புணர்தலும் ஹலாலாம்.

இவ்வாறு விவாகஞ்செய்த இரண்டாம் ஸ்திரியை புணர்ந்தால் அவளைப்பிரித்து அவளின் இத்தாத் தீரும்வரைக்கும் முந்தியவளைப் புணர்தல் ஹறாம், இத்தாத்தீர்ந்தபின் புணரலாம்.

இரண்டிஸ்திரிகளை ஒரே அகுதில் நிகாஹ் முடித்தால்அல்லது இரண்டு அகுதில் முடித்து முந்தியதை மறந்துவிட்டால் அவ்விரண்டு ஸ்திரிகளின் நிகாஹையும் காஜி பிரித்தல் வேண்டும்.

இரண்டு ஸ்திரிகளும் சரியாயிருந்து இருவரையும் புணர்ச்சிசெய்யாவிட்டால் இரண்டிஸ்திரிகளுக்கும் பொதுவாய் அரைமகர் கொடுத்தல் வேண்டும்.

வித்தியாசமான மகர்க்காரிகளாயின் குறைந்த மகரால் பாதியை இருவர்களுக்குங் கொடுத்தல்வேண்டும்.

இரண்டு பெண்களையும் புணர்ந்தபின் பிரித்துவிட்டால் ஒவ்வோர் ஸ்திரிக்கும் சொல்லப்பட்ட மகர் கொடுத்தல் வாஜிபாம்.

---

## அல்பாபுல்தானி பீபயானி அறுகானின் நிகாஹி.

(இரண்டாம்பாபு நிகாஹுடைய றுக்னுகளையும்

அதைச்சார்ந்தவைகளையும் பற்றியது.)

(31.) நிகாஹுடைய றுக்னுகளெத்தனை?

மணவாளன் மனைவி வலிகாரன் இரண்டு ஷாகிதுகள் சீகா என ஐந்தாம்.

(32.) மணவாளனின் ஷறுத்துக்களெவை?

இஸ்லாமாயிருத்தல் குறிப்பாகுதல் மஹ்றமத்தை இழக்குதல், தற்போதில் நான்கு ஸ்திரிகள் மனைவியாயிருக்காமை விவாகத்திற் சேர்க்கத்தகாத ஸ்திரிகளைச் சேர்க்காமை என்பவைகளாம்.

(33.) மனைவியின் ஷறுத்துக்களெவை?

முஸ்லிமாகியவளாயிருத்தல், நிகாஹையும் இத்தாவையும் விட்டொழிந்தவளாயிருத்தல், குறிப்பாதல், வம்மிசம்பால் குடித்தல், சம்பந்தம் என்பவைகளாலாகிய மஹ்றமிய்யத்தாகாதிருத்தல், ஹறுபிய்யத்து திம்மிய்யத்தாயிருக்கினும் கலப்பற்ற கிதாபிய்யத்தாயிருத்தல் என்பவைகளாம்.

(34.) வலிகாரர்கள் யாவர்?

பிதாவே வலிகாரனும், பின்பு பிதாவின் பிதா, பின்பு சகோதரன், பின்பு சகோதரனின் புத்திரன், பின்பு பெரியதகப்பன், சிறியதகப்பன், பின்பு அவ்விருவர்களின் புத்திரன், பின்பு பிதாவின் பெரியதகப்பன், சிறியதகப்பன், பின்பு அவ்விருவரின் புத்திரன், பின்பு பாட்டனின் பெரியதகப்பன், சிறியதகப்பன், பின்பு அவ்விருவரின் புத்திரன், இவ்வாறு அநந்தரத்தின் தறத்தீபுபோல் அசபத்துக்காரர்களே வலிகாரராம்.



அசபத்திலுள்ள வலியை இழக்கப்பட்டால் காளியே வலியாவார்.

பிதாவும் பிதாவுடைய பிதாவும், பாலிகத்தாகிய கன்னிஸ்திரியை அல்லது பாலிக்கத்தகாத ஸ்திரியை அவளின் உத்தரவின்றி மகர் கொடுக்கத்தக்க குபுவான ஆடவனுக்கு முடித்துக்கொடுக்கலாம். இதில் பாலிகத்தாகிய ஸ்திரியிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளுதல் சுன்னத்தாம்.

ஜிமாஇனால் கன்னியழிந்த ஸ்திரி புலுகாகியபின் அவளின் உத்தரவின்றி நிகாஹு செய்துகொடுத்தல் ஒருவருக்குங் கூடாது.

பாலிகத்தாகாத ஸ்திரியை ஷாபிஇய்யி மதுகபின்படி பிதா பிதாவுடைய பிதா, எனும் இருவரையுந்தவிர மற்றவர்கள் முடித்துக்கொடுக்கக்கூடாது.

அசபத்துக்காரர் ஜிமாஇனற் கன்னியழிந்த பாலிகத்தான ஸ்திரியை அவள் வாயினால் உத்தரவு சொல்லுதல் கொண்டும், பாலிகத்தாகிய கன்னிஸ்திரியிடம் உத்திரவுகேட்கையில் மாறுத்தரங் கூறாமை கொண்டும், முடித்துக்கொடுக்லாம்.

பிதாவும் பாட்டனும் பாலிகத்தாகிய கன்னியழிந்த ஸ்திரியை அவள் குறித்த ஆடவனுக்கேயன்றி முடித்துக் கொடுக்கப்படாது, அவ்வாறு முடித்துக்கொடுக்காமல் விலகிக்கொண்டால் அக்காரியத்தை காளியால் நிறைவேற்றப்படும்.

தகப்பனும் பாட்டனும் தன்னுடைய பாலிகாகாத புத்திரனின் நிகாஹைச் சரியான மகரைக்கொண்டு குபுவான ஸ்திரியில் கபூல் செய்யலாம்.

காளி தன் உத்தியோகஸ்தானத்துக் குள்ளிருக்கும் அசபத்திலுள்ள வலியை இழக்கப்பட்ட பாலிகத்தான ஸ்திரியை ஏழு காரியங்களுக்காய் முடித்துக்கொடுக்கலாம். அவைகளாவன வலிகாரன் தானே அவ்ஸ்திரியை நிகாஹுசெய்தல் அறவே வலியில்லாமை, வலியிருந்தும் அவனிருக்குந் தானம் தெரியப்படாமை, வலிகாரன் இரண்டிராட் தூரத்துக்கப்பால் காயிபாயிருக்குதல், அடுத்த இடத்திலிருக்கும் வலிகாரன் வரக்கூடாதவனாகுதல் அல்லது பெருந்தன்மையால் வராதிருத்தல், குபுவாகிய மணவாளனுக்கு முடித்துக்கொடுக்காமல் முரண்டுதல், வலி ஹஜ்ஜுக்கு இஹ்றாம் கட்டுதல் என்பவைகளாம்.

காளாவத்தின் ஷறுத்துக்களைக் கைக்கொண்ட காளியில்லாவிட்டால் ஆடவன் ஸ்திரியாகிய இருவரும் ஓர் நீதிமானை முஹக்கமாக நியமித்து அம்முஹக்கமினால் நிகாஹை நிறைவேற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

முடுகிய வலியிருக்கத் தூரமாகியவலி எழுகாரியங்களில் முடித்துக்கொடுக்கலாம் அவைகளாவன முடுகியவன் காபிறாயிருத்தல், பாசிகாயிருத்தல், சிறுபிள்ளையாயிருத்தல், அடிமையாயிருத்தல், பித்தனாயிருத்தல், நோட்டங் குறைந்தவனா யிருத்தல், மடமையால் தடைபடுத்தப்பட்டவனா யிருத்தல் ஆகியவைகளாம்.

வலிகாரனுக்கு நிகாஹு செய்துகொடுப்பதிலுள்ள சிக்கா தெரிந்திருந்தாலும் ஓர் வகீல் நியமித்து அந்த வகீலால் நடத்தலாம்.

(35.) நிகாஹில் குறிக்கப்படும் இரண்டு ஷாஹிதுகளும் எத்தன்மையுடையவர்களா யிருத்தல் வேண்டும்?

முஸ்லீங்களாகவும் கண் பார்வையுள்ளவர்களாகவும் கேள்வியுள்ளவர்களாகவும் நிகாஹில் நடக்கும் சீகாவை விளங்கிக்கொள்ளத் தக்கவர்களாகவும், நீதிமான்களாகவு மிருத்தல்வேண்டும் இவைகளே ஷாஹிதுகளின் ஷறுத்தாம்.

பாசிகுத்தனம் பிருத்த சமானில் பாசிகானவனை ஷாஹிதாக எர்த்துக் கொள்ளலாம்.

நிகாஹுடைய சீகாவின் அருத்தம் விளங்காதவர்களையும் பெண்களையும் சிறுவர்களையும் அடிமைப் பாத்தியமுடையவர்களையும் தற்போதில் நடைபெறும் நிகாஹில் குறித்த வலிகாரனையும் பித்தர்களையும் சாட்சியாய் நியமிக்கப்படாது.

சாட்சிகளில் ஒருவன் குருடனாயிருப்பதுடன் இருவரும் பிசகற்ற அறிவாய் அறிந்தவர்களாயிருந்தால் அதை ஊனுதலாக்கிக்கொள்ளலாம். கூட்டமாகிய மஜ்லிஸில் நிகாஹு முடிக்கும்போது ஷாஹிதுகுறித்தல். அவசரமற்றதாயினும் இரண்டு பெயரைக் குறிப்பாக்கிக்கொள்ளுதல் அழகாம்.

சகோதரர்களாகிய மூவரில் ஒருவனை வலியாகவும் மற்ற இருவரையும் ஷாஹிதாகவும் நியமித்துக்கொள்ளலாம்.

(36.) நிகாஹுடைய சீகாவாவதியாது?

ஈஜாபும் கபூலுமே சீகாவாம்.

ஈஜாபாவது விவாகஞ் செய்யப்படும் ஸ்திரியின் பிதா என்மகள் இன்னாளை உமக்குக் கலியாணம் முடித்துத் தந்தேன் என்று அல்லது அவ்விஸ்திரியின் வலிகாரன் நான் வலியாயிருக்கிற இன்னானுடைய மகள் இன்னாளை உமக்குக் கலியாணம் முடித்துத்தந்தேன் என்று அல்லது வகீல் என்னை வகீலாக நியமித்த இன்னானுடைய மகள் இன்னாளை உமக்குக் கலியாணம் முடித்துத்தந்தேன் என்று சொல்லுதலாம்.



கபூலாவது மேலேசொல்லப்பட்டவர்களிலொருவர் அவர்சொல்லவேண்டிய மாதிரி ஈஜாபு சொன்னவுடன் மணவாளன் கலியாணம் முடித்துக்கொண்டேன். அல்லது கபூல் செய்துகொண்டேன் என்று சொல்லுதலாம்.

(37.) எவ்வகை மாதர்களை நிகாஹுசெய்தல் ஹறாமாம்?

மஹ்றமிய்யத்து ஆகிய ஸ்திரிகளை நிகாஹு செய்தலே ஹறாமாம் அது வஹ்மிசம் பால்குடித்தல் சம்பந்தம் எனும் மூன்று வகையாலும் உண்டாகும்.

(38.) வஹ்மிசத்தால் மஹ்றமிய்யத்தாகிய ஸ்திரிகள்யாவர்?

தாய் தாயுடைய தாய். தகப்பனின் தாய், புத்திரி புத்திரியின் புத்திரிமார், புத்திரனின் புத்திரிமார், சகோதரி சகோதரியின் புத்திரிமார், தகப்பனின் சகோதரி, தாயின் சகோதரி ஆகியவர்களாம்.

(39.) பால்குடித்தலால் மஹ்றமிய்யத்தாகிய ஸ்திரிகள் யாவர்?

தான் பால்குடித்த ஸ்திரியும் அவ்விஸ்திரியைப் பெற்ற ஸ்திரியும் அவ்விஸ்திரிக்குப் பால்கொடுத்த ஸ்திரியும், பெற்றாருக்குப் பால்கொடுத்த ஸ்திரிகளுமாம் அவர்களே தாயாம். அவர்களின் பாலையுடைய புருடர்கள் பிதாவாம்.

ஒன்பது வயதையுடைய ஹயாத்தான பெண்ணின் பாலை இரண்டு வயதுக்குக் குறைந்த குழந்தை திட்டமாய் ஐந்து தடவை குடித்தலே பால் குடியாம்.

ஓர் தரம் குடித்துப் போதுமெனவாய் எடுத்தபின் திரும்பக் குடித்தல் இரண்டு தடவையாம்.

இலேசாவ பாக்கு அல்லது ஒருத்தாக்கத்துக்காய் வாயெடுத்து திரும்ப வாயைவைத்தாலும் அல்லது முலைக்காம்பு வாயிலிருக்க நீளமாகத் தூங்கினாலும் ஒரு மார்பிலிருந்து மறுமார்பில் திரும்பினாலும் ஒரே தரமாகும்.

பால் குடித்த சகோதரன் சகோதரியாகிய இருவரின் தாயும் பால்குடிப் புத்திரன் புத்திரியாகிய இருவரின் சகோதரிகளும் பால்குடிப் புத்திரன் புத்திரியாகிய இருவரின் பாட்டியும் பால் குடித் தகப்பனின் சகோதரன் சகோதரியாகிய இருவரின் தாயும் பால்குடித்தாயின் சகோதரன் சகோதரியாகிய இருவரின் தாயும் பால் குடித்தலால் ஹறாமாகார்கள். வஹ்மிசத்தால் ஹறாமாவார்களாம்.

சம்பந்தத்தினால் ஹறாமாகுபவர்களை முதலாம்பாபின் மூன்றாம் பசுலில் 25-ம் இலக்கவினாவின் விடையிற் காண்க.

### (40) நிகாஹுடைய சுன்னத்துக்களெவை?

பிடியவர்கள் கலியாணத்துக்காய்க் கடன் கைம்மாற்றுவாங்குதல் வயது கல்நடத்தை மேன்மை ஆகியவைகளில் மனைவி மணவாளனைக் காணக் குறைவாயிருத்தல், குணம் அதபு, வறஉ, அழகு, ஆகியவைகளில் மணவாளனைக்காண மனைவி மேலாயிருத்தல், கலியாணம் முடிக்குமுன் ஸ்திரியைப்பார்த்தல், கலியாணம் பேசிய பின் மூணத்தில் கொஞ்சமாயினும் கதியா அனுப்புதல், நிகாஹை வெளிரங்கமாய்ச் செய்தல் பள்ளியில் வைத்து நிகாஹுசெய்தல் ஜும்நாளில் நிகாஹுசெய்தல் நேர்வழியாகிய ஆகிதை நீதமான ஷாகிதை வைத்து முடித்தல், நிய்யத்து வைத்துக்கொள்ளுதல், நிகாஹுக்குமுன் மகரைக்குறித்துக் கொள்ளுதல், அதில் கொஞ்சமாயினும் உரொக்கமாகக் கொடுத்தல், மகர் நம்பிருட்டிமார்களின் மருக்கதிகமாகா திருத்தல், கல்கண்டு, பாதாம், முதலியவைகளை மணவாளன் மனைவியாகிய இருவரின் தலையிலும் சொரிதல் ஸ்திரிக்கு ஆடையுடுத்தி ஆபரணம் அணிந்து மருதணிபோட்டு சிப்பினால் கூந்தலாதியவைகளை விடுத்து (சுறுமா) முதலிய மைதீட்டி அலங்கரித்துப் பரிமளம்பூசுதல், மணவறையில் புகுந்தவுடன் மணவாளன் மனைவியாகிய இருவரும் இரண்டு றகஅத்துத் தொழுதல், மணவாளனுக்கு முபாறக்கத்துக்கொண்டு சோபனங் கூறுதல் (வலீமா) விருந்து கொடுத்தல் ஆகியவைகளாம்.

நிகாஹுடைய குதுபாவாவது பிஸ்மில்லாகி, இன்னல் ஹம்தலில்லாகி, வபிகம்திகி, வநஸ்த ஈனுகு, வநஸ்தகுபிறுகு, வநஊதுபில்லாகி, மின் ஷுறூரி அன்புசினா, வசய்யிஆதி அகுமாலினா, மின்யஹ்திில்லாகி, பலாமுளில்லகு, வமன்யுளுலில், பலாகாதியலகு வஅஷ்கது, அன்லாயிலாக, இல்லல்லாகு, வகுதகு லாஷரீக்கலகு, வஅஷ்கது, அன்னமுகம்மதன், அப்துகு, வறசூலுகு, அறுசலகு, பஷீறன், வநதீறன், பைனயதை இஸ்ஸாஅதி, மன்யுதி இல்லாக வறசூலகு, பகதுறஷத், வமன் யுசுசிகிமா, பலாயலுற்று, இல்லாநபுசகு, வலாயளுற்றுலாக, ஷைஅன், சல்லல்லாகு, வசல்லம, அலா செய்யிதினா, முகம்மதின், வஆலிகி, வசகுபிகி மதுதலபல், ஐதீதாணி, வமா, தஆக பல்வில்தாணி, யாஅய்யுகன்னூச, இத்தகூறப்பகு முல்லதீ, கலககும், மின்னபுசின், வாகிதா, வகலகமின்கா, சவ்ஜகா, வபத்த மின்குமா, ரிஜாலன், கதீறன், வனிசாஅன், வத்தகுல்லா, கல்லதீ, தசாஅலூனபிகி, வல்அறுஹாமி, இன்னல்லாக, கானஅலைகும் றகிபா, யாஅய்யுகல்லதீன, ஆமனுத்தகுல்லாக வகூலூ கவ்லகுன்சதீதன், யுசலிகுலகும் அகுமாலகும், வயகுபிறுலகும், துனூபகும், வமன்யுதி இல்லாக, வறசூலகு, பக்துபாச பௌசன், அளீமா, அம்மாபகுது, பஇன்னல்உலூறகுல்லகா, பியதில்லாகி, மாகுளீகா, மாயஷாஉ, வயஹ்குமு, மாயுரீது,



வாமுஅக்கிற, லிமாகத்தமவலாமுகத்திம, லிமா அக்கறவலா யஜ்தமிஉ, இதுனனி, வலாயபுதரிகானி, இல்லாபிகளாயின், வகதரின், வகிதாபின், கதுசபகவஅன்னமிம்மா, கல்லாகுதஆலா, லகத்தற, அன்கதபுபுலானி புனுபுலான், வபுலனத்துபின்துபுலான், அவ்ாசதாக்கின் யுதுகறு, பகுதகாதா, வஅகூலு, கவுலீகாதா, அஸ்தகுபிறுல்லாகல் அளீமலீவலகும், அஜ்மாஈன், பஸ்தகு பிறுகு, இன்னகு குவல, கபூறுற்றஹீம் என்பதாம்.

இத்தேச வாசிகளில் பெரும்பாலாரால் ஓதப்படும் குதுபாவாவது. அல்கம்துலில்லாகி நகுமதுகு,வநஸ்தஈனுகு, வநஷ்கது, அன்லாயிலாக இல்லல்லாகு, வகுதகு, லாஷரீக்கலகு, வநஷ்கது, அன்னமுகம்மதன், அப்துகு, வறசூலுகு, சல்லல்லாகு, அலாமுகம்மதின், வஅலாஆலிகி, வஸ்சீக்கும் இபாதல்லாகி, வஇய்யாய பிதகுவல்லா, அலா, இன்னல்லாக, தஆலா, அமறகும், பின்னிகாஹி, வாகா, அனிஸ்ஸிபாஹு, வகால, வன்கிஹுல், அயாமா, மின்கும், வஸ்ஸாலிகீனமின், இபாதிகும், வஇமாஇகும்,இன்யகூனு, புகறாஅ, யுகுனீகிமில்லா, மின்பழுலிகி, வல்லாகு, வாசிஉன்அளீம், வகால சல்லல்லாகு, அலைகிவசல்லம், தனாகஹு, வதவாலது, வதகாதறு, பஇன்னீ, உபாகீபிகுமுல், உம்மயம்மல்கியாமதி, வலவ்பிஸ்ஸிகிதி, வஅகூலு, கவ்லீகாதா, வஅஸ்த குபிறுல்லாகல், அளீமலீவலகும், வஅஸ்தகுபீகி, அன்ஸீவஅன்கும், வஅன்ஜமீஇல், முஉமினீன, வலமுஸ்லிமீன, அஜ்மஈன, பஸ்தகுபிறுகு, இன்னகு, குவல்கபூறுற்றஹீம், என்பதாம். இவைகளேயன்றி முதவ்வலாகிய கிதாபுகளில் பலவாறுகிய குதுபாக்களைக் காணலாம்.

---

## அல்பாபுல்தாலிது பீபயானில் கிபாயதி.

(மூன்றாம்பாபு தபுவையும் அதைச்சார்ந்தவைகளையும் பற்றியது.)

### (41.) கிபாயத்தாவதியாது?

விவாகம் செய்யப்படும் ஆடவனும் ஸ்திரியும் ஒரே தற்ஜாவில் இருப்பதாம்.

குறைஷி ஹாஷிமி முத்தலிபியாகிய ஸ்திரிகளுக்கு குறைஷி ஹாஷிமி முத்தலிபியல்லாத அறபியாகிய ஆடவன் குபுஉவாகான்.

குறைஷியாகிய ஸ்திரிக்கு குறைஷியல்லாத அறபியாகிய ஆடவனும் ஹாஷிமியாகிய ஸ்திரிக்கு அல்லது முத்தலிபியாகிய ஸ்திரிக்கு ஹாஷிமி முத்தலிபியல்லாத குறைஷிக்குல ஆடவனும் குபுவாகான்.

அசலிய்யத்தாகிய சுதேச ஸ்திரிக்கும் தன்னையாவது தன்பிதாவையாவது பிதா வழிப்பாட்டன்மாரையாவது அடிமைப்பாத்தியம் தொடாத ஸ்திரிக்கும் உரிமைப்பெற்ற ஸ்திரிக்கும் அடிமை குபுவாகான்.

பத்தினிக்கும் மார்க்க வொழுக்கமுடைய ஸ்திரிக்கும் பாசிகும் பிதா அத்துக்காரனும் குபுவாகான்

தான் இஸ்லாமில் வந்தவன் இஸ்லாமான பெற்றோரின் புத்திரிக்கு குபுவாகான்.

சிறுமையாகிய தொழிலைவிட்டு கலாசுபெற்ற இஸ்திரிக்கு அத்தொழிலுடைய ஆடவன் குபுவாகான்.

நிகாஹில் கியாறை உண்டாக்கிவிக்கும் பயித்தியம் கருங்குட்டம் வெண்குட்டம் முதலிய நோயைவிட்டு சலாமத்தாகிய ஸ்திரிக்கு அவ்வித ஐபுள்ள ஆடவன் மணவாளனாகத் தக்கவனல்லன் அவ்வித ஐபுள்ள ஸ்திரிக்கும் அவன் குபுவாகான்.

கியாறைத் தரிபடுத்தத் தகாத ஐபுகள் கபாஅத்தை தப்பிவிக்காது அவைகளாவன. குருடு, விருத்தாப்பியம், [illegible], சப்பாணி, ஸ்திரிக்கு முன்துவாரம் பின்துவாரம் திறந்திருத்தல் மலடு புணருந்தருணத்தில் சலம் ஓடுதல் கைவிரல் கால்விரல் தறிபட்டிருத்தல் ஆகியவைகளாம்.

பெரும்பாடு வாய்நாற்றம் கமுக்கட்டின் துர்கந்தம் சலம் ஓடிக்கொண்டிருக்கும் காயம் சின்னக் கிட்டுமையாயிருத்தல் ஆகியவைகள் அவ்வைபிலுள்ளவைகளல்ல.

அக்து நடக்கையில் பேசிய ஷறுத்துக்களின் விரோதம் மணவாளனில் காணப்பட்டால் ஸ்திரிக்கும் ஸ்திரியில் காணப்பட்டால் மணவாளனுக்கும் கியாறு கொடுக்கப்படும்.

## (42.) விவாகஞ் செய்யப்பட்ட மணவாளனும் ஸ்திரியும் முதன்முதல் சந்திக்கும்போது யாதுசெய்தல் வேண்டும்?

மணவாளனுக்கு ஸ்திரியின் வலிகாரன் கைபிடித்துக் கொடுத்தல் வேண்டும். அது ஸ்திரியின் முன்னெற்றி உரோமத்தை வலக்கையினாற் பிடித்துக்கொடுத்தலாம். அத்தறுவாயில் மணவாளன் ஸ்திரியாகிய இருவரும் பாறகல்லாகு லிகுல்லின் மின்னா பீ சாகிபிகி என்று சொல்லிக்கொள்ளுதலும் ஷுக்றையும் இஸ்திகாறவையும் நிய்யத்துவைத்து இரண்டு றகஅத்துத் தொழுதலும் சுன்னத்தாம்.



## (43.) மணவாளனும் ஸ்திரியும் சந்தித்தபோதே மணவாளனுக்குச் சுகம் பாராட்டிக்கொள்ள ஸ்திரி இடங்கொடுத்தல் வேண்டுமா?

42-ம் இலக்கவினாவின் விடையிற் சொல்லியவாறு நடத்தியபின் ஸ்திரிக்கு யாதேனும் உஜுறில்லாவிட்டால் மணவாளனை சந்தோஷப்படுத்துதற்காக ஷறஇல் ஆமரிய சுகம்பாராட்டிக் கொள்ளுதற்கு இடங்கொடுத்தல் வேண்டும்.

ஸ்திரி ருதுகமாயிருக்கையிலும் பின் துவாரத்திலும் புணர்தல் விரல்களினால் கன்னி யழித்தலாகியவைகள் ஹறாமாம்.

ஸ்திரியின் முன் துவாரத்தை தேவையின்றிப் பார்த்தல் பசுறை அதரபானஞ்செய்தல் ஆகியவைகள் மகுறூகுடன் ஆமானதாம்.

சிசு வுற்பத்தியாகுமெனப் பயந்து நுதுபாவை வெளியிலாக்குதலும் ஜிமாஉசெய்யும் தருணத்தில் பேசுதலும் மகுறூகாம்.

ஊமலாயிருப்பவளையும் பால்கறுரியையும் புணர்தலில் யாதோர் தங்கடத்துக்கும் இடமில்லாவிட்டால் மகுறூகல்ல.

ஜிமாஉ செய்யுந்தறுவாயில் நடந்தவைகளைப் பிரிவாய் வெளியிற்பேசுதல், மணவாளனுக்குமாத்திரமல்ல மனைவிக்கும் ஹறாமாம்.

போகஞ்செய்யுந் தருணத்தில் அதின் ஊசாட்டத்தைப் பிறர் அறியாத ஸ்தலந்தேடிக்கொள்ளுதல் வேண்டும் அது முஸ்தஹப்பாம்.

## (44.) எவ்விதமாய்ப் புணர்தல்வேண்டும்?

மணவாளன் ஸ்திரியாகிய இருவரும் வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு கழுத்துடன் கழுத்தை கட்டியணைத்து முத்தி அதரபானஞ் செய்து இனிமை பயக்கத்தக்கதாய்ப் பேசி அகத்தொழிலின் துவக்கத்தில் இருவரும் பிஸ்மில்லாஹி அல்லாகும்ம ஜன்னிப்னஷ்ஷைத்தான, வஜன்னிபுஷ்ஷைத்தான, மாரசக்தனா என்றோதி இந்திரியம் இறங்குகையில் உதட்டை உசுப்பாமல் கல்பினால் அலகம்துலில்லாகில்லதி, கலக மினல்மாஇ பஷறன், ஃஜஅலஹு நஸபன், வசிஹ்றன், என்றோதி ஆடவனின் மனி, முன் இறங்குவதாயின் கூடிய அளவு ஸ்திரிபோக லீலைத்தொழிலால் ஸ்திரியின் மனி இறங்கும்வரைக்கும் தாமதிக்கப்பண்ணி ஸ்திரியின் ஹாஜத்தை நிறைவேற்றிப் புணர்தல்வேண்டும்.

இரண்டாம் முறை ஜிமாஉசெய்ய நினைந்தால் அல்லது போஷிக்க பாணம்பண்ண நினைத்தால் தகனையும் பறுஜையும் கழுவி ஒலுச்செய்துகொள்ளுதலும் வேண்டும் இவைகளே ஜிமாஇன் சுன்னத்துக்களாம்.

புணர்ச்சிசெய்யத்தக்க பராக்கிரமசாலி நான்கு நாட்களுக்கோர் முறையும் அதிக இச்சையுற்ற ஸ்திரிக்குத் தேவையானமட்டும் ஜிமாஉ செய்தல் சுன்னத்தாம்.

(45.) தன் கரத்தினுல் இந்திரியத்தை இறக்கிவிக்கலாமா?

சிறுவைப் பயந்ததற்காய் ஆயினும் தன் கையினுல் மன்யை இறக்கிவித்தல் ஹறுமாம் தன் ஸ்திரியின்கையா லிறக்குதல் மகுறூகு

(46.) பகல்காலத்தில் ஜிமாஉ செய்யலாமா?

அது மகுறூகாம் வெள்ளிக்கிழமைப் பகல் ஜுமுஆவின் முன்ஜிமாஉ செய்தல் சுன்னத்தாம்.

இரவின் துவக்கத்தில் புணர்தல் மகுறூகாம்.

பிரையாணி தன்மனேசேர்ந்த உடனும் சஃறுடைய வருத்தினும் ஜிமாஉசெய்தல் சுன்னத்தாம்.

மாசத்தின் துவக்கம் மத்தி கடையாகிய காலங்களில் ஜிமாஉ செய்தல் மகுறூகாம்.

(மகரைப் பற்றியது.)

(47.) மகர் எத்தனைவகைப்படும்?

மகர் முசம்மா மகர்மிதில் என இரண்டுவகைப்படும்.

மகரை நிகாஹில் குறித்தல் சுன்னத்தாம்.

கொடுக்கல் வாங்கல் செய்யத்தக்க எப்பொருட்களையும் மகராக நியமித்துக்கொள்ளலாம்.

மகர் குறிப்காமல் நிகாஹு முடித்தல் மகுறூகாம்.

(48.) மகர் முசம்மாவாவ தியாது?

கலியாணத் தறுவாயில் மகரென நியமிக்கப்படும் திரவியத் தொகையாம்.

மணவாளன் ஸ்திரியாகிய இருவரி லொருவர் மரணித்தாலும் சுதனுவரையளவு மறையத்தக்க போகஞ்செய்தாலும் குறித்த மகர் முற்றும் கொடுத்தல்வேண்டும்.

அது வதிஉ செய்ய முன் மரணித்தாலுமாம்.

சுதனுவரை மறையத்தக்க வதுஇல் கன்னிஸ்திரி கன்னியழியாவிட்டாலுமாம்.

மணவாளன் வதிஉச்செய்ய முன் ஸ்திரியே பஸ்கை வருத்திப் பிரித்துக்கொண்டாலும் ஸ்திரியின் சபபால் பஸ்கு உண்டாகுதலாலும்அவன் முறுதத்தாலும் குதலா மணவாளன் மகர் கொடுப்பதற் கேலாதவனுகுதலாலும் மகர் விழுந்துபோம்.



வதிஉச்செய்ய முன் தலாக்குச் சொல்லப்பட்ட ஸ்திரி மகரில் அரைவாசி பெற்றுக்கொள்ளுதலே நியாயமாம்.

(49.) மகர் மிதிலாவதியாது?

பெரும்பாலும் அவ்வித ஸ்திரிக்கு மகராக எத்தொகையை நியமிக்கப்படுகின்றனவோ அத்தொகையாம்.

அது ஸ்திரியின் பிதாவின் வம்மிசத்தில் வயது திரவியம் வாசஞ்செய்யும் பட்டணம், காலம், அகில் தீன், கன்னித்தன்மை, கன்னியழிந்த தன்மை, பிள்ளையில்லாமை, இல்மு, அதபு, சற்குணம், ஆகியவைகளில் நிகராகிய ஸ்திரிக்குக் கொடுக்கப்படும் மகராம்.

வலிகாரன் சிறுவியை அல்லது கன்னியாகிய பெரிய ஸ்திரியை மிகர்மிதிலுக்குக் குறைய அவ்விஸ்திரியின் உத்தரவின்றி நிகாஹு செய்து கொடுத்தாலும் அல்லது அவ்விஸ்திரி குறித்த தொகைக்குக் குறைத்தாலும் மகர் மிதிலைக்கொண்டே நிகாஹு சிறைத்தாகுமாம்.

மகரின் தொகை இவ்வளவென்பதிலும் அதின் தன்மையிலும் தவணை அல்லது தற்காலத்திலேயே கொடுக்கப்படும் என்பதிலும் மணவாளனும் ஸ்திரியும் விரோதித்து அதற்குச் சாட்சியும் இல்லாவிட்டால் மகரமிதில் கொடுத்தல்வேண்டும். அது இருவரும் சத்தியஞ்செய்தபின்னும்.

வலிகாரன் தன்னுருத்துக்காரியாகிய ஸ்திரிக்குக் கிடைக்கவேண்டிய மகரையும் மற்ற அவளுடைய ஹக்குகளையும் பொறுத்துவிடுதல் ஜாயிசல்ல.

ஸ்திரி பயித்திய காரியாக அல்லது சிறுவியாக விருக்கையில் மணவாளனை மகரைவிட்டு நீக்கிவிடத்தக்க வழியாவது வலிகாரன் மணவாளனை என்மகளை தலாக்குச் சொல்லு நான் இன்ன தொகை தருகிறேனென்று சொல்லி அப்பொருத்தத்துடன் தலாக்குச் சொன்னபின் அம்மணவாளன் வலிகாரனை நீர்எமக்குத்தரவேண்டிய தொகையை உன்புத்திரிக்குச் சாட்டினேன் என்றால் அவன் மகரைவிட்டு நீங்கிவிடுவான்.

முகல்லபத்தாகிய ஸ்திரிதன் மணவாளனை மகரைவிட்டு நீக்குதற்கு அவனைநோக்கி எமக்கு நீர் தரவேண்டிய மகரை நீக்கிவிட்டேன் பொறுத்துக்கொண்டேன் உமக்கு ஹலாலாக்கினேன் ஹிபத்தாத்தந்தேன் ஆமாக்கினேன் எனும் சொல்லுகளி லொன்

றைச் சொல்லுதல் வேண்டும். அவ்வாறு சொல்லிய ஸ்திரியின் மணவாளன் மகரால் நீங்கிவிடுவான்.

(முத்ஆவைப்பற்றியது.)

(50.) முத்ஆ வாவதியாது?

ஸ்திரியின் சபயின்றி மணவாளன் பிரிந்து கொள்ளுதற்காய் ஸ்திரிக்கு சந்தோஷம் கொடுப்பதாம்.

அது மணவாளனும் ஸ்திரியும் விற்பனவு செய்தற்குத்தக்க எவ்விதப் பொருளைப் பொருந்திக்கொள்ளுவார்களோ அப்பொருளைக் கொடுத்தல்வேண்டும்.

மணவாளன் ஸ்திரியாகிய இருவரி லொருவர் மரணத்தினால் பிரிந்து கொள்ளுதலின்றி மற்ற எவ்வகையாகிய பிரிவினால் பிரிவதாயினும் வத்ஊச் செய்யப்பட்ட மனைவிக்கு அவன் வெள்ளாட்டியாயினும் முத்ஆக் கொடுத்தல் வாஜிபாம். அது முப்பது திருகத்துக்குக் குறையாதிருத்தல் சுன்னத்து.

முத்ஆவில் போதும் போதாதென்று பிணக்கினால் காளி மணவாளனின் சீமான்தனம் வறுமை என்பவைகளை ஆராய்ந்து நியமித்தல் வேண்டும்.

---

## அல்பாபுல்றாபிஉ பீபயானில்வலீமதி.

(நான்காம்பாடு விருந்தையும் அதைச்)

(சார்ந்தவைகளையும் பற்றியது.)

(51.) ஷறஇல் சுன்னத்தாக்கப்பட்ட விருந்துக்களெவை?

விவாகம் செய்தற்கும் கதனுச் செய்தற்கும் கருமாரிசலாமத்தாவதற்கும் பிள்ளைப் பிறந்ததற்கும் பிரையாணி தன்மனை சேர்ந்ததற்கும் வீடு குடிபுகுதற்கும் குறுஆன் ஷரீபை ஹிபுலாக்குதற்கும் குறுஆன்ஷரீபை ஒதித்தமாமாக்குதற்கும் கொடுக்கவேண்டிய விருந்தாம்.

விருந்து கொடுக்கத்தக்க ஐசுவரியவான் ஓர் ஆடு முதலியதைக் கொண்டு (வலீமா) விருந்து கொடுத்தல் சுன்னத்தாம்.

கலியாணத்துக்காய் விருந்து கொடுத்தல் சுன்னத்து முஅக்கதாவாம்.

வலீமா எனும் அறபுச்சொல் விருந்து எனும் பொருள் கொண்டது.



விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அங்கு ஹாளிருகுதல் வேண்டும். அதுசுன்னத்தாம்.

நிகாஹுக்குப்பின் அமைக்கப்பட்ட கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டால் போகுதல் வாஜிபாம். நிகாஹுக்குமுன் அமைக்கப்பட்ட விருந்துக்குப் போவதால் அதின் அசில் சுன்னத்து உண்டாகும்.

வாஜிபாக ஹாளிருக்கவேண்டிய விருந்துக்கு ஹாளிருகுதல் காளிக்கு வாஜிபாகாது.

ஊர் பிரசைகளையெல்லாம் அழைத்தால் அவ்விருந்துக்கு அவ்வூரில் வாசம்பண்ணுபவர்க ளெல்லாம் ஹாளிருகலாம்.

இரண்டுபெயர் விருந்துக்கு அழைத்தால் முந்தி அழைத்தவனின் விருந்துக்குத்தான் ஹாளிருக வேண்டும்.

இரண்டு விருந்துக்காரரும் ஒரே சமையத்தில் அழைத்தால் தன் இனத்திலுள்ளவனின் விருந்துக்கு முந்திப் போகுதல் வேண்டும்.

ஓர் தறஜாவிலுள்ள இரண்டு விருந்தாளர் ஒரே தருணத்தில் அழைத்தால் கரைபோட்டு அதின்பிரகாரம் போகுதல்வேண்டும்.

விருந்து அருந்துதல் சுன்னத்தாம்.

முகத்துதி பெருமைமுதலியவைகளுக்காய் விருந்து கொடுத்தல் ஹறாமாம்.

விருந்துக்கு வருபவரை விருந்து கொடுப்பவன் எதிர்கண்டு அழைப்பதும் விருந்தருந்தி வெளிப்படும்போது வீட்டின் வாயில் வெளிவரைக்கும் பின்தொடர்ந்து உபசரிப்பதும் சுன்னத்தாம்.

விருந்தளிப்பவர்க்குச் சங்கைசெய்தல் விருந்தருந்துபவர்களின் அதபிலுள்ளது. அது சுன்னத்தாம்.

விருந்துகொடுப்பவர் அதை எவ்வளவு சிறப்பித்தாலும் அதின் குறைவையே வெளிரங்கப்படுத்துதல் சுன்னத்தாம்.

வீட்டுக்காரர் விருந்துக்கு வருபவர்களுக்கு மறுபடியும் வென்று சோபனங் கூறுதலும் சுன்னத்தாம்.

சாலிஹாகிய பகீர் மிஸ்கீன் முதலியவர்களை எதிர்பார்ப்பவன் ஹாளிருனவர்களைக்கொஞ்சம் தாமதப்படுத்தலாம். ஐசுவரியவானை வழிபார்த்துத் தாமதப்படுத்தல் ஜாயிசல்ல அவ்வைசுவரியவான் இல்லுள்ளவனாயிருந்தால் தாமதப்படுத்தலாம்.

விருந்தாளியாய் வருபவனை மூன்று இரவு பகல் விருந்து கொடுத்து ஆதரித்தல் சுன்னத்து முஅக்கதாவாம். மூன்றுநாளுக்கதிகமாய் தாமதித்தல் ஜாயிசல்ல மிகவருந்தப்படுவேயின் மூன்று நாளுக்கதிகமாய் தரிப்பிக்கலாம்,

பரதேசவாசியாகிய விருந்தாளிக்கு கிபுலாவையும் பாயகானாவையும் வுதுச்செய்யும் ஸ்தானத்தையும் அறிவிப்பதும் அவர்களை தாமதப்படுத்தாமல் நிறைவேற்றுதலும், தான் அல்லது தன்பிள்ளைகளிலொருவர் அவ்விருந்தாளியோடிருந்து புசிப்பதும் நல்லொழுக்கங்களிற் சேர்ந்ததாம்.

விருந்தில் நல்லபதார்த்தங்களைச் சிலருக்குத் தனதாய்க்கொடுத்தல் மகுறூகாம்.

பெரியோர்களுக்குத் தன்தாய் முற்படுத்தப்பட்டதில் மற்றவர்கள் புசித்தல், வயிறு நிறைந்த பின் புசித்தல், தன்னோடிருந்து அருந்துபவனை பேறுகெடுத்தல் உடையவனின் சம்மதத்தையறியாமல் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தல் பூனை முதலியவைகளுக்குக் கொடுத்தால் ஆகியவைகள் ஹறுமாம்.

வயிறு நிரம்பியபின் மூன்று காரியங்களுக்காகப் புசிக்கலாம், அவைகளாவன விருந்தளிப்பவனை பொருத்தமாக்கிவித்தல். நோன்பு பிடிப்பதற்கு சஹுறுசெய்தல், பீசபில்செய்தல், எனும் மூன்றுகாரியங்களுக்காகவும் புசிக்கலாம்.

தன் ஸ்திரியின் ஹக்கை நிறைவேற்றுதற்கு வயிறுநிரம்பியபின் புசித்தல் ஹறுமாகாது.

(52.) ரூபஞ் சித்திரிக்கலாமா?

ரூபஞ் சித்திரித்தலும் அதைப்பொருத்துதலும் ஹறுமாம். விருந்தளிக்கும் மஜ்லிசில் உபயோகிக்கப்படும் போசனபாத்திரம் பானம் பண்ணும் பாத்திரம் ஆகியவைகளும் விரிப்பு. தலையணையாதியவைகளும் ரூபஞ் சித்திரிக்கப்பட்டதாயிருந்தால் அவ்விருந்து ஸ்தானத்தில் ஹாளிருகுதலையிலக்காது.

விருட்சம் செடி பொழுது நிலவு முதலியவைகளைப்போல் சித்திரித்தலுமப்படியே.

சிறுவர்களுக்குச் சிலைப்பெண் மாப்பிள்ளைசெய்து கொடுத்தல் ஜாயிசாம்.

மேலேசொல்லப்பட்டவைகள் இவன்போகுதலால் விலக்கப்படுமேயாகில் அந்தலஞ்செல்லுதல் வாஜிபாம்.



(53.) விருந்துக்கு ஹாளிருகுதலை வாஜிபாக்கிவிக்கும் ஷறுத்துக்களெவை?

தன்னைக்குறிப்பாய்அழைத்தல், தன்கூட்டத்தார் சினேகர்களைத் தாரணிக்குத் தக்கபடி அழைத்தல், அழைப்பவன் ளாலிமாய் அல்லது பாசிகல்லாதவனுயிருத்தல், இவன்மேற்கொண்ட ஆசை அல்லது பயம் ஆகியவைகளுக்காய் அழைக்காமை அமைக்கப்பட்ட போசனபானங்களில் ஹறும் மிகைக்காமை அத்தானத்தில்ஹறுமாகியகாரியம் ஹறுமாகிய கல்வத்து உண்டாகாமை அத்தானத்தின்முகட்டிலும் விரிப்புத்தலையணை முதலியவைகளிலும் உயிர்ப்பிராணியின் ரூபத்தைச் சித்திரிக்காமை பாலிகிய ஆடவன் பொன், வெள்ளி, பட்டு, ஆகியவைகளை அணியாமை அவ்விடம்செல்லுதலால் வெளிரங்கமாகிய நோவினையுண்டாகாமை புலிபுலிக்கொப்பாகியவைகளின் தோலைவிரிக்காமை, ஹாளிருகுபவர்களைச் சிரிப்புண்டாக்குபவ னில்லாமை வேடம்போட்டவ னில்லாமை என்பவைகளாம்.

(54.) எவ்வாறு புசித்தல் வேண்டும்.

புசிக்குமுன் இருகைகளையும் கழுவி உப்பில் கொஞ்சம் அருந்தி புசிப்பின் துவக்கத்தில் பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் அல்லாகும்ம பாரிக்லனா, பீமா றசக்தனா வகினா அதாபன்னார் என்றோதிக்கொண்டு வலக்கரத்தால் கொஞ்சங்கொஞ்சமாய் அள்ளிப்புசித்தல்வேண்டும்

புசித்து முடிந்த பின்னும் இருகைகளையும் கழுவி உப்பில் கொஞ்ச மருந்திக்கொண்டு அல்ஹம்துலில்லாஹில்லதீ அதுஅமனீ ஹாதத்தஆம வறசகனீஹியின் கைரின் மின்னீவலாகுவ்வத அல்லாகும்ம கமா அதுஅம்தனீ தையிபன்பஸ்தகு மல்னீ சாலிஹன் அல்ஹம்துலில்லாஹில்லதீ அதுஅமவசகாவசவ்வகுவஜ்அல்லகு மக்றஜன் அல்ஹம்துலில்லாஹில்லதீ அதுஅமனீ வஅஸ்கனீ வஅறுவானீ என்றோதியபின் குறைத்துல் இகுலாஸ லி ஈலாபி குறைஷின் எனும் இரண்டுசூறத்துக்களை முற்றுய ஓதிக்கொள்ளுதல் வேண்டும்.

விருந்தருந்துதலில் விருந்தளிப்பவன் முந்திக்கொள்ளுதல் காத்திருத்தல் விருந்தளிப்பவன்கையில் ஜலமூற்றி சிறுவர்களையும் பின்பு வாலிபர்களையும் பின்பு வயோதிபர்களையும் கழுவப்பண்ணுதல் புசித்தபின் பெரியோர்கள் விருத்தாப்பியர்களையும் பின்பு வாலிபர்களையும் பின்பு சிறுவர்களையும் கை கழுவப்பண்ணுதல் வலப்பக்கமாய்த் தனித்திப்பாய்ச் செய்தல் போசனத்தில் கிரைசோறுகாய் ஆகியவைகளை வைத்தல் வலக்கரத்தின் மூன்றுவி

ரற்களால் அள்ளுதல் போதுமாகில் அவ்வாறேபுசித்தல் இரண்டு புறங்காலின்மேல் அல்லது வலதுகாலை நட்டி அல்லது இடதுகாலின்மேல் இருந்துகொண்டுபுசித்தல் ஆகியவைகள் சுன்னத்தாம்.

சாய்ந்திருந்துகொண்டு புசித்தல் கையை ஊன்றிக்கொண்டிருந்து புசித்தலாகியவைகள் மக்ரூறாகாம்.

உணவைத்தாமதமாய்ச்சவைத்து முழுங்கியபின்எடுத்தலும்கூடியிருந்து புசிப்பவரைப்பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்ளுதலும் விருந்தருந்துமிடத்தில் விரிக்கப்பட்டவிரிப்பில் விழுந்துகிடக்கும் அப்பராவாகிய போசனத்தைப் பொறுக்கிப்புசித்தலும் கடையில் சஹனத்தை வழித்துப்புசித்தலும் கையைச்சூப்பிமுழுகுதலும் சுன்னத்தாம்.

விருந்தளிப்பவன் விருந்தருந்துபவர்களை நன்றாய்ப் புசிக்கும்படி உபசாரங்கூறுதல் சுன்னத்தாம்.

சஹனின்அருகில் தனக்குநேரே முன்இருப்பதைப் புசித்தலும் சுன்னத்தாம் பின்னிருப்பவர்கள் முன்னிருப்பதில் கைபோடுதலும் இறைச்சிஆகியவைகளைக் கத்தியால் வெட்டிப்புசித்தலும் மக்ரூறாகாம்.

நிற்பவன் புசித்தல் பானம்பண்ணுதலாகியவைகள் கிலாபுல் அவுலாவாம்.

இரண்டு ஈத்தம்பழச்சுளைகளை ஒன்றிப்பாய் வாயிலிடுதல் அதின் விதையை அல்லது மற்றெவ்விதக்கனியின் விதையாயிருந்தாலும் விதையை வாயால்துப்புதல் வாயை உணவுக்கு மூடுகுதலாக்குதல் மனிதர்கள் புசிக்கும்போது காறுதல் சீறுதல் அருவருக்கத்தக்க பேச்சுப்பேசுதல் கையை உணவிருக்கும் பாத்திரத்தில் உதறுதல் ரொட்டிமுதலியவைகளில் கையைத்துடைத்தால் ஆகியவைகள் மக்ரூறாகாம்.

குருடனோடு புசிப்பவர்கள் அவனுக்குத் தெரியாதிருப்பதைக்காட்டிக்கொடுத்தல் வாஜிபாம்.

புசித்து முடிந்தவுடன் மேலே சொல்லிய துஆக்களை ஓதி அல்லாகுத்தஆலாவைப் புகழ்ந்துகொண்டு பல்லுக்குமிஸ்வாக்குச்செய்தல் வேண்டும்.

மாம்சம் மீன் முதலியவைகளின் வாடை நீங்காவிட்டால் சவுக்காரம் ஆகியவைகளைப்போட்டுக் கைகழுவுதல்வேண்டும்.

போசனம் அல்லாகுத்தஆலா தந்ததாயும் அதனால் இபாதத்துக்கு உதவியையும் நபகா இவ்வத்துக்கொடுக்க விதித்ததை இறைப்



பதையும் நாடவேண்டுமேயன்றி சிறு அதியாயம் வட்டித்தொழில் ஆகியவைகள் சம்பாதிப்பதில் பெலனுண்டாகுதல் வேண்டுமென நாடுதலாகாது.

போசனத்தை கஜாசத்தில் அல்லது அருவருப்பானதில் போடுதல் அதை தாவித்தல் சீ என்று சொல்லுதலாகிய வைகள் ஜாயிசல்ல.

விருந்து மஜ்லிசில் விருந்தருந்துபவர்கள் புசித்து முடிந்து எழும்பும்போது விருந்தளிப்பவனிடம் உத்தரவுபெற்று எழும்புதல்வேண்டும்.

விருந்தருந்தியபின் பாத்திஹா துஆ ஓதும்படி தேடுதலால்விருந்தின் தவாபு குறைவாகும். கத்தம் பாத்திஹா ஓதுதற்கு அழைக்கப்பட்டு அதற்குப் பொருந்திப் போனவர்கள் அதை ஓதுதல் கொண்டேயன்றி இருப்படாது.

மஜ்லிஸ் கூடியிருக்கும்போதில் வருபவருக்கு இடமிட்டிருக்கும்படி சொல்லப்பட்டால் இடங்கொடுத்தல் வேண்டுமென்றும் புசித்தபின் வெளிக்கிடும்படியாயும் எவல் வந்திருக்கின்றன.

எங்களுயகும் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்பேரில் மவுலூது ஓதுதற்காய் விருந்து கொடுத்தல் விடப்படாத பிதுஅத்து ஹசனாவாம். அம்மஜ்லிசை எவ்வளவும் சிறப்பிக்கலாமென்றும் இமாம்கள் தனித்தனிக் கிதாபுகள் உண்டாக்கியிருக்கின்றனர்.

(55.) எவ்வாறு பானம் பண்ணுதல்வேண்டும்?

மூடியிருக்குங் கெத்தலாகியவைகளில் குடிக்காமல் கரகத்தைக் கொஞ்சம் வாயில்வைத்து பார்த்து கரகத்தில் மூச்சும் எப்பழும் விடாமல் குடித்தல் வேண்டும்.

பானம்பண்ணுதலை மூன்று மூச்சில் வாயை எடுத்தெடுத்துக்குடித்தலும் முந்திய மூச்சின் துவக்கத்தில் பிஸ்மில்லாகிர்றஹ்மானிர்றஹீமென் றோதுதலும் முந்திய மூச்சின் கடையில் அல்ஹம்துலில்லாகி என்றும் இரண்டாவதில் றப்பில்ஆலமீன் என்றும்மூன்றாவதில் அர்றஹ்மா னிர்றஹீம் என்றும் ஓதிக்குடித்தல் சுன்னத்தாம்.

(6.) விருந்தில் மக்ரூறாகாகியவைகள் யாவை?

சிலருக்குத் தனதாய் நேர்த்தியான போசனம் கொடுத்தலாம்.

(முறைவண்ணமெனும் இராத்தரித்தலைப்பற்றியது.)

(57.) ஒன்றுக்கதிகமான மனைவிமாரின் புருடன் எவ்வாறு இராத்தரித்தல்வேண்டும்?

ஓர்மனைவி யிடத்தில் இராத்தரித்தால் மற்றவர்களுக் கிடையில் கரைபோட்டு அவ்வாறே முறைவண்ணம் இராத்தரித்தல் வாஜிபாம். அவ்விஸ்திரிகளில் வியாதி ஹைளுமுதலிய நோய் உண்டாயிருந்தாலும் மேற்சொல்லியபடியே நடத்துதல்வேண்டும் அம்மாதர்கள் மனவாளனோடு பிணக்கங்கொண்டால் வாஜிபாகாது.

சரிசரியாய் முறை வண்ணம் நடத்தப்படும் ஸ்திரிகள் எல்லோரும் ஒரேதறஜாவி லிருத்தல்வேண்டும்.

ஓர்ஸ்திரி ஹுற்றத்தாகவும் மற்றவள் வெள்ளாட்டியாகவுமிருந்தால் சரிசரியாய் முறைவண்ணம் நடத்துதல் வாஜிபாகாது.

முறைவண்ணம் விதித்த இராவில் விதிக்காத ஸ்திரியின் மனையில் யாதேனும் தங்கட்டுக்காய்ப் புகுதலாம்.

தேவைக்காய்ப் பகல்காலத்தில் ஓர் ஸ்திரியிடம்போய் தாமதிக்காமல் வந்துவிடலாம்.

முறைவண்ணத்தில் குறைந்தது ஓர் இராவு. அது சூரியன் அஸ்தமித்து கிழக்கு வெளுக்கும் வரைக்குமாம்.

கன்னிஸ்திரியாகிய பெண்ணைக் கலியாணம் முடித்தவன் அவ்விஸ்திரியிடத்தில் களாவின்றி இராவு பகலாய் ஏழுநாள் தரித்தல் வேண்டும்.

கன்னியழிந்த ஸ்திரியைக் கலியாணம் முடித்தவன் அவ்விஸ்திரியிடத்தில் களாவின்றி இராவுபகலாக மூன்றுநாள் தரித்தல் வேண்டும்.

பகல் காலத்தில் தொழில் செய்பவனுக்கு இராவும் இராவில் தொழில்செய்பவனுக்கு பகலும் அசலாகும் அவ்விராவையடுத்த முந்தினபகலையும் பிந்தினபகலையுந் தொடர்பாக்கலாம்.

(58.) ஒருவன் தன் மனைவியுடன் மூன்றுநாளுக் கதிகமாய் வெறுப்பாயிருக்கலாமா?

தன்மனைவியுடனும் பிறருடனும் 3. நாட்களுக்கதிககாலம் வெறுப்பாயிருத்தல் ஹறுமாம்.

பிதஉவுக்குப் பயப்படாவிட்டால் தீனுடைய கருமத்துக்காய் வெறுப்பாயிருக்கலாம்.



தன்மனைவியின் பிணக்கத்துக்குப்பயந்தால் (வகுஉ) உபதேசம் சொல்லுதல்வேண்டும். அதுசுன்னத்தாம். உபதேச வார்த்தையிலாவது திருந்தாவிட்டால் படுக்கையில் வெறுக்கலாம் பேசாமலிருக்குதலாகாது.

உபதேசமும் படுக்கையில் வெறுத்தலும் பிரையோசனஞ் செய்யாதபெண்களுக்கு முகத்தைத் தவிர மற்ற இடங்களிற் காயமற்ற அடியாயடிக்கலாம்.

(குல்ஊப் பற்றியது.)

(59.) குல்உ ஆவதியாது?

மணவாளன் தன்மனைவியிடம் அல்லது வேறொருவரிடம் ஓர் தொகைபெற்றுக்கொண்டு தனக்கும் தன்மனைவிக்குமிடையிலுள்ளநிகாஹைப்பிரித்தலாம்.

அது காலகுதிபி அல்லது தல்லகுதிபெனினும் லபுஸுக்களைக்கொண்டு உண்டாகும்.

பகரம் பெறும்சொல்லை மணவாளனே துவக்கிப் பகரத்தைக்குறித்து இன்னதொகைக்காக தலாக்குச்சொன்னேன் அல்லது குல்உ செய்தேனென்றால் அச்சொல்லை மனைவி கபூல்செய்ய முன் மீண்டுகொள்ளலாம்,

குல்உ செய்த மஜ்லிஸில்தானே மனைவி தீபமாய் ஒப்புக்கொள்ளாவிட்டால் குல்உ கூடாது.

மணவாளன் தன்மனைவியைநோக்கி எனக்கு நீஇன்னதொகை தருவதற்காய் உன்னைமுத்தலாக்குஞ் சொன்னேன். என மனைவி ஒருதலாக்கை!ஆதரவுவைத்து இன்னதொகைக்குப் பகரமாய் கபூல்செய்தேனென்றால் முத்தலாக்கு முண்டாகிவிடும் அவ்விஸ்திரி அவனுக்குச் சொல்லிய தொகைகொடுத்தல் வாஜிபாம்.

(60.) (தகுலீக்கு) தொழுகுதலாய் குல்உசெய்யலாமா?

ஆம் குல்உ இன் தகுலீக்குடைய சீகாவாவது மணவாளன் தன் மனைவியைநோக்கி எப்போதுஅல்லது என்னேரத்தில் இன்னதைத்தருவாயோ அப்போது நீதலாக்குஎன்பதாம்.

தகுலீக்குடைய சீகாவின்பிரகாரம் செய்யப்பட்ட குல்இல்அதில்சொல்லியதைக் கொடுத்ததின்பின்னே யன்றிதலாக்குண்டாகாது குல்உசெய்தவன் அதைவிட்டு மீளவுமாட்டான்.

குல்உ உடைய தகுலீக்காகிய சீகாவை ஸ்திரீ உடனே கபூல்செய்யவேண்டுமென்றும் அல்லது தீபமாய்க் கொடுத்தல் வேண்டுமென்றும் ஷர்த்தில்லை.

தகுலீக்குடைய சீகாவைச்சொல்லாமல் ஸ்திரியைநோக்கி இன்னதொகையைத்தருவாயேயாகில் தலாக்குஎன்றால் அத்தறுவாயிலேயேகொடுத்தல் ஷறுத்து அப்படிக் கொடுத்தால் தலாக்குண்டாகும்.

மூன்றுதரம் குல்உசெய்யப்பட்டஸ்திரியை மணவாளன் தஹ்லீலின்றி நிகாஹுசெய்யக்கூடாதெனும் காரணம்பற்றி குல்ஜ எண்ணத்தைக் குறைக்கும் தலாக்கென்பாருமுளர்.

குல்உ எண்ணத்தைக்குறைக்காத பஸ்கென்றும் எத்தனைதரம் பஸ்குநடந்தாலும் தஹ்லீலின்றி நிகாஹுசெய்யலாமென்றும் இதுவே பதுவாவென்றும் சொல்லுவாருமுளர்.

---

## அல்பாபுல் காமிசு பீபயானித்தலாக்கி

(ஐந்தாம்பாபு தலாக்கைப்பற்றியது.)

### (61.) தலாக்காவது யாது?

முகல்லபாகிய மணவாளன் தன்மனைவியை பின்வருமாறுசொல்லிப் பிரிந்துகொள்ளுதலாம்.

அது தலாக்குல்சரீஹு தலாக் குல்கினாயா என இருவகைப்படும்.

தலாக்குல்சரீஹாவது மணவாளன் தன்மனைவியைநோக்கி தல்லகுதுகிதலாதா என்று சொல்லுதலாம்.

தலாக்கு பிறாக்கு சிறாஹு எனும் மூன்று அறபுச்சொல்லுகளும் எறக்குறை ஒரே பொருள்கொண்டனவாம்.

ஓர் மணவாளன் இன்னானுடையமகள் இன்னாளை தலாக்குச் சொன்னேனென்று தறுஜுமாவாகச் சொல்லுதலும் சரீஹாகியதலாக்காம்.

தலாக்கு பிறாக்கு சிறாஹு எனும் மூன்றுசொல்லுகளில் ஒன்றைக்கொண்டு அல்லது அதின்தறுஜுமாவில் ஒன்றைக்கொண்டு அப்புறமொழிதலில் நிய்யத்து ஷறத்தல்ல.

அறபுச்சொல்லை வழுவின்றிச் சொல்லத்தெரியாத ஆமிகள் தலாக்குஎன்று காபை காவுஆகவும் அல்லது தலாக்கு என்றுதேயை தேயாகவும் ஹறுபுகளைச் சரியாய் மொழியாமையால் தலாக்கு ஆகமாட்டாதென்று சொல்லுதலாகாது.



தலாக்கைவருத்திவிக்கும் சயிக்கினையாகியசொல்லுகளாற்சொல்லப்படும் தலாக்கே தலாக்குல்கினாயாவாம்.

தலாக்கை வருத்திவிக்கும் கினாயாவாகிய சொல்லுகளாவன. மணவாளன் தன்மனைவியைநோக்கி நீ என்மீது ஹறாம் நீ ஒழிந்தவள் நீ ஊட்டான்மகள் நீ என் மாதாவைப்போல நீ என்மகள் உன்னைஉருமைவிட்டேன் உன்னைவிட்டுப்போட்டேன் உன்னைநீக்கிவிட்டேன் நீ வாழ்க்கைப்பட்டுக்கொள்ளு உன்னை ஹலாலாக்கிவிட்டேன் நீ இத்தாவிலிரு உன்நிகாஹைத் தறித்துப்போட்டேன் எனக்கு உன்னில் ஹாஜத்தில்லை உன் தலாக்கை எடுத்துக்கொள்ளு உன்கையைஉன்னுடைய கழுத்திற்றானே போட்டுவிட்டேன் என்பதும் இதைநிகர்த்த சயிக்கினைச்சொல்லுகளுமேயாம்.

இவ்விதச்சொல்லுகளினால் தலாக்கு உண்டாவதற்கு அச்சொல்லின் ஆவக்கத்திற்றானே தலாக்கை நிய்யத்துவைத்தல் ஷறுத்தாம்.

தலாக்குடைய சீகாவில்வரும் ஷுழு மஅனாவைக் கெடுக்காவிட்டால் வழுவாகாது.

மனைவி மணவாளனைநோக்கி நீ என்னைத் தலாக்குச் சொல்லிப்போட்டேன்றுசொல்ல மணவாளன் அவள் தலாக்குஎன்று சொல்லியபின் அவளல்லாத வேறோர் ஸ்திரியை நாடினேனென்று வாதித்தால் அச்சொல்லை ஒப்புக்கொள்ளக்கூடாது.

ஒருவன் மற்றவனைப்பார்த்து நீ உன்மனைவியை தலாக்குச்சொல்லி விட்டாயாவென்றுகேட்க அவனே மெய்தானென்றால் தலாக்காகிவிடும். அக்கேள்விக்கு தலாக்குச் சொன்னேனென்றவன் தன்மனைவியைநாடாவிட்டால் தலாக்குண்டாகாது.

பெண்கொடுத்தமாமியைநோக்கி உன்மகள் தலாக்கு என்றுசொன்னவன் அவனின்மாமிக்கு வேறேபுத்திரிகள் இருப்பதற்காய் நான் அந்தமகளைத்தான் நினைத்தேனென வாதித்தால் அவனின் சொல்லை சத்தியங்கொண்டு உண்மைகொள்ளலாம்.

தன் மனைவியின் பெயரைமாத்திரம் குறித்துத் தலாக்குச்சொன்னவன் என் மனைவியையல்ல அப்பெயருள்ள பரஸ்திரியைத்தான் நாடினேனென வாதித்தால் ளாகிறில் அவனின் சொல் ஒப்புக்கொள்ளப்படாது அவன் உண்மைசொன்னவனென்று காணப்பட்டால் அவனுக்கு பாத்தினில் தியானத்துக் கொடுக்கப்படும்.

கினாயாவாகிய சொல்லைக்கொண்டு தலாக்குச் சொன்னவன் அச்சொல்லில் தலாக்கை நாட்டவில்லை என்று வாதித்தால் சத்தி

யங்கொண்டு உண்மைகொள்ளவேண்டும் தலாக்கை நாடினேனென்பதிலும் அப்படியே.

கினையாவாகிய சொல்லாகத் தலாக்குச் சொன்னவனின் நிய்யத்தை யறிந்துகொள்ளக்கூடாமையால் தலாக்குண்டாகிவிட்டதென்று ஹுக்கும் செய்தலாகாது.

தன் மனைவியின் பெயரல்லாத வேறோர் பெயரைச் சொல்லி அவனின் மனைவியை அழைத்து நீதலாக்கு என்றால் அப்போதே அவன் மனைவி தலாக்காகிவிடுவாள் முன்னிலையா யழைத்த அவ்விளிப்பு அவனின் மனைவியையே குறிப்பாக்கிவிட்டது.

தன் மனைவியின் பெயரால் பரஸ்திரியை அழைத்து நீதலாக்கு என்பதால் அவனின் மனைவி தலாக்காகமாட்டாள்.

தலாக்குச் சொல்லுதற்காய் நியமிக்கப்பட்ட வகீல் இன்னானைத் தலாக்குச் சொன்னேனென்பதால் தலாக்குண்டாகிவிடும்.

உன்னை ஒரு தலாக்கு இரண்டு தலாக்குச் சொன்னேனென்பதால் முத்தலாக்கு முண்டாகிவிடும்.

ஒருவன் தன் முக்லபத்தாகிய மனைவியை நோக்கி நீ நாடினால் உன்னை தலாக்குச் சொல்லிக்கொள்ளென்று சொன்னவுடன் அவ்விஸ்திரி என் தன்னை தலாக்குச் சொன்னேனென்றால் தலாக்கு உண்டாகிவிடும்.

ஒருவன் தன்மனைவியை நோக்கி உன்னை முத்தலாக்குஞ்சொன்னேனென்று அவளுடைய செவி கேட்கத்தக்கதாய்ச்சொல்லித்தன் செவிகேட்கும்படி இரண்டுதலாக்கே யொழிய வென்றால் ஒரு தலாக்குத்தான் உண்டாகும்.

நீ தலாக்கு இன்ஷா அல்லா என்பதால் சொன்னவனின் மனைவி தலாக்காகமாட்டாள்.

என்னுடைய நாவு தலாக்களவில் முந்திற்று, தலாக்குச் சொல்லும்போது ஜன்னி அல்லது மயக்கம்பிடித்திருந்தேன், தலாக்குச் சொல்லும்படி நின் வம்பிக்கப்பட்டேன் என வாதித்தால் அப்படி உண்டாகத்தக்க வியாதி மறியாலாதியவைவெளி லகப்படக்கூடியதாயிருந்தால் அவனின் சொல் சத்தியங்கொண் டுண்மைகொள்ளப்படும்.

நாட்டாமகனுக்கு மூன்று தலாக்கும் பயலுக்கு இரண்டுதலாக்குமே உடையதாம்.

தலாக்கையும் உருமையிடுதலையும் ஷறுத்துக்களைக் கொண்டு கொளுகிப்பேசலாம் அதில் அவ்வியல்பு உண்டாக முன் மீளவுங்



கூடாது அந்த ஷறுத்துண்டாகமுன் அந்த தலாக்கும் உருமையிடுதலும் உண்டாகவு மாட்டாது.

(தஹ்லீலைப்பற்றியது.)

(62.) முத்தலாக்குச் சொல்லப்பட்ட ஸ்திரியை அந்தத் தலாக்குச் சொன்னவன் திரும்ப நிகாஹு முடித்துக்கொள்ளலாமா?

நாட்டான்மகனால் முத்தலாக்குச்சொல்லப்பட்டஸ்திரியும்அடிமையால் இரண்டு தலாக்குச் சொல்லப்பட்ட ஸ்திரியும் அவனல்லாத வேறேயொருவனுக்குச் சரியான நிகாஹாக வாழ்க்கைப்பட்டு அவனும் தலாக்குச்சொல்லி இத்தாவுந் தீர்ந்தபின் முன் தலாக்குச் சொன்னவன் அவ்விஸ்திரியை நிகாஹு முடித்துக்கொள்ளலாம். அதுவே தஹ்லீலாம். இரண்டாம் மணவாளன் அவ்விஸ்திரியின் முன்துவாரத்தில் ஹஷக்கத்துடைய தலை கத்தளவாவது மறையும்படி துகூல்செய்தல் வேண்டும்.

தஹ்லீலுடைய மணவாளனின் மனியிறங்குதல் ஷறுத்தல்ல.

தஹ்லீல் நடந்ததிலும் இத்தாத் தீர்ந்ததிலும் இடம்பாடுள்ள இடத்தில் அவ்விஸ்திரியின் சொல் கபூல்செய்யப்படும்.

இரண்டாம் புருடன் அப்பெண்ணின் சொல்லைப் பொய்யாக்கிவித்தாலும் முந்தினபுருடனுக்கு அவ்விஸ்திரியை நிகாஹு செய்து கொடுத்தல் ஹலால்தான்.

தலாக்குச்சொன்னதும் தலாக்குச் சொன்னேனென்று விண்ணப்புஞ்செய்தலும் நீதமான இரண்டு நாட்டான்மக்களின் சாட்சியாற் றரிபடும்.

சாட்சிசொல்லுதற்கும் சாட்சிசொன்னதை ஒப்புக்கொள்ளுதற்கும் சொன்னவனைக் கண்ணுற் காண்பதும் சொல்லும்போதில் தலாக்குடைய தொனியை கேட்பதும் ஷறுத்தாம்.

தலாக்குச் சொன்னவனை கண்ணுற் காணமல் அவனின் தொனியில் ஊனுதல்பிடித்துச்சொல்லும் சாட்சி கூடாது.

தலாக்குடைய சாட்சிகளில் இரண்டுபெயர் அவன் தலாக்குச் சொல்லும்போது தகுலீக்காய்ச் சொன்னானென்றும் வேறே இரண்டுபெயர் அவன் தலாக்குச் சொல்லும்போது தன்ஜீசாய்ச் சொன்னானென்றும் சொன்னால் தலாக்குடைய சாட்சியையே முற்படுத்தவேண்டும்.

(ளஜ இய்யத்தைப்பற்றியது.)

(63.) ளஜஇய்யத்து ஆவ தியாது?

ஒரு தலாக்கு அல்லது இரண்டு தலாக்குச்சொன்னவன் தன்மனைவியை மீளவித்துக்கொள்ளுதலாம்.

ஒரு தலாக்கு இரண்டு தலாக்குச்சொன்ன நாட்டான்மகனும் ஒரு தலாக்குச்சொன்ன அடிமையும் யாதோர் பகரமில்லாமல் ஜிமாஉக்குப்பின் பிரிந்தவளைத் தலாக்குடைய இத்தாத்தீர முன் என்மனைவியை என்னுடைய நிகாஹளவில் மீளுவித்துக்கொண்டேனெனும் சொல்லைக்கொண்டு மீளுவித்துக்கொள்ளுதல் ஹலாலாம்.

ஒரு தலாக்கு இரண்டு தலாக்குச்சொல்லப்பட்ட ஸ்திரியை றுஜூஉச்செய்ய முன் தனிமையாய்ப் பார்க்குதல் கொண்டாவது வேறெவ்வித சுகம்பாராட்டுதல் கொண்டாவது சுகம்பெறுதல் ஹறாம் அது தருசீறை வருத்துமாம்.

மூத்தலாக்கினாற் பிரிந்தவளை இத்தாத் தீர்ந்தபின் நிகாஹுசெய்யில் முன் சொன்ன தலாக்கில் எஞ்சியதைக்கொண்டு அவன் இவனளவில் மீண்டுகொள்ளலாம்.

(ஈலாவேனும் சத்தியத்தைப்பற்றியது.)

(64.) ஈலாஉ ஆவ தியாது?

தன்மனைவியோடு ஜிமாஉசெய்தலை விடுவதின்பேரில் செய்யும் சத்தியமே ஈலாவாம்.

ஜிமாஉசெய்யத்தக்க புருடன் தன்மனைவியைநோக்கி நானுன்னை ஜிமாஉசெய்யமாட்டேனென மொத்தமாய் அல்லது நான்கு மாசத்துக்கதிகமாய் அல்லது இன்னது இன்னவிதமாகுமட்டாய் என்று சத்தியஞ்செய்தது மூதீல் நான்குமாசங்கள் ஜிமா இல்லாமல் சென்றால் அவ்விஸ்திரி மணவாளனை ஜிமாஉக்கு அழைத்தலும் அல்லது தலாக்குச் சொல்லும்படி தேடுதலும் அவளுக்கு ஆமானதாம்.

இவ்விரண்டில் ஒன்றாவது செய்யாமல் புருஷன் மறுதலித்தால் காளி இடமறிவித்து அவரால் தலாக்கைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அல்லாவைக்கொண்டு சத்தியஞ்செய்தவனை மனைவி ஜிமாஉசெய்யத் தேடினதால் ஜிமாஉசெய்தாலும் தானாய் ஜிமாஉசெய்தலும் சத்தியத்தின் தெண்டம் விதியாகும்.

அச்சத்தியம் ஓர் வணக்கத்தைக் கொண்டதா யிருக்கில் அவ்வணக்கத்தைச் செய்தற்கும் சத்தியத்தின் தெண்டத்துக்குமிடையில் யாது கொடுக்கப்பட்டவனாவான்.

தலாக்கைக் கொளுகிச் சத்தியம் செய்தலால் தலாக்கு உண்டாகிவிடும். உருமையிடுதலு மப்படியேயாம்.



சத்தியத்தின் தெண்டமாவது நடுத்தரமான போசனத்தில் பத்து மிஸ்கீன்களுக்குப் போசனங்கொடுத்தலாம் அல்லது பத்து மிஸ்கீன்களுக்கு ஆடைகொடுத்தலாம் அல்லதோர் அடிமையை உருமையிடுதலாம்.

இம்மூன்று வகையில் ஓர் வகையாவது கொடுக்க ஏலாவிட்டால் மூன்று நோன்புபிடித்தல் வேண்டும்.

(ளிகாறெனும் நிதாத்தலைப்பற்றியது.)

(65.) ளிகாறாவ தியாது?

புருடன் தன் மஹ்றமியத்து ஆகிய இஸ்திரிகளுக்குத் தன் மனைவியை ஒப்பாக்கிவித்தலாம்.

அது தன் மனைவியின் அவயவங்களி லொன்றையாயினும் மஹ்றமிய்யத்து ஆகிய மாதர்களின் உறுப்புக்கு ஒப்பாக்கிவித்தலாம்.

புருஷன் தன் மனைவியை நோக்கி நீ அல்லது உன் தலை அல்லது உன்னில் அரைவாசி என்பேரில் என்தாயின் முதுகைப்போல் அல்லது தாயின் வயிற்றைப்போல் அல்லது என்தாயின் குறங்கைப்போல் அல்லது என் சகோதரியின் முதுகைப்போல் அல்லது வயிற்றைப்போல் அல்லது என்பிதாவின் சகோதரியின் முதுகைப்போல் அல்லது வயிற்றைப்போல் என்றும் இதற்கொப்பாகிய மொழிகளையும் பகர்தலாம் இதுவே ளிகாறுடைய சிகாவாம்.

ளிகாறுடைய சிகாவாகிய ஓர் வசனத்தையாவது சொன்னவன் நீ தலாக்கு அல்லது உன்னை தலாக்குச்சொல்லிப் போட்டேன் என்று சொல்லக்கூடிய நேரமளவு அதைச் சொல்லாவிட்டால் அவளைப்பிடித்துக்கொண்டவனாவான் அவன் ளிகாறுடைய கப்பாறத்துக்கொடுத்தல் வாஜிபாம்.

ளிகாறுசெய்தவன் ளிகாறுடைய கப்பாறத்துக்கொடுக்கும் வரைக்கும் அவ் விஸ்திரியுடன் புணர்தல் ஹறாம். ளிகாறு நடந்த நேரந்தொடுத்து கப்பாறத்துக் கொடுக்கும்வரைக்கும் வதுஉச்செய்தலு மப்படியே.

ளிகாறுடைய கப்பாறத்தாவது ஓர் அடிமையை உருமையிடுதலாம் அதற்கியல்பற்றவன் தொடர்பாய் இரண்டுமாசம் நோன்பு பிடித்தல் வேண்டும்.

இரண்டுமாசம் நோன்புபிடிக்கத் தாரணியற்றவர் அவ்வூரில் வசிப்பவர்களிற் பெரும்பான்மையோர் உணவாக்கிக்கொள்ளும் தானியத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர்முத்தாக அறுபது மிஸ்கீன்களுக்குக்கொடுத்தல்வேண்டும்.

ஓர்முத்தாவது இரண்டுஅகங்கையும் நிரப்பத்தக்க ஓர் அள்ளாம்.

(இத்தாவைப்பற்றியது.)

(66.) இத்தா எத்தனைவகைப்படும்.

தலாக்குடைய இத்தா வபாத்துடைய இத்தா என இருவகைப்படும்.

தலாக்குடைய இத்தாவாவது தன்மணவாளனால் தலாக்குப்பெற்றுக்கொண்ட ஸ்திரிமூன்று துப்பரவை வழிபார்த்தலாம்.

தன்னுடன் ஜிமாஉசெய்தபுருடன் தலாக்குச்சொன்னால் இத்தாஇருக்குதல் வாஜிபாம்.

மணவாளனும் மனைவியும் சிறுவர்களாயிருந்தாலும் அல்லது அவர்கள் பாலிகாயிருந்தாலும் அல்லது அவ்விருவரிலொருவர் பாலிகும்மற்றவர் பாலிகாகாதவராயுமிருந்தாலும் இத்தா இருக்குதல்வேண்டும் அதுவாஜிபாம்.

மணவாளனும் மனைவியும் ஜிமாஉநடத்தவில்லையாயின் இத்தா விதியாகாது.

ஹமலாயிராத தலாக்குச்சொல்லப்பட்ட ஸ்திரி ருதுகம்வருபவளாயின் மூன்றுதுப்பரவுகொண்டு இத்தாஇருக்குதல்வேண்டும்.

இத்தாவிதித்த ஸ்திரியின்ஹமல் உயிரோடுபிறந்தாலும் அவயவங்களுள்ளதாய் மரித்துப்பிறந்தாலும் ரூபமற்ற தசைக்கட்டியாய்ப்பிறந்தாலும்ஹமல்அடங்கலையும்பெறுதல் அச்சிசு இத்தாஉடையவனளவிற்சேர்க்கப்படுதலாகிய இரண்டுமேஹமலாயிருக்கையில் இத்தாவிதித்தஸ்திரியின் இத்தாத்தீர்தலின் ஷறுத்துக்களாம். ரூபமில்லாத தசைக்கட்டியாய்ப்பிறந்தசிசுவை மருத்துவஸ்திரிகள் ஆதமிதானென்று சாட்சிசொல்லுதல்வேண்டும்.

இரண்டு அல்லது அதற்கதிகச் சிசுக்களை ஹமலாயிருப்பவள் அச்சிசுக்களையெல்லாம் பெறுதல்வேண்டும்.

ஓர்ஸ்திரி தனக்குச்சந்தேகமானவதுஇனால்அல்லது சினாவினால் ஹமலாகி அந்தஹமலுடையகாலத்தில் ஹைறும்வராவிட்டால் தலாக்குச்சொன்னவனின் இத்தா அந்தஹமலைப்பெறுதலால்தீராது.

ஹமலாயிருக்கையில் ஹைறுவந்தால் அதுதொடுத்து மூன்றுதுப்பரவுஉண்டாகுதலால் இத்தாத்தீருமாம்.

ஹமலிற்குறைந்தது ஆறுமாசம்மிகுதந்து நான்குவருடமாம்.

மணவாளன் பிரிந்தநேரந்தொடுத்து நாலுவருடம்வரைக்கும் அம்மணவாளனை அந்தஹமல்சேரும்.



மணவாளன்பிரிந்தபின் வேறோர் ஆடவனுக்கு நிகாஹுநடந்து ஆறுமாசங்களின்பின் பிறந்தபிள்ளை முந்தியமணவாளனைச் சேராது.

புருடன்பிரிந்தபின் வேறொருவனுக்கு வாழ்க்கைப்படாத ஸ்திரிசினாவில் பெற்றதென்று ருஜுவாகாமலும் அவன் இகுறாறு சொல்லாமலுமிருந்தால் அவ்விஸ்திரி பெற்றபிள்ளை பிரிந்தபுருடனையே சேருமாம் அப்பிள்ளையின் சபைத்தொட்டு அவ்விஸ்திரியிடத்திற்கேட்பது ஜாயிசல்ல.

சுத்தையா யிருக்கையில் தலாக்குச்சொல்லப்பட்ட ஸ்திரிக்கு தலாக்குச்சொல்லிய ஒருநொடியின்பின் ஹைறுவந்தாலும் அது ஓர் துப்பரவாம் அடுத்தஇரண்டுதுப்பரவுண்டாகுதல்கொண்டு அவ்விஸ்திரியின் இத்தாத்தீரும்.

ஹைறலாயிருக்கையில் தலாக்குச்சொல்லப்பட்ட ஸ்திரிதலாக்குச்சொல்லியபின் நிரப்பமான மூன்று துப்பரவுகளைக்காணுதல் வேண்டும். நாலாம்ஹைறனிற்றொடுத்தலால் இத்தாத்தீரும்.

ஹைறு முந்தியதற்குப்பிந்தியது ஆரமாவதற்கும் முடிகுதலாவதற்கு மிடையில் வித்தியாசமில்லை.

ஒன்றுக்கொன்று தொடுத்துவருவதற்கு உதாரணமாவது ஓரிரவும்பகலும் ஹைறுகண்டு பதினைந்துநாட் சுத்தையாயிருத்தலாம். துப்பரவின்கடைசியில் தலாக்குச்சொல்லப்பட்டால் முப்பத்திரண்டு நாளும் இரண்டுமாத்திரையும் செல்லுதலால் இத்தாதீருமாம்.

ஹைறின்கடைசியில் தலாக்குச்சொல்லப்பட்டால் நாற்பத்தேழுநாட்களும் இரண்டுமாத்திரையும் செல்லுதலால் இத்தாத்தீருமாம்.

ஒன்றுக்கொன்று ஆரமாவதற்குதாரணமாவது ஹைறின் அதிகமாகிய 15 பதினைந்துநாட்கள் ருதுகமாகவும் வருடக்கணக்கில் சுத்தையாகவு மிருத்தலாம். அவ்விஸ்திரிக்கு எவ்வாறாயினும் மூன்று துப்பரவுசெல்லுதலால் இத்தாத்தீருமாம்.

ஹைறுவராத சிறுமியாயிருந்தாலும் ஹைறைவிட்டு ஆசைமுறிந்தஸ்திரியாயிருந்தாலும் மூன்றுமாசம் இத்தாயிருத்தல்வேண்டும்.

வியாதிக்காகவும் பாலூட்டுதற்காகவும் அல்லதுயாதேனும் சபபில்லாமலும் ஹைறுவராமலிருப்பவள் ஹைறைவிட்டு ஆசைமுறியும் வயதுவரும்வரையில் சபுறுசெய்துபின்பு மூன்றுமாசம் சென்றால் இத்தாத்தீருமாம்.

பஸ்கு குல்உ ஆகியவைகளின் இத்தாவும் தலாக்குடைய இத்தாவைப்போலாம்.

(67.) வுபாத்துடைய இத்தா வாஜிபது.

மணவாளன் மரணித்தஸ்திரி ஹைலுவருபவளாயிருந்தாலும் சிறுவியாயிருந்தாலும் றஜஇய்யாகிய இத்தாத்தீர்வதற்கு முன்னுயிருந்தாலும் நான்குமாசங்களும் பத்துநாட்களும் இத்தா இருக்குதலாம்.

புருஷன்மரித்தஸ்திரி நான்குமாசங்களும் 10-பத்துநாட்களும் இத்தா இருக்குதல் வாஜிபு அவ்விஸ்திரி துக்கக்காரியாகவும் இருத்தல்வாஜிபாம்.

நெசவுக்கு முன்னுவதுபின்னுவது சாயங்காச்சப்பட்ட ஆடை தரிக்காமையும் மணம்பூசாதிருப்பதும்பகலில் பொன் வெள்ளியாலாகியநகைகள் மோதிரமாதியவைகளை ஆடைக்குள்ளாயினும் அணியாதிருத்தலும் பொன் வெள்ளிக்கிலிட்டாகியவைகள் முத்துப்பவளம் அகீகுமுதலிய இரத்தினங்களால் செய்யப்பட்ட அணிஅணியாமையும் செம்பு பித்தளையாகியவைகளை அணிபவர்களாயின் அவ்வணிகளையுமணியாமையும் சுறுமா இடாமையும் இத்தா இருப்பவளுக்குவாஜிபாம் யாதேனும் ளூறத்துக்குப் பாவித்துக்கொள்ளலாம்.

இத்தா இருப்பவள் தலையில்எண்ணெய் பூசாமைவாஜிபாம் உடம்பிற் பூசிக்கொள்ளலாம்.

ஊத்தைநகம் உரோமமாகியவைகளை நீக்குதலால் துப்பரவாயிருத்தல் ஹலாலாகும் தாம்பூலம்அருந்தலாம்.

கண்வலிமுதலியவைகளுக்காய் இராவில்சுறுமாப்போட்டும் பகலிலும் அப்படியேயிருக்கலாம்.

முத்தலாக்கு பஸ்குறஜஇ ஆகியவைகளால் பிரிந்தவள்மேற்குறித்தவித துக்கமாயிருத்தல் சுன்னத்தாம்.

றஜஇய்யத்தினுற் பிரிந்தவள்மேற்குறித்த அலங்காரப்பால் மணவாளன் மீளுவித்துக்கொள்ளுவானென ஆசைவைத்தால் அலங்கரித்தல் சுன்னத்தாம்.

வுபாத்துமுத்தலாக்கு பஸ்கு என்பவைகளைக்கொண்டு இத்தா இருப்பவள் பிரியும்போதிருந்த ஸ்தானத்தைப் பூண்டுகொள்ளுதல்வேண்டும்.

இத்தாத்தீருமளவும் குறித்தஸ்திரிகள் நூல்விற்க அரிசிகறிவாங்க விறகுபுறக்க பகலிற்புறப்படலாம் இராவின்முன்னேரத்திலாகிலும் புறப்படலாகாது.



கொட்டைநூற்க அல்லதுபேசிக்கொண்டிருக்க அயல்வீட்டுக்குப்போக்குவரவுசெய்யலாம்.தன்னை மருவுதலாக்குபவளில்லாமையுமழுக்கத்துக்கதிகப்படாமையும் தன்வீட்டிலேயேவந்து இராத்தரித்தலும் இராவிற்புறப்படுதலின் ஷறுத்துக்களாம்.

எவ்வகையினுலாயினும்பிரிந்தவன் பிரியப்பட்டவளிருக்கும் ஸ்தானத்தில் அவ்விஸ்திரியுடன் கூடியிருப்பதாகாததுமன்றி அவ்விஸ்தானத்தில் நுழைதலுமாகாது.

றஜஇயானவனும் குருடனும் அப்படியேயாம்.

அந்தஸ்தானத்தில் அப்பெண்ணின் மஹ்றம் அல்லது அவனுடைய மஹ்றமிருக்குந் தருணத்திற் போகலாம் அந்தஸ்தானத்தில்வந்து நுழைந்தால்விலக்குதல் அந்த ஸ்திரியின்பேரில் வாஜிபாம்.

மணவாளன் பிரியும்போது ஸ்திரிசபரிலிருந்தாலும் தன்வீடல்லாத்ததில் அல்லது வாடைவீடல்லாத்ததி லிருந்தாலும் தன் சொந்தமனையளவில் மீளுதல் வாஜிபாம்.

கோட்டிகொள்ளும்ஜின்வெய்தான் இருக்கும்ஸ்தானம்பாம்புதேள்முதலிய நோவினை செய்பவைகளிருக்குந் தானமாகிய வீட்டில் தரித்தல்வாஜிபாகாது.

ஹைற்றத்தல்லாத பெண்களுக்கு வுபாத்துடைய இத்தா இரண்டுமாசமும் ஐந்துநாளுமாம் தலாக்குடைய இத்தா இரண்டுதுப்பரவைவழிபார்த்தலாம்.

குலஸ்கிரியும் வெள்ளாட்டியும் ஹாமலாயிருந்தால் வுபாத்துடைய இத்தாவும் தலாக்குடைய இத்தாவும் பிள்ளைப்பேறுகொண்டே தீருமாம்.அச்சிசுஅவயவமில்லாத தசைக்கட்டியாயிருந்தாலும் அப்படியே. இரத்தக்கட்டிவிழுதலால் இத்தாத்தீராது.

இத்தாத்தீரத்தக்க காலஞ்செல்லாமல் இத்தாத்தீர்ந்துவிட்டதென்றுவாதிக்கும் ஸ்திரியின்சொல்லை இடம்பாடிருந்தால் அதுவழுத்துக்கு மாறுயிருந்தாலும் ஒப்புக்கொள்ளலாம் அவ்விஸ்திரியை இத்தாத்தீர்ந்ததின்பேரில். சத்தியஞ்செய்வித்தல்வேண்டும்.

ஓர்ஸ்திரி ஓராடவனுக்குத்தன்னை நிகாஹு செய்துகொடுக்கச் சம்மதியாயிருந்து நிகாஹு நடந்தபின் முந்தினபுருடனுடைய இத்தாத் தீரவில்லையெனவாதித்தால் ஒப்புக்கொள்ளக்கூடாது.

றஜஇய்யத்தாகிய தலாக்கானஸ்திரியை இத்தாவுக்குள் மீளுவித்துக்கொள்ளாதபுருடன் கலந்துறவாடுதலால் இத்தா முறிந்துவிடும் கலந்துறவாடுங்காலம் வருடங்களாகநீண்டாலும் இத்தாத்தீராது.

மீளப்படாதென்ற நாட்டங்கொண்டு உறவைவிட்டு நீங்கினால் அந்நேரந்தொடுத்துச்சென்றநாளின்பேரிலெடுத்துக்கொள்ளுதல்வேண்டும்.

துப்பரவுகள் அல்லது மாசங்கள்சென்றபின் றஜஇய்யத்துச்செய்யக்கூடாது.

மேலே 30-ம் இலக்கவினாவின் விடையிற்சொல்லிய இத்தா றஜஇய்யத்தான இத்தாவாம்.

(இஸ்திபுறுவெனுங் கர்ப்பசோதனையைப்பற்றியது.)

(68.) இஸ்திபுறுவாவதியாது?

நாயகன் தன்வெள்ளாட்டியைத்தான் உடையதாக்கிக்கொள்ளுதற்காய் அல்லதுபிறருக்குவிவாகஞ்செய்துகொடுப்பதற்காய் அவ்விஸ்திரி கர்ப்பனியோ கர்ப்பனியல்லவோ வென்றறிய ஞுதக்ம்உண்டாகும்ஸ்திரிக்குஷர்ஹைஜுஉண்டாகும் வரைக்கும் சிறுவிக்கும் ஞுதக்த்தைவிட்டு ஆசைமுறிந்த ஸ்திரிக்கும் ஒருமாசமும் வழிபார்த்தலாம்.

நாயகன் தான் சுதும்பாராட்ட அல்லது பிறனுக்குக் கலியாணம் முடித்துக்கொடுக்கத்தான் உடையதாக்கிக்கொண்ட நாள்தொடுத்துக் குறித்தகாலவரைக்கும்இஸ்திபுறுப் பார்க்குதல்வாஜிபாம்.

நாயகனால் வதுஉச் செய்யப்பட்ட ஸ்திரியை இஸ்திபுறுப் பார்க்க முன்கலியாணம் முடித்துக்கொடுத்தல் ஹறாம்.

பிள்ளைப்பேறுகொண்டு இத்தா இருக்காத விபசாரத்தால் ஹமலான ஸ்திரிக்கும் சிறைவாரப்பட்ட ஸ்திரிக்கும் அல்லது செய்துக்கு ஹமலாகி அவனுடைய விரிப்பு உருமை அல்லது மரணத்தினால் நீங்கியிருப்பவளுக்கும் அந்த ஹமலை பெறும்வரைக்கும் இஸ்திபுறுப்பார்த்தல் வேண்டும்.

சிறைவாரப்பட்ட வெள்ளாட்டியில் இஸ்திபுறுப்பார்க்க முன் ஜிமாஉத்தவிர மற்ற எவ்வித இணக்கமுஞ்செய்யலாம்.

சிறைவரப்படாத வெள்ளாட்டியில் இஸ்திபுறுவுக்கு முன் இணக்கஞ் செய்தலாகாது அது ஹறாமாம்.

(நபகா கிஸ்வத்து முதலியதைப்பற்றியது.)

(69.) ஓர் ஆடவனால் நபகா கிஸ்வத்துப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களியாவர்?

அவ்வாடவனின் மனைவியும் பெற்றாரும் புலுகாகாத புத்திரர்களுமாம்.

மனைவிக்குக் கொடுக்கப்படும் நபகா சீமான்களின் நபகா நடுத்தரமானவர்களின் நபகா தரித்திரர்களின் நபகா என மூன்று வகைப்படும்.



சீமான்களின் நபகாவாவது அவ்விஸ்திரி வாசம்பண்ணும் பட்டணம் அல்லது நாட்டில் பெரும்பாலாராற் பாவிக்கப்படும் போசனதானியத்தில் இரண்டு சிறங்கை ஒவ்வோர்நாளும் காலையில் கொடுத்தலாம்.

நடுத்தரமானவர்களின் நபகாவாவது, அவ்விஸ்திரி வாசம்பண்ணும் பட்டணம் அல்லது நாட்டில் பெரும்பாலாராற் பாவிக்கப்படும் போசனதானியத்தில் ஒன்றரை முத்து ஒவ்வோர்நாட் காலையிலுங் கொடுத்தலாம்.

தரித்தார்களின் நபகாவாவது அவ்விஸ்திரி வாசம்பண்ணும் பட்டணம் அல்லது நாட்டில் பெரும்பாலாராற் பாவிக்கப்படும் போசனதானியத்தில் ஓர் முத்து ஒவ்வோர்நாட் காலையிலும் கொடுத்தலாம்.

மேற்குறித்த போசனதானியம் மாத்திரமல்ல அதைச் சமைத்துக் கொள்ளுதற்குத்தக்க விறகு ஜலம் வழக்கப்படி கறி மசாலா அச்சாறு ஊறுகாய் ஈத்தம்பழம் பால் தயிராதியவைகள் பாவிக்கிறஊரில் அப்பதார்த்தங்களும் அவ்விஸ்திரியின் சொந்தவழக்கப்படி நெய் இறச்சி ஆகியவைகளும் கொடுத்தல் வாஜிபாம்.

ஸ்திரிகளின் பாவிப்புக்குத்தக்க உரல் உலக்கை முதலிய மடைப்பள்ளிக்குரிய பாண்டங்கள் ஜலம் வைக்க அள்ளக் கரகங்கள்பாய் விரிப்பு முதலிய வீட்டுத் தளபாடங்கள சரீரத்தைத் துப்பரவாக்குதற்காகிய எண்ணெய் சீப்பு இலந்தை இலை சவுக்காரம்முதலியவைகளும் அவ்வப் பட்டணவாசிகளின் வழக்கம்போல் அரப்பு சீயாக்காய் ஆதியவைகளும் கமுக்கட்டு வீச்சத்தையும் வெயர்வை நாற்றத்தையும் நீக்கத்தக்க வாசனைத் திரவியங்களுங் கொடுத்தல் வேண்டும்.

கிஸ்வத்தென்பது வஸ்திரமாம், அது மனைவிக்கு ஒவ்வோர் வருடத்தில் இரண்டு சேலையும் சட்டை யணிபவளுக்குச் சட்டையும் மாரிகாலத்திலும் கூதல்காலத்திலும் போர்த்துக்கொள்ளத் துப்பட்டியும் பாதரட்சை யணிபவளுக்குப் பாதரட்சையும் கொடுத்தல் வாஜிபாம். இரவில் சயனத்துக்காய் அணையும் ஆடையும் அவ்விஸ்திரிக்கு நேரிட்ட ஸ்நானத்துக்கு ஜலமும் கொடுத்தல்வாஜிபாம்.

மருந்தணியும் சுறுமாவும் கொடுத்தல் வாஜிபில்லை. பிரியமானால் கொடுக்கலாம்.

மனைவிக்கு யாதோர் நோயுமில்லாதபோதில் புணர்ச்சிக்கும் மற்றும் எவ்வகையாகிய சுகம் பாராட்டுதலுக்கும் நாயகன் நினைந்த தானத்துக்கு அவன் அழைத்துக்கொண்டுபோக இடங்கொடு [illegible]

ஜிமாஉசெய்தலுக் கிடம்பாடில்லாத சிறுவிக்கு நபகாக் கிடைக்காது.

ஸ்திரிபுருடன் போகஞ்செய்தலுக்கு இடங்கொடுத்தல் ஷுறுத்தேயன்றிப் போகஞ்செய்தல் ஷுறுத்தல்ல.

ஸ்திரிநாயகனோடு புணர்தலுக்குத்தக்கவளாயிருந்து மறுதலித்தாலும் நாயகனழைத்த ஸ்தானத்துக்குச் செல்லாமல் மறுதலித்தாலும் நாயகனோடுபிணங்கினாலும் அந்தநாளின் நபகாவும் அக்காலத்திற் கொடுக்கவேண்டிய ஆடையுங்கிடைக்காது.

ஆடவனழைத்தஸ்தலத்திற்செல்ல யாதோர் தங்கடம் நோவினை உண்டாகாதிருத்தல்வேண்டும்.

றஜ்இய்யத்தாகிய தலாக்குப்பெற்றுக்கொண்ட ஸ்திரிக்கும்முத்தலாக்கினால் அல்லதுபஸ்கினால் அல்லதுகுல்இனால் பிரிந்தகற்பேஸ்திரியாகிய மனைவிக்கும் இத்தாத்தீரும்வரைக்கும் நபகாக்கொடுத்தல்வேண்டும் அது அவ்விஸ்திரி பிணங்காதிருந்தாலாம்.

ஆடவன்மரித்தலால் பிரிந்தகற்பேஸ்திரிக்கும் ஷுபுகத்துடைய வதினால் இத்தாயிருப்பவளுக்கும் நபகாக்கொடுக்க வேண்டியதில்லை.

ஸ்திரிக்கு ஷரஇற்கூறியபடி நபகாவும் கிஸ்வத்தும் வீடுங்கொடுத்து நடப்பிக்கும் மணவாளன் தன்மனைவியை வீட்டைவிட்டுப் புறப்படாமற் றடுக்கலாம்.

ஸ்திரிதன் மனைவியைவிட்டுச் சில காரியத்துக்காகப்புறப்படலாம். அது வீடுஇடிந்துபோக நேரிட்டபோதிலும் தன்நபுசின்பேரிலும் திரவியத்தின்பேரிலும் திகிலடைந்தபோதிலும் தன்னுடையஹக்கை காளியிடம் சொல்லிப்பெற்றுக்கொள்ளுதற்காகவும் மணவாளன் தரித்திரனாகியகாலத்தில் [illegible]யாபாம் சுஆல் ஆகியவைகள்செய்து காலங்களித்தற்காகவும் மணவாளன்பிரையாணத்திலிருக்கையில் வழக்கப்படி சாவுவாழ்வு நேரிட்டாலும் தன் மனையைவிட்டுப் புறப்படுதலாம்.

பிரையாணியாகிய மணவாளனின்மனைவி மணவாளன்ஹாளிருயிருக்கையில்விலக்கான் அல்லது பிணக்கமுண்டாகாது என்றறிந்தால் வழக்கப்படி சாவு வாழ்வுக்குப்போகலாம். அதனால் அவ்விஸ்திரியின் நபகாவிழாது.

மணவாளனுடன் அவ்விஸ்திரியின் தேவைக்காக அல்லது அவனின்தேவைக்காக அவனின்உத்தரவுகொண்டு பிரையாணஞ்செய்தல் அவ்விஸ்திரியின் நபகாவைவிலக்காது.



மணவாளன் பறுலுனாகிய இல்மைஸ்திரிக்குப்படித்துக் கொடுக்காவிட்டால் அதைப்படிப்பதற்காய்ப் போகுதலை மணவாளன் விலக்கலாகாது.

காயிபாகிய மணவாளனின்மனைவி காளியிடம் அவளுக்குஅவன் கொடுக்கவேண்டிய நபகாவை இவ்வளவென்று நியமிக்கும்படிவேண்டிக்கொண்டால் அவனுடையநிகாஹு தரிபட்டிருப்பதையும் அவன்வீட்டைவிட்டு வெளிக்கிடாதிருப்பதையும் நன்றாய் விளங்கியறிந்து அம்மணவாளனிடம் யாதேனுமொன்றும் பெற்றுக்கொள்ளவில்லையென்றும் நபகாக்கொடுப்பதற்கு அவன் பாத்தியமுடையவன்றானென்றும் அவ்விஸ்திரியிடம் சத்தியங்கேட்டு அவனிடம்யாதொன்றும்பெற்றுக்கொள்ளவில்லையேயாயின் அவ்விஸ்திரிக்குத்தரித்திரனின் நபகாக்கொடுக்கும்படி நியமித்தல்வேண்டும். சீமானென்று றுஜூவானால் சீமான்களுடைய நபகாக்கொடுக்கும்படி நியமித்தல்வேண்டும்.

தம்யீசெனும் பருவம்வரும் வரைக்கும் மதலைகளை வரைக்கும் உருத்தாளர்களாவன, அம்மதலையின் தகப்பனல்லாத மணவாளனுக்கு வாழ்க்கைப்படாத மாதாவும் பின்புதாயின்தாயும் பின்பு பிதாவும் பின்புபிதாவின் தாய்மார்களும் பின்பு அம்மதலையின் சகோதரியும் பின்பு தாயின்சகோதரியும் பின்புசகோதரியின் புத்திரியும் பின்புசகோதரனின்புத்திரியும் பின்புமாமியுமாம்.

தம்யீசாகிய பிள்ளையின்பெற்றோர் அவர்களின் விவாகத்தைவிட்டுப் பிரிந்துகொண்டால் அவ்விருவர்களில் அம்மதலை விரும்பிக்கொள்பவரிடத்தில் இருக்குதல்வேண்டும்.

தம்யீசாகிய புத்திரன் தாயிடமிருப்பதை விரும்பினால் தாயிடம் இரவிலும் தகப்பனிடம்பகலிலும் இருக்குதல்வேண்டும்.

தம்யீசாகிய புத்திரி தன்தாயிட மிருப்பதைத் தெரிந்துகொண்டால் அவ்விஸ்திரியிடமே எக்காலமும் இருக்கலாம். வழக்கப்படி தகப்பன்போய்ப் பார்த்துக்கொள்ளுதல்வேண்டும் அவனிடமேயிருக்கவேண்டுமெனத் தேடுதலாகாது.

தம்யீசாகிய சிறுவர்கள் பெற்றோராகிய இருவரி லொருவரிடத்திலு மிருப்பதற்குப் பிரியப்படாவிட்டால் தாயிட மிருப்பதே எற்றமாம்.

தான்பெற்றமதலைக்குப்பெற்றவுடன் கொடுக்கும் சீப்புப்பால் ஊட்டுதல் சொற்பநேரத்துக்கென்றும் மூன்று நாட்களுக்கென்றும்எழுநாட்களுக்கென்றும் சொல்லப்பட்டன. பின்பு தாயை அல்லது பரஸ்திரியாகிய வொருத்தியை யன்றிப் பாலூட்டுதற் கொருவரும் காணப்படாவிட்டால் காணப்பட்டவளே பாலூட்டுதல் வாஜிபாம்.

அம்மதலைக்குப்பால் ஊட்டுதலின் கூலி அம்மதலைக்கு நபகாக் கொடுக்குநல் வாஜிபானவர்கள் கொடுத்தல்வேண்டும்.

தாயையும் பரஸ்திரியையும் பாலூட்டத்தக்க நிலைமையிலிருக்கக்கண்டால் தாயைமாத்திரம் பாலூட்டும்படி வம்பிக்கக் கூடாது அவள் அம்மதலையின் பிதாவின்விவாகத்துக் குள்ளிருந்தாலும் இல்லாவிட்டாலுமாம்.

பெற்றோராகிய இருவரும் சம்மதித்து இரண்டுவருடம் நிரம்பாத மதலையை பால்குடிக்காமல் மாற்றவேண்டுமேயன்றி ஒருவரின்பிரியத்துக்கு மாற்றுதலாகாது.

இரண்டு வயது நிரம்பியபின் இருவரும் ஒன்றித்தும் தனித்தனியாகவும் பால்குடிக்காமல் மாற்றலாம்.

யாதோர்தங்கடமு மில்லாவிட்டால் இரண்டுவருடத்துக் கதிக காலம் பால்குடிக்க விடலாம்

ஓர்ஆடவன் தனக்கும் தன்மனைவிக்கும் தன் புத்திரர்களாகிய இளைஞர்களுக்கும் தலைசுற்றியத்துக்கும் பயலுக்கும் வெள்ளாட்டிக்கும் தன்மனைவியின் வேலைக் காரிகளுக்கும் ஓர்இரவுபகலுக்குக் கண்டு மிஞ்சியதை தன்தாய் தகப்பன் பாட்டன் பாட்டி புத்திரர் புத்திரரின் புத்திரர்களுக்கு அவர்களோ தரித்திராயிருந்தால் அன்னவஸ்திரங் கொடுத்தல் வாஜிபாம்.

ஆடவன்மாத்திரமல்ல பெண்களும் கொடுத்தல்வேண்டும்.

அவர்களோ கறுபிக்காபிராக அல்லது முறுதத்தாக அல்லது சாணிமுகுசினகா இருந்தால் வாஜிபாகாது. தொழுகைவிட்டவர்களு மப்படியே.

தாய் பிள்ளைகளுக்குக்கொடுக்கவேண்டிய வாஜிபாகிய நபகா தப்பிவிடுதலால் அவன்கடனாளியாகான் அவனே காயிபாயிருந்தகாலத்தில் காளி கடன்வாங்கிக் கொடுத்திருந்தாலும் அவன்கொடுக்கமாட்டேனென்று மறுதலித்ததற்காகக் கடன்வாங்கிக்கொடுத்திருந்தாலும் அத்தொகைக்குக் கடனாளியாவான்.

ஒருவனுக்குத் தாயும் தகப்பனுமிருந்தால் அவனுடைய நபகா தகப்பன்பேரிலாம் தகப்பனும் மகனுமிருந்தால் அவனுடைய நபகா மகன்பேரிலாம்.

ஒருவனுக்குத் தாய்தகப்பன் புத்திரர் ஆகியவர்களிருந்தால் அவர்களடங்கலுக்குந் தக்கபடி நபகாக்கொடுக்க தாரணிபெறாவிட்டால் தனக்குமுந்தியும் பின்பு மனைவிக்கும் பின்பு அடுத்தஅடுத்தவர்களுக்கும் வீதப்படி கொடுத்தல்வேண்டும்.



அடிமைகளுக் கொவ்வோர்நாளும்போசனமும்தக்கபடி ஆடையுங்கொடுத்தல் உடையவன்பேரில் வாஜிபாம்.

மிகுதமாய்ப் புசிக்கும் அடிமையா யிருந்தால் அவ்வூரில்அவனுக்கொப்பானவனுக்கு வழக்கமாய்க்கொடுக்கப்படுமட்டுக்குப்போசனங் கொடுத்தல்வேண்டும்.

அவுறத்தைமாத்திரம் மறைக்கக்கூடிய ஆடை கொடுக்கப்படாது அதற்கவன் பொருந்திக்கொண்டாலுமாம்.

அடிமையின் வியாதிக்குமருந்தும் வயித்தியன்கூலியும் கொடுத்தல்வேண்டும்.

அடிமையின் சம்பாத்தியங்களையெல்லாம் கிரயங்கொண்டவனே எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். செய்யிது தான்புசிக்கும் இனியபதார்த்தங்களிலும் மிருதுவாகிய ஆடையுங்கொடுத்தல் சுன்னத்தாம் அடிமையைக் கூடவேவைத்துப்புசிப்பது ஏற்றமாம்.

முகாதபாகிய அடிமைகளுக்கு நபகா இஸ்வத்துக் கொடுத்தல் வாஜிபாகாது.

சங்கைகொடுக்கப்பட்ட ஹயவான்களுக்குப் புல்போடுதலும் ஜலம்புகட்டுதலும் அதுதானாக மேய்ந்துகொள்ளுதல் போதுமாகாவிட்டால் வாஜிபாம்.

தானாய் மேய்ந்து கொள்ளுதல் போதுமாகுமேயாயின் மேய்ச்சலுக்கு விடுதலேபோதுமாம் அதுபோதுமாகாவிட்டால் நிரப்பமாக்குதல் வாஜிபாம்.

கோழி தாராமுதலிய வளர்க்கப்படும் பட்சிகளும் அப்படியேயாம்.

ஒருவன் தன்னுடைய ஆடு, மாடு, கோழி, முதலியவைகளுக்குக்குறித்ததுபோல் நடப்பிக்காவிட்டால் அவனுடைய ஆட்சியைவிட்டு நீக்குதலின்பேரில் கண்டிக்கப்படும் அல்லது புசிக்க ஆமாகிய மிருகத்தை அறுக்கும்படி வம்பிக்கப்படும் அதைவிட்டு உடையவன் விலகிக்கொண்டால் ஹாகிம்குறித்த காரியத்தில் அவனுக்கு நயமானவதைச்செய்வார் காகம், பருந்து, பாம்பு, எலி, கடிநாய்முதலிய சங்கைகொடுக்கப்படாத ஹயவான்களுக்குப் போசனங்கொடுத்தல் வாஜிபாகாது.

மாடு, ஆடு, ஆகியவைகளில் அதிலும் அதின் குட்டியிலும் தங்கடம் வருந்தாதமட்டுக்குப்பால்கறக்கலாம். இரண்டால் ஒன்றைத் தங்கடம் வருத்தத்தக்க கறவை ஹறாம்.

(பஸ்கைப்பற்றியது.)

(70.) பஸ்கா வதியாது?

மணவாளனைவிட்டு மனைவிபிரிந்து சொன்னுதலே நிகாஹின் பஸ்காம்.

மனைவியின் முட்டுப்பாட்டைத் தட்டிக் கொள்ளுதற்காகவே நிகாஹைப் பஸ்குசெய்தல் ஷறஇல் ஏர்ப்படுத்தப்பட்டதாயிற்று.

தவணைவைக்கப்படாத மகரை வழிப்பட்டவளாய் ஜிமாஉசெய்யமுன் முகல்லபத்தாகியமனைவி மணவாளனிடம் கேட்டபோது கொடுக்க இயல்பற்றவன் குடியிருக்க வீடுகொடுக்க இயல்பற்றவன் ஆடையில்தாழ்ந்ததுகொடுக்க இயல்பற்றவன் நபகாவில்குறைந்ததுகொடுக்க இயல்பற்றவன் ஆகியபுருடர்களின் நிகாஹைப் பஸ்குசெய்யலாம்.

அகில் புலூகுஇல்லாத சிறுவியின் நிகாஹைவலிகாரன் பஸ்குசெய்தல் ஜாயிசல்ல.

தரித்திரமற்ற ஹாளிருனவன் தன்மனைவிக்கு நபகாக்கொடுக்காவிட்டால் காளியிடம் சாட்சியால் அல்லது அவனின் விண்ணப்பத்தால் முகிசிறென்று றுஜூவாகமுன் பஸ்குசெய்தலாகாது.

தன்மனைவிக்கு நபகாக்கொடுக்காத காயிபானவனின் நிகாஹை அவனின்சமாசார மிவ்வாறென் றறியப்பட்டால் பஸ்கு செய்தலாகாது அவனின் சமாசாரமோ அறியப்படாமலும் ஹாளிருகிய திரவியமுமில்லாவிட்டால் பஸ்குசெய்யலாம்.

பஸ்குசெய்தலை ஆமாக்கிவிக்கும் எல்லாஷறுத்துக்களும் நிரம்பியபின் மணவாளன் தவணைகேட்காவிட்டாலும் காளி அல்லது முஹக்கம் மூன்றுநாள் தவணைகொடுத்து நான்காம்நாளின் மத்தியில் பஸ்குசெய்தல்வேண்டும். அல்லது காளியிடம்உத்தரவுபெற்று அவ்விஸ்திரிதானே பஸ்குசெய்துகொள்ளலாம் இவ்வாறு பஸ்குசெய்தல் மகரல்லாத்ததுகொண்டு முகுசிருனவனிலும் ஹாளிருனவனிலுமாம்.

நான்காம்நாளில் பஸ்குக்குமுன் அன்றையின் நபகாவைக்கொண்டுவந்து ஒப்பித்துவிட்டால் பஸ்குசெய்தலாகாது. இவ்வாறு செய்தவன் முன் கொடுக்கவேண்டிய நபகாவுக்கெல்லாம் கடனாளியாவான் பாக்கியஸ்தனுகியபோதில் அறவிட்டுக்கொள்ளலாம்.

காயிபானவனிலும் மகர்க் கருமத்தையும் பற்றியதில் காளிதவணை கொடுக்கமாட்டார்.

பிறராற் கொடுக்கப்படும் நபகாவை கபூல்செய்தல் ஸ்திரிக்கு வாஜிபாகாது.



மணவாளனின் வறுமைத்தனத்தைக்கொண்டு பொருந்தியகாலத்திலும் பஸ்குக்குத் தவணைபோட்டிருக்குங்காலத்திலும் பகல்காலத்தில் நபகாவைக்கேட்கவும் சம்பாதிக்கவும் வீட்டைவிட்டு வெளிக்கிடலாம். அவ்விஸ்திருக்கு அவ்வீட்டிற்றானே தொழிற்செய்துகொள்ளுதற் கிடமிருந்தாலும் அல்லது பாக்கிய ஸ்திரியாயிருந்தாலும் அப்படியேயாம் அம்மணவாளன் விலக்கலாகாது.

விவாகஞ்செய்து ஜிமாஉக்கு இடம்பாடாக்கிக் கொடுக்க முன் புருடன் காயிபானல் புகராக்களுடைய ளாகிறு கவாமின்படி பஸ்கு செய்தலாகாது.

மாலிகு மதுஹபில் இடம்பாடாக்கிக் கொடுத்தவனும் கொடுக்காதவனும் சரியாம்.

காளி அல்லது முஹக்கம் பஸ்குசெய்யும் விதமாவது இன்னனுக்கும் இன்னளுக்கு மிடையிலுள்ள நிகாஹைப் பிரித்தேன் என்பதாம்.

மனைவி தானே பஸ்குசெய்துகொள்ளும் விதமாவது எனக்கும் என் மணவாளனுக்கு மிடையிலுள்ள நிகாஹைப் பஸ்குசெய்தேனென்று சொல்லுதலாம்.

(லிஆனைப்பற்றியது.)

லிஆனவது புருடன் தன் மனைவி சினைசெய்தாளென்று பட்டசொன்னல் காளியின் சமுகத்தில் இருவரும் லஅன கனப எனும் லபுலுக்களைச் சேர்த்துச் சத்தியஞ்செய்தலாம்.

லிஆனுடைய சிப்த்தாவது காளி மணவாளனை லிஆன் செய்யும்படி ஏவியபோதில் மணவாளன் நான் ஷாகிதுசொல்லுகிறேன் அல்லாவினனை சினைகொண்டு அவளை பேச்செறிந்ததில் திடனக நான் நிஜம்சொன்னவனென்று நாலுதரம்சொல்லி ஐந்தாந்தரம் சினைகொண்டு அவளைப்பேச்செறிந்ததில் நான்பொய்சொன்னவர்களில்நின்று மாகிவிட்டால் அல்லாவுடைய லகுனத் தென்பேரில் உண்டாவதாக என்று ஒவ்வோர்தரங்களிலும் அவ்விஸ்திரியளவில் கைகாட்டிச் சயிக்கினைசெய்து சொல்லுதலும் பின்பு மனைவிநான் ஷாகிதுசொல்லுகிறேன் அல்லாவினனை சினைக்கொண்டு என்னை அவன் பேச்செறிந்ததில் திடனக அவன் பொய்சொன்னவன் என்று நாலுதரம்சொல்லி ஐந்தாந்தரம் சினைக்கொண்டு என்னை அவன்பேச்செறிந்ததில் அவன் உண்மைசொன்னவனுகிவிட்டால் அல்லாவுடைய கோபம் என்பேரிலுண்டாவதாகவும் என்று ஒவ்வோர்தரமும் அவனளவில் கைகாட்டிச் சயிக்கினைசெய்து சொல்லுதல்வேண்டும் அதுவே லிஆனுடைசிபத்தாம்.

விஆனுடைய சிபத்தில் சன்னத்தாகிய விதமாவது காளிஅவ்வி ருவரையும் ஒருவருக்கொருவர் முகமுகமாய்நிறுத்தி புருடனை விஆன் கூறும்படி சொல்லியபின் மனைவியை விஆன் கூறும்படி சொல்லுதலாம்.

மேலேசொல்லியபடி இருவரும் விஆன் கூறிவிட்டால் ஹாகிம் அவ்விருவருக்கு மிடையிலுள்ள நிகாஹைப் பிரித்துவிடவேண்டும். அதனால் அது பாயின் தலாக்காகிவிடும். அவ்வாறு பிரிக்குமுன்னுந் இருவரும் பொருந்தாவிட்டாலுமாம்.

நிகாஹைப்பற்றி அலட்சியஞ்செய்தால் இருவரும் கினுவுக்குப் பக ரமாகச் சிகவைச் சொல்லிக்கொள்ளுவார்கள்.

நான்காம் அதிகாரம்

கிதாபுன் நிகாஹி

முற்றிற்று.

# ஐந்தாம் அதிகாரம்.

## கிதாபுல் ஜுருஹி.

### அல்பாபுல் அவ்வலு பீபயானில் ஜுருஹி.

(முதலாம் பாபு ஜறஹையும் அதைச்சார்ந்தவைகளையும் பற்றியது.)

(1.) கிசாசு எனும் பழிவாங்குதல் எக்கருமத்தினு லுண்டாகும்?

பெரும்பாலும் உயிர்ச்சேதத்தை வருத்துஞ் செயலைக்கொண்டு ஓர் உடம்பின் குறிப்பையும் செயலையும் நாடி அம்தாகச்செய்தலால் உண்டாகும்.

உயிர்ச்சேதம் வருத்தாமல் உடம்பையும் செயலையும் நாடிச்செ ய்தலாகிய அம்து ஷிபுஹுஅம்தாம். இவ்விரண்டிலொன்றை நாடா மற் செய்தல் கதாவாம். இவ் வசனத்திற்சொல்லிய இரண்டு காரி யத்திலும் பழிவாங்குதலுண்டாகாது.

இரண்டு பெயர்களினாலும் உடன்தையாய் உயிர்ச்சேதத்தை வருவிக்கு மிரண்டுசெயற்களைக் காணப்பட்டால் அவ்விருவரும் கொலை செய்தவர்களாம்.

அவ்விருவரினாலு முண்டாகிய இரண்டு செயற்களையும் முன்பி ன்னாய்க் காணப்பட்டால் முந்தின செயற் செய்தவனே கொலை காரனும் அவனுடைய செயல் (இந்த மருநால்) கொலைபண்ண ப்பட்டவனின் உசும்புதலளவில் நீர்பிடியாக்கிவிட்டால் தான்.

கொலைசெய்தவரை பழிவாங்குதல் விதியாவதற்கு நிபந்தனையாவது (காத்தில்) கொலைசெய்தவன் தகுலீபுடையவனா யிருத்தலும் கொ லைசெய்யப்பட்டவன் காவற்பாடடைந்தவனா யிருத்தலும் கொ லைசெய்பவனும் கொலைசெய்யப்படுபவனும் ஒரே தரஜாவை உடை யவர்களாயிருத்தலுமாம்.

ஒரு கூட்டத்தார் ஒருவனைக் கொலைசெய்ததற்காக அக்கூட்ட த்தார்களையெல்லாம் பழிவாங்கலாம்.

ஓர் கூட்டத்தை உடந்தையாய் ஒரே தருவாயில் கொலைசெய் தால் சீட்டுபோட்டுப் பழிவாங்குதலுமன்றி மற்றவர்களுக்காக தியத்துங்கொடுத்தல் வேண்டும்.

ய—ணித்தவனின் வலிகாரன் கொலைசெய்தவனி லொருவனை பொறுத்துக்கொள்ளலாம்.

பழி விதித்த அம்தில் வலிகாரன் பொறுப்பதானும் கொலை செய்தவன் பளிவாங்கு முன் மரிப்பதானும் விழுந்துபோன விடத்தில் தியத்து கொடுக்கும் பதிலாகும்.

தியத்தாவது ஓர் முஸ்லிமாகிய ஹுற்றாகிய காவற்பாடடைந்த ஆண்பிள்ளையில் நடந்த கொலைக்காக நூறு ஒட்டகங் கொடுத்தலாம்.

அம்திலும் ஷிபுகிலும் அந்தநூரெட்டகமும் மூன்றுவிதமாய் ...கொடுக்கலாம் அது முப்பதுஹிக்காவும் முப்பது ஜிதஆவும் ...கலிபாவுங் கொடுத்தலாம்.

கொலையோ கதாவாகடந்திருந்தால் ஐந்துவிதமாய்க்கொடுக்கலாம் அது பிந்துமகாலு பிந்துலபூன் இபுனுலபூன் ஹிக்க்கு ஜிதஆ எனும் ஐந்தில் ஒவ்வொன்றில் இருபதிருபதாக 100-நூறு ஒட்டகங் கொடுத்தலாம்.

கதாவாகிய கொலை மக்கத்துஹறத்தில் அல்லது துல்கஃதா துல்ஹஜ்ஜு முஹற்றம் றஜபு எனும்பிசபிலை ஹறுமாக்கப்பட்ட மாசங்களில் அல்லது தாய்சகோதரிமுதலிய குடல் வாய்ச்சனத்தில் மஹ்றமானவனில்நடந்தால் இந்த ஐந்துவிதத்தையும் முந்திய மூன்றுவிதமாகவே கொடுத்தல்வேண்டும்.

அம்துடைய தியத்தைக் கொலைகாரன்மீதில் தீவிரமாக்குதல் வேண்டும்.

ஷிபுகு அம்துக்கும் கதாவுக்கும் உண்டாகிய தியத்தை அவனுடைய அசபத்துக்காரர்மீது மூன்று வருடத்தில் தவணையாக்குதல் வேண்டும்.

ஒட்டகமில்லாவிட்டால் அதின்விலை கொடுத்தல் வாஜிபாம்.

பளிவாங்கத்தக்க உருத்தாளர்கள் அசபத்துக்காரராம்.

ஹறுமாகிய கொலை கதாவாக அல்லது அம்தாக நடந்தால் நடத்தினவன் கப்பாறத்துக்கொடுத்தல் வாஜிபாகும்.

அதின் கப்பாறத்தாவது ஓர் முஃமினாகிய அடிமையை உருமையிடுதலாம். அதற்கியல்பற்றவர்கள் தொடர்பாய் இரண்டுமாசம் நோன்புபிடித்தல் வேண்டும்.

(ரித்தத்தைப்பற்றியது.)

## (2.) ரித்தத்தாவது யாது?

ஓர் முஸ்லிமாகிய முகல்லபானவன் தன் நாட்டத்தில் குபிரைக் கொண்டு இஸ்லாமை முறித்தலாம்.



அது சொல்லாலுஞ்செயலாலும் நிர்ணயத்துடனு யிருந்தாலும் தர்க்கத்துடனு யிருந்தாலும் பரியாசத்துடனு யிருந்தாலும் உண்டாகும்.

முறுதத்தாக்கிவிக்குங் கருமங்கள் மூன்னூற்றுக்கதிகமாம்.

முறுதத்தாக்கிவிப்பவைகளுக் குவமையாவது படைத்தவனில்லை நபி இல்லை என்பதும், நபியைப் பொய்யராக்கிவிக்குதல் நபியைக்காண ஒலி ஏற்றமென்று சொல்லுதல் அகிலுள்ளவன் நான் எவல் விலகலின் ஹத்தைவிட்டுக் கடந்தவனென்று சொல்லுதல் அல்லாகுத்த ஆலாவைக் கண்ணுற் கண்டேனென்று சொ...தல் அல்லாகுத்த ஆலாவுடன் உதட்டோ டுதடுவைத்...பேசிக்கொண்டேனென்று சொல்லுதல் அல்லாகுத்தஆலா இன்ன குறத்திலிருக்கிறானென்று சொல்லுதல் அல்லாகுத்த ஆலாவுக்கு யாதேனுங் காலம் கோலம் ஸ்தானமுண்டென்று மட்டுத் திட்டத்தை வாதித்தல் கலாமுல்லாவிலுள்ள வோர் ஹறுபையாவது முரண்டாய் கிறுஅத்தன்றிக் கூட்டுதல் குறைத்தல் நான்கு இமாம்களும் ஒருங்காய்ச் சேர்ந்து சொன்னசொல்லை அல்லத் தட்டுதல் ஆகியவைகளும் பிறவுமாம்.

வியாபாரஞ் செய்தல், நிகாஹு செய்தல், களா முதலியவைகளை அல்லத் தட்டுதல் கள்ளு, சாராயம், வட்டி, சிறு, லிவாத்து ஆயம், ஆதியவைகள் ஹறுமென்பதை அல்லத் தட்டுதல் தீனுடைய காரியங்களில் வெளிரங்கமாகிய ஹறுமை ஹலாலென்றும் ஹலாலை ஹறுமென்றுஞ் சொல்லுதலும் ரித்தத்தை வருவிக்குமாம்.

குறுஆனை இலேசாகக்காணுதல் அஷனித்தல் அதைப் பார்த்துத் துப்புதல் அசுசியானதை அதில் எடுத்துப்போடுதல் குறுஆன் ஓதினால் வயிறு நிரம்புமா என இகழ்தல் இந்த வாங்கு சொல்பவன் வீணாய் சத்தமிடுகிறான் என்று வாங்கைத் அஷனித்துப் பேசுதல் இந்த ஆலிம் ஹதீது சொல்லுதல் கோயிலில் பாதிரியார் வேதம்சொல்வதுபோ லிருக்கின்றதென்று சொல்லுதல் பறுளாகிய இல்முபடிக்கும்படி சொல்ல எனக்கு இந்த வீண்காரியந் தேவையில்லையென்று சொல்லுதல் ஓதிப் படித்தவனெல்லாம் கெட்டவனென்று பொதுப்படச் சொல்லுதல் தொழுது தொழுது கண்ட பலனென்னவென்று சொல்லுதல் நபியுல்லா அவர்களுக்கு அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு தோளரல்லவென்று சொல்லுதல் ஆயிசா நாயகியைச் சொன்ன படிறு பழிறல்ல அது உண்மைதானென்று சொல்லுதல் நபியுல்லா அறபியல்ல பெண்மாயைகொண்டு மருண்டவரென் றிகழ்வாய்ச் சொல்லுதலாகியவைகளும் ஓர் திட்டவட்டமாகிய செய்யினைதப் பார்த்து அல்லாவுடைய லகுனத்து உம்முடைய பாட்டமார்களுக் குண்டாவதாக வென்ப

தும் ஜின்களை அதின் அசிலாகிய கோலத்திலேயே காணப்படுமென்பதும் முகம்மது நபிக்குப்பின் நபி உண்டென்பதும் சிறு ஒப்பாரி இராகசங்கீத மாகியவைகளை ஹறாமாக்கப் படாதிருக்கவேண்டிச்சதே யென்பதும் கதனுச்செய்தல் நியாமல்ல வென்பதும் உன்நகத்தை அறுத்துப்போடு அது சுன்னத்து என்றால் அது சுன்னத்தாயிருந்தாலும் அறுக்கமாட்டேனென்பதும் அநியாயம்செய்தவனைப்பார்த்து நீசெய்தது நல்லவேலையாயிற் றென்பதும் ஹறுமான ரிசுகைஇது அல்லாகுத்த ஆலா தந்தரிசக்குத்தானென்பதும் ஊரிலெவ்வளவோ பிள்ளைகளிருக்க என்னுடைய பிள்ளையை யுமயுத்தாக்கினாய் உனக்குக் கண்தெரியவில்லையா வென்பதும் துன்னகிரகத்தினால்தான் மனுடர்களும் ஜின்களும் சீவித்திருக்கின்றார்கள் இப்பஞ்சபூதமே யில்லாவிட்டால் எவ்விதமாய்ப் படைப்பானென்பதும் சோறுதான் பசிதீர்க்கும் தண்ணீர்தான் தாகந் தீர்க்கும் பரிகாரிதான் சொஸ்தமாக்கினானென்பதும் ஓர் ஆண்டுப் பணிகாரமாவது இந்த இல்மைக்காண கைறுயிருக்கு மென்பதும் முஸ்லீங்களாகிய இராஜர்களெல்லாம் அநியாயக்காரர்கள் என்பதும் ஆயந்தீர்வைவாங்குதல் இராசர்களின் ஹக்குத்தானென்பதும் காபிர்களின் கோலங்கொண்டு அவர்களுடன் இருப்பதும் அக்கோலங்கொள்ளுதலும் முறுத்தத் தாக்கிவிப்பவைகளாம்.

மருஹூக்கு சஜூதுசெய்தாலும் சஜூது செய்யலாமென்றாலும் வுலுவில்லாமல் தொழலாமென்றாலும் ஹறுமானசெயல் செய்யநாடி இன்னும் ஒருவரைப்பார்த்து அல்லாவுக்காக இக்கருமத்துக் கெனக்குதவி செய்யுங்களென்றாலும் நான் கியாமத்து நாளைப்பயப்பட்டேனென்றாலும் ஓர் இஸ்லாமார்க்கத்தில் புகுதவேண்டுமெனும் நாட்டமுள்ளவன் கலிமாச்சொல்லித் தருமப்படிகேட்டபோது அவனைதாமதப்படுத்தினாலும் ஓர் முஸ்லீமை யாதோர் தகுலீலின்றி காபிரென்றாலும் இவைபோலாகிய சொல்லுகள் குபிரைவருத்துமென்றறிந்து நாவுமுந்தாமல் முரண்டாய்ச்சொன்னாலும் அதைச்செய்தல் வேண்டுமென்று கருத்துவைத்தாலும் உடனேகாபிறுவான்.

ஒருவன் முறுத்தாகிவிட்டால் அவனின் நிகாஹும்பிரிந்துவிடும் அவன் ரித்தத்திலிருக்குங் காலமெல்லாம் அவன்செய்துகொடுத்தநிகாஹும் அவன் வலியாயிருந்து முடித்துக்கொடுத்த நிகாஹுங் கூடாது.

முறுதத்தானவன் அறுத்தவைகளைப் புசித்தல் ஹறும் அவனை அனந்தரங் கொள்ளக்கூடாது அவன் முஸ்லீமில் நின்றனந்தரங் கொள்ளவும்படாது.



முறுதத்து மனைவியின் இத்தாத்திர முன் மீண்டுவந்தால் சேர்த்துக்கொள்ளலாம்.

ரித்தத்தாயிருக்கையில் தொழுத தொழுகையையும் நோன்பையும் கவாச்செய்தல் வேண்டும்.

முறுதத்தானவன் இஸ்லாத்தில் மீளும்போது கலிமா ஷகாத்தும்சொல்லி என்னத்தினால் முறுத்தத்தாகினானோ அக்கருமத்தை எடுத்துக்காட்டி அதற்கு மாற்றஞ்செய்தேனென்று விண்ணப்பஞ்ய்தலும் வேண்டும்.

ஒருவன் குபிராக்கிவிக்குங் கருமத்தைச் சொன்னானென்று காஜியிடம் வழக்குவந்தால் உடனே ஷகாதத்துக் கலிமாச்சொல்லும்படி அவனை ஏவவேண்டுமேயன்றி நீர் சொன்னமாதிரி மடக்கிச் சொல்லென் றேவப்படாது.

முறுதத்தாக்கிவிப்பவைகளை சொல்லுதலும்செய்தலும் செய்யச்சம்மதிப்பதும் நிர்ணயங்கொள்ளுதல் போலாம்.

(ஹத்தை விதியாக்கிவிப்பவைக ளின்னதென்பது.)

(3.) ஹத்தை விதியாக்கிவிப்பவைக ளெவை?

சினச்செய்தல் படர்சொல்லுதல் மதுபானங்குடித்தல் களவுசெய்தல் எனும் நான்குமாம்.

(சினவைப்பற்றியது.)

(4.) சினவுடைய ஹத்திற் பிரிவுகளு முண்டோ?

ஆம் பிக்றாகிய ஆண் பெண்கள் சினச்செய்தால் இவ்வாறு ஹத்துச்செய்தல் வேண்டுமென்றும் முகுசினாகிய ஆண் பெண்கள் சினச்செய்தால் இவ்வாறு கத்துச்செய்தல் வேண்டுமென்றும் இரண்டு பிரிவுக்களுண்டு.

சஹீஹாகிய நிகாஹினால் ஹலாலாகிய ஸ்திரியோடு புணர்ச்சிசெய்யாத ஆண்பிள்ளையை பிகுறு என்றும் புருடனோடு புணராத ஸ்திரியை பிக்றத்து என்றும் இருவரையும்சேர்த்து பிக்று என்று சொல்லுவார்கள்.

சஹீஹாகிய நிகாஹினால் ஹலாலாகிய ஸ்திரீயோடு ஓர் முறையாயினும் புணர்ந்தஆடவனும் புணரப்பட்டஸ்திரியும் முகுசினாம்.

முகல்லபான ஹுர்றாகியபிக்று தன் தகரைகதனுச்செய்யப்பட்டஸ்தானம்வரைக்கும் ஓர் மனுப்பிறவியின் முன்துவாரம் அல்லது பின்துவாரத்தில் அதுஹறுமென்பதை அறிந்துகொண்டு புகுத்தினால் நூறு அடி அடித்து ஓர் வருடக்காலம் இரண்டுகாட் ரேத்து

க்கப்பால் தூரத்திலிடுதலே ஹத்தாம் பிக்றத்துக்கும் அப்படியே செய்தல்வேண்டும்.

சினைச்செய்த முகல்லபாகியஹுற்றாகிய முகுசினை நாட்டிவைத்துக்கல்லாலெறிந்து உயிர்ச்சேதம் பண்ணுதல்வேண்டும் அதுவே முகுசின்களின் ஹத்தாம்.

முகுசினத்தாகிய சினைச்செய்த ஸ்திரிக்கும் இவ்வாறே செய்தல் வேண்டும்.

துஹூச்சேர்க்கையாலும் பெண்கள் ஒன்றுக்கொன்று சேரும் சேர்க்கையாலும் மனியை வருத்தத்தேடுதலும் தன்கையால்அல்லது தன்மனைவியல்லாத மற்றவர்களின்கையால் மனியை வருத்தி வித்தலும் ஹத்தைவருத்தாது. இவ்வாறு செய்பவர்களுக்கு தஃசீறு செய்தல்வேண்டும்.

மனைவியின்கையினுல் மனியை வருத்தும்படிதேடுதலும் மனைவி அவ்வாறுசெய்தலும் மக்ரூகாம்.

மிருகத்தின் அபத்திலும் மய்யித்தின் அபத்திலும் தகரைப்புகுத்துதல் ஹத்தைவருத்தாது.

புதியஇஸ்லாமானவன் அல்லது ஹறாமென்பதையறிந்த மனிதரைவிட்டுத் தூரத்திலிருப்பவன் இதைஹலாலென்றெண்ணிக்கொண்டு அதைவழக்காடி அதுவும் இடம்பாடாயிருக்கினும் ஹத்தை வருத்தாது.

ஷாபுகத்துடைய நிகாஹினுல் ஜிமாஉ நடந்தாலும் அல்லது அதை ஹலாலென்றுசொன்ன இமாமைத் தொடர்ந்து கொள்ளாவிட்டாலும் ஹத்துவிதிக்காது.

ஹமலாயிருப்பவளையும் பிள்ளைக்குப் பால்கொடுப்பவளையும் ஹத்துச்செய்யாமற் பிற்படுத்தலாம் நோய் கூடுதல் சூடு உண்டாயிருப்பதற்காய் பிற்படுத்துதலாகாது.

பித்றுடைய ஹத்தைகூடுதல் சூடுமுதலியவைகளுண்டாயிருப்பதற்காகவும் சுகத்தை ஆதரவுவைக்கத்தக்க வியாதிக்காகவும் ஹமலாயிருப்பதற்காகவும் பிற்படுத்தலாம்.

ஹத்துச்செய்பவர்கள் பச்சைமட்டை முதலியதால் மேனியிற் படும்படி யடித்தல்வேண்டும்.

ஐம்பது சக்கியுள்ள குலாஞ்சியால் இரண்டுதரம் அதில்எல்லா ஒவ்வொன்றும் மேனியில்படும்படி அடித்தலேபோதுமாம்.

சினைச்செய்தவர் தன்வாயினுல்விண்ணப்பம்செய்தலாலும் நாலு ஆடவர்கள் சினைச்செய்தஇருவரையும் புகுத்தியவிதத்தையும் அத்



தானத்தையும் கண்ணுற்கண்டோமென்று சாட்சிசொல்லுதலாலும் சினைச்செய்தவரென்று தீர்க்கப்படுவர்.

சினைச்செய்தேனென்று விண்ணப்பஞ்செய்தபின் தன்னைப்பொய்யாக்கி மீண்டுவிடுவோனேயாயின் ஹத்துவிழுந்துபோம்.

சினைச்செய்த வெள்ளாட்டிக்கும் பயலுக்கும் ஹத்தாவது 50-ஐம்பதுஅடியும் ஆறுமாசம் ஊரைவிட்டுத் தூரத்துதலுமாம்.

(கதுபெனும் படிறைப்பற்றியது.)

(5.) கதுபாவதுயாது?

சினை பின்துவாரச்சேர்க்கைஎன்பவைகளைச் செய்யாதபத்தினித்தன்மையுள்ள முஸ்லிமாகிய நாட்டான்மகனை அல்லது நாட்டான்மகளை முகல்லபாகிய சுயபுத்தியுள்ளவன்அல்லது திம்மிக்காபிர்சினைச்செய்ததாய் அல்லது லிவத்துச்செய்ததாய்ச் சொல்லுதலேபடிறும், படிறென்பதும் கதுபென்பது ஒரே அருத்தமுடைய சொற்களாம்.

கதுபுசொன்னவன் அல்லது கதுபுசொன்னவள் நாட்டான்மக்களாயிருந்தால் 80-எண்பது அடியும் அடிமைப் பாத்தியமுடையவர்களாயிருந்தால் நாற்பது அடியும் மேனியிற்படும்படி அடித்தல் வேண்டும்.

கதுபுசொன்ன அடிமைக்கு நாற்பது அடி அடிப்பதேஹத்தாம் அடிமையைப்பற்றி கதுபு சொல்லுதல் ஹத்தை விதியாக்காது மக்களைப்பற்றி கதுபுசொன்னபெற்றோருக்கும் ஹத்துவிதிக்காது.

கதுபைப்பற்றி நான்குபெயருக்குக்குறைந்த ஆடவர்கள் சாட்சி சொன்னாலும் எத்தனைகூட்டம்பெண்களும் அடிமைகளும் சாட்சி சொன்னாலும் அச்சாட்சியை ஒப்புக்கொள்ளாமையும் சாட்சிசொன்ன ஒவ்வொருவருக்கும் கதுபுடைய ஹத்தாகிய எண்பது அடி அடிப்பதுமே ஹக்குமாம்.

கதுபுசொன்னவன் கதுபுசொல்லப்பட்டவனை ஒருக்காலும் சினைச்செய்யவில்லையென்று சத்தியஞ்செய்விக்கலாம் சத்தியஞ்செய்யாவிட்டால் கதுபுசொன்னவன் சத்தியஞ்செய்து தனக்குவிதியாகிய ஹத்தைத்தட்டிக்கொள்ளலாம்.

ஏசினவனை பொய்படிறில்லாமலேசலாம் தாய்தகப்பனை ஏசுதல் ஹறாமாம்.

(ஷுறுபுல் கம்று எனும் கள்ளுக்குடித்தலைப்பற்றியது.)

(6.) மதுபானங் குடித்தல் ஹத்தை வருத்துமா?

ஆம் கள்ளுக்குடிப்பனு ஹறுமென்றறிந்த முகல்லாபாகியசுயபுத்தியுள்ள ஹுற்றாகிய ஆண் பெண்கள் கள்ளுக்குடித்தால் 40-அடி அடித்தல்வேண்டும் அதுவே ஹத்தாம்.

அடிமைப்பாத்தியமுள்ள ஆண் பெண்கள் கள்ளுக்குடித்தால் இருபது அடி அடித்தல்வேண்டும்.

மருந்துக்காய்க் குடித்தல் ஹத்தை வருத்தாது.

கள்ளுக்குடித்த சிறுவர் பயித்தியகாரர் கள்ளென்றறியாமல் குடித்தவர்கள் ஆகியவர்களுக்கு ஹத்தில்லை.

கொஞ்சமாயினும் மிகுதமாயினும் மஸ்தை வருத்தும் குடிப்பெல்லாம் ஹறுமாம்.

வழக்கமாய் உபயோகிப்பவனை மஸ்து வருத்தாவிட்டாலும் ஹத்துச்செய்தல் வேண்டும்.

மஸ்தை வருத்தும் நீர்மயமாகிய குடிப்பைத் தவிர கஞ்சா பின்பூமத்து முதலியவைகள் ஹத்தை வருத்தாது. உபயோகித்தல் ஹறுமாம்.

கள்ளுக்குடித்தேனென வாயினால் விண்ணப்பஞ்செய்தாலும் இரண்டு ஆண்பிள்ளைகள் சாட்சிசொன்னாலும் கள்ளுக்குடித்ததாய்த் தீர்க்கவேண்டும்.

கள்ளின் வாடை சத்தித்தல் ஆகியவைகளைக்கொண்டு கள்ளுக்குடித்ததாய்த் தீர்ப்பிடப்படாது.

செய்யிது தன் பயல் கள்ளுக்குடித்தானென்றறிபுதலால் சாட்சியில்லாமல் ஹத்துச்செய்யலாம்.

(சிறுகத்தெனும் களவைப்பற்றியது.)

(7.) சோரனுக்கு ஹத்து விதியாகுமா?

ஆம் காவற்பாடடைந்த ஸ்தானத்தி லிருக்குங் கால் தங்கக்காசையாயினும் அதின் பெறுமதியுள்ளதை யாயினும் மறைவாகத் திருடிய பாலிகான சுயபுத்தியுள்ள ஆண்பிள்ளையின் அல்லது ஸ்திரியின் வலக்கை மணிக்கட்டைத் தறித்தலே ஹத்தாம்.

பொருளுடையவன் அவ்வூர் இமாமிடம் வழக்குரைத்து அதின் சாட்சியினால் ஹுஜ்ஜாவாக்கினால் மேலே சொல்லப்பட்ட ஹத்தை இமாம் அல்லது இமாமின் நாயிபு நடத்தாட்டுதல்வேண்டும். களவுசெய்தவன் தானாய் விண்ணப்பம் கூறினும் மேலே சொல்லப்பட்ட ஹத்தை நடத்தாட்டுதல் வேண்டும்.



மணிக்கட்டைத் தறிக்கப்பட்டவன் இரண்டாமுறையும் திருடினால் பறண்டைமொழியோடு இடதுகாலைத் தறிக்கப்படுவான்.

இரண்டுமுறையில் கத்தை நாட்டத்தப்பட்ட கள்ளன் மூன்றும்முறையிலுந்திருடினால் இடதுகை மணிக்கட்டைத் தறித்தல்வேண்டும். மறுபடியும் திருடியதிருடனின் வலதுகாலைத் தறித்தல்வேண்டும். பின்பும் களவுசெய்தால் தகுசீறு செய்தல்வேண்டும் கொலைபண்ணப்படாது.

வகுபுவைக்கப்பட்டபொருள் பள்ளிவாசல் நிலைகதவு அலங்காரத்துக்காகத் தூக்கப்பட்ட குளாப்பு ஆகியவைகளைக் களவெடுத்தாலும் மேலேசொல்லிய விதமாகவே ஹத்துச்செய்தல் வேண்டும்.

முஸ்லிமானாலென்று சகாத்துமுதலாற் சேர்க்கப்பட்ட பைத்துல்மாலில் பெற்றுக்கொள்ளுதற்குப் பாத்தியமானவர்கள் திருடுதலும் அவ்வப்பொருளை வைக்கப்படும் ஆதானமுடை ஸ்தானமல்லாததில் வைக்கப்பட்டபொருளைத்திருடுதலும் திருடுபவனுக்குப் பங்கானபொருளைத்திருடுதலும் வம்பறியாய் எடுக்கப்பட்டதைத் திருடுதலும் வம்பறியாய் எடுக்கப்பட்ட ஸ்தானத்தில் திருடுதலும் தனக்கு அசுலாகிய தாய்தகப்பனின் பொருளைத்திருடுதலும் தனக்கு பறஆகிய மக்களின்பொருளைத் திருடுதலும் ஹத்தை வருத்தாதாம்.

மணவாளன் மனைவியாகிய இருவரிலொருவர் மற்றவரின்பொருளைத்திருடுதல் பெலமான சொற்படிஹத்தை வருத்துமாம்.

கால்தங்கக்காசை இருவர்திருடினால் ஒருவருக்கும் களவுடைய ஹத்தும் நடத்தாட்டுதலாகாது.

கொள்ளையாடுதல் அருஞ்சிக்கொள்ளுதல்எனும் முன்னிலையாகிய களவுசெய்பவர்களுக்கு களவுடைய ஹத்தை நடத்தாட்டுதலாகாதாயினும் இமாம்அதற்கதிக ஆக்கினைசெய்யலாம்.

(குத்தாஉத்தரீக்கு) பாதையில்நின்று அப்பாதையால் பிரையாணஞ்செய்பவர்களைப் பயமுறுத்தித் திருடுபவர்கள் கொலைசெய்யாவிட்டாலும் கால்தங்கக்காசை அல்லது அதின்பெறுமதியுள்ளபொருளை அல்லது அதற்கதிகமானதை யெடுக்காவிட்டாலும் வாழ்விடமறியலாக்கப்பட்டு ஆக்கினைபெறுபவராவர்.

திரவியத்தைமாத்திர மெடுத்துக்கொண்டு கொலை செய்யாவிட்டால் வலதுகையையும் இடதுகாலையும் தறித்தலெனும் ஆக்கினைக்கு உடன்பட்டவனாவான்.

கொலைசெய்த குத்தாஉத் தரீக்கை வாஜிபாக உயிர்ச்சேதஞ்செய்தல்வேண்டும். அவன்செய்த கொலையை கொலைசெய்யப்பட்டவனின் உருத்தாளர் பொருந்திக்கொள்ளுதல் இவனின் கொலையைத் தட்டாது.

கொலைசெய்து கால் தங்கக்காசு அல்லது அதின் பெறுமதியுள்ள பொருளை களவுசெய்திருந்தா உத்தரீக்கை உயிர்சசேதஞ்செய்து குளிப்பாட்டிக் கபனிட்டுத் தொழுவித்த பின் மூன்றுநாள் கழுவிற் போடுதல் வாஜிபாம் இவ்வாறுசெய்ய முன்பேதமாகிவிடுமென்றிருந்தால் கீழே இறக்கப்படும்.

(தஃசீறைப் பற்றியது.)

(8.) தஃசீறாவது யாது?

ஹத்து நியமிக்கப்படாததும் கப்பாறத்து நியமிக்கப்படாததுமாகிய குற்றஞ்செய்த குற்றவாளிக்கு காளிதன் யுக்திக்குச் செய்யும் ஆக்கினையே தஃசீறாம்.

பரஸ்திரியை பறுஜல்லாத ஸ்தானத்திற் சேர்தலும் படிறில்லாமல் ஏசுதலும் நியாயமின்றி அடித்தலுமாகியவைகள் தஃசீறை வருத்துமாம். இதற்கொப்பானவைகளு மப்படியே.

என்னேரமும் வீண்பராக்கில் யாதோர் தேவையுமின்றிக் கண்ணுங் கருத்துமா யிருக்குதல் முதலிய பாவமற்ற சிலகருமங்களும் தஃசீறைவருத்துமாம்.

ஹத்துக்கும் கப்பாறத்துக்கு மிடமற்றதும் தஃசீறு செய்தலாகாததுமாகிய குற்றமாவது கெட்டவனென்று சொல்லப்படாதவன் ஓர் சொற்ப சிறுப்பாவஞ் செய்தல் முதலியதாம்.

மறியல்வைத்தல் காயப்படுத்தாத அடியாக அடித்தல் கைகொட்டுதல் மஜ்லிசை விட்டு எழுப்புதல் ஊரைவிட்டுத் தூரத்துதல் உறுக்குதல் என்பவைகளைக் கொண்டு அவனவன் ஹாலுக்குத் தக்கபடி தஃசீறு செய்தல் வேண்டும்.

தகப்பன் தாய் அல்லது அவர்களின் உத்தரவு பெற்றவர் பிள்ளைகளையும் செய்யிது அவரின் அடிமையையும் புருடன் தன்னுடைய ஹக்குக்காக மனைவியையும் தஃசீறு செய்யலாம்.

(சியாலைப்பற்றியது.)

சியாலாவது காவற்பாடடைந்த நபுசு முதல் பிரையோசனமாகியவைகளின்பேரில் அநியாயமாய் அடர்ந்தேறிவரும் காபிறு முஸ்லிம் முகல்லபு கைறுமுகல்லபு எனும் ஆண் பெண்களைத் தட்டி விலக்குதலாம்.



தட்டுதலில் இலக்கமாய் இலேசானதைகொண்டும் அதற்கு விலகாவிட்டால் அதைக்காணக் கனமானதைக் கொண்டும் விலக்குதல்வேண்டும்.

ஒருவன் உறக்குதலால் விலகிக்கொள்ளுவானாகில் அவனை அடித்துவிலக்குதலாகாது.

தறுத்திப்பாகச் செய்வதற்கிடையில் அடர்ந்தேறுதல் கடுமையாகினும் அல்லது கனமானதின் தளபாடமேயன்றிக் கிட்டாவிட்டாலும் தறுத்திபுவிழுந்துபோம்.

(கதனுச்செய்தலைப்பற்றியது.)

(9.) கிதானுவது யாது?

ஆண்குழந்தையின் கதனுவரையை மூடிக்கொண்டிருக்குந்தோலை தகறின்மொட்டு வெளியாகும்படி தறிப்பதும் பெண்குழந்தையின் [illegible] பிறத்தில் கீர்த்தாரைக்கு மேலேகாணப்படும் சாவற்பூவைநிகர்த்த பெண்ணில் கொஞ்சத்தை அறுப்பதுமே கிதானும்.

ஆண்பெண் அடங்கலுக்கும் புலூகுகொண்டும் அகில்கொண்டும் கதனுச்செய்தல்வாஜிபாம் புலூகுக்குமுன்செய்தவன் நலவனில் விரைந்துகொண்டான்.

தம்மீசாகியபிள்ளைக்கு கதனுச்செய்தல் அப்பிள்ளையின்வலிகாரனுக்குவாஜிபாம்.

கதனுச்செய்யப்பட்டதாகவே பிறந்தபிள்ளைக்கு கதனுச்செய்யவேண்டியதில்லை.

பிறந்தலை ஏழாம்நாளில் கதனுச்செய்தல் சுன்னத்து பின்பு நாற்பதாம்நாள் அல்லது ஏழாம்வயதில் கதனுச்செய்தல் சுன்னத்தாம்.

கதனுவில்லாமல் மரித்த மய்யித்துக்கு கதனுச்செய்யப்படாது குளிப்பாட்டும்போது அதனுள் ஜலம் செல்லாவிட்டால் தயம்மம் செய்தல்வேண்டும்.

ஆண்பிள்ளைக்கு கதனுச்செய்தலை பிரசித்தப்படுத்துதலும் பெண்பிள்ளைக்கு கதனுச்செய்தலை மறைப்பதும் சுன்னத்தாம்.

கதனுவுக்காகச் செய்யும்செலவு அப்பிள்ளையின் பொருளிருந்தாலதின் பொறுப்பாம். அப்பிள்ளைக்கு முதலில்லாவிட்டால் அவனுக்கு நபகாக்கொடுத்தல் விதியானவனே செலவு செய்தல்வேண்டும்.

(10.) காதில் ஆபரண மணிவதற்காய்த் துளைவு போடலாமா?

சிறு ஆண்பிள்ளையின் காதைகுற்றுதல்பிசகற ஹறாம் சிறுமியின். காதைக்குற்றுதல் ஆகுமென்பதற்கும் ஆகாதென்பதற்கு மிடையில் ஙிலாபுண்டுமாம்.

ஆண்பிள்ளையாயிருந்தாலும் ஸ்திரிகளாயிருந்தாலும் மூக்குக்குற்றுதல் ஹறாமாம்.

பிறந்தபிள்ளையின் தொப்புளை முடிந்தபின் அறுத்தல்வாஜிபாம்

அல்பாபுல் தானி பீபயானில் களாவதி.

(களாவத்தையும் அதைத்தக்கவர்களையும் பற்றியது.)

(11.) காளியெனும் சொல்லின் பொருள் யாது?

ஷறஇன்படி சகல கருமங்களுக்கும் தீர்ப்புசெய்யும்படி நியமிக்கப்பட்டவரென்பதாம்.

ஆண்பிள்ளையாகவும், ஹுர்றாகவும், முகல்லபாகவும், முஸ்லீமாகவும் கேள்வி பார்வை கலாம உள்ளவராகவும் இல்மில் இஜ்திகாது செய்யுந் தக்கவராகவு மிருக்குங் காளிக்கு வழிப்படுதல்வேண்டும்.

இஸ்லாம் அகில் பாலிகு ஆண்பிள்ளை பேணுதல் இல்மு வீரதத்துவம் குறைவஷிக்குலம் ஆகிய எட்டு ஷறுத்துக்களையும் உட்கொண்டவரே காளிக்குத் தக்கவர் இவ்விதமான ஒருவரை காளியாக நியமித்தல் பறுலு கிபாயாவாம்.

அவ்வூர்ப் பிரைசைகளில் மிகுந்தவர்களால் நியமிக்கப்பட்ட காளிக்கு வழிப்படாதவர்கள் ஷறஉக்கு வழிப்படாதவர்களாம்.

ஓர் ஊரில் காளியின் ஷறுத்துக்களையுடைய ஒருவர் இருந்தால் அவர் அவ்வேலைக் கேர்ப்படுதல் பறுலு ஐனும்.

களாவத்துக்குத் தக்கவர்கள் விலகிக்கொண்டால் அவ்வூரார் அடங்கலும் பாவியாவார்கள்.

காபிருகிய இராசனாயிருந்தாலும் அவரும் ஷவ்கத்தும் உடையவர்களும் தகுதியற்ற ஒருவ்வரை காளியாய் நியமித்தால் நியமிக்கப்பட்டவரைச் சகல முஜ்தகிதான நீதிமான் உண்டாயிருந்தாலும் முன் கூறிய தீர்ப்பே செல்லுமாம்.



ஷறுத்திற் சிலதை இளந்த காளி யாதேனும் தான் அறியாத கருமத்தில் வேறோர் காளியிடம் எழுதிக்கொள்ளலாம்.

ஷாபிஇ மதுகபிலுள்ள ஒருவன் ஓர் மஸ்அலாவில் வேறோர் மதுகபைத் தொடர்ந்தால் அதிலும் அதைக் கொளுகினதிலும் தொடர்ந்து நடக்குதல் வாஜிபாம்.

(12.) களாவத்துக்குத்தக்க தன்மையுடைய வலித்தத் தகுதியற்ற ஒருவரை முஹக்கமாக நியமிக்கலாமா?

அவ்விதஷ்திதின யுடையவரை நியமித்தல் ஜாயசல்ல. இரண்டு பெயர்கள் கூடிகளாவதுக்குப் பாத்திரமான ஒருவரை முஹக்கமாக நியமிக்கலாம். காளியிருந்தாலும் இல்லாவிட்டாலும் தகுதியற்றவரை முஹக்கமாய் நியமித்தல் ஜாயிசல்ல.

காளியும் அவரைத்தொட்டு நியமிக்கப்பட்ட நாயிபும் காளித்தனம் நீங்குதலாலும் புத்திமனவு பேதலித்தலாலும் நீங்கிவிடுவார்கள். இராசாவைத்தொட்டு வைக்கப்பட்ட நாயிபு நீங்கமாட்டார்.

காளியை நியமித்த இராசர் மரிப்பதால் காளி அவ் வுத்தியோகத்தால் நீங்கமாட்டார்.

ஓர் காரியஸ்தன் தனக்குக் குறிக்கப்பட்ட வேலை ஸ்தலமல்லாத இடத்திலிருந்து இன்னதை தீர்ப்பிட்டேனென்பதை கபூல் செய்யப்படாது.

வாதி பிரதிவாதியாகிய இருவரும் சிறப்பில் ஏற்ற வாட்டமாயிருந்தாலும் சங்கையில் சரிசரியாக்கிவிப்பது வாஜிபு.

வழக்கு அதிகமானபோதில் முந்தின முந்தினவர்களைத் தறுத்திப்பாகக் கேட்டுத் தீர்ப்புச்செய்தல் வேண்டும்.

தன் வேலைத்தலத்திலிருக்குங் காளி முன் கதியாக்கொடுப்பது வழக்கமில்லாதவன் கொடுக்கும் கதியாவையும் தற்போது வழக்குண்டாயிருப்பவனின் கதியாவையும் அவனே வழக்கமாய் கதியாக்கொடுப்பவனு யிருந்தாலும் கபூல்செய்தல் ஹறாம்.

காளிக்கென்று தனதாகச் செய்யப்படும் விருந்துக்கு காளி ஹாளிருகுதல் ஹறாம்.

காளிசெய்த தீர்ப்பு குர்ஆனுக்கு அல்லது ஹதீதுக்கு அல்லது இமாம்களின் இஜ்மாஉக்கு அல்லது வெளிரங்கமான கியாசுக்கு விரோதமெனக் கண்டால் அத்தீர்ப்பை வாஜிபாக உடைத்து மேற் சொல்லியவைகளுக்கு நேராய்த் தீர்ப்புச்செய்யலாம்.

காளி தான் ஓர் சங்கதியி லறிந்திருப்பதுக்கு மாருக தீர்ப்புச் செய்யக்கூடாது. அவ்வறிவுக்கு மாருகச் சாட்சி ருஜுவானாலும் தான் அறிந்தபடியே தீர்ப்பிடலாம்.

காளி தன்னுடைய அறிவினுல் அல்லாவுடையஹக்குகளில் தீர்ப்புச்செய்யக்கூடாது மனிதர்களின் ஹக்குகளில் தீர்ப்புச்செய்யலாம்.

காளி தனக்கும் தன் தாய்தகப்பர்களுக்கும் மக்களுக்கும் அடிமைகளுக்கும் உதவியாகத் தீர்ப்புச் செய்யக்கூடாது.

காளி தன்னில் அல்லது தன் உருத்துக்கார்களிலுள்ள காரியங்களில் தீர்ப்புப் பெறவேண்டியதா யிருந்தால் வேறோர் அரசன் அல்லது காளியிடம் அல்லது அவரின் நாயிபிடம் சண்டைத் தட்டுதலுக்காகத் தீர்ப்புப்பெறுதல்வேண்டும்.

மய்யித்தின்பேரில் அல்லது காயிபானவன்பேரில் முதல் தரிப்பட்டால் அவ்வூர் காளிக் கடக்கமாகிய தானத்தில் அவனுடைய பொருளிருந்தால் அதில் நின்றே அவனுடைய ஹக்கை காளி எடுத்துக்கொடுத்தல் வேண்டும் அல்லது அந்த காயிபானவனிருக்கும் ஊர் காளியிடம் இவ்வழக்கை யனுப்பும்படி வாதிகேட்டால் அவ்விதம் செய்யவேண்டும்.

(13.) நாணயம் அல்லது கடனைப்பற்றி வழக்கில் எத்தனை ஷறுத்துக்களுண்டாயிருத்தல் வேண்டும்?

நாணயமாயிருந்தாலும் கடனாயிருந்தாலும் அதின் தொகையையும் வகையையும் இனத்தையும் பிரதானமாய்க் கூறுதலெனும் மூன்றுஷறுத்துக்களுண்டாயிருத்தல்வேண்டும்.

பிரதிவாதி ஹக்கை விண்ணப்பம்செய்தால் தீர்ப்பின்றியே ஹக்குத் தரிபடும்.

(14.) எவ்விதமாகிய வழக்கிலேனும் பிரதிவாதி மறுமொழி சொல்லாவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

பிரதிவாதியை ஜவாபுசொல்லும்படி காளி ஏவவேண்டும்.

காளியின் ஏவலுக்கும் மறுமொழி சொல்லாவிட்டால் அவனைப் பிரமாணங்கொண்டு ஏவவேண்டும்.

பிரமாணங்கொண்டேவிய ஏவலுக்கும் வழிப்படாவிட்டால்வாதி சத்தியம்செய்து ஹக்குக்குப் பாத்திரமுடையவனுவான்.

இரண்டு சாட்சிகளை சத்தியத்துடன் ஓர் சாட்சியைக்காணவும் பெண்களை ஏற்றுக்கொள்ளப்படும் காரியத்தில் நான்குபெண்களைக் காணவும் ஓர் ஆண்பிள்ளை இரண்டு பெண்களுடன் சேர்ந்து சொல்வதைக் காணவும் முற்படுத்தவேண்டும்.



ஓர் பாகத்தின் சாட்சிகள் மறுபாகத்தைக்காண மிகுத்திருப்பதால் மிகுத்ததை மூர்க்கமாக்கப்படாது.

(சாட்சியைப்பற்றியது.)

(15.) ஷகாதத்து என்பதின் பொருளென்ன?

சாட்சிகள் என்பதாம்.

நோன்பைப்பற்றிய தகுவாவுக்கு றமலான்மாசப் பிறையைக் கண்ட ஒருவரே போதுமாம்.

குறிப்பாக்கப்பட்ட பொருளைப்பற்றிய வழக்கில் அப்பொருளின் பணமைக் கூறுதல் வேண்டும்.

தோட்டம் வளவு முதலிய நிலங்களைப்பற்றிய வழக்கில் அதின் திசையையும் நான்கு எல்லைகளையும் கூறுதல் வேண்டும்.

நிகாஹைப்பற்றிய வழக்கில் வலிகாரனையும் இரண்டு சாட்சிகளையும் கூறுதல் வேண்டும்.

வாதி பக்கத்துக்குச் சாட்சிகள் ருஜுவான வழக்கில் பிரதிவாதி சத்தியம்பண்ணும்படி கேட்பது ஜாயிசல்ல.

பிரதிவாதிபேரில் சாட்சிகள் ருஜுவான வழக்கில் அவ்வழக்கைத் தட்டுவதற்காகிய முகாந்தரங் கொண்டுவருவதற்காகத் தவணை கேட்டால் மூன்றுநாள் தவணை கொடுக்கலாம்.

சினைவுக்கும் விவாதத்துக்கும் நான்கு ஆண்பிள்ளைகள் சாட்சிசொல்லுதல் வேண்டும்.

அதில் சாட்சி சொல்லும் விதமாவது இன்னான் சயபுத்தியுள்ளவனுகவும் முகல்லபானவனுகவும் இருக்கிற ஹாலில் இன்னாளுடைய அபத்தில் அவனுடைய தகறின் கத்தூவரையை சினைவைக்கொண்டு செலுத்தினான் என்பதாம். சுறுமாக்கூட்டில் சுறுமாக்கோலைச் செலுத்துதல்போல் செலுத்தினனென்று சொல்லுதல் சுன்னத்தாம்.

சினைச்செய்தவன் இருமுறை செய்ததில் இரண்டு சாட்சிகள் போதும்.

திரவியமாகிய குறிக்கப்பட்ட பொருள் அல்லது கடன் விற்பனவு ஈடு வகுபு பிணை சாட்டுதல் நீக்குதல் ராசி சம்மதி முதலியவைகளைப் பற்றிய தகுவாவில் இரண்டு ஆண்பிள்ளைகள் அல்லது ஒரு ஆண்பிள்ளையும் இரண்டு பெண்களும் அல்லது ஒரு ஆண்பிள்ளையும் ஓர் சத்தியமும் சாட்சியா யிருத்தல் வேண்டும்.

யாதோர்காரியமும் இரண்டு பெண்களும் ஓர் சத்தியமுங்கொண்டு தரிபடாது.

நிகாஹு தலாக்கு றஜ்இ பஸ்கு புலூகுஉருமை வறுமை குதுபகுரா வகாலத்து பிணை கூட்டு அமானம் வஸிய்யத்து முறுதத்தாகுதல் இத்தாத்தீரும் மாசங்கள் றூலானல்லாத மாசங்களின் பிறைக்காணுதல் சாட்சிக்குச் சாட்சி சொல்லுதல் இரண்டு ஆடவர்களின் சாட்சியைக்கொண்டேயன்றித் தரிபடாத இதுமுதலியவைகளெல்லாம் இரண்டு ஆடவர்களின் சாட்சியைக்கொண்டேயன்றித் தரிபடாவாம்.

பிள்ளைப்பேறு ஹைலு கன்னித்தனம் கன்னியழிதல் பூவ்குப் பெண்களின் வஸ்திரத்துக்குக் கீழேயுள்ள [illegible] நாலு பெண்கள் அல்லது இரண்டு ஆடவர்களும் இரண்டுபெண்களும் சாட்சிசொல்லுதல் கொண்டேயன்றித் தரிபடாவாம்.

ஷாஹிதுக்கு ஷறுத்தாவது இஸ்லாம் தருலீபு ஹுர்று ரோசம் நீதம்முழிப்பு என்பவைகளாம்.

நீதமாவது பெரும்பாவத்தைத் தள்ளுதலும் சிறப்பாவத்தில் நிலைபடாமையுமாம்.

ஷாஹிதில் ஒருபக்கத்தினருக்கு சார்பாயிருக்குஞ் சந்தேகத்தையில்லாக்குதல் ஷறுத்தாம்.

தன் பயலுக்குந்தனக்கு வய்யித்தாகிய கடனாளியால் வரவேண்டியதுக்கும் தன் தாய்தகப்பனுக்கும் தன் புத்திரர்களுக்கும் உரியதாய் சொல்லப்படும். ஷகாதத்துத்தட்டப்படும் அவர்களுக்கு உரியல்லாத காரியத்தில் தட்டப்படாது.

யாதேனும் ஓர்வேலையில் அதிகாரியாயிருப்பவன் அக்கருமத்திற்சாட்சியாய் வருவதையும் தட்டப்படும் பகைவன் சொல்லும் ஷகாதத்தும் அப்படியே.

ஓர் கருமத்தில் ஒருவனைச்சாட்சிக்குத் தேடாதிருக்கத் தானாய் வந்து சொல்லுபவனின் சாட்சி தட்டப்படத்தக்கதாம்.

அல்லாகுத்தஆலாவின் ஹக்காகிய தலாக்கு இத்தாஉருமைமுதலியவைகளில் நன்மைக்காகத்தானய்வரும் சாட்சியைத் தட்டுதலாகாது.

பாஸிகு தௌபாச்செய்து அதின் ஷறுத்துக்களைப் பூரணமாய் எடுத்துநடந்து ஒருவருடக்காலம் அப்பாவத்தைவிட்டு நீங்கியிருந்தாலேயன்றி அவனின் சாட்சி கபூல்செய்யப்படாது.



செயலினாலாகிய கருமத்தைப்பற்றிய சாட்சியில் பார்வை ஷறுத்தாம்.

சொல்லாலாகிய கருமத்தைப்பற்றிய சாட்சியில் பார்வையும் கேள்வியும் ஷறுத்தாம்.

(சத்தியத்தைப்பற்றியது.)

(16.) யாதைக்கொண்டு சத்தியம்செய்தல்வேண்டும்?

அல்லாகுத்தஆலாவுக்குத் தனதாகிய சிபத்துக்களில் ஒன்றைக்கொண்டு அல்லது குறுஆன் தவுறாத்து இஞ்சீல் சபூறெனும் வேதங்களைக்கொண்டே சத்தியஞ் செய்தல்வேண்டும்.

நபியுல்லா றசூலுல்லா ஜிபுரீல்மீக்காயீல் கஃபா பைத்துல் முகத்தஸ் முதலிய மகுலூக்குகளைக் கொண்டு சத்தியம்செய்தல் கூடாதாம்.

தாய்தகப்பன் உஸ்தாது முதலியவர்களைக்கொண்டு சத்தியஞ் செய்தலாகாது.

நாவுமுந்தியசத்தியம் சத்தியமாகாது.

வாஜிபானவைகளை விடுவதிலும் ஹறாமானவைகளைச் செய்தலிலும் சத்தியஞ்செய்தால் பாவியாவான், அச்சத்தியத்தை முறிப்பதும் அதற்காய்த் தெண்டங்கொடுப்பதும் வாஜிபு.

மக்றூகானவைகளை செய்வதிலும் சுன்னத்தானவைகளை விடுவதிலும் சத்தியஞ்செய்தால் அச்சத்தியத்தை முறித்தல் சுன்னத்து அதற்காய்த் தெண்டங்கொடுத்தல் வாஜிபாம்.

நிகாஹு தலாக்கு இத்கு றஜ்இ முதலியவைகளில் வாதி பிரதிவாதியில்நின்று சத்தியத்தைத்தேடுதல் சுன்னத்து.

சத்தியஞ்செய்ய ஆரம்பித்தவனை நோக்கி அல்லாவைப்பயந்துகொள்ளென்று சொல்லி இன்னல்லதீன யஷ்தறூன எனும் ஆயத்தையோதி அதின் விளக்கத்தைச்சொல்லி முஸ்ஹபை அவனின் மடியில்வைத்துச் செய்வித்தல்சுன்னத்து.

வல்லாஹி அல்லாஹி ஞானியென்று சுருக்கமாய் சொன்னாலும் போதுமாம்.

பொய்ச்சத்தியம் செய்தலால்உண்டாகுந் தீமை ஹாகிம் அறிந்துகொள்ளக்கூடாதவிதமாகிய தந்திரப்பேச்சாய்ப் பேசுதலால் தட்டுண்டுபோகாது. அது இவனை எதிரி அனியாயம் செய்யாதபோதிலாம்.

(17.) (கப்பாறத்துல்யமீன்) சத்தியத்தின்தெண்டம் எத்தனை வகைப்படும்?

சிரேஷ்டமாகிய முஉமினாகிய ஐபற்ற ஓர் அடிமையை உருமையிடுதல் அவ்வூர்ப்போசனதானியத்தில் 10-பத்து மிஸ்கீன்களுக்கு போசனங்கொடுத்தல் 10-பத்துப்பேர்களுக்கு ஆடைகொடுத்தல் என மூன்றுவகைப்படும்.

இம்மூன்றுவகையில் எவ்விதக் கப்பாறத்தாயினுங் கொடுத்தல் வேண்டும்.

(உருமையிடுதலைப்பற்றியது.)

(18.) உருமையிடுதலாவதியாது?

ஓர் நாட்டான்மகன் தன்மில்கிலிருக்கும் அடிமையை அடிமைப் பாத்தியத்தால் நீக்கிவிடுதலாம்.

அடிமையைத்திருப்பவன் தன் அடிமையைநோக்கி உன்னை உருமையிட்டேன் அல்லது உன்னை நாட்டான்மகனாக்கினேன் அல்லது உன்னை விடுத்துவிட்டேனென்று கலப்பற்ற சொல்லாகச்சொன்னாலும் அல்லது உருமையை நிய்யத்துவைத்துக் கினாயாய்ச்சொன்னாலும் உருமையுண்டாகும்.

ஒருவன் தனக்குச் சொந்தமாகிய வெள்ளாட்டியை உருமையிட்டால் அவளின் வயிற்றிலிருக்குஞ் சிசுவு முருமையாகிவிடும் அத்தஹமலோ அவனுக்குச் சொந்தமாயிருந்தால்தான் உருமைப் பெறுமாம்.

உருமையிட்டவனுக்கும் மற்றவனுக்கும் பங்காகிய அடிமையை உருமையிட்டால் உருமையிட்டவனின் பங்குமாத்திரம் உருமையாகும்.

உருமையிட்டவன் ஐசுவரியவானாயிருந்தால் மற்றவனின் பங்கின் பெறுமதியைக்கொடுத்தல் வாஜிபாம்.

தன் தாய் தகப்பன்மார்களையும் தன்னுடைய பிள்ளைகளையும் விலைக்குவாங்கினால் வாங்கினவுடன் உருமையாகிவிடுவார்கள்.

தன் அடிமையைநோக்கி நீ என்மவுத்துக்குப்பின்நாட்டான்மகனென்றால் அவன்மரித்தபின் அவனுடைய கடன் நீங்கிய மிச்சத்தின் மூன்றிலோர் பங்கில் அவ்வடிமை உருமையாவான் இவ்வாறு சொல்லியிருக்கையில் விற்றால் அந்தத்தத்பீறு அழிந்துபோம்.

அவன்வாயால் அச்சொல்லைவிட்டு மீளுதலாலும் அல்லத் தட்டுதலாலும் அழியாது.



முதப்பறத்தானவெள்ளாட்டியைசெய்யிது வதுஉச்செய்யலாம் அவ்வெள்ளாட்டி நிகாஹினால் அல்லது சினாவினால் பிள்ளைப்பெற்றால் அதற்கு தத்பீறுடைய ஹுக்குந்தரிபடாது.

செய்யிது மவுத்தாகும்நேரம் ஹமலாயிருப்பாளேயாகில் அவளை அந்த ஹமல்உருமையால் தொடரும்.

ஹமலாயிருப்பவளைத் தத்பீறுசெய்தால் அந்த ஹமலுக்கும் தத்பீறுதரிபடுமாம்.

(19.) அடிமை கிதாபத்துக்கொடுத்து உருமைப்பெற்றுக் கொள்ளலாமா?

ஆம் அடிமை தன்னையைக்குறித்து இவ்வளவு காலத்துக்குள் இன்னதொகையைத் தருவேனென எழுதிக்கொடுத்து உருமைப்பெற்றுக்கொள்ளலாம்.

தன்செலவுக்கும் தன்னாயகனுக்கெழுதிக்கொடுத்த சீட்டுக்கும் தவணையில்செலுத்த வகையான சம்பாத்தியஞ்செய்யும் விசுவாசியான அடிமைகேட்டுதலால் சீட்டெழுதுதல் சுன்னத்து.

(கிதாபத்து) உருமைச்சீட்டின் ஹக்தாவதற்கு ஷறுத்தாவது செய்யிதுடைய புறமாக விதியாக்கினதாகவும் அந்த அப்துடைய புறமாக ஒப்புக்கொண்டதாகவும் அறிவிக்கும்மொழியே ஷறுத்தாம்.

இரண்டுதவணை அல்லது அதற்கதிகமான தவணைக்கு மேலாதுள்ளதைக்கொண்டு தவணைவைக்கப்பட்டதாகவும் அதின்தொகை எவ்வளவென்றும் அதெவ்விதமென்றும் விபரித்தல் ஷறுத்தாம்.

கிதாபத்தில் ஷறுத்திடப்பட்ட தொகையில் சின்ன சிலதை செய்யிது இறக்கிவிடுதல் வாஜிபு.

கிதாபத்தை செய்யிது பஸ்குசெய்தல் நியாயமாகாது அந்த அடிமை தவணைவந்தபோதில் இறுக்க இலாமையாகிவிட்டாலும் எனவுமாயிருப்பதுடன் இறுக்காதிருந்தாலும் அல்லது காயிபாகிவிட்டாலுமேயொழிய.

அடிமைதானாக பஸ்குசெய்துகொள்ளலாம்.

முகாத்தபத்தான வெள்ளாட்டியிற் சுகம்பாராட்டுதற்செய்யிதுக்கு ஹறாம்.

முகாதபானவன் செய்யிதுடைய உத்தரவின்றி விவாகஞ்செய்தலும் சதக்கத்துவைத்தலும் ஜாயிசல்ல.

(20.) இஸ்தீலாத்து ஆவதியாது?

செய்யிதுக்கு ஹம்லானவெள்ளாட்டி அவளின் ஹமலிறங்கியபின் செய்யிது மரணிப்பதினால் உரிமையாகிவிடுதலாம்.

ஆகவே இவ்விடத்தில் இஸ்தீலாத்தென் றழைக்கப்பட்டது. இவ்வெள்ளாட்டிக்கு உம்முவலதுஎன்றும்நாமங்கொடுக்கப்படும்

இவ்வாறு உருமைப்பெற்ற வெள்ளாட்டி நிகாஹினால் அல்லது சிறைவினால் பெறும் புதல்வர்களெல்லாரும் உருமைப் பெற்றவர்களாம்.

செய்யிது தன்உம்முவலதை வதுஉச்செய்யவும் கிதுமத்துச் செய்விக்கவும் அவளின்உத்தரவின்றிக் கலியாணம் முடித்துக்கொடுக்கவும் ஆகும்.

அவ்விஸ்திரியை விற்கவும் இபத்துக்கொடுக்கவுங் கூடாது. செய்யிதின் மவுத்தைக்கொண்டு உருமைப்பெறுவதில் அவளோ உருமையில் சேர்ந்த புதல்வர்களும் உருமையாவார்கள்.

ஒருவன் தன் வெள்ளாட்டியை வதுஉச்செய்தேனென விண்ணப்பஞ்செய்தபின் அவ்வெள்ளாட்டி நான் உம்முவலதாகி விட்டேனென்று கொண்டாடும் தருவாயில அவள் சத்தியங்கொண்டுண்மைகொள்ளப்படுவாள் செய்யிது மவுத்தானஉடன் உருமையாகி விடுவாள்,

# இந்நூலிற்குப் புறநடை.

# கிதாபுத்தௌபத்.

(தௌபாவைப் பற்றியது.)

(1.) தௌபாவாவதியாது?

அல்லாகுத்தஆலா இடத்தில் மன்னிப்புத் தேடுதலே தௌபாவாம்.

(2.) தௌபாவுடைய ஷறுத்துக ளெத்தனை?

தௌபாவுடைய ஷறுத்துக்கள் நான்காம்.

(3.) தௌபாவின் முதலாம் ஷறுத் தியாது?

அல்லாகுத்தஆலாவின் கட்டளைக்கு மாறுசெய்தேனென்று கைசேதமடைதலாம்.

(4.) தௌபாவுடைய இரண்டாம் ஷறுத்தியாது?

அப்பாவத்தை ஒருக்காலுஞ் செய்யேனென்று நற்கருத்துவைத்தலாம்.

(5.) தௌபாவுடைய மூன்றும் ஷறுத்தியாது?

அல்லாகுத்தஆலா பறுலாக்கியதை இறுப்பதும் அவன் ஹறுமாக்கியதை விலக்குவதுமாம்.

(6.) தௌபாவுடைய நான்காம்ஷறுத் தியாது?

தன்னிடமிருக்கும் பிறருடைய ஹக்குகளை அவ்வப் பொருட்காரனிடம் சேர்ப்பதாம்.

(7.) பிறருடைய ஹக்கை எடுத்தவன் தௌபாச்செய்யுந் தருணத்திற் கொடுக்க வகையற்றவனா யிருந்தால் யாதுசெய்தல் வேண்டும்?

எப்போதில் வகைவருமோ அப்போதிற் கொடுப்பேனென்று நற்கருத்து வைத்தல் வேண்டும்.

(8.) தான் எடுத்த பொருட்குக் காரனில்லாவிட்டால் யாதுசெய்தல் வேண்டும்?

அப்பொருட்காரன் மரணித்தபின் அவனுடைய அனந்தரகாரனிடத்தில் கொடுத்தல் வேண்டும்.

அனந்தரகாரனில்லாவிட்டால் அல்லது காயிபாயிருந்தால் அல்லது அவன் அறியப்படாவிட்டால் அவ்வூர் காளியிடங் கொடுத்தல் வேண்டும்.

(9.) தௌபாவின் ஷுறூத்துக்களில் ஒன்றையாவது விட்டவனின் தௌபா கபூல் செய்யப்படுமோ?

கபூல் செய்யப்படாது.

(10.) தௌபாச்செய்பவன் இஸ்திகுபாறு செய்யவேண்டுமா?

ஆம் அது சுன் [illegible] று அநேக [illegible] றுத்தென்று சொல்பவர்களுமுளர்.

உம்தத்துல் இஸ்லாம்

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | எவவெக் | எவ்வெக் | 117 | 25 | அறுவ | அவ்வளவ |
| | ௸ | அவ்வக | அவ்வக் | 118 | 17 | யாய்தி | யாய் |
| | 17 | வளக்கம் | வழக்கம் | 120 | 25 | லாஅ | லாமுஅ |
| | 29 | வின | வினா | 129 | 2 | போஷி | புசி |
| 2 | 19 | பஸலு | பஸ்லு | 131 | 17 | போஷி | புசி |
| | 23 | கலபி | கல்பி | 132 | 2 | இகு | இரு |
| 3 | 16 | ஜன | ஜன் | 139 | 6 | நான்கு | ஒவ்வொரு |
| | 20 | வலகது | வல்கது | 141 | 16 | போஷி | புசி |
| | ௸ | மிறு | மின | ,, | 18 | ,, | ,, |
| | 31 | அபு, ஆல் | அபிஆல் | ,, | 20 | ,, | ,, |
| | 35 | கை | கைறு | 154 | 5 | இமாமுக்கு | இமாமுடன் |
| 4 | 21 | தகிபீ | தக்பீ | 168 | 11 | ன்பீபா | ஜான்பீபுயா |
| | 23 | வானக | வான்க | 169 | 10 | ஜ ஆஉ | ஜம்ஊ |
| 5 | 23 | நபிஞயக | நபிநாயக | [illegible] | [illegible] | ம் | மஃரிபு இஷா |
| | 29 | அடச | அட்ச | 171 | 21 | ஹாதவஇஷ் | ஹாதாவலிஷ் |
| | 32 | மற்ற | மாற்ற | 173 | 23 | அமைை | அடிமை[ருன் |
| 6 | 14 | தாம | தாம் | 180 | 24 | நய்யுக | நபிய்யுக |
| | 30 | நாகம | நாகம் | 182 | 11 | போஷி | புசி |
| 7 | 3 | ஆரும | ஆரும் | 189 | 25 | போஷி | புசி |
| | 29 | சசிநே | சிநே | 193 | 6 | தவாவ | தலாவ |
| 8 | 7 | பஸலு | பஸ்லு | 195 | 23 | போஷி | புசி |
| | 18 | [illegible] | கலப் | 197 | 7 | ,, | ,, |
| | 23 | (இல்மு) | இல்மு | 199 | 16 | ,, | ,, |
| 14 | 29 | கனா | கன் | 200 | 30 | ,, | ,, |
| 15 | 14 | செயய | செய்ய | 203 | 35 | வுமில்லலே | வுமில்லே |
| 22 | 35 | போஷிக்க | புசிக்க | 209 | 28 | போஷி | சிபு |
| 24 | 31 | கார்த்து | காத்து | 210 | 27 | ,, | ,, |
| 27 | 20 | இருபத்தி | இருபத்து | 216 | 1 | ,, | ,, |
| 31 | 14 | பாஇல | பாஇல் | 217 | 16 | ,, | ,, |
| 39 | 28 | நாகூத்திற் | மலகூத்திற் | 218 | 1 | ,, | ,, |
| 47 | 26 | போஷிக்க | புசிக்க | ,, | 4 | ,, | ,, |
| 56 | 12 | பில | பில் | 220 | 19 | ,, | ,, |
| 64 | 1 | தெளி | தொளி | ,, | 21 | ,, | ,, |
| 72 | 1 | இகுதா | ஹா[illegible] | [illegible] | 21 | தி ஆகி | திரிமாயிஷ் |
| 73 | 22 | போஷி | புசி | 232 | 7 | அமைை | அடிமை |
| | 24 | ,, | புசி | 239 | 15 | ,, | ,, |
| 80 | 4 | ,, | புசி | 241 | 10 | வஜீகு | [illegible] |
| 83 | 22 | யூறமி | யூற்றி | 242 | 13 | அமைை | அடிமை |
| 102 | 1 | ஹையய | டைய | 247 | 1 | இகுதா | [illegible] |
| 104 | 9 | உதறுத்து | உதத்து | 248 | 21 | இதறு | [illegible] |
| 114 | 3 | ஸகி யம | ஸ்கீயமஷ்யா | 250 | 25 | புறக்க | பொறுக |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| 250 | 27 | | ,, | 277 | 7 | [illegible]பாவஷி | புசி |
| 251 | 7 | புறக்கி | பொறுக்கி | 279 | 4 | [illegible]காத | தாகாத |
| ,, | ,, | [illegible] | புசி | 284 | 2 | [illegible]டிமை | அடிமை |
| 252 | 22 | தனக்கு | தனுக்கு | 285 | 32 | [illegible]ாவஷி | புசி |
| 253 | 1 | கார்ப்ப | காப்ப | 286 | 5 | ம[illegible]ாவை | மணியை [ம் |
| 254 | 16 | மிதுவிலு | மிதாவிலு | 287 | 1 | தர்லும்குதலா | தாருதலாலு |
| 257 | 27 | கருமங்க | கருமங்க | 290 | 12 | தன்தாய் | தனதாய் |
| 261 | 2 | அடுமை | அடிமை | | 16 | தால் | தல் |
| ,, | 15 | ,, | ,, | 291 | 29 | முற்றுய | முற்றுய் |
| | 18 | பொதுவின | பொதுவான | 293 | 15 | புசிவஷித்த | புசித்த |
| | 31 | பருடன் | புருடன் | 304 | 19 | பூசி | பூசி |
| 264 | 16 | தாகிய | தாராகிய | 311 | 33 | வருந்தா | வருத்தா |
| 265 | 6 | [illegible] | இஷ்றான் | 313 | 36 | னுடைசி | னுடையசி |
| 274 | 5 | [illegible] | மேலானதும் | 319 | 5 | காத்து | காதத்து |
| | [illegible] | மேலானது | [illegible] | 323 | 10 | களவு | கதவு |
| 27[illegible] | 2 | யாம் | [illegible] | 328 | 19 | பற்றி | பற்றிய |
| 277 | 2 | வியால் | [illegible] | | | | |

[illegible]ஸ்மில்லாஹி.

## அறிவிப்பு.

முஸ்லீம் சகோதரர்களே!

யாம் எமது சிற்றறிவுக் கெட்டியபடி இந்நூலை இயற்றினோம். பிழைக்கு நேரிட்ட சில அசந்தர்ப்பங்களினால் ஆங்காங்கு சில தவறுகளிருக்கினுமிருக்கலாம் ஆனதுபற்றி இதைக்கண்ணுறும் மகான்களின் கண்ணோட்டத்திற்கு அவ்விதத் தவறுகள் காண்குவதா யிருந்தால் அவற்றால் எமக்குக் குற்றங்கூறாது அத்தவறுகளை நீக்கி அக்கு கூடும் முறைமைபோல் கூட்டி வாசிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றனம்.

இங்ஙனம்,

A. L. M.

ஆக்கியோன்.